# சங்க இலக்கியத்தில் குறிஞ்சித்திணை

முனைவர் பட்டத்திற்காகத்
திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்
**தி.மணிமொழி** எம்.ஏ.,எம்ஃபில்.,
(பதிவு எண். **13502 / Ph.D. 2 / Tamil / P.T. / January 2012)**

நெறியாளர்
முனைவர் **அ.யசோதா** எம்.ஏ.,எம்ஃபில்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை

தமிழாய்வுத்துறை
**காவேரி மகளிர் கல்லூரி**
(தேசியத் தர நிர்ணயக் குழுவால் **'A'** **(CGPA 3.37 out of 4)** தகுதி பெற்றது)
அண்ணாமலை நகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018.
ஜூலை – 2016

# நெறியாளர் சான்றிதழ்

முனைவர் **அ.யசோதா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 018.

இடம்: திருச்சிராப்பள்ளி
நாள் :

**“சங்க இலக்கியத்தில் குறிஞ்சித்திணை”** என்னும் தலைப்பில் திருமதி தி.மணிமொழி அவர்கள் மேற்கொண்ட இந்த ஆய்வு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக காவேரி மகளிர் கல்லூரி தமிழாய்வுத் துறையில் பகுதி நேரமாக அவர் ஆய்வு செய்த காலத்தில் என் மேற்பார்வையின்கீழ் அவரது சொந்த முயற்சியில் உருவானது எனவும் இவ்வாய்வேடு வேறு எந்தப் பட்டத்திற்காகவும் அளிக்கப் பெறவில்லை எனவும் சான்றளிக்கிறேன்.

முனைவர் **ச.இராமலட்சுமி**
தமிழாய்வுத்துறைத் தலைவர்

முனைவர் **அ.யசோதா**
நெறியாளர்

# ஆய்வாளரின் உறுதிமொழி

திருமதி **தி.மணிமொழி**
**(13502 / Ph.D. 2 / Tamil / P.T. / January 2012)**
பகுதி நேர ஆய்வாளர்
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 018.

இடம்: திருச்சிராப்பள்ளி
நாள் :

**"சங்க இலக்கியத்தில் குறிஞ்சித்திணை"** என்னும் தலைப்பில் அமைந்த இந்த ஆய்வேடு காவேரி மகளிர் கல்லூரி தமிழாய்வுத் துறையில் பகுதி நேர ஆய்வாளராக ஆய்வு செய்த காலத்தில் என் சொந்த முயற்சியில் உருவானது என்றும் இதற்கு முன் வேறு எந்தப் பட்டத்திற்கும் இந்த ஆய்வேடு அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

முனைவர் **அ.யசோதா**
நெறியாளர்

திருமதி **தி.மணிமொழி**
ஆய்வாளர்

## சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம். | - | அகநானூறு |
| அக.விளக். | - | அகப்பொருள் விளக்கம் |
| உரை. | - | உரையாசிரியர் |
| ஐங். | - | ஐங்குறுநூறு |
| கலி. | - | கலித்தொகை |
| குறள். | - | திருக்குறள் |
| குறி.பா. | - | குறிஞ்சிப்பாட்டு |
| குறு. | - | குறுந்தொகை |
| சிலம்பு. | - | சிலப்பதிகாரம் |
| சீவக. | - | சீவக சிந்தாமணி |
| திருமுரு. | - | திருமுருகாற்றுப்படை |
| தொகுப். | - | தொகுப்பாசிரியர் |
| தொல்.சொல். | - | தொல்காப்பியம் சொல்லதிகாரம் |
| தொல்.பொருள். | - | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| நற். | - | நற்றிணை |
| நன். | - | நன்னூல் |
| நாலடி. | - | நாலடியார் |
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| பட்டின. | - | பட்டினப்பாலை |
| பதி. | - | பதிப்பாசிரியர் |
| பரி. | - | பரிபாடல் |
| P. | - | Page |

# பொருளடக்கம்


| இயல் | | பக்க எண். |
|---|---|---|
| | முன்னுரை | 1 - 5 |
| 1. | குறிஞ்சித்திணை வெளிப்பாடு | 6 - 67 |
| 2. | கபிலரின் இயற்கைப் புனைவுத்திறன் | 68 - 137 |
| 3. | குறிஞ்சிப் பாடல்களில் கூற்றமைதி | 138 - 211 |
| 4. | குறிஞ்சிப் பாடல்களில் மக்கள் வாழ்வியல் | 212 - 276 |
| | முடிவுரை | 277 - 281 |
| | துணைநூற் பட்டியல் | |

# முன்னுரை

உலகின் தொன்மையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். தமிழ்மொழி எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமின்றி வாழ்க்கைக்கும் இலக்கணம் கூறிய சிறப்புடையது. உயர்ந்த வாழ்வியல் முறையை விளக்கும் வகையில் சங்க இலக்கியம் அமைந்துள்ளது. சங்க இலக்கியம் அக்கால மக்களின் வாழ்வியலையும், தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டையும், பல்வேறுபட்ட தகவல்களையும் அளிப்பதில் முதன்மையாய் விளங்குகிறது. பிற மொழிகளின் அறக்கருத்துக்களை விஞ்சி நிற்கும் வகையில் செம்மைத் தன்மையுடன் தமிழ் இலக்கியங்கள் அமைகின்றன. அவற்றில் முன்னோடியாய் விளங்குவது சங்க இலக்கியம் ஆகும். சங்க இலக்கியத்தின் பாடுபொருளாய் விளங்குபவை அகமும் புறமுமாகும். பழந்தமிழரின் இரு கண்களாக காதலும் வீரமும் விளங்கியதை சங்க இலக்கியம் சான்று பகர்கின்றது.

அக வாழ்க்கை களவு, கற்பு என்று அமைகின்றது. அக வாழ்வின் ஏழு திணைகளுள் அன்பின் ஐந்திணைகளே சிறப்பாகப் பேசப்படுகின்றன. அன்பின் ஐந்திணையில் முதன்மையாய் விளங்கக்கூடிய தகுதி குறிஞ்சித் திணைக்கு முழுமையாய் அமைகிறது. தலைவன் தலைவியை உள்ளடக்கிய அகவாழ்வில் காதலர் கூடுவதற்குரிய சுற்றுச் சூழல்கள் ஒருங்கே நிறைந்ததாகக் குறிஞ்சித்திணை விளங்குகிறது. குறிஞ்சித் திணையை சங்கப் புலவர்கள் பலர் பாடியுள்ளனர். இருப்பினும் குறிஞ்சித் திணையில் அதிகமான எண்ணிக்கையில் பாடல்களைப் பாடியவர் கபிலர் ஆவார்.

குறிஞ்சித் திணையின் ஒவ்வொரு அசைவுகளையும் தம்பாடலில் கபிலர் பதிவு செய்துள்ளார். குறிஞ்சி நிலத்தின் இயற்கை அமைப்புகளான மலையும் அருவியும், இரவு நேரமும், மலைப் பகுதியும் அதில் பொழியும் மழையும் பாடல்களில் பதிவாகியுள்ளன. மேலும் பல்வேறுபட்ட பறவையினங்களும் விலங்குகளும் அவற்றின் செயல்பாடுகளும் தலைவன் தலைவியின் அக வாழ்வோடு ஒருங்கிணைந்து பாடல்களில் கூறப்பட்டுள்ளன. குறிஞ்சித்திணையில் தலைவன் தலைவியை முதன் முதலில் சந்தித்து காதல் கொள்கின்றான். தலைவியும் காதல் வயப்படுகிறாள். இருவரின் உள்ளத்து உணர்வுகளும் தோழியின் செயல்பாடுகளும் செவிலியின் செயல்பாடுகளும்

குறிஞ்சித்திணையில் இடம் பெறுகின்றன. அக வாழ்வில் தலைவன் தலைவியின் காதல் சிந்தனைகள், செயல்பாடுகள் என தனி மனிதன் குறித்த நிலைகள் பதிவாகின்றன. அவை மட்டுமின்றி விருந்தோம்பல், அனைவரிடமும் அன்பு செலுத்துதல், நட்பு பாராட்டுதல், இணக்கமாய் வாழ்தல் என சமூகம் சார்ந்த வாழ்க்கைப் பதிவுகளும் நன்கு குறிஞ்சித் திணையில் அமையப் பெற்றுள்ளன. இவ்வாறாக குறிஞ்சித் திணையின் அனைத்து வாழ்வியல் கூறுகளும் அத்திணையில் நன்கு தோய்ந்தவரான கபிலரின் பார்வையில் இந்த ஆய்வு அமைகிறது.

**ஆய்வுப்பொருள்**

'சங்க இலக்கியத்தில் குறிஞ்சித்திணை' என்பது ஆய்வுப் பொருளாக அமைகிறது.

**ஆய்வு எல்லை**

சங்க இலக்கியத்தில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய நூல்களில் கபிலர் பாடிய குறிஞ்சித்திணைப் பாடல்கள் (197) மட்டும் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**ஆய்வு நோக்கம்**

குறிஞ்சித்திணைக்குரிய சிறப்புகளையும், சங்ககாலத் தமிழர் வாழ்வியல் கூறுகளையும், குறிஞ்சி நில மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வினையும் நோக்குவதோடு சங்ககால பண்பட்ட வாழ்விற்கும், தற்போதைய வாழ்விற்குமான இடைவெளியையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு கருதுகோள்**

பழந்தமிழரின் பண்பட்ட வாழ்வினை வெளிப்படுத்துவதில் குறிஞ்சித்திணை முதன்மையான இடத்தைப் பெறும் என்பதை நிறுவுவதே இவ்வாய்வின் கருதுகோள் ஆகும்.

**இயல்பகுப்பு**

முன்னுரை, முடிவுரை நீங்கலாக இவ்வாய்வேடு நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. அவை,

1. குறிஞ்சித்திணை வெளிப்பாடு

2. கபிலரின் இயற்கைப் புனைவுத்திறன்

3. குறிஞ்சிப் பாடல்களில் கூற்றமைதி

4. குறிஞ்சிப் பாடல்களில் மக்கள் வாழ்வியல்

**ஆய்வு ஆதாரங்கள்**

ஆய்விற்கு ஆதாரங்கள் இன்றியமையாததாகும். ஆய்வுத் தலைப்பிற்குரிய தகவல்களையும், அவை பற்றித் தெளிவாகவும், விரிவாகவும் அறியப் பயன்படும் அனைத்து நூல்களும் சான்றாதாரங்கள் எனக் கொள்ளப்படுகின்றன. இவ்வாதாரங்கள் முதன்மை ஆதாரங்கள், துணைமை ஆதாரங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**முதன்மை ஆதாரங்கள்**

சங்க அக இலக்கியத்தில் கபிலர் பாடல்கள் இந்த ஆய்விற்கு முதன்மை ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**துணைமை ஆதாரங்கள்**

முதன்மை ஆதாரங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்த நூல்களும், சங்க இலக்கிய ஆராய்ச்சி நூல்களும், ஏனைய வாழ்வியல் நூல்களும் துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டன.

**ஆய்வு அணுகுமுறை**

விளக்கமுறை ஆய்வு, பகுப்பு முறை, தொகுப்பு முறை ஆய்வு என்ற மூன்று ஆய்வு முறைகளைப் பின்பற்றி இவ்வாய்வேடு அமைந்துள்ளது.

**இயல்: 1**

முதல் இயல் ‘குறிஞ்சித்திணை வெளிப்பாடு’ என்பதாகும் இவ்வியலில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் வழியாக குறிஞ்சித்திணை வெளிப்படுத்தும் வாழ்க்கைச் சூழ்நிலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முதற்பொருளில் நிலம், பொழுது என்ற இரண்டும் குறிப்பிடப்படும். உலகம் ஐம்பூதங்களின் சேர்க்கை ஆதலால் முதலாவதாக அமைவது நிலமாகும். ஆதலால் தான் நிலத்தை முதன்மையாகக் கொண்டு முதற்பொருள் அமைந்துள்ளது எண்ணத்தக்கதாகும். பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். ஓர் ஆண்டை அடிப்படையாய்

கொண்டு அமைவது பெரும்பொழுது ஆகும். ஒரு நாளினை அடிப்படையாய் கொண்டு அமைவது சிறுபொழுது ஆகும். இவ்விரு நிலைப்பாடுகளும் கபிலரின் குறிஞ்சித்திணைப் பாடல்களில் அமைந்து குறிஞ்சித்திணை வெளிப்படும் விதம் ஆராயப்பட்டுள்ளது.

கருப்பொருள் குறிஞ்சிநில மக்களின் வாழ்க்கை நிலைகளைச் சுட்டுகிறது. குறிஞ்சியின் கருப்பொருள்கள் ஒவ்வொன்றையும் கபிலர் தம் பாடலில் அமைத்து குறிஞ்சித்திணையை வெளிப்படுத்தியிருக்கிறார். தலைவன் தலைவியின் புணர்தல் வாழ்வினை நன்கு காட்சிப்படுத்தியுள்ளார். ஆக முதல், கரு, உரிப்பொருள்களின் வழி திணை வெளிப்பாட்டினை இவ்வியல் ஆராய்கிறது.

**இயல்:2**

இரண்டாவது இயல் ‘கபிலரின் இயற்கைப் புனைவுத்திறன்’ என்பதாகும். மனித குலமின்றி இயற்கை தன்னுடைய செயல்பாட்டை மேற்கொள்ளும், ஆனால் இயற்கையின்றி மனித குலத்தால் செயல்பட முடியாது. அத்துணை சிறப்பிற்குரிய இயற்கையான மரம், செடி, கொடி, பறவைகள், விலங்குகள், மலைகள், அருவிகள், மலர்கள் போன்றவற்றை கபிலர் தம் பாடல்களில் நன்கு பதிவு செய்துள்ளார். அவ்வாறு பதிவானதன் வாயிலாக அவர் வெளிப்படுத்தும் இயற்கையின் நிலைப்பாடுகளையும், தன்மைகளையும், சூழல்களையும் இவ்வியல் ஆராய்கிறது. இயற்கையோடு பழந்தமிழர் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பினை இதன் வழி அறிய இயலுகிறது. இயற்கை சார்ந்த வாழ்க்கை சிறப்பிற்குரியது என்பது இவ்வியல் வழியாக ஆராயப்படுகிறது.

**இயல்:3**

மூன்றாவது இயல் ‘குறிஞ்சிப் பாடல்களில் கூற்றமைதி’ என்பதாகும். இவ்வியலில் தலைவன், தலைவி,தோழி ஆகியோரின் செயல்பாடுகள் கூற்றுகளின் வாயிலாக விளக்கப்பட்டுள்ளன. தலைவியைப் பிரிந்ததால் தலைவனுக்கு ஏற்படும் மனவருத்தம், அன்பு உள்ளம், உயர்ந்த பண்பு, வீரம், நன்றி உணர்வு, மன முறிவு என பல உணர்வு நிலைகளுக்கு ஆட்பட்டவனாக தலைவனின் கூற்றுகள் அமைகின்றன.

தலைவியின் கூற்றுகள் வாயிலாக உள்ளக்கிளர்ச்சி, புறத்தேற்றம், காதலின் வெளிப்பாடு, மனமுறிவு, மனப்போராட்டம், நினைவுக் கூறுகள்,

மகிழ்ச்சி, உயர்ந்த பண்பு, மன இறுக்கம் என அனைத்து நிலைகளிலும் தலைவியின் பண்பையும் நிலையையும் வெளிப்படுத்துகிறார் கபிலர். தலைவன் தலைவியை விட அதிகமான பாடல்கள் தோழி கூற்றாக அமைந்துள்ளன. ஏனெனில் தலைவன் தலைவியின் வாழ்கையில் பாலமாக இருந்து செயல்படுபவள் தோழி. சிறந்த வழிகாட்டியாகவும் அறிவுரை வழங்குபவளாகவும் காட்டப்படுகிறாள். ஆக ஒவ்வொருவரின் கூற்றுகளும் தங்களுடைய நிலைபாட்டினையும், உள்ளத்து உணர்வுகளையும் வெளிப்படுத்துவனவற்றை இவ்வியல் ஆராய்கிறது.

**இயல்:4**

நான்காவது இயல் ‘குறிஞ்சிப் பாடல்களில் மக்கள் வாழ்வியல்’ ஆகும். குறிஞ்சி நில மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், தெய்வ நம்பிக்கைகள், தொழில்கள், திருமணச் சடங்குகள், அறப்பண்பு, விருந்தோம்பல் போன்றவை தனிமனிதன், குடும்பம், சமூகம் என்ற மூன்று பிரிவின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளன. தனிமனிதனின் பண்புகளாக அன்பு காட்டுதல், நட்புறவு கொள்ளுதல், பகிர்ந்தளித்தல், சுயநலமின்மை, தானம் செய்தல் போன்ற நற்குணங்கள் விளக்கப்பட்டுள்ளன.

குடும்பம் தொடர்பான திருமணம், உறவுக்கு மதிப்பளித்தல், பெற்றோர் தலைவன் தலைவி காதலுக்கு சம்மதம் தெரிவித்தல், குழந்தைப் பேறு, விருந்தோம்பல் போன்ற தலைப்புகளின் அடிப்படையில் குடும்பம் தொடர்பான அனைத்து சூழல்களும் ஆராயப்பட்டுள்ளன.குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலை சமுதாய நோக்கில் இவ்வியல் ஆராய்கிறது.

**முடிவுரை**

இயல் தோறும் கண்ட முடிவுகள் முடிவுரையில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

ஆய்வேட்டிற்கு உதவிய நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள், இதழ்கள் போன்றவை அகரவரிசைப்படுத்தப்பட்டு துணைநூற் பட்டியல் தரப்பட்டுள்ளன.

# இயல் – ஒன்று

# குறிஞ்சித் திணை வெளிப்பாடு

# இயல் – ஒன்று
# குறிஞ்சித்திணை வெளிப்பாடு

**1. முன்னுரை**

*1.1.* உலகத் தோற்றம்

*1.2.* பழந்தமிழரின் திணை ஒழுக்கம்

*1.3.* குறிஞ்சி விளக்கம்

*1.4.* கபிலரும் குறிஞ்சியும்

*1.5.* குறிஞ்சித்திணை வெளிப்பாடு

*1.5.1.* முதற்பொருளின் வெளிப்பாடு

*1.5.1.1.* நிலம்

*1.5.1.1.1.* மலை

*1.5.1.1.2.* கவாஅன்

*1.5.1.1.3.* குன்றம்

*1.5.1.1.4.* சிலம்பு

*1.5.1.1.5.* வெற்பு

**1.5.1.2. பொழுது**

*1.5.1.2.1* பெரும்பொழுது

*1.5.1.2.2* சிறுபொழுது - யாமம்

**1.5.2. குறிஞ்சியின் கருப்பொருள்**

*1.5.2.1.* தெய்வம்

*1.5.2.2.* உயர்ந்தோர்

*1.5.2.2.1.* வெற்பன்

*1.5.2.2.2.* கொடிச்சி

**1.5.2.3. அல்லோர்**

**1.5.2.4. புள்**

*1.5.2.4.1.* கிள்ளை

*1.5.2.4.2.* மயில்

**1.5.2.5. விலங்கு**

*1.5.2.5.1.* யானை

**1.5.2.6. ஊர்**

**1.5.2.7. நீர்நிலை**

**1.5.2.8. பூ**

*1.5.2.8.1. வேங்கை*

*1.5.2.8.2. காந்தள்*

**1.5.2.9. மரம்**

*1.5.2.9.1. சந்தனம்*

*1.5.2.9.2. அகில்*

*1.5.2.9.3. அசோகு*

*1.5.2.9.4. மூங்கில்*

**1.5.2.10. உணவு**

*1.5.2.10.1. தினை*

**1.5.2.11. யாழ்**

**1.5.2.12. தொழில்**

*1.5.2.12.1. வெறியாடல்*

*1.5.2.12.2. தினைகாத்தல்*

*1.5.2.12.3. கிழங்கு அகழ்தல்*

*1.5.2.12.4. அருவி நீராடல்*

*1.5.2.12.5. சுனை நீராடல்*

**1.5.3. உரிப்பொருள்**

*1.5.3.1. இயற்கைப் புணர்ச்சி*

*1.5.3.2. உள்ளப் புணர்ச்சி*

*1.5.3.3. மெய்யுறு புணர்ச்சி*

*1.5.3.4. யாமத்தில் புணர்ச்சி*

*1.5.3.5. பகலிலும் புணர்ச்சி*

*1.5.3.6. தலைவன் வரும் வழியின் அருமை*

**1.6. முடிவுரை**

# இயல் - ஒன்று

# குறிஞ்சித்திணை வெளிப்பாடு

**1. முன்னுரை**

உலகம் நிலம், நீர், தீ, வளி, வான்வெளி ஆகிய ஐம்பூதங்களால் ஆனது. இயற்கை பல்வேறு வடிவங்களாய் புவியில் பரிணமித்துள்ளது. மலை, காடு, ஆறு, சமவெளி, கடல், மணல்வெளி என்றெல்லாம் பரந்துவிரிந்து இப்புவிப்பரப்பு அமைந்துள்ளது. பழந்தமிழர் இயற்கையின் புரிதலோடு வாழ்வினை மேற்கொண்டனர். இடங்களுக்கு ஏற்ப நிலங்களைத் தமிழர் பெயரிட்டு அழைத்தனர். அந்த வகையில் பழந்தமிழர் மலைப்பாங்கான பகுதிகளை அங்கு விளையும் சிறப்பிற்குரிய, அரிதான மலராகிய குறிஞ்சியின் பெயரால் அழைத்தனர். அத்தகு சிறப்பு வாய்ந்த குறிஞ்சி நிலத்தினைச் சங்க புலவர் பலரும் பாடியுள்ளனர். அவர்களுள் குறிஞ்சி நிலத்தால் மிகுதியாக ஈர்க்கப்பட்டு அதிகமாக குறிஞ்சியைப் பாடிய புலவர் கபிலர் ஆவார்.

குறிஞ்சி நிலமான மலைப்பகுதி பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. உயிர்கள் வாழ்கின்ற நிலம் முதன்மையானதாகும். நிலம் சார்ந்தே உணவு, உடை, தொழில், பழக்க வழக்கம் போன்றவை அமைகின்றன. எனவே நிலத்திற்கு ஏற்பவே உயிர்கள் தங்கள் வாழ்வைத் தகவமைத்துக் கொள்கின்றன. பொழுதுகள் எல்லா நிலத்திற்கும் ஒன்றாக இருந்தாலும் பழந்தமிழர் ஒவ்வொரு பொழுதிற்கும் ஒரு சிறந்த செயல்பாட்டினை அகவாழ்வில் பொருத்திப் பார்த்தனர். இந்நிலத்தையும் பொழுதையும் தமிழர் முதற்பொருளாய்க் கொண்டனர். தெய்வம் தொடங்கி தொழில் உள்ளிட்டவை கருப்பொருளாய் அமைகின்றன. கருப்பொருளும் நிலம் சார்ந்தே அமைகின்றன. கருப்பொருளைக் கொண்டு கவி பாடினர் தமிழர். அகவாழ்வினை விளங்க வைக்க புலவர்கள் கருப்பொருளைக் கைக்கொண்டனர். அகவாழ்வில் நிலத்திற்கு உரித்தான அக ஒழுக்கத்தையும் சங்கப் புலவர்கள் பாடிச் சென்றனர். உரிப்பொருளும் அக வாழ்வின் ஒவ்வொரு செயல்பாட்டினையும் வெளிப்படுத்துவதாகவே அமைகின்றன.

அந்த வகையில் கபிலர் குறிஞ்சி நிலத்தையும் மக்களையும் ஏனைய உயிரினங்களையும் இயற்கையையும் தம் கவியில் கொண்டு படைப்பு பல படைத்தவர். கபிலரின் பாடல்களில் உற்று நோக்கும் வேளையில் முதல், கரு, உரிப் பொருள்களின் வாயிலாக குறிஞ்சித் திணை வெளிப்பாடு நிகழ்ந்துள்ளதை இவ்வியல் ஆராய்கிறது.

### 1.1. உலகத் தோற்றம்

உலகத் தோற்றம் பற்றியச் சிந்தனைகள் பழங்காலம் முதலே இருந்து வருகிறது. உலகம், அவனி, ஞாலம் என்றெல்லாம் தமிழர் உலகத்தைக் குறித்தனர். திருக்குறள், திருமுருகாற்றுப்படை, பெரியபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்களின் தொடக்கமே உலகு என்பதைக் கொண்டுதான் அமைந்துள்ளன. எனவே, தமிழரின் பார்வை உலகப்பார்வை. மனித இனத்தை நோக்கியப் பார்வையாகும் என்பதை இதன்வழி அறியலாம். விசாலப் பார்வையால் மனித இனத்தையே ஒருசேரப் பார்த்தவர்கள் தமிழ்ப் புலவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகு உலகம் பற்றிய சிந்தனை பழங்காலம் முதலே தமிழகத்தில் இருந்து வருகிறது.

**"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்"[1]** (தொல்.பொருள்.1589)

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**"மண் திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தை வருவளியும்**
**வளித் தலை இய தீயும்**
**தீமுரணிய நீரும் என்றாங்கு**
**ஐம் பெரும் பூதத்து இயற்கை"[2]** (புறம்.2)

எனும் புறநானூற்றுப் பாடலும் உலகத்தின் தன்மையினை எடுத்துரைக்கிறது. அணு செறிந்த நிலையில் உண்டாகிய விசும்பு கிளர்ந்தெழும் வளி, வளியிலிருந்து தோன்றும் தீ, தீவழியாகத் தோன்றிய நீர் இவை நிறைந்த நிலையில் தோன்றிய நிலம் என்று உலகம் தோன்றிய நிலையினை பழந்தமிழ் இலக்கியங்கள் வழியாக அறியலாம்.

> "ஞாயிறு மண்டிலத்தின் ஒரு கூறாக அமைந்த புவி உள் அழுத்தம் காரணமாகவும், கதிரியக்கத்தின் காரணமாகவும் அதன் வளர்ச்சியில் மாற்றம் ஏற்பட்டது. அணுத் திரள்களும், பிற எரிபொருள்களும் தோன்றின. அதன் காரணமாகப் புவியின் மேற்பரப்புச் சுருங்கியும் விரிந்தும் நிலம் தோன்ற காரணமாயிற்று என்பர்".[3]

### 1.2. பழந்தமிழரின் திணை ஒழுக்கம்

உலகம் தோன்றிய பிறகு உயிர்கள் தோன்றியன. தோன்றிய உயிர்களின் தொன்மை இனம் தமிழ் இனம் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டுள்ளது. தாவரங்களை தன்னுடைய இனமாகவும், பிற உயிர்களைத் தமக்கு இணையாகக் கருதி செயல்பட்டும், இயற்கை எதிராக ஒருபோதும் செயல்படாத பழந்தமிழரின் வாழ்வியலை இலக்கியத்தின் வழியாக அறியலாம். இயற்கையோடு அமைந்த நிலத்தினை அதற்குரிய இயல்புக்கு ஏற்பப் பகுத்து அந்தந்த சூழலுக்கு ஏற்பப் பெயரிட்டும் தொழில் புரிந்தும் தமிழர் தம்வாழ்வினை மேற்கொண்டனர்.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"[4] (தொல்.பொருள்.951)**

என்ற நூற்பாவின் வழியாக மலையும் மலைச் சார்ந்த பகுதிகளைக் குறிஞ்சியாகவும், காடும் காடு சார்ந்த பகுதிகளை முல்லையாகவும், வயலும் வயல் சார்ந்த பகுதிகளை மருதமாகவும், கடலும் கடல் சார்ந்த பகுதிகளை நெய்தலாகவும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**"வேனல் அம் கிழவனொடு வெம்கதிர் வேந்தன்**
**தான் நலம் திருகத் தன்மயில் குன்றி**
**முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"[5]**

**(சிலம்பு. மதுரை: காடுகாண் : 62)**

என்ற சிலப்பதிகார வரிகளின் வாயிலாக குறிஞ்சியும் முல்லையும் தங்களுடைய இயல்புகளிலிருந்து மாறி மணற் பகுதிகளாயின. அதனைப் பாலை என்றழைத்தனர். இவ்வாறாக பழந்தமிழர் திணைப் பாகுபாட்டை அமைத்து வாழ்ந்தனர்.

திணை என்ற சொல்லிற்கு "இடம், ஒழுக்கம், குடி, குலம், பூமி, பொருள் என்று பொருள் தருகிறது கழகத் தமிழகராதி"[6]

“திரண்ட மக்கள் பலவகையாகத் தமக்குள்ளே பழகித் திண்மைப்பட்டு நின்ற கூட்டமே திணையாகும் என்பர்”.[7]

இடச் சூழலுக்கேற்ப தமிழ் மக்கள் தங்களுக்குள் திணைகளைப் பிரித்து வாழ்ந்தது நிலம் சார்ந்த தமிழர் தம் சிந்தனைகளை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

“இயற்கை அமைப்பில் குறிஞ்சியும், குறிஞ்சியால் தோற்றுவிக்கப்படுவது முல்லை, குறிஞ்சியாலும் முல்லையாலும் அமைவது பாலை. மலைக்கண் வீழும் அருவி, ஆறாகப் பாய்ந்து வளப்படுத்துவது மருதம், அருவி நீர் கால் கிளர்ந்து கடலோடு கலப்பது நெய்தல் என்றனர். உயர்ந்த பகுதிகள் மலை எனவும், தாழ்ந்த பகுதிகள் கடல் எனவும் இடைப்பட்டுச் செழிப்பான காடு, வயல் எனவும் கண்ட பழந்தமிழரின் நிலப்பகுப்புப் போற்றுதற்குரியது”.[8]

### 1.3. குறிஞ்சி விளக்கம்

தமிழர் ஒன்றிற்கு பெயரிடும்பொழுது இடு குறியாகவும் காரணத்தின் அடிப்படையிலும் பெயரிட்டனர். காரணப் பெயர்கள் பொருள் பொதிந்த நிலையில் காணப்படுவது சிறப்புக்குரியதாகும். அந்த வகையில் திணைகளுக்கான பெயர்களும் காரணப்பெயர்களாகவே அமைந்துள்ளன.

> “குறுகுதல் குறிஞ்சி எனவும், மருவுதல் மருதம் எனவும், முல்லுதல் முல்லை எனவும், பற்றுதல் பாலை எனவும், நெய்வது நெய்தல் எனவும் கூறுவர்”.[9]
>
> மேலும், “தழுவுதல் தழிஞ்சி எனவும், நெரிப்பது நெருஞ்சி எனவும் ஆவது போலக் குறுகுதல் குறிஞ்சியாகும். குறு என்பது குறுகல் எனப்படும். நானிலத்தில் குறுகுதலான நிலம் மலையும் மலை சார்ந்த நிலமுமாம் என்பர். குறிஞ்சி நிலமான மலை சார்ந்த இடத்தில் உரிப்பொருள் புணர்தல் ஆகும். தலைவன் தலைவி அன்பின் நிலைகளைக் கொண்டும் குறிஞ்சி நிலத்திற்கு பெயர்க்காரணம் குறிப்பிடுவர்”.[10]

முதன் முதலில் காதல் மணத்திற்கு அடையாளமாக குறிஞ்சிப் பூவை சூடியதால் அக்களவு மன ஒழுக்கத்திற்கு ‘குறிஞ்சித் திணை’ எனப் பெயர் வைத்தனர். இங்ஙனம் குறிஞ்சிப் பூவை சூடிக்கொண்டது வரலாற்றின் தொடக்கமாகும். இவ்வாறு பழந்தமிழரின் ஐந்திணைப் பகுக்கும் முறை உலகில் வேறெங்கும் இத்துணைச் சிறப்போடு காணவியலாத ஒன்றென உறுதி கூறலாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 1.4. கபிலரும் குறிஞ்சியும்

சங்க நூல்களில் குறிஞ்சித்திணையில் மிகுதியானப் பாடல்களைப் பாடிய சிறப்புக்குரியர் கபிலர் ஆவார். அவருடையப் பாடல்களில் குறிஞ்சி வளமும், குறிஞ்சி நில வாழ்க்கையும் அவரின் புலமையும் வெளிப்படுகின்றன. குறிஞ்சித் திணைப் பாடல்களைப் பாடிய புலவர்களில் கபிலரே முதன்மையானவர். குறிஞ்சித்திணையை மிகுதியாக பாடியதன் வாயிலாக மற்றத் திணைகளைவிட குறிஞ்சித் திணையே இவரை பெரிதும் ஈர்த்திருக்க வேண்டும் என்பதையும் அறிய இயலுகிறது.

"இயற்கை எழில் நயப்போருக்குக் கபிலர் பாடல்கள் வற்றாச் சுரங்கம்; அவர் பாடல்களிலே கவிதை நயம் உண்டு; கனிந்த இசையும் உண்டு; கலையின் மெருகு உண்டு; கருத்து நுட்பம் உண்டு; பண்பாட்டின் உயிர் உண்டு. மேலும் கபிலர் பாடல்களில் சிறப்பாகக் கொள்ளை எழில் குலவும் குறிஞ்சியே எல்லாமாய்ப் பொழியும் மாண்பினைக் காணலாம். இதனால் குறிஞ்சிக்கு கபிலர் என்றால் அது எவ்வகையிலும் பொருந்தும்."[11]

> "நிலம் பொழுது என்று இருவகை முதற்பொருளாலும் தம் கவித்துறைக்கு ஒரு வரையறை செய்து கொண்டாராகையால் ஏனைய திணைகளைக் குறித்த இயற்கைச் சொல்லோவியங்கள் தீட்டுவதில் கபிலர் பெரிதும் ஈடுபடவில்லை"[12]

என மேற்கோள் காட்டப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

"மலையும் மலைப்பாங்கரும் ஆகிய சூழ்நிலையில் வைத்துக் களவொழுக்கத்தை புனையவல்ல பேராளர் கபிலர். களவின் பல துறைகளும் இவரிடத்துப் பாடப்படுகின்றன. களவுத் துறைகளுள் வரைவுத் துறைகளை விரும்பிப் பாடும் இயல்பினர் என்று அறிகின்றோம். அதனாலன்றோ ஆரிய அரசன் பிரகதத்தனுக்குக் குறிஞ்சிப் பாட்டை அறத்தொடு நிலை என்னும் துறையில் வைத்துக் கற்பித்தார் என்று கபிலரின் சிறந்த மதி நுட்பத்தையும் அகத்துறையின் ஈடுபாட்டையும் வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுவார்".[13]

மேலும், "பலரைப் பாடிய பெருமையோடு,

பலரால் பாடப்பெற்ற பெருமையும் உடையவர் கபிலர். புலவர் மதித்த புலமைப் பெருமகன்,

**பலர் புகழ் நல் இசை வாய் மொழிக் கபிலன்**

என்பது நக்கீரர் பாராட்டு.

**செறுத்த செய்யுட் செய் செந்நா உடைய கபிலன்**

என்பது இளங்கீரனார் புகழுரை.

**புலன் அழுக்கு அற்ற அந்தணாளன்**

என்பது நப்பசலையார் மதிப்புரை என்று கபிலரின் சிறப்பினைக் குறிப்பிடுவர்".[14] கபிலர் குறிஞ்சி நிலத்தை விரும்பியதனால் தான் மிகுந்த ஈடுபாட்டுடன் அங்குள்ள சூழலைப் காட்சிப்படுத்த இயன்றது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

> "திளைத்தாட அருவியும், களித்தாடச் சுனையும், பசியாறக் கனியும், தெவிட்டாத தேறலும் கொண்ட குறிஞ்சி நிலம் கபிலரது உள்ளத்தை ஈர்த்துக் கவிபாடத் தூண்டியது எனலாம். எனவே, 'கருதும் குறிஞ்சிக்குக் கபிலர்' என்னும் புகழ்மொழிக்கு அவர் உரியவராகின்றார்".[15]

என்பது குறிஞ்சிக்கும் கபிலருக்கும் உண்டான நெருக்கமான தொடர்பினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

### 1.5. குறிஞ்சித் திணை வெளிப்பாடு

இயற்கையோடு வாழ்வினை நடத்திய பழந்தமிழர் தங்களின் வாழ்வை அகம், புறம் என வகுத்தளித்தனர்."சமுதாயத்தில் உண்மையான ஏற்றம் அச்சமுதாய மக்களின் வாழ்க்கை முறையைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. அகம், புறம், என்ற இவ்விரு வாழ்க்கையையும் பண்பட்டு அமைந்து இருக்கிற சமுதாயத்தையே முழுமையான ஏற்றம் பெற்ற சமுதாயம் என்று வரலாறு பாராட்டும்."[16]

உள்ளம் மகிழும் காதல் வாழ்க்கை அகம் என்றும், வீரம், கல்வி, கொடை அடங்கிய சமூக வாழ்வை புறம் என்றும் பகுத்து வாழ்ந்தனர். இவற்றில் முதல், கரு, உரி என்னும் பொருளைக் கொண்டு வாழ்ந்த முறை குறிப்பிடத்தக்கதாகும்

**"முதல் கருஉரிப் பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறை சிறந்தனவே**
**பாடலுள் பயின்றவை நாடும் காலை"[17] (தொல்.பொருள்.949)**

என்ற நூற்பாவில் முப்பொருள் குறித்து தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தாங்கள் வாழக்கூடிய நிலமும் அந்நிலத்திற்குரிய சிறந்த பொருளும் முதற் பொருளாகும். பொழுதைப் பொறுத்தவரையில் ஓர் ஆண்டிற்குரிய பிரிவில் பெரும்பொழுதும், ஒரு நாளில் பிரிப்புமுறை சிறு பொழுதுமாக விளங்குகிறது.

அந்தந்த நிலத்திற்குரிய தெய்வம், உணவு, தொழில், மக்கள், மரங்கள் முதலான பதினான்கும் கருப்பொருள் எனப்பட்டது. மேற்குறிப்பிட்ட முதல், கருப்பொருட்களை எல்லாம் உள்ளடக்கி கூறப்பெறும் அக ஒழுக்கம் உரிப்பொருள் எனப்பட்டது. இந்த முப்பொருட்களும் அன்பின் ஐந்திணையில் வெவ்வேறாக அமைந்தன. அவற்றையெல்லாம் திணைவாரியாக வெளிப்படுத்தும் திறனை சங்கப் புலவர்கள் மிக இயல்பாகப் பெற்றிருந்தனர். அந்த வகையில் முதல், கரு, உரிப் பொருட்களின் வழியாக குறிஞ்சித்திணையின் வெளிப்பாடுகளைக் கபிலர் புலப்படுத்தும் தன்மைகளை ஆராய்வோம்.

### 1.5.1. முதற்பொருளின் வெளிப்பாடு

"முதற்பொருள் என்பது முதன்மையான பொருள், தலைமையான பொருள், மூலமான பொருள் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது."[18]

**"முதல் எனப் படுவது நிலம் பொழுது இரண்டின்**

**இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே"[19]**

(தொல்.பொருள்.950)

என்பார் தொல்காப்பியர். முதற்பொருள் என்பது அடிப்படையான ஒன்றாகும். அந்த வகையில் உயிரின் வாழ்விற்கு நிலம் அடிப்படையான ஒன்றாகும். அவற்றொடு பொழுதும் சேர்ந்து மனித வாழ்வினை வழிநடத்துவதால் நிலத்தையும் பொழுதையும் முதற்பொருளாகக் கொண்டனர். எனவே, "நிலம், பொழுது முதலிய இயற்கைச் சக்திகள், மனிதனுடைய வாழ்க்கைக்கும் வாழ்க்கை மாற்றத்துக்கும் காரணமாகின்றன என்பது நோக்கத்தக்கதாகும்".[20]

"ஐம்பூதங்களில் ஒன்றாகிய நிலத்திற்கு நிலமூலம் - துகள் மூலம் - அணுவாகி, அதற்கு மூலமாகிய கால மூலமும் உண்டு. இதன்வழி நிலமும், பொழுதும் கொண்டுள்ள பழமையானவை என்பதனை அறியலாம். நிலத்திற்கும் மூத்தது பொழுதெனும் பருவம், இவ்விரு தொன்மைக் கூறுகளையும் இலக்கியத்தில் இணைத்துச் சங்கப் புலவர்கள் பயன்படுத்திய முறையும், தன்மையும் சிறப்புடையனவாகும்"[21] என்பதனை அறியலாம்.

மேலும், கருப் பொருளுக்கும் உரிப்பொருளுக்கும் அடித்தளமாய் அமைந்துள்ளது முதற்பொருளாகும்.

"உலகியலுக்கு உறுதுணையாகும் நிலமும் காலமுமே பிற எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படையாய் அமைகின்ற இக்காரணத்தாலேயே

நிலமும், பொழுதும் முதற்பொருள் எனப் பெறுகின்றன. தாம் வாழும் நிலத்தில் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும், பண்பாடும் அமையும் என்பது பண்டைய தமிழரின் உயரிய கொள்கையாகும். அத்துடன் காலம் என்ற தத்துவமும் மக்கள் வாழ்க்கையில் பேரிடம் பெற்றுள்ளது. ஆகவே மக்கள் வாழ்ந்த இடமும், காலமும் அவர்களுக்குத் தேவையான முதற்பொருள் எனக் கொள்ளப்பட்டன".[22] எனவே, இத்தகு பழமையுடையதும் சிறப்புடையதுமான முதற்பொருளான நிலம், பொழுதை கபிலர் குறிஞ்சித்திணையில் வெளிப்படுத்தும் நிலைகளை ஆராய்வோம்.

**1.5.1.1. நிலம்**

உலகம், நிலம், நீர், வளி, விசும்பாகிய ஐம்பூதங்களின் சேர்க்கையாகும். அதில் முதலாவதாக அமைவது 'நிலம்' ஆகும். ஆதலால்தான் நிலத்தை முதன்மையாகக் கொண்டு முதற்பொருளில் அமைந்துள்ளது எண்ணத்தக்கதாகும். நிலம்தான் உயிர்களின் இயக்கங்களுக்கெல்லாம் அடிப்படையாய் அமைவது.

> "நிலம் என்பது வெறும் தரை அன்று; மக்களின் வாழ்க்கை நெறியுடன் தொடர்புடைய, பின்பற்ற வேண்டிய ஒன்றென்பது உணரப் பெறுகின்றது"[23]

என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, நிலம் சார்ந்த மக்களின் உடல் வளர்ச்சியையும், உள்ள வளர்ச்சியையும் நிலம் தான் அமைத்துத் தருகிறது. ஆதலால்தான் நிலம் முதலாவதாகக் கருதப்படுகின்றது. மேலும் உயிர்களின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவதில் அடிப்படையாய் இருப்பதும் நிலமே. நாம் காணக்கூடிய பொருட்கள் அனைத்தின் ஆதாரமும் நிலமேயாகும்.

"நாட்டின் வளத்தை நிர்ணயிப்பதே நிலத்தில் பரவிய வயலும் மலையும் காடுகளும் தாம் என்பர்".[24]

"ஐந்திணையில் குறிஞ்சி முதலாவதாகக் கருத இடமுண்டு. திணை என்றால் 'நிலம்' என்ற பொருளில் வெறும் மண், கல், மரம் என்று மட்டும் விளக்கி அமையாது. உள்ளத்தால் உணரவல்ல 'ஒழுக்கம்' என்றும் பொருள் கொண்டனர். எனவே, அந்த அடிப்படையில் குறிஞ்சி நிலத்திற்குரிய ஒழுக்கம் புணர்தலாகிய கூடலாகும். அன்பான வாழ்க்கையின் தொடக்கம் கூடவிருந்தே தொடங்குகிறது.

முல்லைத் திணையை முதலாவதாகவும் கருதும் நிலையும் உண்டு. குறிஞ்சியில் கூடலுணர்வு - காமக்குறிப்பு மேலோங்கும் நிலை உண்டு; நெய்தலில் கழிபேரிரக்க நிலையுண்டு; மருதத்தில் களவிற்குரிய பரத்தமை நிலையுண்டு. ஆனால் முல்லையில் மட்டுமே நல்லறமாம் இல்லறப் பாங்கும், இல்லறக் கடமைகளின் இலக்கணமாய் தலைவி, இற்கடமைகளை ஆற்றி இருந்தற் பெருமையும், கற்பின் திண்மையும் பொலிவும் திணையாயிருக்கின்றது."[25]

இவ்வாறாக முல்லைத்திணையின் இல்லறப் பாங்கும், கற்புத்திறமும் சொல்லப்பட்டாலும் கற்பின் தொடக்கமான, அன்பின் தொடக்கமான காதலில் கலத்தல் நிகழ்வது குறிஞ்சியில்தான் முன்னிலைப்படுகிறது.

**"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**

**ஊடல் இவற்றின் நிமித்தம்"[26]** (தொல்.பொருள்.960)

என புணர்தலை முதலில் கூறுவதால் குறிஞ்சித் திணையே முதற்கண் வைக்கப்படுவதை அறியலாம். அகவாழ்க்கைக்கு புணர்தலே அடிப்படையாய் அமைவது என்பது எண்ணத்தக்கதாகும்.

"தமிழ்நாட்டு நாகரிகம் மற்றச் சிறந்த நாகரிகங்களைப் போலக் குறிஞ்சி நிலத்தில் தோன்றியது. நீரும், நிழலும் தற்காப்பிடங்களும் உணவுப் பொருட்களும் ஒருங்கே கிடைக்கப்பெறும் நிலம் குறிஞ்சி நிலமேயாகும். முல்லை நிலத்தில் அந்த நாகரிகம் வேரூன்றியது எனலாம். எனினும் அது செழித்து வளர்ந்த நிலம் மருதமே. இந்த நாகரிகம் மலர்ந்து மணம் பரப்பியது நெய்தல் நிலத்தின் வழியே ஆகும் என்று பொதுவானக் கருத்தை மேற்கோள் காட்டுவர்".[27] எனவே, அகவாழ்வின் தொடக்கமே குறிஞ்சி நிலத்தில்தான் தொடங்குகிறது என்ற முடிவினை அடையலாம். அத்தகு குறிஞ்சி நிலத்தில் முதற்பொருளில் ஒன்றான நிலம் கபிலரின் பாடல்கள் வழியாக நன்கு வெளிப்பட்டு நிற்கின்றன. குறிஞ்சி நிலத்தை கோடு, குவடு, கல், துறுகல், பிளங்கல், அறை, பொருப்பு, அடுக்கம், கவாஅன், சிலம்பு, குன்றம், வெற்பு, வரை, மலை என்ற பெயர்களில் அழைத்தனர்.

### 1.5.1.1.1. மலை

"மலை என்பது ஒரு குறிப்பிட்ட உயர வரையறையை உணர்த்தாவிடினும் 2000 அடிகளுக்கு மேற்பட்டதை மலை எனலாம்."[28]

**கல்முகை வேங்கை மலரும்**

**நல்மலை நாடன் பெண்டு எனப்படுத்தே!** (ஐங்.276 : 5-6)

என்ற பாடலில் தலைவன் மலை நாடன் என்று அழைக்கப்படுகிறான். கல்மேல் வளரும் வேங்கையின் முகை மலர்ந்து மணம் பரப்பும் நல்ல மலையைச் சார்ந்தவன் என்று குறிப்பிடப்படுகிறது. மழைப் பொழிவுகளின் இடமாக மலைப்பகுதிகளே அமைகின்றன. மழையே அனைத்து உயிர்களின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகின்றது. ஆதலால்தான் மழைப் பொழிவிற்குரிய மலைப் பகுதியை அதனுடைய வளத்தை மையமிட்டு நல்மலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மலையும் மலை சார்ந்த பகுதியுமே குறிஞ்சியாக கொள்ளப்படுவதால் இப்பாடலில் 'நல்மலை' என்பதால் குறிஞ்சித்திணை வெளிப்பட்டு நிற்கிறது.

### 1.5.1.1.2. கவாஅன்

"பக்க மலைகளைத் தன்னகத்தே கொண்ட குறிஞ்சியினைக் கவாஅன் என்றும் அழைப்பர்."[29]

**குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்**

**பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்**

**அம்சில் ஓதி அசை நடைக் கொடிச்சி**

**கண்போல் மலர்தலும் அரிது (ஐங்.299 )**

குன்ற நாடனுடைய மலைச்சாரலின் கண் அமைந்த பசிய சுனையகத்தே விரிந்த வாயை உடையனவாய், அழகிய சிலவாகிய கூந்தலையுடைய அசைந்த நடையையுடைய கொடிச்சியினது கண்ணைப்போல் குவளை மலர்தலும் அரிது என்று மேற்கண்ட பாடல் குறிப்பிடுகிறது. இப்பாடலில் கவாஅன் என்று மலைப்பக்கத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலத்தின் வெளிப்பாடு வெளிப்படையாய் இப்பாடலில் அமைந்துள்ளது.

### 1.5.1.1.3. குன்றம்

"அகன்றும் தட்டையாயும் உடைய மலைப்பகுதியைக் குன்றம் என்று அழைப்பர்".[30]

**அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம் படப்பைப்**

**புலவுச்சேர் துறுகல் ஏறி, அவர் நாட்டுப்**

**பூக்கெழு குன்றம் நோக்கி நின்று, (ஐங்.210 : 1-3)**

என்ற பாடலில் 'தம் தேசத்தின்கண் உள்ள புலால் மணம் வீசும் குண்டுக்கல் மீது ஏறி நின்று, அவர் நாட்டகத்துள்ள பூக்கள் நெருங்கியதும் நீலமணியை

யொத்ததும் ஆன குன்றத்தைத் தலைவி நோக்க வேண்டும்' என்று தோழி செவிலிக்கு அறத்தொடு நின்ற செய்தி குறிப்பிடப்படுகிறது. இப்பாடலில் 'குன்றம்' என்ற சொல் மலை சார்ந்து இடம் குறிப்பிடப்படுகிறது. முதற்பொருளான நிலத்தைப் பற்றிய குறிப்பு இப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் மேற்கண்ட பாடல் குறிஞ்சி நிலம் சார்ந்த மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தியதை இதன் வாயிலாக அறியலாம்.

### 1.5.1.1.4. சிலம்பு

"சிலம்பு என்பதற்கு ஒலி, காற்சிலம்பு, மலை, பக்கமலை, குகை, மகளிர் காலணி வகை என்று பொருள் கூறப்படுகிறது".[31]

**நெய்யொடு மயக்கிய உழுந்து நூற்றன்ன**

**வயலை அம் சிலம்பின் தலையது**

**செயலை அம் பகைத் தழை வாடும் - அன்னாய்! (ஐங்.211 : 1-3)**

என்ற பாடலில் நெய்யைப் பெய்து பிசைந்து கலந்து உழுந்த மாவினை தூற்றுப் பரப்பி வைத்தாற் போலப் படர்ந்துள்ள வயலைக் கொடிகள், மிகுந்த அழகிய மலையின் உச்சியில் அசோக மரத்தில் வளரும் இத்தழை எளிதில் வாடிவிடும் இயல்பை உடையதாகும். எனவே காலம் தாழ்த்தாமல் தலைவன் கொடுத்த கையுறையை ஏற்குமாறு தோழி தலைவியிடம் கூறுகிறாள். இந்த பாடலில் சிலம்பு என்ற சொல் எடுத்தாளப்பட்டுள்ளது.

"சிலம்பு என்ற பெயரிலும் ஆரவாரம் செறித்த மலை என்ற பொருளில் குறிஞ்சியை அழைப்பர்."[32] சிலம்பு என்பதற்கு ஒலி என்று பொருள் சொல்லப்படுகிற நிலையில் ஆரவாரமிக்க பகுதியாக மலை காட்சியளிக்கிறது. அருவியின் ஓசையும், இயற்கையின் ஓசையும் அவ்விடத்தில் ஆரவாரத்தை ஏற்படுத்துவதாக அமைகின்றது. எனவே, சிலம்பு என்பது மலையை வெளிப்படுத்துவதாய் பொருள் கொள்ளப்படுகிறது. இந்நிலை குறிஞ்சியின் முதற்பொருளை வெளிப்படுத்துவதாய் அமைகின்றது.

### 1.5.1.1.5. வெற்பு

"குறிஞ்சியை 'வெற்பு' எனப் பெயரிட்டும் அழைத்தனர். எதனையும் வெல்லும் தன்மையால் உயர்ந்த தோற்றமுடைய மலை என்ற பொருள் குறித்தது."[33] காண்போரை வியக்க வைக்கும் தோற்றமுடன் வலிமைத் தன்மையையும் மையமிட்டு இப்பெயர் பெற்றிருக்கலாம்.

யாங்கு வல்லுநையோ - ஓங்கல் வெற்ப!

இரும் பல் கூந்தல் திருந்து இழை அரிவை

திதலை மாமை தேயப்

பசலை பாயப் பிரிவு? - தெய்யோ! (ஐங்.231)

என்ற பாடலில் ‘ஓங்கல் வெற்ப’ என்பது உயர்ந்த மலைக்குத் தலைவனே எனக் குறிப்பிடப்பட்டு தோழியின் கூற்றாக அமைகிறது. ‘உயர்ந்த மலைக்குரிய தலைவனாக இருந்தால் மட்டும் போதாது, உயர்ந்த பண்புகளையும் பெற வேண்டும்’ என்று தோழி அறிவுறுத்துவதாக அமைகின்றது. தோழிக்கு அறிவுறுத்த உயர்ந்த மலையான ‘வெற்பு’ எனும் சொல் தேவைப்படுகிறது.

இவ்வாறாக குறிஞ்சியின் முதற் பொருளான மலையும் மலை சார்ந்த இடம் கவாஅன், குன்றம், சிலம்பு, வெற்பு என பல பெயர்களில் அழைக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் வழியாக முதற்பொருளில் நிலமானது கபிலரின் பாடல்களில் அமைந்து குறிஞ்சித் திணையை நன்கு வெளிப்படுத்தியுள்ளது.

### 1.5.1.2.பொழுது

உயிர்களின் வாழ்விற்கு அடிப்படையாய் அமைவது நிலமாகும். அதற்கு அடுத்த நிலையில் இயற்கையின் கால நிலைகள் முதன்மையானதாக அமைகின்றன. அந்த வகையில் முதற்பொருள் நிலமானது எத்துணை முதன்மையானதோ அத்துணை முதன்மையாய் விளங்குவது பொழுதாகும். பொழுது இரண்டு வகைப்படும். அவை 1) பெரும்பொழுது, 2) சிறுபொழுது ஆகும். ஓர் ஆண்டை அடிப்படையாய் கொண்டு அமைவது பெரும்பொழுது ஆகும். ஒரு நாளினை அடிப்படையாகக் கொண்டு அமையும் பொழுது சிறுபொழுது ஆகும்.

### 1.5.1.2.1. பெரும்பொழுது

பூமியின் சுழற்சியால் பருவங்கள் மாறிக்கொண்டே வருகின்றன. பூமி தன்னையும் சுற்றி, கதிரவனையும் சுற்றி வருவதால் நாம் இருக்கும் இடம் ஒரே தட்ப வெப்ப நிலைகளைப் பெறுவதில்லை. அவை மாறிக் கொண்டேயும், தொடர்ச்சியாகவும், சுழற்சியாகவும் அமைகின்றன. “காலங்கள் மழைக்காலம், பனிக்காலம், வெயிற்காலம் என்ற மூன்று பிரிவும், ஓர் ஆண்டுக்குப் பருவமாக அமையப் பெறுகின்றது. பின் மழைக்காலத்தைக் கார், கூதிர் என்றும், பனிக்காலத்தை முன்பனி, பின்பனி என்றும், அடுத்து வரும் வெயிற் காலத்தை

இளவேனில், முதுவேனில் என்றும் ஆறு பருவங்களாகப் பிரித்தனர்".[34] மேலும், "இப்பருவங்களைக் கண்ட கவிஞன், கலைப் படைப்புகளைப் படைத்தான். இது குறித்தே சங்க காலம், இயற்கைக் காலம் என்று கருதப் பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்".[35] ஒவ்வொரு பருவத்திற்கும் இரண்டு மாதங்கள் குறிப்பிடப்படுகின்றன.

| பருவங்கள் | தமிழ் மாதம் | ஆங்கில மாதம் |
|---|---|---|
| இளவேனில் | சித்திரை, வைகாசி | ஏப்ரல், மே |
| முதுவேனில் | ஆனி, ஆடி | சூன், சூலை |
| கார் | ஆவணி, புரட்டாசி | ஆகஸ்ட், செப்டம்பர் |
| கூதிர் | ஐப்பசி, கார்த்திகை | அக்டோபர், நவம்பர் |
| முன்பனி | மார்கழி, தை | திசம்பர், சனவரி |
| பின்பனி | மாசி, பங்குனி | பிப்ரவரி, மார்ச் |

பெரும் பொழுதுகளும் நிலம் சார்ந்த மக்களின் வாழ்க்கையினை வெளிப்படுத்துவதில் முதன்மையாக விளங்கி வருகின்றன.

**வருவை அல்லை; வாடை நனி கொடிதே –**
**அருவரை மருங்கின் ஆய்மணி வரன்றி**
**ஒல்லென இழிதரும் அருவி நின்**
**கல்லுடை நாட்டுச் செல்லல் – தெய்யோ! (ஐங்.233)**

என்ற பாடல் தலைவனிடம் தோழி கூறுவதாக அமைகிறது. அரியமலையின் கண் இருந்து அழகிய மாணிக்கக் கற்களை வாரிக் கொண்டு ஆரவாரத்துடன் வீழும் அருவிகளைக் கொண்ட தலைவன் மலைநாட்டிற்குச் செல்ல வேண்டாம். அங்ஙனம் செல்ல நேரிட்டு உரிய காலத்தில் மீண்டு வரவில்லையானால் தலைவியால் அதனைத் தாங்கிக் கொள்ள இயலாது. ஏனெனில் தற்பொழுது குளிர்ச்சி மிக்க வாடைக் காற்று மிகக் கொடியதாய் வீசுகின்றது என்று தோழி தலைவனிடத்தில் கூறுகிறாள். இதில் 'வாடை நனி கொடிதே' என்பது பிரிந்திருக்கும் தலைவன் தலைவியை வாடையானது மிகவும் வருந்தக் கூடியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குன்றக் குறவன் புல் வேய் குரம்பை**
**மன்று ஆடு இள மழை மறைக்கும் நாடன்**
**புரையோன் வாழி, – தோழி – விரை பெயல்**

**அரும் பனி அளை இய கூதிர்ப்**

**பெருந்தண் வாடையின் முந்து வந்தனனே (ஐங்.252)**

என்ற பாடலில் விரைந்து பெய்யும் தாங்குதற்கு அரிய பனியொடு கலந்த, கூதிர்ப்பருவத்து வீசும் இயல்புடைய கடுங்குளிருடைய வாடைக்காற்று வருவதற்கு முன்னே தலைவன் வந்தான் என்றும் அவன் உயர்ந்தோன் என்றும் தோழி வாழ்த்தி, தலைவியிடம் இச்செய்தியைக் கூறினாள். '*வாடையின் முந்து வந்தனன்*' என்பது இனி, வரும் வாடை நம்மை யாதும் செய்யவல்லதன்று என்பதை விளக்குவதாக அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

"வாடை என்பதற்கு குளிர்காற்று என்றும் பொருள் கூறுகிறது கழக அகராதி."[36] குளிர் நிலவும் கூதிர் காலமானது குறிஞ்சித் திணையின் பெரும் பொழுதாகும். "கூதிர் காலத்தில் குன்றமும் குளிரும் அளவில் குளிர் மிகுந்திருக்கும். களவுப் புணர்ச்சி மேற்கொண்ட காதலர் தனிப்பட்டு ஒழுக எண்ணுங்காலை, இருளும், மழையும் மிகுந்து குளிர் மிகும் இக்கூதிர் காலத்தில் பிறமாவும், புள்ளும் தத்தம் துணையுடன் வாழும். அப்போது தலைவன் மிகுதியாகும் அன்புக்குறிப்புடன் அரும்பாடுபட்டு, வழியிடைத் துன்பங்களை யெல்லாம் எதிர்ப்பட்டு தலைவியோடு, இணையுங்கால் கூடலுவகை பெருகுமாதலின், இத்திணைக்கு இப்பருவகால சூழல் பொருந்துமென வரையறுக்கப்பட்டது"[37] என்பர். எனவே, கபிலரின் மேற்கண்ட பாடல்களில் குளிரும் காலம் குறிஞ்சித் திணையின் பெரும்பொழுதில் அமைந்து குறிஞ்சித் திணையை நன்கு வெளிப்படுத்தியுள்ளது. குளிரும் காலத்தோடு மழைப் பொழியும் காலமும் குறிஞ்சித் திணையில் பெரும் பொழுதை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

**ஆம் இழி அணி மலை அலர் வேங்கைத் தகைபோல,**

**தேமூசு, நனைகவுள், திசைகாவல் கொளற்கு ஒத்த,**

**வாய்நில்லா வலிமுன்பின், வண்டு ஊது புகர் முகப்**

**படுமழை அடுக்கத்த, மாவிசும்பு ஓங்கிய**

**கடி மரத்துருத்திய, கமழ் கடாம் திகழ்தரும்**

**பெருங் களிற்றினத்தொடு, வீங்கு எருத்து எறுழ்முன்பின்**

**இரும்புலி மயக்குற்ற இகல்மலை நல் நாட! (கலி.48 :1-7)**

என்ற கலித்தொகைப் பாடலில் அருவியை உடைய மலையிடத்துத் தேனினம் மொய்க்கும் மலர்ந்த பூக்களைக் கொண்ட வேங்கையின் அழகு போல,

*வண்டுகள் ஊதும் புள்ளிகளை உடைய முகத்தினை உடைய யானைகள் இருந்தன. அக்களிற்று யானைகள் எட்டுத் திசைகளிலும் காத்தல் தொழிலை மேற்கொள்ளுதற்குப் பொருந்தினவாய், அமைந்த மழை சொரியும் பக்க மலையிடத்தே வானுற ஓங்கிய மிகுதியான மரங்கள் காணப்பட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மழை பொழியும் மலைப்பகுதி என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.*

**வீழ்பெயற் கங்குலின் விளி ஓர்த்த ஒடுக்கத்தால்,**

**வாழும் நாள் சிறந்தவள் வருந்துதோள் தவறு உண்டோ**

**தாழ் செறி கடுங்காப்பின் தாய் முன்னர், நின் சாரல்**

**ஊழ் உறு கோடல் போல, எல்வளை உகுபவால்?**

**இனை இருள் இது என ஏங்கி,நின் வரல் நசைஇ**

**நினைதுயர் உழப்பவள் பாடு இல் கண்பழி உண்டோ**

**இனையள் என்று எடுத்து அரற்றும் அயல்முன்னர்** (கு.கலி:48:8-15)

*என்ற பாடலில் காவல் புரியும் தாய், காந்தள் மலர்களின் முதிர்ந்த இதழ்கள் உதிர்வன போல, ஒளி படைத்த வளைகள் கழன்று விழுந்தன. இடைவிடாது மழை பெய்கின்ற இராக்காலத்து, நின்னுடைய அழைக்கும் குறிப்பொலியை ஓர்த்தனால் உண்டான மன ஒடுக்கத்தாலே உயிர் வாழ்பவள் தலைவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பாடலிலும் மழை பொழிகின்ற இராக்காலம் என்பது நோக்கத்தக்கதாகும்.*

**அன்னாய் வாழி! வேண்டு அன்னை! உவக்காண்**

**மாரிக்குன்றத்துக் காப்பாள் அன்னன்;**

**தூவலின் நனைந்த தொடலை ஒள் வாள்,**

**பாசி சூழ்ந்த பெருங்கழல்,**

**தண் பனி வைகிய வரிக் கச்சினனே!** (ஐங்-206)

*என்ற பாடலில் 'மழைத்துளியிலே நனைத்ததும் மாலை போல் தோளிலிருந்து தொங்குவதுமாகிய ஒளி உமிழும் வாளையும், நீர்ப் பாசியால் சுற்றப்பட்டமையால் பசிய வண்ணம் கொண்ட வீரக்கழலையும், குளிர்ந்த நீர்த்துளி தங்கியதும் வரிந்து கட்டப்பட்டதுமான கச்சையையும் உடையவனாய் மாரிக்காலத்திலே குன்றத்தைக் காத்து நிற்கும் காவலாளி போல் தலைவன் தம் அருகிலேயே நிற்கின்றான் காண்பாயாக' என்று தோழி தலைவியிடத்துக் கூறினாள்.*

“தொடலை என்பதற்கு மாலை என்று பொருள் கூறுகிறது கழக அகராதி”[38] மாரிக் காலமாக இருப்பதால் தலைவன் வரும் வழியில் இருந்து நீர் நிலையில் படர்ந்திருந்த நீர்ப்பாசி அவன் கழலைச் சுற்றிக் கிடந்தது. உறையிடப்பட்ட வாள் மழையினால் நனைந்து தோளிலிருந்து தொங்கியது ஆதலின் மாலை போலக் காட்சியளித்தது அதனால் மாலையை ‘தொடலை ஒள்வாள்’ என்று தோழி கூறினாள்.

மேற்குறிப்பிட்ட பாடல்களில் மழைப் பொழிவினைப் பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ‘முரச முழக்கம் போன்ற இடிஒலிகள், தீக்கொடி போன்ற மின்னல்கள் உறுமுவது போல ஒலித்து, கண்ணிமைப்பது போல மின்னி, நிலமே அஞ்சி நடுங்கும் வண்ணம், இடையறாது பெருமழை பொழியும் கூதிர்காலம் எனக்குறித்தனர்”[39] மேலும் “கார்காலத்து மழை பெய்தபின் மேகத்தில் எஞ்சியிருக்கும் துளிகள் கூதிர் காலத்து வீழ்தலுண்டு”[40] என்பதும் இவண் நோக்கத்தக்கதாகும். எனவே, குறிஞ்சித்திணைக்குரிய பெரும் பொழுதான கூதிர் காலம் குளிர்காலத்தையும் மழைப் பொழியும் காலத்தையும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. இவ்விரு நிலைப்பாடுகளும் கபிலரின் குறிஞ்சித் திணைப் பாடல்களில் அமைந்து திணை வெளிப்பாட்டினை நன்கு பதிவு செய்துள்ளன.

#### 1.5.1.2.2. சிறுபொழுது

பெரும் பொழுதை அடுத்து இரண்டாவதாகக் குறிப்பிடப்படுவது சிறு பொழுதாகும். சிறு பொழுதானது ஒரு நாளின் கால அளவினை உள்ளடக்கியது ஆகும். சிறுபொழுதும் முதற் பொருளில் இன்றியமையாததாகவே கருதப்படுகிறது. சிறுபொழுதே திணைகளுக்குரிய சிறப்பினை அளிப்பதற்கு இடமாக அமைகின்றது. அந்த வகையில் குறிஞ்சி நிலத்திற்குரிய சிறுபொழுது யாமம் ஆகும்.

#### யாமம்

காதலரின் அக வாழ்வில் குறிஞ்சியானது முதன்மையான நிலையினை வகிக்கிறது. ஏனெனில் குறிஞ்சியின் அக ஒழுக்கமானது சந்திப்பும் புணர்தலும் இல்லையேல் அகம் என்பதே இல்லாமல் போய்விடும். எனவே ஏனைய திணைகளினும் குறிஞ்சி முதன்மையாய் அமைகிறது. அதில் குறிஞ்சிக்குரிய சிறுபொழுதாக அமையும் யாமமே காதலர் கூடுவதற்கான ஏற்ற பொழுதாய் அமைகிறது. காதலரின் வாழ்வு களவில் தொடங்குகிறது. களவு வாழ்க்கை மேற்கொள்வதற்கு ஏற்ற சூழல் இருள் நிறைந்த இராப் பொழுதே ஆகும்.

இராப்பொழுதில் தான் தலைவன் தலைவியின் இல்லத்தினருகே சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெறுகிறான். ஆதலால் குறிஞ்சியின் யாமம் காதலரின் வாழ்வின் முதன்மையான பொழுதாகும்.

**வாள்நிற உருவின் ஒளிறுபு மின்னி,**
**பரூஉ உறைப் பல்துளி சிதறி, வான் நவின்று,**
**பெருவரை நளிர்சிமை அதிர வட்டித்து,**
**புயல் ஏறு உரைஇய வியல் இருள் நடுநாள்,**
**விறல் இழைப் பொலிந்த காண்பு இன் சாயல்,**
**தடைஇத் திரண்டநின் தோள் சேர்பு அல்லதை**
**படாஅ வாகும், எம் கண் என நீயும்**
**'இருள் மயங்கு யாமத்து இயவுக் கெட விலங்கி,**
**வரிவயங்கு இரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்**
**பெருமலை விடரகம் வர அரிது' என்னாய்,**
**வர எளிதாக எண்ணுதி (அகம்.218 : 3-13)**

என்ற பாடலில் குறிஞ்சி நிலத்தில் இருள் சூழ்ந்த ஒரு நள்ளிரவில் மேகமானது வாள்போல் ஒளியுடன் மின்னி இடியுடன் மழைத்துளிகளைச் சிதறுகின்றது. அத்தகைய சூழலில் 'சிறந்த அணிகலன்களாற் பொலிவினைப் பெற்று, இனிய வளைந்த திரண்ட நின் தோளினைச் சேராவிட்டால் தம் கண்கள் உறக்கம் கொள்ள மறுக்கின்றன' எனக் கூறி தலைவன் தலைவியைச் சந்திக்கின்றான். 'நள்ளிரவுப் பொழுது தடைகள் பல கடந்து பெருமலையிடத்து வருதல் அரிதென்று நினையாது எளிதென்று எண்ணுகிறாயே' என தலைவி தலைவன் வரும் வழி குறித்து கவலை கொள்கிறாள்.

மேற்கண்ட பாடலில் தலைவியை எவ்வாறேனும் தழுவுதலே தலைவனின் நோக்கமாக இருக்கிறது. அதற்கு ஏற்ற பொழுதாக யாரும் அறியாத வகையில் இருள் சூழ்ந்த நள்ளிரவுப் பொழுதையே தலைவனும் தலைவியும் தேர்ந்தெடுக்கின்றனர். உள்ளத்தால் மட்டுமே எண்ணி மகிழக்கூடிய அக வாழ்வின் தொடக்கம் இருள் சூழ்ந்த நள்ளிரவுப் பொழுதில் அன்பின் நெருக்கத்தைக் காதலரிடையே ஏற்படுத்தக் கூடியதாக அமைகிறது.

**தாமரைக் கண்ணியை தண்நறுஞ் சாந்தினை,**
**நேர் இதழ்க் கோதையாள் செய்குறி நீ வரின்,**

**மணங்கமழ் நாற்றத்த மலை நின்று பலி பெறூஉம்**

**அணங்கு என அஞ்சுவர், சிறுகுடியோரே**

**ஈர்ந் தண் ஆடையை எல்லி மாலையை,**

**சோர்ந்து வீழ் கதுப்பினாள் செய்குறி நீவரின்**

**ஒளிதிகழ் ஞெகிழியர், கவணையர், வில்லர்**

**'களிறு' என ஆர்ப்பவர், ஏனல் காவலரே**

**ஆர மார்பினை, அண்ணலை அளியை**

**ஐது அகல் அல்குலாள் செய்குறி நீவரின்**

**கறிவளர் சிலம்பில் வழங்கல் ஆனாப்**

**புலி என்று ஓர்க்கும், இக்கலி கேழ் ஊரே என ஆங்கு**

**விலங்கு ஓரார், மெய் ஓர்ப்பின் . . . . .** (குறி.கலி.16 : 6-20)

*என்ற பாடலில் தலைவன் தலைவியைச் சந்திக்க செல்லும் இராப்பொழுதின் சூழல்கள் தோழியின் வாயிலாக விளக்கப்படுகின்றன.*

*இரவில் தலைவனைப் பார்த்த சிறுகுடியில் உள்ளோர் மணம் கமழும் மலைக்கண்ணே நின்று, தாங்கள் தரும் பலியை ஏற்றுக் கொள்ளும் அணங்குதானோ என அஞ்சினர். இராக்காலத்தே புணர்ச்சிக்கேற்ற அணிபெற அணிந்து வரும்போது தலைவனின் வருகையால் மரக்கிளைகள் தழைகள் அசைகின்றன. இதனைக் கண்ட தினைப்புனம் காத்திருப்போர் யானைதான் வந்ததோ என ஒளி விளங்குகின்ற தீப்பந்தங்களுடன் கல்லெறியும் கவணையும் வில்லையும் உடையராய் ஆர்ப்பரிப்பர்; தலைவனைக் கண்டு விலங்கு முதலியன அஞ்சி ஓடின. அதனைப் பார்த்த ஊரார் புலிதான் வந்துவிட்டதாகக் கருதி நிற்பார்கள். இவ்வாறாக தலைவனின் வருகை அணங்காக, களிறாக, புலியாக அமைந்ததாக தோழி குறிப்பிடுகிறாள். ஆக, ஒவ்வொரு நிலையிலும் தலைவனுக்கு துன்பம் சூழ்ந்ததாகவும் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் இத்துணை துன்பங்களைக் கடந்து இராப்பொழுதில் தலைவியைச் சந்தித்து இன்பம் துய்ப்பதிலே தலைவனின் நோக்கம் அமைந்ததும் புலனாகிறது.*

*ஆகவே குறிஞ்சியில் தலைவன் தலைவி வாழ்க்கையைப் பொருத்த வரையில் முதற்பொருளாய் அமைந்த சிறுபொழுதின் யாமமாகிய இராப்பொழுது முதன்மையான நிலையை வகிக்கிறது. இப்பொழுதினை கபிலர் நன்கு தம் பாடலில் பதிவு செய்து திணையை வெளிப்படுத்தியுள்ளார்.*

### I.5.2. குறிஞ்சியின் கருப்பொருள்

"நிலம், பொழுது என்ற முதலும், இயங்கு, இயங்காப் பொருள்களான கருவும் இயற்கையாகி இடம்பெறுகின்றது. பாட்டுக்கு ஏற்றபடிச் சுருதி அமைத்துக் கொள்வது போலவும், ஓவியத்துக்கு ஏற்ற நிலைக்களம் வரைவது போலவும், சிலைக்கு ஏற்ற பீடம் பொருத்துவது போலவும் காதல் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற முதற்பொருளையும் கருப்பொருளையும் வகுத்துக் கொள்வதால் இலக்கியம் சுவை மிகுகின்றது."[41]

**"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**

**செய்தியாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறவும் கருஎன மொழிப"[42]** (தொல்.பொருள்.964)

என்று கருப்பொருளை சுட்டுவார் தொல்காப்பியர்.

மலையும் மலைசார்ந்த நிலமாகிய குறிஞ்சியில் அந்நிலம் சார்ந்த சூழல்களுக்கு ஏற்பவே உயிரின் வாழ்வியல் அமைந்துள்ளன. மலை சார்ந்த உணவும், நீரும், மரமும், தொழிலும் பிறவும் அமைந்துள்ளன. நிலமே வாழ்வின் அனைத்து செயல்பாடுகளையும் தீர்மானிக்கும் காரணியாக விளங்குகின்றன. அந்த வகையில் குறிஞ்சி நிலம் மலைசார்ந்த வாழ்வியலையே அமைத்துத் தருகின்றது. இலக்கணம் வகுத்தோர் நிலம் சார்ந்த உயிருள்ள, உயிரற்ற பொருட்களைக் கருப்பொருளாகக் குறிப்பிட்டனர். அவ்வகையில் குறிஞ்சியின் கருப்பொருளும் பதினான்காக அமைகின்றன. அவை தெய்வம் தொடங்கி தொழில் வரைக்குமாக ஐந்திணைகளுக்கு ஏற்ப வெவ்வேறாக அமைகின்றன. இருப்பினும் ஒரு நிலத்தின் முதற்பொருளும் கருப்பொருளும் மயக்கம் கொள்ளவும் வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

**"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே"[43]**

(தொல்.பொருள்.959)

உரிப்பொருளைத் தவிர்த்த ஏனைய முதற்பொருளும், கருப்பொருளும் மயக்கம் கொள்ளும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இருப்பினும் ஒவ்வொரு நிலத்திற்குமான கருப்பொருட்கள் வெவ்வேறாய் அமைந்து விளங்குவன சிறப்பிற்குரியதாகும். "தலைவன் தலைவியின் அகவாழ்க்கையாகவும், அல்லாத சமூக நிகழ்வாக இருப்பினும் கருப்பொருள் இன்றி கருத்தினை விளக்க வைத்தல் இயலாது."[44] முப்பொருளில் கருப்பொருள் நிலத்தின் அடிப்படையிலும் காலத்தின் அடிப்படையிலும் தோன்றுவது. நிலம் பொழுது

சார்பாகப் பிறப்பது. கருப்பொருள் சார்பாக மனித உணர்வுகள் தோன்றுகின்றன. கருப்பொருள், தான் தோன்றுவதற்கு முதலாகிய நிலம், பொழுதைச் சார்ந்து தன்னோடு தொடர்புடைய மனித வாழ்க்கைக்கும் தொடர்புடையதாக விளங்குகின்றது.அந்த வகையில் ஒரு சூழலை எடுத்தியம்புவதற்கு கருப்பொருளும் முதன்மையாகவே விளங்குகின்றன. கபிலர் கருப்பொருட்களின் வழியாக திணை வெளிப்பாட்டினை நேர்த்தியாக பதிவு செய்துள்ளார்.

> **"ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர், புள்விலங்கு**
> **ஊர் நீர் பூ மரம் உணா பறை யாழ்பண்**
> **தொழில் எனக் கருஈர் எழுவகைத்து ஆகும்"[45]**

**( அக.விளக்.19)**

என்று கருப்பொருளை அகப்பொருள் விளக்கம் எடுத்துரைக்கிறது.

### 1.5.2.1. தெய்வம்

கருப்பொருளின் முதலாவதாக அமைவது அந்நிலம் சார்ந்த தெய்வமாகும். தமிழ்ச் சமூகத்தில் முதன்மையான பல செயல்பாடுகளில் தெய்வச் சிந்தனைகள் மேலோங்கிய வண்ணம் இருந்து வருகிறது. "முல்லைத் திருமாலும் குறிஞ்சி முருகனும் மருத வேந்தனும் நெய்தல் வருணனும் பாலைக் கொற்றவையும் திணைத் தெய்வங்களாகும். இத்தெய்வங்கள் நிலத்திற்கேற்ற படைப்புகளே அவ்வந்நிலப்பொருள்கள் தோற்றிய உருவங்களே என்று அறிய வேண்டும். மேலும் தமிழர்களுக்கு மலைமேல் வாழ்க்கை தொடங்கிய அக்காலத்திலேயே கடவுளுண்மை முகிழ்த்து விட்டது. தெய்வம் உணாவே, மா மரம் புள் எனத் தெய்வமும் திணைக் கருப்பொருளாக எண்ணப்பட்டு வருதலின் தமிழர் தெய்வங்கள் தமிழ் நிலத்தாய் ஈன்றவை என்று துணிந்து கூறலாம் என்பர் வ.சுப.மாணிக்கம்"[46] "மனிதன் கட்புலனாகி இயற்கையின்பாற்பட்டவன்; கடவுள் கட்புலனாகாது இயற்கைக்கும் புறம்பானது; இவ்விரண்டிற்கும் இடையே ஒரு உறவை உருவாக்கும் முயற்சியே சமயமாகும்."[47]

குறிஞ்சி நிலத்தின் கடவுளான முருகன் குறிஞ்சி நிலத்தில் மக்களின் வாழ்வியலில் முதன்மையான நிலையைப் பெறுகிறார்.

> **கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி,**
> **அறியா வேலன், 'வெறி' எனக் கூறும்;**
> **அதுமனம் கொள்குவை அனைஇவள்!**
> **புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே (ஐங்.243)**

என்ற சங்கப் பாடலில் தலைவன் தலைவி இருவரும் காதல் கொள்கிறார்கள். ஒரு சூழலில் தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவி, காதலுக்குரிய இலக்கணப்படி தலைவனையே எண்ணி துயருறுகிறாள். இதனைக் கண்ட அன்னை தலைவியின் துன்பத்திற்கு தீர்வு காண விழைகிறாள். தன் மகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற துயரத்தைப் போக்குகின்ற வழியாக இறைவழிபாட்டை மேற்கொள்கின்றாள். மிளகுக் கொடி வளரும் குறிஞ்சி மலையில் குடிகொண்ட முருகக் கடவுளை வேண்டி வழிபாடு நிகழ்த்தினால் தன் மகளுக்கு ஏற்பட்ட உடல் பிணி நீங்கும் என அன்னை நம்புவதையே மேற்கண்ட பாடல் குறிப்பிடுகிறது. இதன் வழியாக தனக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய துன்பத்தைப் போக்க இறைவனை அடைதலே சரியான தீர்வாகும் என்கிற மனநிலை வெளிப்படுகிறது. இந்த மனநிலை சங்க காலத்தில் இருந்து இன்று வரைக்கும் மக்களிடையே காணப்படுகிறது. குறிஞ்சி நிலமாதலால் குறிஞ்சியின் கடவுள் முருகனைக் கொண்டு வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. அந்த வகையில் திணைக்குரிய கடவுள் முருகன் மேற்கண்ட பாடலில் வெளிப்பட்டு திணை வெளிப்பாடு மயக்கமுற அமைந்துள்ளது சிறப்பிற்குரியதாகும்.

**1.5.2.2. உயர்ந்தோர்**

மொழியின் வழக்கு நிலையில் செய்யுள் வழக்கு, உலக வழக்கு என்றிருப்பது போல மக்களின் வாழ்விலும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. சமூக வாழ்வில் உயர்ந்தோர், அல்லோர் என்ற நிலைப்பாடும் காலங்காலமாக இச்சமூகத்தில் நிலவி வருவதையும் காணலாகிறது. அந்த வகையில் குறிஞ்சி நிலத்திலும் மக்களின் வாழ்வியற் செயற்பாடுகளினைக் கொண்டு உயர்ந்தோர் என்ற நிலைப்பாடு காணப்படுகின்றது.

**1.5.2.2.1. வெற்பன்**

குறிஞ்சி நிலத்தில் ‘வெற்பன்’ என்பான் உயர்தோனாகக் கருதப்படுகிறான்.

**மலி பெயல் கலித்த மாரிப் பித்திகத்துக்**

**. . .   . . .   . . .   . . .   . . .**

**பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறை**

**பல்லோர் உவந்த உவகை எல்லாம்**

**என்னுள் பெய்தந்தற்றே – சேண் இடை**

**ஓங்கித் தோன்றும் உயர்வரை**

**வான் தோய் வெற்பன் வந்தமாறே! (அகம்.42)**

என்ற பாடலில் மழை பெய்யாததால் வறுமையுண்டாகக் கலப்பை முதலிய கருவிகள் செயலற்று இருக்கும். கோடை காலத்தில், ஒருநாள் இரவு நீர் நிலைகள் அனைத்தும் நிறையுமாறு மழை பெய்து அதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அது போல நெடுந்தொலைவில் உள்ள பக்கமலைகளை உடைய நம் தலைவனாகிய வெற்பன் தாம் விரும்பியபடி மணந்து கொள்ள வந்தான். அம்மகிழ்ச்சி நீர் நிறைந்த நீர் நிலைகளைக் கண்ட மக்களின் மகிழ்ச்சி போன்று தனக்கு அமைந்ததாக தோழி தலைவியிடம் கூறுவதாகக் கபிலர் இப்பாடலைப் படைத்துள்ளார். இந்தப் பாடலில் இடம் பெறும் தலைவன் '***வெற்பன்***' எனக் குறிப்பிடப்பட்டுள்ளான்.

வெற்பன் எனக் குறிப்பிடப்படுபவன் குறிஞ்சி நிலத்தில் உயர்ந்தோனாகக் கருதப்படுகிறான். '***வெற்பு***' என்பது மலையைக் குறிக்கும் சொல்லாகும். வெற்பன் என்னும் தலைவன் மலைப்பகுதியான குறிஞ்சியைச் சார்ந்தவன் எனும் பொருளில் அமைந்துள்ளது. இச்சொல் வழக்கை உயர்ந்தோராக குறிப்பிடப்படுகிறது.

### I.5.2.2.2. கொடிச்சி

குறிஞ்சி நிலத்தில் வாழும் பெண்ணை '***கொடிச்சி***' என்று அழைக்கின்றனர். உயர்ந்தோரில் பெண்ணை அழைக்கும் வழக்காக இச்சொல் அமைகிறது.

**குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்,**

**பைஞ்சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்**

**அம்சில் ஓதி அசை நடைக் கொடிச்சி**

**கண்போல் மலர்தலும் அரிது; இவள் –**

**தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே. (ஐங்.299)**

என்ற பாடலில் தலைவியின் அழகு குறிப்பிடப்படுகிறது. மலைச்சாரலில் உள்ள சுனையில் குவளை மலர் பூத்திருக்கிறது. மலையில் அழகுற மயிலும் காட்சியளிக்கிறது. ஆனால் தலைவியினுடைய கண்ணோடு ஒப்பிடும்போது குவளை மலர் அத்துணை சிறப்பாய் அமைந்திடவில்லையென்றும் தலைவியினுடைய சாயலோடு ஒப்பிடும்போது மயிலின் சாயலும் குறைவாகவே இருப்பதாக கபிலர் குறிஞ்சி நிலத் தலைவியை அழகானவளாய்

படைத்துக் காட்டுகிறார். இக்குறிஞ்சி நிலத் தலைவியை ‘கொடிச்சி’ எனும் சொல்லால் குறிப்பிடுகிறார். கொடிச்சி எனும் வழக்கு உயர்ந்தோரை வழங்கும் வழக்காக அமைகிறது.

### 1.5.2.3. அல்லோர்

**எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொல்.சொல்.155)**

எல்லா சொல்லும் ஏதேனும் ஒரு பொருளை மையமிடுவதாகவே அமைகின்றது என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார். அந்த வகையில் திணை சார்ந்த மக்களின் பெயர்களிலும் உயர்ந்த நிலையும் அதற்கு மாறான அல்லாத நிலையும் மையமிடுகின்ற தன்மையைக் காண இயலுகிறது. அந்த வகையில் ‘***குறவர்***’ என்பது குறிஞ்சி நில மக்களில் ஆண்களைக் குறிப்பிடுவர். அச்சொல் உயர்ந்தோர் அல்லாதவரைக் குறிப்பிடுவதாக அமைகிறது.

**குறவர் முன்றில் மா தீண்டு துறுகல்**

**கல்லா மந்தி கடுவனோடு உகளும்**

**குன்ற நாட! நின் மொழிவல்; என்றும்,**

**பயப்ப நீத்தல் என் – இவள்**

**கயத்து வளர் குவளையின் அமர்த்த கண்ணே? (ஐங்.277)**

என்ற பாடலில் குறிஞ்சி நில மக்கள் தம் முற்றத்தில் விலங்குகள் உரசி உடல் தினவைப் போக்கிக் கொள்ள உதவுமாறு குண்டுக் கல்லைப் போட்டு வைப்பர் என்றும் தலைவியை பசலையுறுமாறு பிரிந்துச் செல்வதற்குரிய காரணத்தைக் கூறுமாறும் தோழி தலைவனிடத்தில் வினவுவாள். இக்கூற்றில் குறிஞ்சி நில மக்களைக் குறிப்பிடும்பொழுது ‘***குறவர்***’ எனக் குறிப்பிடப்படுகிறது. இக்குறவர் என்பது குறிஞ்சி நிலத்தில் வசிக்கும் உயர்ந்தோர் அல்லாதவரைக் குறிப்பிடுவதாகக் கூறப்படுகிறது.

### 1.5.2.4. புள்

தலைவன் தலைவியை மையமிட்ட வாழ்வியலை இலக்கியமாகப் பதிவிடும் பொழுது கருப்பொருட்கள் இன்றியமையாததாக விளங்குகின்றன. அந்த வகையில் அந்நிலம் சார்ந்த புள்ளினமும் தனக்கென ஓரிடத்தைப் பிடிக்கின்றது. குறிஞ்சி நிலத்தின் பறவைகளாக கிளி, மயில் அமைகின்றன. “சங்ககாலத் தமிழர் வாழ்வு இயற்கையோடு இயைந்த வாழ்வு. இயற்கையின் வளமும், வனப்பும்,ஆற்றலும், அழகும் அவர்களைப் பெரிதும் கவர்ந்து அவர்களின் வாழ்வில் பேரிடம் பெற்றன. மலையும், காடும், வயலும், கடலும்,

கானலும்,விலங்கும், பறவையும், செடியும்,கொடியும், அருவியும் ஆறுமாகிய இயற்கைப் பொருள்களோடு அவர்கள் உறவும் உரிமையும் கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் வாழ்வு இயற்கையில் தோன்றி இயற்கையில் வளர்ந்து இயற்கையில் இன்புற்ற வாழ்வென அறிஞர் குறிப்பிடுவர்."[48]

### 1.5.2.4.1. கிள்ளை

குறிஞ்சி நிலத்தில் கிளிகள் முதன்மையான புள்ளினமாகும்.

**வெள்ள வரம்பின் ஊழி போகியும்**

**கிள்ளை வாழிய, பலவே – ஒள் இழை**

**இரும் பல் கூந்தற் கொடிச்சி**

**பெருந் தோள் காவல் காட்டியவ்வே (ஐங்.281)**

என்ற பாடல் தலைவன் கூற்றாக அமைந்ததாகும். கிளிகளைப் பல்லாண்டு வாழவேண்டும் என தலைவன் வாழ்த்துகிறான். பல ஊழிகளாகிய, வெள்ளமாகிய இலட்சம் ஆண்டுகளுக்கு மேல் வாழ வேண்டும். ஏனெனில் அவைதாம் ஒளி பொருந்திய ஆபரணங்களையும் நீண்ட கரிய கூந்தலையும் பருத்த தோள்களையுமுடைய என் தலைவியாகிய குறிஞ்சி நிலப் பெண்ணைக் காவலுக்கு வரச் செய்தவை. எனவே அக்கிளிகள் வாழ்க என தலைவன் வாழ்த்துகிறான். அக்கிளிகள் இல்லையெனில் தினைப்புனம் காவல் காக்க தலைவியின் தேவை ஏற்பட்டிருக்காது. தலைவி வரவில்லையாயின் தலைவனின் சந்திப்பே நிகழ்ந்திருக்காது என்ற நிலையில் குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளில் கிளியாகிய புள்ளினம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இதன் வழியாக திணை வெளிப்பாடு எவ்வித விளக்கமுமின்றி வெளிப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 1.5.2.4.2. மயில்

குறிஞ்சி நிலத்தின் பறவைகளில் மயிலும் குறிப்பிடத்தக்கதாகும். மயில்கள் மிகுதியாக இருக்கக்கூடிய இடமாக மலைப்பகுதிகள் காட்டப்படுகின்றன.

**மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்**

**துறுகல் அடுக்கத் ததுவே பணைத்தோள்**

**ஆய்தழை நுடங்கும் அல்குல்,**

**காதலி உறையும் நனி நல் ஊரே (ஐங்.291)**

என்ற பாடலில் 'மூங்கில் போன்ற பருத்த தோள்களையும் ஆய்ந்து எடுத்த தழைகளால் ஆகிய தழை ஆடை அசையும் அடிவயிற்றையும் உடைய என் காதலி வாழும் ஊர், மிக நல்ல ஊர். அங்கு மயில்கள் ஆட அதற்கேற்பப் பேராந்தைகள் மாறி மாறி ஒலிக்க குண்டுக்கற்கள் உள்ள பக்க மலையையுடைய ஊரில் என் காதலி வாழ்கிறாள்' என தலைவனின் கூற்றாக அமைகிறது. மேற்கண்ட பாடலில் மயில்கள் மிகுதியாக அமைந்து, ஆடக்கூடிய சூழல்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். குறிஞ்சித் திணைக்குரிய பறவைகளில் மயிலும் முதன்மையாக அமைந்து திணையை வெளிப்படுத்துகிறது.

**1.5.2.5. விலங்கு**

உலக உயிர்களில் எண்ணற்ற உயிரினங்கள் அமைகின்றன. விலங்கின் இனங்களைத் தீர்மானிப்பவை அந்த இடம் சார்ந்த சுற்றுச் சூழல்களே ஆகும். அந்த வகையில் திணை சார்ந்த விலங்குகள் இடத்திற்கேற்ப வாழ்ந்து வருகின்றன. குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்குகளில் புலி, கரடி, யானை, சிங்கம் ஆகியவை அமைகின்றன.

**வெறிசெறித் தனனே, வேலன் – கறிய**
**கல்முகை வயப்புலி கழங்கு மெய்ப் படூஉ**
**புன்புலம் வித்திய புனவர் புணர்த்த**
**மெய்ம்மை அன்ன பெண்பாற் புணர்ந்து,**
**மன்றில் பையுள் தீரும்**
**குன்ற நாடன் உறீஇய நோயே (ஐங்.246)**

என்ற பாடலில் மலையில் புன்செய் கொல்லையில் தினைப் பயிரை வளர்க்கும் குறிஞ்சி நில மக்கள், விலங்குகள் புகுந்து நிலத்தை அழிக்காத வண்ணம் பாதுகாக்கக் கழற்சிக்காயினைக் கண்ணாகப் பொருத்தி உண்மையான பெண்புலி போலச் செய்து வைத்திருப்பர். அந்தச் சூழலில் மிளகுக் கொடி படரும் கல் குகையில் வாழும் வலிமையான ஆண்புலி பொம்மைப் பெண்புலியை இணைத்து தன் வருத்தம் நீக்கும் தன்மையுடையது தலைவனின் நாடாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பெண் புலியைத் தேடி வரும் ஆண் புலியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அகவாழ்வினைக் குறிப்பிடும் சூழலில் குறிஞ்சியின் கருப்பொருளாகக் காட்டப்பட்டுள்ள புலியும் இன்பமான வாழ்வினை நோக்கிச் செயல்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

கருதத்தக்கதாகும். எனவே, திணை சார்ந்த வாழ்வினைப் பதிவு செய்திடும் நிலையில் திணையின் கருப்பொருள்கள் நன்கு வெளிப்படுத்துகின்றன.

**1.5.2.5.1. யானை**

யானையும் குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்கு ஆகும். தலைவன் தலைவியின் அகவாழ்வினைப் பதிவு செய்திடும் வேளையில் கருப்பொருளாக அமைபவை நேரடியாகவும் உவமையாகவும் இடம் பெறுகின்றன. அந்த வகையில் குறிஞ்சியின் விலங்கான யானை உவமையாக அமைகின்றது.

**சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்**
**புனக்கிளி கடியும் பூங்கட் பேதை**
**தான் அறிந்தனளோ இலளோ பானாள்**
**பள்ளி யானையின் உயிர்த்து, என்**
**உள்ளம் பின்னும் தன் உழை யதுவே (குறுந்.142)**

என்ற பாடலின் வழியாக, தலைவியுடன் கூடிப் பிரிந்த பின்னும் நள்ளிருள் சாமத்தில் படுத்திருக்கும் யானை பெருமூச்சு விட்டது போல பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பதாகத் தலைவன் குறிப்பிடுகிறான். மேலும் தன்னுடைய இந்த நிலைப்பாடுகளையெல்லாம் தினைப்புனம் காவல் காக்கும் பூப்போன்ற தலைவி அறிந்தாலோ இல்லையோ என தலைவன் புலம்பித் தவிக்கிறான்.

மேற்கண்ட சூழலில் தலைவன் எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற பாங்கில் கருப்பொருட்கள் இடம் பெறுகின்றன. அந்த வகையில் குறிஞ்சியின் விலங்கான யானை இங்கு தலைவனின் பெருமூச்சிற்கு உவமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக தலைவன் தலைவியின் அகவாழ்வினைப் பதிவு செய்திடும் நிலையில் நேரடியாகவும் உவமையாகவும் கருப்பொருட்கள் இடம் பெற்று உரிய திணையை வெளிப்படுத்துகின்றன.

**1.5.2.6. ஊர்**

உலக உயிரினங்களில் ஓரினமாகத் தோன்றிய மனித இனம் தன் சிந்தனைத் திறத்தால் ஏனைய இனங்களைக் காட்டிலும் பல்வேறு வளர்ச்சி நிலைகளை அடைந்து முன்னேறி வருகிறது. அவற்றுள் நாடோடிகளாக வாழ்ந்த இனம் ஓரிடத்தில் தங்கி, தனக்கான குடியிருப்புகளை அமைத்துக் கொண்டது முதன்மையான செயல்பாடுகளுள் அடங்குவதாகும். அவ்வாறாக அமைந்த குடியிருப்புகளைக் கொண்டிருந்த பகுதிகளை ஒவ்வொரு

பெயரிட்டும் அழைத்துக் கொண்டனர். அதனை '*ஊர்*' என்று அழைத்தனர். அவ்வாறான ஊர்ப் பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயர்களாகவே அமைந்திருக்க வாய்ப்பு உள்ளன. பழந்தமிழகத்திலும் பல்வேறு ஊர்ப் பெயர்கள் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு திணைகளுக்கும் வெவ்வேறு பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அந்த வகையில் குறிஞ்சி நிலத்திற்கு '*சிறுகுடி*' என்று பெயரிட்டு அழைத்தனர்.

**மால்வரை இழிதரும் தூவெள் அருவி**

**கல்முகைத் ததும்பும் பல்மலர்ச்சாரற்**

**சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்**

**நீர் ஓ ரன்ன சாயல்**

**தீஓ ரன்ன என் உரன் அவித்தன்றே** (குறுந்.95)

என்ற பாடலில் பெரிய மலையிலிருந்து கீழே விழுகின்ற தூய வெண்மையான அருவி கல் குகைகளிடையே விழுந்து பொங்கி ஓடிவரும். பல மலர்களையுடைய அழகிய மலைச்சாரலில் சிற்றூரின் குறவனது பெரிய தோள்களை உடைய தலைவி நீரைப் போன்ற தண்மையான சாயலை உடையவள். அந்நீர்ச் சாயல் தலைவனின் நெருப்புப் போன்ற மன வலிமையை இழக்கச் செய்துவிட்டதாகத் தலைவனின் கூற்று அமைகிறது. இதில் தலைவனின் திடமான வலிமை, தலைவியின் மென்மைத் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய காதல் உணர்வுகள் வெளிப்படுகின்றன. அந்த நிலையில் தலைவியின் ஊரான குறிஞ்சி நிலத்தினைக் குறிப்பிடும்பொழுது '*சிறுகுடி*' என்று பதிவு செய்வதினை அறியமுடிகிறது. ஒரு திணைக்கு வழங்கப்படுகின்ற ஊர்ப் பெயர்கள் பிற திணைக்கு வழங்கப்படுவதில்லை. ஆதலால் இப்பாடலில் இடம் பெறும் '*சிறுகுடி*' என்ற சொல்லால் இது குறிஞ்சித் திணையைத் தான் குறிப்பிடுகிறது என்பதில் ஐயமில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 1.5.2.7. நீர்நிலை

உயிரினங்களின் வாழ்விற்கு நீர் ஆதாரமாகும். நீர் இல்லாவிடில் எவ்வித செயல்பாடுகளும் நடைபெறாது.

**"நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**

**வான்இன்று அமையாது ஒழுக்கு"**[49] (குறள்.20)

என்பார் வள்ளுவர். ஆதலால் உயிர்களின் வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் உறுதுணையானது நீர் ஆகும். பழந்தமிழ் சமூகத்திலும் நீரின் பயன்பாட்டினை

நன்கு அறிந்திருந்தனர். திணை சார்ந்த மக்களும் தங்களின் நீர் நிலைக்கு ஏற்ப அவற்றிற்கு பெயரிட்டு அழைத்துக் கொண்டனர்.

**அம்ம, வாழி, தோழி! நம் மலை,**
**மணிநிறம் கொண்ட மாமலை வெற்பில்**
**துணிநீர் அருவி நம்மோடு ஆடல்**
**எளிய மன்னால், அவர்க்கு; இனி,**
**அரிய ஆகுதல் மருண்டனென், யானே. (ஐங்.224)**

என்ற பாடல் தலைவி கூற்றாய் அமைகிறது. பக்க மலைகள் நீலமணி போன்ற நிறமுடையவை. அவற்றிலிருந்து தெளிந்த நீர் அருவி ஒழுகுகிறது. அவ்அருவியில் தலைவரோடு நீராடுவது முன்பு எளிதாக இருந்தது. இனி அரிதாகும் என்பதை எண்ணி தோழியிடம் தலைவி வருந்துகிறாள்.

**அம்ம, வாழி, தோழி! பைஞ்சுனைப்**
**பாசடை நிவந்தபனிமலர்க் குவளை**
**உள்அகம் கமழும் கூந்தல் மெல்லியல்**
**ஏர்திகழ் ஒள்நுதல் பசத்தல்**
**ஓரார் கொல்நம் காத லோரே? (ஐங்.225)**

என்ற பாடல் தோழி தலைவியிடம் கூறுவதாக அமைகிறது. தலைவன் தலைவியை விட்டுப் பிரிகிறான். தலைவியால் இந்தப் பிரிவை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இதனால் அவளுடைய ஒளி பொருந்திய நெற்றி பசலை கொள்கிறது. தலைவியின் ஒளி பொருந்திய நெற்றிக்கு உவமையாக பசுமையான சுனையில் பசுமையான இலைகளுக்கு இடையே உயர்ந்து தோன்றும் குளிர்ந்த குவளை மலரின் உள்ளகம் கூறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பாடல்களில் குறிஞ்சி நிலத்திற்குரிய நீர் நிலையாகக் கருதக்கூடிய *'அருவியும்' 'சுனையும்'* இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன. மலைசார்ந்த பகுதியில் மழைப் பொழிவு ஏற்பட்டு மேலிருந்து கீழாக அருவியாக நீர் கொட்டுவது குறிப்பிடப்பட்டுள்ளது. மலையின் பள்ளங்களில் தங்கிய நீர் சுனையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அருவியும், சுனையும் குறிஞ்சி நிலம் சார்ந்த திணைக்கே உரிய கருப்பொருளாகும். எனவே அருவியும் சுனையும் திணை வெளிப்படுத்துவதில் முதன்மையான பங்காற்றுகின்றன.

### 1.5.2.8. பூ

*மலர்ப்பண்பாடு தமிழ்ச் சமூகத்தில் காலங்காலமாக இருந்து வரும் நடைமுறையாகும். இறைவனுக்காக வழிபாட்டில் பலியிடக்கூடிய வன்முறை வழிபாடும், பூவும் புகையும் இட்டு வழிபடும் மென்முறை வழிபாடும் தொடர்ச்சியாக காணப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மலர்கள் முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்படுகின்றன. திணை சார்ந்த மலர்கள் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றன. அந்த அடிப்படையில் குறிஞ்சி நிலத்திற்குரிய மலர்களில் வேங்கை, குறிஞ்சி, காந்தள் முதலிய மலர்கள் அமைகின்றன. மலரைப் பற்றிக் குறிப்பிடும் வேளையில் கபிலர் குறிப்பிடும் குறிஞ்சி மலர்கள் திணைக்கு அழகு சேர்க்கின்றன.*

**.......................................... வள்இதழ்,**

**ஒண் செங்காந்தள், ஆம்பல், அனிச்சம்,**

**தண் கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,**

**....................................................**

**நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,**

**மா இருங்குருந்தும், வேங்கையும் பிறவும்,**

**அரக்கு விரித்தன்ன பருஏர் அம் புழகுடன்,**

**மால்அங்கு உடைய மலிவனம் மறுகி,**

**வான் கண் கழீஇய அகல் அறைக் குவைஇ, (குறி.பா.61-98)**

*என்று குறிஞ்சி நிலத்தில் மலர்களைப் பட்டியலிடுகிறார் கபிலர்.*

#### 1.5.2.8.1. வேங்கை

*'வேங்கை என்னும் சொல் வேங்கை மரத்தினையும் குறிக்கும், புலியினையும் குறிக்கும். சொல்லளவில் மட்டும் அன்றி வேங்கை மரம் பூத்துக் குலுங்கும் நிலையிலும் புலிபோலத் தோன்றுதல் உண்டு.'*[50]

*குறிஞ்சி நிலத்தில் வேங்கை மலர் குறிப்பிடத்தக்க நிலையினைப் பெறுகிறது.*

**யாம் எம் காமம் தாங்கவும் தாம்தம்**

**கெழுதகை மையின் அழுதன தோழி**

**கன்று ஆற்றுப் படுத்த புன்தலைச் சிறாஅர்**

**மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி**

**ஏறாது இட்ட ஏமப் பூசல்**

**விண் தோய் விடரகத்து இயம்பும்**

**குன்ற நாடற் கண்ட எம் கண்ணே (குறுந்:241)**

என்ற பாடலில் இடைச் சிறுவர் மன்றத்தில் உள்ள வேங்கை மரத்தின் கீழிருந்து அதன்மீது ஏறாமலே பூக்கள் உதிர்வதற்காகப் புலி புலி என்று கூவினர். அவ்வினிய ஆரவார ஒலி விண்ணளவு உயர்ந்த மலைப் பிளவுகளில் எதிரொலிக்கும் குன்ற நாடனாகிய தலைவனைக் கண்ட தலைவியின் கண்கள் காமத்துயரைப் பொறுத்திருந்தாலும் காதலாகிய நட்பு உரிமையால் கண்கள் தாமே அழுதனவாக தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்கு தாங்கிக் கொள்ள இயலாத காமத்துயர் வாட்டுகிறது. அந்த சூழலில் அவளின் துயரத்தைத் தோழியிடம் கூறும் வேளையில் சுற்றுச் சூழலை மையமிடும் நிலையில் கருப்பொருளாக வேங்கை மலரானது குறிப்பிடப்படுகிறது. மலைசார்ந்த நிலத்தில் வேங்கை மலர் திணை வெளிப்பாட்டை இவண் வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 1.5.2.8.2. காந்தள்

குறிஞ்சி நிலத்தில் காணப்படும் மலர்களுள் காந்தள் மலரும் ஒன்றாகும். காந்தள் மலரானது பெண்களின் கைவிரலுக்கு உவமையாக இலக்கியத்தில் குறிப்பிடும் அளவிற்கு ஐந்து இதழ்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

**சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா**

**அலங்குகுலைக் காந்தள் தீண்டி, தாதுஉக,**

**கன்றுதாய் மருளும் குன்ற நாடன்**

**உடுக்கும் தழை தந்தனனே (நற்.359 : 1-4)**

சிறிய கொம்பினை உடைய காட்டுப் பசு மலையில் மேய்ந்து கொண்டிருந்தது. அவ்விடத்தில் அசையும் குலையை உடைய காந்தள் மலரை அப்பசு தீண்டியதால் காந்தளின் தாது பசுவின் மீது உதிர்ந்தது. தாதினைத் தன்மேல் உதிர்த்த தாயை அறியாமல் கன்று மயங்கியது. அத்தகைய மலைநாடனாகிய தலைவன் தனக்கு இன்று உடுத்தும் ஆடையைத் தந்ததாகத் தோழி கூறினாள்.

மேற்கண்ட பாடலில் காந்தள் மலர்கள் மிகுந்து இருக்கும் நிலை நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. காந்தள் மலரின் தாதானது பசுவின் மீது உதிர்ந்ததால் கன்றிற்கு அடையாளம் தெரியாத நிலை ஏற்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, அடையாளம் தெரியாத நிலை

உருவாக்கக்கூடிய வகையில் மிகுதியான எண்ணிக்கைகளைக் கொண்டதாக காந்தள் மலரானது அந்த நிலப்பகுதியில் அமைந்து இருந்தது என்பதை மேற்கண்ட பாடல் புலப்படுத்துகிறது. குறிஞ்சித் திணைக்குரிய காந்தள் மலரானது எண்ணிக்கையில் மிகுந்து அம்மலர் சார்ந்த இடத்தினை, திணையினை நன்கு வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இவ்வாறாக, குறிஞ்சி நிலத்திற்குரிய மலர்களான வேங்கை, குறிஞ்சி, காந்தள் ஆகிய மலர்கள் கபிலர் தம் பாடலில் அமைந்து, அவை சார்ந்த திணையினை நன்கு வெளிப்படுத்தியுள்ளது.

### 1.5.2.9. மரம்

“மர இனம் அதன்கண் அமைந்திருக்கும் வலிமையுடைய உள்ளீட்டைக் கொண்டே வரையறுக்கப்படுகிறது. திண்மையான உள்ளீட்டை உடையதும் பல்லாண்டுகள் வாழ்வதும் பதினைந்திலிருந்து இருபதடி உயரமேனும் வளர்வதுமாகிய தாவரம் மரம் என்று தாவரவியலார் குறிப்பிடுவர். இம்மரவகையைத் தொல்காப்பியர் கருப்பொருளுள் ஒன்றாக குறிப்பிட்டுள்ளார். இம்மரங்கள் ஐந்திணைகளிலும் மனித வாழ்வோடு தொடர்பு பெற்றுள்ளன.”[51]

பழந்தமிழ்ச் சமூகம் இயற்கைச் சார்ந்த வாழ்க்கையினை வாழ்ந்தது. அந்த வகையில் தாவரங்களைத் தங்களின் உறவாகத் தமிழர் காலங்காலமாகக் கருதி வந்த நிலையை இலக்கியங்கள் வழியாக அறியலாம்.

**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று,**

**அன்னை கூறினள், புன்னையது நலனே**

**அம்ம நாணுதும் நும்மொடு நகையே; (நற்.172)**

என்ற பாடலில் தலைவனும் தலைவியும் தனிமையில் புன்னை மரத்தடியில் சந்திக்கிறார்கள். அந்தப் புன்னையை தலைவியின் சகோதரியாகத் தாய் கூறி வளர்த்து வருகிறாள். அந்த நினைவு தலைவனோடு இருக்கும்பொழுது தலைவிக்கு வருகிறது. அந்தச் சூழலில் அதற்குமேல் தலைவனோடு தன் சகோதரியாகக் கருதக்கூடிய புன்னை மரத்தடியில் இருக்க தலைவி நாணம் கொள்கிறாள்.

**“வருந்து நீர்மைஅம் மாதவர் பள்ளியுள்**

**குருத்தம் ஏறிய கூஅரும் பார்முல்லை**

**பொருந்து கேள்வரைப் புல்லிய பொன்னனார்**

**மருங்கு போன்று அணி மாக்கவின் கொண்டதே"[52] (சீவக.1195)**

என்ற பாடலில் 'தவச்சாலையில் குருந்த மரத்தைச் சுற்றி கூரிய அரும்புகள் நிறைந்த முல்லைக்கொடி படர்ந்து இருந்தது. இது பார்ப்பதற்கு தன் மனம் விரும்பிய கணவரைத் தழுவிய பொன் போன்ற மகளிரது வடிவம் போல பேரழகுடையதாய்க் காட்சி அளித்தது' என்று மேற்கண்ட பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, தாவரங்களைத் தமிழர் தன் இனமாகக் கருதிய நிலையினை அறியலாம். அத்தகு தாவரங்கள் திணை சார்ந்து இடத்திற்கேற்ப அமைந்து இருந்தன.

### 1.5.2.9.1. சந்தனம்

தமிழ்ச் சமூகத்தில் அன்றிலிருந்து இன்று வரை சந்தன மரம் ஓர் உயர்ந்த நிலையினையே அடைந்து வந்திருக்கிறது.

**நின்ற சொல்லர்; நீடு தோறு இனியர்;**
**என்றும் என்தோள் பிரிபு அறியலரே;**
**தாமரைத் தண்தாது ஊதி, மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீம்தேன் போல;**
**புரைய மன்ற, புரையோர் கேண்மை; (நற்.1 : 1-6)**

ஒரு தலைவி தன்னுடைய தலைவனின் நற்பண்புகளைப் பற்றிக் கூறுகின்ற பாடலாக மேற்கண்ட பாடல் அமைகிறது. 'தலைவன் சொன்னபடி நடப்பவர், சொன்னதைச் செய்பவர், நினைக்க நினைக்க இனியவர், எக்காலத்தும் என் தோள்களைப் பிரியாதவர். வண்டானது தாமரையிலுள்ள தாதுவினை ஊதித் தேனை எடுத்து உயர்ந்த சந்தனமரத்தில் தொடுக்கும். அந்தத் தேனைப் போன்றது; தன் தலைவனோடு கொண்டிருக்கக்கூடிய அன்பானது உயர்வானது' என்று தலைவி குறிப்பிடுகிறாள்.

தன்னுடைய காதலின் உயர்வைச் சொல்லுகின்ற வேளையில் அதனைச் சிறப்பிக்கும் வகையில் உயர்ந்த சந்தன மரத்திலே தொடுக்கக்கூடிய தேன் போன்றது என்று தலைவி குறிப்பிடுகிறாள். தேனீயானது ஈக்களை போலல்லாமல் பூக்களிலே மட்டும் அமர்ந்து தேனைச் சேகரிக்கக் கூடியதாகும். அந்நிலையில் உயர்வான தேனீயானது தான் சேகரிக்கக் கூடிய தேனையும் உயர்ந்த சந்தன மரத்திலே சேகரிப்பதாகத் தலைவி குறிப்பிடுகிறாள். எனவே சந்தன மரமும் உயர்வாகக் கருதப்படுகிறது. அந்த

வகையில் மலைப்பகுதியில் சந்தன மரமானது குறிஞ்சி நிலத்தை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

**1.5.2.9.2. அகில்**

குறிஞ்சி நிலத்தின் மரங்களில் அகிலும் அடங்குகிறது. மணமிக்க மரமான அகில் மரம் மலைப்பகுதிகளில் சிறப்பு பெறுகிறது.

**சாத்த மரத்த பூழில் எழுபுகை**

**கூட்டுவிரை கமழும் நாடன்**

**அறவற்கு எவனோ, நாம் அகல்வு? அன்னாய்!** (ஐங்.212)

என்ற பாடலில் சந்தன மரங்களுக்கிடையே உள்ள அகில் கட்டையின் இணைந்த மணப்புகையும் சந்தனப் பூக்களும் இரண்டும் இணைந்து நறுமணத்தோடு சேர்ந்து ஒரு புதுவகை மணம் ஏற்படக் காரணமாக மலைநாட்டுத் தலைவன். அறப்பண்புகள் நிறைந்த சான்றோனாக விளங்குகின்றான் என்று தலைவனின் உயர்வு குறிப்பிடப்படுகிறது.

தலைவனின் உயர்வினைக் குறிப்பிடும்போது நறுமணம் மிக்க மரங்களைப் பற்றி கபிலர் குறிப்பிடுகிறார். அத்தகு வகையில் தலைவனின் பண்புகளும் விரும்பக்கூடியதாக அமைகிறது. எனவே தலைவனின் சிறந்த பண்பினைக் குறிப்பிடும் வேளையில் விரும்பத்தக்க அகிலும் 'பூழில்' என்ற பதத்தால் குறிப்பிடப்படுகிறது. அகிலும் திணை வெளிப்பாட்டை விளக்கி அமைகிறது.

**1.5.2.9.3. அசோகு**

குறிஞ்சி நில மரங்களில் அசோகு எனும் மரமும் அடங்குகின்றது. தலைவன் தலைவியின் அகவாழ்வில் வெளிப்படும் நிலையில் கருப்பொருள்கள் இன்றியமையாததாகின்றன. அந்த வகையில் சுற்றுச்சூழலை விளக்கிடும் நிலையில் மரங்களைப் பற்றி குறிப்பிட வேண்டியும் உள்ளது.

**புள்ஆர் இயத்த விலங்குமலைச் சிலம்பின்,**

**வள் உயிர்த் தெள்விளி இடை இடைப் பயிற்றி,**

**கிள்ளை ஓப்பியும் கிளை இதழ், பறியா,**

**பைவிரி அல்குல் கொய்தழை தைஇ,**

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

**எரி அவிர் உருவின் அம்குழைச் செயலைத்**

**தாதுபடு தண்நிழல் இருந்தனம் ஆக,** (குறி.பா.99-105)

என்ற பாடலில் தலைவி மற்றும் தோழியின் செயல்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன. மலர்களைப் பாறையில் குவித்தனர். பறவைகளையும், கிளிகளையும் ஓட்டினர். புற இதழ்களை நீக்கித் தழை ஆடை செய்தனர். பறித்த மலர்களை மாலைகளாக தொடுத்து கரிய கூந்தலில் சூடினர். பின்பு நெருப்புப் போன்ற தளிர்களையுடைய அசோக மரத்தின் அடியில் குளிர்ந்த நிழலில் தங்கியதாக மேற்கண்ட பாடலில் கூறப்பட்டுள்ளது.

மலைநாட்டில் வளர்ந்திருக்கும் அசோக மரத்தின் கீழாக தலைவியும் தோழியும் நிற்பதாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிலம் சார்ந்த மரமாக அசோகு இங்கு காட்டப்பட்டுள்ளது. "செயல்" எனும் சொல்லால் அசோகு மரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**1.5.2.9.4. மூங்கில்**

மலை சார்ந்த இடத்தில் ஓங்கி வளரும் புல் இனத்தைச் சார்ந்த தாவரம் மூங்கிலாகும். இயற்கைச் சார்ந்த சுற்றுச் சூழலினைக் குறிப்பிடும் நிலையில் சங்க இலக்கியத்தில் மூங்கில் இடம் பெறுகிறது.

**பலவில் சேர்ந்த பழம்ஆர் இனக்கலை**
**சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்**
**செருஉறு குதிரையின் பொங்கிச் சாரல்**
**இருவெதிர் நீடுஅமை தயங்கப் பாயும்**
**பெருவரை அடுக்கத்துக் கிழவோன் என்றும்**
**அன்றை அன்ன நட்பினன் : (குறுந். 385)**

பலா மரத்தில் உள்ள பழங்களைத் தின்னும் ஆண் குரங்குக்கூட்டம் வேட்டுவனின் அம்புக்குப் பயந்து போர்க்களத்தில் குதிரைகள் குதிப்பது போல மலைச்சாரலில் உயர்ந்த மூங்கிலின் கொம்பில் பொங்கி எழுந்து பாயும் மலைகளை உடைய தலைவன் முதல் நாள் போன்றே என்றும் நட்பினன் என்று தலைவி குறிப்பிடுகிறாள்.

அகவாழ்வின் நிலைகளைக் குறிப்பிடும் வேளையில் நேரடியாக செய்திகளைக் குறிப்பிடாமல் உவமையாக, உள்ளுறையாக, இறைச்சியாக செய்திகள் அமைவதுண்டு. அது போன்ற காட்சிகள் அகவாழ்வின் சூழலை விளக்குகின்றன.

பலா உயிர்களுக்குரிய உணவாகும். அவற்றைத் தின்னவரும் குரங்குகளை வேட்டுவன் துரத்துகிறான். பலாவாக தலைவியும், குரங்காக தலைவனும்,

வேட்டுவனாக ஆரவாரமுடையவரும் உள்ளுறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உள்ளுறையில் குறிஞ்சி நிலத்தின், புல் இன தாவரமாகிய மூங்கில் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அகவாழ்வினை வெளிப்படுத்த கருப்பொருட்கள் முதன்மையாக அமைகின்றன என்பதை அறியலாம்.

### 1.5.2.10. உணவு

ஒவ்வொரு உயிரினங்களும் முதன்மையான இரண்டு பணிகளை மேற்கொள்கின்றன. அவை உணவு தேடுதலும் தன் இனத்தைப் பெருக்குதலுமேயாகும். எனவே உயிரினங்களின் உயிர்ப்புத் தன்மைக்கு முதன்மையாக அமைவது உணவாகும். அந்த உணவை தீர்மானிப்பது அந்தந்த இடம் சார்ந்த இயற்கை அமைப்பாகும். மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலத்தின் உணவாக தேனும் தினையும், பழமும், கிழங்கும், மலை நெல்லும், மூங்கிலரிசியும் அமைகின்றன. “விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்து நாளடைவில் விலங்கு வாழ்வினின்றும் வேறுபட்ட நாகரிக வாழ்வைத் தொடங்கிய இடமும் குறிஞ்சி நிலப்பகுதியெனலாம். மூங்கில்கள் உரசுவதால் நெருப்பு உண்டாவதைக் கண்டே நெருப்பை உண்டாக்கிக் கொள்வதற்குத் தீக்கடைக்கோலைக் கண்டுபிடித்துக் கொண்டதும் இங்கேதான். விலங்குகளை வேட்டையாடி அவைகளைக் கொன்று உணவாக்கி, உண்ண ஆரம்பித்ததிலிருந்து உணவுப் பொருள்கள் பற்றிய இவர்களது அறிவு விரிவுபட ஆரம்பித்தது. சிறுமியர் தினைப்புனங்காத்தலும், ஆடவர் வேட்டையாடுதலும் பொழுது போக்கோடு உணவை பெற்றனர்”[53] இந்த உணவுகள் அந்தந்த இயற்கையமைப்பை ஒட்டியதாக அமைகின்றன. “ஒரு நாட்டின் இயற்கையமைப்பு மக்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்துவதோடு அமையாது மாற்றியும் அமைக்கின்றது. தாவரங்கள் தோன்ற முடியாத துந்தரப்பகுதி வாழ் மக்களைப் புலால் உணவு உண்ணுமாறு இயற்கையமைப்புக் கட்டாயப்படுத்துகிறது என்பது கருதத்தக்கதாகும்.”[54] உணவு மட்டுமின்றி, உடை தொழில், உயிரினங்கள் போன்ற வாழ்வியல் நிலைகள் அனைத்தையுமே தீர்மானிப்பது இயற்கையமைப்பேயாகும்.

மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தில் மலை நெல்லை விதைத்து பயிர் செய்து வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

**அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்**

**பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும்**

**காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பின்**

**கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்து உண்ணும் (குறுந்.100:1-4)**

*என்ற பாடலில் 'அருவி பாய்கின்ற நிலப் பரப்பில் மலை நெல்லை விதைத்து, அகன்ற இலையை உடைய காட்டு மல்லிகையையும் பசுமையான மரம் செடியையும் களையெடுத்துப் பயிர்செய்யும் செங்காந்தளை வேலியாக உடைய சிற்றூரில் உள்ளவர்கள் பசித்தால் ஆண் யானையின் தந்தத்தை விற்று அதனால் கிடைக்கும் பொருளைக் கொண்டு உண்பர்' என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது. மலைப்பகுதியில் மக்கள் மலை நெல்லை விதைத்து அருவி நீரால் விளைச்சலைப் பெருக்குபவர்கள் ஆவர். அதனையே உணவாகச் கொள்ளுவர் என்பதனை,*

**மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி**

**அருவியின் விளைக்கும் நாடனொடு (குறுந்.371)**

*என்னும் குறுந்தொகை அடிகள் உரைக்கின்றன. மலையில் வாழும் குறிஞ்சி நில மக்கள் ஐவனம் என்னும் நெல்லை உணவாகக் கொள்வர் என்பதைப் பின்வரும் குறுந்தொகை அடிகளும் உரைக்கின்றன.*

**அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்**

**பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும் (குறுந்.100)**

*எனவே, மலை சார்ந்த குறிஞ்சி நில மக்கள் அந்தப் பகுதிகளில் நெல்லை விதைத்து, களையெடுத்து வேலி அமைத்து பயிர் செய்யக் கற்றிருந்தனர் என்பது இதன் வழியாக தெரிய வருகிறது. ஆகவே மலை வாழ் மக்களின் உணவாக மலை நெல்லானது அமைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

**1.5.2.10.1. தினை**

*குறிஞ்சி நிலத்தின் உணவில் தினையும் அமைகிறது. அத்தினையுணவு அந்நிலம் சார்ந்த மக்கள் மட்டுமின்றி ஏனைய உயிரினங்களுக்கும் உணவாகப் பயன்பட்டிருக்கின்றன. மலைப் பகுதியில் வளரக்கூடியதாக தினைகள் அமைந்திருக்கின்றன.*

**தா அய் இழந்த தழுவரிக் குருளையொடு**
**வளமலைச் சிறுதினை உணீஇ, கானவர்**
**வரை ஓங்கு உயர்சிமைக் கேழல் உறங்கும்**
**நல்மலை நாடன் பிரிதல்**
**என் பயக்கும்மோ நம் விட்டுத் துறந்தே? (ஐங்.268)**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலில் ‘தாயை இழந்த, நெருங்கிய வரிகளை உடைய இளங்குட்டியுடன் வளமான மலையில் விளைந்த சிறு தினையின் கதிர்களை உண்டு, கானவர் வாழும் உயர்ந்த மலை உச்சியில் ஆண் பன்றி உறங்கும் தன்மையுடைய மலைநாட்டுத் தலைவன் தலைவியை விட்டு நீங்குவதால் பயன் யாது’ எனத் தோழி கேட்கிறாள்.

மலைப்பகுதிக்குரிய உணவுப் பயிராக தினைகள் விளைந்திருப்பது இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மலைப்பகுதியில் விளையும் மலை நெல்லும் தினைகளும் குறிஞ்சி நிலத்தை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

### 1.5.2.11. யாழ்

மனித இனம் என்றைக்கு சிந்திக்கத் தொடங்கியதோ அன்றிலிருந்தே பல்வேறு வளர்ச்சி நிலையை மனித இனம் பெற்று வளர்ந்திருக்கிறது. பல்வேறு கலைகள் வளர்ந்திருக்கிறது. அந்த வகையில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் இசைக்கலையில் நன்கு தேர்ச்சி பெற்று விளங்கியிருக்கின்றனர்.

**கான மான் அதர் யானையும் வழங்கும்;**
**வானமீமிசை உருமும் நனி உரறும்;**
**அரவும் புலியும் அஞ்சுதகவு உடைய,**
**இரவழங்கு சிறுநெறி தமியை வருதி –**
**வரைஇழி அருவிப் பாட்டொடு பிரசம்**
**முழவுசேர் நரம்பின் இம்மென இமிரும்,**
**பழவிறல் நனந்தலைப் பயமலை நாட! (அகம்.318)**

என்ற பாடலில் காட்டில் விலங்குகள், யானைகள், புலிகள் திரிகின்றன. சில வேளைகளில் இடி இடித்து மழை பெய்யும். மலையில் இருந்து அருவி விழுகின்ற ஓசையுடன் வண்டினங்கள் இணைந்து ஒலிப்பது தண்ணுமையுடன் யாழ் நரம்பின் இசை போல இம்மென்று ஒலிக்கும். இத்தகைய இயற்கை வளமுடைய அகன்ற பரப்பினை உடைய பயன் மிகுந்த மலைநாட்டுத் தலைவனை நோக்கி ‘இரவில் தனியாக துணையின்றி வருகின்றாயே’ எனத் தோழி கேட்பதாக அமைகிறது.

இதில் வண்டினங்கள் ஒலிப்பது யாழ் நரம்பின் இசையைப் போல இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உவமையாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள

செய்தியானது பழங்கால மக்கள் இசைக்கலையினை அனுபவித்த நிலையை இது வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

**கடம்பு கொடி யாத்து, கண்ணிசூட்டி,**

**வேறுபல் குரல ஒரு தூக்கு இன்இயம்**

**காடுகெழு நெடுவேட் பாடுகொளைக்கு ஏற்ப,**

**அணங்கு அயர் வியன்களம் பொலிய . . . (அகம். 382 : 3-6)**

என்ற பாடலில் 'கடம்ப மரத்தில் கொடியினைக் கட்டி கண்ணிகள் சூட்டி, பல்வேறு குரலுடைய தாளத்தின் வழிபடும் ஒரே மாதிரியான இசையுடைய வாத்தியங்களைக் கொண்டு காட்டிலுள்ள முருகனைப் பற்றி பாடும் பாட்டுக்கு ஏற்ப ஆடுவர்' என்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

இதிலும் இசைக்குரிய தாளங்கள் விளக்கமாக எடுத்தாளப்பட்டுள்ளதை அறியலாம். எனவே, குறிஞ்சித்திணைக்குரிய தாள அமைப்புகள், யாழ் குறித்த செய்திகள் மேற்கண்ட பாடல்களில் இடம்பெற்று திணை வெளிப்பாடு நன்கு வெளிப்பட்டுள்ளதை அறியலாம்.

### 1.5.2.12. தொழில்

ஒவ்வொரு உயிரினமும் ஏதேனும் ஒரு நோக்கில் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. அதில் மாந்த இனம் உணவிற்காகவும், மகிழ்விற்காகவும், சூழ்நிலைக்காகவும் என பல்வேறு நிலைகளில் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. 'ஓரிடமிருந்து வேறோரிடம் எளிதாகச் செல்ல வசதியின்மையாலும் தாம் பழகிய இடங்களை விட்டுப் பிரிந்து செல்ல விருப்பமின்மையாலும் சமூகக் குழுக்கள் அந்தந்த இடங்களிலே நிலைத்து விட்டன. ஆதலால் அவ்வவ்விடங்களுக்கு ஏற்ற தொழில்களையே மேற்கொண்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.'[55] அந்த வகையில் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தில் இடத்திற்கேற்பவும், மக்களின் எண்ணங்களுக்கேற்பவும் தொழில் நிலைகள் அமைகின்றன. வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினைகாத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், அருவி நீராடல், சுனை நீராடல் என்பதாக குறிஞ்சி நிலம் சார்ந்த தொழில்கள் அமைகின்றன.

#### 1.5.2.12.1. வெறியாடல்

**"வெறியாடல் என்பது தலைவன் தலைவியின் அக வாழ்வின் செயல்பாடுகளுள் ஒன்றாகும். வெறி என்பதற்கு அச்சம், சூடு, கலக்கம்,**

**கள், சினம், விரைவு, நாற்றம், பிசாசம், வட்ட வடிவு, நோய், வெறியென்னேவல், வேலனாடல், வெறியாட்டு மயக்கம், மணம், முருகன் பூசை என்று பொருள் தருகிறது”[56]**

*இறைத் தன்மை தன்னிடம் தோன்றியதாக எண்ணிக் கொண்டு ஆடும் ஆட்டமே வெறியாட்டாகும். ‘சங்ககால மக்கள் பலி கொடுத்து செய்த வழிபாட்டின் வளர்ச்சியே வெறியாட்டாகும். இது சங்க மக்களின் அக வாழ்வில் மிக இன்றியமையாத திருப்பு முனையாகும். முருகன் வேலன் என்னும் பூசாரி வடிவில் வெளிப்படுவான் என்ற நம்பிக்கையே இதற்கு அடிப்படையாகும்.’[57]*

*தலைவனும் தலைவியும் தனிமையில் சந்தித்து காதல் கொள்கிறார்கள். சில காலங்கள் செல்கின்றன. தலைவன் தலைவி சந்திப்பதில் தடை ஏற்படுகிறது. ஆதலால் தலைவிக்கு பசலை நோய் படர்கிறது. சிந்தனை முழுதும் தலைவனிடமே இருப்பதால் தலைவியின் செயல்பாடுகளில் மாற்றங்கள் தெரிகின்றன. இதனை தெய்வக் குற்றமாகத் தாய் கருதுகிறாள். அதற்கானத் தீர்வாக தெய்வத்தின் முன் நிகழ்த்தக் கூடியதே வெறியாட்டாகும்.*

**முறஞ்செவி யானைத் தடக்கையின் தடைஇ,**
**இறைஞ்சிய குரல பைந்தாட் செந்தினை,**
**வரையோன் வண்மை போல, பல உடன்**
**கிளையோடு உண்ணும் வளைவாய்ப் பாசினம்!**
**குல்லை, குளவி, கூதளம், குவளை,**
**இல்லமொடு மிடைந்த ஈர்ந்தண் கண்ணியன்,**
**சுற்றுஅமை வில்லன், செயலைத் தோன்றும்**
**நல்தார் மார்பன், காண்குறின், சிறிய**
**நற்குஅவற்கு அறிய உரைமின்; பிற்றை**
**அணங்கும் அணங்கும் போலும்? அணங்கி**
**வறும்புனம் காவல் விடாமை**
**அறிந்தனிர் அல்லிரோ, அறன்இல் யாயே? (நற்.376)**

*என்ற பாடலில் ‘முறம் போன்ற காதையுடைய யானையின் பெரிய துதிக்கையைப் போலப் பருத்துத் தலை தாழ்ந்த கதிர்களையும் பசுமையான*

அடித்தண்டையும் கொண்ட செந்நிறத் தினைப் பயிரை வரையாது கொடுப்பவரின் வள்ளல் தன்மை கருதி வரும் பரிசிலர் போலப் பலவாகிய சுற்றத்தோடு வந்து தின்னும் பசிய கிளிகளே! தலைவனோடு முன்பு இணைந்து நீங்கியப் பின்னர் அறநெறியில் நில்லாத எங்கள் தாய் எம்மை வருத்தி காவலற்ற தினைப்புனத்தைக் காவல் செய்ய விடாமல் வீட்டுக் காவலில் வைத்ததை நீங்கள் அறிவீர்களோ?அந்த நிலையில் தாய் வெறியாட்டு நிகழ்த்துவாள். அதனால் முருகவேளும் எங்களைத் துன்புறுத்துவான். ஆகையால் துளசி, காட்டுமல்லிகை, கூதாளி, குவளை, தேற்றா ஆகிய மலர்களால் புனைந்த மிகக் குளிர்ந்த மாலையை உடையவனும் கட்டப்பெற்ற வில்லை உடையவனும் அசோக மரத்தின் நிழலின் கீழ் நிற்கும் நல்ல மாலை அணிந்த மார்புடைய தலைவனைக் கண்டால் இங்கு நிகழ்ந்த சிலவற்றையேனும் அவனுக்கு அறிவிக்க வேண்டும்' என்று கிளிகளிடம் கூறுவதாகத் தோழி கூற்று அமைகிறது.

தலைவனும் தலைவியும் காதல் கொண்டு பிரிந்திருக்கும் வேளையில் தலைவியின் செயல்பாடுகள் தாய்க்கு மிகுந்த ஐயத்தையும் துன்பத்தையும் தருவதாய் அமைகிறது. அந்தச் சூழலில் தெய்வத்தால் ஏற்பட்ட குற்றம்தான் என தாய் கருதுகிறாள். அதற்காக வேல் கொண்டு ஆடக்கூடிய வேலனிடம் தலைவி நிறுத்தப்பட்டு, ஆவேசம் கொண்ட நிலையில் வேலனால் ஆடக்கூடியதாய் அமைவதே வெறியாட்டு ஆகும். இவ்வாறு நிகழ்த்தப்படும் சடங்கால் தன் மகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நோய் நீங்கும் என்று தாய் கருதுகிறாள். இந்த வெறியாட்டுதல் நிகழ்வு குறிஞ்சி நிலத்திற்குரியதாக அமைந்து திணையினை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

### 1.5.2.12.2. தினை காத்தல்

விருந்தோம்பல் பண்பாடு தமிழருக்குரிய சிறந்த பண்பாடுகளில் ஒன்றாகும். தங்களின் வாழ்வே விருந்தினரைப் பேணுவதற்காக எனக் கருதினர்.

**"இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி**

**வேளாண்மை செய்தல் பொருட்டு"[58] (குறள்.81)**

என்ற குறள் தமிழரின் விருந்தோம்பல் சிறப்பினை உணர்த்துகிறது. அத்தகு விருந்தோம்பலுக்கானத் தானியங்களுக்கு தமிழர் மிகுந்த முக்கியத்துவம் அளித்தனர்.

**"சுடர்நுதல் மட நோக்கின்**

**நேர்இழை மகளிர்உணங்கு உணாக் கவரும்**

**கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை"[59]          (பட்டின.21-23)**

*என்ற பாடலில் நெல்லை உலர்த்திக் கொண்டிருக்கும் பழந்தமிழ்ப் பெண்கள் நெல்லை இரையாக உட்கொள்ள வரும் கோழிகளைத் தங்கள் காதுகளில் அணிந்துள்ள மகரக் குழையைக் கழற்றி எறிந்து விரட்டுவர். இதிலிருந்து 'அம்மக்களின் செல்வச் செழிப்பு நிலையினையும் பொன்னாலான அணிகலன்களைவிட விருந்து படைக்கத் தேவையான தானியத்தைக் காப்பதில் மக்கள் மிகுந்த அக்கறைக் கொண்ட உள்ளார்ந்த நிலையினையும் அறியலாம்'[60] என்பது குறிப்பிடத்தக்கதாகும். தங்களின் வாழ்வே விருந்தினர்களைப் பேணுதல் என்ற நிலையில் வாழ்ந்த தமிழர் மற்ற செல்வங்களைவிட தானியங்களுக்கு அளித்த முன்னுரிமையை அறியலாம். குறிஞ்சி நிலத்திலும் அத்தகு தினைக் காத்தல் முதன்மையானச் செயல்பாடாக அமைந்துள்ளது.*

**முன்றிற் பலவின் படுசுளை மரீஇ,**

**புன்தலை மந்தி தூர்ப்ப, தந்தை**

**மைபடு மால்வரை பாடினள் கொடிச்சி,**

**ஐவன வெண்ணெல் குறூஉம் நாடனொடு**

**சூருடைச் சிலம்பின் அருவி ஆடி,**

**கார் அரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கைப்**

**பாஅமை இதணம் ஏறி, பாசினம்**

**வணர்குரற் சிறுதினை கடிய,**

**புணர்வது கொல்லோ நாளையும் நமக்கே? . . . (நற்.373)**

*என்ற பாடலில் 'வீட்டின் முன்புறத்துள்ள பலாவின் விளைந்த சுளைகளை மென்மையான தலையை உடைய மந்திக் குரங்கு தின்று விதைகளைத் தரையில் உதிர்க்கும். பக்கத்து இருக்கும் கொடிச்சி தன் தந்தையின் மேகங்கள் தவழும் மலையைப் பாடிக் கொண்டு ஐவனமாகிய வெண் நெல்லைக் குத்துவாள். இத்தகைய மலை நாடனோடு பக்கமலையில் விழும் அருவியில் ஆடிக் கரிய நிறத்தைக் கொண்ட அரும்புகள் அவிழ்ந்த கணியனைப் போல காலம் கூறும் வேங்கை மரத்தில் கட்டிய பரப்பு அமைந்த பரண்மீது ஏறி, வளைந்த கதிர்களைக் கொண்ட தினைப்புனத்தில் தினையை உண்ணவரும் கிளி இனத்தை ஓட்டுவோம். வீட்டுக் காவலில் தாம் வைக்கப் பெற்றால் இவ்வாய்ப்பு கிடைக்காது' என்று தோழி ஏங்கித் தவிக்கிறாள்.*

**சுடுபுன மருங்கில் கலித்த ஏனற்**

**படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே**

**இசையின் இசையா இன்பா ணித்தே;**

**கிளி அவள் விளிஎன, விழல்ஒல் லாவே**

**அது புலந்துஅழுத கண்ணே, சாரல்**

**குண்டு நீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை**

**வண்டுபயில் பல்இதழ் கலைஇத்**

**தண்துளிக்கு ஏற்ற மலர்போன் றவ்வே (குறுந்.291)**

*என்ற பாடலில் 'மரம் செடிகளைச் சுட்டுப் பண்படுத்திய நிலத்தில் தழைத்த தினையைக் காக்கும் குறிஞ்சி நிலத் தலைவி கிளிகளை விரட்ட 'குளிர்' என்ற கிளியை ஓட்டும் கருவியால் விரட்டினாள். அக்குளிர் என்ற கருவியின் ஓசை இசை போன்று இருந்ததால் கிளிகள் ஓடாமல் அவ்விசையைக் கேட்டுக் கொண்டிருந்தன. இதனால் வருந்தித் தலைவி அழுதாள். அவள் கண்கள் ஆழமான நீரில் பசுமையான சுனையில் பூத்த குவளை மலரை வண்டுகள் கலைத்துத் தேன் உண்ண முயன்ற நிலையில் துளிகளோடு அம்மலர்கள் தோற்றமளித்தன. அம்மலர்களைப் போன்று இவள் அழுத கண்கள் இருந்தன' என்று தலைவன் கூறுகிறான். 'இயற்கை எழில் நிறைந்த காட்சியையும், ஒப்புமை கண்ட பொருளின் தன்மையையும் ஆழ்ந்து ஆய்ந்த திறத்தால் இவ் உவமைகள் புலவர்களின் மனக் கண்ணில் தோன்றின என்பது கண்கூடு.'*[61]

**ஏனல் அம் சிறுதினை காக்கும் சேணோன்**

**ஞெகிழியின் பெயர்ந்த நெடுநல் யானை**

**மீன்படு சுடர் ஒளி வெரூஉம்**

**வான் தோய் வெற்பன் மணவா ஊங்கே (குறுந்.357 : 5-8)**

*என்ற பாடலில் தினைப்புனத்தில் உள்ள தினையைக் காக்க பரண்மேல் இருக்கும் குறவன் கொளுத்திய கொள்ளிக் கட்டையைக் கண்டு அஞ்சி வானத்தில் எரி நட்சத்திரம் எரிந்து விழும் என்றும் அஞ்சி ஓடும் யானை வாழ்கின்ற வானளாவி உயர்ந்த குறிஞ்சி நிலத்தின் தலைவன் என்று தோழி குறிப்பிடுகிறாள்.*

*மேற்கண்ட பாடல்களில் தினையைக் காப்பதற்காக குறிஞ்சி நில மக்கள் பரண் அமைத்து பறவைகளை விரட்டுகின்றனர். பரண் மேலே கொள்ளிக் கட்டையை எரித்து யானையை அஞ்சி ஓடச் செய்கின்றனர். 'குளிர்' என்ற*

கருவியால் கிளியை ஓட்டுகின்றனர். இவ்வாறாக பல்வேறு வகைகளில் தினையைக் காப்பதற்கு வேண்டிய பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்கின்றனர். தினைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் இதன்வழி கருதத்தக்கதாகும்.

### 1.5.2.12.3. கிழங்கு அகழ்தல்

இயற்கை அமைப்பிற்கேற்பவே உணவு முறைகள் அமைகின்றன. அந்த வகையில் மலைசார்ந்த குறிஞ்சி நிலத்தில் கிழங்குகளை அகழ்ந்தெடுத்து அம்மக்கள் உண்கின்றனர்.

**அன்னாய் வாழி! வேண்டு, அன்னை! கானவர்**
**கிழங்கு அகழ் நெடுங்குழி மல்க வேங்கைப்**
**பொன்மலி புதுவீ தாஅம் அவர்நாட்டு,**
**மணிநிற மால்வரை மறைதொறு, இவள்**
**அறைமலர் நெடுங்கண் ஆர்த்தன பனியே (ஐங்.208)**

என்ற பாடலில் 'அன்னையே வாழ்க! குறிஞ்சி நில மக்கள் நிலத்தைத் தோண்டி கிழங்கு எடுத்தனர். அக்குழிகளில் பொன் போன்ற வேங்கை மலர்கள் நிரம்பின, தலைவன் நாட்டு நீலநிறம் பொருந்திய பெரிய மலை இவள் கண்ணிலிருந்து மறையும்போது அழகிய நீண்டமலர் போன்ற கண்கள் கண்ணீரால் நிறைகின்றன' என்று தோழி கூறுகிறாள்.

ஒவ்வொரு உயிரின் முதன்மையான செயல்பாடுகளில் ஒன்று உணவு தேடுதலாகும். அத்தகைய உணவினை குறிஞ்சி நில மக்கள் பல்வேறு வகைகளில் பெறுகின்றனர். அவற்றில் நிலத்தில் கிழங்கினை விளைவித்து, அதனைத் தோண்டி எடுத்து உண்பது அவர்களின் செயல்பாடாக இருப்பதை மேற்கண்ட பாடல் வெளிப்படுத்துகிறது. கிழங்கு அகழ்தல் குறிஞ்சித் திணைக்குரிய செயல்பாடாக அமைந்து குறிஞ்சித் திணையை வெளிப்படுத்துகிறது.

### 1.5.2.12.4. அருவி நீராடல்

குறிஞ்சி நிலம் சார்ந்த மக்களின் செயல்பாடுகளில் அருவி நீராடுதல் குறிப்பிடத்தக்கதாக அமைகிறது. நீராடுதல் உடலை நல்ல முறையில் வைத்துக் கொள்வதற்குரிய செயல்பாடாகும். நீராடுதலை 'குளித்தல்' என்பர். குளித்தல் என்பது 'உடலைக் குளிர்வித்தல்' என்னும் பொருளில் சொல்லப்படுகிறது. நீராடுதலைத் தூய்மையாகப் பேணக்கூடியதாய் கருதுவதைக் கடந்து

*மகிழ்ச்சிக்குரிய ஒரு விளையாட்டாக பழந்தமிழர் கடைபிடித்திருக்கின்றனர் என்பதை 'புனலாடுதல்' அருவி நீராடல், சுனை நீராடுதல் போன்றவற்றிலிருந்து அறியப்படுகின்றது.*

**பெரும்புனம் கவரும் சிறுகிளி ஓப்பி**

**கருங்கால் வேங்கை ஊசல் தூங்கி,**

**கோடுஏந்து அல்குல் தழைஅணிந்து, நும்மொடு**

**ஆடினம் வருதலின் இனியதும் உண்டோ? (நற்.368)**

*என்ற பாடலில் 'ஐயனே! பெரிதாக அமைந்த தினைப் புனத்தில் உள்ள கதிர்களைக் கொய்து செல்லும் சிறிய கிளிகளை விரட்டிவிட்டோம். கருமையான அடிப்பாகத்தை உடைய வேங்கை மரத்தில் தொடுத்த கயிற்று ஊஞ்சலில் ஏறி ஆடினோம். பின்பு அடிவயிற்றில் கட்டிய தழை உடையுடன் உம்மோடு அருவி ஆடி வருவதை விடவும் வாழ்க்கையில் இனிதாகப் பெறுவது ஒன்று உண்டோ?' என்று தோழி தலைவனிடம் கூறுவதாக அமைகிறது.*

*மேற்கண்ட பாடலில் தலைவன் தலைவியோடு அருவியில் நீராடிய நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. நீரை முகந்து செல்லக்கூடிய மேகங்கள் மலைப்பகுதிகளை அடையும்போது குளிர்ச்சி அடைந்து மழைப்பொழிவு ஏற்படுகின்றன. அந்த நீர் மலையிலிருந்து அருவியாகக் கொட்டுகிறது. எனவே, 'அருவி' என்றாலே அது மலைப்பகுதியை வெளிப்படுத்தி குறிஞ்சித் திணையைக் குறிப்பிடுகிறது என்பதில் ஐயமில்லை.*

### 1.5.2.12.5. சுனை நீராடல்

*மலையின் நீருள்ள பகுதி சுனை என்று அழைக்கப்படுகிறது. சுனை என்பதற்கு "குளம், நீரூற்று, நீரடுத்தவிடம், பசும்புல் தரை" என்று கழகத் தமிழ் அகராதி பொருள் தருகிறது.[61] சுனையில் குறிஞ்சி நில தலைவியும் தோழியும் நீராடிய நிகழ்வு பாடலின்வழி பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

**அண்ணல் நெடுங்கோட்டு இழிதரு தெள்நீர்,**

**அவிர்துகில் புரையும், அவ்வெள் அருவி,**

**தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடி,**

**பளிங்குசொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி,**

**நளிபடு சிலம்பில், பாயம்பாடி,**

**பொன்எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்தஎம்**

பின்இருங் கூந்தல் பிழிவனம் துவரி,

உள்ளகம் சிவந்த கண்ணேம். (குறி.54-61)

என்ற பாடலில் தலைவனின் உயர்ந்த மலையினின்றும் வெண்மையான துகிலைப் போல் வீழ்கின்ற வெள்ளிய அருவியில் நீங்காத விருப்பத்துடன் குறையாது, நீண்ட நேரம் விளையாடி, பளிங்கைச் சொரிந்து வைத்தாற் போன்ற பரந்த சுனையில் நீராடி மகிழ்ந்து, குளிர்ச்சி பொருந்திய மலையில் விருப்பம் போல் பாடினோம். பின்பு நீலமணிபோல் உள்ள தம் முதுகில் கிடந்த பின்னப்பெற்ற கரிய கூந்தலைப் பிழிந்து ஈரம் உலர்த்தினோம். ஆதலால் தம் கண்கள் சிவந்திருந்ததாக தோழி கூற்று அமைகிறது.

மேற்கண்ட பாடலில் தலைவியும் தோழியும் அருவியில் ஆடியதோடு சுனையிலும் நீராடிய நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. அருவி என்றாலே மலைப்பகுதியை மையமிடுவது போலவே சுனை நீராடுதல் என்பதும் மலைப் பகுதியை மையமிடுவதாகவே அமைகிறது. எனவே சுனை நீராடுதலும் குறிஞ்சி மக்களின் செயல்பாட்டினை வெளிப்படுத்தி குறிஞ்சித்திணையை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

இவ்வாறாக அகப்பாடல்களின் கருத்தினைப் புலப்படுத்த கருப்பொருட்கள் பெருந்துணையாக நிற்கின்றன. குறிஞ்சித் திணையின் கருப்பொருட்கள் திணை சார்ந்த வெளிப்பாட்டை நன்கு வெளிப்படுத்துகின்றன. ஆனாலும் திணைக்கான கருப்பொருட்களில் மயக்க நிலைகளும் உண்டு என்பதையும் தொல்காப்பியம் சுட்டிச் செல்கிறது.

### 1.5.3. உரிப்பொருள்

உரிப்பொருள் என்பது திணை சார்ந்த மக்களின் வாழ்க்கைக்குரிய பொருளாகும். அதாவது ஐவகை நில மக்களுக்கும் உரிய ஒழுக்கத்தைக் குறிக்கும். "ஒவ்வொரு நிலத்திலும் உள்ள மக்களின் சிறப்பான பண்பினையும், ஒழுக்கத்தையும் மையமிட்டு அடிக்கருத்தாக உரிப்பொருள் பாடப்பெறும்'' என்பர்"[63]

"அகப்பாடல்களுக்கு முதற்பொருளும் கருப்பொருளும் துணையாக அமைகின்றன"[64] உரிப்பொருளாகிய ஒழுக்கம் நிகழ்தற்கு முதற்பொருள் நிலைக்களமாகவும் கருப்பொருள் அதற்கு உதவுமாறும் செய்யுட்கள் செய்யப்பட்டன. ஆனால் உரிப்பொருளானது முதன்மையாக அமைகின்றது.

''உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே''[65]

(தொல்.பொருள்.959)

என்ற நூற்பா வழியாக ஒரு திணையில் வரும் முதற் பொருளும் கருப்பொருளும் வேறொரு திணையிலும் மாறி வருவதற்கு வாய்ப்புண்டு என்றும் உரிப்பொருள் அவ்வாறு மாறி அமையாது என்றும் தொல்காப்பியர் கூறுகிறார்.

"முப்பொருளில் சிறந்தது எது? முதற்பொருளா? கருப்பொருளா? உரிப்பொருளா? உரிப்பொருளே உயிர்பொருள். உரிப்பொருளை விளக்க வந்தனவே மற்றைய இரண்டும். அவை உடலும், அணிகலன்களும் திணை துறை குறித்தோர் முதற் பொருளுக்கும், கருப்பொருளுக்கும் தலைமை கொடுத்தனர். எனினும் முன்னோர் முதற்பொருள் இல்லாப் பாட்டைக் கட்டினர்; கருப்பொருள் இல்லாப் பாட்டைக் கட்டினர்; ஆனால் உரிப்பொருள் எதுவுமே இல்லாப் பாட்டைக் கட்டினரா எனில் இல்லை. அஃது ஒன்றே உரிப்பொருள் பாட்டின் உயிர்ப்பு என்பதைப் புலப்படுத்தும். எனவே உரிப்பொருளைத் தலைமையாகவும் பிற இரண்டைத் துணைமையாகவும் கொள்ளுதலே இலக்கிய நீதியாகும் என்பர்"[66]

எனவே, உரிப்பொருள் தனிச் சிறப்பினைக் கொண்டிருக்கக் கூடியதாகும். அந்தந்த திணைகளுக்கு உரித்தான அகவாழ்வின் பொருளை வெளிப்படுத்துவது உரிப்பொருளாகும்.

**"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**

**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**

**தேருங் காலை திணைக்குரிப் பொருளே"[67]** (தொல்.பொருள்.960)

என்று ஐந்திணைக்குரிய உரிப்பொருளை தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவை முறையே குறிஞ்சிக்குப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும், முல்லைக்கு இருத்தலும் இருத்தல் நிமித்தமும், நெய்தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும், மருதத்திற்கு ஊடலும் ஊடல் நிமித்தமும் உரிப்பொருளாக அமைவனவாகும்.

ஒரு திணையின் உரிப்பொருளுக்குரிய செயல்பாடு ஏனைய திணையில் தோன்றாமல் இல்லை. இருப்பினும், உரிப்பொருள் சூழ்நிலைகளைப் பொறுத்து சிறப்பின் காரணமாக அந்தந்த திணைக்குரியதாக அமைகின்றது.

"உரிப்பொருள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திணையுடன் இணைத்துக் கூறப்படினும், எல்லாத் திணைகளுக்கும் எல்லா உரிப்பொருள்களும் பொதுமையே. அவ்வந்நிலத்தின் சிறப்புரிமை கருதி, அவ்வந்நிலத்துடன் அவை தொடர்புறுத்தப்படுகின்றன. சான்றாக புணர்ச்சி, எந்நிலத்தும்

இருப்பது. எனினும் மலை நிலம் அதனது குளிராலும் பசுமைத் தழைப்பாலும் இன்புணர்வை ஊட்டுவது; வித்தியாதரக் கந்தர்வர்களும் பிற தெய்வக் கூட்டத்தாரும் மலைக்குளிர்ச்சியில் கூடியுறைவதையே இலக்கியங்கள் சிறப்பித்து உரைக்கின்றன. தற்கால வாழ்விலும் கொடைக்கானல், நீலகிரி, ஏற்காடு போன்ற இடங்கள் புதிய புதிய இணைகளின் புணர்விடங்களாக உள்ளன. எனவே புணர்தலும் புணர்தல் நிமித்தமும், ஏனைய நிலங்களின் பொதுவாகவும், குறிஞ்சிக்குச் சிறப்பு உரிமையாயும் கூறப்பட்டன' என்பது குறிப்பிடத்தக்கதாகும்”[68]

ஆகவே, குறிஞ்சித்திணைக்குரிய உரிப்பொருளாக தலைவன் தலைவி மனதாலும் உடலாலும் கூடிய புணர்ச்சி வாழ்க்கை அமைகிறது. அத்தகு புணர்ச்சி வாழ்க்கையும் எளிதில் அமைந்து விடுவதில்லை. தொடக்கத்தில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உள்ளப் புணர்ச்சி நிகழ்ந்திட வேண்டும். பிறகு தலைவன் குறிஞ்சிக்குரிய சிறுபொழுதான யாமத்தில் பல்வேறு வழித்தடைகளைக் கடந்து சென்று தலைவியைச் சந்திக்கிறான். தலைவியின் மனவோட்டமும் தலைவனைக் கூடுவதிலே நாட்டம் உடையதாகவே அமைகிறது. அந்த நிலைகளைக் கடந்தே குறிஞ்சி நிலத்திற்குரிய உரிப்பொருளான தலைவன் தலைவியின் புணர்ச்சி வாழ்க்கை அமைகிறது. “மலையும் மலைசார்ந்த இடமும் இயற்கை தரும் சூழ்நிலை; புணர்தலும் புணர்தல் நிமித்தமும் மனித உணர்ச்சி தரும் சூழ்நிலை இவ்விரண்டையும் பிரிக்க முடியாதவாறு இணைத்துக் குறிஞ்சித் திணைக்கு உரிய புலனெறி வழக்கத்தை மரபாக்கினர்.”[69] கபிலர் தம் பாடல்களில் உரிப்பொருளை ஐயத்திற்கு இடமின்றி அமைத்து திணையை வெளிப்படுத்துகிறார்.

### 1.5.3.1 இயற்கைப் புணர்ச்சி

தலைவன் தலைவியின் அகவாழ்வில் அன்பினை அடிப்படையாகக் கொண்டு வாழ்வினை மேற்கொள்கின்றனர். அவர்கள் இணைவதே ஊழின் நோக்கமாக அமைவதாக தமிழர் எண்ணம் அமைகிறது.

**“ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே”[70]** (தொல்.பொருள்.1039)

என்ற நூற்பாவில் உயர்ந்ததன் மேற்செல்லும் மனநிகழ்ச்சியான காதல் வாழ்க்கை உயர்ந்த பாலாயிற்று. காம நிகழ்ச்சியின்கண் ஒத்த அன்பினராய்க்

கூடுதல் நல்வினையின் அல்லது வாராதென்பது தொல்காப்பியர் குறிப்பிடும் கருத்தாகும். இவ்வாறாக ஒருவனும் ஒருத்தியும் பிறவிதோறும் நல்விதிப் பயனால் கூடுவதாக நம்பப்படுகிறது. அத்தகு ஊழினால் தலைவன் தலைவி சந்திப்பு நிகழ்கிறது.

"தலைவனுந் தலைவியும் தெய்வத்தாற்கூடும் முதற் கூட்டமே இயற்கைப் புணர்ச்சி என கழக அகராதி பொருள் கூறுகிறது"[71]

தினைப்புனக் காவலுக்குச் சென்ற தலைவியும் தோழியும் கருவிகளால் ஓசை எழுப்பி கிளிகளை விரட்டினர். பின்பு அருவியிலும் சுனையிலும் நீராடினர். தழை ஆடை செய்து உடுத்தினர். பல்வேறு வடிவமுடைய மலர் கொய்து மாலைகள் செய்து அணிந்தனர். அந்தப் பொழுதில் தலைவியின் அகவாழ்க்கைத் தொடங்குகிறது. "குறிஞ்சி நிலம் இயற்கையழகு வாய்ந்தது; தனிமை நிரம்பியது ஆதலின் களவு ஒழுக்கத்திற்கு ஏற்ற இடமானது இதனைக் கொண்டு கூடலும் கூடல் நிமித்தமும் இந்நிலத்துக்குரியவை எனப் புலவர் புலனெறி வழக்கம் செய்தனர்."[72]

**எண்ணெய் நீவிய, கரிவளர் நறுங்காழ்**
**தண்நறுந்தகரம் கமழ மண்ணி,**
**ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா,**
**காழ்அகில் அம்புகை கொளீஇ, யாழ்இசை**
**அணிமிகு வரிமிஞறு ஆர்ப்ப, தேம்கலந்து**
.............. .............. ..............
.............. .............. ..............
**செம் பொறிக்கு ஏற்ற, வீங்கு இறைத் தடக்கையின்**
**வண்ண வரிவில் ஏந்தி, அம்பு தெரிந்து,**
**நுண் வினைக் கச்சைத் தயக்கு அறக்கட்டி,**
**இயல் அணிப் பொலிந்த ஈகை வான்கழல்**
**துயல் வருந்தோறும் திருத்து அடிக் கலாவ (குறி.பா.107-121)**

என்ற பாடலில் தலைவனைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

எண்ணெய் பலகாலும் பூசப்பெற்றதால் சுருண்டு வளர்ந்திருந்தது தலைவனின் தலைமுடி. அதில் மயிர்ச்சாந்து கமழ்ந்தது. சிக்கெடுத்து, அதில் புகை ஊட்டியிருந்தான். வண்ண மலர்களைச் சூடியிருந்தான். அசோகத்

தளிரினைக் காதில் செருகியிருந்தான். வலிமை பொருந்திய தன் மார்பில் சந்தனத்தைப் பூசியிருந்தான். மனமுடைய மாலையை ம

ார்பு அணிகளோடு அணிந்திருந்தான். கையில் வில்லையும் அம்பினையும் கொண்டிருந்தான். உடையை இறுக்கமாகக் கட்டியிருந்தான். இயற்கை அழகால் பொலிவு பெற்ற கால்களில், உயர்ந்த பொன்னாலாகிய வீரக்கழலை அணிந்திருந்தான். அக்கழல் அவன் அடியெடுத்து வைக்குந்தோறும் மேலும் கீழும் அசைந்து கொண்டிருந்த நிலையில் தலைவன் தலைவி இருக்கும் இடத்திற்கு வந்தான் என்று தலைவனின் தோற்றத்தையும் வருகையையும் மேற்கண்ட பாடல் குறிப்பிடுகிறது. இங்கு தலைவனின் முடி முதல் அடிவரை உள்ள வருணனை கூறப்பெற்றுள்ளது. ஏனெனில் இது தலைவன் தலைவியிடையேயான முதல் சந்திப்பு என்பதால் தான் தோற்றம் பற்றி இத்துணை விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதுவே இயற்கைப் புணர்ச்சி என்றழைக்கப்படுகிறது. இச்சந்திப்பு யாருடைய உதவியும் இன்றி முன்னேற்பாடும் இன்றி அமைவதால் தெய்வத்தால் கூடும் கூட்டம் என்று பழங்காலம் முதல் கருதப்படுகிறது.

### 1.5.3.2. உள்ளப்புணர்ச்சி

தலைவனும் தலைவியும் ஊழினால் சந்திக்கக்கூடிய முதல் சந்திப்பிற்குப் பிறகு அடுத்தடுத்த சந்திப்புகள் நிகழ்கின்றன. இதனால் புணர்ச்சி நிலையில் அடுத்த நிலைக்குச் செல்கிறது. “தலைவன் தலைவியின் உள்ளங்கள் இரண்டும் இணைகின்ற இது உள்ளப்புணர்ச்சியாகும். காதலர் தம் மனவொற்றுமையே அகத்திணையின் உயிர்ப் பண்பு. இவ்வொற்றுமையே “உள்ளப் புணர்ச்சி” ஆகும். அகத்திணைப் பாடலுக்கும் அகத்துறைப் பாடலுக்கும் உள்ளப் புணர்ச்சி இன்றியமையாதது.”[73] “தலைவனும் தலைவியும் உள்ளத்தாற் கூடும் கூட்டம் என்று உள்ளப்புணர்ச்சிக்குக் கழக அகராதி பொருள் கூறுகிறது.”[74]

**கயமலர் உண் கண்ணாய்! காணாய்; ஒருவன்**
**வயமான் அடித்தேர்வான் போல தொடைமாண்ட**
**கண்ணியன் வில்லன், வரும்; என்னை நோக்குபு,**
**முன்னத்தின் காட்டுதல் அல்லது, தான் உற்ற**
**நோய் உரைக் கல்லான் பெயரும்மன், பல்நாளும்**
**பாயல் பெறே என் படர் கூர்ந்து, அவன்வயின்**
**சேயேன்மன் யானும் துயர் உழப்பேன் . . . . .     (குகலி.37)**

என்ற கலித்தொகைப் பாடல் தோழி கூற்றாய் அமைகிறது. தலைவி தலைவனைச் சந்தித்தது பற்றி தோழியிடம் ஏதும் கூறாது மறைத்து விட்டாள். தலைவி தலைவனைத் தனி இடத்தே கண்டு களித்தது தனக்குத் தெரியும் என்பதை அறிவிப்பதற்காகத் தோழி அந்த நிகழ்வை ஒரு கதைபோல் கூறுவதாய் பின்வருமாறு அமைகிறது.

'குளத்தில் தோன்றும் நீலமலர் போன்ற மைதீட்டப் பெற்ற அழகிய கண்களை உடையவளே, நான் சொல்வதை நினைத்துப் பார். ஒருவன் தலைமாலை அணிந்து, வில்லேந்தி வலிமையான விலங்குகளின் அடிச்சுவட்டை ஆராய்பவன் போல இங்கு வந்தான். வந்தவன் என்னைப் பார்த்துத் தன் எண்ணத்தைக் குறிப்பாக உணர்த்துவதன்றி வாயால் கூறாமல் பல நாளும் வந்து திரும்பிப் போய்க் கொண்டிருந்தான். அவனோடு தொடர்பில்லாத நானும் அவன் செயலால் அவன் மேல் எண்ணம் மிகுந்து உறக்கமின்றித் துயரத்தில் வருந்தினேன்' என்பதாகத் தோழி கூற்று அமைகிறது.

மேற்கண்ட பாடல் தோழி கூற்றாய் அமையினும் இதில் தோழியின் காதல் சொல்லப்படவில்லை. மாறாக தலைவியின் காதலே சுட்டப்படுகிறது. ஆக இப்பாடல் தலைவன் தலைவி சந்திப்பையே பதிவு செய்கிறது. தலைவன் தலைவி முதன் முதலாகச் சந்திக்கிறார்கள்.

**முன்னத்தின் காட்டுதல் அல்லது, தான்உற்ற**

**நோய் உரைக் கல்லான் பெயரும்மன், பல்நாளும் (குகலி.37)**

என்பதன் வாயிலாகத் தலைவன் தன் எண்ணத்தைக் குறிப்பாக உணர்த்துவதன்றி வாயால் கூறாமல் பலநாளும் வந்து திரும்பிப் போய்க் கொண்டிருந்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் தலைவன் தலைவியிடையேயான சந்திப்பு மீண்டும் மீண்டும் அமைவது புலப்படுகிறது.

**பாயல் பெறே என் படர்கூர்ந்து, அவன்வயின்**

**சேயேன்மன் யானும் துயர் உழப்பேன் (கலி.37)**

என்பது 'தலைவனோடு தொடர்பில்லாத தலைவி அவன் செயலால் அவன் மேல் எண்ணம் மிகுந்து உறக்கமின்றித் துயரத்தில் வருந்தினேன்' என்று தலைவியின் நிலை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலைதான் தலைவன் தலைவியின் உள்ளப் புணர்ச்சியை வெளிப்படுத்துவதாய் அமைகிறது. இதுவரை தலைவனிடத்திலிருந்து தொடர்பில்லாதிருந்த தலைவி, தலைவன் செயலால் அவன்மீது எண்ணம் மிகுதலே தலைவியின் உள்ளமானது தலைவனின்

உள்ளத்தோடு இணைந்ததற்கான வெளிப்பாடாகும். இதுவே உள்ளப் புணர்ச்சியாகும்.

### I.5.3.3. மெய்யுறு புணர்ச்சி

"ஒத்த பண்புடைய தலைவன் தலைவியர் தம்முன் எதிர்ப்பட்டுப் பாலது ஆனையால் கூடுவர். அக்கூட்டமே குறிஞ்சித் திணையாகும்.இன்றும் காதல் காட்சியைப் படம் எடுப்போர் மலையின் இயற்கைப் பின்புலத்தில் எடுக்கக் காணலாம். மனித மனம் மலைமேல் செல்லும் போது அழுத்தம் நீங்கி இனிமையும் எளிமையும் தூய்மையும் பெறும்" என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[75] அத்தகு குறிஞ்சியில் தலைவனும் தலைவியும் நல்வினையின் வாயிலாக ஒருவரையொருவர் சந்திக்கின்றனர். சந்திப்பின் விளைவாக இருவரின் உள்ளங்கள் இணைகின்றன. பின்பு ஏற்பட்ட தொடர்ச்சியான சந்திப்பால் தலைவன் தலைவியரிடையே நெருக்கம் அதிகமாகின்றது. இதனால் ஒருவரையொருவர் உடலளவில் தொட்டுப் பழகுகின்றனர். இதனையே மெய்யுறுபுணர்ச்சி எனப்படுகிறது.

"சரீரத்தால் கூடுங்கூட்டம்" என்று மெய்யுறு புணர்ச்சிக்கு கழக அகராதி பொருள் கூறுகின்றது.[76] குறிஞ்சி நிலத்திற்கே உரிய சிறுபொழுதான யாமத்திலும், பகலிலும் தலைவன் தலைவியிடையே மெய்யுறு புணர்ச்சி நிகழ்கிறது. இரவில் பல்வேறு இன்னல்களைக் கடந்து தலைவன் தலைவியைச் சந்தித்து இன்பம் கொள்கின்றான்.

### I.5.3.4. யாமத்தில் புணர்ச்சி

தலைவன் தலைவி நடு இரவிலும் சந்திக்கின்றனர். குறிஞ்சி நிலம் குளிர் சார்ந்த பகுதியாக இருப்பதால் தலைவன் தலைவியின் கூடலுக்கு ஏற்ற இடமாக இருக்கிறது. இரவுப் பொழுதானது இருவரையும் இணைத்து வைப்பதற்கு ஏற்றப் பொழுதாக அமைகிறது.

**இரண்டுஅறி கள்விநம் காதலோளே**
**முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்**
**முள்ளூர்க் கானம் நாறவந்து**
**நள்ளென் கங்குல் நம்ஓ ரன்னள்**
**கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்து**
**சாந்துஉளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி,**

அமரா முகத்தள் ஆகித்

தமர்ஓ ரன்னள் வைகறை யானே (குறு.312)

என்ற பாடல் தலைவன் கூற்றாக அமைகிறது. 'தன் காதலி இரண்டு விதமாகச் செயல்படுகின்ற கள்ளத்தனம் உடையவள்.மலையமான் திருமுடிக்காரியின் முள்ளூர்க் காடு நல்லமனமுடையது ஆவது போன்று நல்லமணம் கமழவந்து இருள் செறிவுடைய நடு இரவில் நம்முடன் ஒன்றிய தன்மையினள் ஆனாள். விடியற் காலையில் தன் கூந்தலில் நான் சூடிய பல வகையான மலர்களை உதிர்த்துவிட்டு மயிர்ச்சாந்து பூசி மணமுள்ள கூந்தலில் எண்ணெய் தடவி மாறுபட்ட முகத்துடையளாகித் தம் சுற்றத்தாருடன் ஒன்றி அதற்கேற்ற தன்மையள் ஆயினள்' என்று தலைவன் கூறுவதாய் பாடல் அமைகிறது.

மேற்கண்ட பாடலில் 'தலைவி நடு இரவில் தன்னுடன் ஒன்றிய தன்மையினள்' என்பதன் வாயிலாக தலைவனோடு தலைவி இரவில் தனித்திருந்ததையும், இணைந்திருந்ததையும் வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

பெயல்கால் மறைத்தலின், விசும்புகா ணலரே

நீர்பரந்து ஒழுகலின், நிலம் காண லரே

எல்லை சேறலின், இருள்பெரிது பட்டன்று;

பல்லோர் துஞ்சும் பானாள் கங்குல்

யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப

வேங்கை கமழும் எம் சிறுகுடி

யாங்கு அறிந்த தனையோ? . . . (குறு.355)

என்ற பாடலில் 'மிகுதியான மழை பெய்வதால் வானத்தைக் காண இயலவில்லை. மழைநீர் நிலத்தில் பரந்து செல்வதால் நிலத்தையும் காணமுடியவில்லை. கதிரவன் மறைந்துவிட்டதால் இருள் மிகுதியாயிற்று. ஊரில் பலரும் தூங்குகின்ற நடு இரவில் எவ்வாறு வந்தாய் மலைநாட்டுத் தலைவனே' என்றும் 'வேங்கை மலர்களின் மணம் கமழும் எமது சிறுகுடியை எவ்வாறு அறிந்தாய்' என்றும் தலைவனை நோக்கி தோழி வினவுவதாக அமைகிறது.

இதன் வழியாக தலைவியைச் சேர்வதற்கு இரவு வேளையில் தலைவன் பிறர் அறியாவண்ணம் வந்து சேர்ந்தான் என்பது புலனாகிறது.

மின்ஒளிர் அவிர் அறல் இடைபோழும் பெயலேபோல்

பொன்அகை தகைவகிர் வகைநெறி வயங்கிட்டு

போழ்இடை இட்ட கமழ்நறும் பூங்கோதை
இன்நகை, இலங்கு எயிற்று தேமொழி துவர்ச்செவ்வாய்
நன்னுதால்! நினக்கு ஒன்று கூறுவாம்; கேள்; இனி;
நில் என நிறுத்தான்; நிறுத்தே வந்து,
நுதலும், முகனும், தோளும் கண்ணும்
இயலும், சொல்லும், நோக்குபு நினைஇ,
ஐதேய்ந் தன்று; பிறையும் அன்று;
மைதீர்ந்தன்று, மதியும் அன்று;
வேய் அமன்றன்று, மலையும் அன்று;
பூ அமன்றன்று, சுனையும் அன்று,
மெல்ல இயலும் மயிலும் அன்று;
சொல்லத் தளரும், கிளியும் அன்று எனஆங்கு;
அனையன பல பாராட்டி, பையென,
வலைவர் போல சோர்பதன் ஒற்றி,
புலையர் போல, புன்கண் நோக்கி,
தொழலும் தொழுதான்; தொடலும் தொட்டான்;
காழ்வரை நில்லாக் கடுங்களிறு அன்னோன்
தொழூஉம்; தொடூஉம்; அவன் தன்மை
ஏழைத் தன்மையோ இல்லை, தோழி. (கலி.55)

என்ற பாடல் தோழியிடம் கூறுவதாய் அமைந்த தலைவி கூற்றாகும். 'தலைவன் என்னைச் சந்தித்து போகாதே நில் என்று நிறுத்தினான். உன் நெற்றி சிறிதாய் வியக்க வைக்கும் அழகுடன் உள்ளது. ஆனால் அது பிறைச்சந்திரன் அன்று. மூங்கில் அழகுற விளங்குகிறது. ஆனால் அங்கு மலை இல்லை. சுனைப் பூ இரண்டு நெருங்கி உள்ளன. ஆனால் அங்குச் சுனை இல்லை. நடையில் மென்மை உள்ளது. ஆனால் அது மயில் அன்று. பேச்சு தளர்ந்து வருகிறது. ஆனால் அது கிளியன்று என்று என் நெற்றி, முகம், கண், சாயல், சொல் ஆகியவற்றிற்கு உவமை கூறிப் பாராட்டினான். விலங்குகளைப் பிடிக்கும் வேடர் அவை ஏமாறும் சமயத்தைப் பார்ப்பது போல் எனது நெஞ்சம் அவன்பால் நெகிழ்கின்ற சமயம் பார்த்து என்னை தன் கண்ணால் கொல்வது போல் நோக்கினான். நான் இடம் கொடாததால் கையெடுத்துக் கும்பிட்டான்.

நான் பேசாதிருந்தேன். துணிச்சலோடுத் தன்னை நெருங்கித் தொட்டான். இவ்வாறு அங்குசத்திற்கு அடங்காத யானைபோல வரன்முறையை மீறி நடந்து கொண்டான். அது அவன் அறியாமையைக் காட்டவில்லை. அவன் என்பால் கொண்ட அன்பினாலேயே அவ்வாறு நடந்து கொண்டான்' என்று தலைவி தோழியிடம் தலைவனின் செயல்பாடு குறித்துக் கூறினாள்.

மேற்கண்ட பாடலில் தலைவன் தலைவி சந்திப்பு நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. தலைவியும் தலைவன்பால் ஈர்ப்பு கொள்கிறாள். அந்த வேளையில் தலைவன் தலைவியின் மீது உரிமை எடுத்துக்கொண்டு மெய் தீண்டுகிறான். அதனையும் தலைவி மறுப்பதற்கில்லை. தலைவன் தன்னைத் தொடுதலை தலைவி ஏற்கவில்லையாயின் தன் மறுப்பைக் காட்டியிருப்பாள். ஆனால் அவ்வாறு செயல்படாது தலைவன் என்பால் கொண்ட அன்பினாலேயே அவ்வாறு நடந்துகொண்டான் என்பதனால் தலைவன் தன் மெய்தீட்டுதலை தலைவி விருப்பத்துடனேயே ஏற்றுக்கொண்டதை அறியலாம். இவ்வாறாக தலைவன் தலைவியிடையே மெய்யுறு புணர்ச்சியானது அமைகிறது.

**1.5.3.5. பகலிலும் புணர்ச்சி**

குறிஞ்சி நிலத்தில் தலைவன் தலைவியின் புணர்ச்சியானது இரவில் மட்டுமின்றி பகலிலும் ஒருவரை ஒருவர் தழுவுதல் பற்றிய செய்திகள் சங்கப் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

> **போதுஎழில் மலர் உண்கண் இவள் மாட்டு நீ இன்ன**
> **காதலை என்பதோ இனிது – மற்று இன்னாதே,**
> **மின்ஓரும் கண்ஆக, இடி என்னாய், பெயல் என்னாய்,**
> **இன்னது ஓர் ஆர் இடை, ஈங்குநீ வருவதை,**
> **இன்புற அளித்தனை இவள்மாட்டு நீ இன்ன**
> **அன்பினை என்பதோ இனிது – மற்று இன்னாதே,**
> **மணம்கமழ் மார்பினை, மஞ்சுஇவர் அடுக்கம்போழ்ந்து**
> **அணங்குடை, ஆர்இடை, ஈங்கு நீ வருவதை**
> **இருள்உறழ் இருங்கூந்தல் இவள்மாட்டு நீ இன்ன**
> **அருளினை என்பதோ இனிது – மற்று இன்னாதே,**
> **ஒளிறுவேல் வலன்ஏந்தி, 'ஒருவன்யான்' என்னாது,**

**களிறு இயங்கு ஆர்இடை, ஈங்கு நீ வருவதை அதனால்,**

**இரவின் வாரல், ஐய! விரவுவீ**

**அகல்அறை வரிக்கும் சாரல்,**

**பகலும் பெறுவை,இவள் தடமென் தோளே (கலி.49)**

என்ற பாடல் தலைவனிடம் தோழி கூறுவதாக அமைகிறது. 'தலைவனே நீ தலைவியிடம் மிகுதியான அன்பு கொண்டிருப்பது இனிமையைத் தருகின்றது. ஆனால் இடியையும் மழையையும் பொருட்படுத்தாமல் மின்னல் ஒளியைக் கொண்டே வழியைப் பிடித்துக் கொண்டு கடுமையான இருளில் வருவது எங்களுக்கு துன்பம் தருகின்றது. மேலும் நீ மணம் கமழும் மார்புடன் மலைப்பக்கங்களில் துன்புறுத்தும் தேவதைகள் உலவும் அரிய வழியில் வருவதும் யானைகள் திரியும் அரிய வழியில் வருவதும் மிகுந்த துன்பத்தைத் தருகின்றது. அதனால் ஐயனே! நீ இரவில் வரவேண்டாம். அகன்ற பாறையில் பலவண்ண மலர்கள் உதிர்ந்து கோலம் செய்யும் இந்த அழகிய மலைச்சாரலில் பகலிலும் வந்து அவள் மெல்லிய தோளோடு இணையலாம்' என்று தலைவனிடம் தோழி கூறுகிறாள்.

இதன் வாயிலாக தலைவன் தலைவியிடையேயான புணர்ச்சி இரவில் மட்டுமின்றி பகல்பொழுதிலும் நடப்பதற்கான சூழல் உள்ளதை அறியமுடிகிறது.

### 1.5.3.6. தலைவன் வரும் வழியின் அருமை

குறிஞ்சி நிலத்திற்குரிய சிறுபொழுதான யாமத்தில் தலைவன் தலைவியைச் சந்திப்பதற்காக வரும் வழியானது பல்வேறு துன்பங்களுக்கு இடமானதாக விளங்குகிறது.

**'கிளைபா ராட்டும் கடுநடை வயக்களிறு**

**முளைதருபு ஊட்டி, வேண்டுகுளகு அருத்த,**

**வாள்நிற உருவின் ஒளிறுபு மின்னி,**

**பரூஉ உறைப் பல்துளி சிதறி, வான்நவின்று,**

**பெருவரை நளிர்சிமை அதிர வட்டித்துப்**

**புயல்ஏறு உரைஇய வியல்இருள் நடுநாள்,**

**விறல்இழைப் பொலிந்த காண்புஇன் சாயல்,**

**தடைஇத் திரண்ட நின் தோள்சேர்பு அல்லதை,**

படாஅ, வாகும் எம் கண்', என, நீயும்,

'இருள்மயங்கு யாமத்து இயவுக்கெடவிலங்கி,

வரிவயங்கு இரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்!

பெருமலை விடரகம் வர அரிது' என்னாய்!

வர எளிதாக எண்ணுதி அதனால்!

நுண்ணிதின் கூட்டிய படுமாண் ஆரம்

தண்ணிது கமழும் நின்மார்பு, ஒருநாள்

அடைய முயங்கேம் ஆயின், யாமும் விறல்இழை

நெகிழச் சா அய்தும் . . . . . (அகம்.218)

*என்ற பாடலில் தோழி தலைவனை நோக்கி, 'நீ எங்களைச் சந்திக்க நள்ளிரவு நேரத்தில் வருகிறாய். மலை வழியில் யானைகள் மிகுதியாக இருக்கும். வாள்போல் மின்னல் மின்னி, இடி இடித்து மழையும் பொழியும். புலிகள் தம் இரைக்காக எதிர்பார்க்கும் குகை நிறைந்த வழியில் நீ வருகிறாய். தலைவியின் மென்மையான தோளைத் தழுவினால் அன்றி எனக்கு உறக்கம் வராது என்று கூறி அச்சத்திற்குரிய வழியில் வருகிறாயே தலைவனே! நீ வராவிடின் எங்கள் வளைகள் கழல ஏமாறி வருந்துவோம். எனவே பகலில் வருக' என தோழி கூறுகிறாள்.*

நீர்அற்ற புலமேபோல் புல்லென்றாள், வைகறை,

கார்பெற்ற புலமே போல், கவின்பெறும்; அக்கவின்

தீராமல் காப்பதுஓர் திறன் உண்டேல், உரைத்தைக்காண்

இருள்இடை என்னாய் நீ இரவு அஞ்சாய் வந்தக்கால் (கலி.38)

*என்ற பாடலை தோழி தலைவனிடம் கூறுவதாக அமைகிறது. 'நீரின்றிப் பயிர் வாடுவதுபோல, தலைவனின் அன்பு குன்றிப் பொலிவிழந்திருந்த தலைவி, தலைவன் தன் உயிருக்கு அஞ்சாமல் இரவில் வந்து தலைவியைக் கண்டு சென்றமையால் மறுநாள் காலையில் மழை பெற்ற பயிர்போல அழகு பெறுகின்றாள்' என்று தோழி கூறுகிறாள்.*

. . . . . . . . . . . . கங்குல்

அளைச்செறி உழுவையும், ஆளியும், உளியமும்

புழற்கோட்டு ஆமான் புகல்வியும், களிறும்,

வலியின் தப்பும் வன்கண் வெஞ்சினத்து

உருமும் சூரும், இரைதேர் அரவமும்,

ஒடுங்கு இருங்குட்டத்து அருஞ்சுழி வழங்கும்

கொடுந்தாள் முதலையும் இடங்கரும், கராமும்

நூழிலும், இழுக்கும், ஊழ்அடி முட்டமும்,

பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்

வழுவின் வழாஅ விழுமம், அவர்

குழுமலை விடரகம் உடையவால் எனவே (குறி.251-261)

*என்ற பாடல் வரிகள் தலைவியின் எண்ணங்களாக அமைகின்றன. தலைவன் இரவுக்குறி வரும்போது ஏற்படும் துன்பங்களை நினைத்துத் தலைவி கலங்குகிறாள். "இரவில் அவன் வரும் வழியில், குகையில் வாழும் புலிகளும், யாளிகளும், கரடிகளும் உன்துளையுடைய கொம்புடைய ஆமான் ஏறுகளும், யானைகளும் உள்ளன. வலிமையால் கொல்லும் சினத்தையுடைய தீண்டி வருந்தும் தெய்வமும், ஒடுங்கிய கூரிய நீர்நிலைகளில் குட்டையான கால்களையுடைய முதலைகளும், இடங்கரும், காரமும் உண்டு. வழிப்பறி செய்வோர் கொன்று குவிக்கும் இடங்களும், வழுக்கு நிலவும் முறையான பாதையில்லாத வழி முட்டாய் இருக்கும் இடங்களும், பேயும் மலைப் பாம்பும் இவைபோன்ற பல உயிரினங்களும், கொலைத் தொழிலில் தப்பாது துன்பம் தரும் நிலைகளும் தலைவன் மலைக்கூட்டத்தில் உடையதாய் அவை கருதி, தலைவி வருந்தி அழுவாள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மேற்கண்ட பாடல் வரிகளின் வாயிலாக தலைவியை தலைவன் சந்திக்க வருகிறான். அவ்வேளைகள் இரவுக்குறிகளாகவும் அமைகின்றன. இரவுக் குறியில் தலைவன் வருகை தரும் பாதை மிகவும் துன்பம் சூழும் இடமாகவே காட்சியளிக்கிறது. உயிரை நீக்கக்கூடிய அளவிற்கு இன்னல் தரும் விலங்குகளும் வழிப்பாதையுமாக அமைகிறது. இருப்பினும் தலைவியைத் தலைவன் இரவுக்குறியில் சந்திக்கிறான் என்பதை மேற்கண்ட பாடல்கள் புலப்படுத்துகின்றன. இரவுச் சூழல் தலைவன் தலைவியைக் கூடுவதற்கு ஏற்றதாக அமைகிறது. இது குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருளான புணர்தலை தெள்ளத் தெளிவாய் புலப்படுத்துகிறது. இதன்வழியாக திணை வெளிப்பாடானது கபிலர் தம் பாடலில் ஐயத்திற்கு இடமின்றி அமைந்துள்ளது.*

### 1.6. முடிவுரை

மலையும் மலைசார்ந்த பகுதியையும் குறிஞ்சி நிலமாக முன்னோர்கள் வகுத்தளித்தனர். மலைப்பகுதியில் குறிஞ்சிப் பூ பூத்ததாலும் அங்கு வாழ்ந்த மக்கள் அம்மலரைச் சூடியதாலும் அந்த மலைப்பகுதியே குறிஞ்சித்திணை என்றழைக்கப்பட்டது. சங்க காலப் புலவர்களில் குறிஞ்சித் திணையை மிகவும் அதிகமாக பாடியவர் கபிலர் ஆவார். திணையில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று பாகுபடுத்துவர். அந்த வகையில் குறிஞ்சித் திணையின் முதற்பொருளான நிலம் மலைப்பகுதியாகக் குறிப்பிடப்படுகிறது. குறிஞ்சித் திணையின் நிலம் மலை, குன்றம், கவாஅன், சிலம்பு, வெற்பு என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. பெரும்பொழுது கூதிர்காலமாக விளங்குகிறது. சிறுபொழுது நடு இரவான யாமமாகக் கூறப்படுகிறது. கூதிர்காலமும், யாமமும் தலைவன் தலைவியின் அகவாழ்வில் மிகுந்த பிணைப்பை ஏற்படுத்தும் இயற்கை காரணிகளாகும். குறிஞ்சி நிலம் மலைசார்ந்த வாழ்வியலை அமைத்துத் தருகின்றது. அந்நிலம் சார்ந்த உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் கருப்பொருட்களாக அமைகின்றன. தெய்வம், மக்கள், புல், விலங்கு, உணவு, நீர், ஊர், பூ, மரம், யாழ், பண், தொழில் போன்ற மலைசார்ந்தவை குறிஞ்சி நிலத்தின் கருப்பொருட்களாக விளங்குகின்றன.

தலைவன் தலைவியின் வாழ்வில் உணர்வுகளை வெளிப்படுத்தும் சூழலில் கருப்பொருட்கள் முதன்மையான இடத்தை வகிக்கின்றன. கருப்பொருட்கள் இல்லையேல் அத்துணை விளக்கமாக அகவாழ்வியலை வெளிப்படுத்த இயலுமா என்கின்ற அளவிற்கு கருப்பொருட்கள் முதன்மை பெறுகின்றன.

குறிஞ்சிக்குரிய உரிப்பொருளான புணர்தல் அந்நிலம் சார்ந்த சூழலை வெளிப்படுத்துவதாய் அமைகிறது. தலைவன் தலைவியின் அன்பும், தனிமையானச் சுற்றுச்சூழலும், குளிர்காலமும் இரவுப் பொழுதும் தலைவன் தலைவியிடையே புணர்ச்சிக்கு உட்படுத்தி அவர்களின் அன்பு நிலையானது அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வதாய் அமைகின்றது.

ஆகவே, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவை தலைவன் தலைவியின் அகவாழ்வினைப் பாடுதற்கு இன்றியமையானதாகும்.

நிலமே வாழ்வின் அனைத்து செயல்பாடுகளையும் தீர்மானிக்கின்றன. முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளும் நிலம் சார்ந்த தன்மைகளை நன்கு வெளிப்படுத்துகின்றன. அந்த அடிப்படையில் கபிலர் தம் பாடலில் குறிஞ்சி என்று பெயர் குறிப்பிடாமலே முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றைக் கொண்டு குறிஞ்சித் திணையை வெளிப்படுத்தியிருப்பது சிறப்பிற்குரியதாகும்.

# சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ.1589
2. புறநானூறு பா.எ.2
3. இராம. குருநாதன், குறிஞ்சி காட்டும் சமுதாயம் ப. 6
4. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ.5
5. சிலப்பதிகாரம், காடுகாண்காதை பா.எ.62
6. கழகத் தமிழ் அகராதி ப.540
7. இராம. குருநாதன், குறிஞ்சி காட்டும் சமுதாயம் ப. 10
8. மேலது ப. 14
9. மேலது ப. 15
10. மேலது பக். 16-17
11. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.120
12. மேலது ப.86
13. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல் ப.93
14. மேலது பக்.316-317
15. இராம.குருநாதன், குறிஞ்சி காட்டும் சமுதாயம் ப.93
16. கு.இராசரெத்தினம், சங்க இலக்கியத்தில் பொதுமக்கள் ப.12
17. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ.949
18. வா.சா.பானு நூர்மைதீன், பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும் ப.31
19. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ.950
20. வா.சா.பானு நூர்மைதீன், பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும் ப-34
21. மேலது ப.42
22. இரா.செந்தில், அகப்பாடல்களில் கருப்பொருள்கள் ப.13
23. வா.சா.பானு நூர்மைதீன், பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும் ப.50
24. மேலது ப.52
25. மேலது ப.55

26. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ.960

27. வா.சா.பானு நூர்மைதீன், பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும் ப.56

28. இராம.குருநாதன், குறிஞ்சி காட்டும் சமுதாயம் ப.18

29. வா.சா.பானு நூர்மைதீன், பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும் ப.69

30. மேலது ப.70

31. கழகத் தமிழ் அகராதி ப.456

32. வா.சா.பானு நூர்மைதீன், பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும் ப.69

33. மேலது ப.70

34. மேலது ப.182

35. மேலது ப.183

36. பதிப்பாசிரியர், கழகத் தமிழ் அகராதி ப.833

37. வா.சா.பானு நூர்மைதீன், பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும் ப.189

38. பதிப்பாசிரியர், கழகத் தமிழ் அகராதி ப.581

39. வா.சா.பானு நூர்மைதீன், பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும் ப.189

40. மேலது ப.215

41. கி.வா.ஜகந்நாதன், தாமரைப் பொய்கை, (சங்க நூல் காட்சி) முகவுரை

42. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ.964

43. மேலது 959

44. இரா.செந்தில், அகப்பாடல்களில் கருப்பொருள்கள் ப.22

45. அகப்பொருள் விளக்கம் நூ.எ.19

46. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல் ப.169

47. ந.சுப்ரமணியன், சங்க கால வாழ்வியல் ப.463

48. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, குறுந்தொகை சொற்பொழிவு ப.54

49. திருக்குறள் குறள்.20

50. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.294

51. வே.நெடுஞ்செழியன், தமிழர் கண்ட தாவரவியல் ப.59

52. சீவகசிந்தாமணி பா.எ.1195

53. சி.இலக்குவனார், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் ப.26

54. ஆ.இராமகிருஷ்ணன், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் ப.24

55. ந.சுப்ரமணியன், சங்க கால வாழ்வியல் பக்.330-331

56. கழகப் புலவர் குழு, கழகத் தமிழ் அகராதி ப.876

57. ப.அனு. இலக்கிய பீடம் ப.17

58. திருக்குறள் கு.எ.81

59. பட்டினப்பாலை பா.எ.21

60. தே.அசோக், நாட்டுப்புற நம்பிக்கைகளில் பண்பாடு, (ஆய்வேடு) ப.55

61. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.397

62. கழகப் புலவர் குழு, கழகத் தமிழ் அகராதி ப.479

63. ச.பொ.சீனிவாசன், சங்க இலக்கியத்தில் அகவுணர்வு ப.6

64. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் ப.12

65. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ.959

66. க.ப.அறவாணன், அற்றை நாட் காதலும் வீரமும் ப.98

67. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ.960

68. க.ப.அறவாணன், அற்றை நாட் காதலும், வீரமும் ப.117

69. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.34

70. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ.1039

71. கழகப் புலவர் குழு, கழகத் தமிழ் அகராதி ப.113

72. ம.இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி ப.80

73. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல் ப.32

74. கழகத் தமிழ் அகராதி ப.184

75. கா.அரங்கசாமி, கபிலர் ப.60

76. மேலது ப.790

# இயல் – இரண்டு
# கபிலரின்
# இயற்கைப் புனைவுத்திறன்

# இயல் – இரண்டு
# கபிலரின் இயற்கைப் புனைவுத்திறன்

**2. முன்னுரை**

*2.1.* மலர்களின் வண்ணமும் மணமும்

*2.2.* மணங்களின் கலவை

*2.3.* நெருப்பாய்த் தோற்றமளிக்கும் தளிர்

*2.4.* நெடுங்கொடி

*2.5.* மலையைப் பற்றிய இற்றி

*2.6.* ஐவனத்தைப் பயிர் செய்தல்

*2.7.* குவளை

*2.7.1.* கருங்குவளையின் தோற்றம்

*2.8.* மலைக்குரிய குறிஞ்சி

*2.9.* சந்தனத்தில் படரும் மிளகு

*2.9.1.* மரங்களில் படரும் மிளகு

*2.10.* பலாவின் தோற்றம்

*2.11.* முற்றிய தினைக் கதிர்கள்

*2.12.* உணவாகும் மூங்கில்

*2.13.* வாழை ஈன்ற அரும்பு

*2.14.* பளிங்காய் விளங்கும் சுனை

*2.15.* வழியின் அருமை

*2.16.* மலையின் பேரொலி

*2.17.* மழைப்பொழிவு

*2.18.* மாலையின் வரவு

*2.19.* மலர்களால் மறைந்த காட்டாறு

*2.20.* மணியை உமிழும் அரவம்

*2.21.* அருவி

*2.21.1.* துகிலாய் தோன்றிய வெள்ளருவி

**2.22. குறிஞ்சியில் பறவைகள்**

*2.22.1.* அச்சம் தரும் கூகை

*2.22.2.* அச்சமுறும் கிள்ளை

*2.22.3.* நடனமாடும் மயில்

*2.22.4.* தேன் உண்ணும் வண்டு

*2.22.5.* குருகு

*2.22.6.* மகிழ்ந்திருக்கும் தேனீ

**2.23. குறிஞ்சியில் விலங்குகள்**

*2.23.1.* குரங்குகளின் மகிழ்ச்சி

*2.23.2.* மேகங்களை விரட்டும் குரங்கு

*2.23.3.* நிலத்தை உழும் பன்றி

*2.23.4.* இரைதேடும் புலி

*2.23.5.* துள்ளி விளையாடும் மான்

*2.23.6.* காவல் புரியும் நாய்

*2.23.7.* உயிரைக் கொல்லும் முதலை

*2.23.8.* பேதைக் கன்றும் போர் செய்யும் மலையாடும்

*2.23.9.* கலச நீரைச் சொரியும் யானைகள்

*2.23.9.1.* வலிமையான களிறு

*2.23.9.2.* யானையின் நேசமும் அச்சமும்

*2.23.9.3.* காதல் செய்த யானை

*2.23.9.4.* பசி போக்கும் யானை

*2.23.9.5.* துயில் கொள்ளும் யானை

*2.23.9.6.* உவமையான யானை

*2.23.9.7.* யானையின் மதம்

*2.23.9.8.* வெட்கப்பட்ட யானை

**2.24. முடிவுரை**

# இயல் - இரண்டு

# கபிலரின் இயற்கைப் புனைவுத்திறன்

**2. முன்னுரை**

பண்டையத் தமிழர்கள் இயற்கையை நேசித்து வாழ்க்கையை மேற்கொண்டனர். குறிஞ்சி நிலமக்கள் மலை, அருவி, சுனை, பறவைகள், செடிகள், கொடிகள், விலங்குகள், மரங்கள் இவற்றோடு இரண்டற கலந்து வாழ்ந்ததால் தங்கள் மகிழ்ச்சியையும் துயரத்தையும் இயற்கையிடம் பகிர்ந்துகொண்டனர். தாங்கள் மனவருத்தத்தில் இ2ருக்கும்போது இயற்கையும் வருத்தப்படுவதாக உணர்ந்தனர். தங்கள் மனம் மகிழ்ச்சியில் இருக்கும்போது இயற்கையும் மகிழ்ச்சியில் திளைப்பதை உணர்ந்தனர். இயற்கையான செடி, கொடி, மரங்களைத் தாவரமாகக் கருதாமல் உடன் பிறந்தவர்களாகவும், தோழமை உணர்வுடனும் கருதி வந்தமையை கபிலர் பாடல்கள்வழி அறியமுடிகிறது.

நல்லிசைப் புலவராகிய கபிலருடைய கூர்ந்த அறிவெல்லாம் கொள்ளை கொண்ட பெருமை குறிஞ்சிக்கே உரியது. குறிஞ்சியின் பல்வேறு கோலங்களையும் பல்வேறு கோணங்களில் கண்டு, உணர்ந்து அக்காட்சிகளைப் பாடல்களில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். தொகை நூல்களில் கபிலர் பாடியுள்ள பாடல்களின் எண்ணிக்கை 235. அவற்றுள் குறிஞ்சித் திணையில் மட்டும் கபிலர் பாடியுள்ள பாடல்கள் 197. கபிலரின் பாடல்களுள் பெரும்பான்மையானவை குறிஞ்சித் திணையில் அமைந்துள்ளதால் **குறிஞ்சிக் கபிலர்** என்று அழைக்கப் பெறுகிறார்.

இயற்கையின் எழிலில் தோய்ந்து அதை நுனிதி நோக்கிக் கண்டு களித்த கபிலர் தான் கண்ட காட்சிகளைத் தேர்ந்த சொற்களைக் கொண்டு பாடல்களாகப் புனைந்துள்ளார். இயற்கை எழில் நயப் போருக்குக் கபிலரின் பாடல்கள் வற்றாச் சுரங்கம். அவர் பாடல்களிலே கவிதை நயம் உண்டு. கனிந்த இசை உண்டு கலையின் மெருகு உண்டு. இவை யாவற்றையும் தன்னகத்தே கொண்டு ஒளிரும் இயற்கை ஓவியங்களின் காட்சிச் சாலை என்றே கபிலரின் பாடல்களைச் சுட்டலாம்

குறிஞ்சி நிலமும், அங்கு மலர்ந்து மணக்கும் வண்ண மலர்களும் கபிலரின் கண்ணுக்கு விருந்தாயிற்று. அங்கு வாழும் மக்களின் இயற்கை வாழ்வு, விளைபொருள்கள், விலங்குகள். பறவைகள் ஆகிய கருப்பொருள்கள் கபிலர் மனத்தில் பதிந்து அவர்பாடும் பாட்டில் இடம் பெற்றது. குறிஞ்சி நிலக் காட்சிகளைக் கபிலர் தம் கற்பனைத் திறத்தையும், கவிதைச் சுவையையும் குழைத்து, **பெருங்குறிஞ்சி** என்றும், **கோல்குறிஞ்சி** என்றும் போற்றும் வகையில் குறிஞ்சிப்பாட்டை மலர வைத்துள்ளார். குறிஞ்சிப் பாட்டில் காணப்பெறும் மலர்களின் பட்டியலை நோக்கும்போது, கபிலருக்கு அமைந்த பயிரினம் பற்றிய நுண்ணறிவு புலனாகிறது. செங்காந்தள் முதலாகப் புழகு ஈறாகத் தொண்ணுற்றொன்பது வகைப் பூக்களை அவர் குறிப்பிட்டிருக்கின்றார். சங்க இலக்கியத்தில் இது போன்ற மலர்ப் பட்டியல் வேறெங்கும் இடம் பெறவில்லை. குறிஞ்சிப் பாட்டில் காணப்பெறும் மலர்வகை அந்நிலத்திற்கே உரியனவல்ல என்பதனை அறிதல் வேண்டும். திணைமயக்கம் காரணமாகப் பிறநிலத்து பூக்களும் இடம் பெற்றுள்ளன. எனினும் குறிஞ்சி நிலத்திற்குரிய பூக்களே பெரும்பாலானவை உள்ளன. அத்தகு சிறப்புடைய கபிலர் பாடல்களில் அமைந்துள்ள இயற்கைப் புனைவுத் திறனை இவ்வியல் ஆராய்கிறது.

### 2.1. மலர்களின் வண்ணமும் மணமும்

இயற்கையின் இயக்கத்தால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஐம்பூதங்களில் முதலாவதாக அமைவது நிலமாகும். நிலமே உயிர்களின் வாழ்வாதாரமாகும். ‘இயற்கை என்பது இயல்பான பொருட்தன்மை உடையது. மனித சக்தியாலன்று உலகில் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும்.’[1] மரம், செடி, கொடி, பறவை, விலங்கு ஆகியவற்றை அக வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி கபிலர் காட்சிபடுத்தியுள்ளார். அன்பின் ஐந்திணையில் முதலாவதாகக் கருதப்படுவது மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலமாகும். குறிஞ்சி நிலப் பகுதிக்கு உரிய அக ஒழுக்கம் தலைவனும் தலைவியும் அன்பால் ஒருவருக்கொருவர் கூடுவதாகும். இதனைப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்பர்.

இத்தகு குறிஞ்சியாகிய மலையில் செடி, கொடி, பறவை, விலங்கு, அருவி, சுனை ஆகிய அனைத்தும் இடம்பெறும். கபிலர் பாடல்களில் குறிஞ்சி நிலக் காட்சிகளை பல புலவர்கள் பாடல்களில் பாடியிருப்பினும் ‘குறிஞ்சிக்கு கபிலர்’ என்ற சிறப்பு கபிலருக்கு மட்டுமே உண்டு. ஏனெனில் கபிலர் குறிஞ்சி

வாழ்க்கையர். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்து அதன் இயற்கை அழகில் தோய்ந்தவர். அதனால்தான் அவர் இயற்கையைக் கவினுற எடுத்து கூறியுள்ளார். 'கபிலர் பொழுது போக்காகவோ, பரிசில் பெறவோ பாடியவர் அல்லர் என்பது அறியப்படும். அறிவியலும் மெய்யியலும் போற்றித் தமக்கென வாழாத பெற்றியர் அவர் என்பதும் பெறப்படும். கபிலரின் பாடல்கள் இலக்கியக் கோட்பாடுக் கருவூலக் களஞ்சியம் தமிழ் உலகம் ஈன்ற பெருமைமிக்க பாவலர் கபிலர் என்பதை அவர்தம் பாடல் வழி அறியலாம்.'[2]

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறவுங் கருவென எனமொழிப[3]**

**(தொல்.பொருள் - 964)**

என்ற நூற்பாவில் கருப்பொருளில் மரத்தைக் குறிப்பிடுகிறார். இக்கருத்தையே நாற்கவிராச நம்பி தமதுஅகப்பொருள் விளக்கத்திலும் கூறியுள்ளார். ஆனால் அவர் கருப்பொருளை,

**ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு**

**ஊர்நீர் பூமர முணாப்பறை யாழ்பண்**

**தொழிலெனக் கருஈ ரெழுவகைத் தால்[4] (அக.விளக்.19)**

என்ற நூற்பாவில் விளக்குகிறார்.

குறிஞ்சி நிலத்தில் பல்வேறு வகையான மரங்கள் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு தன்மை கொண்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது. கபிலர்,ஒவ்வொரு மரத்தைப் பற்றி கூறும்போது உவமை மூலமாகவும் வர்ணனை மூலமாகவும் புனைந்துள்ளார்.

**நல்ல பெருந் தோளோயே! கொல்லன்**

**எறி பொன் பிதிரின் சிறுபல தாஅய்**

**வேங்கை வீ உகும் ஓங்கு மலைக்கட்சி**

**மயில் அறிபு அறியாமன்னோ (நற்-13)**

இதில் வேங்கை மரத்தின் மலர்கள் மஞ்சள் நிறமாக இருப்பதை கொல்லனின் உலைக் களத்தில் அடிக்கும் இரும்பின் பொறி சிதறுவது போலச் சிறிய பல காயையுடைய வேங்கை மரத்தின் மலர்கள் உதிரும் என்று குறிப்பிட்டுள்ளார் கபிலர். வேங்கை மரத்தின் மலரை நெருப்புப் பொறிக்கு உவமையாக

கூறியுள்ளார். கபிலர் தாம் கண்ட மலரின் வண்ணத்தை ஒரு நிறமாக மட்டும் பதிவு செய்திருந்தால், இலக்கியத்தைப் படிப்போரின் மனக் கண்ணில் இத்துணைக் காட்சிப்படுத்தியிருக்க இயலுமா என்பது ஐயமே. நெருப்புப் பொறி போல வேங்கை மலர் இருந்தது என்று காட்சிப்படுத்தியுள்ள விதம் இயற்கை வர்ணிப்பின் சிறப்பாகும். இப்பாடலில் இயற்கைப் பற்றி கூறும்போது கொல்லனின் உழைப்பு பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இயற்கையை மட்டும் கூறாது மனித வாழ்க்கையையும் கூறியுள்ளார்.

'தாவரங்களின் முக்கிய உறுப்பு பூ ஆகும். பூ இல்லையேல் தாவர இனப்பெருக்கம் இல்லை.'[5] 'பூவின் வளர்பருவங்களாக ஏழு நிலைகள் அறியப்படுகின்றன. அவை நுனை, அரும்பு, முகை, போது, மலர், அலர் மற்றும் வீ ஆகியவையாகும். நுனை என்பது பூவின் தோன்றல் நிலையாகும். அரும்பு பூவின் அரும்புதலாகிய இரண்டாவது பருவமாகும். முகை என்பது பூவின் மணத்திற்கு திறப்புவிழா பருவமாகும். போது என்பது முகை திறக்கும் நிலையைக் குறிக்கும். பூ விரிந்து காணப்படும் நிலை மலராகும். அலர் என்பது பூவின் மகரந்தங்கள் மகரந்தச் சேர்க்கை மூலம் சூலகத்தை அடைந்து அதனைக் கருவூறச் செய்யும் நிகழ்வுகள் நடைபெறும். வீ என்பது பூக்காம்பிலிருந்து கழன்று பூவிதழ்கள் விழுதலைக் குறிக்கும் பருவமாகும்.'[6]

'பூக்கள் இயற்கையின் ராகங்கள் பூமாலை அந்த ராகங்களால் உருவான பாடல் பூமாலை மேல் நாட்டவருக்கு வராத கலை. தமிழர்களின் பூச்செண்டு அயலவரின் பூச்செண்டினும் கலைநயமிக்கது. தமிழர்களின் மலர் அறிவியல் மகத்தானது.'[7]

**மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி**
**ஏறாது இட்ட ஏமப் பூசல் (குறுந் - 241)**

என்ற பாடலில் இடைச் சிறுவர் மன்றத்தில் உள்ள வேங்கை மரத்தின் கீழ் இருந்து அதன் மீது ஏறாமலே பூக்கள் உதிர்வதாகக் கூறப்பட்டுள்ளது. இது மலர்களால் பூமியை அலங்கரிப்பதாக, வண்ண ஓவியமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**கருங்கால் வேங்கை மாத்தகட்டு ஒள்வீ**
**இருங்கல் வியல்அறை வரிப்பத் தாஅம் (ஐங் - 219)**

இதில் வேங்கையின் மலர்கள் பெரிய இதழ்களை உடையது என்றும், ஒளி பொருந்தியதாகக் காணப்படுவதாகவும், அகன்ற பாறைகளில் வேங்கை

மலர்கள் கொட்டிக் கிடக்கும் காட்சி கோலம் செய்தது போல் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். பெண்கள் வீடு மற்றும் பிற இடங்களை அலங்கரிப்பதாகக் கோலமிடுவர். "இயற்கையிடம் மனிதன் தானாகக் கற்று அல்லது தெரிந்து கொண்டது ஏராளம்.அவ்வகையில் வந்ததுதான் கோலம் இடுதல். கோலம் என்றால் அழகு, ஒப்பனை என அர்த்தமாகிறது. பலவற்றை அறியும் அறிவைக் கொண்ட மனிதனின் கலை உணர்வின் வெளிப்பாடுதான் கோலம். அது தொடக்கத்தில் வாசல் கோலமாகப் பரிணமித்திருந்தது. இவ்வாசல் கோலம் இல்லங்களில் வாழ்பவர்களின் மகிழ்ச்சியைக் குறியீடாகக் காட்டும் விதமாகவும் இருந்திருக்கலாம் என்பது எண்ணத்தக்கதாகும்."[8] அத்தகு சிறப்புடைய கோலம் போல வேங்கை மலர்கள் மலையில் கிடக்கும் காட்சி அமைந்திருப்பதாக கபிலர் குறிப்பிடுவது கபிலரின் இயற்கை அழகுணர்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

ஐங்குறுநூறு (217) பாடலில் மான் இனங்கள் வேங்கை மலர்களை மேய்ந்து மகிழ்ந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். இயற்கையைப் பாடலில் பதிவு செய்வதற்கு கபிலர் வல்லவர் என்று குறிப்பிடும் அளவிற்கு இயற்கையை தம் பாடலில் புனைந்து கூறியுள்ளார்.

**குன்றக் குறவன் ஆரம் அறுத்தென**
**நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும்**
**வண்டு இமிர் சுடர் நுதற் குறுமகள்!**
**கொண்டனர் செல்வர் – தம் குன்று கெழுநாட்டே (ஐங்.254)**

மலைப்பகுதியில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் சந்தன மரத்தை அறுத்து எரிப்பதால் எழுந்த புகை இயற்கையாகவே நறுமணம் பெற்ற காந்தள் மேல்படுவதால் மேலும் நறுமணம் பெறுகிறது. அதனால் வண்டுகள் மொய்த்துக் காணப்பட்டதாக இப்பாடலில் கபிலர் இயற்கையைக் காட்சிப்படுத்தியுள்ளார். இதன் மூலம் அப்பகுதியில் சந்தன மரத்தின் நறுமணத்தோடு காந்தள் மலரின் நறுமணமும் கலந்து மிகுதியான நறுமணம் பரவியதையும் அறியலாம். மேலும் இந்த இயற்கைக் காட்சியைப் பார்க்கும் போது மனித வாழ்க்கையோடு ஒப்பிட்டு கூறுகிறார். தலைவியின் நெற்றி இதனை ஒத்த நறுமணம் உடையது என்று குறிப்பிடுகிறார். 'கவிதையாய் உருக் கொள்ளும் வாழ்க்கையின் ஏதேனும் ஒரு கூறு அல்லது கோணத்தை விளக்குவதற்காகத்தான் இயற்கைக் காட்சிகள் பயன்பட்டு வருகின்றன. புறத்தே வெளிப்படத் தோன்றும் இயற்கைக் காட்சிகளின் மனித வாழ்வின்

அகத்தே கரந்து கிடக்கும் பண்பினை விளக்கப் பயன்படுகின்றன. அல்லது மனித வாழ்வின் இயல்பினைத் தெளிவுறுத்துதற்கேற்ற பின்னணியாக அமைகின்றன.'[9]

ஒரு இயற்கைக் காட்சியைக் கூறும் போது புலவர்கள் இயற்கையை வர்ணித்து சொல்வதோடு மட்டும் விட்டுவிடாமல் மனிதனின் வாழ்க்கை நிகழ்வுகளை ஒப்பிட்டுக் கூறுவதை மரபாகக் கொண்டுள்ளார் என்பதை அறியலாம்.

'இயற்கையின் உயிரோட்டத்தையும், அதன் சக்தி சால்பையும், அதன் உள்ளார்ந்து நின்று உணர்த்தும் இறைமையின் மேன்மையையும் மக்கள் உணர்ந்து போற்றுதல் வேண்டும்.'[10] ஆக ஒரு இயற்கையைக் காட்சிபடுத்திக் கூறும்போது அந்த காட்சியை பல்வேறு வண்ண ஓவியங்கள் போல் சித்தரித்துக் காட்டுவதில் வல்லமை உடையவர் கபிலர் என்பதை மேற்கண்ட பாடல் வழி அறியலாம். அதுமட்டுமல்லாமல் தலைவி காந்தள் ஒத்த நறுமணம் உடையவள் என்பதையும் உள்ளீடாகக் கூறியுள்ளார் என்பதாகவும் குறிப்பிடலாம். குறிஞ்சி நிலத்தில் பல மலர்கள் இருப்பினும் ஏன் காந்தள் மலரை ஒத்த நறுமணம் கமழும் நெற்றியை உடைய தலைவி என்று குறிப்பிடுகிறார் என்று எண்ணும் பொழுது தலைவியின் அச்ச உணர்வு வெளிப்படுவதாகவும் குறிப்பிடலாம். தலைவனுடன் எந்தவித தடையும் இல்லாமல் வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற அச்ச உணர்வு காரணமாக முகம் சிவந்து காணப்படுவதை உள்ளீடான பொருளாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

'மரங்களை, மலர்களை, பல்வகையான தாவரங்களை அவை வளரும் மண்ணின் இயல்புகளை பண்டைத் தமிழப் புலவர்கள் ஆர்வமுடன் உற்று நோக்கிக் கண்டு களித்தனர். அவற்றின் பண்புகளை, வடிவங்களை, வகைகளை அறிந்து அவற்றை மனித வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி வாழ்வியல் உண்மைகளை உணர்த்தினர்.'[11] ஆக ஒவ்வொரு பாடலிலும் இயற்கையை மட்டும் கூறாது மனித வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையையும் இணைத்து தம், பாடலில் நுட்பமாக கூறியுள்ளார் கபிலர்.

இவ்வாறு மலைப் பகுதியில் உள்ள வேங்கை, சந்தனம் மட்டுமல்லாது பலா, மூங்கில் இவற்றின் தன்மையையும் தம் பாடலின் வாயிலாக இயற்கையின் காட்சியாகப் பதிவு செய்துள்ளார் கபிலர். 'இயற்கையை எடுத்துரைக்கும் பாவலன் இயற்கையைத் தன் உள்ளத்தே பதிக்கும் திறன்

பெறும் அளவுக்கு அப்பாவாணன் காட்சிப் பேறு பெற்றிருக்க வேண்டும். காணும் காட்சிக்குப் பொருள் தெரியும் திறனைத் தருகின்ற உணர்வுச் செல்வம் வேண்டும். மேலும் ஆற்றல்மிக்க சொற்களிலே காட்சியின் சூழலையும், அதனோடு பின்னிக் கிடக்கும் கருத்தையும் வடித்தளிக்கும் வல்லமை பெற்றவனாகவும் இருத்தல் வேண்டும்.’[12]

அந்தவகையில் மலையில் உள்ள மரத்தைப் பற்றி கபிலர் கூறும்போது அம்மரங்களில் தங்கும் பறவைகள் பற்றியும், அதன் அருகில் வளர்ந்து மலையை அழகு செய்யும் செடி கொடிகள் பற்றியும் பாடியுள்ளார். இதற்குச் சான்றாக,

**அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்**

**பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்டும்**

**காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பின் (குறு-100)**

என்ற குறுந்தொகை பாடலில் கபிலர் கொல்லி மலையின் இயற்கை வளத்தையும்,மக்கள் வாழ்க்கையையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அருவி நீரை கொண்டு தம் நிலங்களில் மலைநெல் விதைத்து பயிர் செய்த செய்தி இங்கு கூறுப்பட்டுள்ளது. நெற்பயிர்களுக்கு இடையே நறுமணம் உடைய காட்டு மல்லிகை இலை பருத்து வளர்ந்திருப்பதும், பசிய மரலை என்ற செடிவகையும் களைகளாக வளர்ந்திருப்பதை உழவு செய்யும் போது பறித்து எறிந்த செய்தியை கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் குறிஞ்சி நில மக்கள் கிழங்குகளை மட்டும் பயிர் செய்யாது நெல்லையும் பயிர் செய்தார்கள் என்பது தெரிகிறது. மனிதனின் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாது. அந்த உணவிற்காக மலைப்பகுதியில் இருந்து கொண்டு பிறரை நாடாமல் தாங்களாக நெல், கிழங்குகளைப் பயிர் செய்து வாழ்க்கை நடத்தினர்.

இதில் மனிதனின் வாழ்க்கைக்கு அத்தியவசியமான தேவையாக இருக்க கூடிய உணவான நெல் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். ஆக ஒவ்வொரு பாடலிலும் இயற்கையோடு இயைந்து மனித வாழ்க்கையின் செயல்பாடுகளையும் குறிப்பிட்டுள்ளார்.

**. . . . . . . . . . . வள் இதழ்**

**ஒண் செங்காந்தள், ஆம்பல், அணிச்சம்**

**தண் கயக்குவளை, குறிஞ்சி, வெட்சி . . . (குறிஞ்சி.61-98)**

குறிஞ்சிப்பாட்டில் 99 மலர்களை கபிலர் குறிப்பிட்டுள்ளார். சில மலர்களுக்கு அடைமொழி கொடுத்து விளக்கப்பட்டுள்ளன. 'செங்காந்தட்பூ முதல் மலையெருக்கம்பூ இறுதியாகத் தொண்ணூற்றொன்பது வகை பூக்களை ஒரு சேரக் கூறியிருப்பதும் அவற்றுள் பலவற்றை, வள்ளிதழொண் செங்காந்தள், எரிபுரை யெறுழும், வான்பூங்குடசம், மணிப்பூங் கருவிளை, பல்லிணர்குரவம், மணிக்குலைக்கடகமழ் நெய்தல், தூங்கிணர்க் கொன்றை, சுடர்ப்பூந்தோன்றி என அவ்வற்றின் சிறப்பியல்பு தோன்றுமாறு ஏற்ற அடைகளுடன் கூறியிருப்பதும், மரம், செடி, கொடி வகைகளில் கபிலரின் பரந்த ஆராய்ச்சியையும், இவரது நினைவின் மாட்சிமையையும் நன்கு புலப்படுத்துகின்றன.'[13] 'தமிழர் மலர் மாலை போற்றும் மாண்பினர். ஆடவரும் பெண்டிரும் தலைக்கும் மார்பிற்கும் கண்ணியையும் மாலையையும் அணிவர். மன்னர் பூவால் அடையாளம் பெறுவர். ஆத்தி சோழனது மலர் வேப்பம் பூ பாண்டியனது மலர் பனம் பூ சேரரது மலர். எனவே மணவாழ்வு தொடங்கிப் பிணவாழ்வு வரை மலர், மலர் எனத் தமிழர் வாழ்குவர். எனவே மலர்ப் பெயர் சார்த்தி மண்ணை வழங்குவர், பெண்ணை வழங்குவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.'[14] தலைவியும் தோழியும் அருவி, சுனையில் நீராடும் போதும் நீராடிய பின்பும் மரம், செடி, கொடிகளில் மலர் பறித்தல் நிகழ்வு நடைபெறுகிறது. 'பண்டைத் தமிழர் ஆண் பெண் வேறுபாடின்றி மலர்களைச் சூடியுள்ளனர். மன்னர்கள் மாலைகளைக் கழுத்திலும், தோளிலும் அணிந்ததோடு,தலையிலும் சூடிக் கொண்டனர். கழுத்திலணிந்த மாலை தார் எனவும் தலையில் அணிந்தது கண்ணி எனவும் பட்டது. ஒவ்வோர் மன்னனின் தாரும் கண்ணியும் ஒரே மரத்துப் பூவாலானவை என்றும் குறிப்பிடப்படுகிறது.'[15] இவ்வாறாக மலர் சூடும் பண்பாடு தமிழ்ச் சமூகத்தில் அமைகிறது. அத்தகு சிறப்புடைய மலர்களை எந்த புலவரும் கூறாத 99 மலர்களின் பெயர்களை கபிலர் தனது பாட்டில் குறிப்பிட்டுள்ளார். இப்பதிவு மலர்கள் மேல் கபிலர் வைத்துள்ள வேட்கையை புலப்படுத்துகிறது. இயற்கையின் அழகில் தோய்ந்து இன்பம் பெற்றவர் கபிலர் என்பதை இதன் வழி அறியலாம்.

### 2.2. மணங்களின் கலவை

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பாடல்களில் இடம் பெற்றுள்ள மரங்களில் அகில் ஒன்றாகும். மகளிர் அகிற்புகையைக் கூந்தலுக்கு காட்டுவர்.

அகிற்புகையினை ஊட்டுவதால் மகளிர் கூந்தல் மணம்பெறும் செய்தியினைக் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகின்றது.

**சாத்த மரத்த பூழில் எழுபுகை**

**கூட்டு விரை கமழும் நாடன்**

**அறவற்கு எவனோ, நாம் அகல்வு? - அன்னாய்! (ஐங்.212)**

அன்னையே! சந்தன மரங்களுக்கு இடையே உள்ள நிலத்தில் சுட்டு எரிக்கப்படும் அகில் கட்டையின் நறிய புகை சந்தனப் பூக்களின் நறுமணத்தோடு சேர்ந்து, ஒரு புதுக்கலவை மணமாகப் பரவுவதற்கு இடனான அறப்பண்புகள் நிறைந்த சான்றோன் தலைவன் என தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்கையில் கூறுகிறாள். 'அறத்தொடு நிற்றல் என்ற சொற்றொடரில் அறம் எனப்படுவதை ஈண்டு பெண்ணுக்குரிய முதற்பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடிப்பில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோர்க்கு வெளிப்படுத்தல் என்பதாகும். களவொழுக்த்தைப் பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டும். என்பதிலும் தலைவி ஏற்கனவே கற்பு நெறிப்பட்டு விட்டாள் என்பதனை வலியுறுத்துவதே அறத்தோடு நிற்றலின் முதன்மையான நோக்கமாகும்.'[16]

இயற்கைக்கு மரங்கள் மென்மேலும் சிறப்பு சேர்க்கின்றன. "பண்டைத் தமிழர் இயற்கைச் சார்புடைய வாழ்க்கைக்கு முதன்மை அளித்தனர். புற வாழ்வை மட்டுமன்றி, அகவாழ்வையும் இயற்கையே உருவாக்கிற்று."[17] அந்த வகையில் சந்தனம், அகில் போன்ற மரங்கள் குறிஞ்சி நிலத்தில் காணப்படுகின்றன. சந்தன மரங்களுக்கிடையில் அகில் மரத்தின் புகையெழும்பியதை கபிலர் காட்சிப்படுத்தியுள்ளார்.

### 2.3. நெருப்பாய் தோற்றமளிக்கும் தளிர்

தமிழ்ப்புலவர்கள் அசோகு மலர்வதை அழகுறக் குறிப்பிட்டுள்ளனர். அசோகினது தளிர் செந்நிறம் உடையது. எரியவிர் உருவின் அங்குழைச் செயலை, அத்தச் செயலைத் துப்புறழ் ஒண்டளிர், ஊட்டி யன்ன அண்டளிர்ச் செயலை எனவரும் தொடர்கள் அசோகின் தளிர் நிறத்தைக் குறிப்பிடுகின்றன.

குறிஞ்சி நிலத் தலைவன் காதில் அசோகத் தளிரினைச் செருகியிருந்ததை கபிலர் குறிஞ்சிப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

**அம்தொடை ஒருகாழ் வளைஇச் செந்தீ**

**ஒண்பூம் பிண்டி ஒருகாது செரீஇ (குறி.பா.118-119)**

இதில் நெருப்புப் போன்ற நிறமுடைய அசோகத் தளிரினைக் காதில் செருகியிருந்தான் என தலைவனின் தோற்றத்தைத் தலைவி கூறுகிறாள்.

மகளிர் அணிவதற்குரிய தழையுடையினைச் செய்வதற்கு அசோகின் தழையைப் பயன்படுத்தினர். தலைமகளின் அழகிய மேனிக்கு அசோகினது தளிர் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. தலைவியும் தோழியும் அசோகு தளிரைப் பறித்து மகிழ்ச்சியோடு இருந்தனர்.

**பகன்றை பலாசம் பல்பூம்பிண்டி (குறி.பா.88)**

இதில் பிண்டி என்பது அசோக மரத்தைக் குறிக்கும். கொத்தாக மலர்கின்ற அசோக மலரையும் பறித்து பாறையில் குவித்து, தழை ஆடை செய்ததை கபிலர் இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார். அசோக மரத்தின் தளிர் நெருப்பு போன்ற தோற்றத்தினையும், தலைவியின் மேனி அழகிற்கு இணையாகச் சொல்லுமளவிற்கு மென்மையான தன்மையினையும் பெற்று இயற்கை ஓவியமாக விளங்குவதை கபிலர் வெளிப்படுத்தியுள்ளார்.

குறிஞ்சி நிலத்தில் மிகுதியாகக் காணப்படும் காந்தள் மலைச்சாரலை அழகு செய்வதாகும். கார் காலத்தில் இது மலர்வதால் இதனை கார் தோற்றும் காந்தள் எனக் குறிப்பிட்டனர். ‘தமிழர் இயற்கையோடு பெருங்கேண்மையினர் நிலம், புல், மரம், புள், விலங்கு என்றின்ன அஃறிணைகளைப் பற்றிய அறிவு இயல்பாக நிரம்பியவர்’[18] ஆவார்.

முகைப்பருவம் தொடங்கி முதிர்பருவம் வரை பல வண்ணங்களைக் கொண்டு எழிலூட்டும் இதன் அழகினைப் போற்றாத புலவர் இல்லை எனலாம். காந்தள் பல வண்ணங்களைக் கொண்டது. பசுமை, செம்மை, வெண்மை, மஞ்சள் முதலிய நிறங்களைப் பெற்றுப் பொலிவுடையதாகத் திகழ்வது.

தக்க பருவத்தில் புள்ளிகளுடன் பூத்துக் காணப்படும் காந்தளின் அழகைக் கபிலர் கவினுறக் காட்டுகின்றார்.

**நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தள்**

**கொங்குண் வண்டின் பெயர்ந்துபுற மாறிநின் (ஐங்.226)**

மணமும் குளிர்ச்சியும் கொண்ட மலையில் கொத்துக் கொத்தாக மலர்ந்த செங்காந்தள் மலர்களில் தேனை உண்ணும் வண்டினைப் போல் மனம் வேறுபட்டு உன்னைக் கவர்ந்த தலைவன் என தோழி தலைவியிடம் கூறுகிறாள். காந்தளானது குலையாகப் பூக்கும் தன்மையும் குளிர்ச்சியும் மணமும் கொண்டது என்பது இங்கு நன்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மற்றொரு பாடலில் காந்தள் சந்தனத்தின் நறுமணத்துடன் சேர்ந்து மேலும் நறுமணம் வீசியதாக கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**குன்றக் குறவன் ஆரம் அறுத்தென**

**நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும்**

**வண்டுஇமிர் சுடர்நுதல் குறுமகள் (ஐங்.254)**

என்ற பாடலில், மலைவாழ் குறவன் சந்தன மரத்தை அறுத்துச் சுட்டும் புகை எழுப்பினான். அப்புகை குறிஞ்சிநில மலராகிய காந்தள் மலரிலும் சந்தனம் மணந்தது. அதனால் வண்டுகள் சூழ்ந்து மொய்க்கின்றது என்று கூறப்படுகிறது.

சந்தன மரம் எரியும் நிலையில் அதன் மணம் காந்தள் மலரினும் மணக்கிறது. காந்தள் மலரின் மணத்திற்கே அதைச் சுற்றிய வண்டுகள் தற்பொழுது காந்தளினுடனே சந்தனமும் இணைந்து மணப்பதால் வண்டுகளின் மொய்த்தலின் நிலையினை அறியலாம். இவ்வாறாக கபிலர் ஒன்றின் செயல்பாட்டினை அடுத்தடுத்த செயல்களோடு தொடர்புபடுத்தி இயற்கையைப் புனைகின்ற நிலை குறிப்பிடத்தக்கதாக அமைகின்றது.

**சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை அன்ன**

**நலம்பெறு கையின்என் கண்புதைத் தோயே (ஐங்.293)**

மலைப்பக்கம் முழுவதும் நறுமணம் கமழச் செய்யும் காந்தள் மலர்க் கொத்து போன்ற உன் அழகிய கைகளால் என் கண்களால் பொத்தியவளே என்று தலைவன் கூறும் இப்பாடலில், மகளிரின் கைவிரல் காந்தள் மலருக்கு உவமையாகக் கூறியுள்ளார் கபிலர்.

**. . . . . . . . . . . . வள்இதழ்**

**ஒண் செங்காந்தள் ஆம்பல் அனிச்சம் (குறி.பா.61-62)**

பெரிய இதழ்களை உடைய ஒள்ளிய சிவந்த காந்தட் பூ என்று குப்பிட்டுள்ளார்.

**புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல**

**உயர்முகை நறுங்காந்தள் நாள்தோறும் புதிதுஈன (கலி.17)**

இதில், காந்தளின் முகை இரத்தம்பட்ட யானைக் கொம்பு போல இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**கடிசுனைக் கவினிய காந்தள்அம் குலையினை**

**அருமணி அவிர்உத்தி அரவுநீர் உணல்செத்து (கலி.9)**

இதில் காந்தள், குலை, அரவு போன்ற உருவமாக உள்ளது என்று குறிப்பிடுகின்றார்.

“எரிமருள் தோன்றி”, “சுடர்பூந் தோன்றி” என வரும் கபிலரின் தொடர் காந்தள் மலரின் செந்நிறப் பொலிவைச் சிறப்புறக் காட்டுகின்றது.

### 2.4. நெடுங்கொடி

‘குறிஞ்சி நிலத்துக்கு உரிய உயிர் பயிர்களைப் பற்றி கபிலர் தெளிவாக உணர்வர் என்பது திண்ணம், அத்துணை அளவிற்குக் குறிஞ்சியின் மரம் செடி கொடிகளைப் பற்றியும் விலங்குகள் பறவைகளைப் பற்றியும் சிறுபொழுது பெரும்பொழுதுகளில் ஏற்படும் மாறுதல்கள் பற்றியும் கபிலர் தெளிவாக உணர்ந்திருந்தார்.’[19] அவரைப் பூ முன்பனிக் காலத்தில் மலர்வதாகும். தினை தாளில் அவரை படர்ந்து பூக்கும். நீண்ட கொடியோடு விளங்குதலின் அவரையை நெடுங்கொடி அவரை எனக் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**அடும்புஅமர் ஆத்தி நெடுங்கொடிஅவரை (குறி.பா.87)**

நீண்ட கொடியில் மலரும் அவரைப் பூவையும் பறித்து தலைவியும் தோழியும் மகிழ்ந்தனர்.

**சிறுதினை கொய்த இருவி வெண்கால்**

**காய்த்த அவரைப் படுகிளி கடியும் (ஐங்.286)**

சிறிய தினைக் கதிர்களை அறுத்தபின்பு கீழே உள்ள வெண்மையான தட்டைகளில் அவரைச் செடி வளர்ந்து காய்கள் காய்த்துள்ளன. அது மட்டுமல்லாது வெண்ணிற உச்சியைக் கொண்ட கரியமேகத்திற்கு அவரைப் பூவை கபிலர் உவமையாகக் கூறியுள்ளார். அவரைக் கொடியானது படர்ந்துள்ள நெடுந்தன்மையும் காய்ந்துள்ள காய்களும் இயற்கையை உள்ளது உள்ளபடியே வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

### 2.5. மலையைப் பற்றிய இற்றி

இற்றி என்பது சங்கப் புலவர்களால் குறிக்கப் பெற்ற மரங்களில் ஒன்று. இதனை இஞ்சி எனவும் இத்தி எனவும் வழங்குவதுண்டு. மலையினைத் தன் வேராற் பற்றிக் கொண்டு இற்றி வளர்தலைக் கபிலர் ஐங்குறுநூற்றுப் பாடலொன்றில் குறிப்பிடுவர்.

**கல்இவர் இற்றி புல்லுவன ஏறிக்**

**குளவி மேய்ந்த மந்தி துணையொடு**

**வரைமிசை உகளும் நாட! (ஐங்.-279)**

மலையினைத் தன் வேரால் பற்றிக் கொண்டு வளரும் இற்றி மரத்தினைப் பற்றிக் கொண்டு மந்தியும் கடுவனும் காட்டு மல்லிகையின் தளிர்களை

மேய்ந்து, மலைமீது துள்ளிக் குதித்து விளையாடுதற்கிடமான நாடன் என தோழி கூறுகிறாள். மலையில் உள்ள கற்களில் படர்கின்ற இற்றி மரத்தின் வெள்ளிய வேர்கள் மலைவீழ் அருவி போல் தோன்றுமெனக் கபிலர் குறிப்பிடுகிறார். இம்மரம் நீண்ட விழுதுகளைக் கொண்டதாகும்.

மலையைப் பற்றி வளரும் இற்றி, இற்றியில் பற்றிய மந்தியும் கடுவனும் தளிர்களை மேய்தல் ஆகிய காட்சிகள் மலைப் பகுதியின் தோற்றத்தையும் அங்கு வாழும் உயிர்களின் செயல்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றன.

மலையினைத் தன் வேரால் பற்றிக் கொண்டு வளரும் இற்றி மரத்தைக் கபிலர் காட்சிப்படுத்துவது குறிஞ்சி நிலத்தில் கபிலரின் நுண்ணிய பார்வையினை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

## 2.6. ஐவனத்தைப் பயிர் செய்தல்

'குறிஞ்சி நிலத்து மக்கள் மலைச் சரிவுப் பகுதிகளையும் மலைமீது சமநிலமாயுள்ள பகுதியையும் விளை நிலமாக்குதல், மலை நெல் தினை முதலிய கூல வகைகளை விதைத்தல், தினைப்புனங்களைக் காத்தல், தேனெடுத்தல், கிழங்கு வகைகளைப் பயிராக்குதல், வேட்டையாடுதல் முதலிய தொழில்களில் ஈடுபட்டிருந்தார்கள்.'[20] குறிஞ்சி நில மக்கள் விளைவித்த நெல் வகைகளில் ஐவனம் ஒன்று. தினைப்பயிர் போன்றே இது பயிர் செய்யப்படும். அருவி நீரால் இதனைப் பயிர் செய்வர். இத்தகைய ஐவனம் நெல்லைப் பற்றி கபிலர் குறிப்பிடுகிறார்.

> **அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்**
> **பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும்** (குறு.100)

அருவியை உடைய பரந்த நிலத்தில் மலை நெல்லை விதைப்பர். அவற்றிடையே களையாக வளர்ந்துள்ள பருத்த இலையை உடைய காட்டுமல்லிகையை பறித்து எறிவர் என்று கபிலர் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லை விதைத்து, வேளாண்மை செய்த நிலைகளைக் கபிலர் பாடலில் குறிப்பிட்டுள்ளார். நெற்கதிர்களிடையே களைப் பறித்ததையும் கபிலர் குறிப்பிட்டுள்ளார். மலைவாழ் மக்களின் வாழ்க்கை முறையையும் அங்குள்ள இயற்கைச் சூழலையும் கபிலர் பதிவு செய்துள்ளார்.

இதில் கொல்லிமலையின் இயற்கை வளத்தையும், அங்குள்ள மக்களின் வாழ்க்கையையும் காணமுடிகிறது. பெண்கள் உரலிலிட்டுப் பாடிக்கொண்டே குத்துவர்.

**மைபடு மால்வரை பாடினள் கொடிச்சி**

**ஐவன வெண்ணெல் குறூஉம் நாடனொடு (நற்.373)**

என்ற நற்றிணைப் பாடலில் கொடிச்சி பாடிக்கொண்டு ஐவன நெல்லை குற்றுகிறாள்.

கபிலர் மட்டுமல்லாது பிற புலவரும் தம் பாடலில் ஐவனம் நெல்லைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி**

**அருவியின் விளைக்கும் நாடனொடு (குறு.371)**

என்ற பாடலில், உறையூர் முதுகூத்தன் கூறும் செய்தியாக, மேகங்கள் தங்கும் மலையின் ஐவனமாகிய நெல்லை விதைத்து அருவியினால் விளைவிக்கின்ற குறிஞ்சி நிலத்தலைவன் என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து குறிஞ்சி நில மக்கள் ஐவனம் பயிர் செய்திருந்ததையும், அறிய முடிகிறது.

### 2.7. குவளை

**அம்ம வாழி, தோழி! பைஞ் சுனைப்**

**பாசடை நிவந்த பனி மலர்க் குவளை**

**உள்ளகம் கமழும் கூந்தல் மெல்லியல் (ஐங்.நூறு-225)**

இதில் குவளை மலரின் தன்மை பற்றி கபிலர் குறிப்பிட்டுள்ளார். சுனைகளுக்கு இடையே பசுமையான இலைகள் கொண்டு உயர்ந்து காணப்படக் கூடிய குளிர்ந்த குவளை மலரின் உள்பகுதி போல் நறுமணம் கமழும் கூந்தலை உடைய தலைவி என்று தோழி கூறுவதாகக் கூறும் செய்தியில் குவளை மலர் மிகுந்த நறுமணம் உடையது என்றும் தலைவியின் கூந்தலை கூறும்போது அவருக்கு குவளை மலரின் நினைவு தோன்றி அதனை ஒப்பிட்டு கூறுவதும் இயற்கையை மனித வாழ்வோடு புனைந்து கூறுவதில் கபிலர் வல்லவர் என்பதை உணர்த்துகிறது.

### 2.7.1. கருங்குவளையின் தோற்றம்

மலைச் சுனையின்கண் குவளை மலரும். குவளை மலரை மகளிர் கூந்தலில் சூடிக்கொள்வர். குவளை மலர் பற்றி கபிலர், குறிப்பிடுகிறார்.

**பாசடை நிவந்த பனிமலர்க் குவளை**

**உள்ளகம் கமழும் கூந்தல் மெல்லியல் (ஐங்225)**

பசிய சுனையின் கண்ணே பசிய இலைகட்கு இடையே உயர்ந்து தோன்றும் குவளை மலரின் உள்ளகம் போல் நறுமணம் கமழும் கூந்தலை உடைய மென்மை பண்புடைய அழகுடையவள் தலைவி என்று குறிப்பிட்டுள்ளார்.

இதில் சுனையில் மலரும் கருங்குவளையினை மகளிரின் மையுண்ட கண்களுக்குப் புலவர்கள் உவமை கூறியுள்ளனர்.

**குல்லை குளவி கூதளம் குவளை**

**இல்லமொடு மிடைந்த ஈர்ந்தண் கண்ணியன் (நற்.376)**

இதில், தலைவன் துளசி, காட்டுமல்லிகை, கூதாளி, குவளை ஆகிய மலர்களால் புனைந்த மலர்மாலையை அணிந்திருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

**குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை (குறு.291)**

பசுமையான சுனையில் பூத்த குவளை மலரை தலைவி அழுத கண்களுக்கு உவமையாகக் கபிலர் கூறியுள்ளார். சுனையில் பூக்கும் குவளை மலரை ஆங்காங்கே கபிலர் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். கபிலர் இயற்கையை தம் கற்பனைக்கேற்ப தலைவியோடு புனைந்து பதிவுசெய்துள்ளார்.

### 2.8. மலைக்குரிய குறிஞ்சி

மலை நிலத்திற்கு உரிய சிறந்த மலர் குறிஞ்சி. சங்க நூல்களில் இதனைப் பற்றிய குறிப்புகள் வேங்கை, காந்தள் ஆகிய மலர்களைப் பற்றிய குறிப்புகளைக் காட்டிலும் அருகியே காணப்படுகின்றன.

குறிஞ்சி மலையில் மிகுந்திருத்தலைக் கண்டு குறிஞ்சி சான்றவெற்பு எனவும் கடுங்கோற் குறிஞ்சியடுக்கம் எனவும் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். குறிஞ்சியின் தண்டினைச் சேர்த்து கடுங்கோள் குறிஞ்சி எனப் புலவர் பலர் குறித்துள்ளனர். சான்றாக,

**கருங்கோள் குறிஞ்சிப் பூக்கொண்டு (குறு.3)**

என்று தேவகுலத்தார் குறிப்பிட்டுள்ளார்.

**கருங்காற் குறிஞ்சி மதன்இல் வான்பூ,**

**ஓவுக் ண்டன்ன இல்வரை இழைத்த**

**நாறுகொள் பிரசம் ஊறு நாடற்குக் (நற்.268)**

குறிஞ்சி மலரில் தேன் மிகுதியாக இருப்பதைக் கண்டு மலையில் உள்ள தேனைப் பெருந்தேன் என்று குறிப்பிட்டனர். ஓவியத்தை ஒத்து விளங்கிய

மனையகத்தே குறிஞ்சித்தேன் மணம் மிக்கு விளங்கும் என்பதனை வெறிபாடிய காமக்கண்ணியார் நற்றிணைப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

"குறிஞ்சி மெல்ல வளரும் இயல்புடையது. ஆண்டுக் கணக்கில் வளர்ந்து முழு வளர்ச்சி பெறும். ஓராண்டுக்கு ஒருமுறை மலர்கின்ற குறிஞ்சியும் உண்டு. பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்கின்ற குறிஞ்சியும் உண்டு என பயிர்நூல் வல்லார் கூறுவர் என்றும் குறிஞ்சியின் சிலவகை இனங்கள் ஒரே தடவை சில ஆண்டுகள் வளர்ந்து பின்பட்டுப் போய்விடும் என்றும் குறிப்பிடுவர்".[21]

குறிஞ்சி பாடுவதில் வல்லவரெனப் போற்றப் பெறும் கபிலர், குறிஞ்சிப்பாட்டில் பல்வேறு மலர்களோடு சேர்த்துக் குறிப்பிடுவது தவிர வேறு இடங்களில் குறிஞ்சி மலரைக் குறிப்பிடவில்லை. குறிஞ்சிப்பாட்டில் கபிலர்,

**தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி (குறி.பா.63)**

என்ற பாடலில் குறிஞ்சிப் பூ தொண்ணூற்று ஒன்பது வகை பூக்களில் ஒன்றாக குறிப்பிட்டுள்ளார். குறிஞ்சி நிலத்தின் அடையாளமான குறிஞ்சி மலரைக் கபிலர் இவ்வாறாகப் பதிவு செய்கிறார்.

### 2.9. சந்தனத்தில் படரும் மிளகு

'சூழல் தொகுதியின் (Ecosystem)உட்கூறுகளாகத் தாவரங்கள், பிராணிகள் மற்றும் நுண்ணுயிரிகள் அமைகின்றன. இவையனைத்தும் ஒன்று சேர்ந்து உயிரின வளம் (Biodiversity)என்றழைக்கப்படுகின்றன.'[22] 'தாவரங்கள் மனிதன் வெளியிடும் கரிய வளியை (Carbondioxide)ஏற்றுக்கொண்டு மாந்தர்க்கு வேண்டிய உயிர் வளியை (Oxgen) வெளியேற்றுகின்றன. மனிதரும் தாவரமும் இந்த அடிப்படையிலேயே பிணைப்புக் கொண்டியங்குவதைக் காணலாம். ஆகவே பழந்தமிழர்கள் மரங்கள் அளப்பரிய கொடையாகிய மூச்சுக்காற்றை வழங்கியதால் தமிழர் மரங்களை நேசித்தார்கள்.'[23]

சங்க நூல்களுள் குறிஞ்சி நிலத்திற்குரியவையாகக் குறிக்கப்படும் மரங்களில் சந்தன மரமும் ஒன்றாகும். சந்தன மரத்தில் மிளகு கொடி படரும் காட்சியினைக் கபிலர் அகநானூற்றில் பாடுகின்றார்.

**கோழிலை வாழைக் கோள் முதிர் பெருங்குலை**
**ஊழுறு தீம்கனி, உண்ணுநர்த் தடுத்த**
**சாரற் பலவின் சுளையொடு, ஊழ்படு**
**பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்**

**அறியாது உண்ட கடுவன் அயலது**

**கறிவளர் சாந்தம் ஏறல்செல் லாது**

**நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும் (அகம்.2)**

வளமான இலைகளைக் கொண்ட வாழை மரம், பெரிய குலைகளை ஈன்று முதிர்ந்த கனிகளைத் தந்தது. அருகே பக்கமலையில் இனிமையான சுவையோடு கூடிய பலாப் பழங்கள் உள்ள மரங்கள் இருந்தன. பலா மரங்களில் இருந்து அருகில் உள்ள நீண்ட சுனையில் தேன் வடிந்து கொண்டே இருந்தது. அந்தத் தேனை உண்ட ஆண் குரங்கு மிளகு கொடியை உடைய சந்தன மரத்தில் ஏற இயலாது அருகில் உள்ள மணம் பொருந்திய மலர்ப்படுக்கையில் தூங்கும் காட்சியை கபிலர் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

கனியுடைய வாழை, சுவையுடைய பலா, அதிலிருந்து வடியும் தேன், அதனையுண்ட குரங்கு, சந்தன மரம் என தொடர்ச்சியான இயற்கைக் காட்சிகள் காட்டப்பட்டுள்ளன. அதிலும் சந்தன மரத்தை மட்டும் குறிப்பிடாமல் அதன் மேல் படரும் மிளகுக் கொடியையும் காட்சிப்படுத்தியுள்ள விதம் இயற்கையை வருணிப்பதில் கபிலர் தலையாயவர் என்பதைப் புலப்படுத்துகிறது.

உயர்ந்த நட்பு எஞ்ஞான்றும் உயர்வுடையதாக இருக்கும் என்பதற்குச் சந்தன மரத்தின் உச்சியில் அமைந்த தேனடையை உவமையாகக் கூறுகிறார் கபிலர்.

**தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**

**சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்**

**புரைய மன்ற, புரையோர் கேண்மை (நற்.1)**

தாமரையின் மகரந்தத்தினை ஊதித் தேனை எடுத்து உயர்ந்த சந்தன மரத்தில் தொடுக்கின்றது வண்டு. அத்தேனைப் போன்று மிக இனிமையானவர், உயர்ந்த பண்புடையவர் தலைவர் என்கிறாள் தலைவி.

### 2.9.1. மரங்களில் படரும் மிளகு

மிளகு கொத்தாகக் காய்க்கும். மிளகு கொடி மலைகளில் வளரும் இயல்புடையது. மிளகு கொடிகள் நிலைத்து வளரும் மலைச் சாரல்களைக் கறிவளர் அடுக்கம் என்று குறிப்பிட்டனர். மிளகு சந்தன மரத்தின் மீதும் குரம்பையின் மீதும் படரும் காட்சியைச் சங்க நூல்களின் புலவர்கள் கூறக் காணலாம்.

**கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறிஅருந்து**

**குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன் (குறு.288)**

*மிளகுக் கொடி வளரும் பக்கமலையில் தளிரைத் தின்னும் குரங்குகள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்திருக்கும் பெரிய மலை என்று தலைவி கூற்று அமைகிறது.*

*கறிவளர் அடுக்கம் என்று கூறுவதன் வாயிலாக மிளகு கொடிகள் நிலைத்து வளரும் மலைச் சாரல் குறிஞ்சிநிலம் என கபிலர் பதிவு செய்திருப்பதை அறியலாம்.*

**2.10. பலாவின் தோற்றம்**

*'முடி மன்னர்களும் சிற்றரசர்களும் மிகுந்த கவனத்தோடு தமது அரண்மனையின் முன்றிலில் ஒரு மரத்தை வைத்துப் போற்றி வந்தனர். அது ஒரு தோற்றச் சின்னம். அது மிகப் பண்டைக் காலத்திலிருந்து ஆளும் குடியோடு சேர்த்து எண்ணப்படுவது அக்கால மன்னர்களுக்கும் அதன் தோற்றத்தைப் பற்றியும், அது ஏன் தமது குலம், குடும்பம் என்பவற்றோடு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது என்பது பற்றியும் தெரியாத அளவிற்கு அம்மரபு புராதனமானது. அம்மரம் அவ்வூரைக் காக்கும் காவல் மரம் எனப்பட்டது. இவ்வாறாக மரங்கள் தமிழ்ச் சமூகத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.'*[24] *குறிஞ்சி நிலப்பகுதியில் மிகுதியாகக் காணப்படும் பலாவின் தோற்றத்தைக் கபிலர் பலவாறு கூறியுள்ளார்.*

**வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**

**சாரல் நாடா! செவ்வியை ஆகுமதி**

**யார அஃது அறிந்திசினோரே – சாரல்**

**சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள்**

**உயிர்த்தாவிச் சிறிது காமமோ பெரிதே (குறு.18)**

*மூங்கிலை வேலியாக உடைய வேரில் பழக் குலைகளை உடைய பலா மரங்கள் செறிந்த மலைப்பகுதி தலைவனின் நாடு என்று தோழி கூறுவதாகக் கபிலர் பாடியுள்ளார்.*

*தலைவனின் மலையில் வளர்ந்துள்ள பலாவின் சிறிய கொம்பில் பெரிய பழம் தன்னைத் தாங்கும் எவ்வகைப் பற்று கோடுமின்றித் தானே பழுத்துத் தொங்குவது போல, இத்தலைவியின் உயிராகிய கொம்பு போல சிறியதாய் உள்ளது. அதன்கண் விளங்கும் காமநோயோ பழம் போல் மிகவும் பெரியதாய் உள்ளது.*

இதில் உள்ளீட்டான பொருளில் பலாப்பழம் தன் அளவின்றி மேலும் முதிர்ந்தால் தன்னைத் தாங்கியுள்ள கிளையையும் முறித்து கீழே விழுந்து பயன்படாது ஒழியும். அதுபோலத் தலைவியின் காமம் மிகுமாயின், தங்களுக்குப் பயன்படாமல் அவள் உயிரைக் கெடுத்து ஒழியும் என்பது பொருள்.

பலாவின் தன்மையோடு தலைவியின் வருத்தத்தையும் புனைந்து பாடியுள்ளார் கபிலர். இயற்கையின் ஒவ்வொரு தன்மையையும் குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கையோடு கபிலர் இணைத்துப் பாடியுள்ளார்.

**முடமுதிர்ப் பலவின் குட மருள் பெரும்பழம் (நற்.353)**

**முன்றிற் பலவின் படுசுளை மரீஇ (நற்.373)**

**புள் எறி பிரசமொடு ஈண்டிப் பலவின் (குறி.பா.189)**

**. . . . . . . . . . . செவ்வேர்ச்**

**சினைதொறும் தூங்கும் பயம்கெழு பலவின் (நற்.77)**

**வேங்கை விரிஇணர் சிதறி தேன்சிதையூஉ**

**பலவின் பழத்துள் தங்கும் (அகம்.292)**

நற்றிணையில் பலாமரத்தின் வேர் செம்மை நிறமுடையது என்பதைக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பலா வேரின் தன்மையைப் பற்றி பலப் பாடல்களில் கபிலர் பதிவு செய்திருக்கிறார்.

### 2.11. முற்றிய தினைக் கதிர்கள்

மலை நிலத்தில் தினையினைப் பயிரிடுவர். குறிஞ்சி மக்களின் உணவில் மிகுதியும் தினை இடம் பெறும். நன்றாக முற்றிய தினைக் கதிர்கள் கரும்பு போல் காட்சியளிக்கும். யானை தன் மருப்பிலே கிடத்தியதைப் போன்று செழிப்புற்ற தினை தோற்றமளிப்பதாக கபிலர் கூறியுள்ளார்.

**நெல்கொள் நெடுவெதிர்க் கணந்த யானை**

**முத்துஆர் மருப்பின் இறங்குகை கடுப்பத்**

**துய்த்தலை வாங்கிய புனிறுநீர் பெருங்குரல்**

**நல்கோள் சிறுதினைப் படுபுள் ஓப்பி (குறி.பா.35-38)**

நெல்லைத் தன்னிடத்தே கொண்டு விளங்கும் உயர்ந்து வளர்ந்த மூங்கிலைத் தின்பதற்கு மேலே பார்த்தவாறு நின்ற ஆண்யானை அவ்வேதனையைத் தீர்க்கும் பொருட்டு முத்துக்கள் நிறைந்திருக்கும் தம் கொம்பின் வழியாக

இறங்கும் வளைவான தும்பிக்கையினைப் போன்று வளைந்த பெரிய கதிர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற தினைப் பயிரில் வந்து தினைக் கதிர் கவர்ந்து செல்லும் பறவைகளை விரட்டி விட்டதாக தோழி கூற்று அமைகிறது.

நன்கு முற்றிய பெருங்கதிர்கள் யானையின் தந்தத்திலிருந்து கீழே இறங்கும் துதிக்கையைப் போன்று இருப்பதாக கபிலர் கூறியுள்ளார். இவ்வாறு நன்கு முற்றிய தினைக் கதிர்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. அவற்றை உண்ண வரும் கிளிகள், கிளிகளை விரட்டும் தலைவி என இயற்கை வெளிகளை அடுத்தடுத்த நிகழ்வுகளில் இணைக்கிறார் கபிலர்.

கபிலர்,

**சாரற் புறத்த பெருங்குரல் சிறுதினைப்**

**பேர் அமர் மழைக் கண் கொடிச்சி கடியவும் (ஐங்.282)**

மலைச் சாரலின் புறத்தே விளைந்த பெரிய கதிரைக் கொண்ட சிறிய தினையின்கண் மடியும் சோலையில் வாழும் சிறிய கிளிகளை கொடிச்சி கடியவும் அது திரும்ப தினையை உண்ண வரும் என்பதன்வழி கிளியின் செயல்பாடுகளும் காட்சிப்படுத்தப்படுகின்றன

### 2.12. உணவாகும் மூங்கில்

அமை, கழை, பணை, உந்தூழ், வெதிர், வேய், வேரல் என்னும் சொற்கள் சங்க நூல்களில் மூங்கிலைக் குறிப்பிடுகின்றன. மூங்கில் புல் வகையைச் சார்ந்ததாகும். ஆதலால் மலைப் பகுதிகளில் மூங்கிலானது ஓங்கி வளர்ந்து அங்குள்ள உயிர்களுக்கு உணவாகவும் அமைகிறது.

**கருவிரல் மந்திக் கல்லா வன்பார்பு**

**இருவெதிர் ஈர்ங்கழை ஏறி, சிறுகோல்**

**மதிபுடைப் பதுபோல் தோன்றும் நாட (ஐங்.280)**

செறிந்து வளரும் மூங்கில் கிளை மதியை அடிப்பது போல் தோன்றுவதாக கபிலர் கூறியுள்ளார்.

**மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்**

**துறுகல் அடுக்கத் ததுவே பணைத்தோள் (ஐங்.291)**

திரட்சியையுடைய மூங்கிலை மகளிரின் தோள்களுக்கு உவமையாகக் கூறியுள்ளர்.

கிளைபா ராட்டும் கடுநடை வயக்கயிறு

முளைதருபு ஊட்டி வேண்டுகுளகு அருத்த (அகம்.218)

மலை வழியில் யானைகள் மிகுதியாக இருக்கும். ஆண்யானை தன் குடும்பத்துக்கு மூங்கில் முளைகளையும் தழைகளையும் வேண்டும் அளவு ஊட்டி அன்பு செய்கிறது. மூங்கில் முளைகளை யானை உட்கொண்ட செய்தி தெரிகிறது.

குரங்கின் வன்பறழ் பாய்ந்ததென இலஞ்சி

மீன்எறி தூண்டிலின் நிவக்கும் நாடன் (ஐங்.278)

வளைந்த மூங்கில் விரைந்து நிமிர்கின்ற தோற்றம், மீனெறி தூண்டில் போல இருப்பதாக கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக மூங்கிலின் நெடிதான உயரமும் மென்மையான மேற் பகுதியும் விலங்குகளுக்கான உணவாகவும் மூங்கிலானது அமைகிறது. மூங்கில் வளர்ந்துள்ள உயரமும் அவற்றில் உயிரினங்களின் ஆதிக்கமும் மலையின் இயற்கைத் தோற்றத்தை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

### 2.13. வாழை ஈன்ற அரும்பு

வாழை மரம் தன்னுடைய அனைத்தையும் உயிர்களுக்கு வழங்கக் கூடியதாகும். அத்தகைய வாழை மரமும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்று மலைப்பகுதியின் இயற்கையினை வருணிக்கின்றன. ‘பழந்தமிழர் மரங்கள், செடி, கொடிகள் மகத்துவம் தெரிந்து ஒற்றிப் போற்றியிருக்கிறார்கள். மகிழ்ச்சியான மங்களமான வைபவங்களுக்கு குலை தள்ளிய வாழை மரங்களைத் தமிழர் தெரிவு செய்திருப்பது நாகரிகத்தின் அடையாளம் தான்.’[25]

காந்தள் பூங்கொத்தோடு பொருந்திய வாழைப் பூவிலிருந்து பெருகி வரும் இனிய நீரை மந்தி பருகுகிறது. புதல்வனைப் பெற்ற மடந்தை தன் கொங்கையைக் கையாலே பிடித்து தன் புதல்வன் வாயில் வைப்ப, அக்குழந்தை அதன்கண் உள்ள பாலைப் பருகுவது போல் இக்காட்சி விளங்குவதாக குறிப்பிடுகின்றது.

புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை

முலைவாய் உறுக்கம் கைபோல் காழ்தட்

குலைவாய் தோயும் கொழுமடல் வாழை (நற்.355)

என்கிறார் கபிலர். மேலும், மற்றொரு பாடலிலும் வாழைமரம் குறித்த செய்தி காணப்படுகிறது.

பொருத யானை வெண்கோடு கடுப்ப

வாழை ஈன்ற வைஏந்து கொழுமுகை

மெல்இயல் மகளிர் ஓதி அன்ன

பூவோடு துயல்வரும் மால்வரை நாடனை (நற்.225)

சினமுடைய யானை அதன் வெண்மையான தந்தம் போரிட்டதால் குருதி படிந்து சிவந்திருக்கும். அத்தந்தம் போல் மலைவாழை ஈன்ற கூர்மையான கொழுத்த அரும்பு காணப்பெறும். அது மகளிர் முடித்த கூந்தலைப் போல் பூவோடு அசையும். இத்தகைய வாழைகளை உடையவன் நம் மலைக்குரிய தலைவன் என்கிறாள் தலைவி.

இவ்வாறாக வாழை மரம் காந்தளோடு பொருந்தியிருப்பதும் மலைவாழை ஈன்ற கூர்மையான கொழுத்த அரும்பு காற்றில் அசைவதும் இயற்கையின் அழகிய கோலமாக விளங்குகிறது. இதனை கபிலர் உவமையோடு காட்சிப்படுத்தியுள்ள விதம் கபிலர் இயற்கைப் புனைவுத் திறனை வெளிப்படுத்துவதாய் அமைகிறது.

**2.14. பளிங்காய் விளங்கும் சுனை**

அருவிக்கு அடுத்த பெருமை உடையது சுனையாகும். பண்டைய மக்கள் அருவியில் குளித்தும், சுனையில் குடைந்தாடியும் இன்புற்றனர் பண்டைய மக்கள். 'மலைகளில் இயல்பாகப் பள்ளங்கள் அமைந்திருக்கும் அவற்றில் மழை நீர் தேங்கும். அந்நீர் நிலையே 'சுனை' ஆகும். சுனைகள் குளம் போல மனிதரால் ஆக்கப்பட்டவை அல்ல. ஆதலின் அவற்றின் அமைப்பு ஒழுங்காயிராது படிகள் இரா, அவற்றின் ஆழத்தைத் துணிந்துரைத்தல் இயலாது. நீர் வற்றினால் உள்ளே இருண்டு கிடக்கும் சுனைகளும் உண்டு.'[26] 'கார்காலத்து மழை நீரைப் பாதுகாத்து ஆண்டு முழுமைக்கும் விலங்குகளின் நீர்க் களஞ்சியமாக உள்ளது சுனை.'[27]

சுனையின் நீர் தெளிவாக இருப்பதை எண்ணி அதனைப் பளிங்கினைச் சொரிந்து வைத்த தோற்றத்திற்கு கபிலர் ஒப்பிடுகிறார்.

பளிங்குசொரிவு அன்ன வாய்சுனை குடைவுழி (குறி.பா.57)

சிறிய காட்டில் உள்ள சுனையில் குவளைப் பூவைக் கொய்து வண்டு மொய்க்கும்படி தன் தலையில் சூடியிருப்பான் தலைவன் என தலைவி கூற்றுப் பாடலில் அமைகிறது.

குறுஞ்சுனைக் குவளை வண்படச் சூடி (அகம்.128)

இதில் சுனையில் குவளை மலர் மலர்ந்திருக்கும் செய்தியை அறியலாம். சுனையானது பளிங்கினை ஒத்ததான தெளிந்த தன்மையும் அதில் குவளை மலர்கள் பூத்துள்ளதும் இயற்கையைக் காட்சிப்படுத்துவதாய் அமைகிறது.

**2.15. வழியின் அருமை**

குறிஞ்சி நிலத்தைப் பாடிய புலவர்கள் குறிஞ்சி நிலத்தின் வழியருமைகளையும், மலை நெறியின் கொடுமைகளையும் குறித்துள்ளனர். குறிஞ்சி நிலத்தின் வழிகளைப் பாடியோர், விலங்கினங்களைப் பற்றியே குறித்துள்ளனர். மலையகத்தில் காணப்பெறும் விலங்குகள் ஒன்றோடொன்று பொருகுதல், இரவில் விலங்குகள் இரை தேடுதல் முதலியவற்றைக் குறிஞ்சிக்குரிய இயல்பிற்குத் தகக் கூறியுள்ளனர். தலைவன் இரவில் தலைவியைக் காண வருதலையும், அவ்வாறு வரும்பொழுது வழியின் கொடுமைகளைத் தலைவியும் தோழியும் நினைத்து அஞ்சுதலையும் புலவர்கள் தம் பாடலில் புனைந்துரைத்துள்ளனர். 'நுரைத்துச் சுழித்தடித்துப் பாய்ந்தோடும் வெள்ளப் பெருக்கு, பசித்து இரை தேடித்திரியும் கொடிய விலங்குகள், கும்மென்று கவிந்து உலகை விழுங்கி நிற்கும் இருள், இருளின் சூழலை மேலும் அஞ்சத்தக்க தாக்கிச் சில்லென்று உறைக்கும் குளிர் இன்ன பிறவும் வெருவத்தக்க சூழ்நிலையை உண்டாக்குகின்றன. ஆனால் அந்த இடைஞ்சல்களை வெல்லும் துணிவும் முயற்சியும் காதலர்களிடையே ஏற்படுதல் உயரிய சிறப்பினைத் தந்துவிடுகின்றன.'[28]

மலைவழியின் அருமையையும் கொடுமையையும் கபிலர்,

**கான மானதர் யானையும் வழங்கும்**
**வான மீமிசை வருமுநனி உரறும்**
**அரவும் புலியும் அஞ்சுதகவு உடைய**
**இரவழங்கு சிறுநெறி தமியை வருதி (அகம்.318)**

என்னும் அகநானூற்றுப் பாடல் அடிகளால் உணர்த்துகின்றார். இப்பாடலில் 'காட்டில் விலங்குகள், யானை, பாம்பு, புலிகள் திரிகின்றன. சில வேளைகளில் இடி இடித்து மழை பெய்யும். இத்தகைய இரவில் தனியாக நீ துணையின்றி வருகின்றாய்' என்று தோழி கூற்றுப் பாடலில் மலைவழியின் கொடுமையைக் கூறியுள்ளார்.

மலைவழி அச்சத்திற்குரியது என்பதை,

**வரிவயங்கு இரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்**
**பெருமலை விடரகம் வரஅரிது என்னாய் (அகம்.218)**

‘தலைவனே! நீ எங்களைச் சந்திக்க நள்ளிரவு நேரத்தில் வருகிறாய். மலை வழியில் யானைகள் மிகுதியாக இருக்கும். நீ வரும்வழி மிகுந்த அச்சத்திற்குரியது. புலிகள் தம் இரைக்காக எதிர்பார்க்கும் குகை நிறைந்த வழியில் நீ வருகிறாய். நீ இரவில் வராது, பகலில் வருக’ எனக் கூறும் தோழி கூற்றின் மூலம் மலைவழி அச்சத்திற்குரியது என்பதை அறியலாம். மலை வழியில் விலங்குகள் வேட்டையாடி இரத்தம் படிந்து காணப்படும் என்பதை கபிலர் குறிப்பிடுகிறார்.

மலையில் கற்கள் கூர்மையாய் நின்று வருத்தும் வழிகளைத் தம் பாடல்களில் புலவர்கள் உணர்த்தியுள்ளனர். கூர்மையான கற்கள் வாள் மேல் நடப்பதைப் போல் வருத்துவன.

இரவில் யானைகளைக் கொல்லும் புலிகள் திரியும், அச்சம் மிகுந்த காட்டு வழியில் நீ வந்தால் எங்களுக்கு அது கவலையையும் அச்சத்தையும் தரும் என தோழி வருந்தினாள்.

**அடுபுலி வழங்கும் ஆர்இருள் நடுநாள்**

**தனியை வருதல் அதனின் அஞ்சுதும் (அகம்.118)**

மலை வழிகளில் கற்கள் நடப்பட்டன போலவும், படுத்துக் கிடப்பன போலவும், எடுத்து நிறுத்தி வைக்கப்பட்டன போலவும் இருந்த காட்சிகள் பாடப்பெற்றுள்ளன.

இவ்வாறாக மலைப்பகுதிகளில் விலங்குகள் தங்களின் தேவைக்காக இங்கும் அங்கும் திரிகின்ற சூழல்கள் பதிவு செய்யப் பெற்றுள்ளன. அச்சம் தரும் மலைப்பகுதியாக விளங்குகின்றன. மலைப்பகுதிகளில் கற்கள் பல்வேறு விதமான கோணங்களில் அமைந்துள்ளனவாக கபிலர் மலைப்பகுதியினைக் காட்சிப்படுத்துகிறார். இவ்வாறான இயற்கை வெளியினைத் தலைவன் தலைவியின் அக வாழ்வோடு புனைந்து கபிலர் இயற்கையைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

### 2.16. மலையின் பேரொலி

மலையில் எதிரொலி தோன்றுவது இயற்கையின் விளைவு. பரந்துபட்ட நிலையில் மலையிடந்தோறும் ஒலி நில்லாது கேட்டுக் கொண்டேயிருக்கும். அருவியின் ஒலி, விலங்குகளின் பூசல் ஒலி, தினைக் காப்போர் ஒலி முதலியன மலையிடத்து யாண்டும் கேட்கப் பெறுவனவாகும்.

‘இயற்கையரங்கின் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கி உள்ளத்தே ஊடுருவிப் பாய்ந்து நிலைக்கும் சொற்களால் கற்பனைச் செறிவுறப் பாடும் திறம் உடையவர் கபிலர்.’[29] யானை புலியோடு போர் செய்தலால் புண்பட்டது. புண் கொண்ட யானையின் தந்தத்தை விரும்பிய அன்பற்ற கானவர் வில்லில் இருந்து அம்பைச் செலுத்துவர். அம்பு பட்டதால் யானை பிளிறிப் பேரொலியை உண்டாக்கும். அவ்வொலி இடியோசை போல் பெரும் முழக்கமாகக் கேட்கும்.

**புலியொடு பொருத புண்கூர் யானை**

**நற்கோடு நயந்த அன்பில் கானவர்**

**விற்சுழிப் பட்ட நாமப் பூசல்**

**உருமிடை கடிஇடி கரையும் (நற்.65)**

இவ்வாறு குறிஞ்சியில் பேரொலி உட்பட பல இயற்கை நிலைகளைக் கபிலர் உற்று நோக்கி உணர்த்தியுள்ள திறம் சிறப்பிற்குரியதாய் விளங்குகிறது.

### 2.17. மழைப்பொழிவு

வெப்பம் மிக்க ஞாயிற்றின் கதிர்கள் சுடும் வெப்பம் விளங்கும் நேரத்தில் வானத்தே வட்டமிட்டுத் திரிந்த பறவைகள் தங்கள் விருப்பத்திற்கு உகந்த கூடுகளுக்குப் பறந்தோடின. நீர் நிறைந்த கரிய கடலும் குறையும் படி இந்த மேகம் நீரை முகந்து கொண்டு வந்துவிட்டது போலக் காணப்படுகிறது. அவ்வளவு கருமேகங்கள் ஒன்று திரள்கின்றன வானத்தே. காற்று பலமாக அடிக்கிறது. இதனால் முரசு அதிர்வது போல, தொடர்ந்து இடியோசை கேட்கிறது. மேலே அடுக்கடுக்காகச் செல்லும் மேகங்கள் ஒன்று கலக்கின்றன. இனிய இசையுடைய முரசினையும் விளங்கும் அணிகளையும் உடைய முருகன், பகைவர்க்கு எதிராக ஏந்திய இலையமைப்பையுடைய வேல் ஒளி வீசுவதைப் போல இந்த மேக மண்டலமாகிய பகை கூட்டத்தைப் பிளந்து, ஊடறுத்துக் கொண்டு மின்னல்கள் தோன்றுகின்றன. இவ்வாறு மலைமீது மழை பொழிந்தது.

**உரவுக் கதிர் தெறூவும் உருப்புஅவிர் அமயத்து**

**விசும்பு அடு பறவை வீழ்பதிப் படர**

**நிறைஇரும் பௌவம் குறைபட முகந்துகொண்டு**

**அகல்இரு வானத்து வீசுவளி கலாலின்**

**முரசு அதிர்ந்தன்ன இன்குரல் ஏற்றொடு**

நிரைசெலல் நிவப்பின் கொண்மூ மயங்கி

இன்னிசை முரசின் சுடர்ப்பூண் சேஎய்

ஒன்னார்க்கு ஏந்திய இலங்கிஇலை எஃகின்

மின்மயங்கு கருவிய கல்மிசைப் பொழிந்தென (குறி.பா.45-53)

*இவ்வாறாக மலைப்பகுதியில் மழைப் பொழிவிற்கான தொடக்கம் முதலாக மழைப் பொழிவு வரைக்குமான அனைத்து நிலைகளையும் கபிலர் பாடலைப் படிப்பவர் மனக்கண்முன் நிறுத்துகிறார். இயற்கையின் செயல்பாடுகள் அனைத்தையும் தம் பாடலில் வெளிப்படுத்துவதில் கபிலர் வல்லவராய் விளங்குகின்றார்.*

### 2.18. மாலையின் வரவு

*குறிஞ்சிப் பாட்டில் மாலைக் காலத்தின் வருகையைக் கபிலர் நன்கு காட்சிப்படுத்தியுள்ளார்.*

எல்லை செல்ல ஏழ்ஊர்பு இறைஞ்சி,

பல்கதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய

மான் கனம் மரமுதல் தெவிட்ட ஆன்கணம்

கன்று பயிர் குரல மன்று நிறை புகுதர

ஏங்கு வயிர் இசைய கொடுவாய் அன்றில்

ஓங்கு இரும் பெண்ணை அகமடல் அகவப்

...... ...... ...... ...... ...... ...... ......

வானம் மாமலை வாய்சூழ்பு கறுப்ப, கானம்

கல்லென்று இரட்ட, புள்ளினம் ஒலிப்ப,

சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத்

துனைஇய மாலை துன்னுதல் காணுஉ (குறி.215-230

*பகல் பொழுது போக, ஏழு குதிரைகளைப் பூட்டிய தேரைச் செலுத்துகின்ற பல கதிர்களையுடைய ஞாயிறு மேற்கு மலையில் மறைந்தான்.*

*மான் கூட்டங்கள் திரண்டு கூடும். பசு தம் கன்றுகளை அழைக்கும். ஊதுகொம்பு போல வளைந்த வாயினையுடைய அன்றில் பறவைகள், பனையின் உள்மடலில் இருந்து பேடுகளை அழைக்கும். பாம்புகள் இரை தேடிச் செல்ல மாணிக்கத்தை உமிழும் இடையர்கள் இனிய குழலில் ஓசை எழுப்புவர். அந்தணர்கள் அந்திக் காலத்துச் செய்யும் கடன்களைச் செய்வர்.*

மனைகளில் மகளிர் விளக்கினை ஏற்றுவர். காட்டில் வாழ்பவர், விண்ணைத் தீண்டும் பரண்களின் மேல் கோலால் நெருப்பை உண்டாக்கி எரிப்பர்.

பெரிய மலையைச் சூழ்ந்து கொண்டு இடி முழங்கும். காட்டில் உள்ள விலங்குகள் எல்லாம் ஒன்றை ஒன்று அழைக்கும். பறவைகள், தம் கூடுகளிலிருந்து ஆரவாரம் செய்யும். சினம் கொண்ட வேந்தன், படை நடத்திச் செல்லும் போர்க்களத்தைப் போல விரைந்த மாலைப் பொழுது வந்தது. 'படைப்பிற்கு மிகத் தேவையானது உள்ளெழுச்சி. இவ்வெழுச்சிக்கும் இயற்கைக்கும் தொடர்பு உண்டு. கவிஞனுக்கு உள்ளெழுச்சி ஊட்டுவன பல. அவற்றுள் இயற்கையும் ஒன்று.'[30]

இவ்வாறாக மாலைப் பொழுதின் வரவை அடுத்தடுத்த நிகழ்வுகளின் வாயிலாக கபிலர் நன்கு பதிவிடுகிறார். இயற்கையின் கூறுகள் அனைத்தையும் தம் பாடல்களில் காட்சிப்படுத்தியுள்ளார்.

### 2.19. மலர்களால் மறைந்த காட்டாறு

குறிஞ்சிக் காட்சியில் அருவிநீர் பாய்ந்து ஆறாக ஓடுதலைப் புலவர்கள் கண்டு அவற்றின் தன்மைகளைக் கூறியுள்ளனர். இடியுடன் மேகம் மழை பெய்து, பல செடி கொடிகளும் அடித்துவரப்படுவதால் ஆற்றின் புதுவெள்ளத்தில் நீராடின் பிணி தீரும் என்று குறிப்பிட்டுள்ளது.

**ஆர்கலி வானம் தலைஇ நடுநாள்**

**கனைபெயல் பொழிந்தன கானக்கல் யாற்று**

**முனிஇலை கழித்தன முகிழ்இண ரொடுவரும்**

**விருந்தின் தீநீர் மருந்தும் ஆகும்** (நற்.53)

அடர்ந்த மரங்களைச சூழ்தலாலும் ஆழமிக்க நீரையுடையமையாலும் கருமை படிந்ததாய்க் காட்சிதரும் ஆறு இரவினைப் போன்று இருள் செறிந்ததென என்று கான்யாற்றின் தோற்றம் குறிப்பிடப்படுகின்றது.

**இரவின் அன்ன இருள் தூங்கு வரைப்பின்**

**குமிழி சுடிலும் குண்டுகய முடுக்கர்**

**அகழ் இழிந்தன்ன கான்யாற்று நடவை** (மலைபடு.212-214)

இவ்வாறு பிற புலவர்கள் ஆற்றின் தோற்றத்தைக் குறிப்பிடும் நிலையில் கபிலரும் ஆற்றின் தோற்றத்தைக் காட்சிப்படுத்துகிறார்.

நீர்நிறம் கரப்ப, ஊழுறுபு உதிர்ந்து

பூமலர் கஞலிய கடுவரல் கான்யாற்று

கராஅம் துஞ்சும் சல்உயர் மறிசுழி (அகம்.18, 1-3)

வலிமையான முதலைகளும், கற்பாறைகளும், நீர்சுழிகளும் உடைய தண்ணீரே தெரியாதவாறு மலர்களால் மூடப்படும் பெரும் காட்டாறு என்று ஆற்றின் காட்சியினை கபிலர் அகநானூற்றுப் பாடலில் பதிவு செய்துள்ளார்.

மலையிலிருந்து அருவியாய் வீழ்ந்த நீரானது தரைப் பகுதியில் ஆறாய் பெருக்கெடுத்து ஓடுகிறது. அத்தகைய ஆற்றில் பிற உயிருக்கு தீங்கு தரும். வலிமையான முதலைகளும், கற்பாறைகளும் அதிகமான நீரோட்டத்தை வெளிப்படுத்தும் வகையிலான நீர்ச்சுழிகளும் காணப்படுவது குறிப்பிடப் பட்டுள்ளது. அவ்வாறான நிலையில் மேற்குறிப்பிட்டவையெல்லாம் மறைக்கும்படியாக மலர்களால் மூடப்பட்ட நிலையில் காட்டாறானது காட்சியளிக்கிறது என்பது கபிலரின் இயற்கைப் புனைவுத் திறனை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

### 2.20. மணியை உமிழும் அரவம்

அரவு, மாசுணம், பாந்தள் என்னும் சொற்கள் பாம்பினைக் குறிப்பன. பாம்பு இரவில் இரை தேடித் திரியும். இது புற்றுகளில் வாழும். இடியால் தாக்குண்டு வருந்தும். மயிலைக் கண்டு அஞ்சும் இயல்புடையது.

பாம்பு மணி உமிழும் தன்மையைச் சங்கப் புலவர்கள் குறித்துள்ளனர். வண்டின் நிறத்தினைக் கண்டு பாம்பு தன் மணியெனக் கருதி மயங்கும். இரவில் பாம்பு இரை தேடுங்கால் மணியை உமிழ்ந்து அதன் ஒளியில் இரை தேடும்.

பாம்புமணி உமிழப் பல்வயின் கோவலர் (குறி.பா.221)

பாம்புகள் தம் மாணிக்கத்தை உமிழ்வதாக எண்ணிய செய்தியை இப்பாடலில் கபிலர் கூறியுள்ளார்.

அரவும் புலியும் அஞ்சுதகவு உடைய (அகம்.318)

காட்டில் விலங்குகள், யானை, பாம்புகள், புலிகள் திரிகின்றன.

இரவின் அஞ்சாய் அஞ்சுவல் அரவின்

ஈர்அளைப் புற்றம் கார்என முற்றி (நற்.336)

மலையிடத்துச் சிறிய வழியில் பாம்புகள் இருப்பதால் நீ இனி வருதல் வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது.

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்ற ஒரு வழக்குண்டு. அத்தகைய பாம்பானது மாணிக்கத்தை உமிழும் என்றும் இரவில் வழிப்பாதைகளில் திரிந்து உயிர்களுக்குத் தீங்கு செய்யவல்லது என்பதையும் கபிலர் குறிஞ்சி நிலத்தில் காட்சிப்படுத்தியுள்ளார்.

**2.21. அருவி**

மலையிலிருந்து அழகொழுக ஓடிவரும் அருவிக் காட்சியை கபிலர் குறிப்பிட்டுள்ளார். அருவியின் தோற்றம், ஓடிவரும் அருவி எழுப்பும் ஒலி முதலியவற்றை அழகுபடக் கண்டு கபிலர் பாடல் இயற்றியுள்ளார். அருவியின் ஓசை யானைக்கு தாலாட்டு போலிருந்ததாக இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கறங்கு வெள்அருவி ஒலின் துஞ்சும்**

**பிறங்கு இருஞ்சோலை நல்மலை நாடன் (குறி.கலி-6)**

அருவியில் இறங்கி நீர் குடிக்க யானை வந்தது. அந்த அருவியின் நீர் விழும் ஓசை யானைக்குத் தாலாட்டுப் போலிருந்தது. அதைக் கேட்ட யானை அமைதியாகத் தூங்கியது என்று அருவியின் ஓசையைக் குறிப்பிட்டுள்ளார்.

**வரைஇழி அருவிப் பாட்டொடு பிரசம்**

**முடிவுசேர் நரம்பின் இம்மென இமிரும் (அகம்.318)**

இதில் மலையில் இருந்து விழுகின்ற அருவி ஓசையுடன் வண்டினங்கள் இணைந்து ஒலிப்பது எவ்வாறு இருக்கிறதெனில் யாழ் நரம்பின் இசை போல இம்மென்று ஒலிக்கும். இப்பாடலின் அருவி ஒலி இனிமையான இசைக்கருவியான யாழ் ஒலியை ஒத்து இருப்பதாக கபிலர் குறிப்பிடுகிறார்.

**மால்வரை இழிதரும் தூவெள் அருவி**

**கல் முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரற் (குறுந்-95)**

பெரிய மலையிடத்திலிருந்து தூய வெண்மை நிறத்தையுடைய அருவிகள் விழும். அவை, பாறைகளின் வெடிப்புகளில் பட்டு ஒலிக்கின்றது. பல மலர்களை உடைய மலைப்பகுதியில் அருவி ஒலிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக அருவியின் ஒலியானது பல்வேறு ஒலிகளைக் கொண்டிருப்பதாக இயற்கையினை கபிலர் நன்கு காட்சிப்படுத்தியுள்ளார்.

### 2.21.1. துகிலாய் தோன்றிய வெள்ளருவி

குறிஞ்சி நிலமக்களின் தொழில்களுக்கு ஆதாரமாக அமைந்த அருவியின் தன்மை இங்கு கூறப்பட்டுள்ளது. தலைவனின் நற்பண்புக்கு உவமையாக அருவியை ஒப்பிட்டு கூறியுள்ளார் கபிலர். 'கபிலர் வழங்கும் குறிஞ்சிக் காட்சிகள் இயற்கைப் பொருள்களின் செறிவு மிக்குச் சிறந்துள்ளன. அக்காட்சிகளுக்கு உயிர் வழங்குவன போல முழங்கும் அருவிகளும் பாடும் வண்டினங்களும் தம் ஓசைச் சிறப்பை நல்குகின்றன.'[31]

**மால்வரை இழிதரும் தூவெள் அருவி**

**கல்முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரற்**

**சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்**

**நீர் ஓரன்ன சாயல்**

**தீ ஒரன்ன என் உரன் அவித்தன்றே (குறுந்-95)**

இதில் தலைமகன் பாங்கனுக்கு கூறும் விதமாக அமைகிறது. தலைவி மலையில் விழும் அருவி நீர் போல தூய்மை தன்மை உடையவள் என்கிறார். அருவியை மட்டும் பார்த்து விட்டு அதன் அழகை மட்டும் கூறாது அருவியைப் போல வெண்மை நிறமும் தூய்மை தன்மையும் உடையவள் தலைவி என்று குறிப்பிடும்போது தலைவன் தன் தலைவியை உயர்ந்த நிலையில் வைத்து பார்க்கும் மனப்பாங்கு புலப்படுகிறது. பண்டையத் தமிழர்கள் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்ததை உணர முடிகிறது. தலைவியின் சாயலைக் கண்டு தன் வலிமை இழந்து காணப்பட்டதையும் தலைவன் வாயிலாக கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

'இயற்கைக் காட்சிகள் மனிதனுக்கு இதய உவகையையும் எல்லையற்ற களிப்பையும் தடையின்றித் தருகின்றன. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய எல்லாக் காலத்து மனித இதயத்தையும் கவர்ந்து தன் வயப்படுத்துவதோடு தன் மயமாக்கும் ஆற்றல் இயற்கைக்கு உண்டு'.[32] அந்தவகையில் அருவியானது வெண்மையாக, தூய்மையாக அமைந்துள்ளதை மேற்கண்ட பாடல் குறிப்பிடுகிறது. மழையானது வானிலிருந்து பூமியை வந்தடையும் வரை தூய்மையாக வெண்மையாகவே இருக்கிறது. அந்தவகையில் அருவி நீரில் எந்த கலப்பும் சீர்கேடும் இல்லாமல் காட்சியளிப்பதை கபிலர் 'தூவெள்அருவி' என்ற பதத்தால் கபிலர் குறிப்பிடுள்ளார். அருவி மனக்கண்ணில் காட்சிப்படுத்தப்படுவது கருதத்தக்கதாகும்.

**அவிர்துயில் புரையும் அவ்வெள் அருவி (குறி. பா.52)**

உயர்ந்த மலையினின்றும் வெண்மையான துகிலைப் போல் வீழ்கின்ற அருவி என்று குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிட்டுள்ளார். மலையின் உச்சியில் நீரைச் சுமந்த மேகங்கள் குளிர்ச்சியடைந்து மழைப்பொலிவை ஏற்படுத்துகின்றன. மலையிலிருந்து கீழே விழும் நீரை 'அருவி' என்ற சொல்லால் அழைக்கின்றனர். அத்தகைய அருவியைக் கபிலர் பலவாறு காட்சிப்படுத்துகிறார். வெண்மையான அருவி என்றும் வெண்மையான துகிலைப் போன்றும் காட்சியளிப்பதாக அருவியை கபிலர் குறிப்பிடுகிறார். துகில் அசைவது போன்று அருவி வீழ்வதைக் குறிப்பிட்டுள்ள விதம் கபிலரின் இயற்கைப் புனைவுத்திறனுக்கு தக்கதோர் சான்றினைப் பகர்கிறது.

இதனைத் தொடர்ந்து நற்றிணைப் பாடலில் அருவியை பலதேவனுக்கு ஒப்பிட்டு கூறுகிறார் கபிலர்,

**மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்**

**வாலியோன் அன்ன வயங்கு வெள்அருவி (நற்.32)**

இந்நற்றிணைப் பாடலில் மலையை நீலநிறமுடைய திருமாலுக்கும் மலையிடத்து விழுகின்ற அருவியை திருமாலின் அண்ணனாகிய பலதேவனுக்கும் உவமையாகக் கூறுகின்றார். இப்பாடலில் குறிஞ்சி நிலத்தாரின் தெய்வம் முருகன். முருகனை மட்டும் தம் பாடலில் கூறாமல் முல்லை நிலக்கடவுளான திருமாலைப் பற்றியும் பலதேவனைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயற்கையைக் காணும்போது தெய்வத்தோடு ஒப்பிட்டு கூறும் சிந்தனை போற்றுதற்குரியது. பண்டையத் தமிழர்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர் என்ற கருத்திற்கு ஏற்ப இப்பாடலிலும் அருவியை பலதேவனோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இதன்வழி இயற்கையையும் கடவுளையும் கபிலர் ஒன்றாகக் கண்டார் என்பதாகக் கருதலாம்.

'வற்றாப் பேரழகின் நிலைக் களங்களாக உள்ள இவை யாவற்றுக்கும் எழில் ஊட்டுவன அருவிகளேயாம். அழகுக்கு அழகு தருவன அருவிகள். மலைகளின் உச்சியிலிருந்து ஒளியும் வளமும் புலப்படுத்திப் பொலிவூட்டும் அருவிகளின் காட்சி புலவர்களை ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.'[33] குறிஞ்சிப் பாட்டில் வானுலகில் இருக்கும் தேவர்களும் விரும்பும் அருவியின் அருகில் அமைந்துள்ள அழகிய பூஞ்சோலை என்று மலைப் பகுதியைக் குறிப்பிட்டுள்ளார்.

அருவிடர் அமைந்த களிறுதரு புணர்ச்சி

வான்உரி உறையுள் வயங்கியோர் அவாவும் (குறி.பா.212-213)

என்ற அடிகள் விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகம் வந்து அதன் அழகை தேவர்கள் விரும்பி அச்சோலையின் அழகைக் காண்பர் என்று கபிலர் குறிப்பிடுகிறார். இக்கவியை வாசிக்கும் நிலையில் அந்த மலைப்பகுதியைக் கண்ட உணர்வைப் பெறலாம். பூக்கள் மலிந்திருக்கும் சோலையானது பல வண்ண ஓவியங்களின் காட்சியாக மலைப்பகுதியைக் கபிலர் தம் கண்முன்னே காட்டுகிறார். 'இயற்கை வழங்கும் காட்சிகள் குறிப்பிட்ட சில பருவங்களில் இடங்களிலும் எல்லையற்ற சிறப்புடையனவாய், மனிதனுடைய நாடி நரம்புகளையும் இயல் செயல்களையும் கட்டுப்படுத்துகின்றன'[34] என்பது எண்ணத்தக்கதாகும்.

'மண்ணுலகில் புண்ணியம் செய்தவர்கள் சொர்க்கத்திற்குச் செல்வர்' என்ற நம்பிக்கை நாட்டுப்புறத்தில் உண்டு. ஆனால் கபிலரின் பாடலில் சொர்க்கத்தில் உள்ள தேவர்களே மண்ணுலகத்திற்கு விரும்பி வருவதாகக் காட்சிப்படுத்தியிருப்பது இயற்கையின் அழகினை வர்ணிக்கும் நிலையாக அமைந்துள்ளது.

மனிதன் மட்டும் இயற்கை அழகில் தோய்ந்து இன்பத்தை நுகர்தலோடு விட்டுவிடாது தெய்வமும் அழகில் தோய்ந்ததாகக் குறிப்பிடும் கபிலரின் புனைவுத் திறனைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

### 2.22. குறிஞ்சியில் பறவைகள்

குறிஞ்சித்திணையில் பறவைகள் விலங்குகள் ஆகியவற்றை இயற்கைக் காட்சிகளாய் கபிலர் தம் படைப்பில் புனைந்துள்ளார் என்பதை சங்க அகப்பாடல்கள் உணர்த்துகின்றன. பறவையினங்களில் மயில், கிளி, வண்டு போன்றவை பற்றி குறிஞ்சி நிலத்தில் பாடப்பட்டுள்ளன.

#### 2.22.1. அச்சம் தரும் கூகை

இன்று நாம் ஆந்தை என்று கூறும் பறவையையே சங்க காலத்தில் நம் முன்னோர்கள் கூகை என்று அழைத்தனர். கூகையானது மரப்பொந்துகளிலும், கற்குகைகளிலும், இடிந்த கட்டிடங்களிலும் காணப்படும் குறிஞ்சி நிலத்தின் ஒரு பறவை ஆகும். குறிஞ்சி நிலத்தில் உள்ள கூகையைக் கபிலர், குன்றக் கூகை என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**குன்றக் கூகை குழறினும் முன்றிற்**

**பலவின் இருஞ்சினைக் கலை பாய்ந்து உகளினும்**

**அஞ்சும்மன் அளித்து – என் நெஞ்சம் இனியே (குறு.153)**

*‘முன்பெல்லாம் குன்றின்கண் வாழும் கூகை, தன்னுடைய பெடையைக் கூவியழைத்தாலும் முன்றிலில் உள்ள பலா மரத்தின் பெரிய இலைகளில் ஆண்குரங்கு தாவி விளையாடினாலும் என் நெஞ்சு அச்சத்தை அடையும்’ என தலைவி தலைவனை நினைத்து அஞ்சி தன் கருத்தைத் தன் தோழியிடம் கூறுவதாகப் இப்பாடல் அமைந்துள்ளது. இதில் கூகை குழறுவது அச்சம் தரும் காரியம் நடக்கப் போகிறது என்ற நம்பிக்கை குறிஞ்சி நில மக்களிடம் உள்ள ஒரு நம்பிக்கையாகும். கிளியும் ஒரு பறவைதான் ஆனால் அதை தூது செல்லும் நல்ல செயலுக்கு பயன்படுத்துவதும், ஆந்தை தீய சகுனத்தைத் கூறுவதாக எடுத்துக்கொள்வதும் பண்டைய தமிழர்களிடையே இருந்து வரும் வழக்கமாகும்.*

*இன்றும் இந்த நம்பிக்கை மக்களிடையே உள்ளது. எனவே, கூகையானது குன்றிலும், மரப்பொந்துகளிலும் வாழும் தன்மையுடையது என்பதை இதன்வழி அறியலாம். இவ்வாறாக பறவைகளின் செயல்பாடுகளை மனித வாழ்க்கையோடு ஒன்றிணைத்து இயற்கைச் சூழலை கபிலர் காட்சிப் படுத்தியுள்ளார்.*

### 2.22.2. அச்சமுறும் கிள்ளை

*குறிஞ்சி நிலப் பறவை இனங்களில் கிளியும் ஒன்று. அக்கிளிகளை உள்ளுறை பொருளிலும் கபிலர் புனைந்துள்ளார். பெரும்பாலும் கிளிகள் தினை கவரும் செய்திகளே குறிஞ்சித்திணைப் பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. கபிலரின் கிள்ளைப்பத்தில் கிளிகள் மிகுதியாகத் தினை கவரும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.*

**நெடுவரை மிசையது குறுங்கால் வருடை**

**தினையாய் கிள்ளை வெரூஉம்நாட (ஐங்-287)**

*மலைப்பரப்பில் விளையும் தினையினை பல இனங்களும் உண்ண வருகின்றன. நன்கு விளைந்திருக்கும் தினைகளுக்கு அருகில் மான் வருகிறது. தன்னைவிட பெரிதாய் இருக்கும் மானைக் கண்டு அஞ்சி கிளிகள் ஓடுவதாய் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காட்சியில் இயற்கையில் விளைந்திருக்கும் தினைக்கதிர்கள் அவற்றிக்கு அருகில் குறுகிய கால்களை*

உடைய வருடை மான்கள் இவற்றைக் கண்டு அஞ்சும் கிளிகள் என பல்வேறு உயிரினங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மான்களால் கிளிக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது என்றாலும் கிளிகள் மான்களைக் கண்டு அஞ்சுகின்றன. இந்தக் காட்சியின் வழி தலைவன் தலைவியின் சுற்றத்தாரைக் கண்டு அஞ்சுவதாக அகவாழ்வின் நிலைப்பாடுகளைக் கபிலர் உள்ளுறைச் செய்தியாக்கியிருக்கிறார். இவ்வாறாக தாவரங்கள், விலங்குகள் என கபிலரின் பாடல்களில் இயற்கைச் சூழல் கண்முன்னே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**புள் ஆர் இயத்த விலங்கு மலைச்சிலம்பின்**

**வள் உயிர்த் தெள்விளி இடை இடைப்பயிற்றி**

**கிள்ளை ஓப்பியும் கிளை இதழ் பறியா**

**பைவிரி அல்குல் கொய்தழை தைஇ**

**பல்வேறு உருவின் வனப்பு அமை கோதைஎம்**

**மெல்லிரு முச்சி கவின் பெரக்கட்டி (குறிஞ்.99-106)**

இதில் தலைவியும் தோழியும் நீராடிய பின்பு மழை பெய்து கழுவிய அகன்ற பாதையில் அம்மலர்களைக் குவித்து ஒன்றற்கொன்று குறுக்கிட்டுக் கிடக்கும் பக்கமலையில் இசைக் கருவிகள் போன்ற ஓசைதரும் பறவை இனங்களையும், பெரிய சத்தத்துடன் தெளிந்த சொற்களை இடைஇடையே கூறிக் கிளிகளை ஓட்டியதாகக் கூறியுள்ளார் கபிலர். அதுமட்டுமல்லாது தழை ஆடை செய்துஇடுப்பில் கட்டிக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். கிளியை 'ஆயோ' என்று ஒலி எழுப்பி ஓட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார். பறவையின் ஒலி பல்வேறு இசைக்கருவி போல் முழங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மலர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பறவைகள் பலவும் பல்வேறு ஓசைகளை இசையாய் வழங்குகின்றன. அவற்றுடன் கிளிகளும் இடம் பெறுகின்றன. இவையனைத்தும் பாடல்கள் வழி இயற்கைக் காட்சியாய் அமைகின்றன. ஒரு நிகழ்வினை மட்டும் கபிலர் தம் பாடலில் குறிப்பிடாமல் அடுத்தடுத்த நிகழ்வுகளை அடுக்கிச் செல்கிறார். இவ்வாறாக ஒவ்வொரு காட்சியும் ஓவியமாகக் காட்சியளிக்கின்றன.

### 2.22.3. நடனமாடும் மயில்

மயில், தோகை விரித்தாடி மலைக்கு அழகூட்டுவதைச் சங்கப் புலவர்கள் தம்பாடல்களில் குறித்துள்ளனர். மயில் தன் நீண்ட தோகையுடன் மரத்தின்

மீது அமர்ந்த காட்சி கபிலரை ஈர்த்திருக்கிறது. மாமரத்திலும், வேங்கை மரத்திலும், பலா மரத்திலும் அமர்ந்து அழகுடன் தோன்றும் காட்சி பூக்களைக் கொய்ய வந்த மகளிர் போலக் காணப்பட்டதாகவும் கபிலர் குறிப்பிட்டுள்ளார். மயிலின் நிறம் காயாம் பூவின் நிறத்தை ஒத்து விளங்கும். மயிலின் காலடி நொச்சி மலரினைப் போலத் தோன்றும்.

**கழைவளர் அடுக்கத் தியலி யாடுமயில் (அக-82)**

என்ற அடிகள் மழை பெய்ய வரும் முகிலை நினைத்து மயில் களித்ததாகும். அவ்வாறு ஆடும்போது அரங்கிலாடும் விறலி போல் தோன்றும். தெய்வத்திற்கிட்ட பலி உணவை உண்டு நடுங்கும். தேனோடு கலந்த கள்ளினை அருந்தி நடை தளரும் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. மயில் ஆடுதலின் அதன் உண்மை இயல்பு குறிப்பிடப்படுகிறது,

**கலிமழை கெழ்இய கான்யாற்று இகுகரை**

**ஒலிநெடும் பீலி துயல்வர இயலி**

**ஆடுமயில் அகவும் நாடன் நம்மொடு**

**நயந்தனன் கொண்ட கேண்மை (குறுந்-264)**

என்ற பாடலில் ஆரவாரத்தோடு பெய்கின்ற மழை பொருந்திய காட்டாற்றில் வெள்ளம் பாய்கிறது. அலைமோதும் கரைகளின் மேல், தழைத்து நீண்ட, தோகை அசையும்படி நடந்து ஆடுகின்ற மயில்கள் அகவுதலைச் செய்யும் அந் நாட்டையுடைய தலைவன் தம்மொடு விருப்புடையவனாகக் கொண்ட நட்பானது நாம் பசலையை அடைந்தாலும் அந்தப் பசலையொடு நட்பானது பொருந்திராது. தன் நெஞ்சம் தலைவர் கொண்ட நட்பை உறுதியாக எண்ணியிருத்தலினாலே ஆற்றியிருப்பேன் என்று தலைவி குறிப்பிடுகிறாள்.

**கருங்கால் வேங்கைக் செவ்வீ வாங்குசினை**

**வடுக் கொளப் பிணித்த விடுபுரி முரற்சிக்**

**கை புனை சிறுநெறி வாங்கி, பையென**

**விசும்பு ஆடுஆய் மயில் கடுப்ப யான் இன்று**

**பசுங் காழ் அல்குல் பற்றுவனன் ஊக்கிச் (நற்-222)**

இந்தப் பாடல் தலைவியிடம் தோழி கூறுவதாய் அமைகிறது. அவ்வாறு ஆகாயத்தில் சென்று வரும் பொழுது கவலை தணிய தலைவரின் உயர்ந்த மலையைக் காணலாம் என்றும் தோழி குறிப்பிடுகிறாள். பெண்ணிற்கு மயிலை உவமை கூறும் போக்கு காலங்காலமாக இருந்து வரும் நிலையாகும்.

**அணங்கு கொல் ஆய் மயில் கொல்லோ கனங்குழை**

**மாதர்கொல் மாலும் என் நெஞ்சு (குறள்-1081)**

என்ற குறளில் தலைவியை மயிலோ என ஐயுறும் போக்கு அமைந்துள்ளது. மயிலானது மற்ற பறவைகள் போல் தொடர்ச்சியாக வானில் பறக்காத பறவையாகும். எனவே மயிலின் சாயலை ஒத்திருக்கும் தலைவி ஊஞ்சலில் வானில் பறக்கும் பொழுது ஆகாயத்தில் பறக்கும் அழகிய மயில்போல ஒரு காட்சி உருவகப்படுத்தப்பட்டுள்ளது கபிலரின் இயற்கைப் புனைவுத் திறனை வெளிப்படுத்துகிறது. இதில் ஆகாயத்தில் பறக்கும் அழகிய மயிலை தலைவியின் அழகிற்கு ஒப்புமைக் காட்டியுள்ளார்.

**வேங்கை வீ உகும் ஓங்கு மலைக்காட்சி**

**மயில் அறிபு அறியாமன்னோ**

**பயில் குரல் கவரும் பைம்புறக் கிளியே (நற்-13)**

என்ற பாடலில் வேங்கை மரத்தின் மலர்கள் உதிர்ந்து கிடக்கும் மலைப்பகுதியில் உள்ள மயில்கள் அறியமாட்டா என்று கருதிக் கொண்ட கிளிகள் தினைக் கதிர்களைக் கவர்ந்து செல்லும், அதனால் தினைக் கதிர்கள் அழிகின்றன என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மலைப்பகுதியில் மயில்கள் காட்சிப்படுத்தப்பட்டாலும் அவற்றுடன் எங்கும் படர்ந்திருக்கும் வேங்கை மலர்களும், அருகில் தினைக்கதிர்களும் அவற்றைக் கவர்ந்து செல்லும் கிளிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறாக ஒவ்வொரு சூழலையும் கபிலர் காட்சிப்படுத்தும் வேளையில் இயற்கைச் சூழலை நுணுக்கமாக காட்சிப் படுத்தியுள்ளார்.

**விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை**

**பூக்கொய் மகளிரின் தோன்றும் நாட (ஐங்-297)**

என்ற பாடலில் ‘மலர்ந்த மலர்களைக் கொண்ட வேங்கை மரத்தில் பெரிய கிளையில் அமர்ந்துள்ள மயில் மரத்தில் ஏறி மலர்கொய்யும் பெண்போலத் தோன்றுகின்ற மலை நாடனே’ எனத் தலைவனிடம் தோழி கூறுவதாகப் பாடியுள்ளார்.

உயிருள்ளவை அசைவிற்கும் இடம்பெயர்விற்கும் உரியவை. அந்த வகையில் மயில் நிலத்திலும் மரங்களிலும் காணக்கூடியதாகும். குறிஞ்சி நிலத்தில் வேங்கை மரத்தில் மயிலானது இருப்பதாக கபிலர் ஒரு காட்சியைக் கூறுகிறார். அந்த மயிலானது மரத்தில் ஏறி மலர் கொய்யும் பெண்போல்

தோன்றுவதாகக் கூறப்பட்டுள்ளது. இயல்பான ஒரு காட்சி மரத்தில் மயில் இருப்பது. அதை பெண்ணாக உருவகிக்கும்போது கபிலர் குறிப்பிடும் காட்சி பாடலைப் படிப்போரின் கண் முன்னே காட்சியாக விரிகிறது.

**எரிமருள் வேங்கை இருந்த தோகை**

**இழைஅணி மடந்தையின் தோன்றும் நாட (ஐங்-294)**

என்ற பாடலில் 'நெருப்புப் போன்று பூக்கும் வேங்கை மரத்தில் மயில் இருந்த காட்சியானது அணிகள் அணிந்த பெண் போல தோன்றும்' என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. நெருப்புப்போன்று பூக்கும் வேங்கை மரம் என்பது கபிலரின் கற்பனை வளத்தைக் காட்டுகிறது. அடுத்து அவரின் கற்பனைத்திறன் வெளிப்படுகிறது. மயில் மங்கையாகக் காட்சியளிக்கிறது. இவ்வாறாக இயற்கையை கபிலர் நன்கு புனைந்திருக்கிறார்.

மஞ்ஞைப் பத்து முழுவதிலும் மயில் குறிஞ்சி நிலக் குறப்பெண்ணுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. பெண் மலர் பறிப்பது போலவும், கூந்தலை விரித்தது போலவும் இயற்கைச் சூழல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 2.22.4. தேன் உண்ணும் வண்டு

சங்க இலக்கியங்களில் பறவைகள் மற்றும் விலங்குகள் பற்றி செய்தி காணப்படுவதுபோல் வண்டுகள் பற்றிய செய்திகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. பொதுவாக, இவை தலைவியின் அழகினை வருணிப்பதாகவோ அல்லது தலைவனது ஊரின் சிறப்பினைக் கூறுவதாகவோ பாடப்பட்டுள்ளன.

வண்டுகள் உருவில் சிறியவையினும் புலவர்கள் பார்வையில் விரிந்த காட்சியைத் தந்துள்ளதைச் சங்க நூல்களில் காணலாம். பறவைகளின் அன்றாட வாழ்வில் காணும் நிகழ்ச்சிகளைச் செறிவுடன் கபிலர் எடுத்துக் கூறியுள்ளார். குறுந்தொகையில் வண்டுகள் தேன் உண்ணும் நிலையினை கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**குண்டு நீர்ப் பைஞ்சுனைப் பூத்தகுவளை**

**வண்டுபயில் பல்இதழ் கலைஇத்,**

**தண்துளிக்கு ஏற்ற மலர்போன் றவ்வே (குறுந்-291)**

இதில் கிளி தினைபுனத்திலிருந்து ஓடாமல் திரும்ப திரும்ப வருவதைக் கண்டு தலைவி அழுகிறாள். அந்த காட்சி எவ்வாறு இருந்ததெனில் அவள் கண்கள் ஆழமான, பசுமையான சுனையில் பூத்த குவளை மலரை வண்டுகள் கலைத்துத்

தேன் உண்ண இயன்ற நிலையில் துளிகளோடு அம்மலர்கள் தோற்றமளித்தன. அம்மலர்களைப் போன்று இவள் அழுத கண்கள் இருந்தன என்று பாடலில் கூறப்பட்டுள்ளது.

இந்தப்பாடலின் வழியாக ஒரு காட்சி காட்டப்படுகிறது. ஆழமான நீர்ப்பகுதியையுடைய சுனையாக இருக்கிறது. அந்தச் சுனையில் நீர்ச் செடிகள் மிகுதியாக அமைந்து பசுமையாகக் காட்சியளிக்கிறது. அதில் குவளை மலர்கள் நன்கு பூத்திருக்கின்றன. மலரின் வண்ணங்களும் மலர்தலும் இயற்கையின் சிறப்பு. அதிலும் மலரில் தேன் இருத்தல் இன்னும் சிறப்பிற்குரியது. அத்தகைய குவளை மலரில் தேன் உண்ண வரும் வண்டுகள் குவளை மலரில் தடம் பதித்த சுவடுகள் என அடுக்கடுக்கான காட்சிகள் பதிவு செய்யப்பட்டு இயற்கைப் புனைவு உச்சம் பெறுவதை அறியலாம். ‘இயற்கை தன் ஆற்றலால் மனித வாழ்க்கையைக் கவரவும் மாற்றவும் வல்லது என்ற உண்மை புறப்பொருட் பாடல்களைவிட அகப்பொருட் பாடல்களில் தான் மிகத் தெளிவாகப் புலப்படுகின்றன.’[35]

இயற்கையின் காட்சி கபிலர் மனதில் ஓவியம் போல் பதிந்துவிடுகிறது. அவ்ஓவிய காட்சியை தன் சிந்தனையில் தோன்ற தலைவியின் கண்களுக்கு தேன் சிந்திய குவளை மலரை ஒப்புமையாகக் கூறியுள்ளார்.

**குன்றக் குறவன் காதல் மடமகள்**

**வண்டு படுகூந்தல் தண் தழைக் கொடிச்சி (ஐங்-256)**

வண்டானது மலரின் தேனைச் சுவைக்கும். அம்மலர் தாவரங்களில் இருந்தாலும் மங்கையரின் கூந்தலில் இருந்தாலும் வண்டானது செல்லும் என்று இப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு உயிரினமும் மற்ற இனத்தைச் சற்று அச்சத்தோடு பார்க்கின்ற பார்வை உள்ளது. அவ்வாறான நிலையில் வண்டுகள் மங்கையரின் கூந்தல் வரைக்கும் அச்சமின்றி வந்து அவர்களின் கூந்தலில் உள்ள மலர்களின் தேனைச் சுவைப்பதாக மேற்கண்ட பாடல் அமைகிறது. இவ்வாறாக கபிலரின் அகப் பாடல்களில் மலர், வண்டு, மனிதர் என பல்வேறு உயிரினங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு இயற்கைக் காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றைத் தொடர்ந்து வண்டு மலரை மட்டும் சுற்றி வந்து தேனை எடுத்துச் செல்வதோடு மட்டும் இல்லாமல் யானையின் மத நீராலும் ஈர்க்கப்பட்டு வண்டுகள் மொய்க்கும் என்ற செய்தியை கபிலர் பதிவு செய்துள்ளார்.

சுரும்பு உணக் களித்த புகர்முக வேழம்

இடும் பிணர்த் துறுகல் பிடிசெத்துத் தழூஉம்நின் (ஐங்-239)

களிப்பாவது மதம் கொள்ளுதல் மதம் கொண்ட யானை மதநீர் ஒழுக நிற்றல் இயல்பு. அதன் நறுமணத்தால் ஈர்க்கப்பட்டு வண்டுகள் மொய்த்தல் இயல்பாதலின் சுரும்புணக்களித்த என்றார். இதன் வழி வண்டு மலரில் உள்ள தேனை மட்டும் அருந்தாது யானையின் மதநீரையும் அருந்த விருப்பம் கொள்கிறது என்பதை அறியலாம்.

எந்த எந்த உயிரினத்திற்கு எது பிடித்த செயல், எது பிடிக்காத செயல் என்பதையெல்லாம் அதனுடன் வாழ்ந்து உணர்ந்து தமது பாடலில் நுட்பமாக எடுத்துக்காட்டியுள்ளார். பறவை, விலங்குகளின் பழக்கவழக்கங்களை அதன் செயல்பாடுகளை கூர்ந்து நோக்கி கபிலர் பதிவு செய்துள்ளார்.

கணக்கலை இருக்கும் கடுங்குரற் தூம்பொடு

மலைப் பூச்சாரல் வண்டு யாழ் ஆக (அகம்-82)

இதில் மலைச் சாரலிடத்தே பூக்களைக் குடைந்தாடும் வண்டின் ஒலி யாழ் இசையாக கானகத்து விளங்கின என்று குறிப்பிடுகிறார். இவற்றை நோக்கும் போது பூக்களின் மேல் நின்ற வண்டு என்று குறிப்பிடவில்லை. பூக்களை குடைந்த வண்டு என்று குறிப்பிடுகிறார். தேனை உண்டு களிப்பில் மயங்கி, மயக்கம் தெளிந்த பின்பு மீண்டும் பூக்களில் அமர்ந்து தன்னை மறந்த நிலையில் மயங்கி சுற்றித் திரியும் போது ரீங்காரமிட்ட ஒலி யாழ் ஒலியாக இருந்ததாக ஒப்பிட்டுக் கூறியுள்ளார். சுரும்பு, தும்பி, மிறு முதலியவை வண்டின் இனங்களாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

தகையவர் கைச் செறித்த தாள்போல் காந்தள்

முகையின் மேல் தும்பி இருக்கும் - பகை எனின்

துற்றம் வரினும் தொலையான் தன் நாட்டர்க்குத்

தோற்றலை நாணாதோன் குன்று (கு.கலி-7)

தேனைக் குடிக்க வண்டு காத்திருப்பது போல் உன் தலைவனும் காத்திருக்கிறான். காந்தள் மொட்டு அரும்பெய்திய மலரும் தேனைக் குடிக்கலாம் என்ற எண்ணத்துடன் அதன் மீது அமர்ந்திருக்கும் வண்டு போல தலைவனும் சுற்றத்தார் மனம் நெகிழ்ந்து வரைவிற்கு உடன்படும் காலம் பார்த்திருக்கின்றான் என தோழி உள்ளுறை உவமமாகக் கூறுகிறாள். இதில் வண்டு உள்ளுரையாக இடம்பெறுகிறது.

### 2.22.5. இரக்கமில்லா குருகு

**தினைத்தாள் அன்ன சிறுபசுங்காஅல**

**ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்**

**குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே (குறுந்-25)**

இதில் குருகின் கால் தினைத்தாளொடு உவமித்து சிறிய பசுமையான கால்களை உடைய குருகு நீர் நிலையை விட்டுப் பெயராது நின்றது என்றும், அது உணவிற்காக காத்திருந்தது என்றும் இயற்கையைக் கபிலர் காட்சிபடுத்தியுள்ளார். அந்த நாரை தன் உணவின் பொருட்டு ஆரல்மீனை நோக்கிய வண்ணம் இருந்தது.

"ஒரு உயிர் நிலை வேறொரு உயிர் நிலையைத் தாங்குகிறது. உணவானது ஒரு உண்ணும் நிலையிலிருந்து வேறு உண்ணும் நிலையைச் சென்றடைந்து, ஒரு சங்கிலித் தொடரை உருவாக்குகிறது. இதுவே உணவுச் சங்கிலி என்கிறது சுற்றுச் சூழல் அறிவியல்".[36] "சூழல் தொகுப்பு என்பது சுற்றுச்சூழலிலுள்ள காற்று, மண், நீர், தாதுப்பொருள்கள் போன்ற உயிரற்ற அங்கங்களுடன் தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிரிகள் முதலான உயிரினங்களுடன் ஒன்றையொன்று சார்ந்து வாழ்வதாகும்".[37] இவை உயிரியக்கங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்திட அடிப்படையான தொன்றாகும். இந்த உயிரின இயக்கத்தை கபிலர் இயற்கை வருணணையுடன் காட்சிபடுத்துகிறார்.

கொலை செய்யக் கூடிய தன்மை உடைய குருகு என்று இவ்விடத்தில் கூறக்காரணம் குருகு இரக்கமில்லாமல் மீனைக் கொன்று தன் பசியை போக்கிக் கொள்கிறது. சுயநலமாக தனது பசிக்காக மட்டுமே மீனை குறிபார்த்திருந்த கொக்கு இரக்கமற்றது. தலைவன் பிரியமாட்டேன் என்று சூளுரைத்த இடத்தில் இருந்த குருகு எவ்வாறு தலைவிக்கு சாட்சி சொல்லும் எனக் குறிப்பிடுகிறார் கபிலர். மீனுண்ணும் பறவையாக குருகு காட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது குருகு இரக்கமற்றது போலத் தான் தலைவனும் இரக்கமற்றவன் அவன் சூளுரைத்தது பொய்யாக போனது. குருகு போல இரக்கமற்ற தலைவன் என்ற கருத்து புலப்படுகிறது. ஆக இயற்கையைக் காட்சி படுத்தியதோடு விட்டுவிடாது தலைவன் தலைவியின் அகவாழ்க்கையையும், மன உணர்வுகளையும் அக்காட்சியில் கபிலர் பதிவு செய்துள்ளார்.

இந்த இயற்கை வருணனைகளும் தலைவன் தலைவியின் அன்பு நிலைகளுக்கு உவமையாக, உள்ளுறையாக, இறைச்சியாகக் குறிப்பிடப்பட்டு ஏதேனும் ஒரு கருத்தாக வெளிப்படுத்துவது கபிலரின் தனிச்சிறப்பாகும்.

பறவை இனங்களின் ஒலியை கபிலர் பதிவு செய்துள்ளார்,

**கல்லென்று இரட்ட புள்ளினம் ஒலிப்ப**

**சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத்**

**துனைஇய மாலை துன்னுதல் காணுஉ (குறி.பா.228,230)**

இதில் விலங்குகள் மற்றும் பறவைகள் தம் கூடுகளில் ஆரவாரம் செய்தல் எவ்வாறு இருக்கிறதெனில் வேந்தனின் போர்க்களம் போல காட்சியளித்தது. இவ்வாறாக மாலைப் பொழுது வந்தது என்ற உவமையை கபிலர் கூறியுள்ளார்.

தம் பாடலில் அகச் செய்தியை மட்டும் கூறாது புறக் கருத்துக்களையும் பதிவு செய்துள்ளார். இயற்கை காட்சியைப் புறகருத்தோடு இணைத்துப் பாடியுள்ளார். இதில் வேந்தனின் போர்க்களத்தில் உள்ள வீரர்கள் பகைவர்களை எதிர்ப்பதற்கு ஆயத்தமாகவும், விழிப்புணர்வோடும், முன் எச்சரிகையோடும் இருப்பார்கள் தங்கள் மன்னனையும் நாட்டையும் காப்பதற்காக வீரர்கள் விழிப்போடு தற்காப்பு கருவிகளையும் வைத்து தங்களையும் நாட்டையும் காத்துக் கொள்ளும் தன்மை போல பறவைகளும் விலங்குகளும் தங்கள் இருப்பிடமான மலைப்பகுதிகளில்,பாதுகாப்பிற்காகவும் பிறவற்றிற்காகவும் தம் மொழியான ஒலிகளில் கருத்து பரிமாறியிருக்கலாம். இவ்வாறாக இயற்கையின் பல்வேறு காட்சிகள் கபிலரின் பாடல்களில் அமைந்து சிறப்பு செய்கின்றன.

### 2.22.6. மகிழ்ந்திருக்கும் தேனீ

ஐங்குறுநூறு மஞ்ஞைப் பத்து பாடலில் தேனீக்கள் குறிஞ்சி நில மரங்களில் சுற்றித் திரிந்த இயற்கை காட்சியை கபிலர் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**மயில்கள் ஆல,பெருந்தேன் இமிர**

**தண் மழை தழீஇய மாமலை நாட (ஐங்-292)**

மழை மேகங்கள் மலைமுகட்டைத் தழுவிச் செல்கின்றன. மயில்கள் மழையால் மகிழ்ந்து இன்புற்று ஆடியது. மரஞ்செடிகொடிகள் தழைத்துப் பூத்ததில் தம் உணவாகிய தேன் மிகுதியாக பெருகியதால் தேனீக்கள் மகிழ்ந்து காணப்பட்டது. குறிஞ்சி நிலத்தில் வண்டுகள் மட்டும் தேனை உண்டு மகிழவில்லை. பெரிய தேனீக்களும் தேனடையில் இருக்கும் தேனை உண்டு மகிழ்ந்த காட்சியைக் குறிப்பிட்டுள்ளார்.

மழை தரும் மேகங்கள் மலை முகடுகளைத் தழுவுதல், மயில்களின் ஆட்டம்,மரஞ்செடிகளில் தேனுடைய பூக்கள், தேனுண்ணவரும் தேனீக்கள் என ஒரு வண்ண ஓவியம் கபிலர் தம் பாடலில் கண்முன்னே விரிகிறது. இவ்வாறாக குறிஞ்சி நிலம் எல்லா பருவங்களிலும் வற்றாது பசுமையாக இருப்பதால் பூக்கள் செழித்து காணப்பட்டது. இதில் தேனும் அவற்றை உண்ணும் வண்டுகளும், தேனீக்களும் காட்டப்பட்டுள்ளன. "வளமார்ந்த பறம்பின் சூழலில் பாரியின் அருட் கொடையில் செழிப்பான வாழ்வில் திளைத்தவர் கபிலர். அவர்க்கு உலகியற் கவலை இல்லை. எனவே, இயற்கை அன்னையின் எழிற் கோலத்தை இன்பத்தின் வைப்பாய் - எக்களிப்பின் கனியாய் உணர்ந்து பாடித் திளைத்தார்"[38] என்பது எண்ணத்தக்கதாகும்.

நறுமணம் உடைய சந்தன மரங்களிலும், சுவை உடைய பலா மரங்களிலும் தேன் கூடுகள் மிகுதியாகக் காணப்பட்டது. ஒரு பக்கம் மழையால் மயில் இன்புறுவதும் மறுபக்கம் தேனீக்கள் தேன் மிகுதியால் இன்புறுதலும் இவ்வாறு எல்லா பறவை இனங்களும் விழாக்கோலம் பூண்டது போல ஆரவாரத்துடன் தங்களின் செயல்பாடுகளைச் செய்தது என பறவை இனங்களின் வாழ்க்கையைக் கபிலர் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

### 2.23. குறிஞ்சியில் விலங்குகள்

ஆமான், கரடி, குரங்கு, பன்றி, புலி, முளவுமா, யானை, வருடை, முதலை, ஆடு, பசு, நாய், பாம்பு ஆகியவை குறிஞ்சி நில விலங்குகளாகும். இவ்விலங்குகளின் செயல்பாடுகள் மூலம் அவற்றைப் பிரிக்கலாம்.

1. வேட்டையாடும் விலங்குகள் - நாய், புலி
2. தாவர உண்ணி விலங்குகள் - மான், யானை
3. அனைத்துண்ணி விலங்குகள் - கரடி

சங்க இலக்கியம் காதலையும் வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டது. காதலின் ஆழத்தையும், வீரத்தின் சிறப்பையும் உணர்த்தும் சங்கப் புலவர்கள் அஃறிணை உயிர்களைத் தன் பாடல்களில் பயன்படுத்தினர். அதிலும் குறிப்பாகத் தலைவன் செல்லும் வழியின் கொடுமையைக் குறிக்கவும், தலைமக்களின் அன்பினை எடுத்துக் காட்டுவதற்கும் மன்னன் அல்லது தலைவனின் வீரத்தை விளக்குவதற்காக புலவர்கள் தத்தம் பாடல்களில் விலங்குகளைச் சுட்டிக் காட்டியுள்ளனர். மேலும், சங்க கால மக்கள் தம் வாழ்வில் உணவிற்கும், பயணத்திற்கும் பெரிதும் பயன்படுத்தியவை பறவைகளும் விலங்குகளும் ஆகும்.

சங்க காலத்தில் மக்கள் ஒருவரையொருவர் அன்புடன் நோக்கி பண்பு பாராட்டும் பழக்கம் இருந்தது. ஆதலால், மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ்ந்ததால் சமுதாயம் உருவெடுத்தது. அச்சமுதாயத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுக்கென சில பழக்க வழக்கத்தால் நற்பண்பு பெற்று வாழ்ந்தனர். ஆகவே பழக்கவழக்கங்களைத் தனிமனிதனும், சமுதாயம் என்ற அமைப்பும் இணைந்து உருவாக்குகின்றது. மக்களின் தேவைகளின் அடிப்படையிலேயே பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெருகின்றன.

மக்களைப் போலவே பறவைகள் விலங்குகளுக்கென்று சில பழக்கவழக்கங்கள் இருக்கும். ஏனெனில் உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரினத்திற்கும் சில குறிப்பிட்ட பழக்கவழக்கங்கள் இருக்கும். அவ்வகையில் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கும் பறவைகள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றின் பழக்க வழக்கங்களையும் அவை அமையப் பெற்ற இயற்கைக் காட்சிகளை இவண் ஆராய்வோம்.

தொல்காப்பியர் மரபியலில் விலங்குகளின் இளமைப் பெயர்கள், ஆண்பால் மற்றும் பெண்பாற் பெயர்கள் போன்றவற்றைப் பற்றிக் கூறியுள்ளார். அவற்றுள் ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் ஈறாக அனைத்து உயிரினங்களையும் வகைப்படுத்துவார்.

ஓரறிவுயிராகத் தொல்காப்பியர் குறிப்பிடுவது புல்லையும் மரத்தையும் ஆகும். ஐயறிவுயிராகக் குறிப்பிடுவது மாவையும் (விலங்குகளையும்), புள்ளையும் (பறவைகளையும்) ஆகும்.

"புல்லும் மரனும் ஓர் அறிவினவே"[39] (தொல். பொருள்.1527)

"மாவும் மாக்களும் ஐ அறிவினவே"[40] (தொல்.பொருள்-1531)

ஓரறிவுயிரான மரங்களும், ஐயறிவுயிரான பறவை, விலங்குகளும் தங்களுக்கென்றும், தங்கள் இனத்திற்கென்றும் சில பழக்கவழக்கங்களைக் கொண்டிருப்பதோடு, சில சிறப்புக் கூறுகளையும் பெற்றிருக்கும்.

**2.23.1. குரங்குகளின் மகிழ்ச்சி**

சங்க இலக்கியத்தில் அதிகமாக உள்ளுறையில் குரங்கு பற்றிய செய்தி வரும். இக்குரங்கு உடம்பில் ஏற்பட்ட உடற்றினவைப் போக்கிக் கொள்ளும் குண்டுக் கல்மீது ஏறி தன் காதலனாகிய கடுவனோடு துள்ளித் திரியும் மலைநாடனே என தோழி தலைவனிடம் கூறுவதாக அமைந்துள்ளது.

**குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்**

**கல்லாமந்தி கடுவனோடு உகளும்**

**குன்றநாட நின் மொழிவல் என்றும் (ஐங்.277)**

*இதில், மலைநாட்டில் உள்ள மந்தியே தன் காதலனோடு சேர்ந்து கல் மீது ஏறி துள்ளிக் குதித்து விளையாடும் காட்சி மலைப்பகுதியின் இயற்கை எழிலைப் படம்பிடித்துக் காட்டுவதாய் அமைகிறது.*

**கல்இவர் இற்றி புல்லுவன ஏறிக்**

**குளவி மேய்ந்த மந்தி துணையொடு**

**வரை மிசை உகளும் நாட (ஐங்.279)**

*இதில் குளவி என்னும் காட்டு மல்லிகைக் கொடியையும், அதன் பூக்களையும், தளிர்களையும் குரங்குகள் விரும்பி உண்ணும். இவ்வாறு உண்ணும் என்றால் தன் துணையொடு மேய்ந்து மகிழ்ச்சியோடு உண்ணும். அதாவது தன் காதல் துணையை மந்தி பிரியாது வாழ்கிறது. உன் மலையில் இருக்கும் மந்தியே தன் துணையோடு இருக்கும்போது, நீ மட்டும் ஏன் களவு நெறிபற்றிக் காதலன்பு வாழ்வில் நீடிக்காது கற்புவழி மணந்து இருவரும் நல்லின்பத்தை எய்துதல் வேண்டும் என்ற செய்தி உள்ளுறையாக இடம் பெற்றுள்ளது. ஆக, இயற்கையைப் புனைந்து கூறுவதில் உள்ளுறை என்ற உத்தியை பயன்படுத்தியும் விலங்கு மற்றும் குறிஞ்சிநில மக்களின் வாழ்க்கையை கபிலர் பதிவு செய்துள்ளார்.*

**2.23.2. மேகங்களை விரட்டும் குரங்கு**

*விலங்குகளில் முதன்மையான இனத்தில் குரங்கு குறிப்பிடத்தக்கதாகும். மனிதனுக்கு முன்னோடியாக குரங்கினம் கருதப்படுகிறது.*

*இந்த முதன்மையான விலங்காகிய குரங்கினத்தைப் பற்றிய பல செய்திகள் சங்க நூல்களில் தெளிவாகவும், நுட்பமாகவும் கூறப்பட்டுள்ளதைக் காணும்போது பெரும் வியப்பெழுகிறது. சங்க இலக்கியத்தில் குறிப்பாகக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் குரங்குகள் கடுவன் எனவும், மந்தி எனவும், முசுக்கலை எனவும், ஊகம் எனவும் கூறப்பட்டுள்ளன. குரங்கின் பசிய கண்ணையும், நீண்ட மயிரையும், கூரிய பற்களையும், கருவிரலையும் கபிலர் தம்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.*

**மந்திக் கணவன் கல்லாக் கடுவன்**

**ஒண்கேழ் வயப்புலி குழுமலின் விரைந்து உடன்**

**குன்று உயர் அடுக்கம் கொள்ளும் நாடன் (ஐங்-274)**

என்ற பாடலில் மந்தியின் கணவனான குரங்குச் சாதிக்குரிய திறன்களைப் பெற்ற ஆண் குரங்கு, வலிமை உடைய புலி முழங்குதலால், மிக விரைவாக உயர்ந்த மலைப் பக்கத்திற்குத் தப்பிச் சென்றது என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

புலியால் ஏற முடியாத உயரத்தினைக் குரங்கு ஏறும் என்பது புலப்படுகிறது. புலி நிறத்தால் மட்டுமல்லாது தன் முழக்கத்தாலும் குரங்கு போன்ற பிற விலங்குகளுக்கு அச்சமூட்டுகிறது. ஆற்றல் உடைய ஆண் குரங்கே இவ்வாறு அச்சப்படுகிறது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. காண்பவர்களை மலைக்கச் செய்யும் மலையானது மிகுந்த உயரத்தினையுடையதாக விளங்குகிறது. புலியின் முழக்கம் அப்பகுதியை எட்டுகிறது. இவ்வொலியைக் கேட்ட கடுவன் புலிக்கு அஞ்சி மலை உச்சியை எட்டும் காட்சிகள் மலைப்பகுதியையும் அங்கு வாழும் உயிரினங்களின் செயல்பாடுகளையும் கபிலர் தம் பாடல்களில் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**மந்திக் காதலன் முறிமேய் கடுவன்**

**தண் கமழ் நறைக்கொடி கொண்டு வியல் அறைப்**

**பொங்கல் இளமழை புடைக்கும் நாட (ஐங்-276)**

என்ற பாடலில் கடுவன் மரம், செடி, கொடிகளின் இளந்தளிர்களை விரும்பி உண்ணும். மேலும், அகன்ற பாறைகளில் தொங்கி வரும் இளமேகங்களைக் கடுவன் குளிர்ச்சியும் நறுமணமும் கொண்ட நரவக் கொடியைக் கொண்டு அடிக்கும் இடத்தையுடைய மலைநாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் அகன்ற பாறைகளில் தொங்கி வரும் இளமேகங்கள் என்பது தாம் கண்ட இயற்கைக் காட்சியை உள்ளவாறு பாடலில் கபிலர் குறிப்பிட்டுள்ளார். இன்னும் கூடுதலாக அந்த இளமேங்களை கடுவனானது குளிர்ச்சியும் நறுமணமும் கொண்ட நரவக் கொடியைக் கொண்டு அடித்தது ஓர் அரிய இயற்கைக் காட்சியாகத் தென்படுகிறது. அடித்து விரட்டுவதற்கு மேகம் ஓர் உயிரல்ல. ஆனாலும் கடுவன் அந்த இளமேகங்களை எவ்விதம் உணர்ந்ததோ தெரியவில்லை. நகைப்பிற்குரியதாகவும் இக்காட்சி தோன்றுகிறது. ‘நாகரிகத்தின் மினுமினுப்பிலே இன்றைய மனிதன் எவ்வளவு தான் திளைத்தாலும், மனிதனுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் இயற்கையின் வலிய ஆற்றல் வென்று விடுகின்றது என்பதை யாரும் புறக்கணித்து விட முடியாது.’[41] இந்த அற்புதமான இயற்கைக் காட்சியைக் கபிலர் தம் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இனி பெண் குரங்கின் அறிவுத் திறத்தை ஒரு பாடல் விளக்குகிறது.

**குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்**

**கல்லா மந்தி கடுவனோடு உகளும் (ஐங்-277)**

என்ற அடிகளில் குறவர் தம் முற்றத்தில் விலங்குகள் உடல் தினவைப் போக்கிக் கொள்ள குண்டுக்கல்லை போட்டு வைப்பர். அதில் பெண்குரங்கு தன் ஆண்குரங்கோடு துள்ளிக் குதித்து விளையாடும் தன்மை கொண்ட குன்று நாடு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. சங்க கால மக்கள் விலங்குகளுக்கும் உதவி செய்து வாழ்ந்ததை தினவைப் போக்கும் குண்டுக்கல் வெளிப்படுத்துகிறது. அந்தக் குண்டுக் கல்லில் மந்தியும் கடுவனும் துள்ளிக் குதிக்கும் காட்சி இயல்பாக, இயற்கையில் அமைந்தக் காட்சியை கபிலர் காட்சிப்படுத்தியுள்ளார். அகவாழ்வினைக் குறிப்பிடும் கபிலர் எங்கெல்லாம் இயற்கைக்காட்சிகளை நுட்பமாக பதிவிட இயலுமோ அங்கெல்லாம் இயற்கைக் காட்சிகளை நன்கு பதிவு செய்துள்ளார்.

மேலும் மந்தியும் கடுவனும் தளிர்களை மேய்ந்தும் காட்டு மல்லிகையினை உண்டும் மகிழ்ச்சி களிப்பில் துள்ளிக் குதித்து விளையாடும் காட்சியும் ஐங்குறுநூறு குரக்குப்பத்தில் கூறப்பட்டுள்ளது.

**கருவிரல் மந்திக் கல்லா வனபார்ப்பு**

**இருவெதிர் ஈர்ங் கழைஏறி சிறுகோல்**

**மதி புடைப்பது போல் தோன்றும் நாட" (ஐங்-280)**

கருமையான விரல்களை உடைய மந்திக்குட்டியின் செயலை இப்பாடலில் காட்சிப்படுத்தியுள்ளார். மூங்கில் மேல் ஏறிய குட்டி மரத்தின் மேல் கோலில் ஏறி நின்ற காட்சி பார்ப்பவருக்கு அது கோலைக் கொண்டு வானத்தில் இருக்கும் மதியை அடிப்பது போலத் தோன்றியதாக கபிலர் காட்சிபடுத்தியுள்ளார்.

இவ்வாறு குறிஞ்சி நிலத்தில் குரங்குகள் தன் இணையோடு மிகுந்த மகிழ்ச்சியாய் இருந்த காட்சிகளை கபிலர் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

### 2.23.3. நிலத்தை உழும் பன்றி

எய், கேழல், ஏனம் என்னும் சொற்கள் பன்றியைக் குறிப்பதாகும். பன்றி உரைகல் போன்ற நிறமுடையது. கேழல் என்பது, சங்க இலக்கியத்தில் காட்டுப் பன்றியைக் குறிக்கும். காட்டுப் பன்றியைப் பற்றிச் சங்க இலக்கியத்தில் வரும் பாடல்களால் அதன் உருவம், நிறம், குணம்

ஆகியவற்றைப் பற்றி நன்கு அறிய முடிகிறது. காட்டுப் பன்றியை வீட்டுப் பன்றியிலிருந்து பிரித்துணர முக்கியமாக உதவுவது அதன் முதுகிலும் கழுத்திலும் உள்ள கதிர் போன்ற நீட்டியுள்ள மயிர்க்கற்றையேயாகும்.

**மென் தினை மேய்ந்த தறுகட் பன்றி**

**வன்கல் அடுக்கத்துத் துஞ்சும் நாடன் (ஐங்.261)**

என்ற பாடல் வழி மென்மையான தினையை மேய்ந்த மறம் பொருந்திய பன்றி, வண்ண மயமான கற்கள் நிறைந்த மலைப்பக்கத்தில் வாழும் என்பதை அறியலாம்.

**சிறு தினை மேய்ந்த தறுகட் பன்றி**

**துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும் (ஐங்.262)**

சிறியவாகிய தினையை மேய்ந்த தறுகண்மையுடைய பன்றி, கற்கள் நெருங்கிய மலைப்பக்கத்தில் தன் துணைப் பன்றியுடன் தங்கும் என்பதை மேற்கண்ட பாடலிலும் பதிவு செய்துள்ளார்.

குறிஞ்சி நில மக்கள் கிழங்கு அகழ்ந்து உண்பது போல அங்குள்ள பன்றிகளும் கிழங்கை தோண்டி உண்ணும் நிலையை பாடலில் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**கேழல் உழுதெனக் கிளர்ந்த எருவை**

**விளைந்த செறுவின் தோன்றும் நாடன் (ஐங்.269)**

என்ற பாடலில் பன்றிகள் கிழங்கு தோண்டுவதற்கு முற்பட்ட நிலத்தில் உழுதது போன்ற தோற்றம் தரும் புன்செய் நிலத்தில் கோரைப் புற்கள் வளர்ந்துள்ளன. அது நெல் வயல் போல் தோன்றுகிறது என்று பாடலின் செய்தி அமைகிறது.

மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் முதன்மையான தேவையாய் நெல் அமைகிறது. கபிலர் நெல்லை மட்டும் இயற்கையில் தோன்றும் காட்சியாகக் காண்பிக்காமல் தான் எண்ணியவற்றையெல்லாம் இயல்பாகக் காட்சிப்படுத்தியுள்ளார். அதற்கானச் சான்றுதான் பன்றிகள் தோண்டிய நிலத்தில் காணப்பட்ட கோரைப்புற்களாகும். கோரைப்புற்கள் மிகுதியாய் வளர்ந்து நெல் வயல்போல் காட்சியளிப்பதாக கபிலர் குறிப்பிட்டுள்ளது கபிலர் இயற்கை வெளியைக் காட்சிப்படுத்தியதில் சிறப்பிற்குரியதாகும். இயற்கையை வருணிப்பதில் எவ்வித பாரபட்சமுமின்றி கபிலர் பதிவு செய்துள்ளார்.

"தாஅய் இழந்த

தழுவரிக் குருளையொடு

வளமலைச் சிறுதினை உணீஇ, கானவர்

வரைஓங்கு உயர்சிமைக் கேழல் உறங்கும்" (ஐங்.268)

என்ற பாடலில் நெருங்கிய வரிகளை உடைய ஆண் பன்றி இளங்குட்டியுடன் மலையில் விளைந்த சிறு தினையின் கதிர்களை உண்டு, மலை உச்சியில் உறங்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இளங்குட்டி, வளமான மலையில் விளைந்த தினைக் கதிர், மலை உச்சியில் ஆண் பன்றி என ஒவ்வொன்றும் ஒரு காட்சியை மையப்படுத்துவதாய் அமைந்து இயற்கையைப் படம்பிடித்துக் காட்டுவதாய் அமைகிறது. தினைக்கதிரை உண்ணவரும் பன்றிகளையும் உள்ளுறையாகப் புனைந்து தலைவனுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார் கபிலர்.

பிணர்ச்சுவற் பன்றி தோல்முலைப் பிணவொடு

கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்

கல்லதர் அரும்புழை அல்கிக் கானவன்

வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றைப்

புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டி

குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட (நற்-336)

ஆண் பன்றி ஒன்று தன் துணைப் (பெண்) பன்றியுடன் தினைக்கதிரை அளவு கடந்து கவர்ந்து தின்னும். அதனால் கானவன் மலையிலுள்ள அரிய வழியில் தங்கியிருந்து வெண்மையான கொம்பையுடைய ஆண் பன்றியை வில்லால் அடித்துக் கொன்று இல்லத்திற்கு கொண்டு சென்றான். அவன் மனைவி அதனை அறுத்துத் தன் உறவினர்க்கு முறையாகப் பங்கிட்டுக் கொடுத்தாள். குறிஞ்சியில் பன்றியானது அளவு கடந்து தினையை உட்கொண்டதும் பின்பு கானவருக்கு தாமே உணவாகிப் போனதையும் கபிலர் நன்கு காட்சிப்படுத்தியுள்ளார்.

### 2.23.4. இரை தேடும் புலி

சங்க இலக்கியத்தில் மிகுதியான பாடல்களில் புலியையும் யானையையும் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. புலி மலைச்சாரல்களிலும், மூங்கில் நிறைந்த காடுகளிலும், சோலைகளிலும் வாழும் இயல்புடையது. இத்தகைய

இடங்களிலும், சூழல்களிலும் புலி காணப்பட்டதைச் சங்க நூல்கள் வெளிப்படுத்துகின்றன வேட்டையாடும் விலங்குகளில் புலியும் ஒன்றாகும்.

**மான்றமை அறியா மரம் பயில் இறும்பின்**
**ஈன்றுஇளைப் பட்ட வயவுப்பிணப் பசித்தென**
**மடமான் வல்சி தழீஇய நடுநாள்**
**இருள்முகைச் சிலம்பின் இரைவேட்டு எழுந்த**
**பனைமருள் எருத்தின் பல்வரி இரும்போத்து**
**மடக்கண் ஆமான் மாதிரத்து அலற**
**தடக்கோட்டு ஆமான் அண்ணல் ஏஎறு**
**நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி**
**இருங்கல் வியல்அறை சிவப்ப ஈர்க்கும் (அகம்.238:1-9)**

ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருத்தலை அறிதற்கு இயலாதவாறு மரங்கள் நெருங்கி வளர்ந்த குறுங்காட்டில், குட்டிகளை ஈன்று அவற்றுக்குப் பாதுகாவலாக அமைந்த வருத்தத்தினையுடைய பெண்புலி பசித்திருந்தது. அதற்கு இளையமானை உணவாகக் கொண்டு வந்து தரவேண்டி, பனந்துண்டினைப் போன்ற கழுத்தினையும், பல கோடுகளையும் உடைய ஆண் புலியானது நடு இரவில் இருள் சூழ்ந்த குகைகளை உடைய பக்க மலையில் இரைதேடி விரும்பிப் புறப்பட்டது என பாடலில் பதிவாகியுள்ளது.

புலியானது ஒரு எருதினை அகன்ற இடத்தையுடைய காட்டில் வலப்பக்கம் வீழுமாறு கொன்றது. எருதின் சத்தத்தைக் கேட்ட பசு துன்பக் குரலோடு கதறியது. கரிய மலையிலுள்ள அகன்ற பாறைகள் குருதியால் சிவக்குமாறு எருதினைப் புலி இழுத்துச் சென்றது. அத்தகைய பெரிய மலைகளை உடையது குறிஞ்சி நிலம் என்கிறார் கபிலர்.

ஒரே மரம் என்று கருதும் அளவிற்கு வெவ்வேறு மரங்கள் ஒருங்கே காணப்பட்ட அளவிற்கு மிகவும் பின்னிப் பிணைந்திருப்பதாக மரங்கள் காட்டப்பட்டுள்ளது. இது நல்லதொரு இயற்கைக் காட்சியாகும்.

அடுத்த ஒரு சூழல் பாடலில் காட்டப்படுகிறது. குட்டியை ஈன்ற பெண்புலி, பெண் மானை இரையாக்கக் கிளம்பிய ஆண்புலி எருதினை தாக்கி அழித்தது. அதனால் எழுந்த சத்தத்தைக் கேட்டு அலறிய பசு என ஒவ்வொரு உயிரும் மற்றொன்றைச் சார்ந்திருக்கும் இயற்கை நியதி இங்கு கபிலரின்

பாடலில் காட்டப்பட்டுள்ளது. அடுத்தடுத்த உயிர்களை உண்டு வாழும் முறையானது ஒரு உணவுச் சங்கிலியாகும்.

மேலும் கரிய மலையிலுள்ள பாறைகள் எருதின் குருதியால் சிவப்பு நிறம் அடைவது இயற்கைச் சூழலை உள்ளவாறு பதிவிடும் நிலையாகும். அதனை கபிலர் நன்கு பதிவு செய்துள்ளார்.

புலியின் முன்னங்கால்கள் குறுகியிருப்பதன் காரணமாக குறுங்கையிரும் புலி என அது கூறப்பட்டது.

**பனைமருள் எருத்தின் பல்வரி இடும்போத்து (அகம். 238:5அடி)**

என்னும் தொடர் உணர்த்துகிறது. இதன் கால்நகங்கள் செம்முருக்கின் அரும்பு போன்றவை. இரக்கமற்று குருதி வர எருதைக் கவ்வி இழுத்து செல்லும்போது, அதன் வலிமை தெரிகிறது. புலி பிற விலங்குகளை அச்சமூட்டி வாழ்வதை அறியலாம். இந்த உலகில் வலிமை உள்ளவையே உயிர் வாழும் என்பதும் இதன்வழி விளங்கலாம்.

### 2.23.5. துள்ளி விளையாடும் மான்

மலைப் பக்கங்களில் வாழைகள் செறிந்த இடத்தில் வருடை மான்கள் கூட்டமாகத் திரியும். மேட்டு நிலத்தில் மிகவும் விரைவாக ஓடக்கூடிய ஆற்றல் வருடைக்கு உண்டு. மலைமிசை வருடை குதித்துப் பாயும் இயல்பினையுடைதாகும். சிறிய ஒலி கேட்பினும் அஞ்சித் துள்ளி ஓடும். இதன் இயல்பை அறிந்த கிளிகள் ஒலியெழுப்ப, வருடை குதித்தோடி மறையும் காட்சியைக் கபிலர் கூறுகின்றார்.

**நெடுவரை மிசையது குறுங்கால் வருடை**
**தினைபாய் கிள்ளை வெரூஉம் நாட**
**வல்லை மன்ற பொய்த்தல்**
**வல்லாய் மன்ற நீ அல்லது செயலே (ஐங்.287)**

துள்ளித் திரியும் மான்களைக் கண்டு அஞ்சி ஒலியெழுப்பும் கிளிகள் என பல உயிர்களின் செயல்பாடுகளைக் கபிலர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார்.

குறிஞ்சி நிலத்தில் கபிலரின் பாடல்களில் மான் காட்சிப்படுத்தப் படுகின்றன.

**அன்னாய், வாழி! வேண்டு அன்னை! நம் படப்பைத்**
**தேன் மயங்கு பாலினும் இனிய – அவர் நாட்டு**

**உவலைக் கூவற் கீழ்**

**மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே (ஐங்.203)**

என்ற பாடலில் நம் காதலர் நாட்டில் உள்ள உதிர்ந்த தழையால் மூடப்பட்ட கிணறுகளின் அடியில், மான் முதலிய விலங்குகளால் உண்ணப்பட்டு எஞ்சி நிற்கும் கலங்கிய நீர் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மரங்களிலிருந்து உதிர்ந்த தழைகள், அவைகளால் மூடப்பெற்ற கிணறு. அக்கிணறுகளின் மான் போன்ற விலங்குகளால் உண்ணப்பட்டு எஞ்சி நிற்கும் கலங்கிய நீர் என அடுத்தடுத்த காட்சிகளை கபிலர் வரிசைப்படுத்தியுள்ள திறம் இயற்கைப் புனைவின் சிறப்பாகும். கபிலர் மனக்கண்ணில் காட்சியை நிலை நிறுத்துகிறார்.

மானின் செயல்பாடுகள் ஒரு பாடலில் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**செவ்வரைச் சேக்கை வருடைமான் மறி**

**சுரை பொழி தீம்பால் ஆரமாந்தி**

**பெருவரை நீழல் உகளும் நாடன்**

**கல்லினும் வலியன் தோழி**

**வலியன் என்னாது மெலியும் என்நெஞ்சே (குறு.187)**

இப்பாடலில் மலைப்பகுதியில் தங்கியிருக்கும் வருடை மானின் குட்டி, தன் தாயின் மடியில் பொழிந்த இனிய பாலை, வயிறு நிறையக் குடித்துவிட்டு, பெரிய மலைப்பக்கத்தின் நிழலில் துள்ளி விளையாடும் என்று மானின் செயல்பாடுகளைக் கூறியுள்ளார்.

**“செவ்வரை”** எனும் சொல்லால் அம்மலைப் பகுதியின் இயற்கையழகு பதிவு செய்யப்பட்டுள்ளது. செங்குத்தான மலையாக விளங்குகிறது. அதில் தாய் மானிற்கு தேவையான உணவு கிடைத்ததால் நிறைய பால் சுரந்து, குட்டி மானுக்கு அளவுக்கு அதிகமான பால் கிடைப்பதால் மகிழ்ச்சியோடு கவலையின்றி பசியைப் போக்கியது. இதன்மூலம் தாய் மானுக்கும் குட்டி மானுக்கும் இடையே உள்ள நெருக்கமும், அன்பும் வெளிப்படுகிறது. மலை நிழலில் மான்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்ததைக் கபிலர் தம் பாடல் வழி பதிவு செய்துள்ளார்.

**நெடுவரை மிசையது குறுங்கால் வருடை**

**தினைபாய் கிள்ளை வெரூஉம் நாட (ஐங்.287)**

நெடிய மலையில் வாழும் குறிய கால்களை உடைய வருடை மான்களைக் கண்டு அஞ்சி, தினைக்கதிர் மேல் படியும் கிளிகள் அஞ்சி விலகிச் செல்லும்.

கிளி போன்ற பறவைகள் மானைக் கண்டு பயந்து ஓடியது. மானால் தனக்கு ஆபத்து ஏதும் ஏற்படுமோ என்ற அச்சத்தால் இருக்கலாம். மானும் குறிஞ்சி விலங்குகளில் ஒன்றாக இருந்திருப்பதை அறியலாம்.

### 2.23.6. காவல் புரியும் நாய்

'ஞமலி' என்னும் சொல்லால் நாயானது சங்க நூல்களில் குறிக்கப்படுகின்றது. பிற விலங்குகளைக் கண்டால் இது வெகுண்டு பாயும் இயல்புடையது. குறவர் வேட்டையாடுதற்கு நாய்களை உடனழைத்துச் செல்வர்.

**முனைபாழ் படுக்கும் துன்அருந்துப்பின்**

**பகைபுறம் கண்ட பல்வேல் இளைஞரின்**

**உரவுச்சினம் செருக்கி, துன்று தொறும் வெகுளும்**

**முளைவாள் எயிற்ற, வள்உகிர், ஞமலி**

**திளையாக் கண்ண வளைகுபு நெரிதர (குறி.பா.128-132)**

நாயானது பகைப் புலத்தைப் பாழ் செய்யும், நெருங்குதற்கரிய வலிமையுடன் பகைவரைப் புறங்காணச் செய்யும் பலவாகிய வேலினையுடைய இளைஞரைப் போன்று, மிகுந்த சினத்தால் செருக்குற்று செருக்குறுந்தோறும் சினக்கும் மூங்கில் முளை போன்ற பற்களையும், கரிய பெரிய நகங்களையும் உடைய நாய்கள், இமைக்காத கண்களை உடையனவாம். ஒவ்வொரு உயிரும் இயற்கையின் கொடையே. கபிலர் நாயின் தோற்றத்தையும், செயல்பாட்டினையும் பதிவிட்டுள்ளார். நாயின் பற்களைக் குறிப்பிடும்பொழுது மூங்கிலின் முளை உவமை கூறப்பட்டுள்ளது. உயிர்களை இயற்கையோடு பொருத்திப் பார்க்கின்ற விதம் சிறப்பிற்குரியதாக அமைகிறது.

இதில் நாயின் தோற்றம் வீரர்களோடு உவமித்துக் கூறப்பட்டுள்ளது. விலங்கினத்தை மனிதனோடு உயர்வாக ஒப்பிடும் சிந்தனை கபிலர் பாடலில் உள்ளது. வீரர்களின் வெகுளி என்ற மெய்ப்பாடு நாயோடு சார்த்திக் கூறப்பட்டுள்ளது. விலங்குகளில் நாய் மனிதனுக்கு காவல்புரியும் காவலாளியாக இருக்கிறது. இன்றும் இல்லங்களில் இதன் அடிப்படையில்தான் நாய் இருக்கிறது. இமைக்காமல் காவல் புரிந்தது, நகங்களாலும், பற்களாலும் பகைவரைத் தாக்கியது. ஒரு மனிதனுக்கு, இளைஞனுக்கு உள்ள வீரம் நாய்க்கு இருந்ததை கபிலர் பாடல்வழி அறியலாம். மேலும்

வரைஇழி அருவிப்பாட்டொடு பிரசம்
முழவுசேர் நரம்பின் இம்மென இமிரும்
..........................................................
..........................................................
எம்உறு துயரமொடு யாம்இவண் ஒழிய
எக்கண்டு பெயருங் காலை, யாழநின்
கல்கெழு சிறுகுடி எய்திய பின்றை
ஊதல் வேண்டுமால் சிறிதே – வேட்டொடு
வேய்பயில் அழுவத்துப் பிரிந்தநின்
நாய்பயிர் குறிநிலை கொண்ட கோடே (அகம்.318:5-15 )

மலையிலிருந்து அருவி விழுகின்ற ஓசையுடன் வண்டினங்கள் இணைந்து ஒலிக்கின்றன. அத்தகைய மலைநாட்டில் இரவுக்குறியில் வரும் தலைவனிடம் தோழி, 'இன்றுமுதல் இரவில் வருதல் வேண்டாம். வருவாயேயானால் யாம் இவ்விடமிருந்து உனக்கு என்ன ஆயிற்றோ என்று மயக்கம் அடைகின்ற துன்பம் தீரும் பொருட்டு, நீ என்னைக் கண்டு நின் மலைகள் சூழ்ந்த சிற்றூரை அடைந்த பிறகு, மூங்கில் செறிந்த காட்டிடையே வேட்டைக்குச் செல்லுங்கால் நின்னைப் பிரிந்து சென்ற வேட்டுவர்களோடு நாய்களை அழைக்கின்ற குறிப்பினைக் கொண்டுள்ள ஊதுகொம்பினை நீ ஊதுதல் வேண்டும். அதைக்கேட்டு நாங்கள் ஆறுதல் அடைவோம்' என தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

மலையிலிருந்து அருவி விழுகின்ற ஓசையுடன் வண்டினங்கள் இணைந்து ஒலிப்பது ஓர் இயற்கைக் காட்சியாகும். இரவில் தலைவனின் வருகையால் தோழிக்கும், தலைவிக்கும் ஏற்படக்கூடிய அச்சமே இரவின் அச்சத்திற்குரிய சூழலை வெளிப்படுத்துவதாய் அமைகிறது. மேலும், மலைகள் உள்ள சிற்றூரில் ஊதுகின்ற கொம்பின் சத்தம் ஆகியவை இரவுச் சூழலை காட்டுவதாய் அமைகிறது. இவ்வாறாக ஒவ்வொரு இயற்கைச் சூழலையும் கபிலர் நன்கு வெளிப்படுத்தும் வகையில் பாடலில் அமைத்துள்ளார்.

மேற்கண்ட பாடல்வழி நாய்களைக் குறவர்கள் வேட்டைக்கு அழைத்துச் செல்லும்போது ஊது கொம்பினை வைத்து நாய்களை அழைத்தனர் என்பதும் தெரிகிறது. வேட்டையில் தங்களுக்குக் காவலாக நாய்களை அழைத்துச் சென்றதை கபிலர் பதிவு செய்துள்ளார்.

### 2.23.7. உயிரைக் கொல்லும் முதலை

முதலையைக் 'கராம்' எனவும் 'இடங்கர்' எனவும் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. வலிய யானைகளையும் நீரில் ஈர்த்துச் செல்லும் ஆற்றல் மிக்கது முதலையாகும்.

**உருமும், சூரும் இரைசேர் அரவமும்**

**ஒடுங்கு இருங் குட்டத்து அருஞ்சுழி வழங்கும்**

**கொடுந்தாள் முதலையும், இடங்கரும், கராமும்**

**நூழிலும், இழுக்கும் ஊழ் அடி முட்டமும் (குறி.பா. 255-258)**

முல்லையிலும், குறிஞ்சியிலும் உறையும் விலங்குகள் இங்கு குறிக்கப்பட்டுள்ளன. கொடிய பாதையில் தலைவன் வருதலால் தலைவி வருந்துவதாகப் பாடல் அமைந்துள்ளது. மலைப்பகுதியில் தலைவன் வரும்போது தோன்றும் துன்பங்களாக யானை, கரடி, புலி, பாம்பு முதலிய விலங்குகளோடு, ஒடுங்கிய கரிய நீர் நிலைகளில் குட்டையான கால்களை உடைய முதலைகளும் உண்டு என்று தோழி கூறுவதன் மூலம் உயிரைக் கொல்லும் வலிமை உடைய முதலை காட்சிப்படுத்தப்படுகிறது. இது நீர் நிலையில் மட்டுமல்லாது மேட்டுப் பகுதியிலும் வந்து பிற உயிருக்கு அச்சம் தருவதை அறியலாம். மனிதரையும் கொல்லக்கூடியது. இவ்வாறு அச்சமூட்டும் விலங்குகளும் இருக்கும் மலைப்பகுதியில் குறிஞ்சி நில மக்கள் வாழ்ந்தாலும் மிகவும் மகிழ்ச்சியான இயற்கை சார்ந்த கிழங்கு, பலா, தேன் போன்ற சுவையான உணவிற்கும் பஞ்சமில்லாமல் இயற்கை கொடுத்த பரிசான மலையில் இயற்கையோடு வாழ்ந்தனர். இயற்கையோடு கலந்து இயற்கையை தெய்வமாகவும் வழிபட்டு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதை கபிலர் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

அடுத்ததாக அகநானூற்றுப் பாடலில் முதலையின் வலிமையை கூறியுள்ளார்.

**நீர் நிறம் கரப்ப, ஊழுறுபு உதிர்ந்து**

**பூமலர் கஞலிய கடு வரற்கான் யாற்று**

**கராஅம் துஞ்சும் கல்உயர் மறி சுழி**

**மராஅ யானை மதம் தபஒற்றி**

**உராஅ ஈர்க்கும் உட்குவரு நீத்தம் (அகம்.18:1-5)**

என்ற பாடலில் தோழி, 'தலைவனிடம் இரவில் வராதே. ஏனென்றால் நீ வரும் வழியிலுள்ள காட்டாறு விரைந்தோடும் வெள்ளப் பெருக்கினைக் கொண்டது. நீரின் நிறம் மறையுமாறு முதிர்ந்து உதிர்ந்த அழகிய நெருங்கிய மலர்கள் நிரம்பப் பெற்றது. முதலைகள் தங்கும் உயர்ந்த கற்பாறைகளில் மோதி மீளும் சுழிகளை உடையது. அத்தகைய காட்டாற்று வெள்ளத்தைக் கடந்து வீரம் மிக்க பன்றியைப் போலப் பயம் இன்றி இரவில் வருகின்றாய். ஆண் யானைகளையும், வருந்தச் செய்யும் காட்டாறாக உள்ளது. அத்தகைய வழியில் தலைவன் வருவதும் துன்பமாக இருக்கிறது. ஒரு நாள் வராவிடினும் மிகுந்த துன்பமாக இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.'

மேற்கண்ட பாடலில் காட்டாறானது நன்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. வலிமையான முதலைகள், கற்பாறைகள், நீர்சுழிகள் மேலும் மலர்களால் மூடப்பட்ட காட்டாற்று வெள்ளம் என ஆற்றின் ஒவ்வொரு பகுதிகளும் பாடலில் காட்டப்படுகின்றன. ஆண் யானைகளையும் வருந்தச் செய்யும் காட்டாறு என்னும் நிலையில் ஆற்றின் வலிமையானது நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முதலைகள் எந்த விலங்குகளுக்கும் பயந்ததாகத் தெரியவில்லை. பிற விலங்குகளும் மனிதனுமாக அனைத்து உயிரினங்களும் முதலையைக் கண்டு அச்சமடைகின்றன. மலையில் முதலைகளும் உண்டு என்பதை இதன்வழி அறியலாம். எனவே கபிலர் பாடலில் மலையில் காட்டப்படாத காட்சிகளே இல்லையெனும் அளவிற்கு அனைத்து இயற்கைக் காட்சிகளையும் கபிலர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார்.

### 2.23.8. பேதைக் கன்றும் போர் செய்யும் மலையாடும்

குறிஞ்சி நிலம் வளம் சார்ந்த பகுதியாக விளங்கியதால் மடியில் மிகுதியான பாலை சுமந்துகொண்டுச் சுற்றித் திரியும் காட்டுப் பசு அந்நிலத்தில் ஆங்காங்கே காணப்பட்டதை கபிலர் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

**சிலம்பின் மேய்ந்த சிறுகோட்டுச் சேதா**

**அலங்கு குலைக் காந்தள் தீண்டி, தாதுஉக**

**கன்று தாய் மருளும் குன்ற நாடன் (நற்.359:1-3)**

என்ற பாடலில் சிறிய கொம்பினை உடைய காட்டுப்பசு காந்தள் மலர்களைத் தீண்ட, கீழேபடுத்திருந்த கன்றின்மேல் மலரின் தாது உதிர்த்தது. அத்தாதினைத் தன்மேல் உதிர்த்தது தன் தாய் என்று அறியாமல் அதன் கன்று மயங்கியது.

இப்பாடலில், அழகான ஓர் இயற்கைக் காட்சியை கபிலர் காட்சி படுத்தியுள்ளார். புல் மட்டுமல்லாது, இளந்தளிர்களையும் அத்துடன் காந்தள் மலரையும் காட்டுப்பசு மேய்ந்தது. கீழே இருக்கும் கன்று ஏதும் அறியாமல் நின்று கொண்டிருந்தது. தன் மேல் மலரின் தாதுக்கள் விழச் செய்தது தன் தாய்ப்பசு என்று அறியாமல் மயங்கியதை கூறும்போது, இயல்பாகவே கன்றுக்கு இருக்கும் அச்ச உணர்வையும் சூழலை அறியாத தன்மையையும் அழகாக கபிலர் காட்சிப்படுத்தியுள்ளார். இது இயல்பான ஒரு செயலாக இருந்தாலும் கன்றிற்கு மயக்கத்தை உருவாக்கும் நிலையாக உள்ளது.

பெண்ணின் பருவங்களைக் குறிப்பிடும்பொழுது முதல் பருவத்தை பேதை என்பர். பேதை என்பது ஒன்றும் அறியாத பருவமாகும். இதே நிலைதானே எவ்வுயிர்க்கும். எனவே கன்றும் பேதையின் தன்மையினைப் பெற்று விளங்கியிருப்பதை கபிலர் நுட்பமாக பதிவுசெய்துள்ளார்.

**வாடல கொல்லோ தாமே அவன்மலைப்**

**போருடை வருடையும் பாயா**

**சூருடை அடுக்கத்த கொயற்கு அருந்தழையே (நற்.359:7-9)**

என்ற பாடலில் தலைவன் தலைவிக்கு பரிசாக ஒரு தழையாடையை அளிக்கிறான். அந்த ஆடையை உடுத்தினால் தாய் சினம் கொள்வாள். தலைவனிடம் திருப்பி அளித்தால் அவன் வருந்துவானே என அச்சமாக இருப்பதாகத் தோழி கூறுகிறாள். அந்த தழையாடையானது தலைவனின் பெரிய மலையில் போர் செய்தலை உடைய மலையாடு பாய்ந்து செல்ல முடியாத உயரத்தில் தெய்வம் இருக்கும். 'இயற்கையை சங்க கால மக்கள் வழிபாட்டின் அடி நாதமாக கொண்டிருந்தனர். அம்மக்கள் காடு, மலை, நிலம், கடல் ஆகியவற்றைத் தெய்வம் உறையும் இடங்களாகக் கருதினர்.'[42] அத்தகு மலைத் தொடரில் கொய்வதற்கரிதான தழையாடை வாடுதல் ஆகுமோ என்றும் தோழி வருந்துகிறாள்.

இப்பாடலில் அந்த மலையின் இயற்கை அமைப்பு நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அச்சமில்லாத மலையாடு செல்ல முடியாத அளவிற்கு மலைத் தொடரானது உயரமாக அமைந்துள்ளதை மேற்கண்ட பாடல் குறிப்பிடுகிறது.

### 2.23.9. கலச நீரைச் சொரியும் யானைகள்

காட்டில் வாழும் பெரிய விலங்கு யானையேயாகும். பெரிய உடலையுடைய இந்த யானைகள் செங்குத்தான சரிவுகளிலும் நடந்து உணவு

தேடிச் செல்லும் பழக்கமுடையன. செங்குத்தான உச்சிச் சரிவுகளிலும், பாறை இடுக்குகளிலும், மலைகளிலும் யானைகள் தங்கள் முன்னங்கால்களால் நிலத்தைத் தட்டிப் பார்த்துத் தடங்கண்டுபிடித்துச் செல்லும் தன்மையுடையது. வலிமை பொருந்திய யானையைக் கபிலர் கலித்தொகையில் குறிப்பிடுகின்றார். புள்ளிகளை உடைய நெற்றியைக் கொண்டது யானை. கரும்பு, மூங்கில், திணை, தழை முதலியவற்றை யானை விரும்பி உண்ணும். யானைகள் கூட்டம் கூட்டமாக வாழும் இயல்புடையன. யானை விரைந்து நடக்கும் இயல்புடையது. புலியொடு அது கொண்டுள்ள வீரத்தினையும், மதம் கொண்டுள்ள தன்மையும், சுற்றந் தழுவும் பண்பினையும் கபிலர் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

**கதிர்விரி கனை சுடர்க் கவின்கொண்ட நனஞ்சாரல்**
**ஏதிர் எதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து**
**அதிர்இசை அருவிதன் அஞ்சினைமிசை வீழ,**
**முதிர் இணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரிவேங்கை**
**வரிநுதல் எழில்வேழம் பூ நீர்மேல் சொரிதர**
**புரிநெகிழ் தாமரை மலர்அம்கண் வீறுஎய்தி**
**திரு நயந்து இருந்தன்ன தேங்கமழ் விறல் வெற்ப (குறி.கலி.44)**

எதிரெதிரே உயர்ந்து விளங்கும் மலைச்சாரல் விளங்கக் கதிரவனின் ஒளி திகழும் மாணிக்கப் பாறையிடத்தே, இருமலைகளினின்றும் வீழும் அருவிகள் தம் கிளைகளில் விழுதலால், அழகிய கொத்துக்களாய் மலர்ந்து முழவு போன்றும் எரி போன்றும் விளங்குகின்ற அடியினைக் கொண்டு வேங்கை மரம் விளங்கியது. இக்காட்சியினை, அழகிய புள்ளிகள் பொருந்திய மத்தகத்தோடு விளங்கும் இரு யானைகள், இரு பக்கங்களிலும் நின்று தம் துதிக்கைகளால், பூவொடு கூடிய நீரினைச் சொரியும். இதை தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் காட்சியொடு இணைத்துக் கபிலர் காட்டியுள்ளார்.

மேற்கண்ட பாடலில் மலையில் தோன்றும் கதிரவனின் கதிர்கள், பாறைகளில் வீழும் அருவிகள், நெருப்பைப் போல் பூத்திருக்கும் பூக்களையுடைய வேங்கை மரம், பூக்களோடு கலந்து கலச நீரைத் தன்மீது சொரிந்து கொள்ளும் யானைகள் என ஓரிடத்தில் பல்வேறு வண்ணங்களையுடைய செயல்பாடுகள் மனக்கண் முன்னே விரிவதாய் அமைகின்றன. கபிலர் இயற்கையின் அசைவுகள் ஒவ்வொன்றையும் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

**வாங்குகோல் நெல்லோடு வாங்கி, வருவைகல்**

**மூங்கில் மிசைந்த முழந்தாள் இரும்பிடி**

**தூங்கு இலை வாழை நளிபுக்கு ஞாங்கர்**

**வருடை மடமறி ஊர்வு இடைத் துஞ்சும்**

**இருள்தூங்கு சோலை இலங்குநீர் வெற்ப** (கலி.50:1-5)

*இதில், 'மலைப்பகுதியில் விளைவிப்பார் இன்றித் தானே விளைந்து, வளைந்து நின்ற மூங்கில் நெற் கதிர்களை வளைத்துத் தின்றது கரிய பெண் யானை. செறிந்த இலைகளை உடைய வாழைகள் நிறைந்த இடத்தே புகுந்து சென்றது. அங்கு வருடை மானின் குட்டிகள் நின்ற இடத்தில், ஞாயிறு தோன்றும் விடியல் காலையில் யானை துயில் கொண்டது. அத்தகைய வளம் உடைய இருள் சூழ்ந்த சோலைகளை உடைய நீரினை உடைய வெற்பனே' என்று தோழி கூறுவதாக கபிலர் பாடியுள்ளார்.*

*நன்கு முற்றிய நெற்கதிர்கள், செறிந்த இலைகளையுடைய வாழைகள் மான் குட்டிகள், யானைகள் என குறிஞ்சி நிலம் பல்வேறு உயிர்தொகுதியாக விளங்குகிறது. இவ்வாறாக கபிலர் தம் பாடல்களில் இயற்கையைக் காட்சிப்படுத்தியுள்ளார்.*

### 2.23.9.1. வலிமையான களிறு

*சங்க நூல்களில் யானை பல இடங்களில் புலியுடன் பொருந்தி இருக்கும் பாங்கு புலப்படுகிறது. யானை புலியைத் துரத்திக் காயப்படுத்திய நிகழ்வை கபிலர் அகநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ளர்.*

**முளைவளர் முகல மூங்கில் முருக்கி**

**கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை**

**நீர்நசை மருங்கின் நிறம்பார்த்து ஒடுங்கிய**

**பொருமுரண் உழுவை தொலைச்சி, கூர்நுனைக்**

**குருதிச் செங்கோட்டு அழிதுளி கழாஅ**

**கல்முகை அடுக்கத்து மென்மெல இயலி**

**செறுபகை வாட்டிய செம்மலொடு அறுகால்**

**யாழ்இசைப் பறவை இமிர பிடிபுணர்ந்து**

**வாழைஅம் சிலம்பில் துஞ்சும் நாடன்** (அகம்.332:1-9)

*தூறுகளில் முளைத்து வளர்ந்து வரும் மூங்கில்களைத் தன் இனத்துடன் நின்ற களிறானது நீர்வேட்கைக் காரணமாக நீர்த்துறையருகே சென்றது. அதன்*

வருகையை எதிர்பார்த்துத் தாக்குதற்கும் பதுங்கியிருந்த போர்க்குணம் வாய்ந்த புலியினைப் போரிட்டுக் கொன்றது. குருதி மிக்க கூர்மையான முனையையுடைய தம் கொம்பினை மழைநீரால் கழுவியது. பின்னர், கல்முனைகளை உடைய பக்கமலையில் மெல்ல மெல்ல நடந்து சென்று, சினந்தெழுந்த தன் பகைப்புலியைக் கொன்று போட்ட செருக்குடன், யாழின் இசைபோன்று வண்டுகள் ஒலி செய்யச் சென்று, தன் பிடியுடன் கூடி வாழை மரங்கள் உடைய மலையில் உறக்கம் கொள்ளும் மலை என குறிஞ்சி நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உயிரினமும் உணவு தேடுதலையும் தன் இனத்தைப் பெருக்குதலையுமே முதன்மையான பணிகளாக மேற்கொண்டு வருகின்றன. இது உலகத்தியற்கையாகும். அந்த வகையில் போர்க்குணம் வாய்ந்த புலிக்கும் வலிமையான களிற்றுக்குமான பகைமையில் புலி யானையால் கொல்லப்படுகிறது. பிறகு மன அமைதியுடன் தன் இணையோடு களிறானது சென்றதாக அமைந்துள்ள இச்சூழல் இயற்கை நிகழ்வினை கபிலர் காட்சிப்படுத்தியுள்ள சிறப்பினை வெளிப்படுத்துகிறது.

இதனோடு ஒத்த செய்தி நற்றிணையில் கூறப்பட்டுள்ளது. முருகப் பெருமானை ஒத்த வலிமையுடன் கடுமையான சினமுடையதாய்ப் போரிட்ட யானையின் வெண்மையான தந்தம் குருதி படிந்து சிவந்திருக்கும்.

**முருகு உறழ் முன்பொடு கடுஞ்சினம் செருக்கிப்**

**பொருத யானை வெண்கோடு கடுப்ப (நற்.225)**

இதில் யானையின் போரிடும் தன்மை முருகக் கடவுளோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. தெய்வத்தோடு சார்த்தி கூறுமளவிற்கு வலிமையான யானை சிறப்பு பெறுகிறது. புலியோடு யானை போரிட்டு சினத்துடன் வேங்கை மரத்தை மிதித்தக் காட்சியும் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை**

**குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்**

**நின்று கொய மலரும் நாடனொடு (குறுந்.208)**

என்ற பாடலில் புலியோடு போரிட்ட ஆண் யானை சினம் தணியாமல் வேங்கை மரத்தைச் சிதைத்ததால் மரமானது சற்று சாய்ந்தது. அதனால் குறவர் மகளிர் தங்கள் கூந்தலில் அழகு செய்வதற்கு மலர்களை நின்றபடியே பறிக்குமளவிற்கு வேங்கை மரம் சாய்ந்திருந்த நிலை காட்சிப்

படுத்தப்பட்டுள்ளது. இதில் யானைக்கும் புலிக்குமிடையேயான பகை, சினம் தணியாத களிறு, அதன் விளைவால் சாய்ந்த வேங்கை மரம், முன்பு இல்லாத அளவிற்கு தற்பொழுது மகளிர் நின்று கொண்டே மலர் பறிக்குமளவிற்கு வேங்கை சாய்ந்திருக்கும் சூழல் ஆகியவை ஒரு நிகழ்வின் அடுத்தடுத்த செயல்பாடுகளை உள்ளடக்கியதாய் அமைந்துள்ளதை குறிஞ்சி நிலம் பதிவு செய்துள்ளது.

### 2.23.9.2. யானையின் நேசமும் அச்சமும்

யானையானது குடும்ப உணர்வும், குழு உணர்வும் மிக்கது. மக்களைப் போல் தன் இனத்திடம் அதிகம் அன்பு செய்யும் பழக்கமுடையது. தன் இனத்தில் உள்ள ஒரு யானைக்கு ஏதேனும் தீங்குகள் நேர்ந்தால் பிற யானைகள் அத்துன்பத்தினைக் களைந்து அதற்கு உதவி செய்யும். இவை போன்ற செயல்பாடுகள் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**மாசு அறக் கழீஇய யானை போலப்**

**பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்**

**பைதல் ஒரு கலைச் சேக்கும் நாடன் (குறு.13)**

இதில் யானை, தன் தலையிலும், உடலிலும் புழுதியை வாரி இறைத்துக் கொள்ளும். அதன் உடலில் உள்ள புழுதி முற்றிலுமாகக் கழுவப் பெறாமல் இருக்கும். ஏனென்றால் துறுகல்லின் மேல் உரசி துறுகல் மாசு ஏற்படும்படி செய்தது. பாகன் யானையை புழுதி நீங்கும்படி கழுவி விடுவான். துறுகல் மழை பெய்தால் மட்டுமே அதன் மாசு அகன்றது என்ற செய்தியைக் கபிலர் பதிவு செய்துள்ளார்.

இதில் துறுகல் என்பது உருண்டைக் கல் ஆகும். உருண்டைக் கல்லை காம வேகத்தால் மதம் பெருகிய களிறு, பெண் யானை என நினைத்து மயங்கி இருக்கலாம். தன் இனத்துடன் கூட்டமாக சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் யானைக்கு இருப்பதும் தெரிகிறது.

**ஒளிறு வெள்அருவி ஒண்துறை மடுத்துப்**

**புலியொடு பொருத புண்கூர் யானை**

**நற்கோடு நயந்த அன்பில் கானவர்**

**விற் சுழிப்பட்ட நாமப் பூசல்**

**உருமிடைக் கடிஇடி கரையும் (நற்.65)**

என்ற பாடலில் அருவி நீர் காணக்கூடிய மலையில் யானை புலியுடனே பாய்ந்து போர் செய்ததனால் புண்பட்டது. புண்கொண்ட யானையின் நல்ல தந்தத்தை விரும்பிய அன்பற்ற கானவர் வில்லிலிருந்து அம்பைச் செலுத்துவர். அந்த அம்பு படவே சுழன்று அச்சத்தை உண்டாக்கும்படி பேரொலியை யானை உண்டாக்கும். அவ்வொலி இடியில் உண்டாகும் பேரோசையாய் ஒலிக்கும் என்பது பாடல் கருத்து.

களிறானது பிற யானைகளைத் துணைக்கு அழைப்பதற்கோ, தன் எதிர்ப்பினைக் காட்டுவதற்கோ அவ்வாறு பேரொலியை ஏற்படுத்தியிருக்கலாம். அந்த வகையில் கபிலர் மலைப்பகுதியில் உயிரினங்களின் ஒவ்வொரு அசைவுகளையும் நன்கு பதிவு செய்துள்ளார். குறிஞ்சி நிலக் கருப்பொருள்களில் புலியைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கிய பாடல்களில் இடம் பெறுகின்றன.

**குறவர் ஊன்றிய குரம்பை புதைய**
**வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்**
**புலிசெத்து வெரீஇய புகர்முகவேழம்**
**மழைபடு சிலம்பில் கழைபட பெயரும் (அகம்.12)**

குறவர்கள் அமைத்த குடிசையின்மீது வேங்கைப் பூக்கள் உதிர்ந்து அக்குடிசை மறையுமளவிற்குப் பரவியுள்ளது. அத்தோற்றத்தைக் கண்ட புள்ளிகளையுடைய யானைகள் புலி என்று அஞ்சி, மேகங்கள் தங்கும் மலைச்சாரலில் உள்ள மூங்கில்கள் முறிந்து விழும்படி ஓடியது. குடிலை அஞ்சத்தக்கப் புலி என எண்ணி யானையானது தனக்கு உணவான மூங்கில் முறிய ஓடியது. குறிஞ்சி நிலத்தின் ஒவ்வொரு உயிரினங்களின் செயல்பாடுகளையும் கபிலர் தம் பாடலில் கற்பனையுடன் இயற்கை அழகையும் பதிவு செய்துள்ளார்.

யானை பல விலங்குகளுக்கு அச்சமூட்டுவனவாக இருக்கிறது. யானை பிற விலங்கைக் கண்டு அஞ்சவில்லை. மாறாக கொள்ளிக்கட்டையைக் கண்டு அஞ்சுவதை இப்பாடலில் புனைந்துள்ளார் கபிலர்.

**ஏனல் அம் சிறுதினை காக்கும் சேணோன்**
**ஞெகிழியின் பெயர்ந்த நெடுநல் யானை**
**மீன்படு சுடர் ஒளி வெரூஉம்**
**வான்தோய் வெற்பன் மணவா ஊங்கே (குறு.357)**

தினைப்புனத்தில் உள்ள தினையைக் காக்க பரண்மேல் இருக்கும் குறவன் கொளுத்திய கொள்ளிக்கட்டையைக் கண்டு அஞ்சி ஓடியும், வானத்தில் எரி

நட்சத்திரம் எரிந்து விழுகிறது என்று அஞ்சி யானை ஓடுகிறது. இதில், பிற விலங்குகளைக் கண்டு பயந்து ஓடியதாக குறிப்பிடவில்லை. எரி நட்சத்திரம் மேலே பட்டால் தனக்கு தீங்கு ஏற்பட்டு விடுமோ என்ற நுண்ணறிவு யானைக்கு இருப்பதை கபிலர் இதில் உணர்த்தியுள்ளார். யானைக் கூட்டங்கள் இதனைக் கண்டு பாதுகாப்பான இடத்திற்கு சென்றிருக்கலாம். இதன்மூலம் யானை விழிப்போடும், முன்னெச்சரிக்கையோடும் இருப்பது தெரிகிறது.

### 2.23.9.3. காதல் செய்த யானை

'உலகில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் அடிப்படையாய் இருப்பது அன்பு என்ற உணர்வேயாகும். அந்த அன்பு தான் உயிரினங்களின் இன்பத்திற்கு அடிப்படையாகவும் திகழ்கிறது.'[43]

**ஒடுங்கா எழில் வேழம் வீழ்பிடிக்கு உற்ற**

**கடுஞ்சூல் வயாவிற்கு அமர்ந்து நெடுஞ்சினைத்**

**தீம் கண் கரும்பின் கழைவாங்கும் – உற்றாரின்**

**நீங்கலம் என்பான் மலை (குறி.கலி.40:25-28)**

என்ற பாடலில் மலையில் உள்ள யானைகளின் குணம் இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. ஆண் யானை தன் பெண் யானையிடம் அன்பு கொண்டு ஒழுகி காதல் புரியும். இதனால் பெண் யானை கருத்தரிக்கும். கருத்தரித்த பெண் யானைக்கும் கரும்பின் மீது ஆசையுண்டு என்பது ஆண் யானைக்குத் தெரியும். எனவே, ஆண் யானை கரும்பு எங்கு உள்ளது என்று தேடிச் சென்று, தன் காதலிக்குக் கொண்டு வந்து கொடுக்கும். அந்த மலைநாட்டில் உள்ள யானையின் பண்பு இத்தகையது எனில் குறிஞ்சி நில மக்களின் பண்பாட்டைக் கபிலர் சொல்லாமல் சொல்கிறார்.

இதனையடுத்து, மற்றொரு காட்சி யானை தன் காதலியுடன் மகிழ்ச்சியாக இருந்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**வறன் உறல் அறியாத வழை அமை நறும்சாரல்**

**விறல்மலை வியல்அறை வீழ்பிடி உழையதா**

**மறம் மிகுவேழம், தன் மாறுகொள் மைந்தினான் (கலி.17)**

மலையில் ஓர் ஆண் யானை, அதன் காதலியான பெண் யானையுடன் இருந்தது. அப்போது அங்கே மற்றோர் ஆண் யானை வந்தது. காதலியுடன் இன்பமாயிருக்கும் ஆண் யானைக்குப் பகை தோன்றுவது இயற்கைதானே. வந்த யானையுடன் சண்டை செய்தது காதல் செய்த யானை. தன்

கொம்புகளால் குத்தி விரட்டியது. வந்த யானை ஓடிப்போயிற்று. தனது வீர வெற்றி விழாவைக் கொண்டாடுவது போல் பெண் யானையுடன் இருந்தது ஆண் யானை. அதன் கொம்பிலே இரத்தக்கறை படிந்திருந்தது.

இதிலிருந்து யானை, தன் காதலியுடன் காமவேட்கை மிகுந்து மகிழ்ச்சியுடன் இருந்தது தெரிகிறது. தடையினைத் தகர்த்தெறியவும், அன்பான வாழ்க்கை வாழ்ந்ததையும் அறியலாம். 'மனிதனின் முயற்சியின்றி இயல்பாக அமைந்த இயற்கையில் நிகழும் நிகழ்வுகளை உவமைகளாக்கி வாழ்மையோடு இயைத்துக் காணும் போக்கு இலக்கிய மரபாகும். இயற்கை அனைத்தும் அழகே அவ்வழகு மனித மனங்களை இயங்கச் செய்கின்றது.'[44] மனிதனைப் போலவே விலங்கிற்கும் காதல் உணர்வு இருப்பதை கபிலர் காட்சிப்படுத்தியுள்ளார்.

#### 2.23.9.4. பசி போக்கும் யானை

யானை கூடி வாழும் இயல்புடையது. ஆதலால் கபிலர் யானையைக் **கிளைபாராட்டும் கடுநடை வயக்களிறு** என்று வருணனை செய்துள்ளார். தாவர உண்ணிகளில் யானையும் ஒன்று. இத்தகைய யானை தன் இனத்தைப் பேணிப் பாதுகாத்துப் போற்றும் விரைந்த நடையை உடைய களிறானது முதலில் மூங்கில் தழைகளையும், பின்னர் தன் இனம் விரும்பும் தழைகளையும் கொண்டு வந்து கொடுத்து அவற்றை உண்பிக்கும். இத்தகைய தன்மை உடையது யானையாகும்.

**கிளைபா ராட்டும் கடுநடை வயக்களிறு**
**முனைதருபு ஊட்டி வேண்டுகுளகு அருத்த**
**வாள்நிற உருவின் ஒளிறுபு மின்னி** (அகம்.218)

என்ற பாடலில் யானையானது தாவரமான மூங்கில் இலைகள், தழைகள் தனக்குத் தேவையானதை உண்டபின், தன் இனத்திற்கும் எடுத்து வந்து கொடுத்து உண்பிக்க வைத்ததிலிருந்து தன் குடும்பத்தினரிடம் மிகுந்த அன்பு கொண்டுள்ளதை அறியலாம். ஒரு இல்லத்திற்கு தந்தை எவ்வாறு தன் குழந்தைகளுக்கு உணவு சேகரித்து பசியைப் போக்க நினைக்கிறாரோ அதைப் போல இந்த யானையும் தன் இனத்தின் பசியைப் போக்க எண்ணுகிறது. குறிஞ்சி நில மனிதரின் வாழ்க்கையைப் போல அன்பான, அமைதியான வாழ்க்கையை அங்குள்ள யானையும் வாழ்ந்ததைக் கபிலரின் பாடல்களின்வழி அறியலாம்.

### 2.23.9.5. துயில் கொள்ளும் யானை

நள்ளிரவில் யானை துயில் கொள்ளும் என்பதை குறுந்தொகையில் கபிலர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு துயில் கொள்ளும்போது பெருமூச்சு விடும் என்பதையும் பதிவு செய்துள்ளார்.

**பள்ளி யானையின் உயிர்த்து என்**

**உள்ளம் பின்னும் தன் உழையதுவே (குறு.142)**

நான் அவளிடம் கூடி பிரிந்த பின்னும் நள்ளிருள் சாமத்தில் படுத்திருக்கும் யானை பெருமூச்சு விட்டதுபோல பெருமூச்சு விட்டுக் கொண்டே இங்கு இருக்கிறேன் என தலைவன் தோழியிடம் கூறுகிறான்.

இதே செய்தியை நற்றிணையிலும் கபிலர் பதிவு செய்துள்ளார்.

**புள்ளுப் பதி சேரினும், புணர்ந்தோர்க் காணினும்**

**பள்ளி யானையின் வெய்ய உயிரினை**

**கழிபட வருந்திய எவ்வமொடு பெரிது அழிந்து (நற்.253)**

என்ற பாடலில் 'பறவைகள் தம் கூடுகளில் சென்று இணைந்து இன்புற்றாலும் காதலராய் இணைந்தோரைக் கண்டாலும், படுக்கையில் கிடக்கும் யானைப் போலப் பெருமூச்சு விடுகின்றாய்' என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். தலைவி வீட்டுக் காவலில் வைத்ததால் யானை விடும் பெருமூச்சு போல நீ பெருமூச்சு விடுகிறாய் என்கிறாள் தோழி. இதில் யானை பெருமூச்சு விட்டு துயிலும் என்பது தெரிகிறது.

### 2.23.9.6. உவமையான யானை

'முறம் போன்ற காதை உடைய யானையின் பெரிய துதிக்கையைப் போலப் பருத்துத் தலை தாழ்ந்த கதிர்களையும் பசுமையான அடித்தண்டினையும் கொண்ட செந்நிறமுடைய தினைப் பயிரை வரையாது கொடுப்பவனின் வள்ளல் தன்மை கருதி வரும் பரிசிலர் போலப் பலவாகிய சுற்றத்தாரோடு வந்து உண்ணும் பசிய கிளிகளே' என்று தோழி தலைவி இற்செறிக்கப்பட்டமையால் கிளிகளிடம் கூறுவது போல் கூறுகிறார்.

**முறஞ்செவி யானைத் தடக்கையின் தடைஇ**

**இறைஞ்சிய குரல் பைந்தாட் செந்தினை**

**வரையோன் வண்மை போல பலஉடன்**

**கிளையோடு உண்ணும் வளைவாய்ப் பாசினம் (நற்.376)**

இதில், யானையின் காது முறம் போன்று இருப்பதாகக் கபிலர் கூறுகிறார். யானையின் கை பருத்த தலை தாழ்ந்து இருக்கும் முற்றிய கதிர் போல இருந்ததாகக் கூறுகிறார்.

யானையின் முதுகு மலைப் பகுதியில் இருக்கும் சிறிய வழி போல் இருப்பதாக அகநானூற்றுப் பாடலில் யானையின் உருவத்தை உவமை படக் கூறியுள்ளார்.

**கானநாடன் வரூஉம் யானைக்**

**கயிற்றுப் புறத்தன்ன கல்மிசைச் சிறுநெறி**

**மாரிவானம் தலைஇ நீர்வார்ப்பு (அகம்.128)**

இதில் மலைப்பகுதியில் இருக்கும் சிறிய வழி யானையின் முதுகின்மேல் இருக்கும் கயிற்றுத் தழும்பு அமைந்த இடத்திற்கு உவமையாக்கி கபிலர் கூறுகிறார்.

### 2.23.9.7. யானையின் மதம்

யானை மதம் கொண்டபோது மிகவும் அச்சுறுத்துவதாக அமைந்து சீற்றத்துடன் காணப்படும் என்று கபிலர் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

**மடிவிடு வீளையர் வெடிபடுத்து எதிரக்**

**கார்ப்பெயல் உருமின் பிளிறிச், சீர்த்தக**

**இரும்பிணர்த் தடக்கை இருநிலஞ் சேர்த்திச்**

**சினம் திகழ் கடாஅம் செருக்கி, மரம் கொல்பு**

**மையல் வேழம் மடங்கலின் எதிர்தர**

**உய்வு இடம் அறியேம் ஆகி ஒய்யென**

**திருத்துகோல் எல்வளை தெழிப்ப நாணுமறந்து**

**விதுப்புறு மனத்தேம் விரைந்து அவற்பொருந்திச்**

**சூர்உறு மஞ்ஞையின் நடுங்க (குறி.பா.161-169)**

இதில், 'கார்காலத்து மழையின் இடிபோன்று யானை, பிளறி, சிறப்புடைய தன் கரிய சருச்சரையுடைய பெரிய துதிக்கையை நிலத்தில் அறைந்து, அதன் சீற்றம் வெளிப்பட மதம் பொழிந்தது, செருக்குடன் மரங்களை முறித்தது, கூற்றுவன் போல் சினந்து எங்களை நோக்கி வந்தது. எங்களுக்கு உய்விடம் அறியாத நிலையில் உடனே திருந்திய திரட்சியையுடைய வளையல்கள் ஒலிக்க, நாணத்தையும் மறந்து, நடுக்கமுற்ற மனத்துடன் அவனை

நெருங்கினோம். தெய்வம் ஏறிய மயில் போல் நடுங்கினோம்' என்று யானையின் வருகையை தோழி கூறுவதாகக் கபிலர் பாடியுள்ளார்.

இதில் யானையின் மதம் கூறப்பட்டுள்ளது. உயிரைப் பறிக்கும் கூற்றுவனுக்கு இணையாக யானையைக் கூறியுள்ளார். யானையை உயர்த்தி திருமகளாகவும், முருகனுக்கு இணையாகவும் கூறிய கபிலர் மதம் பொருந்தி இருக்கும்போது அதன் கொடிய செயலைக் கண்டு உயிரை எடுக்கும் கூற்றுவன் என்கிறார். தலைவியையும் தோழியையும் நடுங்கச் செய்ததாக யானையின் செயல் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். மதம் பொருந்திய யானை குறிஞ்சி நில மக்களுக்கும் இயற்கைக்கும் அழிவு ஏற்படுத்தியதைக் காட்சிப்படுத்தியுள்ளார். கபிலர் இயற்கை நிகழ்வுகளை உள்ளதை உள்ளவாறு பதிவு செய்துள்ளார். இயற்கையழகை மட்டும் குறிப்பிடாமல் இயற்கை அழிவுகளையும் கபிலர் தம் பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். கபிலர் காலத்தை காட்டும் கண்ணாடியாக தம் பாடல்களை அமைத்துள்ள விதத்தை அறியலாம்.

### 2.23.9.8.வெட்கப்பட்ட யானை

கலித்தொகையில் உள்ளுறையில் யானையைக் கூறுவது போல, தலைவனின் செயல்பாடுகளை கபிலர் கூறியுள்ளார்.

**கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு**
**நெடுவரை மருங்கின் துஞ்சும் யானை**
**நனவில் தான் செய்தது மனத்தது ஆகலின்**
**கனவிற் கண்டு கதுமென வெரீஇ**
**புதுவதாக மலர்ந்த வேங்கையை**
**'அது' என உணர்ந்து அதன் அணிநலம் முருக்கிப்**
**பேணா முன்பின் தன்சினம் தணிந்து அம்மரம்**
**காணும் பொழுதில் நோக்கல் செல்லாது**
**நாணி இறைஞ்சும் நன்மலை நன்நாட (கலி.13)**

'மலை நாடனே, கேள்! உன்னுடைய நாட்டில் உள்ள யானை என்ன செய்கிறது. புலியுடன் போரிடுகிறது. போரிட்டு வெற்றி கொள்கிறது. பின் தூங்குகிறது. போர் செய்த அயர்வினாலே. அவ்விதம் தூங்கும்போது கனவு காண்கிறது. என்ன கனவு? புலி வந்து, எதிரே நிற்பது போலவும், சண்டை செய்வது போலவும் கனவு. உடனே சினந்து எழுகிறது யானை. எழுந்து பார்க்கிறது. எதிரே வேங்கைமரம் பூத்துக் குலுங்கி நிற்கிறது. மரம் புலி போல்

காட்சி தருகிறது. அதைத் தாக்கிக் கீழே வீழ்த்துகிறது யானை. வீழ்த்திய பிறகு சினம் தணிகிறது. தணிந்த பிறகு பார்க்கிறது. வேங்கைப் புலியல்ல, வேங்கை மரம், 'ஐயோ! இதையா தாக்கினோம்!' என்று எண்ணுகிறது யானை. எண்ணிய உடனே வெட்கம் மண்டுகிறது. வேங்கை மரம் உள்ள பக்கம் திரும்பாமலே இருக்கிறது யானை. இது உன் நாட்டில் நடக்கிற நிகழ்ச்சி' என்று தோழி தலைவனிடம் 'இரவு நேரத்தில் வராதே' என்று கூறுவதாக இப்பாடல் அமைகிறது. 'இயற்கையின் அமைதியான நிகழச்சிகளைக் கூறுவதில் தான் புலவருடைய கூர்த்த அறிவும் கற்பனையும் விளங்கும் என்பதில்லை. இயற்கையில் நிகழும் அழிவுக் காட்சிகளாலும் புலவர்கள் உள்ளம் கவரப்படுவது உண்டு.'[45]

நாம் எண்ணும் எண்ணங்கள் அனைத்தும் கனவில் இடம்பெற வாய்ப்புண்டு. அந்த வகையில் யானைக்கும் தன் எண்ணப் பதிவுகள் கனவுகளாய் வெளிப்படுத்துவதாய் கபிலர் இப்பாடலில் காட்சிப் படுத்தியுள்ளார். பகை கொண்ட புலியை வெற்றி கொண்ட பின்பும் களிற்றின் சினம் தணியவில்லை. ஆதலால் உறங்கி விழித்த களிறானது, கண் விழித்து எதிரே இருந்த வேங்கை மரத்தைப் புலியெனக் கருதித் தாக்கியது. பிறகு உண்மையறிந்து வெட்கம் கொண்ட நிலை கபிலரின் புனைவுத் திறனுக்கான சான்றாகும். இந்நிகழ்வு கற்பனையாக இருந்தாலும் இயற்கைக் காட்சிகள் நன்கு புனைவு செய்யப்பட்டுள்ளது.

### 2.24. முடிவுரை

பழந்தமிழர் இயற்கையுடன் இரண்டறக் கலந்து வாழந்ததற்கான சான்றுகளை இலக்கியங்கள் பகர்கின்றன. மனிதன் இல்லாமல் இயற்கை இயங்க இயலும். இயற்கை இல்லாமல் மனிதன் வாழ்வது என்பது இயலாத ஒன்றாகும். மரங்கள் உயிர்களுக்குத் தேவையான ஆக்சிஜனை வழங்கி வருகிறது. உயிரினங்களின் வாழ்விற்கு இன்றியமையாத மரங்களை தன் உறவாக உயர்திணையில் சங்க கால மக்கள் பார்த்தனர். மேலும் மரங்கள், செடிகள், கொடிகள் ஆகியவற்றின் எழிலினை, இயற்கையினை, வடிவத்தினை அழகுபட கபிலர் தம் பாடலில் கூறியுள்ளதன் வழியாக பழந்தமிழர் தாவரங்களுக்கு அளித்துள்ள முக்கியத்துவத்தினை உணரலாம். இந்தப் புவியில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. சூரிய மண்டலத்தில் புவியில் மட்டும் தான் உயிர்கள் வாழ்வதற்கானச் சூழல் அமைந்துள்ளது. எனவே அனைத்து உயிர்களும் இப்புவியில் வாழ்வதற்கான உரிமைகளையும் பெற்றுள்ளன. அதனை உணர்ந்து பழந்தமிழர் பல்வேறு உயிரினங்களின் செயல்பாடுகளையும் குறிப்பிட்டுள்ளனர். கபிலரும் மிகச் சிறப்புறவே பறவைகளையும் விலங்குகளையும் தம் பாடலில் நன்கு பதிவு செய்துள்ளார். தாவரங்கள், பறவைகள், விலங்குகள் வாயிலாக அக வாழ்விற்குத் தேவையான சிந்தனைகளைப் புகுத்த கபிலர் விழைந்துள்ளார்.

தலைவன் தலைவியின் உள்ளத்து உணர்வுகளை இயற்கை உணர்ந்து இயைந்து ஒன்றிவிட்டது போல் கபிலர் தம் பாடலில் உணர்வுகளை காட்சிப்படுத்தியுள்ளார். அவர்கள் மகிழ்ந்தபோது இயற்கையும் மகிழ்ந்ததாகவும், துயருற்ற போது இயற்கையும் துயரால் துவண்டது போலவும் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

கபிலர் முழுக்க முழுக்க இயற்கையைப் பற்றி மட்டும் பாடவில்லை. குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை நிலைகளை ஒவ்வொரு உயிர்களிடத்தும் தாவரங்கள், விலங்குகள், பறவைகள் மூலம் பண்டைய குறிஞ்சி நிலத்தாரின் வாழ்க்கையைக் காட்சிபடுத்தியுள்ளார். கபிலர் தம்மைச் சுற்றியிருந்த இயற்கைச் சூழ்நிலைகளையே பாடியுள்ளார். மனித வாழ்க்கையையும், இயற்கையையும் பின்னி பிணைந்து நிகழ்வுகளைத் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

# சான்றெண் விளக்கம்

| | | |
|---|---|---|
| 1. | வே.முத்துலக்குமி, இலக்கிய இயற்கை | ப.13 |
| 2. | கபிலர், கா.அரங்கசாமி | ப.124 |
| 3. | தொல்காப்பியம், பொருளதிகாரம் | நூ-964 |
| 4. | அகப்பொருள் விளக்கம் | நூ-19 |
| 5. | கு.வி.கிருஷ்ணமூர்த்தி, தமிழரும் தாவரமும் | ப.66 |
| 6. | மேலது | பக்.67-68 |
| 7. | மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் | ப.207 |
| 8. | மேலது | பக்.(131,132) |
| 9. | மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை | ப-46 |
| 10. | சொ.கலைச் செல்வி, கவின் தொகை எட்டு | ப-41 |
| 11. | வே.முத்துலக்குமி, இலக்கிய இயற்கை | ப-39 |
| 12. | மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை | ப-109 |
| 13. | ந.மு.வேங்கடசாமி நாட்டார், கபிலர் | ப.80 |
| 14. | க.ப.அறவாணன், அற்றை நாட் காதலும், வீரமும் | ப.95 |
| 15. | ந.சுப்பிரமண்யன், சங்க கால வாழ்வியல் | ப.97 |
| 16. | ந.வள்ளியம்மாள், தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் கொள்கைகள், | ப-16 |
| 17. | வே.முத்துலக்குமி, இலக்கிய இயற்கை | ப-21 |
| 18. | வ.சுப.மாணிக்கம், தமிழ்க் காதல் | ப.155 |
| 19. | மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை | ப-111 |
| 20. | மா.இராசமாணிக்கனார்,பத்துப்பாட்டு ஆராய்ச்சி | ப-414 |
| 21. | இராம.குருநாதன், குறிஞ்சி காட்டும் சமுதாயம் | ப.50 |
| 22. | கு.வி.கிருஷ்ணமூர்த்தி, தமிழரும் தாவரமும் | ப.48 |
| 23. | மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் | ப.208 |
| 24. | ந.சுப்பிரமண்யன், சங்க கால வாழ்வியல் | பக்.172,173 |
| 25. | மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் | ப-205 |
| 26. | மா.இராசமாணிக்கனார்,பத்துப்பாட்டு ஆராய்ச்சி | ப-566 |

27. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப-218

28. மேலது ப-27

29. மேலது ப-114

30. ந.வள்ளியம்மாள், தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் கொள்கைகள் ப-7

31. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியல்தில் இயற்கை ப-110

32. மேலது ப-35

33. மேலது ப-215

34. மேலது ப-25

35. மேலது ப-37

36. கு.குமாரசாமி, அ.அழகப்பா மோசஸ் மு.வசந்தி, சுற்றுச் சூழல் அறிவியல் ப-103

37. மேலது ப.125

38. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப-111

39. தொல்காப்பியம்,பொருளதிகாரம், மரபியல் நூ-1527

40. மேலது ப-153

41. மு.வரதராசன், பழந்தமிழர் இலக்கியத்தில் இயற்கை ப-35

42. ப.அனுராதா, இலக்கியப் பீடம் ப-9

43. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் காதல் ப-1

44. க.முருகேசன், சங்க இலக்கியத் தேனமுதம் ப-154

45. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப-83

# இயல் – மூன்று
# குறிஞ்சிப் பாடல்களில் கூற்றமைதி

# இயல் – மூன்று

# குறிஞ்சிப் பாடல்களில் கூற்றமைதி

**3. முன்னுரை**

*3.1. கருத்து - விளக்கம்*

*3.2. கருத்துப் புலப்பாட்டின் பயன்*

*3.3. தமிழில் புலப்பாட்டு நெறி*

*3.4. கூறுநர்*

*3.5. கபிலரின் மனவுணர்வு*

*3.6. கூற்றுவகை*

*3.7. கூற்றுக்குரியோர்*

*3.8. தலைவன் கூற்றுகளில் உளவெளிப்பாடுகள்*

*3.8.1. உளப்போராட்டம்*

*3.8.2. மன ஆறுதல்*

*3.8.3. பாலுணர்ச்சி வெளிப்படுதல்*

*3.8.4. கனவுநிலை*

*3.8.5. நினைவு கூர்தல்*

*3.8.6. காட்சிகளை மீட்டெடுத்தல்*

*3.8.7. எச்சரிக்கை விடுத்தல்*

*3.8.8. அன்பு வெளிப்படல்*

*3.8.9. தலைவியின் மென்மை வெளிப்படல்*

*3.8.10. நன்றி உணர்வு வெளிப்படல்*

**3.9. தலைவி கூற்று நிகழும் இடங்கள்**

**3.10. தலைவி கூற்றுக்களில் உளவெளிப்பாடுகள்**

*3.10.1. உள்ளம் ஒன்றுதல்*

*3.10.2. உள்ளம் கிளர்ச்சியடைதல்*

*3.10.3. மனமாற்றத்தை ஏற்படுத்துதல்*

*3.10.4. நம்பிக்கையளித்தல்*

*3.10.5. காதலை வெளிப்படுத்துதல்*

*3.10.6. மனமுறிவு வெளிப்படல்*

3.10.7. மனச்சோர்விற்கான மூன்று காரணங்கள்

3.10.8. மனப்போராட்டம்

3.10.9. இயல்புகளை ஏற்றுக்கொள்ளுதல்

3.10.10. பண்பு வெளிப்படல்

3.10.11. தலைவனை உயர்வுபடுத்தல்

3.10.12. தலைவனின் நம்பகத்தன்மை வெளிப்படல்

3.10.13. உள்ள உறுதி வெளிப்படல்

3.10.14. மகிழ்ச்சி வெளிப்படல்

3.10.15. உயர்ந்த தன்மை வெளிப்படல்

3.10.16. மனஇறுக்கம் வெளிப்படல்

3.10.17. உறுதிப்பாடு வெளிப்படல்

3.10.18. நாணம் வெளிப்படல்

3.10.19. செயல்பட தூண்டுதல்

3.10.20. இயலாமை வெளிப்படல்

**3.11. தோழி கூற்று நிகழும் இடங்கள்**

3.11.1. தோழி கூற்றுப் பாடல்கள்

3.11.2. அன்பு வெளிப்படுதல்

3.11.3. நல்வழிக்கு வித்திடல்

3.11.4. மனமுறிவு

3.11.5. உயர்ந்த உள்ளம்

3.11.6. தோழமை வெளிப்பாடு

3.11.7. துணிவு வெளிப்படல்

3.11.8. வழிகாட்டுதல்

3.11.9. அறிவுறுத்துதல்

3.11.10. வருத்தம் வெளிப்படல்

3.11.11. தலைவி தோழியின் ஒற்றுமை

3.11.12. தோழியின் அறிவு நுட்பம்

3.11.13. நடுவு நிலைமை வெளிப்படல்

3.11.14. ஆறுதல் கூறுதல்

**3.12. முடிவுரை**

# இயல் - மூன்று

# குறிஞ்சிப் பாடல்களில் கூற்றமைதி

**3. முன்னுரை**

மனிதன் தோன்றிய காலம்தொட்டு இன்றுவரை உள்ளத்து உணர்வுகளை வெளியிடும் முறை குறித்து சிந்தித்துக்கொண்டே இருக்கிறான். எந்தச் செய்தியையும் சிறப்பாகவே வெளியிட விரும்புகிறான். தெளிவான சிந்தனை, அறிவுக்கூர்மை, சொல்வன்மை, காலம், இடம் என்பவற்றோடு பொருந்தி விடுகையில் உள்ளத்து உணர்வுகள் சிறப்பாக வெளிப்படுத்தப் பெறுகின்றன. ஒருவர் தாம் பெற்ற அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் நிலையில் கருத்துப் புலப்பாடு நிகழ்த்தப் பெறுகின்றது. தொன்மைக் காலத்தில் ஓசைகள், ஒலிக்குறிப்புகள் ஆகியனவற்றால் உணர்வுகள் வெளிப்படுத்தப் பெற்றன. மனிதன் பேசக் கற்றுக்கொண்ட பிறகு பேச்சும், எழுத்துமான மொழிவழி உறவு வளர்ந்தது.

பேசத் தெரிந்த ஒன்றினாலேயே மக்களினம் விலங்கினத்திலிருந்து மாறுபட்டது. உணர்வு எனும் நிலையில் மனிதனுக்கும், விலங்கினத்துக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. எனவே விலங்குக் குணம் மக்களுக்கு இருப்பதில் வியப்பேதுமில்லை. இத்தகைய விலங்குக்குணம் கொண்ட மக்களை நல்வழிப்படுத்துவது சான்றோர்களின் கடமையாயிற்று. காலம் மாற மாறக் கருத்துக்கள் மாறுவதால் புலப்பாட்டு நெறிக்குப் புதிய புதிய வழிகள் கிடைக்கின்றன. அவற்றின் வழியான படைப்புகள் மக்கட் சமுதாயத்தோடு ஒட்டி உறவு கொள்கின்றன. அவர்கள் கண்ட வாழ்வியல் உண்மைகள், சிந்தனைகள் மற்றவர்களால் பகிர்ந்து கொள்ளப் பெற்றன. மனித சமுதாயம் பண்பட்டு வளரவும், வாழவும் கருத்துப் புலப்பாட்டு நெறிகள் துணை நிற்கின்றன.அவ்வகையில் கபிலர் பாடல்களில் மாந்தர்தம் கூற்றுக்களின் அடிப்படையில் அவர்களது பண்பு நலன்களை, உணர்ச்சி மாறுபாடுகளை வெளிப்படுத்தியுள்ள விதம் பற்றி ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

சங்க இலக்கியங்களை அகம், புறம் எனப் பகுப்பர். அக இலக்கியங்களில் ஒருவர் பெயர்கொளப் பெறாத மரபு பேணப்பட்டுள்ளது. எனவே, அக இலக்கியங்களில் இடம்பெறும் மாந்தர்களுக்குத் தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி, பாணன், கண்டோர் போன்ற பொதுப்பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன என்பதை பழமையான இலக்கியங்கள், இலக்கணங்கள்

மூலம் அறியலாம். இவர்களே கூற்றுக்குரியவர்கள் ஆவர். சங்க அகப்பாடல்கள் கூற்று அடிப்படையில் பாடப்பட்டவையாகும். கூற்றுக்குரியோரில் முதன்மையானவர்களான தலைவன், தலைவி, தோழி, ஆகியோரின் கூற்றுகளில் வெளிப்படும் உளப்போராட்டம், மனமாற்றம், சினம், ஒத்துணர்வு, மனஎழுச்சி, பாலுணர்ச்சி, மெல்லியல்பு, மனத்துயரம், இரக்க உணர்வு, நாணம், மன உறுதி, சார்புணர்ச்சி, துணிவு, மன இறுக்கம், அன்பு நெஞ்சம், உண்மை மனம் போன்ற உளவெளிப்பாட்டுக் கூறுகளை மட்டும் கபிலரின் குறிஞ்சிப் பாடல்களின் வழி இங்கு ஆய்விற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

தலைவன், தலைவிக்குரிய இலக்கணங்களும் வரையறுக்கப் பெற்றிருந்தாலும் செய்யுள் இயற்றுங்கால், அத்தலைவன் தலைவியின் பண்புகளும் உள்ளத்து உணர்ச்சிகளும் இயல்பாக அமைவதோடு புலவனது உணர்ச்சிக்கும், கற்பனை வளர்ச்சிக்கும் ஏற்பவே அது அமையும். எனவே கபிலரின் மன உணர்வுகளைக் குறிஞ்சிப் பாடல்களில் வெளிப்படுத்திய பாங்கு பற்றி இவ்வியல் ஆராய்கிறது.

### 3.1. கருத்து – விளக்கம்

கருத்து என்பதற்குத் கழகத் தமிழ் அகராதி ஒன்பது வகையான பொருள்களைத் தருகின்றது. அவற்றுள் ‘நோக்கம்’ என்பதும் ஒன்றாகும்.[1] நோக்கம் என்பதில் வெளியிடப்பெறும் செய்தி பயன்தருதல் என்ற நிகழ்வினை ஏற்படுத்த வேண்டும் என்பதே ஆகும். “கருத்து என்ற தமிழ்ச் சொல்லிற்கு Object, Design, Intension, Purpose என்ற ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப் பெறுகின்றன.”[2]

### 3.2. கருத்துப் புலப்பாட்டின் பயன்

கருத்துப் புலப்பாடு என்பது சமுதாயத் தேவையாகும். கலை, இலக்கியப் படைப்புகள் அனைத்தும் மக்களுக்கென்றே உருவாக்கப் பெறுகின்றன. கலை, பண்பாடு போன்றவற்றின் சமூக உறவுகளை வளர்த்துக் கொள்ளவும் கருத்துப் புலப்பாடு தேவையாகின்றது. காலத்திற்கேற்ப கருத்துக்கள் மாறுபட்டுக் கொண்டிருக்கின்றன. “ஒருவர் தாம் பெற்ற அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் நிலையில் கருத்துப்புலப்பாடு சைகைகள் ஒலிக் குறிப்புகள் ஆகியனவற்றால் உணர்வுகள் வெளிப்படுத்தப் பெற்றன. மனிதன் பேசக் கற்றுக் கொண்ட பிறகு பேச்சும் எழுத்துமான மொழி வழி உறவு வளர்ந்தது. பேசத் தெரிந்த ஒன்றினாலேயே மக்களினம் விலங்கினத்திலிருந்து மாறுபட்டது.”[3] கருத்தைப் பகிர்ந்து கொள்வதில் மக்கள் ஈடுபடுகின்றனர். இவ்வாறு கருத்துப் புலப்பாடு நிகழ்த்தப் பெறுகின்றது.

### 3.3. தமிழில் புலப்பாட்டு நெறி

தொல்காப்பியம், திருக்குறள், நன்னூல் போன்ற நூல்களில் புலப்பாட்டு நெறி, பற்றிய சிந்தனைகள் இடம் பெறுகின்றன. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் எனும் மூவகையான பிரிவுகளை உடையது. இவற்றில் முன்னிரண்டும் மொழிக்குரிய இலக்கணம் கூற, மூன்றாவதாக உள்ள பொருளதிகாரம் வாழ்வியலுக்கான கருத்துரைகளை உரைக்கின்றது. அவற்றின் பகுப்பு முறைகளிலும் எடுத்துரைக்கும் முறைகளிலும் புலப்பாட்டு நெறிகளைக் காண முடிகின்றது. தொல்காப்பியர் கூறுநருக்கும், கேட்குநருக்கும் இடைய உள்ள நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார்.

**பொருட்டுத் திரிபிலை யுணர்ந்த வல்லின்[4] (தொல்.சொல்.875)**

**உணர்ச்சி வாயி லுணர்வோர் வலித்தே[5] (தொல.சொல்.876)**

என்ற நூற்பாக்களின் வழியாகக் கருத்துப் புலப்படுதலில் பொருள் மயக்கமும், கேட்குநரின் திறன் அறிந்து வெளிப்படுத்தாத தகவல்களும் பயனற்றவை என்கிறார் தொல்காப்பியர்.

### 3.4. கூறுநர்

"கூறுநர் தெளிந்த சிந்தனையும், நாவன்மையும் உடையவராக இருத்தல் வேண்டும். கேட்கும் விழைவைத் தூண்டுவதோடு மனதில் பதியும் வண்ணமும் சொல்லவேண்டும். பேசுபவர் தம் கருத்தை வலியுறுத்த மூன்று வழிவகைகளை அரிஸ்டாட்டில் கூறுவதாகக் கூறுவார்.

1. கேட்போரின் பகுத்தறிவுத்திறன் அடிப்படை (Rational Appeal)
2. உணர்ச்சிளைக் கிளர்ந்தெழச் செய்தல் (Emotional Appeal)
3. பேச்சாளரின் தூய்மையான ஒழுக்க அடிப்படை

இம்மூன்று வழிகளில் கேட்போரின் மனங்களைக் கவர்ந்திழுக்கலாம் என்பது அரிஸ்டாட்டிலின் துணிவு. இக்கருத்துப்படி நோக்கினால் கூறுநராகிய கபிலரது ஒழுக்க அடிப்படை அல்லது அவர் படைத்துக் காட்டிய அக இலக்கிய மாந்தர்களாயினும் சரி ஒழுக்கத்தைத் தமது கண்ணெனப் போற்றியவர்கள். எனவே, அவர் கூறிச்சென்ற கருத்து முடிவுகள் கேட்பவராகிய நம்மை முழுமையாக நிறைவடையச் செய்கின்றன. அதைப் பொறுத்து அவரது மதிப்பும் அளவிடப் பெறுகின்றது. அவர் கூறிச்சென்ற செய்தியின் மதிப்பானது நாம் அதைப் புரிந்து கொள்வதில்தான் உள்ளது என்று க.முருகேசன் கூறியுள்ளார்.''[6]

### 3.5. கபிலரின் மனவுணர்வு

மனித இனம் விழுமிய காதல் உணர்வில் தோய வேண்டும் என்று பண்டைத் தமிழர் தம் அறவுணர்வில் பதிந்த கவிதைகள் உள்ளத்தின் வேட்கையாகும். இவ்வேட்கையே கபிலரது மனவுணர்வில் இடங்கொண்டு, உயர் காதற் கவிதைகளாய் உருவம் பெற்றன. கவிஞர் தாம் கண்ட காட்சிகளை நேர்முகமாகவும், சில உத்தி முறைகளைக் கையாண்டும் இலக்கண நெறிகளுக்கு உட்பட்டும் தம் பாடல்களைப் படைத்துக் காட்டினார்.

"தொல்காப்பியர் காட்டும் வாழ்வியல், புனைவியல் சார்ந்த புலனெறி வழக்குடை வாழ்வியல், முதல், கரு எல்லாம் இக்கவிதையமைப்பின் பகுதிகளே. உரிப்பொருளே வாழ்விற்குரிய பொருள் என்று க.முருகேசன் கூறியுள்ளார்."[7] அன்பின் பிணைப்பான குறிஞ்சியைப் பாடிய கபிலரது வெளிப்பாட்டு உணர்வுகள் அக இலக்கிய மாந்தர்தம் கூற்றுக்களாக வெளிப்பெற்றன. அத்தகைய அக மாந்தர்களின் அன்புப் பேச்சுக்கள் கபிலர்தம் காதற் பாடல்களின் வடிவங்களாயின. அவ்வேளையில் கபிலர் பாடல்கள் சமுதாயச் சூழலுக்கு ஏற்பவும் பண்பாட்டுக் கலப்பின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளன.

### 3.6. கூற்றுவகை

புலப்பாட்டு நெறிகள் பலவற்றுள் அகப்பாடல்களில் படைத்துக் கொண்ட அகமாந்தர் வழியே கருத்துப் புலப்பாடு நிகழ்த்தப் பெறுவது மரபு. அகமாந்தர் கூற்றாகப் பாடல்கள் அமைவதால் அகப்பாடல்கள் ஒவ்வொன்றும் நாடகத் தன்மையுடன் தோன்றுமாறு அமைக்கப் பெறல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து. எனவேதான் அவர் கூற்றுவகை எனும் அகப்பொருள் புலப்பாட்டு நெறியை வகுத்துள்ளார் எனலாம்.

### 3.7. கூற்றுக்குரியோர்

கூற்று நிகழ்த்துதற்குரியோரை வகுத்துரைக்கும் தொல்காப்பியர், கூற்று நிகழும் இடங்களையும் வரையறுத்துச் சென்றார்.

> **"பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி**
> **சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோடு**
> **அளவியல் மரபின் அறுவகை யோரும்**
> **களவினிற் கிளவிக் குரியர் என்ப"**[8] (தொல்.பொருள்.1445)

என்று தொல்காப்பியர் கூற்றுக்குரியோரை வரையறை செய்வார்.

கபிலர் உளவியல் கூறுகளைக் கையாண்டு கூற்றுக்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். சங்க இலக்கியத்தை உளவியல் இலக்கியம் என்றும் கூறலாம். குறிப்பாக அகப்பாடல்களில் மாந்தர்களின் உள்ளுணர்வுகள் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன.அகமாந்தரின் உணர்வுகள் கூறுவோரின் துன்ப இன்ப மனநிலைக்கேற்ப மாறுபட்டு ஒலிக்கின்றன. இம்மன உணர்வுகள் உளவியல் அணுகுமுறை கொண்டும் புலவர்களால் வரன்முறைக்குட்பட்ட புலனெறி மரபு சார்ந்தும் விளங்குகின்றன.

### 3.8. தலைவன் கூற்றுகளில் உளவெளிப்பாடுகள்.

தமிழிலக்கண நூல் தலைவனுக்குரிய இலக்கணங்களாகப் பெருமையும் உரனும் கூறும்.

> **பெருமையும் உரனும் ஆடூஉ மேன[9]** (தொல்.பொருள்.1044)

என்பது தொல்காப்பிய நூற்பா. அவர் கூற்றுப்படி தலைமகன் என்பவன் ஒப்புயர்வற்ற ஈடு இணையற்ற ஆண்மைச் சிறப்பும் ஒழுக்கமும் கொண்ட தன்னிகரில்லாத தலைவனாகப் படைக்கப் பெறுதல் வேண்டும் என்றார். கபிலரின் தலைவன் கூற்றுப் பாடல்களின் மூலம் பண்பு நலம் சான்ற தலைவனின் உள்ளத்தைக் காண முடிகின்றது.

மாந்தர்களின் உணர்வுகளை இலக்கியத்தில் உளவியல் முறைப்படிப் படைப்பது படைப்பாளியின் பங்காகும். எனவே, சங்க இலக்கியம் மாந்தர்களின் மனவுணர்வுகளைப் பற்றி தெரிந்து கொள்வதற்குரிய களமாகத் திகழ்கின்றது. பல்வேறுபட்ட புலவர்கள் வேறுபட்ட பல சூழல்களில் பாடல்கள் பாடியிருப்பதை அவர்கள் பாடல்களில் இடம் பெறும் மாந்தர் உணர்வுகள் பொதுத்தன்மை கொண்டதைப் புலப்படுத்துகின்றன. “இலக்கிய மாந்தர்களின் இயல்புகளாக எடுத்து மொழியும் பொதுப்பண்புகள் அனைவரையும் மனம் மகிழ்வித்தற்குக் காரணம், அவை பொதுத்தன்மை கொண்டு நடைமுறை சார்ந்தும் விளங்குதலே என்று ஆ. இராமகிருஷ்ணன் குறிப்பிடுவது இலக்கியம் வெளிப்படுத்தும் மாந்தர்களின் பொதுத் தன்மையாகும்.”[10] கபிலரின் குறிஞ்சித்திணைப் பாடல்களில் இடம்பெறும் தலைவன் கூற்றுகள் கீழ்கண்டவாறு ஆராயப்படுகின்றன.

#### 3.8.1. உளப் போராட்டம்

மனிதனின் எச்செயல்களுக்கும் மனமே அடிப்படையாக உள்ளது. மன் + அம் = மனம். மன் என்றால் நிலைபெற்றது. மனம் என்பதற்கு உள்ளம் என்ற பொருள் உண்டு. மனம் படைத்தவன் மனிதன் (ஆறறிவு உயிர்) எனத்

தொல்காப்பியரும் கூறுவார். எனவே, மனம் மனிதனுக்குத் தனிச்சிறப்பைத் தருகின்றது. "உயிரின் தோற்றம் போலவே மனத்தின் தோற்றமும் ஆராயத்தக்கது. மனம், புத்தி, அகங்காராம், சித்தம் என நான்கு உட்கருவிகள் இருப்பதாக இந்தியத் தத்துவவாதிகள் கூறுகின்றனர்."[11]

**மனதின் தோற்றம்**

மனித மனம் ஒவ்வொரு சூழ்நிலையிலும் எவ்வாறு வேறுபடுகிறது என்பதைக் கபிலர் குறிஞ்சிப் பாடல்களின் வழி அறியலாம். இவற்றில் தலைவனின் உள்ளம் செயல்படும் விதம் குறிப்பிடத்தக்கதாகும். "ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான தேவைகள், ஆசைகள், உளத்துடிப்புகள் ஆகியன ஒன்றோடொன்று மோதுவதால் உளப்போரட்டங்கள் உண்டாகின்றன"[12] என்று வாழ்வியற் களஞ்சியம் கூறுகிறது. ஒரு மனிதனுக்கு தான் நினைத்தது நடக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் போது மனம் போராட்டத்திற்கு உள்ளாகிறது. அது நிறைவேறும் வரை போராட்டம் நீள்கிறது. அப்போது மனிதன் தன் நிலை மறந்து புலம்ப ஆரம்பிக்கிறான். இந்நிலை மனித மனத்தின் இயற்கை. இவ்வாறு குறிஞ்சி நிலத்தலைவனும் நினைத்தது நடக்காத போது புலம்பித் தவிக்கிறான். தலைவியால் தலைவன் வலிமையிழந்து காணப்படுகிறான். தலைவி தனக்கு கிடைக்கும் வரை தலைவன் மனம் போராட்டத்தில் தான் இருக்கும். அந்த போராட்டம் எப்போது தீரும் என பாங்கனிடம் தலைவன் புலம்புவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

**மால்வரை இழிதரும் தூவெள் அருவி**
**கல்முகைத் ததுப்பும் பல்மலர்ச் சாரற்**
**சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்**
**நீர்ஓ ரன்ன சாயல்**
**தீஓ ரன்னஎன் உரன்அவித் தன்றே** (குறு.95)

எனக் 'கூறி என் எண்ணம் நிறைவேற தான் என்ன செய்ய வேண்டும்' என தலைவியை அடைய விரும்பும் தலைவன் கேட்கிறான். இதில் தலைவன் போராடும் போராட்டம் கூறப்பட்டுள்ளது. தனக்கு இன்பத்தை அளிக்கும் படியாக தன் தலைவியோடு சேர வேண்டும் என தலைவன் கருதி தவிக்கிறான்.

இங்கு அருவியின் தன்மையை தலைவிக்கு கூறியிருப்பது. தீயை அணைக்கும் பண்பு நீராகிய அருவிக்கு உண்டு. அதுபோல எனக்கு இருக்கும் காமத்தீயை, துன்பத்தீயை அணைக்க தலைவியால் மட்டுமே முடியும் என உளப்போராட்டத்தை தன் தோழனிடம் தலைவன் கூறுகிறான்.

இதனைத் தொடர்ந்து நற்றிணைப் பாடலிலும் தலைவனின் உளப்போரட்டம் கூறப்பட்டுள்ளது. களவு வாழ்க்கையில் ஈடுப்பட்ட தலைவன், தலைவியுடன் சேர வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. தலைவன் தன் நெஞ்சத்திடம் பேசுகிறான், தலைவியின் மனதில் இடம் பிடித்தது, பெரிய அரணை வென்று வெற்றி அடைந்து பெருமூச்சு விட்டாற்போல இருக்கிறது. தலைவியின் மனத்தை அசைத்து தன்பால் அவளும் விருப்பம் கொள்பவளாக மாற்றியது மிகப் பெரிய வெற்றியாகத் தலைவன் கருதுகிறான்.

தலைவன் தனக்குரிய தலைவியைக் கண்டவுடன், அவளுக்கும் தன் பால் அன்பு இருக்கிறதென்று, அவளுடைய பார்வையும், செயல்பாடும் காட்டியது. இனி அத்தலைவியை முழுமையாக பெற தலைவனுக்கு தோழியின் உதவி தேவைப்படுகிறது. தொடர்ந்து பொறுமையாக போராடி தன் தலைவியின் பசலையைப் போக்கவேண்டும். தன்னுடைய விருப்பமும் நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்தைத் தலைவன் தன் நெஞ்சத்திடம் கூறுகிறான்.

**.............................. நெஞ்சே ! செவ் வேர்ச்**

**சிளைதொறும் தூங்கும் பயம் கெழு பலவின்**

**..................................................**

**.............................................**

**ஊறலஞ் சேரிச் சீறூர் வல்லோன்**

**வாள் அரம் பொருத கோன் நேர் எல்வளை**

**அகன் தொடி செறித்த முன்கை, ஒள்நுதல்**

**திதலை அல்குல் குறுமகள்**

**குவளை உண்கண் மகிழ் மட நோக்கே (நற். 77)**

என்ற பாடலில் தான் விரும்பிய தலைவி கிடைக்க தோழியின் உதவி வேண்டும் என்றும் அதற்காக தொடர்ந்து போராட பொறுமை தேவை என்றும் தலைவன் மனதிலிருந்து எண்ணங்கள் வெளிப்படுவது இதன் வழி தெரிகிறது.

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் தேவைகள் இருக்க அந்த தேவைகளை நிறைவேற்ற முயற்சியில் இறங்குகின்றனர். தேவைகளை அடையும் முயற்சியில் வெற்றி பெறும் மனிதர்களுக்கு மனதில் மகிழ்ச்சி பிறக்கிறது. தோல்வி அடையும் மனிதருக்கு மனம் துன்பப்படுகிறது, அந்த வகையில் பின்வரும் பாடலில் தலைவனின் மனம் தலைவியை நாடுகிறது. தலைவியுடன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்பு, அவள் தன்னைப் பற்றி நினைத்துக்

கொண்டு இருக்கிறாளோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் என் மனம் அவளையே நினைத்துக் கொண்டிருக்கிறது எனக் கருதுகிறான் தலைவன்.

**சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇ**

**புனக்கிளி கடியும் பூங்கட் பேதை**

**தான் அறிந்தன்றோ இவளே பானாள்**

**பள்ளி யானையின் உயிர்த்து, என்**

**உள்ளம் பின்னும், தன் உழையதுவே (குறு.142)**

தன்னுடைய உள்ளம், தலைவியிடம் உள்ளது என்பதை, 'நள்ளிருளில் துயில் கொள்ளும் யானைப்போல, பெருமூச்சுவிட்டு என் உள்ளம் புணர்தற்கு முன்னரேயன்றிப் புணர்த்த பின்னரும் தன்னிடம் இருப்பதை, சுனையில் பூப்போன்ற கண்களை உடைய பேதையாகிய தலைவி அறிந்தாளோ, அறியலையோ தெரியவில்லை' என்று கூறுகிறான். இதில் தலைவனின் மனப்போராட்டம் கூறப்பட்டுள்ளது. தலைவியின் மனதில் இருப்பதை தெரிந்து கொள்ள அவன் மனம் போராடுவதை இப்பாடலில் அறியலாம்.

'ஒரு பூஞ்சோலையில் தனியாக உலவுகிறாள் ஒரு பெண். அங்குள்ள மலர்களைப் பறித்து அழகாகத் தொடுத்து தலையிலே அணிந்திருக்கிறாள். முழுமதிபோல அழகு பெற விளங்குகிறாள். அவளைப் பார்த்துவிட்டான் ஒருவன். இவள் யாரோ? எந்த ஊரோ? என்ன பெயரோ! தேவலோகத்து ரம்பையோ? சிற்பமோ? என்னைப் போன்ற ஆண்மகனைக் கொல்வதற்கென்று கூற்றுவன் இந்த உருவத்தில் வந்தானோ? என்று பலவாறு எண்ணி வியந்தான். இவளைப் பார்த்தவுடன் அவளது பெற்றோர் மீது என்மனம் சென்றது. கோபம் உண்டாயிற்று. என்ன மனிதர்கள் இவர்கள். இவ்வளவு அழகிய பெண்ணை வீட்டுக்குள்ளே பூட்டி வைக்காமல் வெளியே உலாவ விட்டு நம்மைக் கொல்கிறார்களே! என்று பெற்றோர் மீது கோபம் கொள்கிறான்' தலைவன். இத்தகைய அழகுடைய தலைவியிடம் பேசத்தொடங்குகிறான்.

**முதிர் கோங்கின் முகைஎன முகம்செய்த குரும்பைஎன**

**பெயல் துளி முகிழ் என பெருத்த நின் இளமுலை**

**மயிர் வார்ந்த வர்முன்கை மடநல்லாய் ! நிற்கண்டார்**

**உயிர் வாங்கும் என்பதை உணர்தியோ உணராயோ என ஆங்கு**

**பேதுற்றாய் போலப் பிறர் எவ்வம் நீ அறியாய்**

**யாது ஒன்னுறும் வாய்வாளாது இறந்தீவாய் ! கேள் இனி**

**நீயும் தவறு இலை நினைப் புறங்கடைப்**

**போதர விட்ட நுமரும் தவறு இலர்**

**நிறை அழிகொல் யானை நீர்க்கு விட்டாங்கு**

**பறை அறைந்தல்லது செல்லற்க ! என்னா**

**இறையே தவறு உடையான் (கலி.20)**

*என்ற பாடலில் அழகிய பெண்ணே! உன்னைக் கண்டது முதல் உள்ளம் துடிக்கிறது. உன் மெல்லிய தோளின் அழகு இள மூங்கிலை ஒத்து காணப்படுகிறது. அது என்னை வாட்டுகிறது. இது உனக்கு புரியவில்லையா ? அல்லது புரியாதது போல நடிக்கிறாயா!*

*உன் மார்பு என் உயிரை வாங்குகிறதே! மலர் அரும்போ ! நீர்க் குமிழியோ! இளங் குரும்பையோ! இத்தனை அழகும் ஒருங்கே காணப்படுகிறது.*

*இவ்வாறெல்லாம் தலைவன் பலவாறாக தலைவியிடம் கூறினாலும், தலைவி பேசாமடந்தையானாள். தலைவன் மனதில் தனக்கு ஆறுதல் கூறிக் கொள்கிறான். எல்லாம் கனவாய் போயிற்று என்பதன் வழி தலைவனின் ஆசை வெளிப்படுகிறது.*

*தலைவன் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும், தலைவிக்கு மனம் இரங்கவில்லை. உடனே, தலைவன் 'உன் மீது தவறு இல்லை. உன் பெற்றோர் மீது தவறு. அதுமட்டுமல்ல, இந்த ஊர் அரசன் மீதுதான் தவறு என்று கூறுவேன். ஏனெனில், கட்டுக்கு அடங்காத மதயானையை ஆற்றிலே குளிப்பாட்டிக் கொண்டு போகிறார்கள். அப்போது, பொல்லாத யானை வருகிறது. எட்டிப் போ! ஓடிப் போ என்று சொல்லி பறை அறிவிக்கவில்லை யென்றால் எப்படி இருக்குமோ, அந்த மாதிரி, அழகி வருகிறாள், அப்பால் போ! கண்ணை மூடிக்கொள்! காளையே! காதல் கொள்ளாதே என்று கூறி இந்த நாட்டு அரசன் பறை அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாத அரசன் மீதுதான் குற்றம் சொல்லுவேன்' என தலைவியிடம் தலைவன் கூறுகிறான்.*

*இதில், தலைவனது நிறைவேறாத ஆசை கூறப்பட்டுள்ளது. அவன் தலைவியிடமிருந்து பதில் கிடைக்காமல் ஏமாற்றத்திற்கு உள்ளாகிறான். அவன் தலைவியிடம் பார்த்த பின்பு தன் எண்ணம் நிறைவேறாத காரணத்தால் கனவாயிற்று. ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறான். தலைவி, தன்னை ஏற்றுக் கொண்டால் தனக்கு மகிழ்ச்சி என்று கருதினான் தலைவன். ஏற்று கொள்ளாததால் மனம் வருந்தினான். தலைவியைக் கண்டு தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டு, தலைவியையும் தந்தையையும், அந்நாட்டு அரசனையும்*

திட்டுகிறான். ஏனெனில் மனம் கவர்ந்த தலைவி வாழ்க்கை முழுதும் கிடைப்பாள் என நினைத்து மகிழ்ச்சியில் திளைத்த தலைவன் அது நடக்காத போது, எல்லாம் கனவாய் மாறியது. தலைவனின் உளவெளிப்பாட்டினை மேற்கண்ட பாடல் வெளிப்படுத்துகிறது.

### 3.8.2. மன ஆறுதல்

மனிதர்கள், தாம் விரும்பிய ஒன்று கிடைக்காத போது மனவருத்தத்திற்கு ஆட்படுவர். மேலும், மாறிவரும் இன்றைய சூழலில் மனஆறுதல், மனச்சுமை (Stress) மன இறுக்கம் (Tension) மனமுறிவு (Frustration) போன்ற மனச் சிக்கல்களுக்கும் ஆட்படுகின்றனர்.

"முக்கியமான வாழ்க்கைத் தேவைகளுடன் ஒருவர் பொருந்திச் செயல்படும்போது, அவற்றில் குறுக்கீடு செய்து அவரிடத்திலோ அல்லது பிறரிடத்திலோ மனத்துயரம் ஏற்படுவதற்குக் காரணமாக அமையும் நெறிபிறழ் நடத்தை, மனவெழுச்சிகள் அல்லது சிந்தனையை மனக்கோளாறுகள் என வரையறை செய்யலாம்."என்று மார்கன் குறிப்பிடுகின்றார்.[13]

தலைவியைப் பிரிந்ததால் தலைவனுக்கு ஏற்படும் மனவருத்தத்தை இப்பாடல் உணர்த்துகிறது. இரவுக்குறி வந்து நீங்குகின்ற தலைவன், தன் நெஞ்சிற்கு கூறும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது.

**இரண்டுஅறி கள்விநம் காதலோளே**
**முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்**
**முள்ளூர்க் கானம் நாறவந்து**
**நள்ளென் கங்குல் நம்ஓ ரன்னள்**
**கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்**
**சாந்துஉள நறுங்கதுப்பு எண்ணெய நீவி**
**அமரா முகத்தள் ஆகித்**
**தமர்ஓ ரன்னள் வைகயறை யானே (குறு.312)**

தலைவன் தன் நெஞ்சிடம் காதலி இரண்டு விதமாகச் செயல்படுகின்ற கள்ளத்தனம் உடையவள். ஏனெனில் இருள் செறிவுடைய நடுஇரவில் நம்முடன் ஒன்றிய தன்மையினள் ஆனாள். ஆனால் விடியற்காலையில் தன் கூந்தலில் நான் சூடிய பல வகையான மலர்களை உதிர்த்துவிட்டு மயிர்ச்சாந்து பூசி மணமுள்ள கூந்தலில் எண்ணெய் தடவி மாறுபட்ட முகத்துடையவளாகித் தம் சுற்றத்தாருடன் ஒன்றி அதற்கேற்ற தன்மையள் ஆயினள்.

இரவு நேரத்தில் என்பக்கம், எனக்காக மட்டும் இருந்த தலைவி, விடியற்காலையில் எனக்கும் அவளுக்கும் இடையே இருந்த அன்பு வெளிப்படாதவாறு, உறவினர்களுக்கு முன் மாறுபட்ட முகத்துடையவளாகி உறவினர்களுக்கு ஏற்ற நல்ல பெண் என்று கூறுமளவிற்கு அவர்களுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டாள் தலைவி. தலைவியின் அறிவு சார்ந்த இச் செயல்பாட்டினை தலைவன் எண்ணி மிகுந்த நிறைவையும் ஆறுதலையும் அடைந்ததை அறிய இயலுகிறது. ஆக, இக்கூற்றின் வாயிலாக கபிலர் தலைவனின் மனஆறுதலைப் பதிவு செய்திருப்பதை அறிய முடிகிறது.

### 3.8.3. பாலுணர்ச்சி வெளிப்படுதல்

தலைவன் தலைவியைக் காணும் போது அவள்மேல் காதல் ஏற்படுகிறது. காரணம் தலைவியின் உடல் தோற்றம், செயல்பாடு, பண்பு இவற்றைப் பார்க்கும் போது ஒரு தலைவனுக்கு அவனை அறியாமல் அந்த தலைவி மேல் காதல் எழுகிறது. அவளை தன் வாழ்க்கைத் துணையாக வரவேண்டும் என எண்ணுகிறான். அவளுடன் புணர்தல் நிகழ்வு நடைபெற நினைக்கிறான். உடலால் மட்டும் அல்ல மனதாலும் அவளுடன் சேர்ந்து இன்புற நினைக்கிறான் தலைவன். இந்த எண்ணம் குறிஞ்சிக்குரிய உரிப்பொருளான புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்பதை நிறுவும் விதமாக இச்செய்தி கூறப்பட்டுள்ளது. தலைவனின் இந்த புணர்தல் வாழ்க்கை அமைப்பிற்கு அடிப்படை ஆகும். பாலுணர்வு விருப்பத்தையும் நிறைவேற்றும் விதமாக இந்தப் புணர்தல் அமைகிறது. “காதல் எனும் தொழிற்சொல் பல அன்புறவுகளைக் குறித்தாலும், காதலன், காதலி என்ற சொற்கள் பாலுறவுடையவர்களையே குறிக்கும். பிற உறவுடையாரையும் அன்பர்களையும் நண்பர்களையும் எத்துணை உள்ளொற்றுமை இருப்பினும் காதலி காதலன் என்று சொல்லும்போது அத்தொழிற்சொல் பாலுறவையே சுட்டும்.”என்பர்.[14]

“காமம் என்பது பருவவுணர்ச்சி, மெல்லிய உடலுணர்ச்சி இவ்வுணர்ச்சி பெருகி வளருங்காலம் இளமை எனவும், குறைந்து சிறுகுங்காலம் முதுமை எனவும் படும். ஆதலின் குறைவு தொடங்குவதற்கு முன்னுள்ள இளமையில், பாலின்பம் துய்ப்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். தமிழ்த்திணை எனத்தகும் அகத்திணைக்கு வெறும் உள்ளக் காதலும் பொருளன்று, வெறுக் மெய்க் காமமும் பொருளன்று உள்ளம் இயைந்த உடலுறவும், உடல் இயைந்த உள்ளவுறவும், சுருங்கக் கூறின் உயிர்மெய்ப் புணர்ச்சியே அதன் பாடுபொருளாகும்” என்று வ.சு.ப. மாணிக்கம் குறிப்பிடுகிறார்.[15]காமம் எனும் சொல்லிற்கு மெய்யுணர்ச்சி என்று பொருளாகும்.

**"காதற் காமம் காமத்துச் சிறந்தது**

**விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி"[16] (பரி. 9)**

என்று பரிபாடல் மொழிகிறது.

"காம உணர்ச்சி என்பது உடல் சார்ந்த ஒரு தினவு என்பது மட்டுமல்லாது முதன்மை நிலையில் மனம் சார்ந்த உணர்வு எனப் புரிந்து கொள்வது அவசியமானது. இவ்வுணர்ச்சி அமுக்கப்படும் போது அற்புதமான புனைவுகளாக மாறும் என்பதை ஃபிராய்ட் விளக்கினார். மனித மனம் என்பது பெரிதும் காம இச்சைப் பண்பினதாக இருப்பதால் மனிதக் காம இச்சை உணர்ச்சி (Human Sexuality) என்பது மனித மனக்காம இச்சை உணர்ச்சியாகவே (Psycho Sexuality) உள்ளது என ஃபிராய்டிய அடிப்படையில் புரிந்துகொள்ள முடியும்."[17] என்பர்.

பாலுணர்ச்சி பற்றிய கருத்திற்கு அட்லர் ஃபிராய்டுடன் கருத்து வேறுபாடு கொள்கிறார். "வாழ்க்கைப் போக்கில் பாலுணர்ச்சிக்குப் பிரதான இடம் அளிப்பதை அவரால் முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பாலுணர்ச்சியானது வாழ்க்கையில் முக்கிய இடம் பெறுகிறது என்பதை ஏற்றுக் கொண்டாலும், அதுவே வாழ்க்கையின் போக்கை அமைக்கிறது என்பதை அவர் சரியென்று கருதவில்லை. வாழ்க்கையின் போக்குக்கு அடிப்படையான வேகம் கொடுத்து அதை அமைப்பது உயர்வுந்தல் ஆகும். ஒவ்வொருவனும் தான் ஏதாவது ஒரு வகையில் உயர்வடைய வேண்டும் என்ற ஒரு வேகத்தைக் கொண்டிருக்கிறான். தாழ்மை உணர்ச்சிக்கு எதிராக இந்த வேகம் தோன்றுகிறது. இதற்கு உயர்வுந்தல் என்று பெயர். இதுவே வாழ்க்கையின் போக்கை அமைப்பதில் தலைமை இடம் வகிக்கிறது"[18] என்றும் குறிப்பிடுகிறார்.

கலித்தொகையில் ஒரு தலைவன் தலைவியை நோக்கினான். தலைவியும் நோக்கினாள். இருவரும் இரண்டறக் கலந்தனர். சிலநாள் களவு ஒழுக்கம் நடந்தது. பிறகு சிலநாள் அவன் வரவில்லை. ஒருநாள் வந்தான். அவளுக்கு அவன் மீது கோபம். முகம் கொடுத்துப் பேசவில்லை. தலைவி திரும்பியிருந்தாள். அவளது பின் அழகையும் முன் அழகையும் ரசித்தான் தலைவன். புணர்தல் நிகழ்வு நடைபெறுகிறது. புணர்தலின் போது தலைவன் பேசுகிறான்.

**அணிமுகம் மதி ஏற்ப்ப அம்மதியை நனிஏய்க்கும்**

**மணிமுகம் மாமழை நின்பின்ஒப்பப் பின்னின்கண்**

**விரிநுண் நூல் சுற்றிய ஈரிதழ் அலரி**

**அரவுக் கண் அணி உறழ் ஆரல் மீன் தகை ஒப்ப**

**அரும்படர் கண்டாரைச் செய்து ஆங்குஇயலும்**

**விரிந்து ஒலி கூந்தலாய் கண்டை எமக்குப்**

**பெரும்பொன் படுகுவை பண்டு. (கலி. 28)**

என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார். 'உன் முகம் என்ன ! பூரண சந்திரனோ கரு கரு என்று அடர்ந்து தொங்கும் உன் கூந்தல் என்ன ! அந்தச் சந்திரனைச் சூழ்ந்திருக்கும் மேகமோ! உன்னுடைய கூந்தலில் பின்னித் தொடுக்கப்பட்டுள்ள மலர்தான் என்ன ! மேகக் கூட்டத்திடையே தோன்றும் நட்சத்திரமோ என்ன அழகு. இந்த அழகு. இந்த அழகு யாரால் வெளிப்பட்டது. என்னால் அல்லவோ பெண்ணே ! எண்ணிப்பார் ! எனக்கு இதற்குப் பெரும் பொன் கொடுக்க வேண்டும் நீ! தெரிந்ததா!' என்று தலைவியிடம் தலைவன் வினவினான்.

'உன் மென்தோள் கரும்பு போல் கண்ணுக்கினியதாய் விளங்குவது யாரால்? குவளைப் பூவுடன் போட்டியிடும் நின் கண்கள் ஒளி பெற்று, எழில் பெற்று திகழ்வது எவரால்? முல்லை மொட்டுடன் போர் தொடுக்கும் முறுவல் பெற்றவளே ! இது போதாது. இன்னும் பேரழகு வேண்டும் என்று நீ விரும்பினால், அதற்குத்தான் நான் இருக்கிறேன்.

என்னைக் கட்டிக்கொள். பொன்னிறமான பசலை நீங்கும். இதைத்தான் நான் முதலில் கூறினேன். பொன் கொடு, பொன் கொடு என்றேன். அது தெரியாமல் கோபிக்கிறாய்' என்று தலைவன் தலைவியைத் தழுவி புணரும் போது பேசினான்.

உணர்வு பூர்வமான வார்த்தைகளைப் பேசி தன் அன்பை வெளிப்படுத்தினான் தலைவன். இதில் தலைவனின் பாலுணர்வு வெளிப்படுகிறது. ஆக, குறிஞ்சிப் பாடல்களில் தலைவன் அனைத்து சூழ்நிலைகளையும் அதற்கேற்ப ஒவ்வொரு கூற்றிலும் வெவ்வேறு கோணத்தில் அக மாந்தர்களின் மனநிலையைக் கபிலர் பதிவு செய்துள்ளார். பாலுணர்ச்சி பற்றிய செய்தியைக் கபிலர் தம்பாடலில் குறிப்பிட்டுள்ளமை பற்றியும் அறியமுடிகிறது. மேலும்,

**நில் என நிறுத்தான் நிறுத்தே வந்து**

**நுதலும் முகனும் தோளும் கண்ணும்**

**இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ**

**ஐ தேய்ந்தன்று பிறையும் அன்று**

**மை தீர்ந்தன்று மதியும் அன்று**

**வேய் அமன்றன்று மலையும் அன்று**

**பூ அமன் றன்று சுனையும் அன்று**

**மெல்ல இயலும் மயிலும் அன்று**

**சொல்லத் தளரும் கிளியும் அன்று (கலி. 19)**

*என்ற பாடலில் தலைவன் தன்னிடம் பேசிய வார்த்தைகளைத் தோழியிடம் தலைவி கூறினாள்.*

*தனியாக ஒருநாள் வந்து கொண்டிருந்தேன். நில் என்று சொன்னான், நின்றேன். என் அருகே வந்தான். வந்தவன் என்ன செய்தான்? தெரியாத என் முகத்தைப் பார்த்தான். நெற்றியைப் பார்த்தான். இப்படி ஒவ்வோர் அங்கமாகப் பார்த்தான். பார்த்து என்ன சொன்னான் தெரியுமா?*

*என் நெற்றியைப் பிறை என்றும், முகத்தை முழுமதி என்றும், தோளை மூங்கில் என்றும், கண்ணை மலர் என்றும், என் நடையை மயில் என்றும், பேச்சை கிளி என்றும் பலவாறு பேசிக்கொண்டே என்னைச் சுற்றிச் சுற்றி வந்தான். மானைக் கண்ணி வைத்துப் பிடிப்பதற்கு வலையர் வருவார்களே, அந்த மாதிரி.*

*நெருங்கி வந்து என்னை தொட்டுப் பார்த்தான். நான் அமைதியாக இருந்தேன். கட்டி அணைத்தான். ஒரு முறை இல்லை, பலமுறை அதுவும் மதம் கொண்ட யானை வெறிபிடித்தது போல், வெறி கொண்டு கட்டி அணைத்தான். இவ்வாறு தலைவி கூறிய செய்தியின் மூலம் தலைவன் மனதில் உள்ள பாலுணர்வு எண்ணம் வெளிப்படுகிறது. "மனித இனம் குடும்பமாகவும் சமுதாயமாகவும் கூடி உறவு கொண்டு வாழ அடிப்படையாக அமைந்தது பாலுறவேயாகும். ஒருவகைப் பற்றுதலாகிய காதல் ஆற்றல் மிக்கது; உடற் சார்பும் உளச் சார்பும் கொண்டது என்பர்."[19]*

*தலைவியின் அழகில் ஈர்க்கப்பட்ட தலைவன் மனதில் தோன்றிய அன்பு நிலையின் காரணமாக அவளைப் புணர்ந்தான். இதில் தலைவன் மட்டும் விதிவிலக்கல்ல. தலைவன் தலைவியை எந்தெந்த பகுதியை நுகர்ந்தான் என்பதையும் இப்பாடல் கூறுகிறது.*

**ஐம்பால் ஆய்கவின் ஏத்தி ஒண் தொடி**

**அசைமென் சாயல் அவ்வாங்கு உந்தி**

**மடமதர் மழைக்கண் இளையீர் இறந்த**

**கெடுதியும் உடையேன் என்றனன் அதன்எதிர்**

**சொல்லேம் ஆதலின் அல்லாந்து கலங்கி**

(குறி.பா. 139-143)

*தலைவன் தலைவியை நுகரும்போது ஐந்து விதமாக அலங்கரிக்கப்பட்ட கூந்தலை நுகர்ந்தான். தலைவியின் கூந்தல் மட்டுமின்றி தொடி அணிந்த முன்கை, சாயல் (நிறம்), உந்தி (வயிற்றின் முன் பகுதி), கண் ஆகியவற்றின் இன்பத்தை இயற்கைப் புணர்ச்சியில் நுகர்ந்து மகிழ்ந்து தலைவன் பாராட்டினான். இதிலிருந்து பாலுணர்ச்சியால் ஏற்பட்ட உள இன்பத்தினை அறிய முடிகிறது. இவ்வாறாக தலைவனின் தழுவுதல் அன்பினை அடித்தளமாகக் கொண்டே அமைகிறது. "உள்ளுணர்ச்சிகளில் ஒன்றாகிய பாலுணர்ச்சிக்கு உடல் ஆதாரமாக இருந்தாலும் உள்ளத்தில் பெறுகின்ற இன்பமே முதன்மையாக உள்ளது. அந்த இன்பத்தை மையமாகக் கொண்டுதான் உள்ளமும் அது தொடர்புடைய உடலுறுப்புகளும் செயல்படுகின்றன. புறநிலையோடு அகநிலை உறவு கொள்கின்ற போது கூட இன்பமே முதன்மையாக விளங்குகிறது என்று குறிப்பிடுகின்றனர்.*[20]

*தலைவியைப் புணர நினைக்கும் தலைவன், தலைவியின் சம்மதமின்றியும் தழுவி கட்டி அணைக்கிறான். இதனை கபிலர் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.*

**ஏஎ ! இஃது ஒத்தன், நாண் இலன். தன்னொடு**

**மேவேம் என்பாரையும் மேவினன் கைப்பற்றும்**

**மேவினும் மேவாக்கடையும் அஃது எல்லாம்**

**நீ அறிதி யான் அஃது அறிகல்லேன் பூ அமன்ற**

**மெல் இணர் செல்லாக்கொடி அன்னாய் ! நின்னையான்**

**புல் இனிது ஆகலின் புல்லினென் ? எல்லா**

**தமக்கு இனிது என்று வலிதின் பிறர்க்கு இன்னா**

**செய்வது நன்று ஆகுமோ மற்று**

**சுடர்த்தொடீ போற்றாய் களை நின்முதுக் குறைமை போற்றிக்கேள்**

**வேட்டார்க்கு இனிது ஆயின் அல்லது நீர்க்கு இனிது என்று**

**உண்பவோ நீர் உண்பவர்**

**ஐ வாய் அரவின் இடைப்பட்டு நைவாரா**

**மைஇல் மதியின் விளங்கும் முகத்தாரை**

**வெளவிக் கொளலும் அறன் எனக்கண்டன்று (கலி. 26)**

என்ற பாடலில் 'என்ன இது? இப்படியா அணைப்பது என்று தலைவி தலைவனிடம் கேட்க, தலைவன் கூறும் பதில், உனக்குச் சம்மதமோ இல்லையோ எனக்குத் தெரியாது. அது உன் உள்ளம் அறியும். கொடி போன்ற பெண்ணே ! உன்னைக் கட்டி அணைத்தால் இன்பமாயிருக்கும் என்று தோன்றிற்று. கட்டி அணைத்துக் கொண்டுவிட்டேன். அவ்வளவுதான்' என்றான் தலைவன்.

'நமக்கு இன்பமாக இருக்கிறது என்று எண்ணி பிறர்க்குத் துன்பம் தரலாமா? என்றாள் தலைவி. அதற்கு தலைவன் பின்வருமாறு பதிலுரைத்தான். பெண்ணே! தாகம் எடுக்கிறது. நீர் குடிக்கிறோம். நமது தாகத்தைத் தீர்த்துக் கொள்ளத்தானே நீர் குடிக்கிறோம். நீருக்கு இன்பமாயிருக்குமா? இராதா என்று யோசித்தா நீர் குடிக்கிறோம். இல்லையே ! உன்னைக் கண்டது முதல் என் உள்ளம் துடித்தது. பாம்பின் வாயில் அடிப்பட்ட உயிர்போல், அதனால் செய்வது என்ன என்று புரியவில்லை. அதனால் பெண்களை வலிந்து கொள்வதும் தவறில்லை' என்றான் தலைவன். 'தான் சொல்வதிலும் பயனில்லை. முன் பிறப்பிலும் ஒன்றாயிருந்தோம் போலிருக்கிறது' என தலைவனிடம் கூறி 'உன் விருப்பப்படியே நடக்கட்டும்' என்றாள் தலைவி.

இதில், தலைவன், தலைவியின் அனுமதியின்றி அவளைத் தழுவினாலும், தலைவியும் அதை விரும்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது. மனிதனின் அடிப்படையான இயற்கை உணர்ச்சிகளுள் ஒன்று பாலுணர்ச்சி. இது மனிதனுக்கு மட்டுமல்ல எல்லா உயிரினங்களுக்கும் உண்டு. மனிதன் மொழி என்ற கருவியின் துணைகொண்டு தன் உணர்ச்சியை பேச்சின் மூலம் வெளிப்படுத்துகிறான். விலங்குகள் தங்களுக்குரிய செயல்பாடுகள் வழியாக உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன. இதுகாறும் கூறியுள்ள கூற்றுகளின் மூலம் தலைவனின் உள்ளத்தில் பாலுணர்ச்சியால் பிறந்த உள இன்ப வெளிப்பாடு வெளிப்படுகிறது. கபிலர் ஓர் இளைஞனின் மனநிலையை உளவியல் அடிப்படையில் வெளிப்படுத்தியிருப்பதையும் அறியமுடிகிறது.

### 3.8.4. கனவு நிலை

உணர்வுகளின் வெளிப்பாடு விழிப்பு நிலையிலும் உறக்க நிலையிலும் வெளிப்படும். உறக்க நிலையில் வெளிப்படும் உணர்வுகளைக் கனவின் மூலம்

உணர்வர். கனவு ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படும் இன்பத்தின் வடிகால் எனவும், அமுக்கப்பட்ட ஆசைகளின் பிறப்பிடம் எனவும் கூறுவர். “ஒரு மனிதனுடைய தன்மையை அறிந்து கொள்வதற்கு அவன் காணும் கனவுகள் பெரிதும் துணைபுரிகின்றன” எனப் பெ.தூரன் கூறுகின்றார்.[21]

கனவுகளில் தோன்றும் நிகழ்வுகளின் மீது மக்கள் நம்பிக்கை (belief) கொள்கின்றனர். இன்றைக்கும் அவர்கள் காணும் கனவை ‘நல்ல கனா’, ‘தீயா கனா’ எனப் பகுத்துப்பார்க்கும் வழக்கம் நடைமுறையில் உண்டு.

“தூக்கம், கனவு, மரணம் ஆகியவற்றை ஒரே கோணத்தில் வைத்துப் பழங்குடிகள் கண்டுள்ளனர். இதன் தொடர்ச்சியை நாட்டுப்புற மக்களின் கனவுகள் தொடர்பான நம்பிக்கைகளில் காண முடிகிறது. கனவுகள் யாவும் கடவுள் அல்லது தீய ஆவிகளின் (Evil Spirit) அகத் தூண்டுதலால் ஏற்படுபவை எனும் பழங்குடியினர் நம்பிக்கையை எதிரொலிப்பது போல் நாட்டுப்புற நம்பிக்கைகள் (Folk Beliefs) விளங்குகின்றன.”[22]

கனவுகளின் பொருண்மைகள் (Meaning of dreams) குறித்துப் பல்வேறு அறிஞர்கள் சிந்தித்துள்ளனர். சாக்ரடீஸ், கனவுகள் மனசாட்சியின் குரல் (Voice of Coscience) எனக் கூறுகிறார். ஆனால் ஃப்ளேட்டோ, ‘கனவுகள் யாவும் மனிதனுக்குள் இருக்கின்ற பகுத்தறிவற்ற விலங்கின் மொழி’ (Language of Irrational Animal) என்கிறார். அதாவது, எண்ணத்தகாதவைகளும் செய்யக்கூடாதவைகளும் கனவுகளில் வெளிப்படும் என்கிறார். அரிஸ்டாட்டில், கனவுகளைப் பகுத்தறிவார்ந்தவையாகக் காணுகிறார். மேலும் அனைத்துக் கனவுகளும் அர்த்தமுள்ளவையே. சில கனவுகள் எதிர்காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்களுக்கான குறிப்புகளாகவும் (Token) காரணிகளாகவும் (Causes) விளங்குகின்றன என்கிறார்.[23] மேலும், அவர் **கனவு** என்பது ‘**தூக்கத்தின் பாதுகாவலாளி** ’எனவும் குறிப்பிடுகிறார்.[24]

நிறைவேறா எண்ணங்கள் மற்றும் குறிப்பாகக் குழந்தைப் பருவ ஆசைகள் கனவாகத் தோன்றும் என்பர். ‘‘கனவுக் கட்டமைப்புப் (Construction of Dream) பற்றி ஃப்ராய்ட் கூறும் போது குழந்தைப் பருவப் புனைசார் வாழ்வையே முன்னிலைப்படுத்துகிறார். குறிப்பாக நிறைவேறாத உள்ளுணர்ச்சி விருப்பங்கள் கனவுக் கட்டமைப்பிற்கான ஆற்றலை வழங்குகின்றன. மேலும் குழந்தைப் பருவத்திலான பாலியல் தடைகள் (Prohibitions), ஏமாற்றங்கள் (Disappointments), தண்டிப்புகள் (Punishments), அச்சுறுத்தல்கள் (Threatens), பதட்டங்கள் (Anxieties) போன்ற ஊறுறு அனுபவங்கள் (Traumatic Experience) கனவுக்

கட்டமைப்பின் ஆதாரங்களாகின்றன. குழந்தைப் பருவ (நனவில்) வேட்கைகளின் உயிரோட்டமே (Animating) கனவுகள் ஆகும்.''[25] தொல்காப்பியர், அன்பு மிகுதிக்கண் தலைவன், தலைவி இருவர்க்கும் கனவு தோன்றும் என்பதை,

**கனவும் உரித்தால் அவ்விடத் தான[26] (தொல்.பொருள்-1143)**

எனும் நூற்பா மூலம் குறிப்பிடுகிறார். 'உடன் போக்கில் தலைவி தலைவன் செல்லும் போது தாய்க்கும் கனவு தோன்றும்'என்கிறார்.

**தாய்க்கும் உரித்தால் போக்குடன் கிளப்பின்[27] (தொல்.பொருள்.1144)**

**நாணுதல் துஞ்சுல் அரற்றுக் கனவெனா[28] (தொல்,பொருள்.1206)**

**கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்[29] (தொல்,பொருள்.1216)**

எனுமிடத்துத் தொல்காப்பியர் கனவைத் தலைவன் தலைவியின் உள்ளத்தில் தோன்றும் மெய்ப்பாடாகவும் குறிப்பிடுகிறார்.

"ஒவ்வொரு கனவிலும் ஏதேனும் ஒரு வேட்கைத்தீர்வு இருக்கவே செய்கின்றது. இத்தீர்வு வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இருக்கலாம். வெளிப்படையான கனவுகளின் பொருண்மை கனவாலினுக்கே தெரியும். இதற்குக் காரணம் பகுப்பாய்வு செய்ய வேண்டிய தேவையில்லை. மறைமுகக் கனவுகளுக்கே விளக்கம் தேவைப்படுகிறது. காரணம் இவ்விதக் கனவுகளில் வேட்கைகள் புனைவேடம் அல்லது மாறுவேடம் (Disgnised) கொண்டு வெளிப்படும்."[30]

கபிலரின் பாடல்களில் கனவு கண்ட நிகழ்வுகள் பற்றியும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 'சங்க இலக்கியங்களில் இயற்கை வருணனைகள் மிக்கிருந்தாலும் வாழ்க்கையில் புனைவுகள் இன்றி உள்ளது உள்ள படி இயல்பான, அதே நேரத்தில் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையையும், மிகுதலும் குறைதலும் இன்றி உள்ளபடியான வாழ்க்கையையும் காட்டப்பட்டருக்கிறது' என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[31] அந்த வகையில் மனித வாழ்வில் நிகழும் கனவுகளும் இலக்கியங்களில் இடம் பெறுவது மிகுந்த இயல்பானதாக அமைகின்றது.

**மின் அவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய்**

**நன்னுதல் பசத்தல் யாவது? துன்னிக்**

**கனவிற் காணும் இவளே**

**நனவிற் காணாள் நின் மார்பே தெய்யோ! (ஐங்-234)**

என்ற பாடலில் தலைவி மின்னல் போன்று ஒளிவிட்டு விளங்கும் தன் அணிகள் நெகிழ உடல் மெலிந்து நெற்றி பசப்புற வாழ்கிறாள். அதற்குக் காரணம் கனவில் நெருங்கி உன்னைக் காண்கிறாள் என்று தலைவனிடம் தோழி குறிப்பிடுகிறாள். ஒருவரை ஒருவர் எண்ணிக் கொண்டே வாழ்கிற அக வாழ்வின் நிகழ்வுகள் கனவுகளாக இங்கு காட்டப்பட்டிருப்பது எண்ணத்தக்கதாகும். மனித எண்ணங்களே கனவுகளாகப் பிரதிபலிக்கின்றன. அவற்றில் காதல் வேட்டைகளும் இடம் பெறுவதை மேற்கண்ட பாடல் வழி அறியலாம்.

### 3.8.5. நினைவுகூர்தல்

"எல்லா உயிர்களிடமும் தமது அனுபவங்களைச் சேர்த்துச் சேமித்து வைக்கக்கூடிய திறன் உண்டு. இத்திறனை நினைவு (Memory) எனலாம். இத்திறனைப் பயன்படுத்துதலை நினைவு கூர்தல் (Remembering)" என்பர்.[32]

"நினைவு இருவகைப்படும் நாம் உற்று நோக்கிய பொருள்களையோ வெளியுலக நிகழ்ச்சிகளையோ நினைவில் வைத்திருத்தல் 'நோக்கல் நினைவு' (Observation Memory) எனப்படும். இவ்வகை நினைவு ஒரு நிகழ்ச்சி பற்றிப் பின்னர் சாட்சி அல்லது சான்று (Evidence) சொல்லும் போது நமக்கு மிகவும் பயன்படும் சொற்களையும் பொருள்களைக் காட்டும் குறிகளையும் கற்று நினைவில் வைப்பது நெட்டுரு நினைவு" (Rote Memory)[33] எனப்படும்.

அண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், நினைவுக்குக் கொண்டு வருவதற்கு எளிமையானவை, சிக்கலான நிலையிலும் அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் சிறப்பாக மனத்தில் தங்கி இருக்கின்றன. நீண்ட நாட்களுக்கு முன்பு நிகழ்ந்தவை அந்த அளவிற்கு மனத்தில் இருப்பதில்லை.

"ஒரு கற்றல் அனுபவத்திற்குப் பின் உடனடியாக ஒரு மாணவனுக்குத் தேர்வு வைத்தால் அவனது மனத்திருத்தல் (Retention) தன்மையானது மிகவும் கூடுதலாக இருக்கும். அக்கற்றல் அனுபவத்தில் பல வாரங்கள் கழித்து தேர்வு வைத்தால் அவன் நினைவில் இருப்பவை மிகவும் குறைவாக இருக்கும். நிகழ்ச்சிகளின் அண்மையானது, நினைவில் இருத்துவதற்கு மிகவும் பயன்தரும்"என்பர் ஆலன் ஜே. எட்வர்ட்ஸ் மற்றும் டேல் பி.ஸ்கேனெல் என்ற உளவியலறிஞர்கள்.[34]

ஐங்குறுநூற்றில் வரும் தலைவன் பழைய நினைவுகளை, அதாவது தலைவியுடன் பழகிய நினைவுகளை மறக்காமல் நினைத்துக் கொண்டிருப்பதைக் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**மழை வரவு அறியா மஞ்ஞை ஆலும்**

**அடுக்கல் நல்ஊர் அசைநடைக் கொடிச்சி**

**தான் எம் அருளாள் ஆயினும்**

**யாம்தன் உள்ளுபு மறந்து அறியேமே (ஐங்.298)**

என்ற பாடலில் ‘மழை வருவதை உணர்ந்து மயில்கள் ஆடுதற்கிடமான பக்க மலைகளை உடைய ஊரில், அசைந்த நடையினைக் கொண்ட கொடிச்சியான என் தலைவி எனக்கு அருளுவதற்கு உடன்படாள் ஆயினும் தலைவியை நினைத்தலை ஒருபோதும் மறந்தறியோம்’ என்று தலைவன் கூறுகிறான்.

தலைவி நாணத்தால் சிலவற்றை தோழியிடம் மறைத்தாலும் தலைவன் எப்போதும் தலைவியையும் அவளுடன் இருந்த நினைவுகளையும் மறக்காதவன் ஆவான். ஏனெனில் தலைவி தலைவனின் உள்ளம் முழுதும் நிரம்பி இருக்கிறாள். எனவே என் நினைவுகளும் அவளைச் சுற்றியே உள்ளன. அண்மையில் நடந்த நிகழ்வுகள் ஆழமாக மனதில் பதிந்துவிடும் என்பதற்கு இக்கூற்றை சான்றாக கூறலாம். என்றோ நடந்த நிகழ்வுகள் ஒவ்வொரு முறையும் நினைக்கும் போதும் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டேயிருத்தல் எண்ணத்தக்கதாகும். அந்த வகையில் தலைவனின் கூற்று நினைவு கூர்தலை மையமிட்டு அமைகிறது.

### 3.8.6. காட்சிகளை மீட்டெடுத்தல்

“நம்முன் தற்சமயம் நிகழும் அல்லது நமக்கு அறிமுகமாகும் அல்லது நம்மை எதிர்படும் ஒன்றைக் கண்டு, அதை நாம் முன்னரே அறிந்துள்ளோம் என்று உணர்வதே மீட்டறிதல் (Recognition)” ஆகும்.[35]

தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து இன்புற்றனர். பிறகு தலைவி தோழியர் கூட்டத்துடன் நிற்பதைப் பார்க்கிறான். அவளுடைய பேரழகை எண்ணி தலைவன் வியந்து தனக்குத்தானே சொல்லி இன்புறுகிறான்.

**குன்ற நாடன் குறைத்து கவாஅன்**

**பைஞ் சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்**

**அம்சில் ஓதிஅசைநடைக் கொடிச்சி**

**கண்போல் மலர்தலும் அரிது இவள்**

**தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே. (ஐங். 299)**

குன்ற நாடனுடைய மலைச்சாரலில் உள்ள சுனையில் பூத்த குவளை மலரும், மலையில் உள்ள மயிலும், அழகிய சிலவாகிய கூந்தலையும் அசைந்த

நடையையும் உடைய குறமகள் கண்போல் மலர்தல் அரிது. அவளுடைய சாயலைப் போல் மயில் இருத்தலும் அரிது.

இதில், தலைவியின் கண்களில் உள்ள குளிர்ச்சி குவளை மலருக்கு இல்லை என்பதை தலைவன் கூறுகிறான். மயிலின் சாயல் காண்போர்க்குக் இன்பம் அளிப்பதாக இருக்கும். ஆனால் தலைவியின் சாயலைக் கண்டதால் தலைவியின் அழகு மயிலுக்கு இல்லை என்று கூறி தலைவன் காதல் இன்பத்தில் திளைக்கிறான். மேற்கண்ட பாடலில் தலைவியின் அழகைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது தலைவியை மற்ற உயிரினங்களோடு ஒப்பிட்டு தலைவியை சிறந்தத் தன்மை உடையவளாக தலைவன் கூறுகிறான். இதில் தலைவியின் அழகைச் சிறப்பிப்பதும் தலைவனின் காதல் வெளிப்பாடும் தென்படுகிறது. அந்நிலையில் குவளை மலரின் தண்மையும் மயிலின் சாயலையும் தலைவன் உற்று நோக்கிய நிலையும் வெளிப்படுகிறது. "சூழ்ந்துள்ள இயற்கையெல்லாம் காதலர்களோடு ஒன்றி விட்டதாக உணர்ந்தார்கள். உள்ளத்து உணர்வுகளை இயற்கை உணர்ந்து இயைந்து ஒன்றிவிட்டது போல் அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் மகிழ்ந்த போது இயற்கையும் மகிழ்ச்சியில் திளைத்தது; அவர்கள் துயருற்றபோது இயற்கையும் துயரால் துவண்டது என்றனர்."[36] எனவே தலைவியைப் புகழ்கின்ற வேளையில் வெவ்வேறு உயிரினங்களின் செயல்பாடுகள் நினைவுகள் ஆகியவைகள் மீட்டுக் கொணரப்பட்டு பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமணத்திற்குப் பிறகு தலைவியோடு வாழப்போகும் நல் வாழ்விற்கு தேவையான பொருளை ஈட்டுவதற்காகப் பிரிந்து சென்ற தலைவன் பொருளீட்டி மீண்டும் வரும் போது தன் காதலியை எண்ணி தனக்குள்ளே கூறிக்கொள்கிறான்.

**மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்**

**துறுகல் அடுக்கத்ததுவே பணைத்தோள்**

**ஆய் தழை நுடங்கும் அல்குல்**

**காதலி உறையும் நனிநல் ஊரே. (ஐங்.291)**

மூங்கில் போன்ற தோள்களையும், அழகிய தழைகளால் தொடுத்தமைத்த அல்குலையும் உடைய என் காதலி வாழ்கின்ற சிறந்த ஊர், மயில்கள் மகிழ்ந்து ஆட அவ்வாட்டத்திற்கு ஏற்ப பேராந்தைகள் மாறி மாறி அலறுதற்கு இடமான சிறிய குன்றுகளைக் கொண்ட பக்கமலையில் உள்ளவள் தலைவி. அத்தகைய தலைவியை தான் மணந்து இன்புற வேண்டும் என்ற நினைவுடன் பொருள்

தேடி திரும்பி வரும்போது, தன் உள்ளத்திற்கு பலவாறான மகிழ்ச்சியான சிந்தனைகள், தலைவன் மனதில் திரும்ப திரும்ப வந்து இன்புறுத்தியது.

இதில் களவு காலத்தில் இன்பம் நுகர்ந்த தலைவியுடன் திருமணமாகப் போகிறது என்ற மகிழ்ச்சி, தலைவியின் அழகு முன்பு பேசிய வார்த்தைகள், செயல்பாடுகள் அனைத்தையும் நினைவுபடுத்திக் கொண்டே திரும்புகிறான் தலைவன். தலைவனின் உளவெளிப்பாடுகளில் இவ்வெண்ணங்கள் மீட்டுக் கொணர்தல் என்ற உத்தியை சார்ந்த பாடலாக அமைகிறது. தன் மனதில் உள்ள பழைய நினைவுகளை அனுபவித்து நினைத்து பார்த்தல் மீட்டுக் கொணர்தலாக அமைகிறது.

### 3.8.7. எச்சரிக்கை விடுத்தல்

தான் விரும்பிய தலைவி கிடைக்காத போது தலைவன் மடலேறுதல் நிகழ்வை நிகழ்த்துகிறான். தொடக்கத்திலே மடலேறுதல் நிகழ்வு மேற்கொள்ளப்படவில்லை. தலைவியை வீட்டுக் காவலில் வைத்து இற்செறித்தல் நடைபெறுகிறது. இனி தலைவியை பார்க்கவோ, பேசவோ முடியாது என்ற சூழல் தலைவனுக்கு ஏற்படுகிறது. தலைவி இனி கிடைப்பாளா? என்ற வினா தலைவன் மனதில் எழுகிறது. அந்த சூழலில் மடலேறுகிறான் தலைவன். தலைவி புறக்கணிக்கும் போதும் இந்நிகழ்வு மேற்கொள்ளப்படுகிறது. மிக அழகான பெண். அன்ன நடை நடந்து செல்கிறாள். அதை தலைவன் கண்டான். அவளைப் பின்தொடர்கிறான் தலைவியிடம் எவ்வளவோ பேசியும் அவள் பதில் கூறாமல் செல்கிறாள். இந்நிலையில் தலைவன் மடலேறுவதாக அமைகிறது.

மடலேறுதல் என்பது ஓர் ஆண் ஒரு பெண் மீது காதல் கொள்கிறான் தன் காதலை ஏற்கும்படி மன்றாடுகிறான், கெஞ்சுகிறான், பயனில்லை. பிறகு பனங்கருக்கினால் ஒரு குதிரை செய்வான் தன் காதலியின் படத்தை எழுதுவான். கையிலே பிடித்துக் கொள்வான். அந்தப் பனங்குதிரை மீது ஏறிக்கொள்வான் சிறு பிள்ளைகளை அழைப்பான். குதிரையை இழுக்கச் செய்வான். அவர்களும் ஆனந்தமாக அந்தக் குதிரையை இழுத்துக் கொண்டு சொல்வார்கள்.

தலைவன் விரும்பிய காதலி எங்கிருக்கிறாளோ அந்த ஊரிலே எல்லாரும் காணக்கூடிய பொது இடத்திலே கொண்டுபோய் நிறுத்துவார்கள். தலைவன் தலைவியின் படத்தைப் பார்த்துக் கொண்டே நோன்பு இருப்பான். இதுவே மடலேறுதல் ஆகும். இச்செய்தியை கபிலர் கலித்தொகையில் குறிப்பிட்டுள்ளார்.

. . . . . . நின் தவறு இல்லானும்

ஒல்லையே உயிர்வெளவும் உருஅறிந்து அணிந்துதம்

செல்வத்தால் போத்தந்த நுமர்தவறு இல்என்பாய்

என ஆங்கு

ஒறுப்பின் யான் ஒறுப்பது துமரை யான்மற்று இந்நோய்

பொறுக்கலாம் வரைவந்து அன்றிப் பெரிதாயின் பொலங்குழாய் !

மறுத்து இவ்வுர் மன்றத்து மடல்ஏறி

நிறுக்குவென் போல்வல் யான், நீ படு பழியே (குறி.கலி.22)

*என்ற பாடலில் தலைவன் நெஞ்சை தலைவி கொள்ளை கொள்கிறாள். தலைவி பொல்லாத துன்பம் தந்ததால் தலைவன் மதியிழக்கிறான். இதற்கு தலைவன் மேல் தான் குற்றம் என்று தலைவி கூறுவாள். அதற்கு இளமையான வயது என்று தெரிந்தும் அழகான உடை அணிந்து அனுப்பிய தலைவியின் பெற்றோர்மேல் தான் குற்றம் என்று தலைவன் கூறுகிறான். இதற்கு தலைவி பதில் கூறாமல் இருந்ததால் தலைவன் கோபம் அடைந்து பொறுக்காமல் சில வார்த்தைகள் கூறுகிறான். மடலேறி தன் உயிரை விடுவேன் என்றும் அந்தப் பழி தலைவி மேல்தான் விழும் என்று கூறி அவளை விட்டு அகன்றான்.*

*இதில் தான் விரும்பிய தலைவி கிடைக்கவில்லை என்றதும் தன் உயிரையே போக்கிக் கொள்ளும் அளவிற்கு தலைவன் முன்வருகிறான். இதை நோக்கும் போது தலைவன் தலைவி மேல் வைத்துள்ள ஆழமான அன்பு வெளிப்படுகிறது. தான் விரும்பிய தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை தலைவன் மனதில் இருப்பது தெரிகிறது.*

*மனித வாழ்வில் மனதில் எண்ணிய எண்ணங்கள் ஈடேறுவதற்காக பல வழி முறைகளில் மக்களிடையே பேச்சுக்கள் அமைகின்றன. அன்பாக பேசுதல், இணக்காமாகப் பேசுதல் அடிபணிதல் என்ற முறையில் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள எச்சரிக்கை விடுப்பதும் இன்றைய வாழ்க்கை முறையில் காணப்படும் வழக்கமாகும். அந்த வகையில் தலைவன் தன் காதலைப் பெறுவதற்காக தலைவியிடம் முற்கூறிய வகையில் எல்லாம் பேசிப் பார்த்தான். இயலாத நிலையில் 'தன் இறப்பிற்கு தலைவியாகிய நீ காரணமாகிவிடுவாய்' என்று தலைவன் தலைவியிடம் எச்சரிக்கை விடுவதாக மேற்கண்ட கூற்று அமைகிறது.*

### 3.8.8. அன்பு வெளிப்படல்

தலைவன் பகல்பொழுதில் தலைவியைக் காண முன்பே தீர்மானித்த இடத்திற்கு வந்த பொழுது, அவனறியாது அவன் பின்னே வந்து தலைவி அவன் கண்களைத் தன் கையால் விளையாட்டாகப் பொத்தினாள். அப்போது தலைவன் மகிழ்ந்து உரைத்த செய்தி ஐங்குறுநூற் பாடலில் கூறப்பட்டுள்ளது.

**சிலம்கு கமழ் காந்தள் நறுங்குலை அன்ன**

**நலம் பெறு கையின் என்கண் புதைத்தோயே**

**பாயல் இன்துணை ஆகிய பணைத்தோள்**

**தோகை மாட்சிய மடந்தை**

**நீ அலது அளரோ என் நெஞ்சு அமர்ந்தோரே (ஐங்.293)**

என்ற பாடலில் 'மலைப்பக்கம் முழுதும் இனிய மணம் கமழச் செய்யும் காந்தளின் நறிய பூங்கொத்தினைப் போன்று அழகாற் சிறந்த உன் கைகளினால் என் கண்களைப் பொத்தியவளே ! என் நெஞ்சகத்தே என்றென்றும் நீங்காது அமர்ந்திருப்பவளே மூங்கிலை ஒத்த தோள்களை உடையவளே ! மயிலின் சாயலை உடைய உன்னையன்றி, என் கண்களைப் பொத்தி விளையாடும் உரிமை பெற்றார் பிறர் யார் உளர்?' என மனம் மகிழ்ந்து கூறுகிறான்.

இச்செய்தியில், புணர்ச்சியால் உரிமை ஏற்படுகிறது என்ற கருத்தும், வேறு யாருக்கும் இல்லாத உரிமை தலைவிக்கு இருப்பதையும் தலைவன் உணர்ந்தினான். தன் மெய் தீண்டியது தலைவியின் கையே என்று தலைவனால் சரியாக உணர முடிகிறது. களவு வாழ்க்கையில் கற்பு நெறியோடு காதலர்கள் கணவன் மனைவியாகவே தங்களை எண்ணி வாழ்ந்ததை அறிய முடிகிறது. இதில் தலைவனுக்கு மிகுதியான மகிழ்ச்சி ஏற்பட்டது என்று கூறுவதிலிருந்து தலைவி மீது உள்ள அன்பின் ஆழம் வெளிப்படுகிறது.

கலித்தொகையின் தலைவன் ஒருவன் தன் தலைவி மேல் காதல் கொள்கிறான். அவள் பந்து விளையடிக் கொண்டிருக்கிறாள், அவளை யார் இவள்? மின்னலோ? அணங்கோ? ஒன்றும் தெரியவில்லை என்று எண்ணியவாறு தலைவியிடம் பேசத் தொடங்கினான். ஆனால் தலைவி ஏதும் பதில் பேசவில்லை.

**வேய் எண் தரண்ட தோள் வெறிகமழ் உணர ஐம்பால்**

**மாவென்ற மடநோக்கின் மயில்இயல் தளிபு ஏக்கி**

**ஆய்சிலம்பு அரி ஆகப்ப அவிர் ஔ இழை இமைப்ப**

தொடிஎன மின்என அணங்குஎன பாது என்றும்
தெரிகல்லா இடையின்கண் கண்கவர்பு ஒருங்கு ஓட
வளமை சால் உயர் சிறப்பின் நுந்தை தொல்வியல்நகர்
இளமையான் ஏறிபந்தோடு ? இகத்தந்தாய் ! கேள், இனி
பூந்தண் தார் புலர் சாந்தின் தென்னவன் அமர்உண்கண்
தேம்பாய அவிழ் நீலத்து அவர்வென்ற அமர்உண்கண்
ஏந்து கோட்டு எழில் யானை ஒன்னாதார்க்கு அவன் வேலின்
சேந்து நீ இணையையால், ஒத்ததோ? சின்லலழி ! (கலி.21)

என்ற பாடலில் தலைவன் தலைவி மேல் உள்ள காதலை வெளிப்படுத்துகிறான். 'பாண்டிய நாட்டு பாவையே ! பாண்டியன் தன் பகைவர் மீது ஏவிய அம்பு போல் இருக்கிறது தலைவியின் கண். பாண்டியன் படையிலே மதம் கொண்ட யானைகள் என்ன செய்யுமெனில், தன் கோடுகளால் எதிரிகளைக் குத்தி இன்னல்படுத்தும். அதுபோல என்னைக் குத்துகிறது தலைவியின் மார்பு எப்படியாவது அத்தகைய தலைவியை அடையவேண்டும்' என தன் தோழனிடம் தலைவன் புலம்புகிறான். தலைவியின் மேனி தன்னை மிகவும் துன்பப்படுத்துவதாகக் கூறுவதிலிருந்து தலைவனின் காதல் துயரம் வெளிப்படுகிறது.

உலகில் எந்த உயிரும் அன்பு இல்லாமல் வாழமுடியாது. பறவைகள் போன்ற உயிரினங்களும் தங்கள் இனத்தில் கூடி அன்புடன் வாழ நினைக்கும் போது மனிதனும் தன் இனத்தாருடன் அன்புடன் வாழவே நினைக்கிறான். இதில் தான் விரும்பிய தலைவி கிடைக்க வேண்டும் என எண்ணும் தலைவனின் மனம் கூறப்பட்டுள்ளது.

### 3.8.9. தலைவியின் மென்மை வெளிப்படல்

தலைவன் தினைப்புனக் காவலில் இருப்பதைத் தோழனுக்கு உணர்த்தும் பாடலில், தலைவி கிளிகளை ஓட்டவும் மேன்மேலும் வந்து விழுந்த செய்தியைக் கூறுவதிலிருந்து தலைவியின் சிறப்பை வெளிப்படுத்துவான். அதாவது தலைவியின் கையில் உள்ள கிளியோட்டும் கருவியாகிய 'குளிர்' எனும் ஓசையை அவளுடைய பாட்டின் தாளம் எனக் கருதிக் கொண்டு கிளிகள் மீண்டும் மீண்டும் வந்து விழுந்தன. அதைக் கண்ட தலைவியோ அழுவதை மேற்கொண்டாள். அவ்வாறு அழுததால் அவளது கண்கள் பசுஞ்சுனையில் பூத்துள்ள குவளை மலர்களை ஒத்திருந்தன என்றும் கூறுகின்றான் தலைவன்.

**சுடுபுன மருங்கில், கலித்த ஏனல்**

**படுகின் கடியும் கொடிச்சி கைக்குளிரே**

**இசையின் இசையா இன்பா ணித்தே**

**கிளி அவள் விளி என எழல் ஒல்லாவே**

**அது புலந்து அழுத கண்ணே, சாரல்**

**குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை (குறு.291)**

என்ற பாடலின் வாயிலாக தலைவியுடன் தலைவன் தினைப் புனத்தில் தனித்திருந்தமையை அறியலாம். அவ்வேளையில் தலைவி ஆற்றல் குறைந்த கிளிகளைக் கூட அடக்கவியலாது அழுது துன்புறுவதாகப் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மலரின் மென்மையினை பெற்றவள் தலைவி என்பதனைக் குறிப்பிடும் விதமாகவும் குவளை மலரின் உவமையினைக் கொள்ளலாம்.

### 3.8.10. நன்றி உணர்வு வெளிப்படுதல்

ஒவ்வொரு மனிதனும் தனித்து வாழ முடியாது. பிறரைச் சார்ந்துதான் வாழ வேண்டும். அவ்வாறு சார்ந்து வாழும்போது நாம் பிறருக்கு உதவியும், பிறர் நமக்கு உதவியும் செய்து வாழ வேண்டிய சூழல் ஏற்படும். மனிதனுக்கு மனிதன் உதவி செய்து வாழ வேண்டிய கட்டாயத்தில் மனிதன் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறான். பிறர் உதவி செய்ததை மறக்காமல் நன்றி உணர்வோடு இருக்கும் பண்பு மனிதனிடம் இருக்க வேண்டிய ஒரு சிறந்த குணமாகும். இன்றைய சூழலில் எல்லோரும் நன்றி உணர்வுடன் இருப்பதில்லை. ஆனால் சங்க கால மக்கள் நன்றி உணர்வுடன் வாழ்ந்தனர் என்பதற்கு சான்றுகள் காணப்படுகின்றன.

தலைவன் தன் நெஞ்சிற்கு கூறும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது.

**நன்றே செய்த உதவி நன்றுதெரிந்து**

**யாம்எவன் செய்குவம்? நெஞ்சே! காமர்**

**மெல்இயல் கொடிச்சி காப்பப்**

**பல்குரல் ஏனல் பாத்தருங் கிளியே (ஐங்.288)**

என்ற பாடலில் தலைவன் கிளிக்கு முதலில் நன்றி சொல்கிறான். ஏனெனில் 'அந்த கிளிகள் தான் என் தலைவியை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது' என்று தலைவன் கூறுகிறான்.

தினைபுனத்தைக் காவல் காக்க என் தலைவி வருவதற்கான வாய்ப்பை கிளிகளே ஏற்படுத்தின. கிளி தினையை உண்ண வந்ததால்தான் தலைவி காவல்

காக்க வந்தாள். தலைவன் தலைவியைச் சந்திக்க ஏதுவாக அமைந்ததற்குக் காரணம் கிளிதான் என்பதை தலைவன் மனம் உணர்கிறது. கிளிகள் செய்த உதவியை, 'பேருதவி' என்று குறிப்பிடுகிறான். செய்யாமல் செய்த உதவி என்றும் குறிப்பிடுகிறான். தலைவன் இக்கிளிகளுக்கு என்ன கைம்மாறு செய்வது என்று நினைக்கிறான். தன்னுடைய காதலின் மீது எத்தனை ஈர்ப்பு இருந்தால் தலைவியை சந்திப்பதற்கான சூழல்களைப் பற்றி இவ்விதம் ஆராய்ந்து, தலைவன் கிளிகளுக்கு நன்றி சொல்லி இருப்பான் என்பதை அறிதல் வேண்டும்.

இதில் தலைவனின் நன்றி உணர்வு தெரிகிறது. மனிதனிடத்தில் மட்டும் குறிஞ்சி நிலத்தார் நன்றி உணர்வோடு இல்லை. பறவைகளிடத்தில் நன்றி உணர்வோடு இருந்தார்கள் என்பதை கபிலர் இப்பாடலில் உணர்த்தியுள்ளார். இதனைத்தான் வள்ளுவர்,

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்ற லரிது"[37] (குறள்-101)**

என்றும்

**"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று"[38] (குறள்-108)**

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக தலைவனின் மனத்தில் உள்ள எண்ணங்கள், கூற்றுகள் வாயிலாக பல நிலைகளில் வெளிப்பட்டதை அறியமுடிகிறது. தலைவன், தலைவி மீது கொண்டுள்ள காதல் உணர்வு, உளப்போராட்டம், அன்பு உள்ளம், கனவு காணுதல், நன்றி உணர்வு, வீரம் போன்ற தலைப்புகள் மூலம் தலைவனின் உளவெளிப்பாடுகளை அறியமுடிகின்றது.

### 3.9. தலைவி கூற்று நிகழும் இடங்கள்

தொல்காப்பியர் களவில் தலைவி கூற்று நிகழ்த்தும் இயல்புகளையும், இடங்களையும் வரையறுத்தார்.

**இருவகைக் குறிபிழைப்பாகிய இடத்தும்[39] (தொல்.பொருள்.1053)**

எனத் தொடங்கும் நூற்பாவில் தலைவி எவ்வெந்நிலையில், எவ்வெப்பொருள் பற்றிக் கூற்று நிகழ்த்துவாள் என கூறப்படுகின்றது. அடுத்து, தலைவிக்குக் காமக்குறிப்பின்கண் கூற்று நிகழும் இயல்பினைக் கூறுவார்.

**காமத் திணையிற் கண்நின்று வரூஉம்[40] (தொல்.பொருள்.1054)**

எனத் தொடங்கும் நூற்பாவின் உரையில் 'தலைவிக்குரிய கிளவி கூறுகின்றாராகலின் முற்பட அவள் தலைவனைக் கண்ணுற்ற வழி வரும் இலக்கணம் உணர்ந்துதல் நுதலிற்று' என்பார் இளம்பூரணர்.

இவ்விடத்துத் தலைவியின் இயல்பு மிக நுட்பமாக உணர்த்தப் பெற்றுள்ளது. காம ஒழுக்கத்தில் நிலைபெற்று வருகின்ற நாணம், மடம் ஆகிய தலைவியின் உணர்வுகள் குறிப்பினாலும், இடத்தினாலும் புலப்படும். வெளிப்படையாகப் புலப்படாது, கண்களால் வெளிப்படுத்தப்பெறும். தலைவியின் உள்மன உணர்வுகள் மிக நுட்பமாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற நெறி அன்று பின்பற்றப்பெற்றது என்பதைத் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். உணர்வுகள் ஆடவர்போல் பட்டாங்கு வெளியிடுதல் மகளிர்க்கு அமையவில்லை. தனது உணர்வுகளை நுட்பமாய் வெளிப்படுத்தும் பெண்மையின் உளவியல் சுட்டப் பெறுகின்றது.

தலைவிக்குக் கூற்று நிகழும் இடங்களை,

**மறைந்து அவன் காண்டல் தன் காட்டுறுதல்**[41] (தொல்.பொருள்.1057)

எனத் தொடங்கும் நூற்பாவில் மிக விரிவாய் எடுத்துரைப்பார். பெண்மையின் இயல்புக்கேற்பத் தலைவியின் கூற்று நிகழும் இடங்களை எடுத்துக் காட்டுகின்றார் தொல்காப்பியர்.

### 3.10. தலைவி கூற்றுகளில் உளவெளிப்பாடுகள்

தலைவி தனக்குள் தோன்றும் எண்ணங்களை சூழ்நிலைக்கு ஏற்றவாறு பலவாறாக வெளிப்படுத்தியுள்ளாள். சில இடங்களில் நேரடியாக தனது மகிழ்ச்சியையும், வருத்தத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறாள். சில வேளைகளில் நேரடியாகத் தனது கருத்தை தெரியப்படுத்தாமல் தோழியின் மூலமாக குறியீடாகவும், மறைமுகமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறாள். தலைவியின் உள்ளத்தில் தோன்றும் வெளிப்பாடுகளை ஒன்றுதல், உள்ளக்கிளர்ச்சி, புறத்தோற்றம், கருத்தேற்றம், மனப்போராட்டம், மனமுறிவு, இற்செறிப்பு, மன இறுக்கம், அன்பு உள்ளம், நினைவு கூர்தல், வருத்தம், நாணம், தோற்றப் பொலிவு, காதல், பெருந்தன்மை போன்ற நிலைகளில் தலைவியின் பேச்சுகள் அமைகின்றன.

### 3.10.1. உள்ளம் ஒன்றுதல்

**. . . . . . . . என் நெஞ்சம்! கிளியே**

**ஆர் இருட் கங்குல் அவர் வயின்**

**சாரல் நீள் இடைச்செலவு ஆணாதே** (குறு.153)

என்ற பாடலில் தலைவி தலைவனோடு வாழ்ந்து இன்பம் அடைகிறாள். தலைவனின் பண்பு நலன்களை நன்கு உணர்ந்தவள். எனவே, தலைவன் பிரிவை ஏற்க அவள் மனம் உடன்படவில்லை. மேலும் அவன் இல்லாத இடம் துன்பம் தருவதாகக் கருதுகிறாள். தன் துன்பம் நீங்க தலைவன் சென்ற வழியில் தானும்

செல்ல வேண்டும் என எண்ணுதல் தலைவி தலைவனை உடலாலும் உள்ளத்தாலும் ஒன்றுதல் எனும் உளவெளிப்பாட்டைக் காட்டுகிறது. இடையூறுகள் மிகுந்த மலைச்சாரல் வழியாக தலைவன் வரும் போதும், மீண்டு செல்லும் போதும், அவனைக் காத்துச் செல்வதற்காக இவள் நெஞ்சும் உடன் சென்றது என்று பாடலில் பதிவாகிறது.

நீண்ட வழியில், மலைச்சாரலில் புலி, யானை, பாம்பு முதலிய விலங்குகளால் அச்சம் ஏற்படும் என தெரிந்தும், தலைவன் மேல் வைத்துள்ள அன்பின் காரணமாக தானும் செல்ல வேண்டும் என நினைத்தல் மனம் ஒன்றி செயல்படும் உளப்பாட்டைக் காட்டுகிறது. இப்பாடலில் கபிலர், தலைவியின் அன்பின் ஆழத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். "நிலம் முதலிய புறப்பொருகளின் தொடர்பால் மக்களது மனத்தகத்தே அன்பெனும் உயிர்ப்பண்பு வளர்ந்து சிறத்தல் அகத்திணை வளர்ச்சியாகும்."[42]

### 3.10.2. உள்ளக் கிளர்ச்சியடைதல் (Ecstasy)

"மனிதனின் அனைத்து செயல்பாடுகளுக்கும் எண்ணங்களே அடிப்படையாக அமைகின்றன. அந்த எண்ணங்கள் பிறக்குமிடத்தை 'உள்ளம்' என்றும் அழைக்கின்றனர். உள்ளமே நடத்தைக்கு காரணமாக அமைகிறது. அவ்வுள்ளத்தில் இயல்பிற்கு மாறான நிலைகளில் ஒரு நிலையே உள்ளக்கிளர்ச்சியாகும். நனவு நிலையில் நம்முடைய செயல்களை எல்லாம் பாதித்து நிற்கும் பொதுநிலையே உணர்ச்சியாகும். இது ஆழமாய் பதிந்து நம்மை ஆட்டி வைக்கும் தன்மை அடையும்போது அவற்றை உள்ளக்கிளர்ச்சி என்று அ.க.நாராயணன் பிள்ளை கூறியுள்ளார்."[43]

தலைவன் பிரிந்ததால், அவன் கடந்த வழியின் கொடுமையையும் நெடுந்தொலைவில் உள்ளார் என்பதையும் அறிந்த தலைமகள் துன்ப மிகுதியாலும் செயலற்ற மனம் படைத்தவளாகவும் திகழ்கிறாள். தலைவன் பிரிவை தன்னால் தாங்கிக்கொள்ள இயலவில்லை என்கிறாள்.

**. . . . . . . . . . தோழி உண்கன்**

**நீரொடு ஓராங்குத் தணப்ப**

**உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே (குறு.38)**

என்ற பாடலில் 'தலைவன் பிரிந்தவுடன் பிரிவை பொறுத்துக் கொள்ளும் வலிமையுடையோர்க்கு பிரிவு என்பது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால் எனக்கு பிரிவு என்பது பெரிய வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பிரிவுத்துயரைத் தாங்க முடியாததால் தலைவனின் நட்பு எனக்கு தீமையை

அளிக்கின்றது. தலைவனை மனதில் நினைத்து இருப்பதால்தான் நான் உயிர் வாழ்கிறேன். இல்லையேல் நினைக்காத அன்றே இறந்துபடுவேன்' என்று தலைவி குறிப்பிடும்போது தலைவியின் மனமானது உள்ளக்கிளர்ச்சியைக் காட்டுகிறது. அதாவது தலைவனின் பிரிவு தலைவியின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்து எச்செயலும் செய்ய இயலாதவளாய்த் தவிக்கச் செய்கிறது. இத்தகைய சூழலில் தவிக்கும் தலைவியின் மனமானது உள்ளக்கிளர்ச்சி (Ecstasy) நிலையை அடைந்துள்ளது.

### 3.10.3. மனமாற்றத்தை ஏற்படுத்துதல் (Projection)

"ஓரிடம் பற்றி இன்ப துன்ப உணர்வுகள் அவ்விடத்தை ஒட்டி மட்டும் அமையவில்லை. அவ்விடத்தோடு தொடர்பு கொள்ளும் மனத்தையும் ஒட்டியே அமைகின்றன"[44] என து.சிவராஜ் குறிப்பிடுகின்றார். தலைவனைப் பிரிந்த தலைவி,

**அன்னாய், வாழி! வேண்டு அன்னை! நீமற்று**
**யான் அவர் மறத்தல் வேண்டுதி ஆயின்**
**கொண்டல் அவரைப்பூவின் அன்ன**
**வெதை தலை மா மழை சூடி,**
**தோன்றல் ஆணாது, அவர் மணி நெடுங்குன்றே**

(ஐங்.209)

என்ற பாடலில் 'அவரைப் பூப்போன்ற நிறமுடைய வெண்மையான முகட்டினையும் கருமையான உடலை உடைய மேகத்தையும் நீலமணி போன்ற நெடிய மலையையும் உடைய தலைவனது மலையைப் பார்க்கும்போது என் தலைவனை மறக்க முடியவில்லை. அவனை மறப்பது என்பது என்னால் முடியாத செயல்' என தலைவி தன் இயலாமையைப் புலப்படுத்துகிறாள்.

"இன்ப துன்பங்கள் பொருள்களிலும் சூழ்நிலையிலும் மட்டும் இல்லை. நுகர்வோரின் மனத்தை ஒட்டி அவை பெரிதும் மாறுகின்றன"[45]எனவே, 'தலைவன் தலைவியை மணப்பது தலைவிக்கு இன்பமாகும். அது நிகழாதபோது ஏற்படும் துன்பத்தைப் போக்க மனதை வேறு சிந்தனையில் செலுத்தி தலைவனை சற்று மறக்கலாம் என்றால் அவர் நாட்டு மலையைப் பார்க்கும்போதெல்லாம் தலைவனின் நினைவுகளைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கின்றது' என்று தலைவி புலம்பித் தவிக்கிறாள்.

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**

**அதனின் அதனின் இலன்[46] (குறள்.341)**

*எவ்வற்றிலிருந்தெல்லாம் விலகியிருக்கிறோமோ அவற்றினால் ஏற்படக்கூடிய துன்பத்திலிருந்தும் விலகியிருக்கலாம் என்பது வள்ளுவர் குறிப்பிடும் செய்தியாகும். ஆனால் காதலின் இலக்கணத்தில் காதலர்கள் ஒருவரையொருவர் நினைத்துக் கொண்டு இருத்தலும் முதன்மையானதாகும்.*

**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**

**ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்**

**நோக்குவ எல்லாம் அவையே போறல்**

**மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஅச்**

**சிறப்புடை மரபின் அவை களவு என மொழிப[47](தொல்.பொருள்.1046)**

*என்ற நூற்பா காதலில் நினைத்துக் கொண்டிருத்தலைப் பற்றி குறிப்பிடுகிறது. தோழி தலைவனை மறக்கும்படி இப்பாடலில் கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும். தோழி தலைவனின் நினைவை சற்று மறந்திருக்கும்படி தலைவியிடம் கூறுதல் காதலுக்கு எதிராது அல்ல. உளவியல் அடிப்படையில் வேறு சிந்தனையானது மனநிலையை மாற்றுவதற்கே ஆகும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய பல்வேறு சிந்தனைகளை மேற்கொண்டதாக தலைவி கூற்று அமைந்துள்ளது.*

### 3.10.4. நம்பிக்கையளித்தல்

*பிறருடைய கருத்தினை மறுப்பின்றி ஏற்கும் மனநிலையைக் கருத்தேற்கும் தன்மை (Suggestibility) என்பர். "நாம் எவரை அதிகமாக மதித்துப் போற்றுகின்றோமோ அவரது கருத்துக்களைத் தயக்கமின்றி ஏற்றுக் கொள்கிறோம். ஒருவரிடம் நாம் கொண்டுள்ள பெருமதிப்பு அவரது கருத்துக்களுக்கும் இடமாற்றம் செய்யப்படுகிறது"[48]*

*தலைவியால் தலைவனின் பிரிவை ஆற்றாது வருந்தியதைக் கண்ட தோழி, 'தினைப்புனத்தில் உன்னைக் கண்டு பழகி, பின்பு பிரிந்து சென்ற தலைவனால் தலைவியின் மேனி அழகு நலம் கெட்டு காணப்பட்டது. நெடுநாள் வராததால் தலைவியின் பேரழகை அழித்தவன் தலைவன். அத்தகைய தலைவன் தலைவியின் விருப்பப்படியே விரைவில் வந்து உன்னை மணந்து, தலைவியின் அழகை திரும்பத் துளிர்க்கச் செய்வான் வருந்தாதே என தலைவியை ஆற்றுப்படுத்துகிறாள் தோழி.*

**மென் தோள் ஞெகிழவும் திருநுதல் பசப்பவும்**

**பொன் போல் விறற் கவின் தொலைத்த**

**குன்ற நாடற்கு அயல்வர் – நன் மணனே (ஐங்.230)**

*என்ற பாடலில் தோழியின் ஆறுதல் மொழியினை மறுப்புரை கூறாது தலைவி ஏற்றுக் கொண்ட நிலை வெளிப்படுகிறது. இதன்வழி தலைவிக்கு நம்பிக்கையூட்டும் வகையில் தோழியின் கூற்று அமைவதை அறியலாம்.*

### 3.10.5. காதலை வெளிப்படுத்துதல்

*காதல் என்ற சொல் அன்பைக் குறிக்கும். எந்த ஒரு உயிரும் அன்பு இல்லாமல் இயங்க முடியாது. தன்னைச் சார்ந்துள்ள அனைவரிடமும் அன்பு செலுத்தி வாழ்வதுதான் வாழ்க்கை. மனிதன் மட்டுமல்லாது பறவைகள், விலங்குகளுக்கிடையிலும் காதல் ஏற்படுகிறது. தன் அன்பை செயல்பாடுகள் மூலம் வெளிப்படுத்துகின்றன. ஆனால் மனிதன் மொழியின் மூலம் ஒருவர் மீது ஏற்படும் அன்பு உணர்வை வெளிப்படுத்துகிறான். ஓர் ஆணுக்கு ஒரு பெண் மேல் அன்பு வருவதும், ஒரு பெண்ணுக்கு ஓர் ஆண் மேல் அன்பு வருவதும் காதலாகும். இருவரின் உள்ளம் ஒத்து விளங்குதல் அன்பின் அடிப்படையாகும். காதலுக்கானச் சூழல் பூ தரும் புணர்ச்சி, களிறுதரும் புணர்ச்சி, புனல் தரும் புணர்ச்சி என்ற மூன்று நிலைகளில் வெளிப்படுகிறது.*

*தலைவனும் தலைவியும் தினைப்புனத்தில் சந்தித்து தனது அன்பை மேலும் ஆழமாக்கிக் கொள்கிறார்கள். பின்பு புணர்தல் நடைபெறுகிறது. தலைவனும் தலைவியும் கூடிய நிலை குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.*

**. . . . . . . . . . . . அந்நிலை**

**நாணும் உட்கும் நண்ணுவழி அடைதர**

**ஒய்யென பிரியவும் விடாஅன், கலைஇ**

**ஆகம் அடைய முயங்கலின் . . . . . . . (குறி.பா.183 – 186)**

*என்ற பாடலில், தலைவன், தலைவியை அணுகிய அளவிலே தனக்கு இயல்பாகிய நாணம், அச்சம் தலைவியிடம் தோன்றினமையால் விரைந்து அவனிடத்திலிருந்து தலைவி நீங்க முற்பட்டபோதிலும் தலைவன் விடாமல் அவளைக் கையால் அணைத்து, அவள் மார்பை தன் மார்பில் ஒடுங்கும்படி தழுவினான்.*

*இதில் தலைவி மேல் கொண்டுள்ள காதல் வெளிப்படுகிறது. அவள் மீதுள்ள அளவற்ற அன்பால் அவளைக் கட்டி அணைத்துத் தனக்குரியவள் என்ற உரிமை உணர்வோடு, தன் மார்போடு தழுவிக் கொள்கிறான் தலைவன்.*

இவ்வாறாக தலைவியை தழுவும் தலைவனின் செயல்பாடுகள் வெளிப்படுத்தப்படுவதன் வாயிலாக தன் காதலின் நிலையை தலைவி மறைத்தலின்றி வெளிப்படுத்துகிறாள். நாணமுடைய தலைவி, தான் தனிமையில் காதலரோடு உறவாடிய நிலையை வெளிப்படுத்துவதன் நோக்கம், தன் காதலை வெளிப்படுத்துவதும் தோழியின் வாயிலாக களவு வாழ்விலிருந்து கற்பு வாழ்வினை நோக்கிச் செல்வதுமேயாகும். இத்தகைய பொருண்மைகளை மேற்கண்ட கூற்று கொண்டு விளங்குகிறது.

கலித்தொகையில் இடம்பெறும் தலைவி தன்னுடைய காதலின் அனுபவத்தைத் தோழியிடம் ஒரு கதை போலச் சொல்கிறாள். 'ஒருநாள் தலைவி வீட்டிற்கு நீர் வேண்டும் எனச் சொல்லி ஒருவன் வந்தான். அன்னையும் இல்லத்தில் இருந்தபோது, தாகத்தைத் தணிக்க, பொன்னால் செய்த கரகத்தில் அருந்துவதற்கான நீரை எடுத்துச் சென்று கொடுக்கும்படி அன்னை தலைவியை பணித்தாள். நீர் அருந்த வந்த ஆண்மகன் வளையலணிந்த தலைவியின் கையைப் பிடித்து பற்றினான். தலைவி திடுக்குற்று அஞ்சி 'அம்மா' என்று அழைத்தாள். தாய் அலறிக்கொண்டு ஓடிவர தலைவி நடந்ததை மறைத்துத் தண்ணீர் பருகியபோது அந்த ஆண் மகன் விக்கினான்' என்றாள்.

தாய் அதனை நம்பி அவனிடம் மெல்லக் குடிக்க கூடாதா? என்று கோபித்துக் கொண்டு அவன் முதுகைத் தடவி விட்டாள். தாய் அறியாமல் அந்தக் கள்வன் கடைக்கண்ணால் தலைவியைக் கொன்றுவிடுபவனைப் போல் பார்த்துச் சிரித்தான். இத்தகைய குறும்புச் செயல் ஒரு மகிழ்ச்சியைத் தந்தது' என தலைவி குறிப்பிட்டாள்.

**அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிரே!**
**உண்ணுநீர் வேட்டேன் என வந்தாற்கு அன்னை**
**அடர் பொற்சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்**
**உண்ணு நீர் ஊட்டிவா என்றாள், என யானும்**
**தன்னை அறியாது சென்றேன்; மற்று என்னை**
**வணமுன் கைபற்றி நலிய, தெருமந்திட்டு**
**அன்னாய்! இவன் ஒருவன் செய்தது கண் என்றேனா**
**அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்**
**உண்ணு நீர் விக்கினான் என்றேனா, அன்னையும்**
**தன்னைப் பறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்**

கடைக்கண்ணால் கொல்வான் மேல் நோக்கி நகைக்கூட்டம்

செய்தான் அக்கள்வன் மகன் (குறி.கலி.15)

என்ற பாடல் மேற்கண்ட செய்தியை வெளிப்படுத்துகிறது.

தன் காதலியை பார்ப்பதற்காக இவ்வாறு தலைவியின் வீட்டிற்குள் நீர் கேட்டுச் செல்கிறான் தலைவன். இதில் தலைவன் தலைவியின் காதல் உணர்வு வெளிப்படுகிறது. 'விக்கினான்' என்று தன் காதலனைக் காப்பாற்ற தன் தாயிடம் தலைவி பொய் உரைக்கிறாள்.

தலைவியின் இக்கூற்று பெண்களின் அறிவுத்திறனை வெளிப்படுத்துவதாய் அமைகிறது. 'பெண் புத்தி பின் புத்தி' என்று ஒரு வழக்கு உண்டு. பின்னால் நிகழ இருப்பதை முன்பே அறிந்து கொள்ளும் நுட்பமான அறிவினை உடையவர்கள் பெண்கள் என்பதே அவ்வழக்கு சொல்லக்கூடிய செய்தியாகும். அவ்வாறான திறனுடைய பெண் என்பதை மேற்கண்ட கூற்றில் வரும் தலைவி தெளிவுபடுத்தியிருக்கிறாள். ஓர் ஆடவனுக்கு நீர் கொடுக்க தலைவி வருகிறாள். அவன் தலைவியின் கையைப் பிடித்து விடுகிறான். உடனே தலைவி சத்தமாக கத்தி விடுகிறாள். சத்தம் கேட்டு தலைவியின் தாய் வந்து கொண்டிருக்கிறாள். தலைவி கத்தும்போது ஆடவனின் செயலுக்காகக் கத்துகிறாள். தாய் வந்து சேருவதற்குள் அவளின் மனதில் மாற்றம் நிகழ்கிறது. அந்த ஆடவனைக் காட்டிக் கொடுக்கக்கூடாது என தலைவி எண்ணுகிறாள். காரணம், தலைவிக்கு அவன்பால் அன்பும் பரிவும் ஏற்படுகிறது. அவனை தலைவனாக ஏற்றுக்கொண்டாள். ஆதலால் தன் அறிவுத்திறத்தால் தன் தாய் வந்தவுடன் அந்த ஆடவனாகிய தலைவனுக்கு நீர் அருந்தும்பொழுது விக்கல் ஏற்பட்டது என்று நடந்த நிகழ்வை தலைவி மாற்றுகிறாள். எனவே தலைவியின் நுட்பமான அறிவு, தன் காதலின் வெளிப்பாடு ஆகியவை மேற்கண்ட கூற்றில் வெளிப்படுகிறது. "தாய்மையே அடுத்த தலைமுறையைப் படைக்கும் ஆற்றல் கொண்டது. அதுவே பெண்மையின் வடிவம். ஆதலால் தூய துறவியருங்கூடத் தாய்மைப் பெண்மையைப் போற்றுவர். கபிலர் காதல் பாடல்களையே அதிகம் பாடியதன் நுட்பம் கூடப் பெண்மையைப் போற்றும் திறம் காட்டவே என்பதை உணரலாம்."[49]

### 3.10.6. மனமுறிவு வெளிப்படல் (Frustration)

நாம் ஒருவர்மேல் அதிகப்பற்று வைக்கிறோம். அவர்கள் நம்மீது எந்தவித அன்பும் ஆதரவும் காட்டாதபோது நம் மனதில் ஒருவித சலிப்பு, சோர்வு ஆகியவை தோன்றுகிறது. அதுவே மன முறிவிற்கு காரணமாகிறது. "வெல்ல

முடியாத அல்லது அழிக்க முடியாத வாழ்க்கைச் சூழலில் இருந்து விலக முடியாத போது மனமுறிவு தோன்றும்" என வெல்ஸ் கூறுகிறார்.[50]

### 3.10.7. மனச் சோர்விற்கான மூன்று காரணங்கள்

1. விருப்பத்திற்கும் மதிப்பிற்கும் உரிய ஒருவரையோ, ஒரு பொருளையோ, ஓர் உரிமையையோ இழந்த உணர்வு.
2. அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஒருவரிடம் அல்லது ஓரிடத்தில் விருப்பும், வெறுப்பும் ஒருங்கே தோன்றும் போராட்டம்.
3. தன்னிடத்தே குற்றம் காணும் ஆர்வம்.

ஆகியவை மனம் சோர்விற்கான காரணங்களாக அமைகின்றன.[51]

தலைவனைப் பிரிந்து துன்புறும் தலைவி தோழியிடம் செல்வங்களை ஈட்டிக் கொண்டுவரும் பொருட்டு நம் மென்மையான தோள் மெலியுமாறு நம்மை விட்டுப் பிரிந்துச் சென்றான் தலைவன். அது குறித்து ஆற்றுவித்த தோழியிடம் தலைவி, தன் மன நிலையைத் தெளிவுபடுத்துகிறாள்.

**மந்திக் கணவன் கல்லாக் கடுவன்**
**ஒண்கேழ் வயப்புலி குழுமலின், விரைந்து, உடன்**
**குன்று உயர் அடுக்கம் கொள்ளும் நாடன்**
**சென்றனன் – வாழி, தோழி! என்**
**மென்தோட் கவினும், பாடயலும் கொண்டே** (ஐங்.274)

என்ற பாடலில் வேற்று வரைவு செய்தி கேட்டு அஞ்சி அவன் மலைக்கு ஓடிவிட்டான். இந்நிகழ்வை குரங்கு புலிக்கு பயந்து ஓடியது போல என்று தலைவி குறிப்பிடுகிறாள். அத்துடன் என் நலமும், அழகும், உறக்கமும் போயின என தலைவியின் மனம் விரக்தி நிலையில் உள்ளதைக் கூறுகிறார். ஒருவேளை தலைவன் தன்மீது அன்பு காட்டவில்லையோ என்றும் அவள் மனம் நினைக்கிறது.

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவனை நினைத்து வருந்தும் தலைவிக்கு, தோழி கூறிய ஆறுதல் எதுவும் கேட்கவில்லை. அவனைப் பிரிந்ததால் என் மகிழ்ச்சி அனைத்தும் சென்றது. உணவு, உறக்கம் அனைத்தையும் மறந்தேன். பொலிவிழந்து காணப்படுகிறேன் என்று கூறுவதிலிருந்து, தலைவியின் மனமுறிவு எனும் உளவெளிப்பாடு வெளிப்படுகின்றது. மிகுதியான மனவருத்தமுடையவர்களை ‘மனசு ஒடிஞ்சு போயிட்டாங்க’ என்று பேச்சு வழக்கில் குறிப்பிடுவார்கள் அத்தகைய மனநிலையே இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது.

தலைவன் திருமணம் செய்து கொள்ள வரவில்லை என்றால் இறந்துபடுவேன் என்று கூறுமளவிற்கு தலைவியின் மனமுறிவு கூறப்பட்டுள்ளது. தலைவன் மேல் தலைவி உயிரையே வைத்துள்ளாள் என்பதற்கு இப்பாடலைச் சான்றாகக் கூறலாம்.

**மீமிசை நல் நாட்டவர் வரின்,**

**யான் உயிர் வாழ்தல் கூடும் – அன்னாய்!** (ஐங்.213)

'தலைவன் திருமணம் செய்து கொள்வேன் என்ற உறுதிமொழியோடு வந்தால் உயிர் வாழ்வேன். இல்லையேல் இறந்துவிடுவேன் என்பது உறுதி' என்கிறாள் தலைவி. தலைவன் அதிக காலம் வரைவை நீட்டித்து இருக்கிறான் என்பது இதன் வழி தெரிகிறது. காலம் தாழ்த்த மனம் உடைந்து போகிறாள் தலைவி. இனி திருமணம் தவிர வேறு வழியில்லை. அதுவே தன் மனதிற்கு மகிழ்ச்சியான செய்தியாக நினைக்கிறாள். குரங்கு புலிக்கு பயந்து ஓடிய மலைநாட்டுத் தலைவன் என குறிப்பிட்டிருப்பது, திருமணத்திற்கு காலம் நீட்டித்திருப்பதைக் உணர்த்தக் கூடியதாகும்.

மேலும் தலைவன் தலைவியின் அருகில் இருந்தால் விரைவில் திருமணம் செய்துகொள்ள வலியுறுத்தியிருப்பாள் தோழி. எனவே காலம் நீட்டித்தல் பொருட்டு தலைவன் புலிக்கு அஞ்சிய குரங்குபோல சென்றிருப்பான் என்பதை கபிலர் உள்ளுறையாகக் கூறியிருக்கலாம்.

தலைவனின் துணிச்சலற்ற தன்மையும் இக்கூற்றில் வெளிப்படுகிறது. இனியேனும் தலைவன் விரைந்து செயல்பட வேண்டும் என்பது தலைவியின் நோக்கமாக அமைகிறது. தலைவன் வரைவினை ஏற்று இணைந்து வாழாவிடில் உயிர் துறப்பேன் என்ற தலைவியின் கூற்று மன வருத்தத்தின் உச்சமாக வெளிப்படுகிறது. மனம் நலமாக இருந்தால் மட்டுமே உயிர் வாழ்ந்திட இயலும் என்பதைத் தெளிவாகக் காட்டுவதாய் இக்கூற்று அமைவது குறிப்பிடத்தக்கதாகும். தலைவன் பிரிவு தலைவிக்கு மனமுறிவு தருகிறது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

### 3.10.8. மனப்போராட்டம்

தலைவி நினைத்த செயல் விரைவில் நடக்காமல் காலதாமதம் ஆகும்போது அவள் மனம் போராடுகிறது. மனித மனம் எந்த ஒரு செயல் செய்ய துவங்கும்போதும் அந்தச் செயலில் எவ்வித தடையும் இல்லாமல் விரைவில் நடக்க வேண்டும் என நினைப்பது மனித இயல்பு. ஒரு செயலுக்கே இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க மனிதன் நினைக்கும்போது, வாழ்க்கை முழுவதும்

உடன் வாழப்போகிற தலைவன் தன்னை திருமணம் செய்து கொள்வதில் தடை ஏதும் வரக்கூடாது என தலைவி எந்த அளவிற்கு மனதில் எண்ணியிருப்பாள். தலைவிக்கு தன் கருத்தை அன்னையிடமும் கூறமுடியாமல் தலைவனிடமும் கூறமுடியாமல் மனம் போராடுகிறது. தலைவனுடன் சேரவேண்டும் என்ற ஆவலை தோழியிடம் வெளிப்படுத்துகிறாள்.

**நனி பெரிது இனியன ஆயினும், துணி படர்ந்து**

**ஊடல் உறுவேன் தோழி! – நீடு**

**புலம்பு சேண் அகல நீக்கி**

**புலவி உணர்த்தல் வன்மையானே (நற்.217)**

என்ற பாடலில் பலமுறை நம்மோடு பழகி இணைந்ததால் நற்பண்பை உடையவன் தலைவன் என்பது நமக்குத் தெரியும். நம்மை ஏமாற்றமாட்டான் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏனெனில் பழகிய நாட்களில் நல்ல பண்பு உடையவனாகத்தான் இருந்தது தலைவனின் செயல்பாடு. அத்தகைய நற்பண்பை உடைய தலைவன் தலைவியைப் பிரிந்து இருப்பது வருத்தமளிப்பதாகப் பாடலில் பதிவு செய்யப்படுகிறது.

தலைவன் மேல் தலைவி ஊடலில் இருந்தாள். காரணம் தலைவன் தலைவியை விட்டு பிரிந்து சென்றுவிட்டான். தன் வருத்தம் நீங்க வேண்டும் என்று தலைவி கருதுகிறாள். ஆனால் தலைவனுக்கு அது புரியவில்லை.தலைவியின் மிகுதியான கோபத்திற்கு உள்ளாகிறான் தலைவன். தலைவன் தன்னுடன் சேரும்போது தான் தன் சினம் தணியும் என தலைவி கூறுகிறாள்.

இதில் தலைவனுடன் சேரவேண்டும் எனற ஆவல் வெளிப்படுகிறது. இச்செயல் விரைவில் நடக்க வேண்டும் என மனம் போராடுகிறது. இது தலைவியின் உளப்போராட்டம் எனும் உளச்செயல்பாடாகும்.

தலைவன்மீது ஏற்பட்ட காதலால் தலைவியின் மேனி பசலை பூத்து மெலிந்தது. அன்பு கொண்ட அன்னை தலைவியின் உடல் வேறுபாட்டைக் களைய, முற்படுகிறாள்.

**முருகு என மொழியும் ஆயின்**

**கெழுதகை கொல் – இவள் அணங்கியோற்கே (ஐங்.245)**

என்று கருதிய செவிலி வெறியாட வேலனை வரவழைத்தாள். தலைவி நோய்க்கு காரணம் ‘முருகன்’ என்று வேலன் கூறினான். ஆனால் இவளை மெலியச் செய்தவன் ‘தலைவன்’ ஆகவே வேலன் சொன்னது

பொருத்தமாகாது. ஏனெனில் தலைவியின் பசலைக்குக் காரணம் முழுவதும் தலைவன்தான். அவனால் மட்டும்தான் அந்நோயைத் தீர்க்க முடியும். அன்னை வெறியாடல் நிகழ்த்திய போது தலைவி தன்னுள்ளே போராடுகின்றாள். அன்னையின் வெறியாடலை ஏற்க முடியாமலும் தன் காதலை வெளியில் கூற முடியாமலும் மனம் போராடுகிறது. இது தலைவியின் மனப்போராட்டத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

தலைவி தன் மனம் மற்றும் உடல் வருத்தத்திற்கான காரணத்தை அன்னையிடம் கூறலாமா? வேண்டாமா? என மனதில் போராடி வருந்துகின்றாள். வேலன் பொய்யுரை கூறுகிறான். நம் தலைவன் தன்னிடம் கொண்டுள்ள உறவு வேலனுக்குத் தெரியாது. ஆனால் இதனை அன்னை நம்புகிறாள் இந்த நிலைகளில் தலைவியின் மனம் போராடுகிறது. தலைவியின் கூற்று வெளிப்பாடுகளில் மனப்போராட்டம் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

### 3.10.9. இயல்புகளை ஏற்றுக் கொள்ளுதல்

மனிதனின் வாழ்க்கை இன்பமும் துன்பமும் நிறைந்து, இரவு, பகல் போல் மாறி வருவதாகும். இன்பத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வது போல துன்பத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை சிறப்பாக அமையும். துன்பம் வரும்போது சோர்வடைதல் கூடாது. துன்பம் இல்லாத வாழ்க்கை, வாழக்கையே அல்ல என்று கூறுமளவிற்கு மனித மனம் பக்குவப்பட வேண்டும்.

துன்பம் ஏற்படும்போது அந்த துன்பத்தை எப்படி இன்பமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லா சூழலையும் ஏற்றுக் கொள்ளுதலே சிறந்த வாழ்க்கையாகும். எந்த ஒரு பொருளும் உடனே கிடைத்தால் அது நிலையான மகிழ்ச்சி அல்ல. கடின உழைப்பின் பயனாக கிடைக்கும் பொருளே நிலையான மகிழ்ச்சியைத் தரும். ஒரு பொருள் கிடைக்க கடின முயற்சி, உழைப்பு தேவை. அந்த பொருளுக்காக கடினப்பட கடினப்படத்தான் அந்த பொருளின் மேல் பற்று அதிகமாகும். அதுபோலத்தான் தலைவியும் தலைவன் கிடைப்பதற்காக பல இன்னல் அடைகிறாள். மனம் வருந்துகிறாள். தலைவனோடு முன்பு மகிழ்ச்சியாக இருந்ததைப் பிரிவின்போது நினைத்துப் பார்க்கிறாள்.

“நாம் கற்றவைகளையோ, அனுபவித்து வளர்ந்தவைகளையோ தாம் நம்மால் நினைவில் வைத்துக்கொள்ள முடியும். ஆகையால் அனுபவம் அல்லது கற்றல் நினைவின் முதற்பகுதியாக அமைகிறது. நமக்கு அவை மீண்டும் தேவைப்படும் வரை கற்ற அல்லது அனுபவித்து உணர்ந்தவை மனத்தில்

இருத்தி வைக்கப்படும். இவ்வாறு அமையும் நினைவின் பகுதியை மனத்திருத்தல் (Retention) எனலாம். இப்படி மனத்தில் இருப்பனவற்றை நாம் நினைவூட்டிக் கொள்கிறோம். இந்நினைவூட்டுதல் மீட்டுக்கொணர்தல் (Re-call) அல்லது மீட்டு அறிதல் (Recognition) என இருவகையாக அமைகிறது."[52]

தேவர் உலகம் துன்பமில்லாது இன்பமே உடையதாகக் நம்பப்படும். தலைவி, தலைவனோடு கூடி வாழும் இல்லற வாழ்க்கை இன்பமும் துன்பமும் ஒருங்கே உடையது. இவ்வாழ்க்கையில் தலைவனோடு, இன்பத்தில் இன்பம் நுகர்தலே அல்லாமல் துன்பத்திலும் பங்கேற்பவளாகத் தலைவி விளங்குகிறாள். ஆனால் தேவர் உலகத்தில் துன்பம் இல்லாமையால், இன்பத்தில் மட்டும் கூடி உறையும் நிலை ஏற்படும். தலைவனோடு கூடி வாழும் வாழ்க்கை, அவன் பிரிவினும், அவன் நினைவினால் வாழ்ந்து கொண்டிருப்பதால் துன்பமாயினும் இன்பமாகவே உள்ளது.

**இனியன் ஆகலின் இனத்தின் இயன்ற**

**இன்னா மையினும் இனிதோ**

**இனிது எனப் படூஉம் புத்தேள் நாடே (குறு.288)**

இதில் தலைவி, வாழ்க்கையின் தன்மைகளை உணர்ந்து செயல்படுபவளாய் கூறப்பட்டுள்ளது. இன்பத்தில் பங்கேற்பது மட்டும் வாழ்க்கை அல்ல துன்பத்திலும் பங்கேற்க வேண்டும் என்று பண்பட்ட உள்ளமுடையவளாய் தலைவி இருப்பதை மேற்கண்ட கூற்று வெளிப்படுத்துகிறது. வாழ்வின் தன்மைகளை ஏற்றுக் கொள்ளும் தலைவியின் சிந்தனைகள் சிறப்பிற்குரியதாகும்.

### 3.10.10. பண்பு வெளிப்படல்

தலைவனிடம் உள்ள நற்பண்புகளைத் தலைவி தோழியிடம் தக்க தருணத்தில் எடுத்து கூறுகிறாள். தலைவன் வரைவிடை வைத்து பொருள் காரணமாகப் பிரிகிறான். அந்தப் பிரிவை தன்னால் தாங்கிக் கொள்ள முடியாது என நினைத்த தோழியிடம் தலைவி கூறுகிறாள், களவு ஒழுக்கத்தின் தன்மை இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

**நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்**

**என்றும் என்தோள் பிரிபு அறியலரே**

**தாமரைத் தன் தாது ஊதி மீமிசைச்**

**சாந்தில் தொடுத்த தீம் தேன் போல,**

**புரைய மன்ற, புரையோர் கேண்மை**

**நீர் இன்று அமையா உலகம் போலத்**

**தம் இன்று அமையா நம் நயந்தருளி**

**நறு நுதல் பசத்தல் அஞ்சிச்**

**சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே (நற்.1)**

என்ற பாடலில் தோழி நம் காதலர் தவறாத வாய்மையுடையவர் அதாவது சொன்ன சொல் மாறாதவர். நெடிதாக தோன்றும் இனிமையுடைவர். எப்போதும் என் தோள்களைப் பிரிதல் என்பதை அறியாதவர். அத்தகைய சிறந்தவருடைய நட்பு, தேனீ சந்தனமரத்தின் உச்சியில் கொண்டு சென்று வைத்த தேனைப் போல உறுதியாக உயர்ந்தது. தண்ணீர் இல்லாமல் இவ்வுலகம் அமையாது. அதுபோல அவர் இல்லாமல் நாம் இல்லை நம்மீது விருப்பம் கொண்டவர் அவர். அவர் பிரிந்தால் நம் நெற்றியில் பசலை படரும் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

இதில் தாமரைத்தாது என்பது தலைவன் உள்ளம். சந்தனத்தாது தலைவியுள்ளம். சந்தனமரத்தின் இனிய தேனடை வைத்ததுபோலத் தலைவன் தலைவியிடம் அன்பு வைத்தான். சொன்ன சொல்லிலிருந்து மாறி பேசுகிற தன்மை இல்லாதவன் தலைவன் என்று கூறுவதிலிருந்து அவனுடன் பழகிய நாட்களில் எந்த சூழலிலும் மாறாமல் ஒரு நிலையில் நின்று, சொன்ன சொல்லை காப்பற்றியவன் தலைவன் என்பது தெரிகிறது. தலைவன் தலைவி இருவரின் காதல் உள்ளம் ஒன்றானதை 'தேனீ' என்று குறியீடாக கபிலர் கூறியுள்ளார்.

ஒரு மனிதனுக்கு முக்கியமானவை உணவு, உடை, உறையுள். இம்மூன்றும் இல்லையெனில் மனிதன் உயிருடன் வாழ முடியாது. அதில் முதலாவதாக உள்ள உணவில் நீர் அவசியம். எந்த ஒரு உயிரும் நீர் அருந்தாமல் உயிர் வாழ முடியாது. அத்தகைய மனிதனின் அடிப்படைத் தேவையான நீரை தலைவனுக்கு உவமையாகக் கூறியுள்ளார்.

இதனோடு ஒத்த செய்தி கலித்தொகையிலும் கூறப்பட்டுள்ளது

**பொய்த்தற்கு உரியனோ? பொய்த்தற்கு உரியனோ?**

**அஞ்சல் ஓம்பு என்றானுப் பொய்த்தற்கு உரியனோ?**

**குன்று அகல் நல்நாடன் வாய்மையில் பொய்தோன்றன்**

**திங்களுள் தீ தோன்றியற்று (குறி.கலி.5)**

என்ற பாடலில் 'மலை நாடனாகிய தலைவன் கூறிய மெய்யிலே பொய் தோன்றுமாயின் அது, திங்களிடத்தே தீத்தோன்றிய தன்மையதாகும்' என்று

தோழி தலைவியிடத்து தலைவனின் தன்மையை எடுத்துக் கூறுகிறாள். இதிலிருந்து தலைவனின் உயர்ந்த பண்பு வெளிப்படுகிறது. குறிஞ்சித் தலைவன் எந்தச் சூழலிலும் உண்மை பேசுபவனாக, பொய்யே பேசாதவனாகக் காட்டப் பட்டிருப்பதும் தலைவனை மேலும் நன்னெறிப்படுத்தும் விதமாகவே அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.10.11. தலைவனை உயர்வுபடுத்தல்

குறிஞ்சிப் பாட்டில் கபிலர் தலைவனின் தோற்றத்தை வருணனை செய்துள்ளார். தலைவனின் தலை, காது, மார்பு, கை, இடை, கால் ஆகிய உறுப்புகளில் அணிந்துள்ள அணிகள் நிரல்பட குறிப்பிடப்பட்டுள்ளன.

**எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்**
**தண் நறுத் தகரம் கமழ மண்ணி**
**ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா**
**காழ் அகில் அம்புகை கொளீஇ, யாழ்இசை**
**அணிமிகு வலி மிஞறு ஆர்ப்ப தேம் கலந்து**
**மணிநிறம் கொண்ட மாஇருங் குறிஞ்சியின்**
**மலையவும், நிலத்தவும், கிணையவும், சுனையவும்**
**வண்ண வண்ணத்த மலர் ஆய்வு விரைஇய**
**தாண்நறுந் தொடையல், வெண் போழ்க்கண்ணி,**
**நலம் பெறு சென்னி, நாம் அற மிலைச்சி,**
**பைங்காற் பித்திகத்து ஆய் இதழ் அலரி**
**அம் தொடை ஒருகாழ் வளைஇ, செந்தீ**
**ஒண்பூம் பிண்டி ஒருகாது செரீஇ**
**அம்தளிக்க குவவு மொய்ம்பு அலைப்பசாந்து அருந்தி**
**மைந்து இறை கொண்ட, மலர்ந்து ஏந்து அகலத்து**

(குறிஞ்.பா.107-127)

என்ற பாடலில் பலகால் எண்ணெய் பூசியும், மயிர்ச் சாந்தணிந்தும், ஈரம் புலர விரலால் விடுத்தும், அகில் புகையூட்டியும், அகிலின் நெய் பூசியும் பாதுகாத்தமையால், தலைவனின் கூந்தல் நீலமணியின் நிறத்திற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. தலைமயிரினைப் பேணும் முறைமையும் கபிலர் உணர்த்தியுள்ளார். கருமையும், நெடுமையும், கடை குழற்சியும் (சுருண்டு இருத்தல்) அமையப் பெறுதல் மயிரின் இலக்கணமாகும்.

தலைவியும் தோழியும் தலைமகனின் காட்சியில் அவனுடைய மயிரின் எழில் நலத்தையே முதலில் கண்டு வியந்தனர். இருவரும் பல இடங்களில் பூத்த பல வண்ண மலர்களைக் கொண்டு மாலைகளாக தொடுத்தணிந்தமை போல தலைவனும் பல இடத்தில் பூத்த மலர்களால் ஆகிய மாலைகளை அணிந்திருந்தான். தலைவனின் அழகும் ஆற்றலும் 'முருக பெருமானோ' என்று அச்சத்தை உண்டாக்கும்படி தலைவன் தோற்றம் அமைதிருந்தது. தலைவன் தொடுத்த மாலையைக் கழுத்தில் அணிந்து கண்ணியைத் தலையில் செருகியிருந்தான். அசோகின் தளிரை ஒரு காதில் செருகியிருந்தான். மரபு சார்ந்த அணிகலன்களையும், மலர் மாலையையும் மார்பில் சூடி தலைவன் வந்தான். விலங்குகளை எய்துவதற்கு ஏதுவான வில்லினையும், நாணினையும் கட்டியிருந்தான். இடையில் ஆடை நெகிழாது நிற்க கச்சினை இறுக்கிக் கட்டியிருந்தான். வீரக்கழல் அணிந்திருந்தான். அது பொன்னால் செய்யப்பட்ட அணிகலன். இது ஏனைய அணிகலன்களைவிட ஆடவனுக்குப் பெருமை சேர்ப்பதாய் இருந்தது.

இக்கூற்றில் சங்ககாலக் குறிஞ்சி நிலத் தலைவன் தோற்றத்தை நம் கண்முன்னே கபிலர் அழகாக காட்சிப்படுத்தியுள்ளார். முருகனோடு ஒப்பிட்டுக் கூறும்போது தலைவனைத் தெய்வத்திற்கு இணையாக உயர்த்திக் காட்டியுள்ளார்.

முருகன் தன்னைச் சார்ந்து நம்பிக்கையோடு வழிபடுபவர்களை கைவிடுவதில்லை என்பது நம்பிக்கை. அதேபோல் தலைவனும் தன்னைச் சார்ந்த தலைவியை கைவிடமாட்டான் என்பதும் உள்ளீடான பொருளில் கபிலர் கூறியிருப்பதாக பொருள் எடுத்துக் கொள்ளாலாம். இதிலிருந்து தலைவன் மிகுந்த நற்பண்பு உடையவன் என்பது தெரிகிறது.

### 3.10.12. தலைவனின் நம்பகத்தன்மை வெளிப்படல்

சங்க இலக்கியத்தில் பண்டைய தமிழர்களின் இரண்டு கண்களாக காதலும், வீரமும் பதிவு செய்யப்பட்டுள்ளன. வீரத்தோடும், மானத்தோடும் பண்டையத் தமிழர்கள் வாழ்ந்தனர். இவ்வாறே குறிஞ்சி நில மக்களும் வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத் தலைவன் விலங்குகளை வேட்டையாட அம்பு, நாண், கையில் வைத்திருந்தான். அதைக் கொண்டு நாய்களை வேட்டையாடியும், யானையின் மதத்தை அடக்கியும் தன் வீரத்தை வெளிப்படுத்தினான். இதில் தலைவன் நாய்களை அடக்கிய விதம் பற்றி கூறப்பட்டுள்ளது.

**கல்லென் கற்றக் கடுங்குரல் அவித்துளம்**

**சொல்லற் பாணி நின்றன னாக (குறி.பா.150)**

கல் என்ற ஓசை உண்டாகக் குரைக்கும் வேட்டை நாய்களின், கடிய குரல்களை அடித்து மாற்றினான் தலைவன் என்பதில் தலைவனின் செயல்பாட்டில் தன்மையை விளங்கலாம்.

அடுத்து தலைவன் யானையை அடக்கிய விதமும் கூறப்பட்டுள்ளது. யானை சினத்துடன் புனத்திற்கு வருவதைக் கண்டு மகளிர் நடுங்கிய போது தலைவன் யானையின் மதத்தினை அடக்கியமை இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

**. . . . . . . . . வார்கோல்**

**உடு உறும் பகழி வாங்கி, கடுவிசை**

**அண்ணல் யானை அணிமுகத்து ஒருத்தலின்**

**புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து இழிதர**

**புள்ளி வரிநுதல் சிதைய நில்லாது**

**அயர்ந்து புறங் கொடுத்த பின்னர், நெடுவேள்**

**அணங்குறு மகளிர் ஆடுகளம் கடுப்ப (குறி.பா.169-175)**

நெடிய கோலையுடைய, விரைவாக பாய்ந்து செல்லக்கூடிய அம்பை, நன்றாக வளைத்து யானையின் அழகிய முகத்தில் எய்தினான் தலைவன். அவ்யானையின் புள்ளினையும், புகரினையும் உடைய மத்தகம் அழகழியுமாறு அம்பு பட்டு உருவிய புண்களால் குருதி கொட்டியது. அதன் முகம் முழுதும் குருதி பரவி காணப்பட்டது. நெடுவேளால் அணங்குற்ற மகளிர்க்குத் தாயார் எடுக்கும் வெறியாடு களத்தில் மறியறுத்துப் பலியிடும்போது, மறியின் உடலிலிருந்து குருதி பொங்கி எழுதல் போல யானையின் முகத்திலிருந்து வந்த குருதியோடு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. அவ்யானை தன்னை மறந்து, அங்கு நிற்காமல் முதுகிட்டுச் சென்றது. களிற்றின் மதம் அடக்கித் தலைவன் தலைவியைத் துன்பத்திலிருந்து காத்து தன் வீரத்தை நிலைநாட்டினான். “மென்மை உடலும் வன்மை மனமும் கொண்ட பெண்மைக்குச் சமூகத்தில் ஆண் அரணாதல் வேண்டும். அவளுடைய உடைமைக் காதல், கற்புக் காதல் தீங்கு நேராத நிலை எச் சமூகத்தில் நிலவுகிறதோ அதுவே உரிமையும் சான்றாண்மையும் உடையதாகும்.”[53]

### 3.10.13. உள்ள உறுதி வெளிப்படல்

எந்த சூழலிலும் தலைவி உள்ள உறுதி உடையவளாக விளக்குகிறாள். மேனியில் மாறுபாடு தோன்றினாலும் தலைவி உள்ளத்தில் நம்பிக்கை கொண்டவளாக இருக்கிறாள். தலைவன் தன்னை விரைவில் வந்து மணம் முடிப்பான் என்று தலைவி எண்ணம் கொள்கிறாள். தன் மேனியில் பசலை படர்ந்ததை தலைவன் கண்டால் வருத்தப்படுவான் என நினைக்கிறாள். ஏனெனில் தன்னால்தான் இந்நிலை தலைவிக்கு ஏற்பட்டது என துயருறுவான். ஆகவே எனது உள்ளம் உறுதியாகவே உள்ளது என்று தலைவி கூறுகிறாள் தோழியிடம்.

**நயந்தனன் கொண்ட கேண்மை**

**பயந்தக் காலும் பயப்பு ஒல்லாதே (குறு.264)**

என்ற பாடலில் தலைவிக்கு தலைவன்மேல் உள்ள பற்றும் நமபிக்கையும் புலப்படுகின்றன. தலைவிக்கு பசலை படர்ந்ததற்கு வருந்துவான் என்பதன் மூலம் தலைவனும் சிறந்த பண்புகள் கொண்டவனாகவே காட்டப்படுகிறான். தலைவி தலைவன் மீது கொண்ட நம்பிக்கையினை தலைவன் அறிகின்ற பொழுது தலைவியின் மனவோட்டத்திற்கு ஏற்பச் செயல்படுவான் என்பது திண்ணம். எனவே மேற்கண்ட தலைவியின் கூற்று தலைவனை தன்வயப்படுத்தும் சொற்களாகவே அமைகின்றன.

### 3.10.14. மகிழ்ச்சி வெளிப்படல்

தலைவியும் தோழியும் குறிஞ்சி நிலத்தில் மகிழ்ச்சியாக, இயற்கையோடு இயைந்து பொழுதைப் போக்கினர். மலையில் பூத்த பூக்களை எல்லாம் பறித்து பாறையில் குவித்து வைத்து, தலையில் சூடி தங்களை அலங்கரித்துக் கொண்டனர். குறிஞ்சி நிலத்தில் ஆண்கள் மற்றும் பெண்களும் பல்வேறு திறமை உடையவர்களாக இருந்தார்கள். பெண்கள் பல்வேறுபட்ட 99 வகையான மலர்களைப் பறித்து குவித்து, அதனை கோதை, அலங்கல், கண்ணி, பிணையல், தொடையல், தார், தாமம், மாலை, சூட்டு, வலயம் எனப் பலவாறு தொடுத்தனர். தொடுத்த பூக்களைத் தலையில் அழகுபெறச் சூட்டிக் கொண்டனர். அது மட்டுமல்லாது தழையாடை புனைந்து அல்குலுக்கு சூட்டிக் கொண்டனர். நெருப்பு போல காட்சியளிக்கும் அழகிய தளிர்களை உடைய அசோக மரத்தின் மகரந்தத் துகள் சிந்தும் குளிர்ந்த நிழலில் அமர்ந்து மகிழ்ச்சியாக பகல்பொழுதைப் போக்கினர்.

**பைவிரி அல்குல் கொய்தழை தைஇ**

**பல்வேறு உருவின் வனப்பு அமைகோதை, எம்**

**மெல்இடு முச்சி, கவின் பெறக்கட்டி**

**எரி அவிர் உருவின் அம்குழைச் செயலைத்**

**தாதுபடு தண்நிழல் இருந்தனம் ஆக (குறி.பா.102-106)**

என்ற பாடலில் தலைவியும் தோழியும் சுனையில் நீராடி, பின்பு மலர்களைத் தொடுத்து தலையில் அணிந்து இருந்தனர் என்று கூறுவதிலிருந்து சுதந்திரமாக மகளிர் எல்லா இடங்களுக்கும் செல்ல பெரியோர்கள் அனுமதித்து இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. சிறுவர்கள் போல பெண்கள் மகிழ்ச்சியாக பொழுது போக்குவதற்கான குறிஞ்சி நிலத்தின் சூழல் அமைந்திருக்கிறது என்பதும் தெரிகிறது.

மேலும் தலைவனைக் காண்பதற்கு முன்பு வரையில் தலைவியும் தோழியும் எவ்வித கவலையும் இன்றி மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்ததையும் மேற்கண்ட கூற்று புலப்படுத்துகிறது. தலைவனைச் சந்தித்த பிறகு தான் எல்லையில்லா இன்பமும், துன்பமும் மாறி மாறி வந்ததாகப் பதிவு செய்யப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.10.15. உயர்ந்த தன்மை வெளிப்படல்

பண்டைய தமிழர்கள் உயர்ந்த பண்பு உடையவர்களாக இருந்தனர் என்பதற்கு தலைவியின் செயல்பாட்டினைக் கொண்டு கூறலாம். எந்தச் சூழலிலும் தலைவி பிறருக்கு துன்பம் தருவதாக நடந்து கொள்வதில்லை. தலைவன் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சியாக நினைத்து வாழ்கின்றாள் தலைவி. தவறு தன்மேல்தான் உள்ளது தலைவனிடம் தவறில்லை என்று எண்ணுகிறாள். தன்மேல் தவறு இருந்தாலும் சிறிதும் தயக்கம் இல்லாமல் பிறர்மேல் குற்றம் சுமத்தும் இயல்பு மனிதரிடம் காணப்படும் சூழலில் குறிஞ்சி நிலத் தலைவி முற்றிலும் வேறுபட்டவளாக, நற்பண்பு உடையவளாக, பெருந்தன்மை உடையவளாக நடந்து கொள்கிறாள்.

**கொல்லா நிலத்தது நோன்மை பிறர்தீமை**

**சொல்லா நலத்தது சால்பு[54] (குறள்-984)**

என்ற குறளில் பிறர் செய்த தீமையைப் பெரிது படுத்திக் காட்டிக் குறை கூறாத நற்பண்பை உடையது சான்றாண்மை என்பார் வள்ளுவர். வள்ளுவர் குறிப்பிடும் மாண்பினைக் குறிஞ்சித் தலைவியிடம் காணலாம்.

‘தலைவன் மனம் கல்லைக் காட்டிலும் வலிமை உடையது’ என்று தலைவனை இகழ்ந்து கூறாமல், தலைவன் செய்கின்ற தவறுக்கு தானே காரணம் என்று தன்னையே குற்றம் உடையவளாக்கி தோழியிடம் கூறும் பாங்கால் தலைவி நற்பண்பு உடைய பெண்ணாகத் திகழ்கிறாள்.

**கல்லினும் வலியன் தோழி**

**வலியன் என்னாது மெலியும் என் நெஞ்சே (குறு.187)**

கல்லைவிட வலிமை உடையவன், ஆனால் தலைவனை அத்தகைய வலிமையுடையவனாகக் கருதாமல் மென்மையானவனாகவே கருதி உள்ளம் மெலிகிறாள். ஏனெனில் தலைவன் வரைவு காரணமாகத் தானேப் பிரிந்து செல்கிறான். தன்னை திருமணம் செய்து கொள்ளத்தானே அவ்வாறு செய்கின்றான் என தலைவன் செய்யும் செயல்களையும் தலைவி நியாயப்படுத்துகிறாள். இதிலிருந்து அவளின் பெருந்தன்மை பண்பு வெளிப்படுகிறது. தலைவி, தலைவனைச் சந்திப்பதற்கு முன்பு சிறுபிள்ளைபோல் விளையாடி பொழுதைக் கழித்தவள். ஆனால், ஒரு தலைவன் தனது வாழ்க்கையில் வந்தபின்பு பக்குவப்பட்டவளாக மாறி பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் இல்லற மகளிராக மதிக்கப்படுகிறாள்.

ஒருவர் பிறரைப் பாராட்டுவது மிகச் சிறந்த பண்பாகும். அத்தகைய பாராட்டிற்கு உரியவளாகத் தலைவி விளங்குகிறாள். தலைவியை அவ்வூர் மகளிர் ‘நல்லவள்’ என்று பாராட்டுகின்றனர். இதனை தலைவி தோழியிடம் கூறுவது போல சிறைப்புறமாக நின்ற தலைமகனுக்குக் கூறுகிறாள்.

**பெயர்வுழிப் பெயர்வுழித் தவிராது நோக்கி**

**நல்லள் நல்லள் என்ப**

**தீயேன் தில்ல, மலை கிழவோற்கே? (ஐங்.204)**

என்ற பாடலில் ‘பலரும் கூடி நின்று நாம் இயங்கும் இடமெல்லாம் இடைவிடாமல் என்னையே நோக்கி ‘இவள் நல்லவள், இவள் நல்லவள்’ என்று பாராட்டுகின்றனர். ஆனால், நம் காதலனாகிய தலைவனுக்கு மட்டும் யான் தீயவளாகினேன். இதற்கு காரணம் என்ன? என்னைத் தலைவன் வெறுக்குமாறு யான் செய்த பிழை என்ன?’ என்று தலைவி தோழியிடம் வினவுகிறாள்.

‘தலைவன் திருமணத்திற்குக் காலதாமதம் செய்கின்றான். அவன் மேல்தான் குற்றம் உள்ளது. ஆனால் தலைவி தன் மேல் தலைவனுக்கு ஏதேனும் வருத்தம் இருக்குமோ? அதனால்தான் காலதாமதம் செய்கின்றானோ? அவனுக்கு நான் நல்ல பெண்ணாக இல்லையோ’ என்ற பலவித ஐயம் தலைவி

மனதில் எழுகிறது. இதனால் தவறுகள் தன்னுடையது தான் என தலைவி எண்ணுகிறாள். இதன் மூலம் தலைவியின் உயர்ந்த பண்பு வெளிப்படுகிறது.

பெண்கள் தனக்கு உரிமை உடைய ஆண்மகன் பிற பெண்களுடன் பழகுவதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் ஐங்குறுநூறில் வரும் தலைவியின் முழு சம்மதத்துடன் இரண்டாவது திருமணம் நடக்கிறது. தலைவனை விடவும் இரண்டாவது மனைவியை உயர்வாகக் கருதுகிறாள் தலைவி. அவளுக்கு எந்தவித இடையூறும் தலைவி செய்யவில்லை. இச்செயல்பாடு மூலம் தலைவியின் உயர்ந்த மனப்பான்மை வெளிப்படுகிறது. தலைவனுக்காக எதையும் செய்யக்கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் உடையவளாக தலைவி படைக்கப்பட்டுள்ளாள்.

**நின்னினும் சிறந்தனள், எமக்கே – நீ நயந்து**
**நன் மனை அடுங்கடி அயர**
**எம் நலம் சிறப்ப, யாம் இனிப் பெற்றோளே (ஐங்.292)**

தலைவனின் இரண்டாவது மனைவியை ஏற்றுக் கொள்ளுதற்கு காரணம், அவள் பெறப்போகும் மகவும் தம் மகவாகவே கருதலாம் என்பது நோக்கமாக இருக்கலாம். அல்லது தலைவன் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சியாக தலைவி நினைத்திருக்கலாம். மேலும், தலைவனின் விருப்பத்திற்கு தலைவி கொடுக்கக்கூடிய முக்கியத்துவமும் இதன்வழி வெளிப்படுகிறது.

### 3.10.16. மன இறுக்கம் வெளிப்படுதல் (Stress)

"உள்ள முறிவு எவ்வகைத் தீர்வுமின்றி நெடுங்காலம் தொடருமானால், உணர்வியல் சார்ந்த முற்றிய விறைப்பு நிலை (Tension) தோன்றும், அந்த நிலையை உள்ள இறுக்கம் (Stress)"[55]என்பர். இவ்வாறான சூழல் அகவாழ்விலும் நிகழ்வதாக அமைகிறது.

தலைவன் களவின்பத்தையே விரும்பி நாள்தோறும் தலைவியைச் சந்தித்து மீண்டான். ஒரு நாள் சிறைப்புறமாக நின்ற தலைவன் கேட்குமாறு தலைவி தோழியிடம் தன் நிலையை எடுத்துரைத்தாள்.

**சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்**
**குரங்கின் வன்பறழ் பாய்ந்தென, இலஞ்சி**
**மீன் எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்**
**உற்றோர் மறவா நோய் தந்து**
**கண்டோர் தண்டா நலம் கொண்டனனே! (ஐங்.278)**

என்ற பாடலில் தலைவனது மலையில் உள்ள மூங்கில் மரக்கிளையில் குரங்குக் குட்டி பாய்ந்து குதிக்கின்றது. அக்காட்சி குளத்தில் மீன்பிடிக்கும் தூண்டில் கோல் சட்டென நிமிர்வது போல உள்ளது. அன்பு காலத்தில் வளைந்து, வளைந்து, வந்து நம்முடன் பழகிய தலைவன் அன்பற்ற காலத்தில் பணிவின்றி செயல்படுகிறான். களவு வாழ்க்கையில் அன்பு உடையவனாக நடந்து கொண்டவன். திருமணம் செய்து கொள்ள எடுத்துக் கூறும்போது அன்பற்றவனாக நடந்து கொள்கிறான்.

தலைவனின் செயல்கள் தலைவிக்கு அச்சத்தினைத் தருகின்றன. அதனால் அவள் மன விறைப்பு நிலைக்கு ஆளாகின்றாள். தலைவனின் செயல் நியாயம் இல்லாதது. அவனுக்கு அன்புக்குரியவர்களை இப்படி துன்பம் செய்கிறானே இது சரியான செயல் அல்ல என்கிறாள்.

'கவலையில் உள்ள விறைப்பு நிலை, உள்ள விறைப்பு நிலையால் கவலை என ஒன்று காரணமாகவும் மற்றொன்று விளைவாகவும் மாறி மாறி அமைகின்றது.'[56] கவலையில் தலைவியின் மனம் இறுகி காணப்படும் தன்மை உடையதாகக் கூறப்படுகிறது. மிகுதியான அன்பு வைத்துள்ளதால் தலைவனின் செயல்பாடு தலைவிக்கு மன இறுக்கத்தைத் தருகிறது.

இதில் தலைவியின் மன வருத்தம் கூறப்படுகிறது. அவற்றோடு இக்கூற்று நிகழ்வதற்கானச் சூழலைச் எண்ணிப் பார்க்க வேண்டும். தலைவி சிறைப்புறமாக நின்ற தலைவன் கேட்கும் படி தோழிக்கு உரைத்த செய்தியே மேற்கண்ட கூற்றாகும். தலைவியின் வருத்தத்தை, அவள் கூறக் கேட்கும் தலைவனுக்கு தன் செயல்பாடுகளும் அதன் விளைவுகளும் தெரியவரும். மனம் படைத்த ஒவ்வொரு மனிதனும் பிறருக்கு தன்னால் துன்பம் நிகழ்வதை விரும்ப மாட்டார்கள். தலைவனும் இக்கூற்றிக்குப் பிறகு அவ்வாறே கருதிடவேண்டும். அதன் பிறகு தலைவியின் எண்ணத்திற்கேற்ப தன் செயல்பாடுகளை மாற்றிக் கொள்வான் என்று நம்பலாம். எனவே மேற்கண்ட கூற்று உளவியல் அடிப்படையில் செயல்பட்டு தலைவனின் மன மாற்றத்திற்கு உதவும் என்பது திண்ணம்.

### 3.10.17. உறுதிப்பாடு வெளிப்படல்

**ஆற்று ஊறு அஞ்சினும் அவன் வரைவு மறுப்பினும்**
**வேற்றுவரைவு நேரினும் காப்புக்கை மிகினும்**
**ஆற்றுறத் தோன்றும் அறத்தோடு நிலையே[57]** (அகப்.பொ-47)

என்பதன் வழி தலைவி அறத்தோடு நிற்குமிடங்கள் சுட்டப்படும்.

*தலைவி தோழியிடம் தன் காதலைக் கூறி அறத்தோடு நிற்கின்றாள். சில நேரங்களில் தனக்கு தலைவனோடு திருமணம் நடக்குமா? நடக்காதா? என்ற அச்ச உணர்வு ஏற்படும்போது, மயங்கி உடல் மெலிந்து சில வார்த்தைகளைத் தோழியிடம் கூறி அறத்தொடு நிற்கிறாள் தலைவி.*

**இருவேம் ஆய்ந்த மன்றல் இது என**

**நலம் அறிவுறாலின் பழியும் உண்டோ?**

**ஆற்றின் வாரார் ஆயினும், ஆற்ற**

**ஏனை உலகத்தும் இயைபவதால் நமக்கு என**

**மான் அமர் நோக்கம் கலங்கிக் கையற்று**

**ஆனாச் சிறுமையள் இவளும் தேம்பும் (குறி.பா.21-26)**

*பெற்றோர் தன் நிலை உணர்ந்து தலைவனுக்குத் தன்னை மணம் முடிக்க உடன்படவில்லை என்றாலும் அவனை, மறுபிறப்பிலாவது கூடுதல் இயலும். என்ற உறுதி தலைவியின் உள்ளத்தில் காணப்பட்டது. பெற்றோர்கள் உடன்படுவர் என்ற நம்பிக்கை இருப்பினும், அவர்கள் ஒரு வேளை மறுப்பார்களோ என்ற அச்சமும் தலைவியின் உள்ளத்தில் தோன்றியது. இதனால் தலைவி மருண்டு, மயங்கி செய்வதறியாது, உடல் மெலிந்து காணப்படுகிறாள். தலைவி தாமே தம் காதலை கூறும் காலம் உள என உரைத்தமையான், தலைவி அறத்தொடு நிற்கின்றாள். 'ஏனை உலகத்தும் இயைவதால் நமக்கு' என்ற தலைவியின் கூற்றைக் கருத்தில் கொண்டு தோழி, செவிலியிடம் அறத்தொடு நிற்கின்றாள்.*

*இதில் தலைவியின் அறத்தொடு நிலைமட்டுமல்லாது, தலைவி தலைவன் மேல் வைத்துள்ள மிகுதியான அன்பு வெளிப்படுகிறது. மறுபிறப்பிலாவது கூடுதல் நடக்கும் என்ற உள்ள உறுதி உடையவளாக இருக்கிறாள். தலைவிக்கு பெற்றோர் மீது நம்பிக்கையும், மரியாதையும் இருக்கிறது. அன்னையை உயர்வாகக் கூறுகிறாள். தன்னுடைய காதல் தெரிந்தும் அன்னை தம்மை கோபிக்காமல் இருப்பதை தலைவி மிகவும் உயர்வாகக் கருதுகிறாள்.*

**அம்ம வாழி! தோழி! அன்னைக்கு**

**உயர்நிலை உலகமும் சிறிதால் அவர்மலை**

**மானைப பெய்த மணங்கமழ் உந்தியொடு**

**காலை வந்த முழுமுதல் காந்தள்**

**மெல்இலை குழைய முயங்கலும்**

**இல்உய்த்து நடுதலும் டிய தோளே!! (குறு.361)**

‘தலைவரது மலையில் மாலைப் பொழுதில் பெய்த மழையில் ஓடிவந்த ஆற்று வெள்ளத்தில், மறுநாள் காலையில் நம் ஊர்க் கரையில் மணமிகுந்த கிழங்குடன் வந்த காந்தட் செடியை அதன் மெல்லிய இலை குழையுமாறு தழுவிக் கொள்ளுதலையும், வீட்டிற்குக் கொண்டு வந்து நட்டு வைப்பதை பார்த்த அன்னை எதுவும் நம்மை கேட்கவில்லை. நம் மகிழ்ச்சியே அன்னையின் மகிழ்ச்சியாகும். நமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செயல்களில் அன்னை எதுவும் கேள்வி கேட்பதில்லை. அதற்கு நம் மீது வைத்துள்ள அன்பு தான் காரணம். எனவே, நாம் விரும்பிய தலைவனை ஏற்றுக் கொள்வதில் எவ்வித தடையும் கிடையாது. தலைவனுடன் கொண்ட நட்பால் தாய் நம்மிடம் எதுவும் கோபப்படாமல் இருப்பதற்கு, கைமாறாகத் தாய்க்கு உயர்ந்த தேவலோகத்தைக் கொடுப்பினும் அது சிறியதாகும்.’

இவ்வாறு கூறுவதிலிருந்து தலைவி மிகுந்த மகிழ்ச்சியில் இருப்பது தெரிகிறது. அன்னையின் சிறப்பை உயர்வாகக் கூறுகிறாள். அன்னை மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் உடையவளாக தலைவி நடந்து கொள்கிறாள்.

‘பிறருக்கெல்லாம் இன்பம் செய்யும் தலைவன் நமக்கு மட்டும் ஏன் துன்பம் செய்கிறான்’ என்று தலைவி தோழியிடம் கேட்டு அறத்தொடு நிற்கிறாள். ‘தலைவன் மலையில் உள்ள மான், வண்டு, குரங்கு, மயில் இவையெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறது. என்னை மட்டும் ஏன் தலைவன் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளாமல், இரவில் கண்ணீர் சிந்த வைக்கிறான். என் உடல் மெலிந்து போய் படுக்கையிலே கிடக்கும்படி செய்துவிட்டானே? எனக்கு மட்டும் ஏன் தலைவன் மேல் இவ்வளவு ஈடுபாடு வந்தது’ என தோழியிடம், தன் வாயால் தலைவன் வேண்டும் என வெளிப்படையாகக் கூறி அறத்தொடு நிற்கிறாள்.

**மலர்தார் மார்பன் நின்போற் கண்டோர்**

**பலர்தில் வாழி தோழி – அவருள்**

**ஆர்இருட் கங்குல் அணையொடு பொருந்தி**

**ஓர்யன் ஆகுது ஏன்கொல்**

**நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே? (அகம்.82)**

தலைவன் மேல் காதல் கொண்ட தலைவி, தன் காதலைத் தானாகவே வெளிப்படையாகத் தோழியிடம் தெரிவிக்கிறாள். இதில் தலைவியின் அறத்தொடு நிற்றல் கூறப்பட்டுள்ளது. தலைவன்மேல் அவள் கொண்டுள்ள அன்பும் தெரிகிறது. இதன் வழி தலைவியின் களவு வாழ்க்கை முற்றுப் பெற்று

கற்பு வாழக்கைக்கு அடித்தளமிடப்படும் வகையிலான கூற்று அமைவதை அறியலாம்.

### 3.10.18. நாணம் வெளிப்படல்

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பண்புகளில் நாணம் பெண்களுக்கே உரிய குணத்தில் ஒன்று. ஒரு தலைவி தலைவன் தொட்டதும் தன் உடம்பில் ஏற்பட்ட மாற்றங்களைத் தன் தோழியிடம் கூறுகிறாள்.

தலைவனும் தானும் தனியாகச் சந்தித்து பேசியபோது, 'இன்னும் என்னைத் திருமணம் செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்துவது தலைவன் பண்புக்கு தகுமோ?' என்று தோழியிடம் தலைவி கேட்டதாகக் கூறுகிறாள். இவ்வாறு கேட்டவுடன் தலைவனுடைய செயல்பாடு விளக்கப்படுகிறது.

'அணிகலன்கள் அணிந்திருந்த கூந்தலில் உள்ள மலரை தன்னுடைய விரலில் சுற்றிக்கொண்டு முகர்ந்து பார்த்து, என் மெல்லிய விரலைக் கையால் பிடித்து என் கண்களை மறைக்கும்படி வைத்துக் கொண்டு கொல்லன் உலைக்களத்தில் உள்ள துருத்திபோல் பெருமூச்சுவிட்டான். எனது மார்பகத்தை இனிமையாகத் தடவி, தொய்யில் என்ற கோலத்தை எழுதிய தனது பெரிய கையால் அன்பிற்குரிய பெண் யானைக்குக் கருணை செய்யும் ஆண் யானைப் போல உடல் முழுதும் தடவினான். என் துன்பம் அச்செயலில் நீங்கியது' என தோழியிடம் நாணத்தோடு தலைவன் தன்னைத் தழுவியதை தலைவி கூறினாள்.

**செறாஅச் செங்கண் புதைய வைத்து**
**பறாஅக் குருகின் உயிர்த்தலும் உயிர்த்தனன்**
**தொய்யில் இளமுலை இனிய தைவந்து**
**தொய்யல் அம் தடக் கையின் வீழ்பிடி அளிக்கும்**
**மையல் யானையின் மருட்டலும் மருட்டினன்**
**அதனால்**
**அல்லல் களைந்தனன் தோழி! நம்நகர்** (கலி.54)

தலைவன் தழுவுவதை தலைவியும் விருப்பமுடன் ஏற்றுக் கொள்கிறாள். இவ்வாறாக தலைவன் தலைவியை அகவாழ்வில் தழுவி இன்புற்ற செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. இதன் வழி தலைவன் தலைவியிடம் கொண்டிருந்த நெருக்கமும் அன்பும் நாணமும் வெளிப்படுகின்றன. தலைவி தலைவனோடு திருமணத்தில் இணைந்து வாழ வேண்டும் என்று எண்ணமும் மேற்கண்ட கூற்றில் வெளிப்படுகிறது.

### 3.10.19. செயல்படத் தூண்டுதல் (Repression)

மனதில் தோன்றும் உணர்வுகளை வெளிக்காட்டாமல் மறைப்பதற்கு அடக்குதல் என்பர். “தொல்லைதரும் உள்துடிப்புகளையும், நினைவுகளையும் திட்டமிட்டு உணர்ந்து கவனத்தின் களத்தினின்று அகற்றுவதை அடக்குதல் என்றும், அவற்றை முயற்சி இன்றி இயல்பாக நனவு நிலையினின்று நீக்கப்படுவதை ஒடுக்குதல்” என்றும் கூறுவர்.[58]

துன்பத்தைப் பொறுத்துத் தாங்கிக் கொள்ள உள்ளம் மேற்கொள்ளும் முயற்சியாக அடக்கி மறைத்தலும் உள்ளது. இதனால் துன்பம் குறையாவிட்டாலும் பிறர் அறியாதவாறு துன்பத்தை மறைத்தலால் தன் மதிப்பு அழிவைத் தடுத்துக் கொள்ள முடியும்.[59]

சில உணர்ச்சிகள் அடக்க அடக்க மிகும். இத்தகைய உணர்ச்சி நிலையில் யாரேனும் வந்து ஆறுதல் சொல்லச் சொல்ல துயரம் பொங்கி எழும். அடியோடு மறந்தலும் சூழல் மாறுதலும் அல்லாமல் துயர உணர்ச்சியை அடக்கி மறைக்க முடியாது. தலைவியின் துயரமான மனநிலை கபிலரின் பாடலில் நன்கு பதிவு செய்யப்படுகிறது.

**சானநாடன் வரூஉம் யானைக்**

**கயிற்றுப் புறத்தன்ன கல்மிசைச் சிறுநெறி**

**மாரிவானம் தலைஇ நீர்வார்ப்பு**

**இட்கு அருங் கண்ண படுகுழி இயலின்**

**இருளிடை மிதிப்புழி நோக்கி அவர்**

**தளர்அடி தாங்கிய சென்றது, இன்றே, (அகம்.128)**

என்ற பாடலில் தலைவிக்குத் தலைவனைக் காண வேண்டும் என்ற காம வேட்கை எழுகின்றது. தலைவி தலைவன் வரும் வழியின் தன்மை குறித்து அஞ்சுகிறாள். காட்டுப்பகுதியில் இருண்ட இரவில் தலைவன் வரும் வழி யானையின் முதுகில் உள்ள கயிற்றுத் தழும்பை ஒத்த ஒற்றையடிப் பாதையில் வருவார். அங்கு மழை பெய்து தண்ணீர் நிறைந்த பகுதி எது? பாதை எது? என்று தெரியாத அளவில் காணப்படும். அதனால் நடுங்கும் கால்களுடன் பார்த்துப் பார்த்து அடியெடுத்து வைப்பார். அவர் வழியில்லாத பகுதியில் கால் வைத்து விடுவாரோ என்று அந்த அடியைத் தாங்கிப் பிடித்துக் கொள்வதற்காக நம் நெஞ்சம் இரவில் வரும்போது தலைவனிடம் சென்றுவிட்டது என தலைவி தன் மனத்தில் உள்ள உணர்ச்சிகளைத் துயரம் தோன்ற சிறைப்புறமாக இருக்கும் தலைவன் கேட்கும் படியாக தோழியிடம் கூறுகிறாள்.

தலைவிக்குத் தலைவன் இரவுக்குறியில் வருவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற உணர்வு மனத்தில் தோன்றி தலைவியின் உளவெளிப்பாட்டை வெளிப்படுகின்றது. தலைவன் படும் துன்பத்தை நினைத்து நினைத்து அதற்கு தீர்வு காண தலைவி மனதில் தோன்றும் எண்ணங்களை அடக்கி வைத்திருக்கிறாள். ஒரு கட்டத்தில் தன் மன உணர்வுகளை வெளிப்படுத்தி 'கற்பு வாழ்க்கை' எனும் நன்நெறிக்குத் தலைவனைத் தூண்டுவதாக மேற்கண்ட தலைவி கூற்று அமைகிறது.

### 3.10.20. இயலாமை வெளிப்படல்

தலைவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது தலைவிக்கு மனவருத்தம் தருகிறது. 'தலைவன் திருமண உறுதியுடன் வந்தால் நான் உயிர் வாழ்வேன். இல்லையேல் இறப்பேன்' என்று தலைவி கூறுவதிலிருந்து மனமுடைந்து உலக வாழ்க்கையை வெறுத்து இறக்க எண்ணுகின்றாள். உயிரோடு இருந்து தலைவனின் பிரிவை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தினம் தினம் வேதனை அடைவதை அவளால் ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை.

**மீமிசை நல் நாட்டவர் வரின்**

**யான் உயிர் வாழ்தல் கூடும் - அன்னாய்**

**(ஐங்.213, அன்னாய் பத்து)**

என்ற பாடலில் 'உயர்ந்த சிகரங்களையும் பக்க மலைகளையும் உடைய வளமான நாட்டின் தலைவன் திருமண உறுதியுடன் வந்தால் தான் தலைவி உயிர் வாழ்தல் கூடும்' என்கிறாள். தலைவனோடு சேர்ந்து வாழாத வாழ்க்கை தனக்குத் தேவையில்லை என்கிறாள் தலைவி.

தலைவி கூற்றுப் பாடலில், உள்ளத்தில் அடக்கி வைக்கப்பட்ட உணர்ச்சி உளநோயாக மாறுகின்றது. அந்நோய் உடல் நோயாக அதாவது பசலையாக மாறுகின்றது. இதனை நிலைமாற்றம் என்னும் உளவியல் சுட்டிக் காட்டுகிறது. மனதில் தோன்றும் உணர்வுகளை வெளிக்காட்டாமல் மறைப்பதை அடக்குதல் என்று உளவியல் குறிப்பிடுகின்றது. தலைவியின் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளைப் பிறர் அறியாமல் தன்னுள்ளே அடக்குதல் குறித்து உளவியல் அறிஞர்களின் கருத்துகள் கபிலரின் குறிஞ்சித் திணைப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

ஒரு சூழலில் தலைவியால் தன் காதலை மறைத்து வாழ இயலவில்லை. அந்நிலையில், இனி தலைவன் இல்லாமல் தன்னால் வாழ முடியாது என்ற முடிவிற்கு வந்து தன் மனநிலையை தோழியின் வாயிலாக தலைவனுக்கு தலைவி வெளிப்படுத்துகிறாள். இவ்வாறாக தலைவி பல்வேறு மனநிலையினை உடையவளாக கபிலர் தம் பாடல்களில் காட்சிப்படுத்தியுள்ளார்.

உளவியல் அறிஞர்கள் குறிப்பிடும் ஒன்றுதல், உள்ளக் கிளர்ச்சி, மனவெழுச்சி, நினைவு கூர்தல், காதல் வெளிப்பாடு போன்ற உளவெளிப்பாடுகள் தலைவி கூற்றுப் பாடல்களில் காணப்படுகின்றன.

தலைவி, தலைவனைக் காண விழைவது பல நேரங்களில் தடைபடுகிறது. இந்நிலையில் தலைவி மனமுறிவுக்கு ஆட்படுகின்றாள். உள்ளத்தில் அழுத்தம் மிகுவதால் மனமுறிவுக்கு ஆளாகி அது தொடரும்போது மன இறுக்கம் ஏற்படும் எனும் உளவியல் தலைவி கூற்றில் வெளிப்படுகின்றது. தலைவி தலைவனின் குன்றத்தைப் பார்த்து துயராற்றி இருத்தலும், தலைவன் விரைந்து வருவான் என மன ஆறுதல் அடைதலும் புறத்தேற்றம் எனும் உளவியலைச் சார்ந்ததாகும். இவ்வாறாக தலைவியின் கூற்றுகள் பல்வேறு நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதாக உள்ளன.

### 3.11. தோழி கூற்று நிகழும் இடங்கள்

களவில் தோழி கூற்று நிகழ்த்துவதாக முப்பத்திரண்டு பொருண்மைகள் கூறப்பெறுகின்றன. களவொழுக்கத்திற்குத் துணையாக அறிவுத் திறனோடு செயல்படுவாள் தோழி. தலைவி தலைவனைச் சந்தித்த நாள்முதல் வரைவு மேற்கொள்ளும் அந்நாள்வரை உடனிருப்பவள் தோழியே. அக்கால கட்டத்தில் தோழியின் கடமைகள் எண்ணிறந்தன. தலைவன், தலைவியது விருப்பு, வெறுப்புகளைக் குறிப்பினால் அறிந்து செயல்படும் மதிநுட்பமும் நெஞ்சுரமும் கொண்டவள் தோழி.

**நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்**[60]

(தொல்.பொருள்.1060)

எனத் துவங்கும் தொல்காப்பிய நூற்பா தோழிக்கு கூற்று நிகழும் இடங்களைக் குறிக்கும். தோழி பல உயர்பண்புகளைக் கொண்டவளாய்ப் படைக்கப் பெறல் வேண்டும் என்பது தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையாக விளங்குகின்றது.

### 3.11.1. தோழி கூற்றுப் பாடல்கள்

சங்க இலக்கியப் பாடல்களில் தோழியின் செல்வாக்கு தலைமைச் சிறப்பு வாய்ந்ததாய் அமைகின்றது. தலைவியுடன் இணைபிரியாது வாழ்பவள் தோழி ஆவாள். தலைவன், தலைவி என்ற இரு மலர்களை இணைத்து மாலையாக்க நார் போன்று செயல்படுவாள் தோழி. தலைவி தோழிக்குத் தெரியாமல் தலைவனைச் சந்தித்துக் காதல் கொண்டாலும் விரைவில் அவர்களது காதலினை தன் அறிவுத் திறத்தால் தோழி உணர்ந்து கொள்வாள். தலைவியும் பின்னர் தோழியின் உதவியின்றித் தலைவனைச் சந்திக்க இயலாது என்பதை உணர்ந்து அவளது உதவியை நாடுவாள். அதுபோல் தலைமகனும் தோழியின் உதவியை நாடுவான். ஏனெனில் தலைவியைப் பெற்று மகிழ தோழியின் உதவி தேவை. இதை உணர்ந்ததால் தலைவியின் மேல் தனக்குள்ள காதலை தோழியிடம் தெரிவிப்பான். அவனது காதலின் உண்மை நிலையினை உணர்ந்த பின்னர் அவர்களது காதலுக்கும் களவு வாழ்க்கைக்கும் தோழி துணை புரிவாள்.

களவு வாழ்க்கையில் தலைவன் இரவுக் குறியிலும், பகற்குறியிலும் வந்து தலைவியைச் சந்தித்துத் திரும்புவான். தலைவன் களவை நீட்டிப்பதிலே விருப்பமுடைவனாய் இருக்கத் தோழி அவனுக்குப் பல காரணங்கள் கூறி மணம் முடிக்க வற்புறுத்துவாள். அதே சமயத்தில் தலைவியின் வீட்டாரிடம் அவளது காதலை முறைப்படித் தெரிவிப்பாள். அது அவளது கடமையாகவும் கூறப்படுகின்றது. அக்காதலை ஒத்துக்கொள்ளாதபோது தலைவன் தலைவியை உடன்போக்கிற்கு ஒருப்படுத்துபவளும் தோழியே. இவ்வாறு தலைவியின் வாழ்க்கையில் பெரும் பங்காற்றுபவள் தோழியாவாள்.

களவு வாழ்க்கையில் மட்டுமல்லாது, கற்பு வாழ்விலும் தோன்றுகின்றாள் தோழி. தலைவன் தலைவிக்கிடையே ஏற்படும் ஊடலைத் தோழி தீர்த்து வைப்பாள். தலைவியின் காதல் ஏமாற்றத்தில் முடியாமல் வெற்றிகரமான இல்லறத்தில் முடிய வேண்டுமென்பதில் பேரவாக் கொண்டவள் தோழி. ஆதலால் தன் பொறுப்பை உணர்ந்தவளாய் தலைவன் வரைவு நீட்டிப்பதைக் கடிந்து, அவனது சோர்வைப் போக்கி, அறிவுரைகள் பலவும் கூறி மணம் முடித்தலைக் கனிவாக நினைவூட்டுபவளும் இவளே ஆவாள்.

களவு மனத்திலே காதலர்கள், கருத்தொருமித்த வாழ்வு நடத்தி வந்தாலும், அவ்வாழ்வின் இன்ப துன்பங்களை ஓரிரண்டு உவமை வாயிலாகத் தலைவனுக்கு உணர்த்துவாள் தோழி. களவு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து இல்லற வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பது தோழியின் உள்ளத்தில் கிடந்த ஆசையாகும்.

'உள்ளம் புண்படாத வகையிலும் வாழ்வில் அரிய உண்மைகளை உணரும் வகையிலும் கடமை உணர்ச்சி கொள்ளும் வகையிலும் தலைவனுக்கு அறிவுரை கூறிய தோழியின் பேச்சுத்திறன் போற்றத்தக்கதாகும்'[61] என்ற மு.வரதராசனாரின் கூற்றுக்குப் பொருத்தமான பாத்திரமாவாள் இத்தோழி.

தோழி சங்க அக இலக்கிய மாந்தர்களில் சிறப்புக்குரியவள். தலைவன், தலைவியர் வாழ்வில் ஒப்பற்ற நிலையை வகிப்பவள். இவள் தலைவியை வளர்க்கும் வளர்ப்புத் தாயின் மகளாவாள்.

**தோழி தானே செவிலியது மகளே**[62] **(தொல்.பொருள்.1071)**

எனும் தொல்காப்பிய நூற்பா இதனை உணர்த்துகின்றது. தலைவன், தலைவியர் களவு வாழ்க்கைக்குத் துணை நின்று, அக்களவு நீட்டிக்காமல் தலைவனிடம் தலைவியை மணம் முடிக்கத் தூண்டி, தலைவியின் வாழ்க்கையோடு தன்னை இணைத்துக் கொண்டவளாக தோழி திகழ்கின்றாள். தோழி அறிவுச் சிறப்பும் சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல் செயலாற்றும் செயல் திறனும், தலைவியின் களவு வாழ்க்கையைச் செவிலியிடம் வெளிப்படுத்தித் தலைவியைக் காக்கும் திறனும் கொண்டவளாகத் திகழ்கின்றாள். இவ்வாறாக தலைவி மீது பேரன்பு கொண்டவளாகவும் அகப்பாடல்களில் அறிவும் ஆற்றலும் கொண்டு விளங்கும் தோழியின் கூற்றுகள் இடம்பெறும் பாடல்கள் மிகுதியாக உள்ளன.

தோழியின் பாடல்களில் வரும் செய்திகளை ஊக்கம், அன்புள்ளம், உள்ள மகிழ்ச்சி, மனமுறிவு, மனப்போராட்டம், துணிவு, வழிகாட்டுதல், அறிவுறுத்தல், சார்புணர்ச்சி, நோக்கல் நினைவு, நடுவுநிலைமை, அறத்தொடு நிற்றல், தூது அனுப்புதல், வருத்தம், ஆறுதல் கூறுதல், அறம் மேற்கொள்ளுதல், உயர்ந்த உள்ளம் என்பனவாகிய உட்தலைப்புகளில் இங்கு நோக்கப்படுகின்றன.

### 3.11.2. அன்பு வெளிப்படுதல்

தோழி தலைவியின் வாழ்வோடு இணைந்தவள். தலைவியின் மீது மிகுந்த அன்புள்ளம் கொண்டவளாகத் திகழ்கின்றாள். தலைவியின் மீது மிகுந்த அக்கறை கொண்டவளாகவும், தலைவிக்காகவே தான் வாழ்வதும் இதன்வழி தெரிகிறது. "சங்க காலச் சமூகத்தில் காதல் என்பது பிறவி தொறும் தொடர்ந்து வரும் ஓர் உயிர்ப் பிணைப்புணர்வாகவும் மாற்றிக் கொள்ள முடியாததாகவும் அமைந்தது. பண்டை அகவாழ்க்கையின் வீறாகக் காதல் அமைந்த காதலரும் தோழரும் பெற்றோரும் ஊரோரும் காதலை தடமாற்ற முனைந்திலர்."[63] அந்த வகையில் தோழி அகவாழ்வில் குறிப்பிடத்தக்கவள்.

தோழி, தலைவனிடம் இரவுக்குறி மறுக்கிறாள். ஏனெனில் தலைவன் வரும் வழியை நினைத்து தலைவி கலங்குவது தோழிக்கு வருத்தத்தை அளிக்கிறது.

**கான மண்அதர் பானையும் வழங்கும்**
**வான மீமிசை வருமும்நனி உரனும்**
**அரவும் புலியும் அஞ்சுதகவு உடைய**
**இரவழங்கு சிறுநெறி தமியை வருதி (அகம்.368)**

என்ற பாடலில் காட்டில் யானை, புலி, பாம்பு திரிகின்றன. சில நேரங்களில் இடி இடித்து மழையும் பெய்யும். ஆதலால் இத்தகைய இரவில் தனியாக துணையின்றி வரும் 'தலைவனை இன்று முதல் இரவில் வருவதை விட்டுவிடு' என்கிறாள் தோழி. தலைவனுக்கு தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்று மயக்கம் அடைகின்றாள் தலைவி. இதனால் தலைவி அடையும் துயரங்களை தலைவனுக்கு தோழி எடுத்துரைக்கிறாள். எனவே இரவில் வருவதைத் தவிர்த்துவிடுமாறு தலைவனை தோழி வேண்டினாள்.

மற்றொரு பாடலில் 'தலைவனிடம் தலைவியை திருமணம் செய்து கொள்ளாது விட்டால் இறந்து விடுவாள்' என்று தோழி குறிப்பிடுகின்றாள். அதுமட்டுமல்லாது, அவளுக்கு துன்பம் நேரின் தனக்கும் அது துன்பத்தைத் தரும் என்கிறாள்.

**யாயே கண்ணினும் கடுங் காதலனே;**
**எந்தையும் நிலன் உறப் பொறாஅன்; சீறடி சிவப்ப**
**எவன், இல! குறுமகள்! இயங்குதி? என்னும்**
**யாமே, பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்**
**இரு தலைப் புள்ளின் ஓர் உயிரம்மே (அகம்.12)**

என்ற பாடலில் "எம் தாய் தன் கண்களைக் காட்டிலும் இவள்பால் மிக்க அன்புடையவள்; எம் தந்தையும் இவள் சிறிதும் புறம்போவது கண்டால் நிலத்தே இவள் அடி பொருந்தி நடக்கப் பொறுக்காதவனாகி ஓடி! இளைய மகளே! நின் சிறிய அடி சிவக்கும் வண்ணம் என்ன செய்யச் செல்கின்றாய்? எனக் கடிந்து கூறுவார்; யாங்களும் பிரிவின்றிக் கூடிய பிளவுபடாத நட்பினால் இருதலைகளையுடையதொரு பறவையின் உடலில் உறையும் ஓருயிர் போல் ஆனோம்!" என்று தலைவியின் மீது அவள் குடும்பம் கொண்டிருக்கும் பற்றுதலையும் தன்னுடைய நட்பினையும் தலைவனிடம் தோழி குறிப்பிட்டாள்.

இதில் தலைவியும் தானும் உடலில் மட்டும் தான் வேறுபட்டுள்ளோம். உயிர் ஒன்றுதான்; எண்ணம் ஒன்றுதான் என்று கூறுவதிலிருந்து தோழியினுடைய அன்பின் ஆழம் வெளிப்படுகிறது.

'தலைவிக்கு துன்பம் வந்ததெனில் தானும் உயிர் வாழேன்' என்று தோழி கூறுவதிலிருந்து தோழி தலைவி மீது கொண்ட அன்பு வெளிப்படுகிறது.

**விலங்கு ஓரார் மெய்ஓர்ப்பின் இவள்வாழாள் இவள்அன்றி**

**புலம்புகழ் ஒருவ! யானும் வாழேன் (கலி.53)**

என்ற பாடலில் தலைவனிடம் 'தலைவியைத் திருமணம் செய்து கொள்' என்றுதோழி கூறினாள். 'தலைவன் நீ வருவதை ஊர்மக்கள் பார்த்தால் பழி தூற்றுவர். அதைக்கேட்டு தலைவி உயிர் வாழ மாட்டாள். இவளைப் பிரிந்து நானும் வாழ மாட்டேன்' என்று கூறுவதிலிருந்து தலைவிக்கும் தோழிக்கும் இடையிலான இணைபிரியா நட்பு புலப்படுகிறது. அத்தகு தலைவிக்கு தலைவனால் துன்பம் ஏற்பட்டால் அத்துன்பம் பலரையும் பாதிக்கும் என்று தலைவனுக்கு தோழி புலப்படுத்துகின்றாள்.

### 3.11.3. நல்வழிக்கு வித்திடல்

தலைவன் தலைவியைக் காண வரும் போதும், வரைவு மேற்கொள்ளும் போதும், வினைமுடித்து மீண்டு இல்லம் திரும்பும்போதும், வரைவு முடிந்த பிறகும் தலைவியின் உள்ளம் மகிழ்ச்சி அடையும். அச்சூழலில் தோழியின் மனமும் மகிழ்ச்சியில் திளைக்கும்.

களவொழுக்கம் மேற்கொண்ட தலைவன் தோழியின் வரைவு கடாவப்பட்டுத் தலைவியை மணந்து செல்வதற்கு வருவதை அறிந்த தோழி பெருமகிழ்ச்சி அடைகின்றாள். தனது மகிழ்ச்சியைத் தலைவியிடம் வெளிப்படுத்துகின்றாள்.

**பல்லோ ருவந்த உவகை எல்லாம்**

**என்னுட் பெய்தந் தற்றே சேணிடை**

**ஓங்கித் தோன்று முயர்வரை**

**வான்றோய் வெற்பன் வந்த மாறே (அகம்.42 : 11-14)**

என்ற பாடலில் 'தலைவன் வரைவோடு வந்தான்' என்ற செய்தி தலைவியை மகிழ்வூட்டியது. அம்மகிழ்ச்சி தோழியின் உள்ளம் மகிழ்வதற்கும் காரணமாக அமைகின்றது. தோழியின் மகிழ்ச்சியைக் கண்டு தலைவியும் மனம் மகிழ்வடைகிறாள்.

**செருஉறு குதிரையின் பொங்கிச் சாரல்**
**இருவெதிர் நீடுஅமை தயங்கப் பாயும்**
**பெருவரை அடுக்கத்துக் கிழவோன் என்றும்**
**அன்றை அன்ன நட்பினன்          (குறு.385)**

என்பதன் வழியாக 'தலைவன் என்றும் முதல் நாள் போன்ற நட்பினன்' என்று தலைவி தலைவனின் உயர்ந்த பண்பினை வெளிப்படுத்துகிறாள். அதனால் தலைவியும் தோழியும் மிகுந்த மகிழ்ச்சியால் நிறைவடைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.11.4. மன முறிவு

உலகில் மனிதன் ஒவ்வொருவரும் தேவைகள் (Needs) அல்லது இலக்குகளை (Goals) அடையும் முயற்சியில் இறங்குகின்றனர். தேவைகளை அடையும் முயற்சியில் வெற்றி பெறும் மனிதர்களுக்கு மனதில் மகிழ்ச்சி பிறக்கிறது. ஆனால், இடையூறுகளையும் தடைகளையும் சந்திக்கும் மனிதர்கள் மனமுறிவில் (Frustration) சிக்கிக் கொள்கின்றனர்.

"ஒரு குறிக்கோளை (தேவை, விருப்பம் போன்றவை) அடைய முடியாமல் தடுக்கப்பட்ட நடத்தைக்கு மனமுறிவு அல்லது மனமுறிவு நடத்தை யாகும்."[64]என்று மார்கன், யுங் என்ற உளவியலாளர்கள் கூறுகின்றனர். இது போன்று தன்னுடைய எண்ணங்கள் ஈடேறாமல் துன்பத்திற்கு ஆட்படும் நிலைகள் அக வாழ்விலும் நிகழ்கின்றன.

களவொழுக்கத்தை மேற்கொண்டு இரவில் வரும் தலைவனிடம் 'உன் செயலால் தலைவியின் அழகுநலம் கெட்டது. இனியேனும் நின் பிழையுணர்ந்து எமக்கு அருள் செய்ய வேண்டும்' என தோழி வேண்டுகிறாள்.

**யாம் நின் நயந்தனம் எனினும் எம்**
**ஆய்நலம் வாடுமோ – அருளுதி எனினே?          (ஐங்.275)**

என்ற பாடலில் தவைனிடம் 'நீ அருள் செய்தால் தலைவியின் நலம் வாடுமா?' என்று தோழி வினா எழுப்புகிறாள். மன நலத்தில் ஏற்படும் பாதிப்பு உடல் நலத்தையும் பாதிக்கவல்லதாகும். 'தலைவியின் மனம் மற்றும் உடல் நலக் குறைபாடுகளுக்குக் காரணம் தலைவனே' என்று தலைவனிடமே தோழி உரைத்து தலைவன் குறைகளைக் களைய முற்படுகிறாள்.

### 3.11.5. உயர்ந்த உள்ளம்

தலைமகன் வரைதல் வேண்டித் தானே வருகின்றமையைக் கண்ட தோழி உவந்த உள்ளத்தாளாய் தலைமகளிடம் கூறுகிறாள்.

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம் ஊர்ப்

பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்

குடுமித் தலைய மன்ற –

நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே (ஐங்.202)

என்ற பாடலில் 'அன்னையே! வாழ்க! யான் கூறுவதனை விரும்பிக் கேள். அன்னாய்! நம் காதலனாகிய நெடிய மலைக்குத் தலைவன் தேரை ஈர்த்து வரும் குதிரைகளும் நம்மூர் அந்தணச் சிறார் போலவே தாமும் குடுமித் தலையை உடையவனாயின' என அறிவிக்கின்றாள்.

இதில், தலைவன் பல குதிரைகள் பூட்டிய தேரில் வந்தமை பெறப்பட்டது. தேரில் வரும் தலைவனைப் பார்த்ததும் உள்ளம் மகிழ்ந்து, தலைவியின் கனவு நனவாவதைக் கண்டு தோழி மகிழ்கின்றாள். இதிலிருந்து தலைவியின் உயர்ந்த உள்ளம் வெளிப்படுகின்றது. தலைவியின் மகிழ்வே தன்னுடைய மகிழ்வாக கருதும் தோழி அகவாழ்வில் முதன்மையானவள் என்பதை உணரலாம்.

### 3.11.6. தோழமை வெளிப்பாடு

"நபர்கள், பொருட்கள் அல்லது கருத்துகள் பற்றி சாதகமாகவோ, பாதகமாகவோ அல்லது சாதக பாதகமின்றியோ சுட்டப்படும் பொதுவான மனநிலையை மனப்பான்மை" என ஹென்றி ஜி.கேரட் மனம் சார்ந்ததை விளக்குவர்.[65]

ஒருவரைப் பற்றி நாம் கொண்டிருக்கும் சாதகமான அல்லது பாதகமான மனப்பான்மையின் இயல்புகளை (Nature of Attitudes) பின்வருமாறு மொழிகின்றனர். அவை,

"1. மனப்பான்மை பாரம்பரியத்தால் பெறப்படுவதன்று. இது கற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

2. மனப்பான்மை கொண்டவர் மற்றும் மனப்பான்மை குறித்த மனிதர் பொருள் அல்லது கருத்துக்கிடையே உள்ள தொடர்பினை இது குறிக்கிறது.

3. இதில் ஒருவிதமான உந்துதல் பண்பு அடங்கியுள்ளது.

4. மனப்பான்மை பலதரப்பட்டது. மனிதர்கள் பற்றியோ, பொருட்கள் பற்றியோ, நிறுவனங்கள் பற்றியோ மனப்பான்மை அமையலாம்.

5. இது ஒரு உள்ளார்ந்த உணர்வு நிலையாகும்.

6. மனப்பான்மை மிகவும் சாதகமாகவோ மற்றும் மிகவும் பாதகமானதாகவோ அல்லது இவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாகவோ இருக்கலாம்."

என்பனவாகும்.[66]

தோழி தலைவியின் மீது எப்போதும் அன்புடையவளாகவும் நேரிடையான மனப்பான்மையைப் பெற்றவளாகவும் காணப்படுகின்றாள்.

**நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்**

**டிவளும் இணைய ளாயின் (அகம்.2 : 12-13)**

என்ற பாடலில் தலைவியின் நெஞ்சம் தன்னிடம் நில்லாது உன்னிடத்து வருகின்ற நிலையில் உள்ளது என்றும்,

**நல்வரை நாட! நீ வரின்**

**மெல்லியல் ஓருந் தான்வா ழலளே (அகம்.12 : 13-14)**

என்ற பாடலில் 'நாங்கள் இரவு முழுவதும் அச்சத்தோடு வாழவேண்டி உள்ளது. நீ விரைவாக எங்கள் துன்பத்தை நீக்கி மணந்து கொண்டால் நல்லது' என்று தலைவனிடம் தோழி உரைக்கிறாள்.

**ஒருநாள் விழுமம் உறினும்; வழிநாள்**

**வாழ்குவள் அல்லளென் தோழி (அகம்.18 : 9-10)**

என்ற பாடலில் 'என் தோழியாகிய தலைவி நீ ஒரு நாள் வராவிடினும் அடுத்த நாள் உயிர் வாழாள்.' என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள். இவ்வாறாக பல்வேறு மொழிகளை தலைவனிடம் மொழியுமிடத்து தலைவியைப் பற்றிய தோழியின் நேர்மறை மனப்பான்மைகள் வெளிப்படுகின்றன. தலைவியின் மீது தோழி கொண்டிருக்கக்கூடிய அன்பின் ஆழம் வெளிப்படுகிறது.

### 3.11.7. துணிவு வெளிப்படல்

தலைவன் இரவுக்குறிக்கு வந்திருக்கிறான் என்பதை அறிந்த தோழி,தலைவனிடம் 'இனி பகலில் வா' என்றும் இரவில் வருவதால் ஏற்படக்கூடிய அச்சம் குறித்தும் தோழி விளக்குகிறாள்.

**உரவுமழை பொழிந்த பானாட் கங்குல்**

**தனியை வந்த ஆறுநினைந்து, அல்காலும்**

**பனியொடு கலுழும்இவள் கண்ணே; அதனால்**

**கடும்பகல் வருதல் வேண்டும் (அகம்.182 : 10-13)**

என்ற பாடலில் தோழி தலைவனை நோக்கி, 'நீ தலைவியைச் சந்திப்பதற்கு இரவு நேரத்தில் இடி மின்னலுடன் கூடிய பெருமழை பொழியும் போது

தனித்து வருகின்றாய். வழியில் உனக்கு என்ன துன்பம் நேருமோ! என்று நினைத்து ஒவ்வொரு நாளும் தலைவி அழுகின்றாள். எனவே 'இனி பகலில் வா' என தோழி கூறுகிறாள். இவ்விடத்தில் தோழியின் செயலையும் கருத்தில் கொள்ள வேண்டும். தாய் அறியாமல், ஊர்க்காவலர்க்கு தெரியாமல் தலைவியைத் தலைவனிடம் இரவில் சந்திக்க அனுப்புவது தோழிக்கு கடினமானச் செயலாகும். இருப்பினும் தலைவியின் மகிழ்ச்சிக்காக இச்செயலைச் செய்யுமிடத்துத் தோழியின் மனத்துணிவை அறியமுடிகிறது.

### 3.11.8. வழிகாட்டுதல்

சமூகத் தேவைகளுக்கு ஏற்ப ஒருவருக்கு வருங்கால வாழ்க்கையை அமைத்துக்கொள்ள மற்றொருவர் உதவுவதற்கு 'வழிகாட்டுதல்' எனப்படும். பழங்காலத்தில் இவ்வாறு நெறிப்படுத்துதலை 'ஆற்றுப்படுத்துதல்' என்றனர். ஆத்தர் ஜெ.ஜோன்ஸ் அவர்கள் "வழிகாட்டுதலின் நோக்கம், ஒருவன் தனக்கு தேவையானவற்றைப் புத்திசாலித்தனமாகத் தேர்வு செய்யவும், பொருத்தப்பாட்டு நடத்தையினைப் பெறவும் வாழ்வின் இக்கட்டான தருணங்களில் தான் செய்ய வேண்டியவை யாவை என்பதைப் புரிந்துகொண்டு செயலாற்றிடவும் உதவி செய்து, சுயநெறிப்படுதல் என்னும் ஆற்றலைத் தொடர்ந்து பெற்றிடச் செய்தலே ஆகும்" என்கிறார்.[67]

தலைவியுடன் இன்பங்கூட்டி வைக்குமாறு கெஞ்சுகிறான் தலைவன். தலைவனின் வேண்டுதலுக்கு இரங்குகிறாள் தோழி. தலைவனிடத்தில் தலைவியின் குடிபிறப்பு சிறப்பை எடுத்துக் கூறுகிறாள்.

**வாங்குகோல் நெல்லோடு வாங்கி வருவைகல்**
**மூங்கில் மிசைந்த முழந்தாள் இரும்பிடி**
**தூங்கு இலை வாழை நளிபுக்கு ஓங்கர்**
**வருடை மடமறி உர்வு இடைத் துஞ்சும்**
**இருள் தூங்கு சோலை, இலங்குநீர் வெற்ப (கலி.14)**

என்ற பாடலில் 'உன்னுடைய மலைநாட்டில் பெண் யானைகள் ஏராளமாக உள்ளன. அவை, தாமே சென்று குருத்துகளையும் நெல்லையும் உண்டு மகிழ்கின்றன. பின் வாழைத் தோட்டத்திலே சென்று வாழைப் பழங்களைப் பறித்துத் தின்கின்றன. அது மாத்திரமல்ல; அந்த சோலையிலே உள்ள மான்குட்டிகள், புலி முதலியவற்றிற்கு அஞ்சாது துயில்கின்றன. அது போல உன் காதலியும் நின் மனையிலே அஞ்சாது இன்புற்றுத் துயில் கொள்ளல் வேண்டும்' இதுவே தன் வேண்டுகோளாக தலைவனிடத்தில் தோழி எடுத்துரைக்கிறாள்.

தலைவியோடு இடைவிடாது இருத்தல் வேண்டும். ஏனெனில் 'அவள் சீரும் சிறப்புமாகப் பேணி வளர்க்கப்பட்டவள். அவளைப் பாதுகாத்து பிரியாதிருக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள்' என்று புலப்படுத்தி தலைவனை வழிபடுத்துகிறாள் தோழி. தலைவனின் மனையில் தலைவி அஞ்சாது இன்புற்றுத் துயில் கொள்ளல் வேண்டும் என்று தோழி குறிப்பிடும் சூழலை நோக்க வேண்டும். தலைவன் தலைவியிடையே திருமணம் நிகழ்ந்தால் தான் தலைவி தலைவனுடைய இல்லத்தில் உரிமையுடன் இன்புற்று துயில் கொள்ள முடியும். இதை வெளிப்படையாகக் கூறாமல் அமைந்த தோழிக் கூற்று நுட்பமானதாகும். இவ்வாறாக, தலைவியின் நிலையைக் கூறி தலைவனை இல்வாழ்க்கையில் தோழி நன்நெறிப்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.11.9. அறிவுறுத்துதல்

தோழி, தலைவன் தலைவியர்க்குச் சிறந்த துணையாக மட்டும் அல்லாது, அவர்களுக்கு அறிவுரை கூறுபவளாகவும் காணப்படுகிறாள். வழிகாட்டுதல் என்ற முறையில் அறிவுரை பகர்தலும் இதில் அடங்கும். இருப்பினும் சிக்கலைச் சந்திக்கும் ஒருவருக்கு அச்சிக்கலைத் தீர்க்க மற்றொருவர் கூறும் ஆலோசனை வழங்கி அறிவுரை பகர்பவளாகவும் தோழி விளங்குகிறாள்.

"அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவர் ஆகியோரிடையே நேர்முகத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு, அறிவுரை பகர்பவர் தனது திறமையையும் ஏற்படுத்திக் கொண்ட நெருக்கத்தையும் பயன்படுத்தி, அறிவுரை பெற வந்தவன் தன்னுடைய தற்போதைய சூழ்நிலையையும், இதனால் விளையக்கூடிய எதிர்காலச் சூழ்நிலையையும் உணரச் செய்து, தன்னுடைய இயல் திறன்களையும், ஆற்றல்களையும், தனக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள வகையில் பயன்படுத்தி மன நிறைவுள்ள வாழ்க்கை வாழவும், தனது பிரச்சனைகளை எதிர் காலத்தில் தானே தீர்த்துக் கொள்ளவும் உதவும் வளர்ச்சியைப் பெருக்கும் செயலே அறிவுரை பகர்தலாகும்" என்று அறிவுரை பகர்தலுக்கு வரையறை கூறுகின்றார்.[68]

- "அறிவுரை பெறுபவர் அறிவுரை பகர்பவரைச் சந்தித்தல்.
- அறிவுரை பெறுபவரை அறிவுரை பகர்பவர் இதமாக ஏற்றுக் கொள்ளுதல்.
- உதவிடும் சூழலை அறிவுரை பகர்பவர் அமைத்திடல்.
- அறிவுரை பகர்பவர், அறிவுரை பெறுபவரின் பிரச்சனைகளை உணர்ந்து அவற்றைத் தீர்க்க ஊக்கப்படுத்துதல்.

- அறிவுரை பெறுபவரை ஏற்றுக்கொண்டு அவரின் எதிர்மறை உணர்வுகளைப் போக்கி நேர்மறை உணர்வுகளை வளர்த்தல்.
- அறிவுரை பகர்பவர் அறிவுரை பெறுபவரின் வளர்ச்சிக்கு உதவிடல்.
- தேவைகள் அடிப்படையில் புதிய இலக்குகளையும் நோக்குகளையும் தீர்மானித்தல்.
- முடிவுகள் எடுப்பதில் திறமை மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்துதல்.
- அறிவுரை பகர்பவரின் உதவி தேவைப்படாத நிலையை ஏற்படுத்துதல்."

என்பனவற்றை அறிவுரை பகர்தலின் படிநிலைகளாக நியூஸம் என்பவர் கூறுகின்றார்.[69] இப்படியான நிலைகள் தோழி கூற்றிலும் இடம்பெறுகின்றன.

இரவும் பகலும் வராமல் திருமணம் செய்து கொள்ளும்படி தலைவனிடம் தோழி எடுத்துரைக்கிறாள்.

**அடுபுலி வழங்கும் ஆர்இருள் நடுநாள்**
**தனியை வருதல்அதனினும் அஞ்சுதும் (அகம்.118)**

எனக் கூறி 'இருள் செறிந்த நள்ளிரவில் தலைவன் வருவது அலரைக் காட்டிலும் மிகுதியான அச்சத்தைத் தருகிறது. அலரைக் கூட தலைவி பொறுத்துக் கொள்வாள். தலைவனுக்குத் தீங்கு ஏற்படுவதைப் பொறுத்துக் கொள்ளமாட்டாள். எனவே, விரைவில் திருமணம் செய்து கொண்டால் என் தலைவி மகிழ்வோடு இருப்பாள்' என தலைவனுக்கு இப்பாடலில் தோழி அறிவுறுத்துகிறாள்.

களவுக் காலத்தில் சில நாள் பிரிந்து சென்று மீளும் கருத்துடைய தலைவன் அதனைத் தோழிக்கு உரைத்தபோது தோழி தலைவனுக்குக் சிலவற்றை மறு மொழியாக உரைக்கிறாள்.

**பிரியினும் பிரிவது அன்றே**
**நின்னொடு மேய மடந்தை நட்பே (ஐங்.297)**

என்ற பாடலில் தோழி தலைவனை நோக்கி 'என்தலைவியை மறந்து வாழ்தல் ஒருகால் நிகழ்வதாயினும், அவள் உன்னோடு கொண்ட நட்பு என்றும் பிரிதற்கு இயலாதது என்பதை அறிந்து கொள்' என்று தோழி தலைவனுக்கு அறிவுரை கூறுகிறாள். தலைவியை காதலில் ஏங்கவிடும் தலைவனிடம் 'உனக்கு மனசாட்சி இருக்கிறதா' என்று கேட்கிறாள். 'திருமணம் செய்வதைத் தவிர வேறு வழி இல்லை' என்கிறாள். சிலப்பதிகாரத்திலும் இச்சூழல் அமைகிறது.

**நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமோல்[70]**

**(சிலம்பு. 7 : 32)**

'நீ எங்களை மறந்தாலும் நாங்கள் உன்னை மறக்க மாட்டோம்' என தலைவியின் நிலையை எடுத்துக்கூறி அறிவுறுத்துகிறாள். தோழி அறிவுறுத்தும் விதமாக பாடல்கள் மிகுதியாக ஐங்குறுநூறில் அமைகின்றன. தோழியின் சிந்தனைகளையெல்லாம் உள்வாங்கக்கூடிய தலைவனுக்கு அன்பு கொண்டவரின் துன்பங்களைக் களைய வேண்டும் என்ற சிந்தனையை தோழி வளர்த்தெடுக்கிறாள். எனவே, தோழியின் கூற்று அறிவு சார்ந்த வகையில் அமைவதை மேற்கண்ட செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

### 3.11.10. வருத்தம் வெளிப்படல்

தோழி தலைவி மகிழ்ச்சி அடையும்போது தானும் மகிழ்ச்சியோடு இருக்கிறாள். தலைவி வருத்தத்தில் இருக்கும்போது தானும் மனவருத்தம் அடைகிறாள். இரவில் வந்த தலைவனை நோக்கி மனம் வருந்தி தோழி கூறுகிறாள்.

**பெயல்கால் மறைத்தலின் விசும்புகா ணலரே**
**நீர்பரந்து ஒழுகலின் நிலம் காணலரே**
**எல்லை சேறலின், இருள்பெரிது பட்டன்று**
**பல்லோர் துஞ்சும் பானாள் கங்குல்**
**யாங்கு வந்தனையோ? ஒங்கல் வெற்ப!**
**வேங்கை கமழும் எம் சிறுகுடி**
**யாங்கு அறிந்தனையோ? தோகோ யானே (குறு.355)**

என்ற பாடலில் மிகுதியான மழை பெய்வதால் வானத்தைக் காண இயலவில்லை. மழைநீர் நிலத்தில் பரந்து செல்வதால் நிலத்தையும் காண முடியவில்லை. கதிரவன் மறைந்து விட்டதால் இருள் மிகுதியாயிற்று. ஊரில் பலரும் தூங்குகின்ற நடு இரவில் மலைநாட்டுத் தலைவன். வேங்கை மலர்களின் மணம் கமழும் தலைவியின் சிறுகுடியை இரவில் கண்டறிந்து வந்ததை எண்ணி தோழி மிகவும் வருந்தினாள். தலைவன் வருகையால் மகிழ்ந்த போதிலும், அவன் வரும் வழியின் தன்மையைக் குறித்து எண்ணி வருந்துகின்றாள். 'இந்த இரவு நேரத்தில் எப்படி வந்தாய்' என தோழி தலைவனிடம் மனம் வருந்தி கேட்கிறாள். இதில் தோழியின் வருத்தம் தெரிகிறது.

தோழியின் வருத்தம் முழுவதும் தலைவியின் மகிழ்ச்சி குறித்தே அமைகிறது. தலைவனுக்கு தலைவி மேல் அக்கறை இல்லை, அன்பு இல்லை. அன்பில்லாத தலைவன் எனக் கூறி தலைவியை நினைத்து தோழி வருத்தமடைகிறாள்.

**கொய்திடு தளிரின் வாடிநின்**

**மெய்பிறி தாதல் எவன்கொல்? அன்னாய்! (ஐங்.216)**

என்ற பாடலில் தலைவனின் செயல்பாடுகளை மனதில் எண்ணி தலைவியின் மேனி கொய்யப்பெற்ற தளிர் போல வாட்டமுற்று இருப்பதாக தோழி தலைவியிடம் கூறுகிறாள். இக்கூற்றிற்க்கானச் சூழலை நோக்கும் போது தலைவன் சிறைப்புறமாக இருத்தல் குறிப்பிடத்தக்கது. இக்கூற்றினை கேட்கும் தலைவன் தலைவியின் துன்பத்தைப் போக்க வேண்டும் என்ற சிந்தனை தோன்றும் என்று நம்பலாம்.

வரைவிடை வைத்துப் பொருள் வயின் பிரிந்த தலைவன் காலம் நீட்டித்து வந்ததைக் கண்டு தோழி தலைவியிடம், தலைவனின் குறைகளை எடுத்துரைத்தாள்.

**வன்புடை விறற் கவின் கொண்ட**

**அன்பிலாளன் வந்தனன் இனியே (ஐங்.226)**

என்ற பாடலில் தலைவியிடம் 'பிறரைக் காட்டிலும் அழகுடைய உன்னைக் கவர்ந்த தலைவன், அன்பில்லாதவன் இப்பொழுது வந்திருக்கிறான். நின் துயரம் நீங்குக' என்று தோழி கூறுகிறாள். தலைவனை நிறையுடையவனாகவும், குறையுடையவனாகவும் கூறுகிறாள் தோழி. இந்நிலையில் காலம் நீட்டித்து வந்த தலைவன்மேல் தோழி வருத்தம் கொள்கிறாள்.

தோழி, தலைவி வருத்தமுறும் காலத்தில் தானும் வருத்தமடைகிறாள். தலைவியின் தாயைவிட தலைவிமேல் மிகுந்த அன்புடையவளாக தோழி காட்டப்படுகிறாள். தோழி தனக்கென்ற ஒரு சிந்தனையின்றி தன் வாழ்க்கை முழுதும் தலைவியின் நலத்திலே அக்கறை கொண்டவளாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 3.11.11. தலைவி தோழியின் ஒற்றுமை

ஒவ்வொரு சந்திப்பிற்கும் தோழி உடன்படுவாள் என எதிர்பார்க்க முடியாது. இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனிடம் அவனது வழியின் அருமை கூறி, அவன் வரவைத் தவிர்க்கச் செய்வாள். அதாவது தலைவியை இரவில்

*சந்திக்க இயலாவிட்டாலும், அவர்களுக்கிடையே உள்ள நட்பு தேய்வதில்லை என்பதைத் தலைவனுக்குத் தெரியப்படுத்துவாள்.*

**காமம் ஒழிவது ஆயினும், யாமத்துக்**
**கருவி மாமழை வீழ்ந்தென அருவி**
**விடர் அகத்து இயம்பும் நாடஎம்**
**தொடர்பும் தேயமோ நின்வயி னானே** (குறு.42)

*தலைவிக்கும் தனக்குமுள்ள உள்ள ஒற்றுமையை* ***எம் தொடர்பும் தேயுமோ*** *என்பதிலிருந்து அறியலாம். தலைவியின் மேல் தனிப்பட்ட அக்கறை கொண்டவளாதலால் தலைவியின் மேனி வேறுபாடுகள் அலர் தோன்றுவதற்குக் காரணமாகலாம் என்று அஞ்சும் தோழியைக் காணமுடிகின்றது.*

### 3.11.12. தோழியின் அறிவு நுட்பம்

*குறிஞ்சிப் பாட்டில் கபிலர் புலமைத் திறத்தோடு தோழியை அமைத்துள்ளார்.*

**இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்**
**வினையிடை நின்ற சான்றோர் போல**
**இருபேர் அச்சமொடு யானும் ஆற்றலென்**
**கொடுப்பின் நன்கு உடைமையும் குடிநிரல் உடைமையும்**
**வண்ணமும் துணையம் பொரீஇ எண்ணாது**
**எமியேம் துணிந்த ஏமம்சால் அருவினை**
**நிகழ்ந்த வண்ணம் நீநனி உணரச்**
**செப்பல் ஆன்றிசின் சினிவாது தீமோ** (குறி.பா.29-34)

*என்று தோழியின் அறிவு நுட்பத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.*

*சங்க இலக்கிய மரபு என்பது காதலைச் செவிலித்தாய் மூலமாக நற்றாய், தந்தை தெரிந்துகொள்வார்கள். எனவே குறிஞ்சிப்பாட்டில் தோழி செவிலியிடத்தில் மிக நயமாகக் கூறுகிறார். தலைவிக்கும் செவிலிக்கும் இடையே தோழி தன் நிலையைக் கூறும்போது நல்ல உவமையினை கபிலர் அமைத்துப் பாடலை நகர்த்திச் செல்கிறார்.*

*'பகை வேந்தராகிய இரண்டு பேரரசர்களுக்கு இடையே நின்று அவரைக் கூட்டுத் தொழிலை மேற்கொண்ட சான்றோர் வருந்துமாறு போல யானும் உங்கள் இருவருக்கும் இடையே நின்று பெரிதும் வருந்துகின்றேன்' என்று புறச் செய்தியை உவமையாக்கித் தோழியின் மனநிலையைக் கபிலர் சித்தரித்துள்ளார்.*

இறுதியாக தன் தவறுக்காகப் பணிவாக நடந்து கொள்ளும் அறிவுத் திறத்தைக் கபிலர் தோழி பாத்திரத்திற்கும் படைத்துள்ளார். 'அது கேட்டு கோபப்படாதே', என்ற இந்தத் தோழிக் கூற்றின் மூலம் கபிலர் உலக வாழ்க்கையை நன்கு தெரிந்திருக்கிறார் என்பதும், தோழியாகிய பாத்திரம் பிற பாத்திரங்களைவிட உயர்வானது என்பதும் அறிந்துகொள்ள முடிகின்றது. "மனித உள்ளம் வெறும் உணர்ச்சியின் இருப்பிடமாக மட்டும் அமையாமல், அறிவின் இருப்பிடமாகவும் அமையும் போது மனித இன முன்னேற்றம் சிறப்புறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்."[71]

### 3.11.13. நடுவு நிலைமை வெளிப்படல்

அனைத்து நிலைகளிலும் தோழி நடுவு நிலைமையிலிருந்து தவறாது நடந்து கொள்கிறாள். எல்லா சூழ்நிலையிலும் நிதானமான முடிவையே எடுக்கிறாள். சூழல் வரும்போது தலைவியின் தாயிடம் காதலை வெளிப்படுத்துகிறாள். தலைவி தனக்கு முக்கியம் என்பதால் தலைவி கூறும் அனைத்திற்கும் சம்மதம் தரவில்லை. இது சரி, இது தவறு என நடுவு நிலையில் நின்று தலைவியை வழிநடத்துகிறாள்.

**அழிவினவை நீக்கி ஆறுய்த் தழிவின்கண்**

**அல்லல் உழப்பதால் நட்பு[72] (குறள்-787)**

கேடானவற்றை நீக்கி, நல்வழியில் செலுத்தி, துன்பம் உண்டாயின் தானும் துன்புறுவதே ஒத்த நட்பாகும் என்று குறள் கூறுகிறது. அத்தகைய சிறந்த நட்பையே தோழி உரித்தாக்கிக் கொண்டிருக்கிறாள். தோழியின் ஒவ்வொரு செயல்பாடும் தலைவியின் நலம் நோக்கியதாகவே அமைகிறது.

**அறியாமையின் வெறி என மயங்கி**

**அன்னையும் அருந்துயர் உழந்தனள் அதனால்**

**எய்யாது விடுதலோ கொடிதே (ஐங்.242)**

என்ற பாடலில் தலைவியின் மெலிவு கண்டு தாய் வெறியாட்டு நிகழ்த்த முற்படுகிறாள். இதைக் கண்ட தோழி, தலைவியின் களவு வாழ்வினை தாய்க்கு உணர்த்துவதே நல்லது. இனியும் இக்களவினை மறைப்பது தமக்குத் தீமையாகவே முடியும் என்று கருதி தோழி செயல்படுகிறாள். எனவே தோழியின் செயல்பாடு தலைவன் தலைவிக்கும் பெற்றோருக்கும் ஏற்புடையதாகவே அமைகிறது. அனைவரின் நலத்தை எண்ணி செயல்படும் தோழி அகவாழ்வின் அடித்தளம் ஆவாள்.

தோழி செவிலித் தாய்க்கு முறையாகத் தலைவியின் களவொழுக்கத்தினை வெளிப்படுத்துகிறாள். அதன்பிறகு படிப்படியாக ஏனையோருக்கும் தலைவியின் களவொழுக்கம் வெளிப்படுத்தப்படுகின்றன.

**எளித்தல், ஏத்தல் வேட்கை உரைத்தல்[73] (தொல்.பொருள்.1153)**

என்ற எழுவகைப்பட்ட அறத்தொடு நிலையுள் கூறுதல், உசாதல் என்ற ஒன்றை நீக்கி ஏனைய ஆறு நிலைகளிலும் தலைவியின் களவொழுக்கம் தோழியால் செவிலித்தாயிடம் வெளிப்படுத்தப்படுகின்றது.

தான் கூறும் செய்தியின் அருமையை உணர்த்தும் ஆற்றல் தனக்கு இல்லை என்ற அச்சத்தாலும், தயக்கத்தாலும் இக்கருத்தை ஏற்பதற்கு ஏற்றவாறு தன்னுடைய தாயை ஆயத்தம் செய்வதற்காகவும், 'அன்னையே என்றும், வாழ்க என்றும், யான் கூறும் மொழிகளை விரும்பிக் கேட்பாயாக' என்றும் முகவுரையுடன் தோழி தன்னுடைய உரையைத் தொடங்குகிறாள்.

**அன்னாய் வாழி! வேண்டு அன்னை! ஒளிநுதல்**
**ஒலிமென் கூந்தல் என் தோழி மேனி**
**விறல் இழை நெகிழ்த்த வீவு அருங் கடுநோய்**
**அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்**
**பரவியும்; தொழுதும்; விரவு மலர் தூயும்;**
**வேறுபல் உருவின் கடவுட் பேணி**
**நறையும் விரையும் ஒச்சியும் அல்லுற்று**
**எய்யா மையலை நீயும் வருந்துதி**
**நல்கவின் தொலைவும் நறுந்தோள் நெகிழவும்**
**புள்பிறர் அறியவும், புலம்புவந்து அலைப்பவும்**
**உள்கரந்து உறையும் உய்யா அரும்படர்**
**செப்பல் வன்மையின் செறித்து, யான் கடவலின் (குறி.பா. 1-12)**

என்ற பாடலில் 'தாயே! வாழ்வாயாக. தாயே! நான் கூறும் மொழிகளை விரும்பிக் கேட்பாயாக. அழகான ஒளியுடைய நெற்றி, மெல்லிய கூந்தலை உடைய நம் தலைவி, தன் மனத்திற்குள், தன் உயிரைத் தாங்கியிராமைக்குக் காரணமாகிய நினைவினை மறைத்தாள். அதனால் அவள் அணிந்திருந்த அணிகள் நெகிழப் பெற்றன. மருந்துகளால் போக்குதற்கரிய கடிய இந்நோயை நினக்குச் சொல்லுதல் எளிதன்று. வலிமையுடையது, அதனால்தான் அதனை வெளிப்படுத்தாமல் அடக்கி வைத்தேன். தலைவியுடைய அழகு கெட்டது. தோள்கள் மெலிந்தன. வளை கழன்றமையால், மற்றவர் தலைவியின் நிலையை அறிந்தனர். தனிமைத் துயரம் தலைவியை மிகவும் வருத்தியது. இந்நிலையை

இதுவரை யான் நினக்கு அறிவிக்காமல் மறைத்துக் காத்தனன்' என்று செவிலியிடம் கூறுகிறாள்.

தலைவியின் மெலிவிற்குக் காரணத்தைத் தோழி, நன்கு அறிந்த போதிலும், அதனைச் செவிலித் தாய்க்கு கூறும் மனவலிமை தனக்கு இல்லாததால் மறைத்து ஒழுகினாள். நற்றாய் ஆகியோரிடம் கொண்ட அச்சத்தினாலும், குடும்ப மரபின் பெருமையாலும் தோழி தலைவியின் களவொழுக்கத்தை வெளிப்படுத்த இதுவரை தயங்கினாள்.

இதில் தோழி தக்க தருணம் வரும்வரை காத்திருந்து செவிலியிடம் அறத்தொடு நிற்கின்றாள். தொடக்கத்திலேயே தலைவியின் காதலைக் கூறாமல் எச்சூழலில் கூறினால் தலைவிக்கு தீங்கு வராதோ, அந்தச் சூழலில் செவிலியிடம் எடுத்துக்கூறி தலைவியின் காதலைப் புரியவைக்கிறாள்.

### 3.11.14. ஆறுதல் கூறுதல்

தலைவன் களவொழுக்கத்தில் விருப்புற்று மணம் புரியாமல் காலம் நீட்டிக்கிறான். சிறைப்புறமாக வருதலை உணர்ந்து சில செய்திகளைத் தலைவன் கேட்கும்படி தோழி கூறுகிறாள். தலைவன் விரைந்து திருமணம் செய்து கொள்ள தாமதம் செய்வதால் தலைவி வருத்தமுறுகிறாள். அப்போது தோழி, தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள்.

**துஞ்சு பிடி மருங்கின் மஞ்சுபட காணாது**

**பெருங்களிறு பிளிறும் சோலை அலர்**

**சேண் நெடுங் குன்றம் காணிய நீயே (நற்.222)**

என்ற பாடலில் தலைவி பசும் பொன்னாலாகிய வடத்தைப் பற்றி ஆட்டும்போது ஆகாயத்திலே பறக்கும் அழகிய மயில் போல் விளங்குவாள். அவ்வாறு ஆட்டியும் ஊசல் நீளச்சென்று மீளவும் செய்யுங் காலத்து தலைவியின் கவலை தணியுமாறு 'தலைவனின் உயர்ந்த மலையைக் காண்பாயாக' என்று தோழி ஆறுதல் கூறுகிறாள். தலைவியின் வருத்தம் அதிகரிக்கக் கூடாது என்பதற்காக தோழி ஆறுதல் கூறித் தேற்றுகிறாள்.

இவ்வாறாக, தோழி தலைவன் தலைவியின் களவு நிகழ்வை இயக்குவதற்கும், அந்நடத்தை கற்பு வாழ்வாக மாறுவதற்கும் காரணமாக இருக்கின்றாள். தலைவன் தலைவியர் களவு மற்றும் கற்பு வாழ்வில் துயரடையும் பொழுதெல்லாம் தோழி இருவரையும் ஊக்கப்படுத்துகிறாள். இவ்வாறாக தலைவியின் மகிழ்வான நல்வாழ்விற்காக தோழி பல்வகையிலும் தன் சிந்தனையையும் செயலையும் செலுத்தி அகவாழ்வில் பங்காற்றுகிறாள்.

### 3.12. முடிவுரை

கபிலர் பாடல்களில் அக இலக்கிய மாந்தர்கள் பண்பு நலம் சான்றவர்களாகவே படைக்கப் பெற்றிருக்கின்றனர். குறிப்பாக, கபிலர் காட்டும் தலைவன் பெருமையும் உரனும் கொண்ட தொல்காப்பியத் தலைவனாகச் செயல்படுவதைக் காணலாம். ஒப்புயர்வற்ற ஆண்மைச் சிறப்பும், ஈடு இணையற்ற எழில் நலமும் கொண்ட தன்னிகரில்லாத தலைமகனாகத் தோன்றுகின்றான். தலைவனது காதல் உறுதி அவன் கடந்து வரும் வழியிலும் ஊரார் உறங்கும் நள்ளிரவு வேளையில் வருவதிலும் தெரிகின்றது.

கபிலர் தலைவி கூற்றுப் பாடல்களில் பெண்மையின் நலமெல்லாம் கனிந்திருக்கும் பெருமைமிகு பெண்ணாகப் படைத்துக் காட்டினார். தலைவி கூற்றுப் பாடல்களில் தலைவனின் பண்புகளை உயர்த்திப் பேசும் தலைவியரே கபிலர் பாடல்களில் அதிகம். கபிலரின் தலைவி சங்ககாலச் சமூகத்தில் பெண்களுக்கென்று விதிக்கப்பட்ட சிறந்த பண்புடையவளாகக் காட்டப்படுகிறாள். தலைவன்மீது நம்பிக்கை இன்றி அச்சப்படும் தலைவியையும், அவனது நட்பில் உறுதி கொண்ட தலைவியையும் என்று இரு வேறுபட்ட தலைவிகளைப் படைத்துக் காட்டியிருக்கின்றார் கபிலர். தலைவி கூற்றுப் பாடல்களில் பிரிவில் துன்பப்படும் பெண்களின் நிலைகள் சித்தரிக்கப் பெற்றாலும் பிரிவாற்றித் தலைவனை உயர்த்திப் பாடுகின்றார். கபிலரின் தலைவி கூற்றுப் பாடல்கள் அனைத்தும் ஆண்வழிச் சமூகக் கருத்தியல்களுக்கேற்பவே படைக்கப் பெற்றிருக்கின்றன.

தோழி கூற்றுப் பாடல்கள் வாயிலாக தலைவியினது நலத்தில் தனி அக்கறை செலுத்துபவளாகவும், தலைவனைப் பிரிந்த தலைவியின் தோள் மெலிவை விரும்பாதவளாகவும், இரவுக்குறியில் தலைவனது வரவினைத் தவிர்க்கச் செய்து, நட்பு பாராட்டி தலைவியை மணம் முடிக்கச் செய்பவளாகவும், தாய்க்கு அஞ்சும் தன்மையோடும் விளங்குவதைக் காணலாம். தலைவனிடம் தலைவியை ஒப்படைத்து தாய்போல அறிவுரை சொல்லும் தோழியைக் காணலாம்.

ஆக, தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் கூற்றுகள் உளவியல் தன்மையில் அமைந்து சமூக வாழ்வின் நன்னெறிக்கு அடிக்கோலுவதாக அமைகின்றன.

# சான்றெண் விளக்கம்

1. கழகப் புலவர் குழு,கழகத் தமிழகராதி ப.288
2. அகராதிக் குழு, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.359
3. க.முருகேசன், சங்க இலக்கியத் தேனமுதம், ப.77
4. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூ.875
5. மேலது, நூ.876
6. க.முருகேசன், சங்க இலக்கியத் தேனமுதம் ப.82
7. மேலது, ப.84
8. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.1445
9. மேலது, நூ.1044
10. ஆ.இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப.26
11. சுந்தர சண்முகனார், மனத்தின் தோற்றம், ப.5
12. பாலுசாமி, நா., வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஐந்து ப.421
13. கி. நாகராஜன், கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல், பக்.233-234
14. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.370
15. மேலது, பக்.370-371
16. பரிபாடல், பா.9
17. அரங்க.நலங்கிள்ளி, ப்ராய்டின் கலை இலக்கிய உளப் பகுப்பாய்வு, ப.20
18. பெ.தூரன், குழந்தை உளவியலும் மனித மனமும், ப.348
19. அ.தட்சிணாமூர்த்தி, சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், ப.43
20. தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட், ப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், ப.215
21. பெ.தூரன், மனமும் அதன் விளக்கமும், ப.35
22. தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட், ப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், ப.496
23. மேலது, ப.497
24. மேலது, ப.499

25. மேலது, ப.548

26. தொல்காப்பியம்,பொருளதிகாரம், நூ.1143

27. மேலது, நூ.1144

28. மேலது, நூ.1206

29. மேலது, நூ.1216

30. தி.கு.இரவிச்சந்திரன், சிக்மண்ட்,
ப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், ப.536

31. குமரிச்செழியன், செம்மொழித் தமிழ், ப.36

32. எஸ். சந்தானம், கல்வி உளவியலும், கல்விச் சமூகவியலும், ப.281

33. மேலது, ப.282

34. Pangotra. M.N.Educational psychology, P.260

35. எஸ். சந்தானம், கல்வி உளவியலும், கல்விச் சமூகவியலும், ப.282

36. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.403

37. திருக்குறள், கு.எ.101

38. மேலது, கு.எ.108

39. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.1053

40. மேலது, நூ.1054

41. மேலது, நூ.1057

42. கு.இராசரெத்தினம், சங்க இலக்கியத்தில் பொதுமக்கள், பக்.18,19

43. அ.க.நாராயணன் பிள்ளை, உள்ளக் கிளர்ச்சி, ப.135

44. து.சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல் ப.4

45. மு.வரதராசன், குறுந்தொகைச் செல்வம், ப.98

46. திருக்குறள், கு.எ.341

47. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.1046

48. பெசன்ட் கிரிப்பர்ராஜ், சமூகத்தில் நாம், ப.212

49. கா.அரங்கசாமி, கபிலர், ப.47

50. ஆ.இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு ப.135

51. ஜேம்ஸ் டிபேஜ், பிறழ்நிலை உளவியல், ப.42

52. எஸ்.சந்தானம், கல்வியின் உளவியல் அடிப்படைகள், ப.282

53. கு.வெ.பாலசுப்ரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப.326

54. திருக்குறள், கு.எ.984

55. L.Munn. Introduction to Psychology. P.214

56. து.சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல், ப.36

57. அகப்பொருள் விளக்கம், நூ.47

58. ஜேம்ஸ் டிபேஜ், பிறழ்நிலை உளவியல், பக்.68, 69

59. து.சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல், ப.67

60. தொல்காப்பியம்,பொருளதிகாரம், நூ.1060

61. மு.வரதராசன், குறுந்தொகைச் செல்வம், ப.98

62. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.1071

63. கு.வெ.பாலசுப்மணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், ப.322

64. கோகிலா தங்கசாமி, கல்வி உளவியல், ப.113

65. எஸ்.ஆரோக்கியசாமி, கற்றலின் உளவியல் மற்றும் மனித வளர்ச்சி, ப.231

66. மேலது, ப.231

67. கி.நாகராஜன், கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல், ப.436

68. மேலது, பக்.444-445

69. மேலது, ப.446

70. சிலப்பதிகாரம், பா.எ.7:32

71. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் காதல், ப.89

72. திருக்குறள், கு.எ.781

73. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.1153

# இயல் – நான்கு

# குறிஞ்சிப் பாடல்களில் மக்கள் வாழ்வியல்

# இயல் – நான்கு
# குறிஞ்சிப் பாடல்களில் மக்கள் வாழ்வியல்

**4. முன்னுரை**

**4.1. தனிமனித விழுமியங்கள்**

*4.1.1. அறம்*

*4.1.2. பொருளீட்டல்*

*4.1.3. நட்பு*

*4.1.4. செய்நன்றி மறவாமை*

*4.1.5. சான்றோர் மாண்பு*

*4.1.6. பெரியோர்களின் அறிவுரை*

**4.2. குடும்பம்**

**4.3. தலைவனின் அன்பு வெளிப்பாடு**

**4.4. காதலை ஏற்றுக்கொள்ளுதல்**

**4.5. திருமணம்**

*4.5.1. திருமணத்தை வலியுறுத்தல்*

*4.5.2. பல்வேறு மணமுறைகள்*

*4.5.2.1. பெண் கேட்டு மணத்தல்*

*4.5.2.2. உடன்போக்கு மேற்கொண்டு மணத்தல்*

*4.5.3. திருமணச் சடங்குகள்*

**4.6. மக்கட்பேறு**

**4.7. விருந்தோம்பல்**

*4.7.1. பெண்டிரும் விருந்தோம்பல் பண்பும்*

**4.8. சமுதாயம்**

*4.8.1. சமுதாய நெறிகள்*

*4.8.2. வாழ்க்கைச் சூழ்நிலைகள்*

**4.9. மக்கட் பெயர்**

**4.10. உணவு**

*4.10.1. உணவு - சொல், பொருள் விளக்கம்*

*4.10.2. குறிஞ்சி நில மக்களின் உணவு முறைகள்*

**4.11. உடை**

**4.12. உறையுள்**

**4.13. பொழுது போக்கு**

**4.14. நீராடுதல்**

**4.15. ஊசலாடுதல்**

**4.16. வள்ளைப்பாட்டு**

**4.17. தொழில்கள்**

*4.17.1. வேட்டைத் தொழில்*

*4.17.2. பன்றி வேட்டை*

*4.17.3. கவண் எறிதல்*

*4.17.4. பயிர்த்தொழில்*

*4.17.5. எரியிடுதல்*

*4.17.6. பயிர்ச் சுழற்சிமுறை*

*4.17.7. மலைச்சரிவில் பயிரிடுதல்*

*4.17.8. தினைக்காவல்*

*4.17.9. கிளிகடி கருவிகள்*

*4.17.10. பரண் அமைத்தல்*

*4.17.11. வாணிகம்*

**4.18. வழிபாடு**

*4.18.1. குறிஞ்சி நிலக்கடவுள்*

*4.18.2. வெறியாடல்*

*4.18.3. முருகனை வழிபடும்முறை*

**4.19. பேய் பற்றிய நம்பிக்கை**

**4.20. குறிஞ்சி மக்களின் நம்பிக்கை**

*4.20.1. அணங்கு*

*4.20.2. பலியிடுதல்*

*4.20.3. படையல் பொருட்கள்*

*4.20.4.= நம்பிக்கைகள்*

*4.20.5. தெய்வ நம்பிக்கைகள்*

*4.20.6. நிமித்தம் காணுதல்*

*4.20.7.* முற்பிறவிகள் தொடர்பான நம்பிக்கைகள்

*4.20.8.* ஆணையிட்டுச் சூளுரைத்தல்

*4.20.9.* உடலுறுப்புகள் உணர்த்தும் சகுனக்குறிகள்

*4.20.10.* நேர்த்திக் கடன் வேண்டுதல்

**4.21. கலைகள்**

*4.21.1.* இசைக்கலை

*4.21.1.1.* குறிஞ்சிப்பண்

*4.21.1.2.* தோற்கருவிகள்

*4.21.2.* ஆடற்கலை

**4.22. பொருளாதாரம்**

**4.23. முடிவுரை**

# இயல் - நான்கு

# குறிஞ்சிப் பாடல்களில் மக்கள் வாழ்வியல்

**4. முன்னுரை**

உலகில் காணப்படும் பொருட்கள் யாவும் கூட்டுப் பொருட்களாகவே விளங்குகின்றன. மனிதனும் அத்தகைய தகவமைப்பினையே உடலளவிலும் மனதளவிலும் பெற்றுள்ளான். ஒவ்வொருவரும் தனி மனிதனாக விளங்கினாலும் குடும்ப வாழ்விலேதான் பங்கேற்கின்றனர். ஒவ்வொரு குடும்பமும் சமூக வாழ்வின் அங்கமாக விளங்குகின்றது. அத்தகைய சமூக வாழ்வில் பல்வேறுபட்ட சிந்தனைகளைக் கொண்டு ஒவ்வொரு குழு இன மக்களும் வாழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் தமிழ்ச் சமூகமும் தனி மனிதனுக்குத் தேவையான உயரிய சிந்தனைகளையும் சமூக வாழ்விற்குத் தேவையான உயரிய சிந்தனைகளையும் கொண்டு வாழ்ந்து வந்ததை பண்டைய தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

சங்ககால மக்கள் அறம், பொருள், இன்பம் முதலிய கோட்பாடுகளை நன்கு உணர்ந்து வாழ்வில் நன்னெறிகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள் ஆவர். கபிலர் தாம் கண்ட நல்ல பல சிந்தனைகளைப் பாடல்களின் வழியே எடுத்துரைக்கும் திறத்தை குறிஞ்சிப் பாடல்களில் காணலாம். அறம் செய்தும், அறத்தை வலியுறுத்தியும், அறத்தின் பயனை துய்த்தும் வாழ்ந்தவர்கள் சங்க கால மக்கள். அதன்வழி குறிஞ்சி நிலத்தாரும் தங்கள் வாழ்வில் அறத்தை கடைப்பிடித்த செய்தி ஆராயப்பட்டுள்ளது. ஒருவர் மற்றவரை அன்புடன் ஏற்றுக்கொண்டு அன்பு பாராட்டியதனை குறிஞ்சிநில மக்களிடையே காணலாம். சங்க கால மக்கள் காதல் வாழ்க்கையில் திளைத்து மகிழ்ந்தனர். களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கைக்கு கால்கோளாக விளங்கியது.

சூழலுக்கேற்ப திருமண முறைகளை வகுத்துக்கொண்ட நிலைகள் சங்கப் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மக்கட்பேறு முதன்மையானதாகக் கருதப்பட்டது. விருந்தோம்பல் தமிழ் பண்பாட்டின் தனித்துவமாக பழங்காலத்தில் விளங்கியிருக்கிறது.

குறிஞ்சி நிலமான மலையகத்தில் களவு நெறியின் சிறப்பு ஆராயப்பட்டுள்ளது. குறிஞ்சிநில மக்கள் தனிநிலையில் தனி மனிதனாய்க் கற்றதைவிடக் கூட்டமாக இருந்து அதன்வழியே பெற்ற அறிவே மிகுதி என்று

கூறலாம். வேட்டம் புரிதல், தினை பயிரிடல், அறுவடை செய்தல், தினைக் காத்தல் போன்றவற்றைக் கூட்டமாகச் செய்தனர். இச்செயல்கள் கூட்டுச் சமுதாயம் உருவாகக் காரணமாக இருந்தது. குறிஞ்சி நில மக்களின் நம்பிக்கைகள், பொழுதுபோக்கு, கலைகள் பற்றியும் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

### 4.1. தனிமனிதனின் விழுமியங்கள்

#### 4.1.1. அறம்

அறம் என்ற சொல் விரிந்த பொருளுடையது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தும் இதில் அடங்கும். தமிழரின் அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் அறம் கடைப்பிடிக்கப்படுவதை தமிழ் இலக்கியங்கள் தெளிவாகப் புலப்படுத்துகிறது. மனித வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ள உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு என்பன. நான்கனுள் முதன்மை பெறுவது அறமாகும்.

**"அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே"[1]** (நூ.100)

என்று நன்னூல் எடுத்துரைக்கிறது.

மனித வாழ்க்கையில் மனித வளர்ச்சியைப் போன்று அறவளர்ச்சியும் காலத்திற்கு ஏற்ப நெகிழ்ச்சி பெற்றுள்ளது. பழங்கால மக்கள் பசி, பிணி, பகை, வறுமை ஆகிய வாழ்க்கைப் போராட்டங்களிடையே இன்பமும், பொருளும் பெறப் பல்வேறு நெறிகளையும் பின்பற்றியிருந்தனர். இந்நெறிகளில் பிறருக்கு தீங்கு பயவாத நல்ல நெறியைப் பெற வேண்டும் என்ற ஒழுகலாறு கட்டுபாடாக, கடமை உணர்வாக மக்களிடம் வளர்ந்து ஏற்றுக் கொள்ளப் பெற்ற நெறிகளை அறங்கள் என இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. அறநெறியில் ஈட்டப்பெறாத செல்வமும் இன்பமும் நிலையற்றவை என்று எண்ணும் நிலை ஏற்பட்டது. வஞ்சனையால் ஈட்டப்பெறும் செல்வமும் இன்பமும் பழியென்று கருதப்பட்டன. அறநெறிவழி வாழ்வதே சிறப்பு என்றும் பண்டைத் தமிழர் கருதினர்.

ஒரு கொள்கை வெற்றிபெற வேண்டுமாயின் பின்பற்றுவோர் பெரும்பான்மையாக இருத்தல் வேண்டும். கூடி வாழும் சமுதாய நிலையில் ஒருவருக்கொருவர் உதவுதலும், விட்டுக் கொடுத்தலும் தவிர்க்க இயலாதவையாகி விடுகின்றன. இச்செயல்களுக்கு அறிவும் ஆராய்ந்து பார்க்கும் பண்பும் வேண்டும். இவற்றை மரபு நிலையில் பழக்கத்தின் காரணமாக மக்கள் பின்பற்றிக் கொள்கின்றனர்.

“இன்னும் உற்றுநோக்கிச் சிலர் ‘அறு’ என்னும் இப்பகுதியும் தனிப்பகுதியன்று. இதற்கு மூலப்பகுதி பிறிதொன்று என்று கூறினும் கூறலாம். அல் என்னும் எதிர்மறை இடைச்சொல்லோடு இவ்விகுதி சேர்ந்து வினைத்தகைபட்டு நின்றதே அறு”[2] என்பர் பரிதிமாற் கலைஞர்.

“அறம் என்னும் சொல்லிற்கு 1.நல்வினை, 2.ஐயம்(பிச்சை), 3.ஏழைகட்கு இலவசமாகக் கொடுப்பது, 4.நோயாளிகட்கு இலவசமாக மருந்தீகை, 5.நலமானது, 6.இன்பம்(சுகம்), 7.தகுதியானது, 8.கற்பு, 9.நோன்பு, 10.அறப்பயன்(புண்ணியம்), 11.சமயம், 12.ஓதி(ஞானம்),13.அறச்சாலை, 14.அறத்தெய்வம், 15.நடுநிலையறம் பேணும் கூற்றுவன் போன்ற பதினைந்து வகையான பொருள்களைப் பேரகராதி தருகின்றது”[3].

அறம், பொருள், இன்பம் மூன்றும் வாழ்வின் அடிப்படையாக அமைந்தது. அறத்தினால் பொருளாக்கி, அப்பொருளால் இன்பம் துய்த்தல் சிறப்பாகும். இத்தகைய அறத்தை பழந்தமிழர் மேற்கொண்டு வாழ்ந்தனர்.

**“சாத்த மரத்த பூழில் எழுபுகை**
**கூட்டு விரை கமழும் நாடன்**
**அறவற்கு எவனோ, நாம் அகல்வு?அனனாய் (ஐங்-212)**

என கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

அறப்பண்புகள் நிறைந்த சான்றோனாக இருப்பவன் ஐங்குறு நூற்றுத் தலைவன் என்பதை தோழி குறிப்பிடுகிறாள். ‘பொருட் செல்வமும் அன்பு, அருள், நடுநிலைமை, வண்மை முதலான பண்புச் செல்வமும் கொண்ட தலைவனை மருமகனாக ஏற்பது நமக்குப் பெருமை சேர்க்கும்’ என்பதை இப்பாடலில் கபிலர் குறிப்பிடுள்ளார்.

இதன் மூலம் தலைவன், ‘அறத்தில் சிறந்தவன் மனிதநேயம் உடையவன்’ என்பதை கபிலர் உணர்த்தியுள்ளார். மற்றொரு ஐங்குறுநூறு பாடலில் தோழியின் அறம் கூறப்பட்டுள்ளது. தலைவிக்கு வெறியாட்டு நிகழ்த்த முயலுதல் கண்ட தோழி ‘இனி நம் களவு உறவினைத் தாய்க்கு உணர்த்துவது நல்லது’ என்று கருதி அறச் செயலைச் செய்கிறாள் இதனை கபிலர்,

**அறியாமையின் வெறி என மயங்கி**
**அன்னையும் அருந்துயர் உழந்தனள் அதனால்**
**எய்யாது விடுதலோ கொடிதே - நிரைஇதழ்**
**ஆய்மலர் உண்கண் பசப்ப**
**சேய்மலை நாடன் செய்த நோயே (ஐங்-242)**

என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார். 'உயர்ந்த மலைக்கு உரிமையுடைய நம் காதலனே இந்நோய்க்கு காரணம், என்ற உண்மையை நாம் மறைத்து அவள் அறியாது விடுதல் நமக்குத் தீமையாகவே முடியும்' என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். இதில் தோழியின் அறம் கூறப்பட்டுள்ளது.அதாவது நடுநிலையோடு தன் செயலைச் சரிவர செய்து தலைவிக்கு மகிழ்ச்சியான மண வாழ்க்கையை அமைத்துத்தர தோழி அடிகோலுகிறாள்.

**4.1.2. பொருளீட்டல்**

பொருளின் தேவையைப் பண்டைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதனை ஈட்டுதற்காகச் தம் மனைவியரைப் பிரிந்து நெடுந்தொலைவிலுள்ள நாடுகளுக்குச் சென்றதைச் சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. சமுதாயத்தின் இகழ்ச்சிக்கு ஆளானவர்களும் பொருள் உடையவர்களாக இருந்தால் மதிக்கப்படுவர் என்ற உலகியல் உண்மையை உணர்ந்த புலவர்கள் தம் படைப்புகளில் பொருள்வயிற் பிரிவினை அடிக்கருத்தாகக் கொண்டுள்ளனர்.

"பொருள்வயிற் பிரிவு என்னும் இத்துறை சங்கப் புலவர்களின் நெஞ்சை அள்ளிய துறைகளுள் ஒன்று. இன்பமும் கடமையும் போராடும் இடமாக நல்ல உணர்ச்சிகள் மோதிக் கொள்ளும் இடமாக இத்துறை அமைந்திருப்பதைக் காணலாம்"[4] என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகிறார். பொருளின் இன்றியமையாமையை விளக்கும் வண்ணம் தலைவன் பலமுறை பொருள்வயிற் பிரிவை மேற்கொண்டதை அறிய முடிகிறது.

பழங்காலம் முதல் பொருளீட்டலை ஒரு கொள்கையாகக் கொண்டுள்ளனர் தமிழர்கள்.

**உலகம் படைத்த காலை - தலைவ**
**மறந்தனர் கொல்லோ சிறந்திசினோரே (நற்-337)**

என்ற வரிகள் வழி இதனை அறிய முடிகிறது.

தொழில் செய்து பொருள் ஈட்டுதலே தலைவனுக்கு உயிர் போன்றது. இதைப் போலவே இல்லத்தில் இருந்து கடமையைச் செய்யும் தலைவிக்கு தலைவனே இன்பத்தையும் மகிழ்ச்சியையும் ஊட்டும் உயிராக விளங்குகிறான்.

**வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் (குறு-135)**

என்ற பாடல் வழி ஆடவர் வினையை உயிராகக் கருதியதை பாடலில் கபிலர் பதிவு செய்துள்ளார்.

**ஓட்டு இயல் பிழையா வயநாய் பிற்பட**

**வேட்டம் போகிய குறவன் காட்ட**

**குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர**

**முளவுமாத் தொலைச்சும் குன்றநாட”        (அகம்-182)**

என்ற பாடலில் விலங்குகளைத் துரத்திப் பிடிக்கும் இயல்புடைய வலிய வேட்டை நாய்கள் பின்னே வர வேட்டைக்குச் செல்கிறான் தலைவன். சென்றவன் காட்டு மல்லிகையின் குளிர்ந்த புதரானது குருதிக்கறையுடன் அசையும் படி அதனுள் பதுங்கியிருந்த, முள்ளம் பன்றியைக் கொன்று வீழ்த்தினான் என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிலை உயிராக எண்ணி வேட்டைத் தொழிலை மேற்கொள்கிறான். விலங்குகளை வேட்டையாடிக் கொன்று அதன் மாமிசத்தை தான் மட்டும் உண்ணாது பகிர்ந்து கொடுத்து மகிழ்ச்சி அடைகிறான். வேட்டையாடிய யானையின் மருப்பினை விற்று அதன் மூலம் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு இல்லறத்தை இனிதே நடத்திச் செல்கிறான்.

### 4.1.3. நட்பு

உயிருடன் உயிர் கலந்து ஓருயிராய் ஒன்றிய தன்மை உயர்ந்த நட்பாகும். இந்நட்பில் வெறுப்பு என்பது தலைகாட்டுவதில்லை. இந்நட்பிற்கு பிரிவு என்பது என்றும் இல்லை. யாராலும் பிரிக்க முடியாத அத்துணை நெருக்கமாக அமைந்தது உயர்ந்த நட்பு. இருதலைப் புள்ளிற்கு ஓருயிர் அமைந்தார் போன்று ஈருடல் ஓருயிராய் விளங்கும் நீர்மையராவர் நட்பினர். மேலும் பிறப்பு தோறும் தொடர்ந்து வரும் ஒரு பிணைப்புமாகும். இந்நட்பு பற்றிய செய்திகள் கபிலர் பாடல்களில் காணப்படுகின்றன.

**நேர்இறைப் பணைத்தோள் ஞெகிழ**

**வாராய் ஆயின் வாழேம் தெய்யோ        (ஐங்-239)**

இப்பாடலில் தோழியின் நட்பு கூறப்படுகிறது. வரவிடை வைத்துப் பிரிந்து செல்ல விரும்புவதாக தலைவன் கூறக்கேட்ட தோழி அவனிடம், ‘நீ சென்ற பின்னர், இங்குள்ள என் தோழியின் நேரிய கோடுகள் கொண்ட மூங்கில் போன்ற மெல்லிய தோள்கள் நெகிழும். நீ சொன்ன காலத்தில் வரத்தவறினால் யாம் உயிர் வாழ்தல் அரிது’ என்று கூறினாள்.

இதில் தோழிக்கும் தனக்கும் உள்ள உயிர் நட்பினை உணர்த்தினாள். கபிலர் தோழியின் நட்பை மட்டும் கூறவில்லை.தலைவி தலைவன் மீது கொண்டுள்ள நட்பின் ஆழத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

**புரைய மன்ற புரையோர் கேண்மை**

**நீர்இன்று அமையா உலகம் போலத்**

**தம்இன்று அமையா நம் நயந்தருளி (நற்-1)**

என்று குறிப்பிடுகிறார்.அதாவது ‘நீர் இல்லாது இவ்வுலகம் அமையாதது போல தலைவன் இல்லாமல் தான் இல்லை என்பதை தலைவர் உணர்ந்தவர்’ என்று கூறுவதிலிருந்து தலைவியின் நட்புள்ளம் தெரிகிறது. இன்பத்தைப் பெருக்கவும் துன்பத்தைக் குறைக்கவும் இணைந்து துணையாகும் அன்புடையவரால் தான் வாழ்வு முழுமை அடைகின்றது. “இன்பத்திற்கு எவரும் துணை வருவார். ஆயின் துன்பத்திற்கு யாரே துணையாவர்? துன்பத்திற்குத் துணையாக வருபவரே நண்பரும் காதலரும் ஆவர்.”[5] மற்றொரு பாடலிலும் தலைவியின் நட்பு எடுத்தாளப்படுகிறது.

**எந்தையும் நிலன்உறப் பொறாஅன் சீறடிசிவப்ப**

**எவன் இல குறுமகள் இயங்குதி என்னும்**

**யாமே பிரிவுஇன்று இயைந்த துவராநட்பின்**

**இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே (அக-12)**

என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார். ‘என் தாய் என் மீது மிகுந்த அன்புடையவள். நிலத்தில் நடந்தால் கால்கள் சிவந்துவிடும்’ என்று கூறுவார். எங்கும் செல்லாதே’ என்று தந்தை சொல்கிறார். நான் என் பெற்றோர் மீது கொண்ட அன்பும், தலைவன் மீது கொண்ட அன்பும் ஆக இருதலையை கொண்ட பறவை போன்று வாழ்கிறேன்’ என்று தலைவியின் மனநிலை கூறப்பட்டுள்ளது. இப்பாடலில் தலைவி தலைவன் மேல் கொண்டுள்ள நட்பும் பெற்றோர்கள் மீது கொண்டுள்ள அன்பும் கூறப்பட்டுள்ளது. பெற்றோரின் அன்பிற்கு இணையாக தலைவனின் நட்பை தலைவி எண்ணுவதை இதன்வழி அறியலாம்.

### 4.1.4. செய்ந்நன்றி மறவாமை

ஈன்று வளர்த்த தாய் தந்தையர்க்கு புதல்வர் நன்றிக்கடன் செலுத்துவது சிறந்த பண்பாகும். நன்றி செய்பவர்களைப் பாராட்டி பேசுதல் உதவியைப் பெற்றவர்களது பெருங்கடமையாகும். பாவங்களிலும் கொடிய பாவம் செய்ந்நன்றி மறத்தலாகும். அந்தவகையில் நன்றி மறவாதவர்களாக குறிஞ்சி நிலமக்கள் இருந்தனர்.

**பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரே (குறு-115)**

என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார். பெரிய நன்மையை ஒருவர் செய்தால் அவரை அனைவரும் போற்றுவர். ஏனெனில் ஒருவர் நன்மை செய்தால் அதனை

நினைந்து போற்றுதல் நல்ல பண்பாகும் என்ற கருத்தை தோழியின் வாயிலாக கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தோழி கூற்றின் வாயிலாக நன்றி மறவாமை என்பது ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய பண்புகளுள் சிறந்த பண்பு என்பதையும் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**நன்றி மறந்தனை ஆயின் மென்சீர்க்**

**கலிமயிற் கலாவத்து அன்ன இவள்**

**ஒலிமென் கூந்தல் உரியவா நினக்கே (குறு-225)**

இப்பாடலில் 'செய்ந்நன்றியை மறவாது விரைவில் வரைந்து கொள்ள வேண்டும்' எனத் தலைவனுக்கு அறிவுறுத்துகிறாள் தோழி. 'நீ துயருற்ற காலத்து யான் தலைவியை நின்னோடு கூட்டிய செய்ந்நன்றியை மறவாது இன்று நீ வரைந்து கொள்வாயாயின் இவள் கூந்தல் நினக்குரியது' என்று தோழி அறிவுறுத்துகிறாள். தலைவன் தலைவியை மறக்கமாட்டான் என்பது தோழிக்குத் தெரியும், இருப்பினும் அவன் வரைவினை விரைந்து செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இவ்வாறு கூறுகிறாள்.

ஆக, தனிமனிதனின் பண்புகளுள் ஒன்றான செய்ந்நன்றி மறவாமையைக் கபிலர் மேற்கண்ட பாடல்களில் பதிவு செய்துள்ளார். குறிஞ்சி நிலமக்கள் நன்றியை எண்ணுபவர்கள் என்பதையும் இதன்வழி அறியலாம்.

### 4.1.5. சான்றோர் மாண்பு

சான்றோர் தீமை செய்பவர் திறத்தினை நேரில் கண்டு அதனை நன்கு ஆராய்ந்த பின்னரே அவர்க்கு அறிவுரை கூறுவர். நல்லன கூறுதற்கு ஒருபோதும் சான்றோர் அஞ்சினாரில்லை. சான்றோர் செய்ந்நன்றி மறத்தலை விட இழிவான செயல் வேறொன்று இருக்க இயலாது என்னும் எண்ணம் வேரூன்றப் பெற்றவர். செய்ந்நன்றி கொன்றவனுக்கு உய்வே இல்லை என்பது வள்ளுவரின் கோட்பாடு. சிறந்த பண்புடைய சான்றோர் பற்றி கபிலர் அகநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்.

**பிறர்உறு விழுமம் பிறரும் நோப**

**தம்உறு விழுமம் தமக்கோ தஞ்சம் (அகம்-382)**

பிறருக்கு ஏற்படும் துன்பத்தைக் கண்டால் நல்லோர் தாம் அயலார் ஆயினும் அதற்காக வருந்தி அதனை துடைக்க முற்படுவர். தமக்கு நேரும் துன்பத்தைப் பெரிதெனக் கருதாது எளிதெனக் கொண்டு பொறுமையுடன் தாங்கிக் கொள்பவரே சான்றோர். இதனை வள்ளுவர்,

**“அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்**

**தந்நோய் போல் போற்றாக்கடை”[6] (குறள்-315)**

என்று கூறுகின்றார். குறிஞ்சி நில மக்களில் சான்றோர் எத்தகையவர் என்பதையும் மேற்குறிப்பிட்டுள்ள பாடலில் கபிலர் பதிவு செய்திருப்பதை அறியலாம்.

### 4.1.6. பெரியோர்களின் அறிவுரை

ஒழுக்க நெறிகளை தன் கண் என நினைத்து வாழ்பவர்கள் பெரியோர். நல்லோரின் வழிகாட்டல் இருந்தால் தீயநெறிகள் அகன்று நன்மை பெறுவர். புல்லின் மீது படர்ந்த பனித்துளி வெப்ப நேரத்தில் அகல்வது போல, பெரியோரை சேர்ந்து வாழ்வதால் பாவம் அனைத்தும் அகன்று விடும். துன்பமின்றி வினைகள் நீங்கி இன்பம் அடைவர்.

**அறியாப் பருவத்து அடங்காரோடு ஒன்றி**

**...............................................**

**...............................................**

**புற்பனிப் பற்றுவிட் டாங்கு[7] (நாலடியார்-171)**

என்ற இப்பாடல் மேற்கண்ட கருத்தை உணர்த்துகிறது.

இவ்வுலகில் பிறவி பற்றிய நம்பிக்கை உண்டு. அந்த வகையில் புல் முதலாய் மனிதர்கள் வரை யாரும் பிறவி கொண்டு வாழ்க்கின்றனர். பண்புள்ள மனிதனிடம் எந்நாளும் நட்பு கொள்ள வேண்டும். பொல்லாத தீய சூழ்நிலை வந்தாலும் பெரியாருடன் கொண்ட நட்பை வெறுக்கக் கூடாது. அத்தகைய நட்பு எந்நாளும் நன்மையை உண்டாக்கும் என்பது திண்ணம். இக்கருத்திற்கேற்ப கபிலரும் தம்பாடலில் பெரியோரின் நற்குணங்களைக் கூறியுள்ளார்.

அறிவு மிக்க சான்றோர், தம்மோடு நட்புகொள்ள விரும்பியவர்களின் குணங்களை நன்கு தெரிந்த பின்புதான் நட்புக் கொள்வர். நட்பு கொண்ட பிறகு அவர்தம் குணங்களை ஆராயமாட்டார் என்பதை கபிலர் நற்றிணையில்,

**அரிய வாழி தோழி பெரியோர்**

**நாடி நட்பின் அல்லது**

**நட்டு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே (நற்-32)**

என்று குறிப்பிட்டுள்ளார். பெரியோர்களின் பண்புகளைக் கடைபிடித்து மக்கள் வாழ வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுவது இதன்வழி தெரிகிறது.

இன்றும் நாம் சில செயல்பாடுகளைச் செய்ய விழையும்போது பெரியோர்களின் அறிவுரையைக் கேட்டு அதன்வழி செயல்படுகிறோம். காரணம், பெரியோர் அனுபவம் உடையவர்கள். அவர்கள் சொல் கேட்டு செயல்பட்டால் வெற்றி கிடைக்கும் என்ற எண்ணத்தில்தான் அவ்வாறு செய்கிறோம். பெரியோர்களின் அறிவுரையைக் கேட்டு நடந்தால் வாழ்க்கை சிறப்பானதாக அமையும்.

### 4.2. குடும்பம்

மனித சமுதாயத்தில் மிகத் தொன்மையான நிறுவனம் குடும்பமேயாகும். இது எல்லாச் சமுதாயங்களிலும் எல்லாக் காலங்களிலும் நிலவி வருகிறது. மானிட வாழ்வின் தொடக்கத்திலிருந்தே குடும்பத்திற்கான அடித்தளம் நிலவி வருகிறது. இன்று எண்ணற்ற சமுதாயங்களை ஏற்படுத்திக் கொண்டு அதன் அமைப்பாலும் செயலாலும் வேறுபடுகின்றன. ஆனால் அனைத்திலும் குடும்பம் என்னும் நிறுவனமே மிகவும் இன்றியமையாத அடிப்படை அலகாகச் செயல்படுகின்றது. அவ்வாறே மக்கள் வாழ்நாள் முழுவதும் அவர்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள குடும்பம் என்னும் அமைப்பே முதலிடம் பெறுகிறது. இதில் ஒவ்வொருவரின் வாழ்க்கையின் பெரும்பகுதி குடும்பமாக அமைகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை இந்த அமைப்புடன்தான் மக்கள் தொடர்ச்சியாகச் செயல்படுகின்றனர். ஏனெனில் இது மக்களின் உயிரியல், உளவியல், வாழ்வியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் குடும்பமானது நிறைவு செய்கிறது. "உடைமைச் சிந்தனை நிரம்பிய, நிலவுடைமைச் சமுதாயத்தில் குடும்பம் என்பது ஓர் இன்றியமையா உறுப்பாகும். ஆதலின் அது அங்கே தவிர்க்க முடியாததாகிறது."[8] அதனாலேயே குடும்பம் என்னும் அமைப்பு இடம், காலம் அனைத்தையும் கடந்து எல்லாப் பண்பாடுகளுக்கும் பொதுவான ஓர் உலகளாவியப் பண்பாகத் திகழ்கிறது.

"குடும்பமே அடிப்படை சமூக அலகாகும். திருமணத்தின் மூலம் பிணைக்கப்பட்டு ஒரு குடியிருப்பில் கணவன், மனைவி, தாய், தந்தை, மகன், மகள், தம்பி, தங்கை போன்ற உறவு முறைகளுடன் பொதுப் பண்பைப் படைத்தும் பாதுகாத்தும் வளர்ச்சியுறுவதே குடும்பம்"[9] என்று பிரித்தானியக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகிறது.

"குடும்பம் எல்லாச் சமூகங்களிலும் உள்ள அடிப்படையான அமைப்பு, குடும்பத்தினின்று உறவு ஏற்படுகிறது. சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும்

குடும்பம் அடிப்படையானது. இக்குடும்பம் சமூக வழக்காலும் சமயத்தாலும் கட்டுப்படுகிறது"[10]எனக் குடும்பத்திற்கான விளக்கத்தை தமிழ்க் கலைக்களஞ்சியம் அளிக்கிறது.

"மனிதன் தன் வாழ்க்கையில் பல்வேறு குழுக்களில் பங்கேற்றுச் செயல்படுகிறான். அவற்றுள் முதன்மையானது குடும்பம். இதில் தான் அவனுடைய வாழ்க்கையின் பெரும்பகுதி அமைகிறது. பிறப்பிலிருந்து இறப்பு வரை அவன் இக்குழுவோடு பிணைப்பு வைத்திருக்கிறான். அவனுடைய வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பது குடும்பம்"[11]என்று குடும்பத்திற்கு வாழ்வியற் களஞ்சியம் விளக்கம் அளிக்கிறது.

சங்க இலக்கியத்தில் குடும்பம் என்ற சொல் காணப்படவில்லை. ஆனால் குடும்பத்தைக் குறிக்கும் வேறு சொற்கள் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இல், மனை, நகர்,முன்றில்,முற்றம், குரம்பை, வரைப்பு, மாடம், குடில், கூரை ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குடும்பத்தை 'இல்லறம்' என்றே அழைத்தனர். திருக்குறளிலும் இல்வாழ்க்கை என்றே கூறப்பட்டுள்ளது. "இல்லறம் என்பதை இல்வாழ்க்கை என்று அகராதி பொருள் கூறுகிறது"[12] மனையறம் என்பதும் இல்லறத்தைக் குறிக்கும். தொல்காப்பியர் இல்லற நெறியைக் கற்பு நெறியாகக் கொள்வார்.

**"மறை வெளிப்படுத்தலும் தமரிற் பெறுதலும்**
**இவை முதலாகிய இயலநெறி பிழையாது**
**மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்**
**பிரிவொடு புணர்ந்து கற்பெனப் படுமே"[13] (தொல்.பொருள்-1437)**

என்ற நூற்பா வழி தமிழரின் பழங்கால இல்லற நெறியை அறியலாம்.

"பண்டைத் தமிழர் குடும்ப வாழ்வைப் பற்றி மிகவும் உயர்ந்த கொள்கைகளைக் கொண்டிருந்தனர். அவர்கட்கு அறம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதியன்று. வாழ்வு முற்றுமே அறமாகும். எனவே தான் குடும்ப வாழ்க்கையினை இல்லறமாகக் கொண்டனர்"[14] என்பார் அ.தட்சிணாமூர்த்தி. இந்நிலைப்பாடு வாழ்க்கையில் அறம் பெற்றிருந்த இடத்தைத் தெளிவு படுத்துகிறது.

சங்க அகப்பாடல்களில் பெரும்பான்மையாக தலைவன் தலைவியின் அன்பு நிலை அவர்களைச் சுற்றி வாழும் விலங்குகளின் அன்பு நிலை வழிப் புலப்படுத்தப்படுகிறது. அதன்வழி வாழ்வியல் அறங்களும் விளக்கப் பெறுகின்றன.

**தலைவனின் அன்பு வெளிப்பாடு**

*கலித்தொகையில் வரும் தலைவன், தலைவி மேல் காதல் கொள்கிறான். அவள் பந்து விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து பின்வருமாறு பேசத் தொடங்குகிறான்.*

**பூந்தண் தார் புலர் சாந்தின் தென்னவன் உயர்கூடல்**
**தேம்பாய அவிழ் நீலத்து அலர்வென்ற அமர்உண்கண்**
**ஏந்து கோட்டு எழில்யானை ஒன்னாதார்க்கு அவன்வேலின்**
**சேந்து நீ இணையையால் ஒத்ததோ? சின்மொழி**[14] **(கலி-21)**

*என்ற பாடல் தலைவன் கூற்றாக அமைகிறது. 'பாண்டிய நாட்டுப் பாவையே! பாண்டியன் தன் பகைவர் மீது ஏவிய அம்பு போல் இருக்கிறதே உன் மையுண்ட கண்கள். பாண்டியன் படையிலே மதம் கொண்ட யானைகள் தன் கோடுகளால் எதிரிகளைக் குத்தி இன்னல் படுத்துவதுபோல என்னைக் குத்துகிறது உன் மார்பு. எப்படியாவது அந்தத் தலைவியை அடைய வேண்டும்' என்று தலைவியை நோக்கிப் புலம்புகிறான். இதிலிருந்து தலைவன் தலைவி மேல் கொண்டுள்ள அன்பு புலப்படுகிறது.*

*"அன்பு மனித வாழ்வில் அடித்தளம், அன்பே இன்ப ஊற்று, அன்பே பேராற்றல் கொண்டது. அன்பே வசீகரமானது அன்பே மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றது."*[15] *உலகில் எந்த உயிரும் அன்பு இல்லாமல் வாழ முடியாது. பறவைகள், விலங்குகள் தங்கள் இனத்தில் கூடி அன்புடன் வாழ்வது போல மனிதனும் அன்புடன் வாழ நினைக்கிறான் என்பதை கபிலர் இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார்.*

*தலைவியிடம் தலைவன் கொண்ட அன்புணர்வு பிரிவின் வழி வெளிப்பாடு மிகுந்திருந்தது. "தலைவன் வினையின் காரணமாகவும், பொருள் தேடும் விருப்பத்தின் காரணமாகவும், தலைவியை விட்டுப் பிரியும் சூழல் நேர்கின்றது"*[16] *என்று ஆர்.இராமகிருஷ்ணன் குறிப்பிடுகிறார்.*

**'திரைகடலோடியும் திரவியம் தேடு'**

*என்பதற்கிணங்க பொருள் ஈட்டுதலை ஆடவர் கடமையாகப் போற்றினர்.*

**'வினையே ஆடவர்க்கு உயிரே' (குறு.125)**

*என்று குறுந்தொகை குறிக்கின்றது. தலைவன் பொருள் தேடுதலும் தலைவியின் நல்வாழ்விற்கே என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.*

**4.3. தலைவியின் அன்பு வெளிப்பாடு**

*தலைவி தலைவன் மேல் உள்ள அன்பை மட்டுமே முதன்மையாகக் கருதுகிறாள். பொருள் இரண்டாவதாகத்தான் தெரிகிறது. "ஆண் பெண்ணின்*

*உடல் வனப்பில் ஈடுபடுவது போல், பெண் ஆடவனின் உடல் வனப்பில் மிகுதியாக ஈடுபாடு கொள்ளாது பண்பு நலன்களை ஆணிடமிருந்து எதிர்பார்க்கிறாள் என்று சங்க இலக்கியம் காட்டுகிறது.”*[17]

*தலைவன் பிரிவை தலைவியால் ஏற்க முடியவில்லை என்ற செய்தியை கபிலர்,*

**ஏறாது இட்ட ஏமப் பூசங்**

**விண்தோய் விடரகத்து இயம்பும்**

**குன்ற நாடற் கண்டஎம் கண்ணே (குறு.241)**

*என்று குறிப்பிட்டுள்ளார். ‘உயர்ந்த மலைக்குரிய தலைவனைக் கண்ட என் கண்கள் நட்பு முதிர்வின் காரணமாக அவர் பிரிந்தமைக் கருதி அழுதலைச் செய்தன’ என்று தலைவி கூறுவதன் வாயிலாக தலைவன் மேல் கொண்டுள்ள அன்பு புலப்படுகிறது.*

*‘மென்மையின் உறைவிடம் பெண்மை, ஆண்மை வலிமையின் சின்னம். ஆனால் அந்த ஆண்மை மென்மையை எதிர்கொள்ளும் போது அதன் உறுதி தகர்ந்து விடுகிறது. மென்மையோ தன் இயல்பான நாணத்தால் தலை கவிழ்கிறது. முடிவில் மென்மையின் சக்தியே தளர்ந்து ஆண்மைக்கு இரக்கம் காட்டுகிறது. இது காதலில் இலக்கணம் இது வாழ்க்கைத் தத்துவமுமாகும்.*[18]

*ஆக இல்லறத்தில் தலைவனும் தலைவியும் தங்களுக்குள் ஒத்த அன்புடையவராகவே காணப்பட்டனர் என்பது குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் கூறும் செய்தியாகும்.*

### 4.4. காதலை ஏற்றுக் கொள்ளுதல்

*கலித்தொகையில் வரும் தலைவன் தலைவி மேல் காதல் கொள்கிறான். களவொழுக்கம் நீடிக்கிறது. தலைவன் தலைவியரின் களவு பற்றி வீட்டிலுள்ள தமையன்மார் அறிந்ததும் கொதித்தெழுகின்றனர். இச்சூழ்நிலையில் அறத்தொடு நிற்றல் முறையாக நிகழ்ந்த செய்தியைக் கபிலர் குறிப்பிடுகிறார்.*

**அறத்தொடு நின்றேனைக் கண்டு திறம்பட**

**என்னையர்க்கு உய்த்து உரைத்தாள், யாய்**

**அவரும் தெரிகணை நோக்கி சிலை நோக்கி கண்சேந்து**

**ஒருபகல் எல்லாம் உருத்து எழுந்து ஆறி**

**இருவர் கண் குற்றமும் இல்லையால் என்று**

**தெருமந்து சாய்த்தார் தலை (கலி-3)**

என்ற பாடலில் தலைவியின் வரைவு மறுத்த இடத்து தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள். செவிலித் தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றாள். நற்றாய் தமையன்மார்களுக்குத் தக்கவாறு கூறினாள். அதுகேட்டு அவரும், ஒரு பகல் எல்லை அளவும் நெஞ்சழன்று, கண் சிவந்து சினத்துடன் இருந்தனர். பின்பு சினம் தணிந்து இருவர் மாட்டும் குற்றம் இல்லையாம் என்று உணர்ந்து சினம் மாறி திருமணத்திற்கு உடன்பட்டனர் என்று தோழி கூறுகிறாள். இதன் வாயிலாக, தலைவியின் காதலை ஏற்றுக் கொள்வார்களா? மறுப்பார்களா? என்ற வினாவுடன் இருந்த தோழியின் மனதிற்கு மகிழ்ச்சியளிக்கும் விதமாக திருமணத்திற்கு தலைவி வீட்டார் உடன்பட்டனர்.

இன்றும் இத்தகைய நிலை மனித வாழ்க்கையில் ஏற்படுவதுண்டு. குடும்பத்தினர் முதலில் காதலை மறுத்து பின்னர் உடன்பட்டு அவர்களது தலைமையில் திருமணம் நடைபெறும் நிகழ்வுகளைக் காணமுடிகிறது. இத்தகைய நிலையை பண்டையத் தமிழர்களும் குறிப்பாக, குறிஞ்சி நிலமக்களும் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்திருப்பதை இதன் வழி அறியலாம்.

### 4.5. திருமணம்

சங்க கால மக்கள் காதல் வாழ்க்கையில் திளைத்து மகிழ்ந்தனர். களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கைக்குக் கால்கோளாக விளங்கியது. குறிஞ்சி நிலமான மலையகத்தில் களவுநெறி சிறப்பிக்கப்பட்டது. “ஓர் ஆடவனும், ஒரு பெண்ணும் கணவனும் மனைவியாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்று சேர்வதே மணமாம். மணத்தை மணத்தல், கலத்தல் அல்லது கூடுதல் என்றும் கூறலாம். மணவாழ்க்கைக்கென்றே இறைவன் மக்களை ஆணும், பெண்ணுமாய்ப் படைத்திருப்பதாலும், மணவாழ்க்கையில் மிகுந்த அறப் பொறுப்புள்ளமையாலும், அது ஆயிரங்காலத்துப் பயிர் ஆகையாலும், வாழ்க்கைத் துணைவர் இருவரும் பலரறிய திருமணம் எனப் பெற்றது”[19] இப்பெயர் பின்னர் திருமணத் தொடர்பான விழாவையும் குறித்தது.

திருமணம் என்பது ஓர் ஆணும், பெண்ணும் கணவன், மனைவியாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்று சேர்வதே மணமாகும். இந்த இணைப்பு சமூகத்தால் அனுமதிக்கப்பட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டும் அமைகிறது.

“ஓர் ஆணும், பெண்ணும் கணவன், மனைவியாகத் திருமணத்தின் வாயிலாகத் தான் இணைய முடியும் என்று சமூகம் வரையறுத்து அதை நிலை நிறுத்தியிருக்கிறது. திருமணம் ஓர் ஆணும், பெண்ணும் வாழ வழி வகுத்து

குடும்பத்தைத் தொடங்கி வைக்கிறது"[20] என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகிறது.

குடும்ப வாழ்வின் தொடக்கம் பண்படுத்தப்பட்ட சமூகத்தில் திருமணமாகவே அமைகிறது. "கட்டுப்பாடு, ஒழுக்கம் என்ற நியதிகள் இல்லாமல் மனிதன் வாழ்ந்து வந்தான். நாகரிகம் வளர வளரச் சடங்குகள் தோன்றின. இதனால் மனிதனும் தன் உணர்வுகளை ஒழுக்கம் என்னும் பண்பிற்குள் நுழைத்து ஒருவனுக்கு ஒருத்தியாக வாழும் நிலை உருவாகியதனை அறியமுடிகிறது"[21] என்று அரங்கன் திருமண சடங்குகள் குறித்துக் கூறியுள்ளார்.

**4.5.1. திருமணத்தை வலியுறுத்தல்**

பண்டைக் காலத்தில் திருமணச் சடங்குகள் இல்லாமல் காதலித்து காதல் வழி கணவனும் மனைவியுமாக வாழ்ந்து வந்தனர். அவ்வாறு வாழத் தடைக்கற்களாகப் பொய்யும், வழுவும் தோன்றியது. இதனை,

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப"[22] (தொல்,பொருள். 1091)**

என்ற நூற்பாவழி அறியலாம். ஒருவனுடைய உலக வாழ்க்கை உயர்வுக்கு இன்றியமையாத துணை அவன் மனைவியே ஆவாள். ஆதலால் திருமணத்தின் அவசியத்தை இதன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

"குமரியர் பூவணியும் உரிமையைத் திருமண நாள் முதல் பெறுகின்றனர். தலைவி இல்லறத்தி, மனைவியானாள் என்பதற்குப் பூக்கரணம் செய்யப்படும்.

**நன்மனை வதுவை அயரவிவள்**

**பின்னிருங் கூந்தலி மலரணிந்தோயே (ஐங்.296)**

என்று மணஞ்செய்து களவொழுக்கத் தலைவனைப் பார்த்து தோழி மனமார வாழ்த்துகின்றாள். 'கூந்தலைப் பின்னி மலரணிந்தான்' என்று கூறாமல் 'பின்னிய கூந்தலில் மலரணிந்தான்' என்று கூறுவதால், பின்னிய நிலை குமரிக்கோலம் என்றும் மலரணிகை கற்புக் கோலம் என்றும் தெளிவாதல் வேண்டும் என்பர்."[23]

**"தண்கயத் தமன்ற ஒண்பூங்குவளை**

**அரும்பலைத் தியற்றிய சுரும் பார் கண்ணி**

**பின்னுப் புறந்தாழக் கொன்னேசூட்டி (அகம்.80)**

என்ற பாடலில் தலைவியின் பின்னிய கூந்தலில் குவளைக் கண்ணியை தலைவன் சூட்டினான். கூந்தலில் பூவைக் கண்டவளவிலேயே ஊர்ப்பார்வை

மாறிவிட்டதே என்று தலைமகள் நொந்து கொள்ளினும், ஒருவனோடு ஒருத்திக்கு உறவு உண்டு என்பதற்கு மலர் போதுமான அடையாளம் என்று ஊரார் துணிவுற்று அலர் மொழிந்தனர் என்று அறிய வேண்டும் என்பர்."[24]

குறிஞ்சி நிலத்தில் உள்ள தலைவனும் தலைவியும் தாமே எதிர்ப்பட்டு அன்பு வயத்தராகிப் பழகிய நிலையில் மணம் செய்து கொண்டனர். பலரும் அறிந்த நிலையில் மணம் நிகழ்ந்தது. வேங்கை மலரும் பருவத்தில் நிறைமதி நாளில் மணம் செய்வது அக்கால வழக்கமாக இருந்தது. வேங்கை மரத்தின் கீழ் மணம் நடைபெற்றது.

**கங்குல் வருதலும் உரியை பைம்புதல்**
**வேங்கையும் ஒள்இணர் விரிந்தன**
**நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே (அகம்-2)**

என்ற அகநானூற்றுப் பாடலில் பசுமையான புதர்கள் சூழ்ந்த வேங்கை மரத்தில் பூங்கொத்துக்கள் விரிந்துள்ளன. சந்திரனும் முழுச்சந்திரன் ஆனான். வேங்கை மலரும் காலத்தில் பூரணச் சந்திரன் இருக்கும்போது திருமணம் செய்வது பழங்காலத்தில் அமைந்திருந்ததை கபிலர் பதிவு செய்துள்ளார். கலித்தொகையிலும் இச்செய்தி கூறப்பட்டுள்ளது. இதனை,

**வேங்கை விரிவு இடம் நோக்கி (கலி.2)**

என்ற அடியிலும் இடம் பெற்றிருப்பதை அறியமுடிகின்றது.

**நெறி அறி செறி குறி புரிதிரிபு அறியர் அறிவனை முந்துறீஇ**
**தகைமிகு தொகை வகை அழியும் சான்றவர்இனமாக (கலி:3:46,47)**

என்ற பாடலில் நூல் நெறி அறிந்தவனும், இருவரும் கூடும் முகூர்த்த நாளைக் குறிப்பதில் வல்லவனும், தான் குறிக்கும் நாள் தப்புதல் அறியாதவனும் ஆகிய காலக்கணியானை முன்னாகக் கொண்டு தகை மிக்கவரும்,தொகைவகை அறிந்தவருமான, சான்றோர் சூழ, உயர்ந்த மலைக்கு உரியவன் பெண் கேட்டு வந்தனன் என்று தோழி தலைவியிடம் கூறுவதன் மூலமாக நல்ல நாள் பார்த்து திருமணம் செய்யும் வழக்கம் குறிஞ்சி நில மக்களிடம் உள்ளது கூறப்பட்டுள்ளது.

### 4.5.2. பல்வேறு மண முறைகள்

ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் என்னும் நிகழ்வு வாயிலாக இணைவதற்கு மணமக்கள் இருவரின் தனிப்பட்ட ஒப்புதலும், மணமக்களின் குடும்பத்தார் ஒப்புதலும் தேவைப்படுகின்றன. இவைத்தவிர வேறு வகையிலும் மணத்துணை ஒப்பந்தம் செய்து கொள்ளும் முறைகள் பண்பாடுகளில்

காணப்படுகிறது. திருமண நிகழ்வு உலகம் தழுவிய நிலையில் ஒரே வகையாக நடைபெறுவதில்லை. பல வகையான மணமுறைகள் நிலவி வருவதை அறியலாம்.

களவு வாழ்க்கை மேற்கொண்டு தலைவன்,தலைவியின் மணம் இரண்டு வகை நடந்தது என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

**4.5.2.1. பெண் கேட்டு மணத்தல்**

தலைவனின் பெற்றோர் தலைவியின் பெற்றோரிடம் பெண் கேட்டு, தலைவியின் பெற்றோர் மனமுவந்து தம் பெண்ணைக் கொடுக்க தலைவன் மணந்து கொண்டான்.

**"கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்**

**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**

**கொடைக் குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"[25]**

(தொல்,பொருள்-1088)

என்ற இந்நூற்பாவின் வாயிலாகப் பெண் கேட்டுத் திருமணம் முடித்தது தெரியவருகிறது.

**4.5.2.2. உடன்போக்கு மேற்கொண்டு மணத்தல்**

களவு வாழ்க்கை மேற்கொண்ட தலைவனுக்கும், தலைவிக்கும் திருமணம் பெற்றோர் ஒப்புதலின்றியும் நடைபெற்றுள்ளது. பெண்ணைப் பெற்றவர் காதலனுக்குப் பெண்ணைக் கொடுக்காத போது, தலைவனும் தலைவியும் உடன்போக்கு மேற்கொண்டு திருமணம் முடித்துக் கொண்டனர். இதனை தொல்காப்பியர்,

**"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**

**புணர்ந்து உடன்போகிய காலையான்"[26]** (தொல்,பொருள்-1089)

என்று குறிப்பிடுட்டுள்ளார்.

உடன்போக்கு பற்றி கபிலர் ஐங்குறுநூற்றில் குறிப்பிட்டுள்ளார்.

**"குன்றக் குறவன் ஆரம் அறுத்தென**

**நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும்**

**வண்டு இமிர் சுடர் நுதற் குறுமகள்**

**கொண்டனர்,செல்வர் - தம் குன்று கெழு நாட்டே"** (ஐங்-254)

என்ற பாடலில் 'சந்தனமரத்தை சுடுவதனால் எழும் நறும் புகையுடன் சேர்ந்து காந்தள் மேலும் நறுமணம் உடையதாயிற்று. அத்தகைய மலை நாட்டிற்குரிய

தலைவன் நின்னை கொண்டு செல்ல உடன்பட்டார்' என தோழி தலைவியிடம் கூறுவதிலிருந்து உடன்போக்கு பற்றிய செய்தியை கபிலர் குறிப்பிட்டுள்ளமை அறியலாம்.

**4.5.3. திருமணச் சடங்குகள்**

"சமூக அமைப்பினை உருவாக்கக் கூடியதாகத் திருமணம் விளங்குகிறது. குடும்பம் என்ற களம் உருவாகக் காரணமாய் விளங்குவது திருமண அமைப்பாகும். பருவம் எய்திய ஆணும், பெண்ணும் இல்லற வாழ்வில் ஈடுபடும் நோக்குடன் தங்களை இணைத்துக் கொள்ளும் நிலையே திருமணமாகும். ஒரு கன்னிப் பெண்ணின் கூந்தலிலே மலர் சூட்டி அவளை ஊரும், உறவும் அறிய தன் வாழ்க்கைத் துணைவியாக ஒருவன் ஏற்றுக் கொள்வதனாலே மணம், திருமணம் என்ற பெயர்கள் இச்சடங்கிற்கு ஏற்பட்டன என்பர்"[27] மேலும் "மணம் என்ற சொல் நிறைந்த பொருளுடையது மண்ணுதல் என்றால் நெருங்குதல், கலத்தல், அழகு பெறுதல் எனப்படுகின்றது. மணம் என்ற சொல்லுக்கு மண் என்பது வேர்ச்சொல், மண்ணின் நலன்களை நிறைந்தளவில் நுகர வாய்ப்பளிப்பது மணம் எனவே இல்லறத்தை மணவாழ்க்கை என்று அழைப்பதாகக் குறிப்பிடுவர்"[28] "ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மனம் ஒன்றிக் கூடி நடத்தும் குடும்ப நெறிக்கு திருமணம் என்றும், மனம் போன போக்கில் செயல்பட்ட மனிதர்களை ஒரு நிலைப்படுத்தி, அவர்களது மாசுகளை அகற்றி,மனிதர்களை மனிதர்களாக வாழச் செய்து, சமுதாய ஒழுக்கத்தைக் காலந்தோறும் காத்துவரும் சீரிய செயலாகத் திருமணம் நிகழ்கின்றது என்றும் குறிப்பிடுவர்"[29] திருமணம் என்பதற்கு மணம், மன்றல், மங்களம், வதுவை, கரணம், கல்யாணம், விவாஹம் என்ற சொற்களும் வழங்கப்படுகின்றன. திருமணம் அமைந்து இல்லற பணிபுரியும் ஒரு குடும்பமானது பின்னாளில் பல குடும்பங்களைத் தோற்றுவிக்க வல்லதாகும். தமிழ்ச் சமூகத்தில் திருமணம் என்பது வாழ்வின் ஒருமுறையே நடைபெறவேண்டிய ஒரு நிகழ்வாகக் கருதப்படுகிறது. இவ்வாறு வாழ்வின் ஒரு முறையே நடைபெறக்கூடிய திருமணம் மனிதனின் சாதாரண இயங்கு தளத்திலிருந்து புதியதொரு குடும்ப உறவுக்குள் அழைத்துச் செல்கிறது. உறவுகள் புதிதாய் தோன்றுகின்றன. எனவே ஒருவனின் வாழ்வில் புதிய தொடக்கம் திருமணத்திலிருந்து தோன்றுவதாக தமிழ்ச் சமூகத்தால் கருதப்படுகிறது. இந்நிலையில் நம்பிக்கையை அடியொற்றிய சடங்குகள் திருமண வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் காணப்படுகின்றன.

திருமணம் பல செயல்பாடுகளை உள்ளடக்கியதாக விளங்குகிறது. அதில் ஒன்று திருமணத்தின் போது தலைவன் தலைவியின் கூந்தலில் மலர்

சூட்டுதலாகும். திருமணச் சடங்கில் தலைவன், தலைவியின் கூந்தலில் பூச்சூட்டுவது இப்போதும் நடை முறையில் உள்ளது. இச்சடங்கு சங்க காலத்திலேயே இருந்துள்ளது. தலைவியின் கூந்தலில் தலைவன் மலர் சூடுதலை நிகழ்த்தக் கண்ட தோழி எல்லையற்ற மகிழ்ச்சியுடையவளாய் தலைவனைப் பாராட்டுகிறாள்.

'தலைவியின் கூந் தலில் தலைவன் பூச்சுட்டுதல் ஒன்றும் புதிது இல்லை. களவுக் காலத்தில் இப்படி பலமுறை தலைவியின் கூந்தலில் பூச்சூட்டி உள்ளான். அப்போது எல்லாம் மகிழ்ச்சியாக இல்லை. இப்போது சுற்றத்தார் அனைவரும் அறியும் வகையில் தலைவன் திருமணத்தின் போது தலைவியின் கூந்தலில் பூச்சூட்டுதலைப் பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது' என்கிறாள் தோழி.

**இனிது செய்தனையால்நுந்தை வாழியர்**

**நல்மனை வதுவை அயர இவள்**

**பின் இருங்கூந்தல் மலர் அணிந்தோயே (ஐங்-294)**

என்ற பாடலில் கபிலர் திருமணத்தின் போது தலைவியின் கூந்தலில் தலைவனால் மலர் சூடியக் காட்சி மிகுந்த மகிழ்ச்சியளித்ததாக தோழி கூறுகிறாள்.

### 4.6. மக்கட் பேறு

பழந்தமிழர்களின் இல்வாழ்க்கையில் நன்மக்களைப் பெறுவது பெருநோக்கமாகக் கருதப்பட்டது. 'மக்களைப் பெறுவது இப்பிறவியில் புகழையும், தங்கள் குடி நின்று நிலைக்கவும் வழிவகுக்கும்' என்று அவர்கள் நம்பினர். ஒரு மனிதன் பெற வேண்டிய பேறுகளில் சிறந்தபேறு மக்கட்பேறு எனக் கூறுகிறார் வள்ளுவர்.

**"பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவறிந்த**

**மக்கட்பேறு அல்ல பிற"[30] (குறள்-61)**

என்ற குறளின் வாயிலாக மக்கட்ப்பேற்றின் மதிப்பை அறிந்து கொள்ளலாம். மக்கட் பேற்றின் சிறப்பினை கபிலர் ஐங்குறுநூற்றில் கூறியுள்ளார்.

**"புலிகொல் பெண்பால் பூவரிக்குருளை**

**வளை வெண் மருப்பின் கேழல் புரக்கும்**

**குன்று கெழு நாடன் மறந்தனன்**

**பொன்போல் புதல்வனோடு என் நீத்தோனே" (ஐங்-265)**

என்ற பாடலில் 'புலியால் கொல்லப்பட்ட பெண் பன்றியின் குட்டியை அவற்றின் தந்தையாகிய வளைந்த வெண்மையான பற்களைக் கொண்ட ஆண்பன்றி பேணிக்காக்கும் கன்றுகள் பொருந்திய நாடன் என்னை அறவே மறந்தனன். பொன் போலும் பெறுதற்கு அரிய புதல்வனோடு என்னை நீத்துச் சென்றான்' என தலைவன் பால் வந்த தூதுவர்கட்குத் தலைவி இவ்வாறு கூறுகிறாள்.

இதில் 'பொன்போல் புதல்வன்' என்று தன் மகனை தலைவி குறிப்பதால் அரும்பெரும் செல்வமாக புதல்வனை தலைவி குறிப்பிடுகிறாள்.

புறநானூற்றில் பாண்டியன் அறிவுடைநம்பியும் குழந்தைப் பேற்றின் சிறப்பை எடுத்துக்காட்டியுள்ளார்.

**"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்**
**உடைப் பெருஞ் செல்வர் ஆயினும்இடைப் படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லை - தாம் வாழு நாளே"[31] (புறம்.188)**

இப்பாடலில் பாண்டியன் அறிவுடை நம்பி மக்கட்பேற்றின் சிறப்பாக, 'மிக்க செல்வத்தை உடயோனாயினும், குறுகக்குறுக நடந்து, சிறு கையை நீட்டிக் கலத்தில் கிடந்ததனைத் தரையிலே இட்டும், பிசைத்தும், வாயில் கவ்வியும், கையால் துழாவியும், நெய்யுடை சோற்றை உடம்பில் சிதறியும் அறிவை இன்பத்தால் மயக்கும் புதல்வனாக இல்லாதார்க்குத் தாம் உயிர் வாழும் நாளில் பயனில்லாத நாளே' என்று குழந்தைச் செல்வத்தின் சிறப்பு இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

### 4.7. விருந்தோம்பல்

பண்டையத் தமிழர்களின் இல்வாழ்க்கையில் தலையாயப் பண்பாக விருந்தோம்பல் கருதப்பட்டது. வீட்டில் இருந்து பொருளைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே எனப் பழந்தமிழர்கள் எண்ணியிருந்தனர்.

**"இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"[32] (திருக்குறள்-21)**

என்ற வள்ளுவரின் வாக்கு விருந்தோம்பல் சிறப்பை மெய்ப்பிக்கின்றது. விருந்தினரை அன்புடன் வரவேற்று அவர்களுக்கு உதவி செய்வதற்காகத் தேவைப்படுவது பொருள் என்று பண்டையத் தமிழர் கருதினர். இதற்காக அவர்கள் பொருளை ஈட்டுவதில் பேரார்வம் காட்டினர்.

**"விருந்தே தானும்**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"[33] (தொல்.பொருள்.1495)**

இதன் வாயிலாக 'விருந்து' என்றால் 'புதியது' என்பது புலனாகும். அதாவது புதியவர்களை வரவேற்று அவர்களுக்குத் தேவையான உணவு போன்றவற்றைக் கொடுத்து இன்முகத்துடன் ஓம்புவது என்பதை சங்கத் தமிழர் இல்வாழ்க்கையில் தலையாய பணியாகச் செய்தனர். இப்பண்பின் வாயிலாக தமிழர்கள் முகம் அறியாதவர்களை மதித்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துள்ளனர் என்பதை அறியும்போது, மானிடச் சமூகத்தின் மீது தமிழர் கொண்ட மதிப்பு புலனாகிறது. மனிதர்கள் மதிப்பு வாய்ந்தவர்கள், மனிதம் மதிக்கப்பட வேண்டும் என்பதைச் சங்கத் தமிழர் உணர்ந்திருந்தனர். உணர்ந்தபடி நடந்தும் காட்டினர். அந்த வகையில் குறிஞ்சி நிலமக்கள் விருந்தினரை உபசரித்த விதம் பற்றி கபிலர் கூறியுள்ளார்.

### 4.7.1. பெண்டீரும் விருந்தோம்பல் பண்பும்

இல்வாழ்க்கையானது துன்பம் அடைந்தவர்களுக்கு உதவும் அறவாழ்க்கையாக இருத்தல் வேண்டும் என்று கலித்தொகை வலியுறுத்துகிறது.

**"ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்கு உதவுதல்" (கலி.133)**

இல்லறத்தில் கணவனும் மனைவியும் இணைந்து ஆற்ற வேண்டிய அறம் விருந்தோம்பல் ஆகும். இல்லறக் கடமைகளுள் மிக முக்கியமான பண்பாக விருந்தோம்பலைச் சங்கத் தமிழர் கருதினர்.

"இல்வாழ்க்கை நடத்தும் கணவனும் மனைவியும் தம் உற்றார் உறவினரைக் காக்க கடமைப்பட்டவர்கள். அத்துடன் நில்லாது தம் இல்லம் நாடி வரும் பிறரையும் உண்டியாலும் உறையுளாலும் உபசரித்தல் அவர்தம் கடமை என்று அற நூல்கள் பகர்கின்றன"[34]

தலைவியை வரைந்து கொண்டு இல்லறம் நடத்த எண்ணும் தலைவன், தலைவியிடம், விருந்தோம்பல் பற்றிக் குறிப்பிடுகிறான்.

**"மலரத் திறந்த வாயில் பலர்உண**

**பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்**

**வசைஇல் வான்திணைப் புரையோர் கடும்பொடு**

**விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை**

**நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு**

**அறம்புணைஆகத் தேற்றி பிறங்குமலை"** (குறி.பா.203-208)

என்ற பாடலில் 'திருவிழாக் காலங்களில் வருபவர்க்கெல்லாம் வரையறை இல்லாது கொடுக்கும் வளமுடைய இல்லம் எனது இல்லம். அவ்வில்லம் பொலிவு பெறுமாறு எப்போதும் திறந்த வாயில்களுடன் இருக்கும். பசுமையாகக் கொழுப்புடன் நெய் ஒழுகுகின்ற உணவைப் பலர் வந்து உண்பர். அவ்வாறு மிடாவில் உள்ள சோற்றை நீ, குற்றமற்ற உயர்ந்த சான்றோர் அவர் சுற்றத்துடன் விருந்தாக உண்ணச் செய்வாய். அவர் உண்டு எஞ்சிய மிச்சத்தை நீ கொடுக்க உன்னோடு உண்பதும் உயர்ந்ததுதான்' என்று தலைவன் தலைவியிடம் கூறித் தெளிவுபடுத்தினான். விருந்தோம்பலின் நுட்பத்தை மிக அழகாக கபிலர் தலைவன் வாயிலாக கூறியுள்ளார்.

**"கல்கெழு குறவர் காதல் மடமகள்**

**கருவிரல் மந்திக்கு வருவிருந்து அயரும்"** (நற்.353)

என்ற நற்றிணைப் பாடலில் மகளிர் மனிதர்களுக்கு மட்டுமல்லாது, குறிஞ்சி நிலத்தில் வசிக்கும் விலங்குகளுக்கும் விருந்து படைத்த செய்தியை அறியமுடிகின்றது.

"தன்னலமற்ற தன்மை தான் காதலின் உண்மைத் தன்மையாகும். இல்லங்களில் விருந்துகளில் ஆண்களுக்கு உணவளித்து பெண்கள் பின்பு உண்பதே தமிழ்நாட்டு மரபு. இதில் பெண்களின் தன்னலமற்ற அன்பை உணரலாம்."[35]

மலையில் வாழும் குறவரின் மகள், கரிய விரலையுடைய மந்திக்குப் பலாச் சுளையைத் தந்து விருந்து ஓம்பியதாக கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

மந்திக்கு மட்டுமல்லாது கிளிகளுக்கும் தேவையான உணவினை கொடுத்த செய்தியும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"முறஞ்செவி யானைத் தடக்கையின் தடைஇ**

**இறைஞ்சிய குரல பைந்தாட் செந்தினை**

**வரையோன் வண்மை போல பலஉடன்**

**கிளையோடு உண்ணும் வளைவாய்ப் பாசினம்"** (நற்.376)

என்ற பாடலில் முறம் போன்ற காதையுடைய யானையின் பெரிய துதிக்கையைப் போல பருத்த தலை தாழ்ந்த கதிர்களையும், பசுமையான

அடித்தண்டையும் கொண்ட செந்நிறத் தினைப்பயிரை வரையாது கொடுப்பவனின் வள்ளல் தன்மை கருதி வரும் பரிசிலர் போலப் பலவாகிய சுற்றத்தோடு வந்து தின்னும் பசிய கிளிகளே' என்று தோழி கூறுவதிலிருந்து கிளிகளும் சுற்றத்தோடு தின்பதை குறிஞ்சி நில மகளிர் ஆதரித்தனர் என்பதும் புலப்படுகிறது.

ஆக, குறிஞ்சி நில மக்கள் தங்கள் வாழ்வில் மனிதன், விலங்கு, பறவை என்று அனைத்து உயிர்களையும் வேறுபாடு கருதாமல் விருந்தோம்பல் செய்தார்கள் என்பதை கபிலர் பாடல்களின் வழியாக அறியலாம்.

### 4.8. சமுதாயம்

"ஒருவன் பிறரோடு கொள்ளும் உறவையே சமுதாயம் என்று குறித்தனர். தனிமனிதன் சேர்ந்த கூட்டமே சமுதாயம் என்பதைப் பலரும் வலியுறுத்துவர். இதனால் பிறரோடு கொள்ளும் கேண்மை அல்லது தொடர்பு நோக்கியே சமுதாயம் அமைகிறது என்பார் இராம.குருநாதன்."[36] இந்த சமுதாயம் சிறப்புடன் இயங்க பல்வேறு நெறிகளுக்கு உட்பட்டு அமைகிறது. "ஒரு சமூகம் என்பது செயற்பாடுடைய ஒரு குழுவாகும். தனி மனிதர் பலரால் சமூகம் உருவாக்கப்பட்டிருப்பினும், சமூகம் என்ற நிலையிலேயே அது தொழிற்படுகிறது. சமூக அமைப்பில் தனி மனிதர்களின் நலன்கள் சமூக நலன்களுக்குக் கீழாகவே அமைகின்றன.[37]

### 4.8.1. சமுதாய நெறிகள்

சமுதாய நெறிகளாக அறம், நீதி, பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் கூறலாம். மனிதன் தன் துயரினைக்களைய நம்பிக்கைவழி இயற்கைக்கு அப்பாற்பட்ட உயர்ந்த சக்தியினை எண்ணலானான். அந்த எண்ணமே சமயம் தோன்றக் காரணமாயிற்று. சமயத்தின் வழித் தன்னம்பிக்கை, செயல் ஒருமை, ஒழுங்குமுறை முதலியன தோன்றலாயின.

"உலகம் என்பது வெறும் நிலத்தினால் மட்டும் சுட்டிக் காட்டப்படுவதன்று. மனித இனம் எங்கு மாண்புடன் வாழ்கிறதோ, அங்கே இச்சொல் புதிய பொருளைப் பெறுகிறது. விலங்குகளைப் போல மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலிருந்து விலகி அறிவு வளர்ச்சியினாலும் பண்பாட்டு முதிர்ச்சியினாலும் அவர்கள் முழுமையை நோக்கி நடைபோட முயன்ற காலத்தில் தான் 'சமுதாயம்' என்ற சொல் பிறந்தது."[38]

தாம் எய்யும் அம்பு, குறி பிழைத்ததற்குக் காரணம் இயற்கை விளைவித்த ஏதம் எனக் குறிஞ்சி நில மாந்தர் கருதினர். அதனால் இறைவனுக்குப் பலி நேர்தலும், விளைந்த முதற்பயிரை இறைவனுக்கு அளிப்பதும் அவர்தம் செயல்களாக விளங்கின. நம்பிக்கையின் விதை சமயத்தின் முளையாக இங்கு வேர்விடக் காணலாம்.மக்களின் வாழ்வில் அமைந்த சமுதாயத்தின் பல நிலைகளையும் இலக்கியம் காட்ட வல்லதாகத் திகழ்கிறது.

“இலக்கியம் எந்த அளவிற்குச் சமுதாய வெளிப்பாடாக அமைகிறதோ, அந்த அளவு நிலத்தின் வெளிப்பாடாகவும் இலங்குகிறது”[39] என்னும் உண்மையை தமிழண்ணல் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் இலக்கியத்தில் காலத்தால் முற்பட்ட சங்க நூல்கள் இந்நெறிகளுக்குக் கட்டுப்பட்டே நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கின. சங்க நூல்களின் வாயிலாகப் பண்டைத் தமிழ்ச் சமுதாய வாழ்க்கை மிகச் சிறந்து விளங்கியது என்றே கூற வேண்டும்.

### 4.8.2. வாழ்க்கைச் சூழ்நிலைகள்

குறிஞ்சி நில மக்கள், வேட்டைத் தொழில் புரிவோர், தினை பயிரிடுவோர் என இருவகை பிரிவாக இருந்தனர். குறிஞ்சி மக்கள் இதன் வழியே கிளைத்தனர் எனலாம். கூட்டுச் சமுதாயத்தினராகவே செயல்புரிந்த பான்மையைக் குறிஞ்சி மக்களிடையே காணலாம். “பண்டைய குறிஞ்சி நில மாந்தர்கள் ஒன்றாகக் கலந்து வாழ்ந்த வாழ்வே முதன் முதலில் சமுதாயத் தோற்றத்திற்கு வித்திட்டது.”[40]

### 4.9. மக்கட் பெயர்

இலக்கியம் உணர்த்தும் மக்கள் வாழ்க்கை, அவர் வாழும் சூழல் நோக்கியும், தொழில் நோக்கியும் அமைவது எனலாம். மக்கள் அவரவர் வாழும் சூழலுக்கேற்பவும், செய்தொழிலுக்கு ஏற்பவும் பெயரிட்டு அழைக்கப்பட்டனர்.

குறிஞ்சி நிலத்து ஆடவன் நாடன், வெற்பன், சிலம்பன் என அழைக்கப்பட்டான். குறிஞ்சி நிலத்துப் பெண் கொடிச்சி, குறமகள் என அழைக்கப்பட்டாள். இப்பெயர்களைத் தாங்கிய குறிஞ்சி நில மக்களின் உணவு முறைகள் அந்நிலம் சார்ந்து அமைகின்றன.

### 4.10. உணவு

மனித சமூகம் தாம் தோன்றிய காலத்தில் உணவுக்காகவும், பிற உயிர்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டது. தொடக்கக் காலத்தில் மனித இனம்

குழுக்களாகச் சென்று வேட்டையாடி தங்களுக்குத் தேவையான உணவினைப் பெற்றது. ஆதிமனிதன் தாவர உணவு வகைகளையும், விலங்குகளையும் வேட்டையாடி இறைச்சி உணவுகளையும் உண்டு வந்தான். பிறகு நெருப்பின் பயனை உணர்ந்து விலங்குகளை வேட்டையாடி வேகவைத்து உண்டான். கால வளர்ச்சியில் ஆற்றங்கரையில் தன் வாழ்விற்குத் தேவையான நீர்வளம், நிலவளம் அமையப் பெற்றதால் நாடோடிகளாய் திரிந்த மனிதன் ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்டான். ஓரிடத்தில் தங்கி வாழ்ந்த மக்களில் ஆண்கள் வேட்டையாடி உணவு சேகரித்து வந்தனர். பெண்கள் உணவுப் பொருட்களை நிலத்தில் பயிரிட்டு உற்பத்தி செய்யும் நிலைகளைக் கண்டுபிடித்தனர். அதன் பிறகு மக்கள் பயிர்த்தொழில் புரிந்து தனக்குத் தேவையான உணவினைப் பெற்றனர். "இவ்வுணவு பல வேதியங்களின் கலவையாகும். தம் உடலில் காணப்படும் வேதியங்கள் போன்றவற்றையோ அல்லது அவற்றை உண்டாக்கத் தேவையான மூல வேதியங்களையோ தான் மனிதன் உணவாக உட்கொள்கிறான். உணவில் மாவுச்சத்து, புரதச்சத்து, உயிர்ச்சத்து, கனிமச்சத்து முதலியன இருத்தல் அவசியமாகும்."[41] இவற்றையெல்லாம் ஆதிமனிதன் அறியாமலே உணவு உட்கொண்டு வாழ்ந்து வந்தான். ஆற்றங்கரையில் குடியேறிய மனிதன் நாளடைவில் வாழ்வியல் நெறிமுறைகளை அமைத்து கட்டமைப்புடைய சமூகத்தை உருவாக்கினான்.

இவ்வாறாக, உருவாகிய சமூகத்தில் மனிதன் தனக்குத் தேவையான உணவு, உடை மற்றும் பிற தேவைகளை வேளாண்மை வாயிலாக நிறைவு செய்து கொண்டான். ஒரு சமூகத்தின் உணவு முறைகள் அச்சமூகத்தின் சூழ்நிலைகள், தட்ப வெப்ப நிலைகளைப் பொறுத்து அமைகிறது. "உணவுப் பழக்க வழக்கங்கள், ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை, வாழ்நிலத்தின் விளைபொருட்கள், சமூகப்படி நிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமையும் என்பர்."[42]

### 4.10.1. உணவு – சொல், பொருள் விளக்கம்

மண்ணில் உயிர்கள் வாழ்வதற்கு உணவு முதன்மையான தேவையாகும். உயிர்களின் உயிர்ப்பு, ஆற்றல் நிலை பெறுவதற்கு உணவு அடிப்படையாக அமைகின்றது. உயிர்கள் தாங்கள் சார்ந்திருக்கும் நில அமைப்புகளுக்குகேற்ப தங்களின் உணவு வகைகளை அமைத்துக் கொள்கின்றன.

"உண்டி தான் புசித்தல் சோறே" என்று உணவிற்கு சதுரகராதி விளக்கம் அளிக்கிறது.[43] உண்ணுதலால் உண்ணப்படும் பொருள் உணா எனப்பட்டது.

“உண், உணா, உணவு என **உண்** என்ற அடிச்சொல்லைக் கொண்டு தோன்றியிருக்கக் கூடும்”[44]என்பர். உணவிற்குப் பொருள் கூறும் பொருட்டு பிங்கல நிகண்டு,

> **“அசனம் பதமே இரை ஆகாரம் முறையே**
>
> **ஊட்டம் உணவெனலாகும்”[45]**

எனக் குறிப்பிடுகிறது. நெல்லியிலிருந்து பெறப்படும் அரிசி உணவை சோறு என்பர்.

“வரி சொல்லு வரிகி சாலி வளர் நெல்லாம் யவமும் ஆகும்”[46] என நெல்லிற்கும்

> **“அடிசில் போனகமே மூரல் அமலையே யயினி பொம்மல்**
>
> **மடை மிசை யுணாப்புழுக்கல் வல்சி பாளிதமே யன்னம்**
>
> **தொடுபதம் மிதவை பார்த்துத் துற்று உண்டி சொன்றிபுன்க**
>
> **மொரு சரு அசனம் ஊண் கூழ் ஓதனம் புகாவே சோறாம்”[47]**

எனச் சோற்றிற்கும், சூடாமணி நிகண்டு பொருள் கூறுகிறது.

### 4.10.2. குறிஞ்சி நிலமக்களின் உணவு முறைகள்

குறிஞ்சி நில மக்கள் தொழிலால் தங்கள் வாழ்வை உரம்படுத்தினர். அவர்களின் வலிமைக்குக் காரணம் இயற்கையாக எளிதில் பெற்ற காய்கனிகளும் பிறவுமேயாகும். வேட்டம் புரிந்து விலங்கினை உணவாகப் பெற்றனர். உணவின் சிறப்பினைக் கருதி, அதனை உயிருக்கு ஒப்பிடுவர். உணவு, உடை, உறையுள் என்பவற்றில் உடை, உறையுள் ஆகியவற்றைவிட உணவில்தான் மக்களின் நாட்டம் முதன்மையாக அமைந்திருந்தது.

குறிஞ்சி நிலத்தவரின் உணவு முறைகள் இரண்டு நிலைகளை உடையன. காய்கனிகள் முதலிய மரக்கறி உணவினை உட்கொள்ளும் நிலை ஒன்று. விலங்கை வீழ்த்திப் பதமாக்கி உண்ணும் நிலை மற்றொன்று. எளிதாகக் கிடைத்தவற்றைப் பெற்று உண்ட மனிதன், அவை கிடைத்திடாதபோது வேட்டம் போய் விலங்குகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை உண்ணத் தலைப்பட்டான்.

குறிஞ்சி நிலம், உழவர் உழாமலேயே மிக்க பயன் தருவதாகத் திகழ்ந்தது. நெல், பலா, வள்ளிக்கிழங்கு, தேன் முதலியன இயற்கைவழி எளிதாக கிடைத்தது. குறிஞ்சி நிலத்தவரின் பொது உணவாக தேனும், கிழங்கும் நிறையக் கிடைத்தன.

**கிழங்குஅகழ் நெடுங்குழி மல்க வேங்கை (ஐங்.208)**

என்று ஐங்குறுநூற்றுப் பாடலிலும்,

**சாரற் பலவின் களையொடு ஊழ்படு**

**பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல் (அகம்.2)**

என்று அகநானூற்று பாடலிலும் குறிஞ்சி நில மக்களின் உணவான கிழங்கும், தேனும் கிடைத்த செய்தியை கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

குறிஞ்சி நிலத்தவர் மான், ஆமா, பன்றி முதலிய விலங்குகளின் இறைச்சியினையும் காடை, கோழி முதலிய பறவைகளின் இறைச்சியினையும் உண்டனர். வேட்டுவர் நிறம் மாறாத பசிய நிணத்தை உண்டு மகிழ்ந்தனர்.

**பிணர்ச்சுவற் பன்றி தோல்முலைப் பிணவொடு**

**கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்**

**கல்அதர் அரும்புழை அல்கி, கானவன்**

**வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை**

**புனைஇருங் கதுப்பின் மனையோள் கெண்டி**

**குடிமுறை பகுக்கும் நடுமலை நாட (நற்.336)**

என்ற பாடலில் பன்றியை அறுத்து அதன் தசையைத் தன் குடியினர் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கிறாள் கானவனின் மனைவி. இதன் மூலம் குறிஞ்சி நில மக்கள் இறைச்சி உணவை பகிர்ந்து உண்டதை அறியமுடிகிறது.

மரத்தின் உராய்வால் தீ உண்டாவதை அறிந்த மக்கள் தீயினை உண்டாக்கி, அத்தீயில் இறைச்சியை வாட்டி உண்டனர். மூங்கிலில் உண்டான தீயை இதற்குப் பயன்படுத்தினர். புலால் நாறாதவாறு புகையினை மூட்டிப் பக்குவப்படுத்தி உண்டனர். கோழி, ஆரல்மீன், மான், பன்றி, உடும்பு இவற்றைச் சந்தன விறகில் சுட்டு விருந்தினர்க்கு வழங்கிய செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

குறிஞ்சி மாந்தர் சமுதாயத்தில் சிறக்க வாழ்ந்தவர் என்பதனை அவர்களின் விருந்தோம்பல் முறையாலும், கவர்ந்து வந்த விலங்கின் ஊனை பகுத்துச் சிறுகுடியில் உள்ளோர்க்கு வழங்குதலாலும் அறியலாம். ஆக, குறிஞ்சி நிலத்தார் மிகையான காய்கறிகளையும், ஊன் உணவினையும் உண்டு வாழ்ந்ததை கபிலர் பாடல்கள்வழி அறியமுடிகிறது.

**4.11. உடை**

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உடை குறிப்பிடத்தக்கதாகும். உடை உடுக்கத் தொடங்கிய காலத்தில் பண்பாடும், நாகரிகமும் ஒரு சேர

வளர்ச்சி பெறத் தொடங்கியது. மனிதனுக்கு உண்பதை விடவும், குடியிருக்கும். இருப்பிடத்தை விடவும் முதல் தேவையாய் விளங்குவது உடையாகும். மனிதன் தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி செயல்படத் தொடங்கிய காலம், உடைகள் உடுக்கத் தொடங்கிய காலமாகும்.

**"உண்ணாமல் ஒன்பது வீட்டுக்குப் போகலாம்**

**உடுத்தாமல் ஒரு வீட்டுக்குப் போக முடியுமா"**

என்ற பழமொழி உடையின் தேவையை எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ளது.

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

**இடுக்கண் களைவதாம் நட்பு"[48] (குறள்.788)**

இக்குறள் மனிதனின் மானம் காக்கும் உடையின் அவசியத்தை எடுத்துக் கூறுகிறது. எனவே மனிதனுக்கு உடைகள் மற்றொரு உறுப்பாகும்.

**உடை** என்னும் சொல் வழக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் வழக்குச் சொல்லாகும்.

**"பொன்னொக்கும் உடையவை"[49] (பரி.1 : 56)**

என்பதன் வழியாக பழங்காலம் முதலே **உடை** என்னும் சொல் வழக்கு இருந்து வருவதை அறியலாம். "உடையின் வேர்ச்சொல் உடு என்பதாகும். உடுத்துதல் சூழவிருத்தல் என்ற பொருண்மையில் அமைவதாகும். உடை என்பது உடம்பைச் சுற்றி அணியும் துணியைக் குறிப்பதாகும்"[50]

**குறிஞ்சி நில மக்களின் உடை**

குறிஞ்சிநில மக்கள் மரப்பட்டையிலிருந்து உரித்தெடுத்த நாரால் நெய்யப்பட்ட உடையினை அணிந்தனர். காந்தள், அசோகு, விளா, புன்கு முதலிய தளிர்களைக் கொண்டு ஆடை புனையக் கற்றிருந்தனர். அசோகின் தழையினையும், குவளை மலர்களை விரவித் தொடுத்த தழையினையும் மகளிர் அணிந்தனர். வேங்கைப் பூவால் ஆடை தொடுத்து மகளிர் அணிந்த செய்தியினை ஐங்குறுநூற்றில் கபிலர் குறிப்பிடுகிறார்.

**"வயலைஅம் சிலம்பின் தலையது**

**செயலைஅம் பகைத்தழை வாடும் அன்னாய்" (ஐங்.211)**

என்ற பாடலில் அசோக மரத்தில் உள்ள தழையை எடுத்து உருவாக்கிய தழை ஆடை பற்றி கூறப்பட்டுள்ளது.

**"உடுக்கும் தழை தந்தனனே யாம்அஃது" (நற்.359)**

**"தானும் மலைந்தான்; எமக்கும் தழைஆயின**

**பொன்வீ மணிஅரும் பினவே"** (ஐங்.201)

இப்பாடல் வரிகள் தழை ஆடை உடுத்தும் வழக்கத்தைக் குறிப்பிடுகிறது. ஐங்குறுநூற்றுப் பாடலில், 'வேங்கைப் பூ மலர்ந்த நிலையில் பொன்னிறம் பெற்றது. அம்மரத்தின் தழைகளை தலைவனும் விரும்பி அணிந்தான். எமக்கும் உடுத்திக்கொள்ளும் தழையைத் தந்தான்' என்று தலைவி கூறுவதிலிருந்து தழை ஆடையை தலைவன் கொடுக்க தலைவி அணிந்திருந்த செய்தியை கபிலர் பாடல்களின் வழி அறியமுடிகிறது.

**"கிள்ளை ஓப்பியும் கிளைஇதழ் பறியா**

**பைவிரி அல்குல் கொய்தழை தைஇ**

**பல்வேறு உருவின் வனப்பு அமைகோதைஎம்**

**மெல்லிரு முச்சி கவின் பெறக் கட்டி"** (குறி.101-104)

இவ்வாறாக ஆடை குறித்த சிந்தனைகளில் அவற்றைச் சிறப்புற வடிவமைத்து மேம்பட்ட சமூக மக்களாக தமிழ்மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கு மேற்கண்ட பாடல்கள் சான்று பகர்கின்றன.

### 4.12. உறையுள்

நாடோடிகளாய் திரிந்த மனித வாழ்க்கை ஓரிடத்தில் நிலை பெறத் தொடங்கிய பிறகு மனிதனின் இன்றியமையாத தேவைகளில் ஒன்றாக விளங்குவது வீடாகும். மனிதனுக்குத் தேவையான பாதுகாப்பை வீடு அளிக்கிறது. இன்றைய நிலையில் தொழில், கல்வி போன்ற பணிகள் காரணமாக ஒருவன் பல்வேறு இடங்களுக்குச் சென்றாலும் அவன் இறுதியாக வந்தடையும் இடம் அவனுடைய வீடேயாகும். எனவே வீடானது மனித வாழ்க்கையின் ஒரு அங்கமாகும். சமுதாய அமைப்பின் ஆணிவேராய் விளங்குபவை குடும்பமாகும். அக்குடும்பம் நிலைபெறும் இடமாக வீடு அமைகிறது.

உணவு, உடை, உறையுள் என்பவற்றில் உணவிற்கு முதலிடம் தந்த மனிதன், உடையணியக் கற்றான். இயற்கை விளைவிக்கும் அச்சங்களிலிருந்து விடுபட அவனுக்கு இருப்பிடம் தேவைப்பட்டது. மறைவிடங்களில் தங்கி விலங்கிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளப் பழகிய மனிதன், பறவையின் கூடுகளையும் விலங்குகள் வாழ்ந்த குகைகளையும் கண்டு அவற்றைப் போன்ற உறைவிடங்களில் தானும் வாழலாம் என உணர்ந்தான்.

தொல்பழங்காலத்தில் மலையில் வாழ்ந்த மக்கள் குகைகளிலும், பிளவுகளிலும், மரப்பொந்துகளிலும் பின்னர் விலங்கின் தோல், புல், மரம், கல் முதலியவற்றைப் பயன்படுத்தித் தம் உறையுளை அமைக்கத் தலைப்பட்டனர். மிகவும் உயரமான இடத்தில் அமைந்த குறவரது குடில், மலைப் புல்லால் வேயப்பட்டது. மலையின்கண் கற்களுக்கு இடையில் குறவர் இல்லம் அமைத்தனர். குறவர்களின் குடில் 'குரம்பை' என அழைக்கப்பட்டது. இதனைக் கபிலர் ஐங்குறுநூற்றில்,

**"குன்றக் குறவன் புல்வேய் குரம்பை"** (ஐங்.252)

என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவர்களின் இருப்பிடம் புல் வேயப் பெற்ற சிறுகுடிலை உடையது என்று குறிப்பிட்டுள்ளார்.

வீடு என்பதற்கு தமிழ் இலக்கியங்கள் பல்வேறு பெயர்களைக் குறிக்கின்றன.

**"மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே**

**மனையகம் புகாக் காலை யான"**[51] (தொல்.பொருள்.1077)

என்ற நூற்பா வீட்டை **மனை** என்னும் சொல்லால் குறிப்பிடுகிறது.

**"மனை மோக்கம் வீடென்னேவல்"**[52]

என்று சதுரகராதி குறிப்பிடுகிறது. ஐங்குறுநூற்றில் தலைவியின் குடில் பின்வருமாறு அழைக்கப்பட்டது.

**"பொன்நகர் வரைப்பில் கன்னம் தூக்கி"** (ஐங்.247)

என்ற பாடலில் தலைவியின் குடிலின் செல்வ வளத்தினை விளக்க தோழியின் வாயிலாக 'பொன்னகர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

கானவர் குடில் தாழ்ந்து குறுகி இருந்தது. அவர்கள் குடிலின் முன்றிலில் மரங்களை வளர்த்தனர். இச்செய்தியை கபிலர் நற்றிணைப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**"முன்றிற் பலவின் படுசுளை மரீஇ**

**புன்தலை மந்தி தூர்ப்ப தந்தை"** (நற்.373)

இதில் 'வீட்டின் முன்புறத்துள்ள பலாவின் விளைந்த சுளைகளை மென்மையான தலையை உடைய மந்தி தின்று விதையை தரையில் உதிர்க்கும்' என்ற செய்தி வாயிலாக முன்றிலில் பலாமரம் அமைந்திருப்பது குறிப்பிடப்படுகிறது.

### 4.13. பொழுது போக்கு

வாழ்க்கையில் இன்பம் தரவல்லது பொழுதுபோக்கு. பொழுது போக்கு இல்லையேல் வாழ்க்கை சலிப்புறும் என்பதனைச் சங்ககாலக் குறிஞ்சிநில மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். குறிஞ்சி நில ஆடவர் தொழிலில் ஈடுபட்டனர். விலங்கினை வேட்டையாடுதலும், தேனெடுத்தலும், கிழங்கு அகழ்தலும் இதனை உணர்த்துகின்றன.

**"கிழங்குஅகழ் நெடுங்குழி மல்க வேங்கை" (ஐங்.270)**

இதில், குறிஞ்சி நில மக்கள் நிலத்தைத் தோண்டி கிழங்கு எடுத்த செய்தியை கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

குறிஞ்சி நில மகளிர் தினை காத்தலும், பூக்கொய்தும், நீராடியும், ஊசலாடியும் தங்கள் பொழுதினை இன்பமாகக் கழித்தனர். விளையாடாமல் இல்லின்கண் இருத்தல் மகளிர்க்கு அறமுமாகாது. அவர்தம் மேனியழகும் கெடும் என்பதைப் பழந்தமிழர் நன்குணர்ந்திருந்தனர்.

**"புன்புல மயக்கத்து உழுத ஏனல்**
**பைம்புறச் சிறுகிளி கடியும் நாட" (ஐங்.283)**

இப்பாடலில் கபிலர் புன்செய் நிலத்தைக் கானவர் உழுது, விதைத்து, வளர்த்த தினைப்பயிரைத் தின்ன வரும் பச்சை நிறச் சிறிய கிளிகளைப் பெண்கள் விரட்டும் தொழிலைச் செய்வர் என்று குறிப்பிட்டுள்ளார். இதில் தினை விதைத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**"நல்கோட் சிறுதினைப் படுபுள் ஓப்பி" (குறி.பா.38 வரி)**

இப்பாடலிலும் தினை காத்த செய்தி கூறப்பட்டுள்ளது. ஆக, தினைப் பயிரை காக்க முற்படும் வேளையில் பெண்கள் வெவ்வேறு வகையில் பொழுதை இன்பமாகக் களித்தனர்.

### 4.14. நீராடுதல்

மகளிரின் பொழுது போக்குகளில் அவர்களால் மிகவும் விரும்பப் போற்றப்பட்டது நீராடுதலாகும். அவர்கள் கூட்டம் கூட்டமாக நீராடுவர் என்பதை குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**"அண்ணல் நெடுங்கோட்டு இழிரு தெள்நீர்**
**அவிர்துகில் புரையும் அவ்வெள் அருவி**
**தவிர்வுஇல் வேட்கையேம் தண்டாது ஆடி**
**பளிங்கு சொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி**

**நளிபடு சிலம்பில் பாயம்பாடி**

**பொன்எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்தஎம்**

**பின்னிருங் கூந்தல் பிழிவனம் துவரி**

**உள்ளகம் சிவந்த கண்ணேம்" (குறி.பா.54-61)**

இப்பாடலில், தலைவியும், தோழியும் மலையில் உள்ள அருவியில் நீண்ட நேரம் விளையாடியதாக தோழி குறிப்பிடுகின்றாள். அதுமட்டுமல்லாது சுனையில் நீராடி மகிழ்ந்ததாகவும், விருப்பம் போல் பாடியதாகவும் குறிப்பிடுகின்றாள். பின்பு முதுகில் உள்ள பின்னப்பெற்ற கூந்தலைப் பிழிந்து ஈரம் உலர்த்தி, கண்கள் சிவந்திருந்ததாகக் கூறுவதன் மூலம் நீராடுதல் என்பது மகளிர்க்கு பொழுதுபோக்காக இருந்ததை அறியமுடிகிறது.

### 4.15. ஊஞ்சலாடுதல்

மகளிர் ஊஞ்சலாடுதலில் இன்பம் பெற்றனர். பெரிய கிளைகளில் அமைந்த ஊஞ்சலில் அவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். தலைமகன் தலைமகளை ஊஞ்சலில் இருத்தி ஆட்டி மகிழ்விப்பான்.

**"கருங்கால் வேங்கை ஊசல் தூங்கி**

**கோடுஏந்து அல்குல் தழைஅணிந்து நும்மொடு**

**ஆடினம் வருதலின் இனியதும் உண்டோ" (நற்.368)**

என்று மகளிர் ஊஞ்சலாடுவதை கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

'வேங்கை மரத்தில் தொடுத்த கயிற்று ஊஞ்சலில் ஏறி ஆடி அடிவயிற்றில் கட்டிய தழை உடையுடன் உம்மொடு அருவி ஆடி வருவதை விடவும் வாழ்க்கையில் இனிது உண்டா?' என்று தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. ஆக, மகளிர் ஊஞ்சலாடுதலும் பொழுதுபோக்காகக் கருதப்பட்டதை அறியலாம்.

### 4.16. வள்ளைப் பாட்டு

வள்ளைப்பாட்டு, உலக்கைப்பாட்டு எனவும் கூறப்படும். யானையின் கொம்பினைக் கொண்டு மலை நெல்லைக் குற்றும்போது தலைவனையும் அவனது மலையினையும் பாடி மகிழ்வர். மருப்பு உலக்கையாலும், சந்தன மர உலக்கையாலும் மாறி மாறிக் குற்றிக்கொண்டு மகளிர் பாடி இன்புற்றனர். பாறையின்கண் உள்ள குழியில் நெல்லைப் போட்டு யானைக் கொம்பினை உலக்கையாகக் கொண்டு மகளிர் குற்றுவர்.

**“தகைகொண்ட ஏனலுள் தாழ்குரல் உரீஇ**

**முகைவளர் சாந்து உரல் முத்துஆர் மருப்பின்**

**வகைசால் உலக்கை வயின்வயின் ஒச்சி**

**பகைஇல்நோய் செய்தான் பயமலை ஏத்தி**

**அகவினம் பாடுவாம் நாம்”** **(கலி.4)**

இப்பாடலில் கபிலர், மகளிர் வெட்கப்பட்டுத் தலைசாய்ந்து நிற்பது போல் சாய்ந்துள்ள தினைக்கதிர்களை உருவி சந்தனமர உரலில் இட்டு, யானைத் தந்தத்தால் கூடிய உலக்கையைக் கொண்டு குற்றும் போது வள்ளைப்பாட்டு பாடிய செய்தி கூறப்பட்டுள்ளது.

ஆக, குறிஞ்சி நிலமக்களின் வாழ்வியலில் பொழுதுபோக்காக நீராடுதல், ஊஞ்சலாடுதல், வள்ளைப்பாட்டு பாடுதல் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

### 4.17. தொழில்கள்

பண்டைய மனிதன் முதன் முதலாக வேட்டையாடுதலையே மேற்கொண்டிருக்க வேண்டும். விலங்குகள் வளர்த்தல், பயிரிடுதல் முதலியவற்றைவிட வேட்டைத் தொழில் மிகப் பழமையானதாகும். இத்தகைய பழமையான தொழிலையும் குறிஞ்சி நிலத்தார் அறிந்திருந்தனர் என்பதை கபிலர் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.

### 4.17.1. வேட்டைத் தொழில்

குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுதலைப் பெரிதும் விரும்பினர். உணவிற்காகவும், பொழுது போக்கிற்காகவும் வேட்டம் புரிந்தனர். அவர்கள் மூங்கில் வளைதலையும் அது கடுவிசையுடன் மேலெழும்புதலையும் கண்டு வில்லை வளைத்து அம்பைச் செலுத்தும் அறிவினைக் கற்றிருந்தனர். நிலத்திலிருந்தும், மலையிலிருந்தும் அம்பினை எறிந்து விலங்குகளைக் கொன்றனர்.

வேட்டைக்குச் செல்லும்போது வேங்கை மலர்களைச் சூடிக்கொண்டு, தோளில் வில்லை மாட்டிப் பலாப்பழத்தில் விளைந்த தேனைப் பருகி, சீழ்க்கை ஒலியோடு செல்வதை அகநானூற்றில் கபிலர் காட்சிப்படுத்தியுள்ளார்.

**“பூங்கண் வேங்கைப் பொன்இணர் மிலைந்து**

**வாங்குஅமை நோன்சிலை எருத்தத்து இரீஇ**

**தீம்பழப் பலவின் சுளைவிளை தேறல்**

**வீளைஅம்பின் இளையரொடு மாந்தி**

**ஓட்டுஇயல் பிழையா வயநாய் பிற்பட**

**வேட்டம் போகிய குறவன் காட்ட”** (அகம்.182)

*இப்பாடலில் வேங்கைச் சூடியும், தோளில் வில்லை மாட்டியும், தேனைப் பருகியும், இளைஞன் ஒருவன் வேட்டை நாய்கள் பின்வர சென்றான். அப்போது பன்றி ஒன்று மல்லிகைப்புதரின் கீழே மறைந்து நின்றது. அப்பன்றியை அவன் கொன்றான் என்பவற்றை நோக்கும்பொழுது வேட்டைத் தொழிலை விரும்பி செய்தனர் குறிஞ்சி நில மக்கள் என்பது புலப்படுகிறது. மேலும், பழந்தமிழர் வீரமுடையவர்களாகவும் திகழ்ந்ததை அறியலாம்.*

### 4.17.2. பன்றி வேட்டை

*தன்னை எதிர்க்கும் விலங்குகளையும், மனிதர்களையும் திருப்பித் தாக்கித் துரத்துதல், காற்றினும் கடுவி விரைதல் முதலியன பன்றிக்குரிய பண்புகளாகும். இதனைக் கபிலர்,*

**“மென்திளை மேய்ந்த தறுகட் பன்றி”** (ஐங்.261)

*மென்மையான தினையை மேய்ந்த அஞ்சாமையுடைய பன்றி என்பதன்வழி அறியலாம். கானவர் பன்றியின் நெஞ்சினை நோக்கிக் குறிவைத்து அம்பினைச் செலுத்தி வீழ்த்துவர். குழியில் பன்றி விழவும், குறவர் அதனைக் கொல்ல முற்படுவர். பன்றியின் அஞ்சாமையையும், துணிவையும் எண்ணி வேட்டுவர் அதனைப் போற்றி வியந்த செய்தியை ஓர் அகநானூற்றுப் பாடலில் கபிலர் குறிப்பிடுகிறார்.*

**“தறுகட் பன்றி நோக்கி கானவன்**

**குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி**

**மடைசெலல் முன்பின் தன்படை செலச் செல்லாது**

**அருவழி விலக்கும்எம் பெருவிறல் போன்மென**

**எய்யாது பெயரும் குன்றநாடன்”** (அகம்.248)

*இப்பாடலில் ஒரு காட்டுப்பன்றி வேட்டைக்காரன் வருவதைப் பார்த்து, பெண் பன்றியையும், குட்டிகளையும் தம் இனத்தையும் கூட்டிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கியது. அடுத்து ஒரு புதரின் தொடக்கத்தில் வேட்டைக்காரன் வருவதைப் பார்த்து நின்றது. அப்பன்றியைக் குறி பார்த்தான் கானவன். அஞ்சாமை உடைய பன்றி அவனை எதிர்த்துப் பார்த்தது. அது போர்க்காலத்தில் உள்ள வலிமை கொண்ட தலைவனைப் போல் இருக்கிறது என்று நினைத்து அதன்மேல் அம்பு எய்யாமல் திரும்பினான் என்பதன் மூலமாக பன்றியின் துணிச்சல் வெளிப்படுகிறது.*

இரவில் பன்றி தினையைக் கவர வருமென எண்ணிக் குறவர் அவற்றைப் பற்றுதற்குப் பொறி வைத்துக் காத்திருப்பர். கானவர் பன்றியின் மார்பில் அம்பினைச் செலுத்தி அதன் நெறிகெடச் செய்யும் திறம் பெற்றிருந்தனர். பசிய தசை வெளிப்படும் அளவிற்குப் பல அம்புகளை எய்து பன்றியைக் கொன்றதை ஒரு நற்றிணைப் பாடல் காட்டுகின்றது.

**"பிணர்ச்சுவற் பன்றி தோல்முலைப் பிணவொடு**
**கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்**
**கல்அதர் அரும்புழை அல்கி கானவன்**
**வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை" (நற்.336)**

என்ற பாடலில் கானவன் பன்றியை வேட்டையாடிய விதம் பற்றி கபிலர் குறிப்பிட்டுள்ளார். ஆண் பன்றியும், பெண் பன்றியும் தினைக்கதிரைத் தின்னும் என்பதை அறிந்த கானவன் அரிய வழியிடம் சென்று தங்கிப் பதுங்கித் தன் வில்லினால் அம்பெய்தி ஆண் பன்றியைக் கொல்வான் என்பதிலிருந்து வேட்டையாடுவதில் வீரம் உடையவர்களாகவும், விருப்பம் உடையவர்களாகவும் குறிஞ்சி நில மக்கள் இருந்ததை அறியமுடிகிறது.

### 4.17.3. கவண் எறிதல்

வில், அம்பு ஆகிய இவை தவிரப் பழந்தமிழனுக்குப் பிற வேட்டைக் கருவிகளும் தேவைப்பட்டன. உணவைக் கிழித்து உண்ணுதற்குக் கற்களைப் பயன்படுத்திய மனிதன், விலங்குகளைக் கொல்வதற்கும் கற்களைப் பயன்படுத்தினான். கவண் எறிதலில் குறிஞ்சி மக்கள் திறம் மிக்கவர் என்பதைச் சங்க நூல்கள் உணர்த்துகின்றன.

பரணிலிருந்து வீசப்பட்ட கவனோசை, யானைக் கூட்டத்தை ஓடச் செய்தும், புலியினை நடுங்கச் செய்தும் இடியென மலை முழுவதும் கேட்குமாறு எதிரொலித்தது.

குறவர் தினை கவர வந்த யானையை விரட்ட எறிந்த கல், வேங்கைப் பூவினைச் சிதறச் செய்து, பலாவினை உடைத்து, ஆங்கிருந்த தேனிறாலைக் கிழித்து, மா வடுக்களை உழுக்கி, வாழை மடலைக் கிழித்துப் பலாவின் பழத்துள் சென்று தங்கிற்று எனக் கூறுவதன் மூலம் கடுவிசையுடன் கவனெறியும் திறத்தினைக் கபிலர் புலப்படுத்துகின்றார்.

**கடுவிசைக் கவணையில் கல்கை விடுதலின்**
**இறுவரை வேங்கை ஒள்வீ சிதறி**

**ஆசினி மென்பழம் அளிந்தவை உதிரா**

**தேன்செய் இறாஅல் துளைபடப் போகி**

**நறுவடி மாவின் பைந்துணர் உழக்கி**

**குலையுடை வாழைக் கொழுமடல் கிழியா**

**பலவின் பழத்துள் தங்கும் மலைகெழு வெற்பனைப்** (கலி.5)

*என்ற பாடலின் வழி பழந்தமிழனின் கவண் எறியும் ஆற்றல் எத்துணை வலிமை மிக்கதாக விளங்கிற்று என்பதை உணரலாம்.*

### 4.17.4. பயிர்த்தொழில்

*பழந்தமிழர் வேளாண்மை பற்றிய அறிவை மிகுதியாகப் பெற்றிருந்தனர். இயற்கையிலேயே குறிஞ்சி நிலத்தில் பயிர்வளம் செழித்து விளங்கும். நில்லாது பொழியும் மழையாலும், பெருகும் அருவி வளத்தாலும் பயிர்வளம் ஓங்குதல் இயல்பு. உழவர் உழாமலே மிகுபயிர் உடையதாகத் திகழ்ந்தது குறிஞ்சிநிலம். தினை பயிரிடுதலும், நெல் விதைத்தலும் பிற வகைகளைப் பயிரிடுதலும் குறிஞ்சி வாழ்நரின் வேளாண்மை நெறியானதைக் கபிலர் குறிப்பிடுகிறார்.*

*மலை வளத்தை ஆங்கு சிறப்புற விளையும் பயிரினத்தால் குறிப்பிட்டனர்.*

**"கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி"** (ஐங்.243)

*என வரும் பாடல் வரியில் மிளகுக்கொடி வளர்கின்ற செய்தியை கபிலர் குறிப்பிட்டுள்ளார்.*

**"சாரற் புறத்த பெருங்குரற் சிறுதினைப்"** (ஐங்.282)

*மலைச் சாரலில் தினைகள் விளைந்துப் பெரியக் கதிர்களாக வளர்ந்துள்ளன என்று கூறுவதில் தினைப் பயிரிட்டதை அறியமுடிகிறது. குறிஞ்சி நிலத்தில் பலவகை உணவினைப் பெற்றதை இதன் வாயிலாக அறியமுடிகிறது.*

### 4.17.5. எரியிடுமுறை

*பழந்தமிழ் மக்கள் சந்தன மரத்தை எரித்து, அதன் புகையை குறிஞ்சி நிலம் முழுக்க பரப்பியிருந்தனர்.*

**"குன்றக் குறவன் சாந்த நறும்புகை**

**தேம்கமழ் சிலம்பின் வரையகம் கமழும்**

**கானக நாடன் வரையின்"** (ஐங்.253)

*இப்பாடலில் 'குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவன் சந்தன மரத்தை வெட்டிச் சுடுவதால் எழுகின்ற சந்தன மணப்புகை தேன்மணம் கமழும் பக்கமலைகளைக்*

கொண்ட மலைச்சாரல் முழுவதும் பரவி மணக்கின்ற மலை நாடு' என்று கூறுவதிலிருந்து இச்செய்தியை அறியலாம்.

### 4.17.6. பயிர்ச்சுழற்சி முறை

தரிசாக விட வேண்டிய நிலத்தில் உணவுப் பொருள்களை மாற்றிப் பயிரிடுவதால் நிலமானது, இழந்த மண் வளத்தினை மீண்டும் பெறும். இதனால் பயிரின் வளம் செழிக்கும் என்பதைப் பழந்தமிழர் அறிந்திருந்தனர். தினையினை மட்டுமே விளைவிக்காமல் கதிர்களை அறுவடை செய்தபின், தாளோடு நிலத்தை சிறிதுநாள் விட்டு வைத்து, அதில் அவரை அல்லது பருத்தி முதலியவற்றைப் பயிரிட்டனர்.

பயிரிடுங்கால் நாற்றுகளையோ அல்லது விதைகளையோ நெருக்கமாக அமைக்காது காற்றின் ஊடுருவல் வேண்டியும், ஒளி வேண்டியும் தள்ளி நடுவது வழக்கமாக இருந்தது.

**"சிலவித்து அகலஇட்டென பலவிளைந்து"** (நற்.209)

என்ற தொடரால் அறியலாம். நிலத்தில் உழுதலைவிட எருவிடுதல் சிறந்தது. பயிரிடையே களை எடுப்பதும், நீர் பாய்ச்சுதலைவிடக் காவல் காத்தல் நல்லது என்பார் வள்ளுவர்.

**"ஏரினும் நன்றால் எருவிடுதல் க–+ட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு"**[53] (குறள்.1038)

கலப்பையின் கொழுமுகம் நிலத்தில் அழுந்துமாறு நன்கு உழுதனர். கேழல் தன் கோட்டாம் ஆழமாகக் கீறிய மண்ணில் குறவர் உழாமலே பயிரிட்டனர்.

**"கேழல் உழுதெனக் கிளர்ந்த எருவை"** (ஐங்.269)

இப்பாடலில் பன்றிகள் கிழங்கு தோண்டுவதற்கு முற்பட்ட நிலத்தில் உழுதது போன்ற தோற்றம் தரும் புன்செய் நிலத்தில் கோரைப் புற்கள் வளர்ந்துள்ளன.

**"கிழங்கு அகழ் கேழல் உழுத சிலம்பில்**
**தலைவிளை கானவர் கொய்தனர் பெயரும்"** (ஐங்.270)

இப்பாடலில், கிழங்குகளை அகழ்ந்தெடுக்கும் பன்றிகள் தம் கொம்பினால் உழுத புழுதியில் கானவர் விதைத்து விளைவித்த முதல் விளைச்சலைப் பறித்துக் கொணர்வர் என்று கூறுவதன் மூலம் பன்றியானது குறிஞ்சி நிலத்தவர் பயிரிடும் முறைக்கு உதவியாக இருந்தது தெரிகிறது.

### 4.17.7. மலைச்சரிவில் பயிரிடல்

மலைச் சரிவுகளில், இயற்கையில் அமைந்த இடங்களிலோ அல்லது வேண்டியவாறு பள்ளம், மேடு இவற்றை அடுத்தடுத்து உண்டாக்கியோ அவற்றின் படிகளில் பயிரிடுவர். மலைக்கண் ஓடிவரும் அருவிநீரைப் பயன்படுத்திப் பயிரினை விளைவிப்பர். குறிஞ்சி நிலத்தவர் அகில், மூங்கில் முதலியவற்றை மலைச்சரிவுகளில் பயிரிட்டதைச் சங்க நூல்கள் உணர்த்துகின்றன.

நிலத்தை உழுதற்கு எருதுகளைப் பயன்படுத்தினர். யானைக் கொம்பு உலக்கையாகவும், பாறைக்குழி உரலாகவும், சேம்பின் இலை சுளகாகவும் பயன்பட்டன.

"முகைவளர் சாந்து உரல் முத்தார் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சி" (கலி.4:4.5)

யானைக் கொம்பு உலக்கையாகப் பயன்படுத்தியமை அறியலாம்.

"கோடுஉலக்கையாக நல் சேம்பின் இலைசுளகா
ஆடுகழை நெல்லை அறைஉரலுள் பெய்து" (கலி.5: 2.3)

இப்பாடலில், மூங்கில் நெல்லைப் பாறை உரலில் இட்டு யானை தந்த உலக்கையால் குற்றிச் சேம்பின் இலைகளாகிய சுளவால் பயன்படுத்தியமை கூறப்பட்டுள்ளது.

மழை வேண்டி இறைவனைத் தொழுதனர். நல்ல நாள் பார்த்து விதைத்தனர். முதல் விளைச்சலை இறைவனுக்குப் படைத்த பின்னர் நல்ல நாளில் அதனை உண்ணத் தொடங்கினர். இதுபோன்ற சில வழக்கங்களைக் குறிஞ்சி மக்கள் மேற்கொண்டனர்.

### 4.17.8. தினைக்காவல்

குறிஞ்சி நிலத்தில் தினைப்புனம் காத்தலை என்பதை சங்க நூல்கள் பெரிதும் தெரிவிக்கின்றன. குறிஞ்சி நில மக்கள், கதிர்களைக் கிளி, யானை முதலியன கவராதவாறு ஓட்டும் பணியை மேற்கொண்டனர். தினையைக் கவர வரும் விலங்கினங்கள் யானையும் கேழலும் ஆகும். பறவைகளில் கிளிகளும், குருவி இனங்களும் மயில்களும் கூட்டங் கூட்டங்களாகப் படிந்து தினையினை உண்ணும். விலங்குகளின் மீது அம்பு எய்தும், பறவைகளைக் குளிர், தட்டை, முறி முதலிய கருவிகளால் விரட்டியும் தினைக் காவல் புரிந்தனர்.

"கணைவிடு புடையூக் கானம்கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத்து எதிர" (குறி.பா.160.161 அடி)

என்ற பாடலில் அம்பு எய்து யானையை விரட்டிய செய்தி கூறப்பட்டுள்ளது. தினை முற்றத் தொடங்கும் காலத்தில் தலைவியும் தோழியும் தினைப்புனம் சென்றதை கபிலர் தம் பாடலில் கூறியுள்ளார்.

**"நல்கோட் சிறுதினைப் படுபுள் ஓப்பி"** **(குறி.பா.38-வது அடி)**

விளைந்த தினைப் பெருங்கதிர்களை கிளிகள் உண்ண வருகின்றன. அவற்றை ஓட்டிவிட வேண்டும். அதனால் தானும் தலைவியும் தினைப்புனம் காக்கச் சென்றதாகத் தோழி குறிப்பிடுகிறாள்.

கிளியை ஓட்டுதற்கு மகளிர் பாடும் பாடல் 'கிளிகடி' பாடல் எனப்படும் ஓரிடத்தே அமர்ந்தும், எழுந்து சென்றும் கிளியை விரட்டுதல் பழக்கமாகும். இடையிடையே தெளிந்த ஓசையைப் பலகாலும் எழுப்பிக் காவல் புரிதலும் உண்டு.

**"புன் புல மயக்கத்து உழுத ஏனல்**
**பைம்புறச் சிறுகிளி கடியும் நாட"** **(ஐங்.283)**

என்ற பாடலில் புன்செய் நிலத்தைக் கானவர் உழுது விதைத்து வளர்த்த தினைப்பயிரைத் தின்ன வரும் பச்சை நிறச் சிறிய கிளிகளை விரட்டி காவல் புரிந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

**"............................... யானைக்**
**கால்வல் இயக்கம் ஒற்றி, நடுநாள்**
**வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன்**
**கடுவிசைக் கவணின் எறிந்த சிறுகல்**
**உடுஉறு கணையின் போகி"** **(அகம்.292)**

என்ற பாடலில் தினையை உண்ண வரும் யானையை அம்பு எய்தி விரட்டிய செய்தியையும் கபிலர் கூறியுள்ளார்.

### 4.17.9. கிளிகடி கருவிகள்

தழல், குளிர், தட்டை முதலியவை கிளிகடி கருவிகளாகும். தழல் என்பது சுற்றுவதால் ஓசை உண்டாகும் கருவி. பிரம்பு அல்லது குரல் கொடியினால் இதனைப் பின்னுவர். தட்டை என்பது மூங்கிலைக் கொண்டு செய்யப்படும் கருவியாகும். தழல், தட்டை, குளிர், கவண் போன்ற கருவிகளால் முறையாக தட்டி ஒலி எழுப்பி கிளியை ஓட்டியதாக கபிலர் குறிஞ்சிப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

**"தழலும் தட்டையும் குளிரும் பிறவும்**
**கிளிகடி மரபின ஊழ்ஊழ் வாங்கி"** **(குறி.பா.43, 44 அடி)**

என்ற பாடலின் வழி கருவிகள் பற்றிய செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. குளிர் என்பது வீணை போல் கட்டுவதாகும். இழுத்துவிடின் விண்ணென ஓசை உண்டாகும்படி மூங்கில் பத்தைகளால் செய்யப்பெற்ற கருவியாகும். இத்தகைய கருவியைக் கொண்டு தலைவி கிளியை ஓட்டினாள்.

**"படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே**

**இசையின் இசையா இன்பா னித்தே"** (குறி.பா.29)

இப்பாடலில் கபிலர் குளிர் என்ற இசைக்கருவியைக் கொண்டு குறிஞ்சி நில மக்கள் கிளியை ஓட்டிய செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

### 4.17.10. பரண் அமைத்தல்

புனங் காப்போர் உயரத்திலிருந்து காவல் புரிதற்குப் பரண் அமைத்தனர். ஆசினிப் பலா, வேங்கை ஆகிய மரங்களின்மீது பரண் அமைப்பது வழக்கம். யானையும் புலியும் எட்ட முடியாத உயரத்தில் பரண் அமைத்த செய்தியை குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகின்றது.

**"புலிஅஞ்சு இதணம் ஏறிஅவண"** (குறி.பா.41-அடி)

புலிவர அஞ்சும் உயரத்தில் பரண் அமைத்து அதன்மேல் ஏறி காவல் புரிந்ததாகக் கூறப்படுகிறது.

சந்தனக் கட்டையால் பரண் அமைத்தல், மணம், நெடுநாள் அழியாத தன்மை முதலிய தன்னிலைகளை அப்பரண் பெறுமெனக் குறிஞ்சி மக்கள் அறிந்திருந்தனர். குளிர் காலங்களில் பரண் மீதிருந்து தீக்கொளுத்திக் காவல் புரிவர். குளிர் காயும் பொருட்டு நெருப்பு மூட்டுவது வழக்கம். இச்செய்தியை குறுந்தொகையில்,

**"ஏனல்அம் சிறுதினை காக்கும் சேணோன்**

**ஞெகிழியின் பெயர்ந்த நெடுநல் யானை**

**மீன்படு சுடர்ஒளி வெரூஉம்**

**வரன்தோய் வெற்பன் மணவா ஊங்கே"** (குறு.357)

என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார். இப்பாடலில் பரண் மேல் இருக்கும் குறவன் கொளுத்திய கொள்ளிக்கட்டையைக் கண்டு அஞ்சி ஓடியும், வானத்தில் எரி நட்சத்திரம் எரிந்து விழும் என்றும் அஞ்சிய யானை வாழ்கின்ற மலை என்று கூறுவதிலிருந்து பரண் மீதிருந்து தீக்கொளுத்திக் காவல் புரிந்த செய்தியை அறியமுடிகிறது.

#### 4.17.11. வாணிகம்

பொருளில்லாதான் வாழ்க்கை பொலிவிழக்கும் என்பது பண்டை மக்கள் உணர்ந்து வந்த உண்மையாகும். எனவே, பொருளைப் பெற்றுச் சிறக்க மக்கள் வாணிகத்தில் ஈடுபட்டனர். ஒரு நாட்டின் செல்வத்திற்கு வணிகச் சிறப்பும் ஒரு காரணமெனலாம். பண்டைத் தமிழரின் வாணிக வளர்ச்சி தங்குதடையின்றி வளர்ந்தது. பிறர் பொருளைத் தம் பொருள் போலக் கருதி போற்ற வேண்டும் என்பது தமிழரின் கொள்கையாகும். பட்டினப்பாலை வணிகர் இயல்பைப் பற்றி குறிப்பிடுகிறது.

**"கொள்வதூஉ மிகைகொளாது**

**கொடுப்பதூஉம் குறைகொடாது"[54]** (பட்.பா.3)

எனச் சுட்டும். வாணிகத்திலும் அறம் பிறழாமல் இருந்ததால் பண்டைத் தமிழரின் வாணிக வளர்ச்சி பல்கிப் பெருகியது.

மலைபடு பொருள்களான மிளகு, சந்தனம், தேக்கு, பொன், தந்தம், புலித்தோல் முதலிய பொருள்களும், யானை, குரங்கு முதலிய விலங்குகளும், மயிலும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

பண்டங்களைக் கூவி விற்பவர் அக்காலத்தில் இருந்தனர். பையில் பண்டங்களைப் போட்டு விற்பது வழக்கம். நெல் முதலியவற்றை அளந்து உறையில் இடுவர். குறிஞ்சி நிலத்தில் விளைந்த அவரை, பலா முதலியன அந்நில மக்களின் வாழ்வில் இடம் பெற்றன.

**"அவரை அடுந்த மந்தி பகர்வர்**

**பக்கின் தோன்றும் நாடன் வேண்டின்**

**பசுப்போல் பெண்டிரும் பெறுகுவன்**

**கொல்கேள் ஆகலின் நல்குமால் இவட்கே"** (ஐங்.271)

அவரைக் காயை நிறையத் தின்ற மந்திகள் பண்டங்களை விலை கூறி விற்கும் வணிகரின் பைகள் போன்று தோன்றும். அத்தகைய இடத்தையுடைய மலைநாடன் என்று கூறுவதிலிருந்து பையில் பண்டங்களைப் போட்டு விற்று வாணிபத்தைப் பெருக்கிய செய்தியை அறியமுடிகிறது.

உணவு சிறிதும் இல்லாத காலத்தில் யானைக் கோட்டினை விற்று உணவு பெற்று உண்டனர். இச்செய்தியை கபிலர் குறுந்தொகையில் குறிப்பிட்டுள்ளார்.

**"காந்தள்அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென**

**கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத்து உண்ணும்"** (குறு.100)

இதில் ஆண் யானையின் தந்தத்தை உணவுக்காக விற்ற வாணிபச் செய்தி குறிப்பிடப்படுகிறது.

### 4.18. வழிபாடு

வழிபாடு என்ற சொல் 'வழிபடு' என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்த தொழிற்பெயராகும். வழிபடு என்னும் சொல்லிற்கு வழியிற் செல்லுதல், பின்பற்றுதல், பூசனை, வழக்கம் எனப் பல பொருள்கள் கூறப்படுகின்றன. "இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு"[55] என்றும் "உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காகத் திறந்து வைப்பதே வழிபாடு[56] என்றும் பல்வேறு விளக்கங்களை முன்வைக்கிறார் ஓ.முத்தையா. அதேபோன்று "மக்கள் தம்மைச் சூழ்ந்துள்ளவற்றையும், தமக்குத் தேவையாக இருக்கின்ற நெருப்பு, காற்று, மழை, ஞாயிறு முதலிய இயற்கைப் பொருட்களையும் முதற்கண் வழிபட்டு வந்தனர்.[57] "தம்மை மீறிய ஒரு ஆற்றல் உண்டு. அது தம்மை இயக்குவதோடு பிற பொருள்களையும் இயக்குகிறது என அறிந்து அப்பேராற்றலை வழிபடலாயினர்".[58]

#### 4.18.1. குறிஞ்சி நிலக் கடவுள்

இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய பழந்தமிழர் இயற்கையை அழகின் உறைவிடமாகக் கண்டனர். அவ்வழகினை 'முருகு' என்னும் சொல்லால் குறிப்பிட்டனர். மணம், இளமை, அழகு என்பன முருகு உணர்த்தும் பொருள்களாகும். பண்டைத் தமிழ் மக்கள் இச்சொல்லால் முழுமுதற் பொருளைக் குறித்தது வியக்கத்தக்கது. குறிஞ்சி நிலத்திற்குரிய கடவுளாக முருகன் விளங்குவதைச் சங்க நூல்கள் கூறுகின்றன.

பண்டை மனிதன் இயற்கையில் அஞ்சுதற்குரியனவற்றைக் கண்டு அஞ்சினான். அந்த அச்சமே அவற்றை மனிதன் போற்றி வணங்குதற்குக் காரணமாக அமைந்தது. தீ, இடி, மின்னல், ஞாயிறு, மரம் முதலியவற்றை அக்கால மக்கள் வணங்கினர்.

"மனிதன் ஆதிவாசியாய் வாழ்ந்த காலத்தில் காற்று, மழை, மின்னல், இடி என்பனவற்றைக் கண்டு பயந்து அவற்றோடு நேசம் கொண்டு வணங்கத் தொடங்கினான். அதே நேரத்தில் காற்றில் அசைந்து மழையில் நனைந்து இடி மின்னலைத் தாங்கி நின்ற பெருமரங்களின் மீதும் அவனுக்கு சிநேகம் ஏற்பட்டது. அந்த சிநேகம் வழிபாடாக மாறியது. இந்த மரவழிபாடு ஆதிகாலத் தமிழர்களிடையே பரவலாக இருந்திருக்கிறது."[59]

*“சிந்துவெளி நாகரிகத்தில் மரவழிபாடு இடம் பெற்றுள்ளது. சிந்து வெளி முத்திரைகளில் அரசமரங்கள் அதிகம் இடம் பெற்றுள்ளன. மெசபடாமியாவில் மரக்கிளைகள் தெய்வப் பண்புடன் முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ளன.”*[60] இவ்வாறாக தமிழர் வழிபாடுகள் பல்கிப் பெருகின. மலையின் அமைதி, தனிமை, குறிஞ்சி நிலத்தில் வீசிய கடுங்காற்றின் பேரொலி, புயலின் சீற்றம் முதலியவை அச்சத்தை விளைவித்தன. அவற்றைத் தன் ஆற்றலால் தவிர்த்துக் கொள்ள முடியாத மனிதன், இயற்கை இன்னல்களுக்கு இலக்காகத் தெய்வம் பற்றிய உணர்வுகளைப் பெறுவானாயினான். தெய்வம் உறையும் இடங்களை திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது.

**“காடுங்காவும் கவின்பெறு துருத்தியும்**
**யாறும் குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்”**[61]

**(திருமுருகு. 223-226)**

என்பதன்வழி தெய்வம் உறையும் இடங்களை அறியலாம். மேலும்,

**“சேயோன் மேய மைவரை உலகமும்”**[62]

**(தொல்.பொருள்.951)**

என்று தொல்காப்பியர் முருகனை குறிப்பிடுகிறார்.

முருகனைப் பற்றிய செய்திகள் பரிபாடலில் மிக விரிவாகக் கூறப்படுகின்றது. திருமுருகாற்றுப்படையில் முருகனின் உறைவிடங்களும், அவன் அருட்செயலும் அடியார்கள் அவனைப் போற்றிப் புகழ்தலும் கூறப்படுகின்றன.

“தமிழ் மக்கள் வாழ்க்கை என்று மலைநிலத்தில் தொடங்கியதோ அன்று தொட்டு இன்று வரை முருகன் தமிழ்நாட்டுத் தெய்வமாகப் போற்றப்படுகிறான். தமிழ் நாட்டுப் பழங்கடவுள் முருகனே என்றும் தமிழ்த்தென்றல் திரு.வி.க.அவர்கள் ஆய்ந்து கூறியுள்ளதாக இராம.குருநாதன் குறிப்பிட்டுள்ளார்.”[63]

பழந்தமிழர் முருகு என்னும் சொல்லால் முருகனைக் குறிப்பிட்டனர். நிலவுலகம் நானிலம் என்ற பாகுபாடு பெற்ற காலத்தே முதற்கண் தோன்றிய நிலமாகிய மலைக்கு முதன்முதற் தெய்வமாக முருகு கொள்ளப்பெற்றது. சேய், வேள் என்னும் சொற்களால் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் முருகனைப்

போற்றினர். இன்றைக்கு பரவலாக முருகவழிபாடு எல்லா நிலங்களிலும் நிலைத்துள்ளது. "தொல்காப்பியத்துள் சேயோன் (முருகன்) மலைத் தெய்வமாகக் குறிக்கப்படுவான். சங்க காலத்திலோ, முருகன் கடல் நிலத் தெய்வம் ஆயினமையைத் திருச்செந்தூர் முருக வழிபாடு காட்டும். முருகன் முதலான பிற தெய்வங்களும், ஒவ்வொரு நிலத்திற்குரியன என்ற சிறப்புரிமையை இழந்து எல்லா நிலத்திற்கும் உரியவை என்ற பொதுவுரிமையைச் சங்க காலத்தில் எய்திவிட்டன."[64]

இத்தகைய சிறப்புடைய இறைவனான முருகனை குறிஞ்சி நில மக்கள் வழிபட்ட விதம் பற்றி கபிலர் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

### 4.18.2. வெறியாடல்

வெறியாட்டு என்பது மிகப் பன்நெடுங் காலத்திற்கு முன்பே தமிழ்ச் சமுதாயத்தில் வேரூன்றிவிட்ட முருக வழிபாட்டு நிகழ்ச்சியாகும். தொல்காப்பியர் வெறியாட்டு எடுக்கும் வேலனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். வெறியாட்டு எடுப்போன் வேலன் என அழைக்கப்பட்டான்.

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**

**வெறியாட்டு அயர்ந்த தாந்தளும்"[65]** (தொல்.பொருள்.1006)

என வரும் தொல்காப்பிய நூற்பா வேலன் தோற்றத்தை விளக்கி அவன் வெறியாடும்போது காந்தள் சூடுவதையும் குறிப்பிடுகின்றது.

குறிஞ்சித் திணைப் பாடல்களில் குறிப்பிடப்படுகின்ற வேலன் பெரும்பான்மை அகத்துறைக்கே உரியவனாகிறான். மகளிரின் நோயை நீக்க விரும்பும் அன்னை வெறியாட்டிற்கு ஏற்பாடு செய்கிறாள்.

**"கறிவளர்சிலம்பில் கடவுள் பேணி**

**அறியாவேலன் வெறிஎனக் கூறும்**

**அதுமனம் கொள்குவை அனையிவள்**

**புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே"** (ஐங்.243)

இப்பாடலில் 'அன்னை தலைவியின் புதியமலர் போன்ற கண்கள் அழுது வருந்துகின்ற நோய்க்கு மிளகுக்கொடி வளர்கின்ற மலைவாழ் முருகனைப் பேணி, வெறியாட்டு நிகழ்த்தி தன் வினாவுக்கு விடையாக முருகணங்கு என்று கூறுவாள். நீயும் அதனை உண்மையென்று ஏற்று வெறியாட்டு நிகழ்த்துவாய்' என்று தோழியின் கூற்று வாயிலாக குறிஞ்சி நிலமக்கள் முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்தியமை தெரிகிறது. தங்களுக்கு துன்பம் ஏற்படுகிற

பொழுதெல்லாம் இறைவனை வணங்கி, சரணடைகிற நிலை காலங்காலமாக தமிழ்ச் சமூகத்தில் நிலவி வருவதை மேற்கண்ட பாடல்வழி அறியலாம்.

### 4.18.3. முருகனை வழிபடும் முறை

குறிஞ்சி நில மக்கள் முருக வழிபாட்டில் செந்நெல்லையும் பொரியையும் தூவி வழிபட்டதாக குறுந்தொகையில் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**“நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்**
**வேலன் புனைந்த வெறியயற் கலந்தொறும்**
**செந்நெல் வான்பொரி சிதறியனை”** (குறு.153)

என்னும் அடிகளில் முருக வழிபாடு இடம் பெறுகிறது. புன்னை மலர்கள் சூழ்ந்த மணல் பரப்பில் களம் அமைத்துத் தூய்மை செய்து நெல்லையும், பொரியையும் தூவி வழிபட்ட செய்தியை கபிலர் குறிப்பிட்டுள்ளார். இந்த உலகை இறைவன்தான் படைத்தான் என்ற சிந்தனையில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒப்பற்ற ஆற்றலை உடையவராகக் கருதப்படும் இறைவனை வணங்கும்பொழுது உள்ளன்போடு தன்னிடம் உள்ள பொருட்களை வைத்து இறைவனிடத்திலே அன்றும் இன்றும் வழிபாடுகளை நிகழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 4.19. பேய் பற்றிய நம்பிக்கை

இயற்கை வெளியில் ஆவிகள் உறையும் என்பது தொன்மையான நம்பிக்கையாகும். ஆவிகள் மக்களுக்கு நன்மையும், தீமையும் செய்வதாக மக்களின் எண்ணங்கள் அமைகின்றன. அவற்றில் நன்மை செய்யும் ஆவிகளை முன்னோர் வழிபாட்டிலும், தெய்வ வழிபாட்டிலும் உட்படுத்தி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தீமை செய்யும் ஆவிகளை பேய், பிசாசு, முனி என்று அழைத்து அச்சம் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். பேய் என்னும் சொல் அச்சம் என்னும் பொருளிலிருந்து பிறந்ததாகும்.

**“பேம் நாம் உரும் எனவரூஉம் கிளவி**
**ஆமுறை மூன்றும் அச்சப் பொருள”**[66] (தொல்.சொல்.848)

என்ற நூற்பா பேய் எனும் சொல் அச்சத்தைக் குறிப்பதாகக் கூறுகிறது.

“‘பேய்’ எனும் சொல்லின் வேர்ச்சொல் ‘பே’ என்பதாகும். ‘பே’ என்பதற்கு சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் பேரகராதியும் அச்சம் என்ற பொருளையே குறிப்பிடுகின்றது”[67]

“‘பே’ எனும் சொல் நாட்டுப்புறங்களில் அச்சம் என்ற பொருளிலே வழங்கப்படுகிறது. நாட்டுப்புறங்களில் ஒருவரை பயம்காட்டி விளையாடும்

நிலையில் ஒருவர் மறைந்திருந்து பிறரிடம் திடீரெனத் தோன்றி ‘பே’ என்று கூறுவர். எனவே ‘பே’ எனும் சொல்லானது இன்றும் அச்சத்தை விளைவிக்கும் அதே பொருளில் காலங்காலமாக வழங்கி வருவதாகக் குறிப்பிடுவர்”[68] இவ்வாறாக அச்சத்தை விளைவிக்கக் கூடிய தீய ஆற்றல் அச்சத்தைக் குறிக்கும் ‘பே’ எனும் சொல்லைக் கொண்டே ‘பேய்’ என்றழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மக்களுக்குத் தீமை செய்யும் தீய ஆற்றலின் தோற்றம் அச்சம் விளைவிக்கக் கூடியதாக மக்களின் எண்ணங்கள் அமைகின்றன.

### 4.20. குறிஞ்சி நில மக்களின் பேய் பற்றிய நம்பிக்கை

பேய் பற்றிய எண்ணங்களும் சங்க காலத்தில் நிலவியிருந்தன. பேய் இரவில் நடமாடும் என்று எண்ணினர். பேய், கழுது, பழு, பிசாசு என்னும் சொற்களால் பேயினைக் குறிப்பிட்டனர். தலைவி தெய்வத்தால் அணங்குற்றாள் எனக் கருதும் அன்னை, தலைவியின் நோய்க்குத் தெய்வம் மட்டுமின்றி பேயும் காரணம் என எண்ணுதலும் உண்டு.

மனிதன் உயிர் வாழும்போது அவனின் நிலைகள், செயல்கள் அமைந்ததற்கேற்ப இப்பிறப்பிற்குப் பிறகு ஆவியின் தன்மைகள் அவ்வடிப்படையில் நன்மை செய்து வாழ்ந்தவர் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுவதும், துன்பம் செய்தார்கள், அகால மரணம் அடைந்தவர்கள் தீய ஆவிகளாக விளங்கி மக்களுக்குத் தீங்கு செய்வதாகக் கருதப்படுகிறது. இவ்வாறான தீய ஆற்றல் பேய், பிசாசு என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. பேய் என்பதற்கு “இல்லையென்னும் பொருள் கொண்ட சொல் எனச் சென்னைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது.”[69] மனிதனால் உயிர் வாழ்ந்தவர் தற்பொழுது அந்நிலையில் இல்லாமல் இருப்பதாகப் பொருள் கொள்ளலாம். இத்தகைய பேய் குறித்து குறிஞ்சி நில மக்களிடமும் நம்பிக்கை நிலவியிருந்தது.

“மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்” (குறு.87)

என்ற பாடலில் பேய் என்பதற்கு அச்சம் தரும் என்ற பொருளையே குறிப்பிடுகிறது. ஊர் நடுவில் நிற்கும் செங்கடம்பு மரத்தில் அச்சம் தரும் தெய்வம் தங்குகிறது. அது கொடியவர்களைத் தண்டிக்கும் என ஊரார் கூறுவர் என்ற சிந்தனையின் வளர்ச்சியே பேய் குறித்த நம்பிக்கையை வளர்த்தெடுத்திருக்கலாம்.

### 4.20.1. அணங்கு

*மலையின் மீது தெய்வ மகளிர் உறைவதாக அக்காலத்துத் தமிழ் மக்கள் கருதினர். ‘அணங்கு’ எனவும், ‘சூர மகளிர்’ எனவும் அவர்கள் அழைக்கப்பட்டனர். மலையின் உயர்ந்த இடத்தில் அணங்கு உறைவதாக எண்ணினர்.*

*உயர்ந்த மலை மீது மட்டுமின்றிப் பக்க மலைகளிலும் நீர்த்துறைகளிலும் அணங்குகள் உறைவதாக எண்ணினர். காந்தள் பூவினைக் குவளையோடு விரவத்தொடுத்து அவர்கள் சூடிமகிழ்ந்த செய்தியினை நற்றிணையில் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.*

**“உடுக்கும் தழை தந்தனனே யாம்அஃது**

**உடுப்பின் யாய் அஞ்சுதுமே கொடுப்பின்**

**கேளுடைக் கேடு அஞ்சுதுமே ஆயிடை**

**வாடலகொல்லோ தாமே அவன்மலைப்**

**போருடை வருடையும் பாயா**

**சூருடை அடுக்கத்த கொயற்கு அருந்தழையே”** (நற்.359)

*இப்பாடலில், ‘தலைவன் தலைவிக்கு உடுத்திக்கொள்ள தழையுடையை தருகிறான். அத்தழை ஆடையை உடுத்தின் அன்னை சினம் கொள்வாள் தலைவனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டால் அவன் வருத்தம் கொள்வானோ என்று அச்சமாக இருக்கின்றது. தலைவனின் பெரிய மலையில் போர் செய்தலையுடைய மலையாடு பாய்ந்து செல்ல முடியாத உயரத்தில் தெய்வம் இருக்கும். தெய்வமுள்ள மலைப்பக்கத்துத் தழையாதலின் அதனை விலக்குதலும் பிழையாம்’ என்று தோழி கூறுவதன் வாயிலாக அணங்கு பற்றிய சிந்தனை பரந்துபட்ட இவ்வுலகில் ஆங்காங்கே ஆவிகள் தங்கி நன்மையும், தீமையும் செய்து வருவதான நம்பிக்கை காலங்காலமாக இருந்து வருவதை அறியலாம்.*

### 4.20.2. பலியிடுதல்

*இயற்கை வழிபாட்டிலிருந்தே ஏனைய வழிபாடுகள் தோற்றம் பெற்றன. ஆதலால் இயற்கைச் சீற்றத்தைக் கண்டு அஞ்சிய மனிதன் அதனைச் சாந்தப்படுத்தும் முயற்சியில் இரத்தப் பலியினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இயற்கையின் சீற்றம் மிகுதியாக விளங்குவதுபோல் இறைவனும் சில வேளையில் கொடூரமான நிலையை அடையும் எனக் கருதி இயற்கையையும், இறைவனையும் தொடர்புபடுத்தியிருக்கலாம். இறையாற்றல் இயற்கையை*

ஒத்ததாக விளங்கும் எனக் கருதியதன் விளைவே இதற்குக் காரணமாக இருக்கலாம். அதனைச் சாந்தப்படுத்தும் பொருட்டே இப்பலியிடும் வழிபாட்டு நிலையாகும். மேலும் உயிர்சக்திப் பொருளாக விளங்கும் இரத்தத்தைப் பலியாகக் கொடுத்து இறைவனைத் தன் கட்டுக்குள் கொணர்ந்து பயனடையலாம் என்றும் மக்கள் கருதியிருக்கலாம். இவ்வாறான சிந்தனைகளில் பலியிடும் வழக்கம் பழங்காலம் முதலே இருந்து வருகிறது.

பழங்குடி மக்களிடம் தெய்வத்திற்குப் படைத்தலும், பலியிடுவதும் நாளடைவில் வளர்ந்தன. விலங்குகளையும், பறவைகளையும் பலியிடத் தொடங்கினான். பலியிடு உயிரினங்களாக ஆடு, கோழி, பன்றி முதலியவை இடம்பெற்றன. படையற் பொருளாகத் தேனும், தினையும், அரிசியும், வரகும் இருந்துள்ளன.

**“மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்**

**குருதியொடு விரைஇய தூயவெள் ளரிசி**

**சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்”[70] (திருமுரு.232-234)**

என்ற சங்க இலக்கியப் பாடல் இறைவழிபாட்டில் ஆடு பலியிட்டதைக் குறிப்பிடுகிறது.

மனிதன் தன் வாழ்வில் செய்த தவறுகளைப் பாவங்களாகக் கருதி, அதனை வேறு பொருளுக்கு மாற்றுகின்ற நிலையிலும் உயிர்ப்பலிகள் தோன்றியிருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது.

தெய்வங்களுக்கு பலியிடும் முறையில் சில வரைமுறைகள் காணப்படுகின்றன. பலியிடப்படுபவை ஆணினத்தைச் சார்ந்தே இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. “சமூக ஒடுக்குதலின் ஆவேச நிலையில் தெய்வமடைந்த பெண்கள் தங்களின் ஒடுக்கப்பட்ட ஆழ்மன வெளிப்பாடாக ஆண் குறியீடுகளை உயிர்ப்பலிகளாகப் பெற்றனர் என்றும், இதனாலேயே ஆண்மகன், ஆண் எருமை, ஆண் ஆடு, ஆண் கோழி என்ற வரிசை ஆண் குறியீடாய்ப் பலி கொள்ளப்பட்டது என்றும் பக்தவச்சலபாரதி குறிப்பிடுவார்”[71]

பலியிடுதலை ஒரு விழாவாகவே பழங்குடியினர் கருதினர். தீய காற்று, ஆவி இவற்றிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள பலியிடுவது வழக்கம். அந்த வகையில் குறிஞ்சி நில மக்களும் இத்தகைய பழக்கத்தை மேற்கொண்டனர். முருகனுக்கு ஆட்டுக்குட்டியைப் பலிகொடுத்தச் செய்தியை அகநானூற்றில் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

“கூறாய் செய்வது தோழி வேறுஉணர்ந்து

அன்னையும் பொருள்உகுத்து அலமரும் மென்முறிச்

சிறுகுளகு அருந்து தாய்முலை பெறாஅ

மறிகொலைப் படுத்தல் வேண்டி வெறிபுரி

ஏதில் வேலன் கோதை துயல்வரத்” (அகம்.292)

இப்பாடலில் தலைவியின் கை வளையல்கள் கழன்றதை தாய் தெய்வக் குற்றமாகக் கருதி வேலனை அழைத்து வெறியாடுவதற்கு ஏற்பாடு செய்கிறாள். அவ்வழிபாட்டில் ஆட்டுக்குட்டியைப் பலிகொடுப்பது இன்றியமையாததாக அமைந்தது. தலைவி கூற்று வாயிலாக ஆட்டுக்குட்டியை முருகனுக்கு பலிகொடுத்தச் செய்தி கூறப்பட்டுள்ளது. இதில், தீய ஆற்றல் தலைவியை சாடியிருக்குமோ என்ற அச்சம் தாய்க்கு இருப்பதால் தான் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த எண்ணுகிறாள். ஆக, தங்களைக் காத்துக்கொள்ள பழந்தமிழர் இப்பலியிடும் முறையினை கையாண்டிருப்பதை இப்பாடல்வழி அறியமுடிகிறது.

இன்றைய பெருந்தெய்வ வழிபாட்டில் எலுமிச்சை பழத்தை அரிந்து குங்குமத்தில் வைத்து பிழிந்து விடுவதும் பலியிடுதலின் எச்சமேயாகும். எனவே பலியிடக்கூடிய சிந்தனையும், காலங்காலமாக இயல்பாகவும் மாற்றமடைந்தும் இச்சமூகத்தில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டே வருகின்றன.

### 4.20.3. படையல் பொருட்கள்

மலையுறை தெய்வத்திற்கு வேங்கை மலரினைக் கொண்டு குலமுதல் வாழ்த்தித் தேனாகிய பலியினைச் சொரிந்தனர் என கபிலர் பாடலில் குறிப்பிடுகின்றார்.

“குன்றக் குறவன் காதல் மடமகள்

மன்ற வேங்கை மலர்சில கொண்டு

மலைஉறை கடவுள் குலமுதல் வழுத்தித்

தேம்பலிச் செய்த ஈர்நறும் கையள்

மலர்ந்த காந்தள் நாறிக்

கலிழ்ந்த கண்ணள்எம் அணங்கி யோளே” (ஐங்.259)

இப்பாடலில் ‘குறிஞ்சிநிலக் குறவனின் அன்புமகள் வேங்கை மலரினைக் கொண்டு மலையில் உறைகின்ற கடவுளை, மதித்துத் தேனையே அன்புப் படையலாக அளித்த ஈரமான மணமுடைய கையினள், காந்தள் மணம் கமழும்

மேனியள்' என்று தலைவன் தலைவியைப் பற்றிக் குறிப்பிடுகிறான். இதில் தேனைப் படையல் பொருளாக மலையில் உள்ள தெய்வத்திற்கு படைத்த செய்தி கூறப்பட்டுள்ளது.

இறைவன்மீது கொண்ட பற்றுதலையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதற்காக மேற்கண்ட வகையில் பொருட்களை அளித்து வழிபாட்டை மேற்கொள்கின்றனர். அன்பு, நன்றியுணர்வு, வேண்டுதல் போன்ற பல காரணங்களால் வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

### 4.20.4. நம்பிக்கைகள்

மக்களின் உள்ளத்தில் எழுகின்ற நம்பிக்கைகள் அவர்கள் மேற்கொள்கின்ற செயல்கள் பலவற்றுக்கு அடிப்படைக் காரணங்களாகத் திகழ்கின்றன. "நம்பிக்கை என்பது மனித மனத்தினுடைய வாழ்க்கை அனுபவத்தின் முதிர்ச்சியால் வினவுகின்ற ஒன்றாகும். இயற்கையில் ஏற்படும் பலவிதமான மாற்றங்களையும் விபத்துக்களையும் பார்த்து மனிதன் தன்னுடைய நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் உருவாக்கிக் கொள்கிறான்."[72] சங்க நூல்களின்வழி பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள் பலவற்றை அறியலாம்.

நிமித்தம் காணுதல், நாள் பார்த்தல், விரிச்சி கேட்டல், முதியோர் வாய்ச்சொல் கேட்டல், கனவின் பலன் எண்ணுதல், பல்லி சொல் கேட்டல் ஆகிய செயல்கள் பழந்தமிழ் மக்களின் உள்ளத்தில் நிலவிய நம்பிக்கைகளாக வெளிப்படுகின்றன.

### 4.20.5. தெய்வ நம்பிக்கைகள்

மராஅ மரத்திலும், ஆல மரத்திலும், மா மரத்திலும் தெய்வங்கள் உறைந்ததாகப் பழந்தமிழர் நம்பினர். மாமரத்தில் உறைந்த தெய்வம் கொடியோரை வருத்தும் இயல்புடையது. மராஅ மரத்தில் உறைவதாகிய கடவுளைப் ***பேஎமுதிர்க் கடவுள்*** எனக் குறுந்தொகையில் கபிலர் குறிப்பிடுகின்றார்.

**"மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்**
**கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்**
**பசைஇப் பசந்தன்று நுதலே**
**ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே"** (குறு.87)

என்ற பாடலில் ஊர் நடுவில் நிற்கும் செங்கடம்பு மரத்தில் அச்சம் தரும் தெய்வம் தங்குகிறது. அது கொடியவர்களைத் தண்டிக்கும் என ஊரார் கூறுவர்.

எம் தலைவர் சிறிதும் கொடியவர் அல்லர் என்று தலைவி கூறுவதன் வாயிலாக, மரத்தில் உறையும் தெய்வம் தன் தலைவனைக் காக்கும் என்ற நம்பிக்கை வெளிப்படுவதாக அமைகிறது. அதுமட்டுமல்லாது அத்தெய்வம் கொடியோரைத் தண்டிக்கும் என்ற நம்பிக்கையும் குறிஞ்சி நில மக்களிடையே இருப்பதைக் காண முடிகிறது.

### 4.20.6. நிமித்தம் காணுதல்

'சகுனம்' என்பது மனிதன் தன்னைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளின் அடிப்படையில் தான் எண்ணிய அல்லது செயல்படுகின்ற காரியங்களின் முடிவுகள் குறித்து ஒரு கருத்தினை அடைவதாகும்.

'சகுனம்' என்றழைக்கப்படுகின்ற சொல்லுக்குரிய பொருள் பழங்காலத்தில் 'நிமித்தம்' என்ற சொல்லில் வழங்கப்பட்டது. "நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னிறுத்துவதாகும்"[73] சகுனம் பார்த்தலை தொல்காப்பியம் புள், நிமித்தம் என்னும் சொற்களின் வழியாகக் குறிப்பிடுகிறது.

**"நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்"[74]** (தொல்.பொருள்.1037)

என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. 'புள்' என்னும் சொல் பறவையைக் குறிக்கிறது. பழங்காலத்தில் பறவையை முதன்மையாகக் கொண்டே சகுனங்கள் பார்க்கப்பட்டதை அறியலாம். 'சகுனம் என்பதற்கு பறவைகள் வலமிடாதல் முதலிய நன்மை, தீமைக் குறி என்று தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.'[75] மேலும் 'கிழக்கு, நிமித்தம், பறவை' என்று சதுரகராதி சகுனத்திற்கு பொருள் கூறுகிறது.'[76] நன்மையில் முடியும் என கணிக்கப்படும் அறிகுறிகள் நல்ல சகுனம் என்றும், காரியம் வெற்றி பெறாத நிலையினை உணர்த்தும் அறிகுறிகள் தீய சகுனம் என்றும் சங்ககால மக்களால் நம்பிக்கைகள் அடிப்படையில் கணிக்கப்பட்டிருக்கின்றன.

"விரிச்சியே வாய்ப்புள் என்ப மிக்க நற்சொன் நிமித்தம்" என்று சூடாமணி நிகண்டு நன்னிமித்தத்திற்குப் பொருள் கூறுகிறது.'[77] 'ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர் பிறர் கூறும் சொற்களைச் சகுனமாகக் கொள்வதே விரிச்சி எனப்படும்.'[78] வாய்ப்புள் என்பது நற்செயலினைக் குறிப்பிடுவதாகும். "நிமித்தங்கள் பெரும்பாலும் மனித மனம் முடிவெடுக்க இயலாத சூழ்நிலையில் தோன்றுவனவாகவே காட்சி தருகின்றன. மனிதன் ஆற்றல் புகும் செயல்களுக்கும், இயற்கையில் நிகழும் நிகழ்வுகளுக்கும் ஒருவிதத் தொடர்பு இருப்பதாக மனித இனம் கற்பித்துக் கொண்ட நிலையில் நிமித்தக் கூறுகள் உருவாகத் தொடங்கின"[79] என்பர்.

“மக்கள் காணும் நிமித்தங்கள் கூகை, விலங்கு, மாந்தர், கனவு போன்றவை வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பர்.”[80] மக்கள் தன்னைச் சுற்றி நிகழும் அனைத்தும் நிமித்தக்கூறுகளை வெளிப்படுத்தி உதவுவதாகவே கருதுகின்றனர். தனக்காகவே மற்றவை யாவும் படைக்கப்பட்டதாக மக்களின் மனநிலை அமைவதை இந்நம்பிக்கைகள் வாயிலாக அறியலாம்.

குறிஞ்சி நில மக்களிடம் நிமித்தம் பார்க்கும் நம்பிக்கை இருப்பதை கபிலர் குறிப்பிட்டுள்ளார். அமிழ்தம் தேவருலகத்தின் உணவாகும் என்பது அன்றைய மக்களின் நம்பிக்கையாக இருந்தது. நல்ல சொற்களைக் கேட்கும்போது அவற்றைக் கூறியவரை வாழ்த்தும் வழக்கமும் குறிஞ்சி நில மக்களிடையே இருந்தது. ‘ஒரு பெண் தான் நினைத்ததை மற்றவர் சொல்லும்போது அதனை நன்னிமித்தமாகக் கொண்டு தேவர் உணவாகிய அமுதத்தை உண்பாளாக’ என்று கூறுகிறாள்.

**“அமுதம் உண்கநம் அயலில் ஆட்டி**

**கிடங்கில் அன்ன இட்டுக்கரைக் கான்யாற்றுக்**

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

**உருமிடைக் கடிஇடி கரையும்**

**பெருமலை நாடனை வரூஉம்என் றோளே”** (நற்.65)

என்ற பாடலில் தலைவன் குறித்த பருவத்தில் வந்திலன் என்று தலைவி எண்ணியிருக்கும் வேளையில், அயல் வீட்டுப் பெண் ஒருத்தி மற்றொருத்தியுடன் பேசும்போது ‘அவன் இப்பொழுதே வருவான்’ என்று கூறினாள். அச்சொற்களைக் கேட்டதும் இனிமையாக இருந்தது. அச்சொற்கள் தமக்கு தொடர்புடையதாக ஏற்றுக்கொண்டு, அதனை தலைவி நன்னிமித்தமாகக் கருதுகிறாள். அதனால் நன்னிமித்தம் கூறிய அப்பெண் தேவர் உணவாகிய அமுதத்தை உண்பாளாக என்று தலைவி கூறுகிறாள்.

இதனால் இதில் நன்னிமித்தம் பார்க்கும் நம்பிக்கை பழங்காலம் முதல் இன்றைய காலம் வரையில் நிலவி வருவதை அறிய இயலுகிறது.

### 4.20.7. முற்பிறவிகள் தொடர்பான நம்பிக்கைகள்

முற்பிறப்பு பற்றிய நம்பிக்கைகள் பண்டைக் காலத்தில் நிலவியிருந்தன. உலக உயிர்களுக்கு மும்மை, இம்மை, மறுமை ஆகிய முற்பிறப்புகள் அமையும் என்பது சங்க கால மக்களின் நம்பிக்கையாகும். சமூகத்தில் இந்நம்பிக்கைகள் பழங்காலம் முதல் இன்று வரை இருந்து வருகிறது.

**“இம்மை யுலகத் திசையொடும் விளங்கி**

**மறுமை யுலகமும் மறுவின் றெயதுப”** **(அகம்.66)**

என்ற பாடல் இம்மை, மறுமை தொடர்பான நம்பிக்கையினை எடுத்துரைக்கின்றன. மேலும்,

**“ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்**

**போகூழால் தோன்றும் படி”[81]** **(குறள்.371)**

என்ற குறள் ‘ஒருவர் நல்வினையை மேற்கொண்டிருந்தால் பொருள் கைகூடும் என்றும், தீய வினையை மேற்கொண்டிருந்தால் பொருள் தன்னை விட்டுப் போகும்’ என்றும் வலியுறுத்துகின்றன. எனவே நல்வினை, தீவினை என்ற இரு வினைப்பயன்கள் இங்கு விளக்கப்படுகின்றன. இவ்வினைப் பயனை ‘ஊழ்வினை’ என்று பெயரிட்டு அழைக்கின்றனர். “மனிதன் ஒரு பிறப்பில் செய்த வினைகளின் பயனைப் பின்வரும் பிறவிகளில் அனுபவித்தே தீரவேண்டுமென்பது ஊழ்வினையின் நியதியாகும் என்பர்.”[82]

மேலும், “பல பிறவிகளின் நல்ல, தீய செய்கையின் முழுப் பயனையும் அனுபவிக்கும் கட்டாயப் பொறுப்பு மனித உயிர்கட்கு உண்டென்பதை வலியுறுத்தவே ஊழ்வினைக் கொள்கை தோன்றியதென்றும் இது மனிதனைத் திருத்தும் முயற்சி என்றும் குறிப்பிடுவர்”[83] இவ்வாறாக பிறவிக் கொள்கையின்படி முற்பிறவியில் நன்மை செய்திருந்தால் இப்பிறவியில் நன்மையும், மாறாக தீமை செய்திருந்தால் துன்ப வாழ்க்கையும் நிலைபெறும் என்று மக்கள் நம்புகின்றனர்.

“இம்மை என்பது இந்நிலவுலக வாழ்வென்றும் மறுமை என்பது மரித்துப் பிறக்கும் மறுபிறப்பு எனவும் விளக்கப்பெறும். உயிர்கள் முன் வினைகளுக்கேற்ப பிறந்து, செய்யும் நன்மை தீமைகளுக்கேற்ப பிறந்து நல்லுயிர் துறக்க உலகமாகிய சுவர்க்கத்திற்கும், தீய உயிர் நரகத்திற்கும் உரியதாகின்றது”[84]

“முற்பிறப்பில் நல்வினை ஆற்றியோர் இப்பிறப்பில் நன்மையடைதலும், தீவினை ஆற்றியோர் துன்புறுதலும் வினைக் கொள்கையின் அடிப்படைகளாகும்”[85] என்பர். இவ்வாறாக வினைகள் குறித்து பல்வேறு கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆக வினைக்குரிய பயன்னானது பிறவிகள் தோறும் அமையும் என்பது மக்களின் எண்ணமாகும். இத்தகைய மறுமை பற்றிய நம்பிக்கை குறிஞ்சி நில மக்களிடமும் இருந்தது.

"ஆற்றின் வாரா ராயினும் ஆற்ற

ஏனைஉல கத்தும் இயைவதால் நமக்கென

மாண்அமர் நோக்கும் கலங்கிக் யைறு

ஆனாச் சிறுமையிள் இவளும் தேம்பும்" (குறி.பா.23-26)

என்ற பாடலில் 'என் பெற்றோர் களவு மணத்தை நெறிப்பட இயைந்து வாரார் ஆயினும், நான் பொறுத்திருப்பேன் மறுமை உலகத்தும் நாங்கள் இருவரும் இணைவோம் என்பதனை எண்ணி கலங்கி செயலற்று வருந்துவாள்' என்று தோழி தலைவியின் நிலையைக் கூறுவதன் வாயிலாக குறிஞ்சி நில மக்களிடம் மறுமை பற்றிய நம்பிக்கை இருப்பதை அறிய முடிகிறது. இன்றைக்கும் மறுமை தொடர்பான நம்பிக்கை மக்களிடையே இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 4.20.8. ஆணையிட்டுச் சூளுரைத்தல்

தலைமகன் தலைமகளை வரைந்து கொள்வதாக ஆணையிட்டுச் சூளுரைப்பான். 'நின்னைப் பிரியேன், பிரியின் உயிர் வாழமாட்டேன்' என இன்சொல் உரைத்து ஆணையிடுதல் அக்கால மக்களிடையே வழக்கமாக இருந்தது. அவ்வாறே ஆணையிடும் பொழுது முருகன் மேலும் வேல் மீதும் ஆணையிடுவர். ஆணையிட்டுச் சூளுரைக்கும் பொழுது நீர் அருந்தும் பழக்கம் அந்நாளில் இருந்தது என்பதனைக் குறிஞ்சிப்பாட்டில் அறியலாம்.

". . . . . . . . . . பிறங்குமலை

மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது

ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி

அம்தீம் தெள்நீர் குடித்தலின் நெஞ்சமர்ந்து

அருவிடர் அமைந்த களிறுதரு புணர்ச்சி

வான்உரி உறையுள் வயங்கியோர் அவாவும்

பூமலி சோலை அப்பகல் கழிப்பி" (குறி.பா.208-215)

என்ற பாடலில் பெரிய மலையின் மேலிருக்கும் இறைவனாகிய முருகனை வாயால் வாழ்த்திக் கையால் தொழுது, தலைவி இன்பமுறச் சூளுரைத்து உண்மையால் தெளிவித்து அழகிய சுவையான தெளிந்த அருவிநீரை தலைவன் குடித்தான். நீர் குடித்துச் சூளுரைத்தல் ஒருவகை. தலைவி நெஞ்சம் அவன் சூளுரையில் பொருந்தியது என்பதே இப்பாடலின் பொருளாகும். இதில் அருவி

நீரை முதன்மையாகக் கருதியது வெளிப்படுகிறது. பண்டைத் தமிழர் இயற்கையை தெய்வமாக வழிபட்டதையும் இதன்வழி அறியலாம்.

இன்றைக்கும் 'சத்தியம் செய்தல்' என்னும் பெயரில் சூளுரைத்தல் மக்களிடையே வழங்கி வருகிறது. 'கற்பூரத்தை அணைத்து சத்தியம் செய்தல், துணியைத் தாண்டி சத்தியம் செய்தல் போன்ற வழிமுறைகளில் சூளுரைத்தல் மக்களிடையே காணப்பட்டு வருகின்றன. இவ்வாறாக தங்களின் நிலையை உறுதி செய்து கொள்ள சூளுரைத்தல் காலத்திற்கேற்ப மாறியுள்ளது. நம்பிக்கையை ஏற்படுத்தவே மக்களின் மனநிலை இவ்வாறாக அமைகிறது.

### 4.20.9. உடலுறுப்புகள் உணர்த்தும் சகுனக் குறிகள்

உடல் உறுப்புக்கள் துடித்தலைக் கொண்டும் மக்களின் நம்பிக்கைகள் அமைகின்றன. இதில் பால் பாகுபாடுகளுக்கேற்ப பலன்களில் மாற்றங்கள் கற்பிக்கப்படுகின்றன. மகளிர்க்கு இடக்கண் துடிப்பதால் நன்மை விளையும் என்றும், வலக்கண் துடிப்பதால் தீமை விளையும் என்றும் பழந்தமிழ் மக்கள் நம்பினர். பின்னர் நேரவிருக்கும் இன்பத்திற்கு அடையாளமாகக் கண்ணகியின் இடக்கண்ணும், துன்பத்திற்கு அடையாளமாக மாதவியின் வலக்கண்ணும் துடித்தன என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ள செய்தி ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

**"கண்ணகி கருங்கணு மாதவி செங்கணும்**
**உண்ணிறை கரந்தகத் தொளித்து நீ ருகுத்தன**
**எண்ணுமுறை யிடத்திலும் வலத்தினுந் துடித்தன"[86]**

(சிலம்பு. 5 : 237-239)

என்ற சிலப்பதிகாரப் பாடல் கண்ணகிக்கு இடக்கண் துடித்தலையும், மாதவிக்கு வலக்கண் துடித்தலையும் முறையே நன்னிமித்தத்தையும், தீய நிமித்தத்தையும் புலப்படுத்துகிறது. இந்நம்பிக்கை இன்றும் கிராமப்புறங்களில் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஆண்களுக்கு வலதுகண் துடித்தால் நல்லது என்பது மக்களின் நம்பிக்கையாகும். "தமிழ் அகராதி வலது என்னும் சொல்லுக்கு வெற்றி, சாமர்த்தியம், குறைவில்லா வாழும் வாழ்க்கை என்று பொருள் கூறுகிறது"[87]

கண் துடித்தலைக் கொண்டு சகுனங்கள் அறியும் வழக்கம் காலங்காலமாக இருந்து வருகிறது.

**"நல்லெழி ஒண்கணு மாடுமா லிடனே"** (கலி.11 : 23)

என்ற பாடல் தலைவி தலைவனைச் சேரப்போகும் நன்னிமித்தத்தை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

ஐங்குறுநூறு பாடலிலும் இத்தகைய நிமித்தம் கூறப்பட்டுள்ளதை கபிலர், குறிப்பிடுவார்.

**நுண்ஏர் புருவத்த கண்ணும் ஆடும்**
**மயிர்வார் முன்கை வளையும் செறூஉம்**
**களிறுகோல் பிழைத்த கதஞ்சிறந்து எழுபுலி**
**எழுதரு பிழையின் குழுமும்**
**பெருங்கல் நாடன் வருங்கொல் அன்னாய்** (ஐங்.218)

என்ற பாடலில் தோழி, தலைவனிடம் 'தனக்கு நற்குறி செய்யக் கண்டு என் கண் துடிக்கிறது. முன்கையின் வளையல்கள் செறிகின்றன. இந்நிமித்தங்கள் தலைவன் நின்னை வரைந்து கொள்ள வருவான் என்று அறிவிக்கின்றன.' இதன் வாயிலாக தலைவன் வரைந்து கொள்ள வரும் நன்னிமித்தத்தை அறிவுறுத்தவே கண் துடித்ததாகவும் வளையல்கள் செறித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஆக, குறிஞ்சி நில மக்களிடமும் இத்தகைய நன்நிமித்தம் பார்க்கும் வழக்கம் இருந்ததை இதன்வழி அறியமுடிகிறது. ஒரு நிகழ்வு நடைபெறும் முன்னரே சில குறியீடுகள் அந்தச் செயலின் முடிவை இயற்கையின் வாயிலாக வெளிப்படுத்திடும் என்று மக்களின் நம்பிக்கை காலங்காலமாக இருந்து வருகிறது.

### 4.20.10. நேர்த்திக்கடன் வேண்டுதல்

மக்கள் தங்களின் தேவைகளைப் பெறுவதற்காகச் செயல்பட்டாலும் அவற்றிலும் தெய்வ நம்பிக்கைகளை மேற்கொண்டே வாழ்ந்து வருகின்றனர். மக்கள் சில வழிபாட்டு முறைகளை எண்ணி, அவற்றை நிறைவேற்றுவதற்காக இறைவனிடத்தில் வேண்டிக் கொண்டால் எண்ணியவை நிகழ்ந்தேறும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

வழிபடுவோரின் துயரத்தை தெய்வம் நீக்கும் என்று கருதிய தலைவி தன் திருமணம் பொருட்டு நேர்த்திக்கடன் பூண்டு தலைவனின் வருகையை எதிர்பார்த்து தலைவி துயரத்துடன் காத்திருப்பதாக குறிஞ்சிக்கலியில் ஒரு செய்தி காட்சிப்படுத்தப்படுகிறது.

**"வருந்தினென் எனப்பல வாய்விடூ உம்தான்என்ப**
**நிலைஉயர் கடவுட்குக் கடம்பூண்டு தன்மாட்டுப்**
**பலசூழும் மனத்தோடு பைதலேன் மானாக** (கலி.46)

இப்பாடல், தெய்வத்திடம் வேண்டுதல் வைத்தால் நினைத்தது நிறைவேறும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. தெய்வ நம்பிக்கையில் தெய்வத்தை ஈர்த்தால் தன் வேண்டுதல் நிறைவேறும் என்பது மக்களின் மனநிலையாக காலங்காலமாக வெளிப்பட்டு வருகிறது.

**4.21. கலைகள்**

சமுதாயத்தில் பல நிலைகளிலும் மேம்பட்ட பண்டைத் தமிழர் கலையுணர்வு உடையோராய்த் திகழ்ந்தனர் என்பதை குறிஞ்சித் திணைப் பாடல்களால் அறியலாம். ஒரு நாடு சிறந்த நாகரிகம் பெறுதல் என்பது சமுதாயத்தில் குடிகள் சிறப்பதால் மட்டும் அமைவதன்று. அந்நாடு ஓங்கிய கலைகளில் உணர்வுடையோரைப் பெற்றிருக்குமேல் சிறந்து விளங்கும் என்பதற்குச் சங்க காலத் தமிழகம் சான்றாகும். பண்டைத் தமிழர் மிகுந்த கலையுணர்வு கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். அந்தவகையில் குறிஞ்சி நில மக்களும் கலைகளில் ஈடுபாடு உடையவர்களாக இருந்தார்கள் என்பதை கபிலர் பாடல்கள் சான்று பகர்கின்றன.

**4.21.1. இசைக்கலை**

இசைக்கலையில் பண்டைத் தமிழர் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தனர். தினைப்புனம் காக்கும் குறிஞ்சி மகளிர் பாடிக் கொண்டே கிளியினை விரட்டுவர். நெல் குற்றும்போதும் வள்ளைப் பாட்டினைப் பாடி மகிழ்வர். இதிலிருந்து இசைக்கலையில் ஈடுபாடு உடையவர்களாக குறிஞ்சி நிலத்தார் இருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

'மலையில் இருந்து அருவி விழுகின்ற ஓசையுடன் வண்டினங்கள் இணைந்து ஒலிப்பது யாழ் நரம்பின் இசை போல, இம்மென்று ஒலிக்கும்' என்று கபிலர் குறிப்பிடுவதன் மூலம் இசைக்கலையைப் பற்றி குறிஞ்சி நில மக்கள் அறிந்திருந்ததாகவும், இசைக்கருவியான யாழ் கொண்டு இசைத்து மகிழ்ச்சியாக இருந்த செய்தியும் தெரிகிறது.

"வரைஇழி அருவிப் பாட்டொடு பிரசம்
முழவுசேச் நரம்பின் இம்மொன இமிரும்" (அகம்-318)

என்ற பாடலில் அருவி ஓசையுடன் வண்டின் ஓசை இணைந்து ஒலிப்பது யாழின் இசை போல இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிஞ்சி நிலக் கடவுளான முருகனை வழிபடும் போது இசைக்கருவியைக் கொண்டு இசைத்தும், பாடல்கள் பாடியும் வழிபட்ட செய்தியை அகநானூற்றில் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**“கடம்புகொடி யாத்து கண்ணி சூட்டி**
**வேறுபல் குரல ஒருதூக்கு இன்இயம்**
**காடுகெழு நெடுவேட் பாடுகொளைக்கு ஏற்ப**
**அணங்குஅயர் வியன்களம் பொலிய”** (அகம்-382)

இதில், கடம்பமரத்தில் கொடியினைக் கட்டி கண்ணிகள் சூட்டி, பல்வேறு குரலுடைய தாளத்தின் வழிப்படும் ஒரே மாதிரியான இசையுடைய வாத்தியங்களைக் கொண்டு காட்டிலுள்ள முருகனைப் பற்றி பாடும்பாட்டுக்கு ஏற்ப வெறியாட்டுச் செய்யும் பெரிய களம் என்று குறிப்பிட்டுள்ளார். இதன்வழி பழந்தமிழரின் இசைக்கலையினை அறியலாம்.

### 4.21.1.1. குறிஞ்சிப்பண்

நட்டராகம் நிரம்பிய பாலை யாழினை இயக்க வல்லவன் தன் கையால் இசைத்த செய்தி குறிஞ்சிப்பாட்டில் குறிக்கப்படுகிறது. நட்டபாடையாகிய நைவளம் மிகுந்த மெல்லொலியுடன் பாடப்பெறுவதாகும்.

**“நைவளம் பழுநில பாலை இல்லோன்**
**கைகவர் நரம்பின் இம்மென இமிரும்”** (கு.பா.146,147 வரி)

இதில் குறிஞ்சி நிலத்திற்குரிய தனிப்பண் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சிப் பண்ணை வெறியாட்டுக்கும், வேட்டம் போவதற்கும் பாடுவரெனத் தெரிகிறது.

### 4.21.1.2.தோற்கருவிகள்

முரசு, முழவு, பறை, துடி முதலியன அக்காலத்திலிருந்த தோற் கருவியாகும். அருவியின் முழக்கத்திற்கு முழவின் ஒலியினையும் பறையின் ஓசையினையும் உவமையாகப் புலவர்கள் கூறியுள்ளனர். ஒரு செய்தியை அனைவருக்கும் தெரிவிக்க பறையடித்துக் கூறும் வழக்கம் கிராமங்களில் இன்றும் உள்ளது. இப்பழக்கம் பண்டைத் தமிழர்களிடம் இருந்ததை சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இப்பழக்கம் குறிஞ்சி நில மக்களும் கடைபிடித்ததை கபிலர் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

குறிஞ்சி நில மக்கள் தொண்டகப் பறையை அடித்த செய்தியை கபிலர் அகநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்.

**“தேம் கமழ் இணர வேங்கை சூடி**
**தொண்டகப் பறைசீர் பெண்டிரொடு விரைஇ**
**மறுகில் தூங்கும் சிறு குடிப் பாக்கத்து”** (அகம்-118)

என்ற பாடலில் வேங்கை மலர்களைச் சூடித் தொண்டகப் பறையை அடித்துக் கொண்டு ஆண்களும் பெண்களும் ஆடும் சிறுகுடியின் தெய்வமான

முருகனுக்கு ஒப்பானவர் என்று தலைவனைத் தோழி குறிப்பிடுகிறாள். இதன் வழி இசையின் மீது இருந்த ஈடுபாட்டையும், மரபுவழியாக தொண்டகப் பறையை குறிஞ்சி நில மக்கள் பயன்படுத்தியதையும் அறிய முடிகிறது.

**4.21.2. ஆடற்கலை**

ஆடற்கலையில் பழந்தமிழர் திறம் பெற்றிருந்ததைக் குறிஞ்சிப் பாடல்களால் அறியலாம். குறிஞ்சி அடுக்கமே இயற்கை அரங்கமாகத் திகழ்வதாகும். மூங்கிலின் ஓசையே குழலாகவும், ஒலிக்கின்ற அருவியே முழவாகவும், திரள் மானின் குரலே இயற்கை அரங்கில் ஒலிக்க, விறலியாக மயில் ஆடுகின்றது. மந்திகள் அவ்வாட்டத்தைக் கண்டு மருண்டு நோக்குகின்றன என ஓர் அழகிய ஆடற் காட்சியைக் கபிலர் தம் பாடலில் காட்டுகின்றார்.

**"ஆடுஅமைக் குயின்ற அவிந்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை ஆக**
**பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசை**
**தோடுஅமை முழவின் துதைகுரல் ஆக**
**கணக்கலை இருக்கும் கடுங்குரற் தூம்பொடு**
**மலைப்பூஞ் சாரல் வண்டு யாழ் ஆக**
**இன்பல் இமிழ்இசை கேட்டு, கலிசிறந்து**
**மந்தி நல்அவை மருள்வன நோக்க**
**கழைவளர் அடுக்கத்து இசைஆ கும்மயில்**
**நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்"** (அகம்.82)

என்ற பாடலின்வழி மலையில் உள்ள இயற்கைக் காட்சியைக் கூத்தாட்டு இசைக்களம் என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார். பல இசைகளைக் கேட்ட குரங்குகள் பார்வையாளர்களைப் போல வியப்புடன் பார்த்தன என்பதையும், மயில்களின் நடனம் பற்றிய செய்தியையும் கூறுவதன் வாயிலாக ஆடற்கலையில் ஈடுபாடு உடையவர்களாக குறிஞ்சி நில மக்கள் இருந்தார்கள் என்பதை அறியமுடிகிறது.

குறிஞ்சிக்கண் குறத்தியர் ஆடும் கூத்துக் குரவைக் கூத்து என வழங்கிற்று. இது 'குன்றக் குரவை' எனப்படும். ஆடவர், பெண்டிர் என இரு பிரிவினரும் கைகோத்துக் குரவையாடுவர். மனையிடத்தும், வேங்கை மர நிழலிலும், முருகன் திருமுன்னரும் மகளிர் குரவையாடினர். குறவர் மான்தோலாலான

சிறுபறையினை முழக்கிப் பெண்டிரோடும் குரவையாடுவர். வெறியாடுவோர் கண்ணிசூடி, தழையினை அணிந்து ஆடிய செய்தியை அகநானூறு குறிப்பிடுகிறது.

**"கடம்புகொடி யாத்து கண்ணி சூட்டி**

**வேறுபல் குரல ஒருதூக்கு இன்இயம்**

**காடுகெழு நெடுவேட் பாடுகொளைக்கு ஏற்ப**

**அணஙகுஅயர் வியண்களம் பொலிய பையத்" (அகம்.382)**

என்ற பாடலில் பல்வேறு இசையுடைய வாத்தியங்களைக் கொண்டு ஆடினார்கள் என்று கூறுவதிலிருந்து ஆடற்கலைக்கு குறிஞ்சி நில மக்கள் முக்கியத்துவம் கொடுத்தனர் என்பது அறியமுடிகிறது. மனதின் மகிழ்ச்சி உடலின் வழியாக வெளிப்படும்போது ஆட்டங்கள் பிறக்கின்றன. அவ்ஆட்டங்களை கலையம்சத்துடன் பழந்தமிழர் மேற்கொண்டிருந்த நிலையினை முன்கூறிய பாடலின்வழி அறிய இயலுகிறது.

### 4.22. பொருளாதாரம்

குறிஞ்சி நிலத்தில் இயற்கையின் எழிலையும், செழுமையையும், வளத்தையும் பற்றி கூறிய கபிலர் வறுமை நிலையையும் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். குறிஞ்சி நில மக்களின் பொருளாதார நிலைமை, குறித்து ஐங்குறுநூறு பாடலில் கபிலர் பதிவு செய்துள்ளார்.

ஐங்குறுநூற்றில் தலைவனின் ஊர் குடிப்பதற்குரிய நீர் கூட தெளிவானதாக இல்லாமல் கலங்கிய நீராக இருந்திருக்கிறது. அதனையும் அங்குள்ள தலைவி ஏற்றுக்கொண்டதாகப் பாடல் அமைகிறது.

**"அன்னாய் வாழி வேண்டு அன்னை நம்படைப்பைத்**

**தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**

**உவலைக் கூவற் கீழ**

**மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே" (ஐங்.203)**

என்ற பாடலில் 'பாலும் தேனும் கலந்து சுவையை உடைய பாலைத் தன் தாய் தரும்போது அது சுவை உடையதாக இருக்கும். ஆனால் அதைவிட சுவையானது தலைவனது ஊரிலுள்ள மான் உண்டு எஞ்சிய கலங்கிய சின்னீர். தாய் கொடுத்த தேன் கலந்த பாலைவிட சுவை உடையதாய் இருந்தது' என்று தலைவி கூறுகிறாள்.

இதன் வாயிலாக தலைவனது இல்லத்தில் வறுமை காணப்படுவதை அறியமுடிகிறது. வறுமையில் இருப்பதால்தான் குடிப்பதற்குத் தூய்மையான

நீர் கூட கிடைக்கவில்லை. ஆனாலும் தலைவிக்கு அது பெரிய பிரச்சனையாக இல்லை. தலைவிக்கு தலைவனோடு அருகில் இருந்து வாழ்வதே இன்பாக அமைகிறது. ஆகவே தலைவன்மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக கலங்கிய நீரை இனிமையானது என்று குறிப்பிடுகிறாள். இதில் தலைவியின் அன்பும், தலைவன் நாட்டின் வறுமை நிலையைக் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

இதனோடு ஒத்த செய்தி நற்றிணையிலும் கூறப்பட்டுள்ளது.

**"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**

**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்"** (நற்.110)

காதலன் வீட்டு வறுமையும் இனிதாவதை இப்பாடல் சுட்டுகிறது.

இன்றைய நிலையில் பொருளைப் பற்றிய சிந்தனையே மேலோங்கி மக்களின் மனவோட்டங்கள் அமைகின்றன. ஆனால் சங்க காலத்தில் வறுமை நிலையினை அடைந்தாலும் அதனை வெல்லக்கூடிய விதமாக அன்பினை முதன்மையாக வைத்து மக்கள் தங்களின் வாழ்வினை மேற்கொண்டதை அறிய இயலுகிறது. 'வாழ்விற்கு பொருள் வேண்டும்.' அதைவிட 'தாங்கள் வாழும் வாழ்க்கையிலும் பொருள் வேண்டும்' என்கிற சிந்தனையோடு பழந்தமிழர் செயல்பட்ட நிலை இன்றைய பொருளாதார பிரச்சினைகளுக்கெல்லாம் மனரீதியான தீர்வாக அமைவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 4.23. முடிவுரை

உலகில் தோன்றியுள்ள ஒவ்வொரு இனக்குழுவும் உலகிற்கு ஏதேனும் வழங்கிவிட்டே செல்கிறது. அந்த வகையில் தமிழ்ச் சமூகம் உலகிற்கு பலஅரிய சிந்தனைகளை வழங்கியே சென்றிருக்கிறது. அதற்கு முத்தாய்ப்பாக தமிழ்ச் சமூகம் பின்பற்றிய அறத்தைக் குறிப்பிடலாம். மனிதன் மேற்கொள்ளும் அனைத்து நற்செயல்களிலும் புற வாழ்க்கையிலும் அறம் உச்ச நிலையாய் நின்று சிறப்பு பெற்றிருக்கிறது. குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலில் தனிமனிதனின் விழுமியங்களாகவும், தமிழ்ச் சமூகத்தின் பிரதிபலிப்பாகவும் அறத்தைக் கடைபிடித்த பாங்கு கூறப்பட்டுள்ளது. வாழ்க்கைச் சிறப்பானதாக அமைய பொருள் அவசியம் என்பதை உணர்ந்திருந்தனர். ஆதலால் பொருளின் காரணமாக வேட்டைத் தொழில் புரிந்து தங்களது தேவைகளை குறிஞ்சி நிலத்தார் நிறைவேற்றிக் கொண்டனர்.

உடலால் அல்லாமல் உயிரால் கலப்பதே நட்பிற்கு அடையாளமாக தமிழ்ச் சமுதாயம் நட்பிற்கு இலக்கணம் கற்பித்தது. நன்றியை மறந்து வாழ்தல்

சிறந்த வாழ்க்கையன்று என்று கபிலர் பதிவு செய்கிறார். சான்றோரின் பண்பு நலன்களும் பெரியோரின் சிந்தனைகளும் உயரியவையாகக் கருதப்பட்டன. பண்டைத்தமிழர் குடும்ப வாழ்வில் அறத்தை ஒரு பகுதியாகக் கருதாமல் வாழ்வு முழுவதும் அறமாகக் கொண்டனர். ஆதலால் குடும்ப வாழ்வை இல்லறம் என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளதை நோக்க வேண்டும். வாழ்க்கைக்குப் பொருள் தேவைப்பட்டது. வாழ்க்கைக்குத் தேவைப்பட்ட பொருளைக் காட்டிலும் வாழ்க்கையின் பொருளையே சங்கத் தமிழர் எண்ணி வாழ்ந்ததை கபிலர் பதிவிட்டுள்ளார்.

வாழ்க்கைக்குத் தேவையான பொருளை அன்பு வென்றது. அகவாழ்வில் அன்பையே அடித்தளமிட்டு தலைவன் தலைவி வாழ்ந்தது இன்றைய சிக்கல் நிறைந்த வாழ்விற்குத் தீர்வாக அமைவது எண்ணத்தக்கதாகும். காதலருக்கு அன்பே அடிப்படையாகும். இல்லறத்தை மேற்கொள்வதில் அகமாந்தர்கள் முனைப்பு காட்டினர். இது சமூக கட்டமைப்பிற்கான சிறந்த வழிமுறையாகும். தமிழ்ச் சமூகத்தில் மக்கட்பேறு வாழ்வின் முதன்மையானதாகக் கருதப்பட்டது. விருந்தோம்பல் தமிழரின் அடையாளமாக விளங்கியது. உணவு, உடை, உறையுளில் தமிழரின் சிந்தனைகள் மேம்பட்டிருந்ததை கபிலர் நன்கு புலப்படுத்துகிறார். சங்கத் தமிழர் வாழ்வினை இன்பமாகவும் இயல்பாகவும் வாழ எண்ணினர். பல்வேறு தொழில்களில் தானிய உற்பத்திக்கே முக்கியத்துவம் அளித்தனர்.

வணிகத்தில் நேர்மை பின்பற்றப்பட்டது. வழிபாடுகள் வாழ்வின் செயல்பாடுகளில் முக்கியத்துவம் பெற்றது. தெய்வ நம்பிக்கை, பேய் பற்றிய நம்பிக்கை, நிமித்தம், முற்பிறவி, சகுனம் பார்த்தல், சத்தியம் செய்தல், கலைகள் என்று தமிழர் எண்ணங்கள் பலவாறாக அமைந்தன. இவை யாவும் மக்களை நேரிய வழியில் நடத்தவே முற்பட்டன என்பது எண்ணத்தக்கதாகும். இவ்வாறாக குறிஞ்சி மக்களின் வாழ்வியலில் உயரிய சிந்தனைகள் மேலோங்குவதை கபிலர் தம் பாடல்களில் நன்கு பதிவிட்டுள்ளார்.

# சான்றெண் விளக்கம்


1. நன்னூல், எழுத்ததிகாரம் நூ.எ.10
2. வி.கே.சூரியநாராயணன் சாஸ்திரியார், சொற்பொருளாராய்ச்சி தமிழ் ப.72
3. ஞா.தேவநேயப்பாவாணர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகராதி - ப.523
4. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல் ப.69
5. மு.வரதராசனார், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.323
6. திருக்குறள், குறள் எண். 315
7. நாலடியார் பா.எ-171
8. ப.அனுராதா, இலக்கியப்பீடம் ப.21
9. Encyclopedia Brittanica, Volume - 9. P.54
10. தமிழ்க் கலைக்களஞ்சியம் , தொகுதி - 4 ப.8
11. பாலுசாமி, நா., வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 7 ப.69
12. கழகத் தமிழ் அகராதி ப-131
13. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல் நூ.எ-179
14. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும் ப.81
15. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் காதல் ப.3
16. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு ப.163
17. அ.தட்சிணாமூர்த்தி, சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள் ப.65
18. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் காதல் ப.46
19. வி.சி.சசிவல்லி, தமிழர் திருமணம் ப.3
20. நா.பாலுசாமி (பதி) வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 10 ப.483
21. அரங்கன், திருமணச் சடங்குகளும், நடைமுறை வழக்கங்களும் ப.5
22. தொல்காப்பியம், கற்பியல் நூ.எ.1091
23. வ.சுப.மாணிக்கம், தமிழக்காதல் ப-134

24. மேலது ப - 128

25. தொல்காப்பியம், கற்பியல் நூ.எ-1088

26. மேலது நூ.எ-1089

27. வி.சி.சசிவல்லி, தமிழர் திருமணம் ப.7

28. கா.கலியபெருமாள், தமிழர் திருமண முறைகள் பக்.17, 19

29. சா.நசீமாபானு, சங்க இலக்கியத்தில் மனையறம் ப.78

30. திருக்குறள், இல்லறவியல் கு.எ-61

31. புறநானூறு பா.எ.61

32. திருக்குறள், இல்லறவியல் கு.எ-81

33. தொல்காப்பியம், செய்யுளியல் நூ.எ-1495

34. மா.இராச.மாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி ப. 522

35. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் காதல் ப. 264

36. இராம.குருநாதன், குறிஞ்சி காட்டும் சமுதாயம் ப.113

37. கு.வெ.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள் ப.1

38. கு.இராசரெத்தினம், சங்க இலக்கியத்தில் பொதுமக்கள் ப.49

39. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு ப.16

40. கு.இராசரெத்தினம், சங்க இலக்கியத்தில் பொதுமக்கள் ப.51

41. ச.சதாசிவம், நமது உணவு ப.3

42. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள் ப.307

43. சூ.இன்னாசி, சதுரகராதி ப.28

44. சே.நமசிவாயம், தமிழர் உணவு ப.1

45. பிங்கலர், பிங்கல நிகண்டு ப.1153

46. ஆறுமுக நாவலர், சூடாமணி பக்.88, 89

47. மேலது பக்.120, 121

48. திருக்குறள், அங்க இயல் கு.எ-788

49. பரிபாடல் பா.எ-56

50. கு.பகவதி, தமிழர் ஆடைகள் பக்.23, 24

51. தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல் நூ.எ-1077

52. சூ.இன்னாசி, சதுரகராதி ப.179

53. திருக்குறள், ஒழிபுஇயல் கு.எ-1038

54. பட்டினப்பாடிலை பா.எ-3

55. ஒ.முத்தையா, பண்பாட்டுப் பதிவுகள் ப.118

56. மேலது ப. 118.

57. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல் ப.18

58. மேலது ப. 11

59. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் ப. 197

60. மேலது ப.204

61. திருமுருகாற்றுப்படை பா-223-226

62. தொல்காப்பியர், பொருளதிகாரம் நூ.எ.951

63. இராம குருநாதன், குறிஞ்சி காட்டும் சமுதாயம் ப.154

64. க.ப.அறவாணன், அற்றைநாட் காதலும் வீரமும் ப. 352

65. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூ.எ-1006

66. தொல்காப்பியம், சொல்லதிகாரம் நூ.எ-848

67. Tamil Lexilcon Vol.vi, University of Madras (1982) P.2886

68. தே.அசோக், நாட்டுப்புற நம்பிக்கைகளில் பண்பாடு (ஆய்வேடு) ப.251

69. Tamil Lexilcon Vol.vi, University of Madras (1982) P.2886

70. திருமுருகாற்றுப்படை பா-232 - 234

71. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல் ப.23

72. கு.இராசரெத்தினம், சங்க இலக்கியத்தில் பொதுமக்கள் ப.147

73. க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ப.109

74. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் நூ.எ.1037

75. Tamil Lexilcon Vol.iii, University of Madras (1982) P.1220

76. சூ.இன்னாசி, சதுரகராதி ப.71

77. ஆறுமுகநாவலர், சூடாமணி பக்.186, 187

| | |
|---|---|
| 78. க.காந்தி, தமிழர் எண்ணங்கள் | ப.295 |
| 79. க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | ப.110 |
| 80. செ.பழனிச்சாமி, புறநானூற்றல் தமிழர் பண்பாடு | ப.106 |
| 81. திருக்குறள், துறவறவியல் | கு.எ-371 |
| 82. க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | ப.165 |
| 83. மேலது | ப.165 |
| 84. மேலது | ப.169 |
| 85. மேலது | ப.168 |
| 86. சிலப்பதிகாரம் | பா.எ-232 |
| 87. தமிழ் அகராதி | ப. 821 |

# முடிவுரை

# முடிவுரை

☆ மலைப்பகுதியில் குறிஞ்சிப் பூ பூத்ததாலும் அங்கு வாழ்ந்த மக்கள் அம்மலரைச் சூடியதாலும் அந்த மலைப்பகுதியே குறிஞ்சித்திணை என்றழைக்கப்பட்டது. சங்க காலப் புலவர்களில் குறிஞ்சித் திணையை மிகவும் அதிகமாக பாடியவர் கபிலர் ஆவார். திணையில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று பாகுபடுத்துவர். அந்த வகையில் குறிஞ்சித் திணையின் முதற்பொருளான நிலம் மலைப்பகுதியாகக் குறிப்பிடப்படுகிறது. குறிஞ்சித் திணையின் நிலம் மலை, குன்றம், கவாஅன், சிலம்பு, வெற்பு என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. பெரும்பொழுது கூதிர்காலமாக விளங்குகிறது. சிறுபொழுது நடு இரவான யாமமாகக் கூறப்படுகிறது. கூதிர்காலமும், யாமமும் தலைவன் தலைவியின் அகவாழ்வில் மிகுந்த பிணைப்பை ஏற்படுத்தும் இயற்கை காரணிகளாகும். குறிஞ்சி நிலம் மலைசார்ந்த வாழ்வியலை அமைத்துத் தருகின்றது. அந்நிலம் சார்ந்த உயிருள்ள, உயிரற்ற பொருட்கள் கருப்பொருட்களாக அமைகின்றன. தெய்வம், மக்கள், புல், விலங்கு, உணவு, நீர், ஊர், பூ, மரம், யாழ், பண், தொழில் போன்ற மலைசார்ந்தவை குறிஞ்சி நிலத்தின் கருப்பொருட்களாக விளங்குகின்றன. தலைவன் தலைவியின் வாழ்வில் உணர்வுகளை வெளிப்படுத்தும் சூழலில் கருப்பொருட்கள் முதன்மையான இடத்தை வகிக்கின்றன.

☆ குறிஞ்சிக்குரிய உரிப்பொருளான புணர்தல் அந்நிலம் சார்ந்தச் சூழலை வெளிப்படுத்துவதாய் அமைகிறது. தலைவன் தலைவியின் அன்பும், தனிமையானச் சுற்றுச்சூழலும், குளிர்காலமும் இரவுப் பொழுதும் தலைவன் தலைவியிடையே புணர்ச்சிக்கு உட்படுத்தி அவர்களின் அன்பு நிலையானது அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வதாய் அமைகின்றது. ஆகவே, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவை தலைவன் தலைவியின் அகவாழ்வினைப் பாடுதற்கு இன்றியமையானதாகும். நிலமே வாழ்வின் அனைத்து செயல்பாடுகளையும் தீர்மானிக்கின்றன. முதற்பொருளும், கருப்பொருளும், உரிப்பொருளும் நிலம் சார்ந்த தன்மைகளை நன்கு வெளிப்படுத்துகின்றன. அந்த அடிப்படையில் கபிலர் தம் பாடலில்

குறிஞ்சி என்று பெயர் குறிப்பிடாமலே முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றைக் கொண்டு குறிஞ்சித் திணையை வெளிப்படுத்தியிருப்பது சிறப்பிற்குரியதாகும்.

☆ பழந்தமிழர் இயற்கையுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்தனர். மனிதன் இல்லாமல் இயற்கை இயங்க இயலும். இயற்கை இல்லாமல் மனிதன் வாழ்வது என்பது இயலாத ஒன்றாகும். மரங்கள் உயிர்களுக்குத் தேவையான ஆக்சிஜனை வழங்கி வருகிறது. உயிரினங்களின் வாழ்விற்கு இன்றியமையாத மரங்களை தன் உறவாக சங்க கால மக்கள் கருதினர். மேலும் மரங்கள், செடிகள்,கொடிகள் ஆகியவற்றின் எழிலினை, இயற்கையினை, வடிவத்தினை அழகுபட கபிலர் தம் பாடலில் கூறியுள்ளதன் வழியாக பழந்தமிழர் தாவரங்களுக்கு அளித்துள்ள முக்கியத்துவத்தினை உணரலாம். அனைத்து உயிர்களும் இப்புவியில் வாழ்வதற்கான உரிமைகளையும் பெற்றுள்ளன. அதனை உணர்ந்து பழந்தமிழர் பல்வேறு உயிரினங்களின் செயல்பாடுகளையும் குறிப்பிட்டுள்ளனர். கபிலரும் மிகச் சிறப்புறவே பறவைகளையும் விலங்குகளையும் தம் பாடலில் நன்கு பதிவு செய்துள்ளார். தாவரங்கள், பறவைகள், விலங்குகள் வாயிலாக அக வாழ்விற்குத் தேவையான சிந்தனைகளைப் புகுத்த கபிலர் விழைந்துள்ளார். தலைவன் தலைவியின் உள்ளத்து உணர்வுகளை கபிலர் தம் பாடலில் காட்சிப்படுத்தியுள்ளார். அவர்கள் மகிழ்ந்தபோது இயற்கையும் மகிழ்ந்ததாகவும், துயருற்ற போது இயற்கையும் துயரால் துவண்டது போலவும் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். மனித வாழ்க்கையையும், இயற்கையையும் பின்னி பிணைந்த நிகழ்வுகளைத் தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

☆ கபிலர் பாடல்களில் அக இலக்கிய மாந்தர்கள் பண்பு நலம் சான்றவர்களாகவே படைக்கப் பெற்றிருக்கின்றனர். குறிப்பாக, கபிலர் காட்டும் தலைவன் ஒப்புயர்வற்ற ஆண்மைச் சிறப்பும், ஈடு இணையற்ற எழில் நலமும் கொண்ட தன்னிகரில்லாத தலைமகனாகத் தோன்றுகின்றான். தலைவனது காதல் உறுதி அவன் கடந்து வரும் வழியிலும், ஊரார் உறங்கும் நள்ளிரவு வேளையில் வருவதிலும் தெரிகின்றது. தலைவி கூற்றுப் பாடல்களில் பெண்மையின் நலமெல்லாம் கனிந்திருக்கும் பெருமைமிகு பெண்ணாக கபிலர் படைத்துக் காட்டினார்.

தலைவி கூற்று பாடல்களில் தலைவனின் பண்புகளை உயர்த்திப் பேசும் தலைவியரே கபிலர் பாடல்களில் அதிகம். கபிலரின் தலைவி சங்க காலச் சமூகத்தில் பெண்களுக்கென்று விதிக்கப்பட்ட சிறந்த பண்புடையவளாகக் காட்டப்படுகிறாள். தலைவன்மீது நம்பிக்கை இன்றி அச்சப்படும் தலைவியையும், அவனது நட்பில் உறுதி கொண்ட தலைவியையும் என்று இரு வேறுபட்ட தலைவிகளைப் படைத்துக் காட்டியிருக்கின்றார் கபிலர். தலைவி கூற்றுப் பாடல்களில் பிரிவில் துன்பப்படும் பெண்களின் நிலைகள் சித்தரிக்கப் பெற்றாலும் பிரிவாற்றித் தலைவனை உயர்த்திப் பாடும் நிலையைக் காணமுடிகிறது. கபிலரின் தலைவி கூற்றுப் பாடல்கள் அனைத்தும் ஆண்வழிச் சமூகக் கருத்தியல்களுக்கேற்பவே படைக்கப் பெற்றிருக்கின்றன.

☆ தோழி கூற்றுப் பாடல்கள் வாயிலாக தலைவியினது நலத்தில் தனி அக்கறை செலுத்துபவளாகவும், தலைவனைப் பிரிந்த தலைவியின் தோள் மெலிவை விரும்பாதவளாகவும், தாய்க்கு அஞ்சும் தன்மை கொண்டவளாய் விளங்குவதைக் காணலாம். தலைவனிடம் தலைவியை ஒப்படைத்து தாய்போல அறிவுரை கூறும் தோழி சிறப்பிற்குரியவள். ஆக தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் கூற்றுகள் உளவியல் தன்மையில் அமைந்து சமூக வாழ்வின் நன்னெறிக்கு அடிக்கோலுவதாக அமைகின்றன.

☆ தமிழ்ச் சமூகம் உலகிற்கு பல அரியசிந்தனைகளை வழங்கியே சென்றிருக்கிறது. அதற்கு முத்தாய்ப்பாக தமிழ்ச் சமூகம் பின்பற்றிய அறத்தைக் குறிப்பிடலாம். மனிதன் மேற்கொள்ளும் அனைத்து நற்செயல்களிலும் புற வாழ்க்கையிலும் அறம் உச்ச நிலையாய் நின்று சிறப்பு பெற்றிருக்கிறது. குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலில் தனி மனிதனின் விழுமியங்களாகவும் தமிழ்ச் சமூகத்தின் பிரதிபலிப்பாகவும் அறத்தைக் கடைபிடித்தப் பாங்கு கூறப்பட்டுள்ளது. அதே வேளையில் வாழ்க்கை சிறப்பானதாக அமைய பொருள் அவசியம் என்பதை உணர்ந்திருந்தனர். வேட்டைத் தொழில் புரிந்து தங்களது உணவு தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர் குறிஞ்சி நிலத்தார்.

☆ உடலால் அல்லாமல் உயிரால் கலப்பதே நட்பிற்கு அடையாளமாக தமிழ்ச் சமுதாயம் நட்பிற்கு இலக்கணம் கற்பித்தது. நன்றியை மறந்து வாழ்தல் சிறந்த வாழ்க்கையன்று என்று கபிலர் பதிவு செய்கிறார்.

சான்றோரின் பண்பு நலன்களும் பெரியோரின் சிந்தனைகளும் உயரியவையாகக் கருதப்பட்டன. பண்டைத்தமிழர் குடும்ப வாழ்வில் அறத்தை ஒரு பகுதியாகக் கருதாமல் வாழ்வு முழுவதும் அறமாகக் கொண்டனர். ஆதலால் குடும்ப வாழ்வை இல்லறம் என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளதை நோக்க வேண்டும். வாழ்க்கைக்குப் பொருள் தேவைப்பட்டது. வாழ்க்கைக்குத் தேவைப்பட்ட பொருளைக் காட்டிலும் வாழ்க்கையின் பொருளையே சங்ககாலத் தமிழர் எண்ணி வாழ்ந்ததை கபிலர் பதிவிட்டுள்ளார்.

☆ வாழ்க்கைக்குத் தேவையான பொருளை அன்பு வென்றது. அகவாழ்வில் அன்பையே அடித்தளமிட்டு தலைவன் தலைவி வாழ்ந்தது இன்றைய சிக்கல் நிறைந்த வாழ்விற்கு தீர்வாக அமைவது எண்ணத்தக்கதாகும். காதலருக்கு அன்பே அடிப்படையாகும். இல்லறத்தை மேற்கொள்வதில் அகமாந்தர்கள் முனைப்பு காட்டினர். இது சமூக கட்டமைப்பிற்கான சிறந்த வழிமுறையாகும். தமிழ்ச் சமூகத்தில் மக்கட்பேறு வாழ்வின் முதன்மையானதாகக் கருதப்பட்டது. விருந்தோம்பல் தமிழரின் அடையாளமாக விளங்கியது. உணவு, உடை, உறையுளில் தமிழரின் சிந்தனைகள் மேம்பட்டிருந்ததைக் கபிலர் நன்கு புலப்படுத்துகிறார். சங்கத் தமிழர் வாழ்வினை இன்பமாகவும் இயல்பாகவும் வாழ எண்ணினர். பல்வேறு தொழில்களில் தானிய உற்பத்திக்கே முக்கியத்துவம் அளித்தனர்.

☆ வணிகத்தில் நேர்மை பின்பற்றப்பட்டது. வழிபாடுகள் வாழ்வின் செயல்பாடுகளில் முக்கியத்துவம் பெற்றது. தெய்வ நம்பிக்கை, பேய் பற்றிய நம்பிக்கை, நிமித்தம், முற்பிறவி, சகுனம் பார்த்தல், சத்தியம் செய்தல், கலைகள் என்று தமிழர் எண்ணங்கள் பலவாறாக அமைந்தன. இவை யாவும் மக்களை நேரிய வழியில் நடத்தவே முற்பட்டன என்பது எண்ணத்தக்கதாகும். இவ்வாறாக குறிஞ்சி மக்களின் வாழ்வியலில் உயரிய சிந்தனைகள் மேலோங்குவதை கபிலர் தம் பாடல்களில் நன்கு பதிவிட்டுள்ளார். ஆகவே கபிலரின் குறிஞ்சித் திணைப் பாடல்களின் வழியாக நமக்குப் புலப்படும் தமிழ்ச் சமூகம், ஏனைய திணைகளுக்கெல்லாம் குறிஞ்சித்திணையே அடிப்படையாய் அமைந்து சிறப்பு பெறுவதை நன்கு பதிவிட்டுள்ளார்.

**எதிர்கால ஆய்வுக் களங்கள்**

சங்க இலக்கியம் பழந்தமிழ் மக்களின் தகவல் களஞ்சியமாய் விளங்குகிறது. பல்வேறு பட்ட சிந்தனைகளையும், அறிவு சார்ந்த நிலைகளையும், பண்பாடு சார்ந்த நிலைகளையும், வாழ்வியல் அனுபவங்களையும் கொண்டு இவ்விலக்கியம் விளங்குகிறது. இவற்றையெல்லாம் பாடல்களில் பதிவிட்ட புலவர்களின் புலமை அளப்பரியதாகும். அவ்வகையில் கபிலரின் குறிஞ்சித்திணைப் பாடல்கள் பல்வேறு கருத்தாக்கங்களைக் கொண்டு விளங்குகிறது. ஆய்வின் விரிவுகருதி சில சான்றுகளைக் கொண்டே இந்த ஆய்வு அமைந்துள்ளது. எனவே இந்த ஆய்வினை அடியொற்றி பழந்தமிழரின் வாழ்வியலை ஆராய மிகுதியான களங்கள் உள்ளன.

1. கபிலரின் குறிஞ்சித்திணைப் பாடல்களை பிற புலவர்களின் குறிஞ்சித்திணைப் பாடல்களுடன் ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளலாம்.

2. ‘கபிலர் கண்ட இயற்கை வளம்’ எனும் பொருண்மையில் மலைப்பகுதிகள், விலங்குகள், பறவைகள் போன்றவற்றை மையப்படுத்தி ஆராய்ச்சி மேற்கொள்ளலாம்.

3. ‘குறிஞ்சித்திணை’ ஆய்வினை போல் ஏனைய திணை சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

4. கபிலர் காட்சிப்படுத்தும் உவமைகள் என்னும் பொருண்மையில் ஆய்வு மேற்கொள்ளலாம்.

5. கபிலரின் அறச்சிந்தனைகள் என்ற பொருண்மையில் ஆய்வு மேற்கொள்ளலாம்.

# துணைநூற்பட்டியல்

# துணைநூற்பட்டியல்

## முதன்மை ஆதாரங்கள்


1. செயபால் இரா., (உரை.) அகநானூறு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை - 98 முதற்பதிப்பு - ஏப்ரல் - 2004.

2. தட்சிணாமூர்த்தி அ., (உரை.) ஐங்குறுநூறு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை - 98 முதற்பதிப்பு - ஏப்ரல் - 2004.

3. நாகராசன் வி., (உரை.) குறிஞ்சிப்பாட்டு (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை - 98 முதற்பதிப்பு - ஏப்ரல் - 2004.

4. நாகராசன் வி., (உரை.) குறுந்தொகை (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை - 98 முதற்பதிப்பு - ஏப்ரல் - 2004.

5. பாலசுப்பிரமணியன், கு.வெ., (உரை.) நற்றிணை (மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை - 98 முதற்பதிப்பு - ஏப்ரல் - 2004.

*6. விஸ்வநாதன் அ., (உரை.)* — *கலித்தொகை (மூலமும் உரையும்)*
*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்*
*41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 98*
*முதற்பதிப்பு - ஏப்ரல் - 2004.*

**துணைமை ஆதாரங்கள்**

*1. அரங்கசாமி, கா.,* — *கபிலர்*
*சாகித்திய அகாதெமி*
*இரவீந்திர பவன்*
*35, பெரோஸ்ஷா சாலை*
*புதுதில்லி - 110 001*
*இரண்டாம் பதிப்பு - 2014.*

*2. அறவாணன், க.ப.,* — *அற்றைநாட் காதலும் வீரமும்*
*மெய்யப்பன் தமிழாய்வகம்*
*53, புதுத்தெரு*
*சிதம்பரம் - 608 001*
*முதற்பதிப்பு - 2002.*

*3. அனுராதா, ப.,* — *இலக்கியப் பீடம்*
*19, முதன்மைச் சாலை*
*விசயலட்சுமிபுரம்*
*அம்பத்தூர், சென்னை - 600 053*
*மறுபதிப்பு - சூலை - 2008.*

*4. ஆரோக்கியசாமி, எல்.,* — *கற்றலில் உளவியல் மற்றும் மனித வளர்ச்சி*
*எஸ்.ஏ.எஸ்.பப்ளிகேஷன்ஸ்*
*ஆசாத் ரோடு, மணவை*
*மூன்றாம் பதிப்பு - 2009.*

5. ஆறுமுக நாவலர், (பதிப்) — சூடாமணி நிகண்டு
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
154, டி.டி.கே.சாலை, சென்னை - 18
முதற்பதிப்பு - டிசம்பர் - 1996.

6. ரவிச்சந்திரன், தி.கு., — சிக்மண்ட் ஃபிராய்ட்
உளப்பகுப்பாய்வு அறிவியல்
அலைகள் வெளியீட்டகம்
யுனைடெட் இந்தியா காலனி
கோடம்பாக்கம், சென்னை - 24
முதற்பதிப்பு - 2006.

7. இராசமாணிக்கனார், மா., — பத்துப்பாட்டு ஆராய்ச்சி
சாகித்திய அகாதெமி
இரவீந்திர பவன்
35, பெரோஸ்ஷா சாலை
புதுதில்லி - 110 001
முதற்பதிப்பு - 2012.

8. இராசரத்தினம், கு., — சங்க இலக்கியத்தில் பொதுமக்கள்
நாம் தமிழர் பதிப்பகம்
10/14, தோப்பு வெங்கடாசலம் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 5
முதற்பதிப்பு - டிசம்பர் - 2004.

9. இராமகிருஷ்ணன், ஆ., — தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்
சர்வோதய இலக்கியப் பண்ணை
32/1, மேலவெளிவீதி
மதுரை - 625 001
முதற்பதிப்பு - 1982.

10. இராமகிருஷ்ணன், ஆ., அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு
சர்வோதய இலக்கியப் பண்ணை
32/1, மேலவெளிவீதி
மதுரை - 625 001
முதற்பதிப்பு - 1982.

11. இலக்குவனார், சி., இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்
வள்ளுவர் பதிப்பகம்
புதுக்கோட்டை
மூன்றாம் பதிப்பு - 1972.

12. இன்னாசி சு., (தொகுப்) சதுரகராதி
மாதா பதிப்பகம்
92, இரண்டாம் தெரு, கிருஷ்ணா நகர்
விருகம்பாக்கம், சென்னை - 92
இரண்டாம் பதிப்பு - மே - 1989.

13. கலியபெருமாள், கா., தமிழர் திருமண முறைகள்
உலகத் தமிழ் எழுத்தாளர் பதிப்பகம்
A-E-103, அண்ணா நகர், சென்னை - 40
முதற்பதிப்பு - பிப்ரவரி - 1980.

14. கலைச்செல்வி, சோ., கவின்தொகை எட்டு
வானதி பதிப்பகம்
23, தினதயாள் தெரு
தி.நகர், சென்னை - 17
இரண்டாம் பதிப்பு - ஆகஸ்ட் - 2012.

15. காந்தி, க., தமிழர் பழக்க வழக்கங்களும்
நம்பிக்கைகளும்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை
முதற்பதிப்பு - 1980.

16. காந்தி, க., தமிழர் எண்ணங்கள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி.ஐ. தரமணி
சென்னை - 600 113
முதற்பதிப்பு - மார்ச் - 1983.

17. கிருஷ்ணமூர்த்தி, கு.வி., தமிழரும் தாவரமும்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப் பேரூர்
திருச்சிராப்பள்ளி - 620 024
முதற்பதிப்பு - 2007.

18. குமரிச்செழியன், செம்மொழித் தமிழ்
சாரதா பதிப்பகம்
சென்னை - 600 014
முதற்பதிப்பு - மார்ச் - 2011.

19. குமாரசாமி, கு., அழகப்பா மோசன், அ., வசந்தி, மு., சுற்றுச்சூழல் அறிவியல்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024
முதற்பதிப்பு - 2005.

20. குருநாதன், இராம., குறிஞ்சி காட்டும் சமுதாயம்
தமிழ்ச் சாலை
எண்.138, சாய்நகர் 3-வது தெரு
விருகம்பாக்கம்
சென்னை - 600 092
முதற்பதிப்பு - ஆகஸ்ட் - 2007.

21. கோகிலா தங்கசாமி, கல்வி உளவியல்
மாநிலா பதிப்பகம்
மதுரை - 625 004
பத்தாவது பதிப்பு - 2004.

22. சசிவல்லி, வி.சி., தமிழர் திருமணம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113
முதற்பதிப்பு - 1985.

23. சண்முகம்பிள்ளை, மு., சங்கத் தமிழர் வாழ்வியல்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி.வளாகம்
சென்னை - 600 113
முதற்பதிப்பு - 1977.

24. சதாசிவம், ச., நமது உணவு
மாருதி பிரஸ்
173, பீட்டர்ஸ் ரோடு
சென்னை - 600 014
முதற்பதிப்பு - அக்டோபர் - 1984.

25. சந்தானம், எஸ்., கல்வி உளவியலும் கல்வி சமூகவியலும்
பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 600 017
பதிப்பு - 1996.

26. சிதம்பரனார் சாமி., பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்
பூம்புகார் பதிப்பகம்
127, பிரகாசம் சாலை
சென்னை - 600 108
முதற்பதிப்பு - சூன் - 2004.

27. சிவராஜ், து., சங்க இலக்கியத்தில் உளவியல்
சிவா பதிப்பகம்
வேலூர், முதற்பதிப்பு - 1988.

28. சுந்தரசண்முகனார், மனதின் தோற்றம்
புதுவை பைந்தமிழர் பதிப்பகம்
வேங்கட நகர், புதுச்சேரி
முதற்பதிப்பு - 1992.

29. சுப்ரமணியன், பெ., பாலசுப்பிரமணியன், கு.வெ., தட்சிணாமூர்த்தி, ஆ., பரிபாடல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை - 98
முதற்பதிப்பு - ஏப்ரல் - 2004.

30. சுப்ரமணியன், ந., சங்க கால வாழ்வியல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை - 98
இரண்டாம் பதிப்பு - ஜனவரி - 2010.

31. சூரியநாராயண சாஸ்திரியார், வி.கே சொற்பொருள் ஆராய்ச்சி
தமிழ் வியாசங்கள்
வி.சு.சுவாமிநாதன் பதிப்பு
மதுரை. நான்காம் பதிப்பு - 1956.

32. தட்சிணாமூர்த்தி, அ., தமிழ் நாகரிகமும் பண்பாடும்
ஐந்திணை பதிப்பகம்
சென்னை - 600 005
முதற்பதிப்பு - 1989.

33. தட்சிணாமூர்த்தி, அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள்
மங்கையர்க்கரசி பதிப்பகம்
மனை எண்.205, புட்பம் குடியிருப்பு
அளருளானந்தா நகர், பத்தாம் குடியிருப்பு
தஞ்சாவூர் - 613 007
முதற்பதிப்பு - 2011.

34. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு
மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா வளாகம்
48, தானப்ப முதலி தெரு
மதுரை - 625 001
மூன்றாம் பதிப்பு - 2011.

35. தமிழண்ணல், குறிஞ்சிப்பாட்டு
(இலக்கியத் திறனாய்வு விளக்கம்)
மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா வளாகம்
48, தானப்ப முதலி தெரு
மதுரை - 625 001
மூன்றாம் பதிப்பு - டிசம்பர் - 2007.

36. திருஞானசம்பந்தர், ச., (உரை.) அகப்பொருள் விளக்கம்
கதிர் பதிப்பகம்
தெற்கு வீதி
திருவையாறு - 613 204
மூன்றாம் பதிப்பு - சூன் 2008.

37. துரைசாமிப்பிள்ளை, ஒளவை. குறுந்தொகை சொற்பொழிவு
கழக வெளியீடு
சென்னை
நான்காம் பதிப்பு - 1972.

38. தூரன், பெ., மனமும் அதன் விளக்கமும்
சந்தியா பதிப்பகம்
அசோக் நகர்
சென்னை - 600 083
முதற்பதிப்பு - 2008.

39. தூரன், பெ., குழந்தை உளவியலும் மனித மனமும்
சந்தியா பதிப்பகம்
அசோக் நகர்
சென்னை - 600 083
முதற்பதிப்பு - 2008.

40. நசீமா பானு, சா., சங்க இலக்கியத்தில் மனையறம்
பாத்திமா பதிப்பகம்
67, காஹியார் வீதி
காரைக்கால்
முதற்பதிப்பு - டிசம்பர் - 1983.

41. நமசிவாயம், சே., தமிழர் உணவு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு, சென்னை - 600 020
முதற்பதிப்பு - ஏப்ரல் - 1981.

42. நலங்கிள்ளி, அரங்க., ஃபிராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு
வாணிதாசன் பதிப்பகம்
பொன்னர், புதுவை - 10
முதற்பதிப்பு - 1999.

43. நாகராசன், வி., உரை பட்டினப்பாலை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை - 98
முதற்பதிப்பு - ஏப்ரல் - 2004.

44. நாகராசன், கி., கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல்
இராம் பதிப்பகம்
காந்தி நகர், சாலிகிராமம், சென்னை
முதற்பதிப்பு - 2009.

45. நெடுஞ்செழியன், வே., தமிழர் கண்ட தாவரவியல்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை
முதற்பதிப்பு - 2005.

46. பானு நூர்மைதீன், வா.சா., பழந்தமிழ் அகப்பாடல்களில் நிலமும் பொழுதும்
பர்வீன் பதிப்பகம், இக்பால் குடியிருப்பு
திருச்சி - 620 020
முதற்பதிப்பு - ஏப்ரல் - 1993.

47. பக்தவச்சலபாரதி, கீ., தமிழர் மானிடவியல்
மெய்யப்பன் தமிழாய்வகம்
53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001
முதற்பதிப்பு - 2002.

48. பகவதி, கு., தமிழர் ஆடைகள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி.வளாகம், தரமணி
சென்னை - 600 113
இரண்டாம் பதிப்பு - 2003.

49. பரமசிவன், தொ., பண்பாட்டு அசைவுகள்
காலச்சுவடு பதிப்பகம்
669, கே.பி.சாலை, நாகர்கோவில் - 629 001
காலச்சுவடு பதிப்பக வெளியீடு 18
மறு அச்சு செப்டம்பர் 2003.

50. பழனிச்சாமி, செ., புறநானூற்றில் தமிழர் பண்பாடு
வாணி பதிப்பகம்
402, அழகேசன் சாலை
கோவை - 641 001
முதற்பதிப்பு - ஏப்ரல் - 1989.

51. பாலசுப்பிரமணியன், கு.வெ., சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர். முதற்பதிப்பு - 1994.

52. பாலசுப்பிரமணியன் கு.வெ., புறநானூறு மூலமும் உரையும்
விசுவநாதன் அ., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
நாகராசன் வி., 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
ஆரோக்கியசாமி இரா., அம்பத்தூர்
திலகவதி க., சென்னை - 600 098
சத்தியநாராயணன் வெ., முதற்பதிப்பு - ஏப்ரல் - 2004.
(உரை.)

53. பிங்கல முனிவர், பிங்கலத்தை என்னும் பிங்கல நிகண்டு
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
1/140, பிரகாசம் சாலை
சென்னை - 600 001.
இரண்டாம் பதிப்பு - சனவரி - 1978.

54. பெசண்ட் கிரிப்பர் ராஜ், சமூகத்தில் நாம்
குமார் பதிப்பகத்தார்
வெங்கட்ராமையர் தெரு
சென்னை.
முதற்பதிப்பு - 1978.

55. மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல்
மெய்யப்பன் பதிப்பகம்
சிதம்பரம் - 01.
இரண்டாம் பதிப்பு - 2005.

56. மாணிக்கவாசகன், ஞா., திருக்குறள்
உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டித் தெரு, மண்ணடி
சென்னை - 600 001
முதற்பதிப்பு - சூலை - 1991.

57. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்
உதகம் எண். பி.5
ஐந்தாவது முதன்மைச் சாலை
இராமலிங்க நகர், உறையூர்
திருச்சி - 620 003
முதற்பதிப்பு - மே - 2005.

58. முத்துலக்குமி, வே., இலக்கிய இயற்கை
அனுராதா பதிப்பகம்
22/18, சம்புகேசுவரர் நகர்
திருவானைக்கோவில்
திருச்சிராப்பள்ளி - 620 005
முதற்பதிப்பு - டிசம்பர் - 2009.

59. முத்தையா, ஒ., பண்பாட்டுப் பதிவுகள்
காவ்யா பதிப்பகம்
சென்னை.
முதற் பதிப்பு - 2009.

60. முருகேசன், க., சங்க இலக்கிய தேனமுதம்
நாம் தமிழர் பதிப்பகம்
17/1, தாச்சி அருணாசலம் தெரு
மயிலாப்பூர், சென்னை - 600 004
முதற்பதிப்பு - நவம்பர் - 2008.

61. மோகன், இரா., (உரை.)
பத்துப்பாட்டு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை
மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.

62. வரதராசன், மு.,
குறுந்தொகை செல்வம்
பாரி நிலையம்
சென்னை.
முதற்பதிப்பு - 1955.

63. வரதராசன், மு.,
பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை
பாரி நிலையம்
90, பிராட்வே
சென்னை - 600 108
மறுபதிப்பு - 2011.

64. வள்ளியம்மாள், ந.,
தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் கொள்கைகள்
சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம்
3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு
இராயப்பேட்டை, சென்னை - 600 014
முதற்பதிப்பு - டிசம்பர் - 2008.

65. வேங்கடசாமிநாட்டார், ந.மு., கபிலர்
சாரதா பதிப்பகம்
சென்னை - 600 014
ஐந்தாம் பதிப்பு, மார்ச் - 2012.

66. வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்
பாரி புத்தக பண்ணை
சென்னை - 600 005
முதற்பதிப்பு 1978.

67. ஸ்ரீ சந்திரன் ஜெ., (உரை.) நாலடியார் (மூலமும் தெளிவுரையும்)
வர்த்தமானன் பதிப்பகம்
ஏ.ஆர்.ஆர்.காம்ப்ளக்ஸ்
141, உஸ்மான் சாலை
தி.நகர், சென்னை - 600 017
ஆறாம் பதிப்பு, பிப்ரவரி - 2000.

68. ஸ்ரீ சந்திரன் ஜெ., சிலப்பதிகாரம்
வர்த்தமானன் பதிப்பகம்
ஏ.ஆர்.ஆர்.காம்ப்ளக்ஸ்
141, உஸ்மான் சாலை
தி.நகர், சென்னை - 600 017.
ஒன்பதாம் பதிப்பு, ஆகஸ்ட் - 2001.

69. ஜெகந்நாதன், கி.வா., தாமரைப் பொய்கை
(சங்க நூற் காட்சிகள்)
அமுத நிலையம் லிமிடெட்
சென்னை. முதற்பதிப்பு - 1952.

70. ஜேம்ஸ், டி.பேஜ்., பிறழ்நிலை உளவியல் (த.ஆ)
பெசண்ட் கிரிப்பர் ராஜ்
தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு அரசாங்கம்
சென்னை
முதற்பதிப்பு - 1965.

## ஆய்வேடுகள்


1. செந்தில், இரா., — சங்க அகப்பாடல்களில் கருப்பொருள்
திருவளர் திரு காசி சுவாமிநாத சுவாமிகள்
கலைக்கல்லூரி
திருப்பனந்தாள் - 612 504
2007.

2. லட்சுமி, தே., — ஐங்குறுநூற்று நெய்தல் நில மக்களின்
வாழ்வியல்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024
2009.

3. சந்திரகலா, ஜெ., — சங்க இலக்கியங்களில் பறவைகள் விலங்குகள்
தமிழ்வேள் உமா மகேசுவரனார்
கரந்தைக் கல்லூரி
2008.

4. சுஜாதா, சு., — அகநாநூற்றில் களவும் கற்பும்
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை
1988.

5. சந்திரமோகன், ம., — அகநானூற்றில் உளவியல் கூறுகள்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024
2012.

6. அசோக், தே., — நாட்டுப்புற நம்பிக்கைகளில் பண்பாடு
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024
சூன் 2007.

## அகராதிகள்


1. அவினாசிலிங்கம்,தி.சு., (பதிப்) — கலைக்களஞ்சியம் தொகுதி - 1
தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு
கலைக்களஞ்சிய அலுவலகம்
பல்கலைக்குக கட்டடம்
சென்னை - 5
முதற்பதிப்பு - 1954.

2. இராமகிருஷ்ணன், எஸ்., — (பதிப்பாசிரியர் கிரியா, சென்னை)
கிரியாவின் தற்கால தமிழ் அகராதி
Cre - A; H-18, Flat No.3, South Avenue
Thiruvanmiyur, Chennai - 600 041
Second Edition - May - 2008.

3. கழகப் புலவர் குழு — கழகத் தமிழ் அகராதி
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
1966.

4. தேவநேயப் பாவாணர், ஞா., — செந்தமிழ் சொற்பிறப்பியல் - பேரகராதி
கழக வெளியீடு
522, டி.டி.கே.சாலை
ஆழ்வார்பேட்டை
சென்னை - 600 018.

5. பிரிட்டானியா தகவல் களஞ்சியம்
பிரிட்டானியா இந்தியா (பி) லிட
தொகுதி - I
சென்னை
முதற்பதிப்பு 2007.

6. பரிமணம், அ.மா., பாலுசாமி, நா., — வாழ்வியற் களஞ்சியம் - Vol - v, vii, viii, x
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

7. Tamil Lexicon — Vol - III
University of Madras
Reprinted - 1982.

8. Tamil Lexicon — Vol - VI
University of Madras
Reprinted - 1982.

**ENGLISH BOOKS**

1. Munna Norman L., — Introduction of Psychology
1, B.H.Publishing Co.,
Calcutta Indian Edition
1967.

2. Pangotra M.N., — Educational Psychology
Eely Eastern Ltd
New Delhi - 1993.

**இலக்கணங்கள்**

1. இளம்பூரணர், (உரை.) — தொல்காப்பியம்
(சொல்லதிகாரம்)
சாரதா பதிப்பகம்
இராயப்பேட்டை, சென்னை - 600 014
முதற்பதிப்பு - மார்ச் - 2005.

2. இளம்பூரணர், (உரை.) தொல்காப்பியம்
(பொருளதிகாரம்)
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (பி) லிட்
சென்னை. முதற்பதிப்பு - 1978.

3. இளவரசு, சோம., (உரை.) நன்னூல்
(எழுத்ததிகாரம்)
மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை - 600 108
மறுபதிப்பு - சூலை - 2001.